# கன்வென்சன் கீதங்கள்

மின் நூல்: எஸ்.கே.ராஜன்
டக்கரம்மாள்புரம்.

# கன்வென்சன் கீதங்கள்




## தென்னிந்திய திருச்சபை திருநெல்வேலி திருமண்டலம்

# டக்கரம்மாள்புரம் சேகரம்

## (பயன்படுத்துவோருக்கான குறிப்பு)

# அகர வரிசை

அ ஆ இ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ

க கா கி கீ கு கூ கை கொ கோ

ச சா சி சீ சு சே சோ

த தா தி து தூ தே தொ தோ

ந நா நி நீ நெ நே

ப பா பி பு பூ பெ பே பொ போ

ம மா மு மே மோ

யா யு யூ யெ யே

ர ரோ

லே

வ வா வி வெ வே

ஜீ ஜெ ஜொ ஸ் ஸ்ரீ

## பாடல் தலைப்புகள்

## பாடல் தலைப்புகள்


துதிப்பாடல்கள் ........................................ 34

இறை வேண்டல் ........................................ 74

ஜெபமே ஜெயம் ........................................ 86

பிராத்தனை ........................................ 95

காலை தியானம் ........................................ 96

மாலை தியானம் ........................................ 101

பெத்தலையில் பிறந்தவர் ........................................ 105

கிறிஸ்துவின் பாடுகள் ........................................ 108

கிறிஸ்துவின் உயிர்தெழுதல் ........................................ 132

கிறிஸ்துவின் வருகை ........................................ 136

கிறிஸ்துவின் நம்பிக்கை ........................................ 151

திருச்சபை ........................................ 177

திருமுழுக்கு ........................................ 179

திருப்பணி ........................................ 180

ஆயத்தமா? ........................................ 241

திருமணப் பாடல்கள் ........................................ 361

வீடு பிரதிஷ்டை ........................................ 384

பல்லவிகள் ........................................ 522

புதிய பாடல்கள் ........................................ 542

## அ

அக்கினி அபிஷேகம் ஈந்திடும்....301
அடைக்கலமே உமதடிமை நானே....306
அதிகாலையிலுமைத் தேடுவேன் முழு மனதாலே....73
அதிசயமான ஒளிமய நாடாம்....325
அந்த நாள் இன்ப இன்ப இன்ப நாள்....112
அந்தோ கல்வாரியில் அருமை இரட்சகரே....82
அந்தோ சிலுவைப் பவனி பார் – நமது....403
அப்பா நான் உம்மைப் பார்க்கிறேன்....447
அமைதியில் இறைவனைக் காணுவோம்....511
அர்ப்பணித்தேன் என்னை முற்றிலுமாய்....183
அருணோதயம் எழுந்திடுவோம்....69
அருள் ஏராளமாய் பெய்யும்....45
அருளின் மா மழைபெய்யும்....44
அருளுருவே, நரருருவாய் என்னிமித்தம்....565
அல்லேலூயா! அல்லேலூயா! அல்லேலூயா! ஆ! ஆ! ஆமென்....264
அல்லேலூயா கர்த்தரையே ஏகமாய்த் துதியுங்கள்....1
அலையமலையாய் அலையினூடே....577
அழகாய் நிற்கும் யார் இவர்கள்....561
அழகான அத்திமரம்....343
அழைக்கிறார் அழைக்கிறார் இதோ....189
அழைக்கிறார் அழைக்கிறார்....187
அற்புதம் அற்புதம் இதுதான்....130

அற்புதமான சிருஷ்டிகரே ...... 461

அற்புதர் (4) இயேசு அற்புதர் ...... 420

அறுப்பு மிகுதி ராஜாவே ...... 162

அன்பர் அன்பை யாரால் கூறலாம் – ஆ! ஆச்சரியம் ...... 353

அன்பரே கூடுங்கள் ஆனந்தம் பாடுங்கள் ...... 184

அன்பிதோ! அன்பிதோ! அன்பிதோ! என்னை ...... 352

அன்பில் என்னை பரிசுத்தனாக்க ...... 455

அன்பிலே பூரணரே – எங்கள் ...... 263

அன்பிற்கு இலக்கணம் யாரோ ...... 313

அன்பின் உருவம் ஆண்டவர் ...... 531

அன்பின் குரல் உன்னை அழைக்கின்றது ...... 537

அன்பின் தேவன் ஏசு உன்னை அழைக்கிறார் ...... 540

அன்பின் தேவனே ...... 294

அன்பு இயேசுவின் அன்பு – அது ...... 533

அன்புள்ள இயேசையா ...... 223

அன்பே பெரியது அன்பே சிறந்தது ...... 322

அன்பே மாறிடா திரு அன்பே– என்னைத் ...... 340

அன்பே! அன்பே! அன்பே! ...... 351

அன்பைத் தந்த இயேசுவைப் பாடுவேன் ...... 448

அன்னமே சீயோன் கண்ணே அன்பரதோ போறாரடி ...... 569

அனாதி தேவன் உன் அடைக்கலமே ...... 305

அனுதினம் அவர் பாதம் ஆசையாய் அமர்ந்து ...... 219

அனுதினமும் உம்மில் நான் வளர்ந்திடவே ...... 454

## ஆ

ஆ இன்ப இல்லமே நீ என்றும்.....399
ஆ நல்ல சோபனம்.....375
ஆகா என்ன இன்பம் பரலோக இன்பம்.....266
ஆச்சரியமே! அதிசயமே.....131
ஆசீர்வதியும் கர்த்தரே ஆனந்த மிகவே.....370
ஆண்டவா! பிரசன்னமாகி.....62
ஆணிகள் பாய்ந்த கரங்களை விரித்தே.....90
ஆதி பராபரனின் சுதனே, கிறிஸ்தேசுநாதா – இந்த.....404
ஆதி மெய்தேவனே உம் அன்பிற்கோர் எல்லையுண்டோ.....341
ஆதியும் அந்தமுமானவரே.....147
ஆபிரகாமை ஆசீர்வதித்த ஆண்டவா அருளுமே.....384
ஆயிரம் ஆயிரம் பாடல்களை.....273
ஆர்ப்பரி ஆர்ப்பரி அல்லேலூயா (2).....443
ஆராதிக்க கூடினோம்.....431
ஆராதிப்பேன் நான் ஆராதிப்பேன்.....581
ஆறாம் மணி வேளை முதல் ஒன்பது மட்டும்.....407
ஆனந்த கீதங்கள் எந்நாளும் பாடி.....265
ஆனந்த துதி ஒலி கேட்கும்.....446
ஆனந்தம் ஆனந்தம் இயேசுவோடு.....459
ஆனந்தமாக அன்பரைப்பாடுவேன்.....275
ஆனந்தமாய் இன்பக் கானான் ஏகிடுவேன்.....272
ஆனந்தமாய் நாமே ஆர்ப்பரிப்போமே.....268

ஆனந்தமே பரமானந்தமே – இயேசு ......... 267

# இ

இத்தனை பெரிய உலகம் ......... 573
இதோ மனுஷரின் மத்தியில் தேவாதி தேவனே ......... 135
இந்த காலம் பொல்லாதது – உன்னை ......... 534
இந்த மங்களம் செழிக்கவே – கிருபை செய்யும் ......... 378
இந்த வேளை வரவேணும் என் இயேசு நாதா ......... 451
இந்தக் கடைசி நாளில் சந்தோஷம் நம்பிக்கையுண்டு ......... 113
இந்தக் குழந்தையை நீர் ஏற்றுக்கொள்ளும் கர்த்தாவே ......... 161
இம்மட்டும் கைவிடா தேவன் ......... 472
இம்மணர்க் குன்னருள் ஈயும் பர வாசா! ......... 377
இம்மானுவேலின் இரத்தத்தால் ......... 85
இமய முதல் குமரி வரை ......... 515
இயேசு அழைக்கிறார் இயேசு அழைக்கிறார் ......... 185
இயேசு இன்பமானவர் இயேசு மகிமையானவர் ......... 439
இயேசு எந்தன் வாழ்வின் பெலனானால் ......... 152
இயேசு என் அஸ்திபாரம் ஆசை எனக்கவரே ......... 500
இயேசு என் ஆண்டவா ......... 134
இயேசு எனக்காக சிலுவையில் மாண்டீரே! ......... 86
இயேசு என்தன் சங்கீதமானவர் ......... 43
இயேசு என்ற திருநாமத்திற்கு ......... 2
இயேசு என்னும் இனிய நாமம் ......... 166
இயேசு கிறிஸ்து நாதர் ......... 164

இயேசு கிறிஸ்து வருகிறார், வருகிறார், வருகிறார், ........ 115

இயேசு கிறிஸ்துவின் நல் சீடராகுவோம் ........ 238

இயேசு கூட வருவார் ........ 458

இயேசு சுமந்து கொண்டாரே ........ 583

இயேசு நாமம் ஒன்றை நம்புவீர் ........ 165

இயேசு பரனை எங்களின் ராஜனை ........ 5

இயேசு மணாளனே – என் ........ 326

இயேசு மீட்பருந்தன் நெஞ்சில் ........ 190

இயேசு மீண்டுமாக வந்திடும் நாள் சமீபமே ........ 124

இயேசு ராஜன் வருவார் தூதரோடும் வருவார் ........ 114

இயேசு ராஜனின் திருவடிக்கு ........ 3

இயேசு ராஜா முன்னே செல்கிறார் ........ 436

இயேசுதானே அதிசய தெய்வம் ........ 132

இயேசுவாலே பிடிக்கப்பட்டவன் ........ 582

இயேசுவின் கரங்கள் அன்பின் கரங்கள் ........ 444

இயேசுவின் குடும்பம் ஒன்று உண்டு ........ 159

இயேசுவின் நாமம் இனிதான நாமம் ........ 365

இயேசுவின் நாமம் எல்லாவற்றிற்கும் ........ 526

இயேசுவின் நிந்தையைச் சுமப்போம் ........ 167

இயேசுவின் மகிமையைப் பாடுவோம் ........ 441

இயேசுவின் மார்பில் நான் சாய்ந்துமே ........ 440

இயேசுவுக்கு ஸ்தோத்திரம் என் மீட்பராம் ........ 30

இயேசுவே உம் நாமத்தினால் ........ 241

இயேசுவே வழி சத்தியம் ஜீவன் ........ 438

இயேசுவை நம்பி பற்றிக் கொண்டேன் ........ 555

இயேசுவை நம்பினோர் மாண்டதில்லை ........ 133

இயேசுவை நாம் எங்கே காணலாம் ........ 342

இயேசுவை நோக்கி நான் முன் நடப்பேன் ........ 308

இயேசுவை வாழ்க்கையில் காட்டுங்களே ........ 315

இரட்டிப்பான நன்மைகள் தந்திட ........ 295

இரத்தக் கோட்டைக்குள்ளே ........ 583

இரத்தத்தால் ஜெயம் ........ 84

இராஜாதி இராஜன் இயேசு வருவார் ........ 116

இருள் சூழ்ந்த லோகத்தில் ........ 153

இருள் சூழும் காலம் இனி வருதே ........ 191

இல்லத்தின் தலைவராய் இயேசு இருந்தால் ........ 512

இவன் பேர் யோனா சொல்லாமல் போனான் ........ 576

இறைவன் இன்று பவனி வந்தால் என்ன நடக்கும்? ........ 543

இன்ப இயேசு ராஜாவை நான் பார்த்தால் போதும் ........ 339

இன்ப இயேசுவின் இணையில்லா நாமத்தைப் புகழ்ந்து ........ 430

இன்ப துன்ப நேரத்திலும் உன் ........ 495

இன்பக் கானானுக்குள் ஏழை செல்ல ........ 547

இன்பமிதே பேரின்பமிதே ........ 542

இன்று கண்ட எகிப்தியனை ........ 465

இனிக்காத தேனுமில்லை ........ 524

இனிக்கும் தமிழினில் இயேசுவைப் பாடுவேன் ........ 432

இனிமை இனிமை இது இனிமை ........ 483
இஸ்ரவேலின் சேனைகளின் முன்னடந்த தெய்வமே ........ 344

**உ**

உச்சித மோட்ச பட்டணம் போக ........ 548
உண்மையாம் உபாசம் எது? ........ 510
உத்தமக் கிறிஸ்தவர் யாரோ ........ 309
உத்தமமாய் முன் செல்ல உதவி செய்யும் யெகோவா ........ 221
உதவி வரும் கன்மலை நோக்கிப் பார்க்கின்றேன் ........ 587
உந்தன் ஆவி எந்தன் உள்ளம் தங்க வேண்டும் ........ 585
உந்தன் சித்தம் போல் நடத்தும் ........ 496
உம் இரத்தமே உம் இரத்தமே சுத்தம் செய்யுமே ........ 88
உம் சித்தம் இயேசுவே நானோர் மண்பாண்டமே ........ 46
உம் தானம் நான் அனுபித்தேன் ........ 487
உம் பாதம் பணிந்தேன் எந்நாளும் துதியே ........ 276
உம்மை நம்பி உந்தன் பாதம் ........ 588
உம்மைத் துதிப்பேன் கர்த்தாதி கர்த்தரே ........ 435
உம்மைப் போல் யாருண்டு ........ 145
உம்மோடு இருக்கணுமே – இயேசு ........ 475
உமை நம்பினோர் மாண்டதில்லை ........ 345
உயிர்த்தெழுந்தாரே அல்லேலூயா ........ 109
உயிர்த்தெழும் காலை தன்னில் ........ 111
உருகாயோ நெஞ்சமே ........ 89
உலக மாய்கையிலே உன் சிந்தனையே வேண்டாம் ........ 238

உலக முன் சதமென்று எண்ணியிராதே ........ 236
உலகில் நீ ஓர் தனிப் பிறவி ........ 310
உலகோர் உன்னைப் பகைத்தாலும் ........ 194
உள்ளத்தில் அவர்பால் பேரன்புள்ளோரெல்லாம் ........ 168
உள்ளத்தை உமக்கென்று திறந்தே – ஜெப ........ 388
உள்ளமெல்லாம் உருகுதையோ ........ 230
உறக்கம் தெளிவோம் ........ 245
உன் தேவனைச் சந்திக்க நீ ஆயத்தமா? ........ 231
உன்னத தேவன் உன்னை அழைக்கிறார் ........ 193
உன்னதத்தின் ஆவியே ........ 528
உன்னதமானவரின் – உயர் மறைவிலிருக்கிறவன் ........ 244
உன்னதர் இயேசுவுக்கே – உந்தன் ........ 192
உன்னையும் என்னையும் இரட்சிக்கவே ........ 311
உன்னையே வெறுத்துவிட்டால் ........ 586

**ஊ**

ஊற்றுத் தண்ணீரே எந்தன் தேவ ஆவியே ........ 527

**எ**

எக்காலும் இயேசுவே சகாயராயிரும் ........ 499
எக்காள சத்தம் வானில் தொனித்திடவே ........ 119
எக்காள சத்தம் வானில் முழங்கவே ........ 118
எங்குமுள்ளோர் யாரும் சேர்ந்து ஸ்தோத்தரிப்போமே ........ 8
எங்கே சுமந்து போகிறீர்? சிலுவையை நீர் ........ 93

அட்டவணை


எடுத்துச்செல்வீர் இந்த சுவிசேஷத்தை ....169

எண்ணில் அடங்கா ஸ்தோத்திரம் – தேவா ....35

எத்தருணத்தில் உயிர் எவ்வழி பிரியுமோ? ....233

எத்தனை நாட்கள் செல்லும் ....170

எந்தக் காலத்திலும் எந்த நேரத்திலும் ....6

எந்தன் அன்புள்ள ஆண்டவர் இயேசுவே நான் ....281

எந்தன் ஆத்ம நேசர் எங்கே! ....346

எந்தன் இயேசு உன்னதத்தில் அன்புள்ளோராய் வாழும்போது ....347

எந்தன் இயேசு கைவிடமாட்டார் ....473

எந்தன் உள்ளம் உண்மை வாழ்வை வாஞ்சிக்குதே ....550

எந்தன் உள்ளம் தங்கும் இயேசு நாயகா ....68

எந்தன் உள்ளம் புதுக்கவியாலே பொங்க ....277

எந்தன் நாவில் புதுப்பாட்டு ....252

எந்தன் பூமானைக்காண சிந்தை பெருகுதையோ ....544

எந்தன் வாயில் புதுப்பாட்டு இயேசு தருகிறார் ....251

எப்படி பாடுவேன் நான் – என் ....477

எருசலேம் என் ஆலயம் ....401

எலியாவின் தேவன் நம் தேவன் ....463

எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டதோ ....348

எழும்பு சீயோனே! இயேசு இதோ வருகிறார் – இயேசு ....117

எளியவர்க்கு சொந்தம் இந்த உலகம் என்று – நம் ....506

என் அருள் நாதா யேசுவே! ....91

என் ஆத்தும நேசர் இயேசுவை ....253

என் இயேசு ராஜா சாரோனின் ரோஜா ........ 494
என் இயேசு ராஜா ஸ்தோத்திரம் (2) ........ 489
என் இயேசுவே நான் என்றும் உந்தன் சொந்தம் ........ 318
என் இன்ப துன்ப நேரம் ........ 493
என் சகோதரா (சகோதரி) எங்கு செல்கின்றாய் ........ 514
என் சபையைக் கட்டுவேன் – என்ற ........ 248
என் செய்வேன் மகனே நான் ........ 406
என் தேவனே என் அன்பனே ........ 47
என் பாவம் தீர்ந்த நாளையே ........ 280
என் மீட்பர் சென்ற பாதையில் போக ஆயத்தமா? ........ 246
என் மேய்ப்பராய் இயேசு இருக்கின்றபோது ........ 478
என் ஜனம் அழிகிறதே ஆ! ஆ! ஆ! ........ 232
என் ஜீவன் சுகம் பெலன் யாது? ........ 136
என் ஜெபவேளை வாஞ்சிப்பேன்! ........ 48
எனக்காக யாவற்றையும் செய்பவரே ........ 476
எனக்காய் ஜீவன் விட்டவரே ........ 312
எனக்கின்பம் ஏதெனக் கேளு நான் காரணம் சொல்வேன் ........ 278
எனக்குப் பிறன் யார் என்றே ........ 507
எனக்கொத்தாசை வரும் பர்வதம் நேராய் ........ 137
என்றும் ஆனந்தம் ........ 590
என்றும் கர்த்தாவுடன் ........ 400
என்ன என் ஆனந்தம் என்ன என் பேரின்பம் ........ 328
என்ன என் ஆனந்தம்! என்ன என் ஆனந்தம்! ........ 279

என்ன சுகம் ஆஹா என்ன சுகம் ....................................................327
என்ன தியாகம்! என் கல்வாரி நாயகா! ....................................................92
என்னண்டை வந்திடாயோ ....................................................195
என்னை உண்டாக்கிய என் தேவாதி தேவன் ....................................................467
என்னை நேசிக்கின்றாயா? ....................................................249
என்னை மறவா இயேசு நாதா ....................................................7
என்னைத் தேடி இயேசு வந்தார் ....................................................474

ஏ

ஏதேனில் ஆதி மணம் ....................................................371
ஏலி ஏலி லாமா சபக்தானி ....................................................408
ஏழை மனுவுருவை எடுத்த ....................................................196
ஏழையை மீட்ட இயேசுவே ஸ்வாமி, அடிமை சரண் புகுந்தேன் ....................................................484
ஏறுகின்றார் தள்ளாடி தவழ்ந்து களைப்போடே ....................................................571

ஐ

ஐயரே, நீர் தங்கும்! என்னிடம் ....................................................76
ஐயா கொல்கொதா மலை நாதா ....................................................567
ஐயோ என் செல்வச் சீராளச் சிகாமணியை ....................................................568

ஒ

ஒப்புவித்தேன் ஐயனே ....................................................220
ஒரு குடும்பம் ஒரு குடும்பம் ....................................................250
ஒரு நாள் வருவார் இராஜாதி இராஜன் ....................................................518
ஒருபோதும் மறவாத உண்மைப் பிதாவிருக்க ....................................................349

## ஒ

ஒரே வழி எந்தன் இயேசுவின் வழி....359
ஒன்றுமில்லை நான் (2)....138
ஓ இயேசு உமதன்பு எத்தனை பெரியது....456
ஓ மனிதனே நீ எங்கே போகின்றாய்?....538
ஓ யேசுவே யென்னை மூட இரத்தத்தின் கீழ் இரத்தத்தின்கீழ்....566
ஓ! ஓ! பாவங்கள் எத்தனையோ....95
ஓடி வாராயோ நண்பா உன்....197

## க

கடல் கொந்தளித்துப் பொங்க....51
கண்களை ஏறெடுப்பேன் – மாமேருநேராய் என்....70
கண்டில்லையோ கவையில்லையோ....198
கண்மணி நீ கண்வளராய்....81
கர்த்தர் உன் வீட்டைக் கட்டாராகில்....139
கர்த்தர் என் மேய்ப்பரே....497
கர்த்தர் என்னை விசாரிப்பவர்....470
கர்த்தரிலும் தம் வல்லமையிலும்....255
கர்த்தரின் கை குறுகவில்லை....247
கர்த்தரின் சத்தம் வல்லமையுள்ளது....282
கர்த்தரின் சேனைக்கு நீ காவலாளி....517
கர்த்தருக்குக் காத்திருந்து....535
கர்த்தருக்குக் காத்திருப்போர் யாரும்....148

கர்த்தருக்குள் மகிழ்ந்திருப்பதே....350
கர்த்தரே நித்தம் என் கன்மலையாமே....270
கர்த்தரை நம்பியே ஜீவிப்போம் ....254
கர்த்தரைத் துதியுங்கள் அவர் நல்லவர் ....4
கர்த்தரைப் பாடியே போற்றிடுவோமே ....9
கர்த்தனே எம் துணையானீர் ....227
கர்த்தாவின் ஜனமே கைத்தாளமுடனே ....41
கர்த்தாவே என் பெலனே....316
கர்த்தாவே! இறங்கும்!....49
கரம் பிடித்தென்னை வழி நடத்தும்....52
கருணைக் கடலாம் – இயேசுவே .... 50
கலங்காதே கலங்காதே....468
கல்லறைக் காவலில் காயமுடன் ....354
கல்வாரி அன்பை எண்ணிடும் வேளை....108
கல்வாரி மலையோரம் வாரும் பாவம் தீரும்....413
கல்வாரி மாமலைமேல் கை கால்கள் ஆணிகளால்....314
கல்வாரியே கல்வாரியே....96
கலியாணமாம் கலியாணம்....387
கலிலேயா கடற்கரையோரம் ....532
கறையேறி உமதண்டை.... 171
கனி கொடுப்போம் கனி கொடுப்போம் ....564

**கா**

காக்கும் கரங்கள் உண்டெனக்கு....243

காது குளிர பாடுங்கள் கிருபா சத்தியம்........155
காப்பார் உன்னைக் காப்பார்........355
காரிருளில் என் நேச தீபமே, நடத்துமேன்........74
காலத்தின் அருமையை உணர்ந்து........204
காலம் கடந்திடும் முன்னர் கருத்துக் கொள்வார் வாருமே........203
காலமோ கடைசி காலம்........520
காலமோ செல்லுதே........205
காலை நேரத்தில் கர்த்தன் இயேசுவை........71
காலையும் மாலையும் எவ்வேளையும் கர்த்தரைக்........10
கானான் பயணமோ தூரம் எகிப்தை........462

கி

கிருபை எம்மை சூழ்ந்து கொள்ளும் – தம் கிருபை........480
கிருபை வேண்டும் நாதா – இயேசுவே உம் திவ்விய........53
கிருபையிதே தேவ கிருபையிதே........150
கிருபையே உன்னை இந்நாள் வரையும்........541
கிறிஸ்தவ ஜீவியம் சௌபாக்கிய ஜீவியம்........317
கிறிஸ்து இயேசு தயாள பிரபு........356
கிறிஸ்துவின் அடைக்கலத்தில்........151
கிறிஸ்துவின் சீடர் சேனையின் வீரர்........320
கிறிஸ்துவின் சேனை வீரர்கள் நாம் என்றும்........256
கிறிஸ்துவின் வீரர் நாம் பிசாசை ஜெயிப்போம்........319
கிறிஸ்துவுக்குள் வாழும் எனக்கு........488

### கீ

கீதம் கீதம் ஜெய ஜெய கீதம்....560

கீதம் பாடியே பாதையில் திடன் கொள்வோம்....329

### கு

குதூகலம் நிறைந்த நன்னாள்....120

குயவனே குயவனே....501

### கூ

கூடாதது ஒன்றுமில்லையே (4)....466

### கோ

கோடாகோடி ஸ்தோத்திரம் ஏறெடுப்போம்....11

### கை

கைவிடார் இயேசு கைவிடார் – நம்மை....481

### கொ

கொல்கதா கொலைமரம்....98

கொல்கொதாவே கொலை மரமே....97

கோடாகோடி ஸ்தோத்திரம் பாடி....12

### ச

சகல ஜனங்களே கைகொட்டி தேவனை....13

சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுவது....505

சத்தம் கேட்டு சித்தம் செய்ய அழைக்கிறாரே – இயேசு....182

சத்தாய் நிஷ்களமாயொரு சாமிய மும்மில தாய்ச்....39

சத்திய வேதம் பக்தரின் கீதம்....154

சத்தியமும் ஜீவனுமாய் நித்தமுமே வாழ்ந்திடும்....54
சந்தோஷம் பொங்குதே (2)....283
சமாதானம் நல்கும் நாமம்....522
சர்வாதிகாரி சர்வ வல்ல தேவனாம்....556

### சா

சாட்சிகள் இயேசுவின் சாட்சிகள்....222

### சி

சிங்கக் குட்டிகள் பட்டினி கிடக்கும்....490
சிந்திக்கும் காலம் செயல்படும் நேரம்....519
சிலுவை கொடி ஏந்தி செல்லுவோம்....361
சிலுவை சுமந்த உருவம்.... 100
சிலுவை நாதர் இயேசுவின்....94
சிலுவை நிழலில் அனுதினம் அடியான்....99
சிலுவைக் காட்சி காண வாராய்....199
சிலுவைதனில் உயிர்பிரிய திருமகனார் முகநோக்கி....411
சிலுவையில் நின்றெழுந்த அன்பின் குரல் – நம்மை....572
சின்ன சின்ன பிள்ளை என்று நினைக்காதீங்க – இது....503

### சீ

சீயோன் பாதையில் செல்லுகின்ற....173
சீயோனிலே என் திட அஸ்திபாரம் கிறிஸ்துவே – அவர்....140
சீயோனே ஆர்ப்பரி....284
சீர் ஏசு நாதனுக்கு ஜெயமங்களம் ஆதி....382
சீரார் விவாகம் ஏதேன் காவிலே....383

## சு

சுய அதிகாரா சுந்தரக் குமாரா....358
சுவிசேஷத்தைக் கேட்பீரே....172

## சே

சேனைகளின் தேவன்....482
சேனையதிபன் நம் கர்த்தருக்கே....14

## சோ

சோபனமாக சுப தினமே....386
சோர்ந்து போகாதே மனமே....492

## த

தத்தமாய்த் தந்தேன் என்னையே....225
தந்தேன் என்னை இயேசுவே....224

## தா

தாகத்தைத் தீருமையா – அபி....58
தாகம் தீர்க்கும் ஜீவ நதி....360
தாகமானீரோ இயேசு தற்பரா சுவாமி....409
தாசரே, இத்தரணியை அன்பாய்....175
தாவீதைப் போல நடனமாடி....437

## தி

திட்டியே நகைத்து சேவகர் காடி....405
திருக்கரத்தால் தாங்கி என்னை....141
திருப்பாதம் நம்பி வந்தேன்....59

திரும்பு மனந்திரும்பு.....402
திருமறையின் மொழிகளிலே தேன் வழியும் அதன்.....508
திவ்ய காளச் சத்தம் கேட்க யேசு தோன்றும் காலத்தில்.....331
தினம் தினம் இயேசு நாயகனை.....285

## து

துதி கனம் மகிமை எல்லாம்.....445
துதி கீதங்களால் புகழ்வேன்.....426
துதிசெய் மனமே நிதம் துதிசெய்.....38
துதித்துப் பாடிட பாத்திரமே.....18
துதிப்பதே என் தகுதியல்லோ.....418
துதிப்பேன் இயேசுவின் பாதம் துதிக்கப் பெறுமற்புதரானதால்.....16
துதிப்பேன் துதிப்பேன் தேவனை.....424
துதிப்பேன், துதிப்பேன், துதிப்பேன்.....19
துதிப்போம் அல்லேலூயா பாடி.....427
துதிப்போம் துதிப்போம் சபையோரே – இந்த.....17

## தூ

தூதர் தொனி கேட்கும் அந்த இன்ப நாள்.....551
தூய ஆவியானவர் இறங்கும்.....296
தூயாதி தூயவரே! உமது புகழை நான் பாடுவேன்.....60

## தே

தேசமே பயப்படாதே மகிழ்ந்து களிகூரு.....563
தேசமே பயப்படாதே.....562

தேவ கிருபை ஆசீர்வாதம்....61
தேவ கிருபை என்றுமுள்ளதே....286
தேவ சாயல் ஆகா மாறி....142
தேவ தேவனை ஏகமாய் நாம் பாடிப்போற்றிடுவோம்....21
தேவ ஜனமே பாடி துதிப்போம்....428
தேவசேனை வானமீது கோடி கோடியாகத் தோன்றும்....122
தேவன் இயேசு வருவார் – நம்....129
தேவன் வருகின்றார் வேகம் இறங்கி....546
தேவன் வருவார் தேவன் வருவார்....479
தேவனே நான் உமதண்டையில் – இன்னும்....226
தேவனைத் துதிப்பதும்.... 40
தேவனைத் துதியுங்கள் – அல்லேலூயா....22
தேவனைத் துதியுங்கள் நம் தேவனைத் துதியுங்கள்.... 20
தேனிலும் இனிய வேதமே....156

## தொ

தொல்லை கஷ்டங்கள் சூழ்ந்திடும்....143
தொண்டு செய்வேன் என்றும் .... 364
தொழுகிறோம் எங்கள் பிதாவே ....23

## தோ

தோத்திரம் இயேசுநாதா உமக்கென்றும் தோத்திரம் இயேசுநாதா ....24
தோத்திரம் கோடா கோடி துங்கவனே உமக்கு ....423
தோத்திரம் செய்வோமே – இரட்சகனைத்....398
தோத்திரம் துதி பாத்திரா உம்மை ....25

தோத்திரம் தோத்திரமே இயேசு சுவாமிக்குத் தோத்திரமே ..................15
தோத்திரம் பாடிப் போற்றுவேன் ..................26
தோத்திரம் பாடியே போற்றிடுவேன் ..................27
தோத்திரிப்பேன் தோத்திரிப்பேன் இயேசு தேவனை ..................28

## ந

நடக்கச் சொல்லித் தாரும் இயேசுவே இயேசுவே (2) ..................579
நம் இயேசுவின் வருகை இன்று ..................123
நம் கர்த்தர் என்றும் நல்லவர் ..................419
நம் தேவன் அன்புள்ளவர், நம் தேவன் பரிசுத்தர் ..................485
நம் தேவனைத் துதித்துப்பாடி ..................36
நமது இயேசு கிறிஸ்துவின் நாமம் ..................257
நம்ப வேண்டாம் நம்ப வேண்டாம் ..................235
நம்முடைய தெய்வம் இயேசுவல்லால் – இந்த ..................489
நல் மேய்ப்பன் இவரே – இயேசு ..................539
நல்ல சமாரியன் இயேசு ..................469
நல்ல செய்தி இயேசுவை ..................177
நல்லவர் நல்லவர் நல்லவர் நல்லவர் இயேசு நல்லவர் ..................422
நல்லாவி ஊற்றும் தேவா ..................299
நன்றியால் துதிபாடு – நம் இயேசுவை ..................417
நன்றியால் பாடிடுவோம் ..................434

## நா

நாங்க வலைவீசி மீன்பிடிப்பவங்க ..................575

நாவில் வந்திருப்பாயே நசரேயா....449
நான் இயேசுவின் ஒளியில் நடக்கிறேன்....323
நான் உம்மைப் பற்றி ரட்சகா....289
நான் உன்னை விட்டு விலகுவதில்லை....464
நான் நேசிக்கும் தேவன் இயேசு இன்றும் ஜீவிக்கிறார்....457
நான் பயப்படவே மாட்டேன்....188
நான் பாடும் கானங்களால்....429
நான் பாவச் சேற்றினிலே வாழ்ந்தேன்....258
நான் பிரமித்து நின்று பேரன்பின்....104
நானும் என் வீட்டாருமோவென்றால்....513

## நி

நிகரே இல்லாத சர்வேசா....37
நித்தியானந்த கர்த்தர் இயேசுவே....144
நியாயத்தீர்ப்பின் நாளான அந்தநாள்....128
நிலையில்லா உலகத்தில் அலைந்தேனையா....228

## நீ

நீ இயேசு மார்பில் சாய்ந்து இரு....208
நீங்காத பாவம் நீங்காத தேனோ....209
நீங்காதிரும் என் நேச கர்த்தரே....77

## நெ

நெஞ்சத்திலே துய்மையுண்டோ....186
நெஞ்சமே துதி பாடிடு....271
நெஞ்சமே, கெத்சமேனக்கு....105

## நே

நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர்....106
நேச ராஜாவாம் பொன்னேசு நாதா ....385

## ப

படகோ படகு கடலிலே படகு....578
பந்திவிட்டெழுந்தார் பரம என் ராஜா....570
பயப்படாதே பாரிலிப்போதே....362
பரம எருசலேமே பரலோகம் விட்டிறங்குதே....262
பரலோக நாடெந்தன் இன்ப நாடாமெனக்கு....332
பரலோகமே என் சொந்தமே....260
பரிசுத்த அக்கினி அனுப்பும் தேவா ....297
பரிசுத்தப்படுத்தும் தேவா – என்றும் ....304
பரிசுத்தம் பெற வந்திட்டீர்களா?....303
பரிசுத்தர் கூட்டம் இயேசுவைப் போற்றிப்....333
பரிசுத்தர் கூட்டம் நடுவில்....302
பலிபீடத்தில் என்னைப் பரனே....87
பறக்குதே ஜெயக்கொடி பறக்குதே....558

## பா

பாடுபட்ட யேசையா பட்டபலன் தாருமையா....414
பாடும் பாடல் இயேசுவுக்காக ....288
பாடுவேன் பரவசமாகுவேன்....486
பாத்திரம் நிரம்பி வழிகின்றதே....390

பாதம் போற்றியே பணிந்திடுவேன் – இயேசுவின்......29
பாதை தெரியாத ஆட்டைப் போல......389
பார் பார் பார் இயேசுவின் ஜீவன் போகுது பார்......412
பார் போற்றும் வேந்தன் இப்பாழ் உள்ளம் வந்தார்......287
பாரீர் அருணோதயம் போல்......442
பாரீர் கெத்சமனே......83
பாவ சஞ்சலத்தை நீக்க பிராண நண்பர்தான் உண்டே......63
பாவ தோஷம் நீக்கிட......101
பாவத்தின் பலன் நரகம், ஓ பாவி நடுங்கிடாயோ?......234
பாவத்தின் பாரத்தினால் தவித்திடும் பாவி என்னை......397
பாவம் என்னைத் தொடர்ந்தாலும் – இயேசு......453
பாவம் பிரவேசியாய்......334
பாவம் பெருகுதே......202
பாவி உன் மீட்பர் கரிசனையாய்......201
பாவி பரமசுதன் தாவி உனைத் தயவாய்......452
பாவி யேசுனைத் தானே தேடித் துயர் மேவினார்......102
பாவி வா, பாவி வா பரனண்டையே வா......357
பாவிக்கு புகலிடம் இயேசு இரட்சகர்......103
பாவியே நீ போகும் போது கூட வருவதென்ன?......396
பாவியே ஜீவ ஊற்றண்டை வா......200

**பி**

பிரதான தூதன் எக்காளம் முழங்க......125
பிரிய இயேசுவின் சேனை வீரர்கள் நாம்......176

பிறந்தார், பிறந்தார் ....80
பிறர் வாழவேண்டுமெனில் ....391

### பு

புத்தம் புதிய பாடல் தந்தார் ....242
புத்திக்கெட்டாத அன்பின் வாரி பாரும் ....373
புதுவாழ்வு நமக்குப் புதுவாழ்வு ....392

### பூ

பூமி அதிர்ந்தாலும் ....491
பூமியின் மாந்தரீர் கூடிவாரீர் ....393
பூரண வடிவுள்ள சீயோனிலே ....335
பூர்வீகமான பெந்தெகொஸ்தே ஆவி ....298
பூவின் நற்கந்தம் வீசும் சோலையாயினும் ....554

### பெ

பெத்தலெகேம் ஊரோரம் சத்திரத்தை நாடிக் ....78
பெத்தலையில் பிறந்தவரைப் ....79
பெரியவர் (3) இயேசு ....559
பெலமுள்ள நகரமாம் இயேசு வண்டை ....207

### பே

பேசினது போதுமப்பா – நண்பா ....503
பேழையும் கட்ட கட்ட ....574

### பொ

பொங்கிவரும் அருள் மனிதரை மாற்றிடுதே ....206

## போ

போற்றிடுவேன் பராபரனைச் ....33
போற்றித் துதிப்போம் எம் தேவ தேவனை ....31
போற்றிப் புகழ்ந்திடுவோம், அல்லேலூயா – துதி ....32
போற்றுவோம் துதி சாற்றுவோம் நிதம் ....416
போற்றுவோமே போற்றுவோமே ....34

## ம

மகனே ஓ மகளே உன் இதயத்தைத் தாராயோ ....210
மகிழ்வோம் இயேசுவில் மகிழ்வோம் பரன் ....290
மகிழ்வோம் மகிழ்வோம் இயேசு நாதரில் ....336
மகிழ்வோம் மகிழ்வோம் தினம் அகமகிழ்வோம் ....293
மகிழுவேன் மகிழுவேன் இரட்சிப்பின் தேவனின் ....291
மகிழுவேன் மகிழுவேன் இரட்சிப்பில் மகிழுவேன் ....292
மங்கள கீதங்கள் பாடிடுவோம் ....160
மங்களம் செழிக்க கிருபை அருளும் மங்கள நாதனே ....374
மங்களம் மங்களம் மங்களமே(3) ....381
மங்கா சுபகன மங்களமே – மனம் ....380
மணவாழ்வு புவி வாழ்வினில் வாழ்வு – மங்கள வாழ்வு ....369
மணவாளன் கர்த்தர் இயேசு வருகின்றாரே ....536
மந்தையில் சேரா ஆடுகளே ....178
மலைமா நதியோ மிகு ஆழ் கடலோ ....394
மறந்திடாதே நீ ....237

மன்னன் இயேசு வருகின்றார் நீ மகிழ்ந்து பாடிடு ........ 421
மனிதர் எவர்க்கும் ஒரே சுவிசேஷம் ........ 516
மனிதனை மனிதனாய் நடத்திடுவோம் – இறைவனின் ........ 502

## மா

மாசற்ற தூய நல் அன்பே அன்பே ........ 229
மாட்சி மிகும் மோட்ச நகர் மகிமை என் சொல்வேன் – அந்த ........ 274
மாயையில் மனம் ஓடவையாதே – உன்னை ........ 368
மாறிடா எம்மா நேசரே – ஆ ........ 363
மான்கள் நீரோடை வாஞ்சித்து ........ 149

## மு

முடிந்ததென்றீரோ ஐயா ........ 410

## மே

மேகங்கள் நடுவே வழி பிறக்கும் ........ 337
மேகமீதில் இயேசு சுவாமி ........ 126
மேலோகத்தை நாடுகிறோம் ........ 549

## மோ

மோட்ச யாத்திரை செல்கின்றோம் மேலோகவாசிகள் – இம் ........ 259

## யா

யார் என்னைக் கைவிட்டாலும் ........ 471
யாரிடம் செல்வோம் இறைவா ........ 509

## யு

யுத்தம் ஒன்று வருதே, தேவ சேனை புறப்படு ........ 366

## யூ

யூத ராஜ சிங்கம் உயிர்த்தெழுந்தார்........................................................................110

## யெ

யெகோவா நிசி யேகோவா நிசியை.....................................................................557

## யே

யேசு நாயகா, வந்தாளும் – எந்நாளும் திவ்ய ...................................................376

## ர

ரட்சிப்பை உயர்த்திக் கூறுவோம், லோகம் நடுங்க ............................................163

## ரோ

ரோஜாப்பூ வாசமலர்கள் நாம் இப்போ ..............................................................379

## லே

லேவியரே ஆசாரியரே..............................................................................................521

## வ

வந்தாளுமே எந்நாளுமே, உன் நாமமே என் தாபமே..............................................64
வரவேணும், என தரசே, ...........................................................................................121
வருகின்றார் – இறைவன் – வருகின்றார் ....................................................................395
வருவாய் தருணமிதுவே அழைக்கிறாரே ....................................................................211
வல்லமை அருள் நிறைவே வாரும் ..............................................................................530
வல்லமை தேவை தேவா வல்லமை தாரும் தேவா....................................................300
வழி நடத்தும் வல்ல தேவன் வாழ்விலே நாயகனே.....................................................460
வழியென்றால் எது? அது ஜீவ வழி ...........................................................................580
வளர்ந்தே பெருகுக என்றே – உளம் ........................................................................307

## வா

வா எங்கள் சுவாமி வா இந்த நேரத்தில் ........ 450
வா வா இயேசு பாதம் தருவாராசீர்வாதம் ........ 212
வா வா பாவி அழைக்கிறார் இயேசு ........ 213
வா, வா, நேசா மலர் சுவிசேஷத்தின் ........ 179
வாசலண்டை நிற்கும் நேசரை ........ 216
வாசலண்டை நின்று ஆசையாய் தட்டும் ........ 215
வாடும் உள்ளங்களே ........ 525
வாராயோ இயேசுவண்டை ........ 218
வாரும் வாரும் மகத்துவ தேவனே ........ 65
வாருமே, இயேசு பாதம் சேருமே ........ 180
வாருமையா போதகரே, வந்தெம்மிடம் தங்கியிரும் ........ 75
வாலிப நாளில் உன் தேவனைத் தேடி ஓடிவா ........ 214
வாவா ஜெகதீசா – வரந்தரவே ........ 66
வாழ்த்துகிறேன் இயேசு சுவாமி ........ 72
வாழ்வல்லவோ இது வளமான வாழ்வு ........ 217
வாழ்வளிக்கின்றார் இயேசு வாழ்வளிக்கின்றார் ........ 523
வாழுவேன், அன்பர் நாடதில் ஆர்ப்பரிப்புடன் ........ 545
வான பராபரனே இப்போ வாரும் எம்மத்தியிலே ........ 67
வான் புகழ் வல்ல தேவனையே நித்தம் ........ 269
வானகம் வாழ்ந்திடும் எங்கள் தந்தாய் ........ 433
வானங்களும் வானாதி, வானங்களும் உமைக் ........ 498
வான்புறாவே எங்கள் மீது வந்தமர்ந்திடும் ........ 529

வானிலோர் திருநாள் உண்டே....127

## வி

விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்....415
விடுதலை விடுதலை விடுதலை பெற்றேன்....338
விதைப்பும் அறுப்புமே....181
விந்தை கிறிஸ்தேசு ராசா!....107
விழித்தெழு விசுவாசியே நீ....146
விளைந்த பலனை அறுப்பாரில்லை....240

## வெ

வெற்றி கீதம் பாடும் இயேசுவின் பிள்ளைகளே....552
வெற்றி வெற்றி வெற்றி....324

## வே

வேத வசன விதைதனைப் புவியில்....157
வேதத்தைத் தியானம் செய்....158

## ஜீ

ஜீவனுள்ள தேவனே வாரும்....55
ஜீவனுள்ள தேவனைச் சேவிப்பார் யாருண்டோ?....174
ஜீவிக்கிறார் இயேசு ஜீவிக்கிறார்....261
ஜீவியமே ஒரே ஜீவியமே....321

## ஜெ

ஜெபத்தால் ஜெயத்தை காண்போமே....57

ஜெபத்தைக் கேட்கும் எங்கள் தேவா,.......56
ஜெய ராஜ கொடி ஏற்றிக்காட்டியே.......553
ஜெயம் ஜெயம் அல்லேலூயா ஜெயம் ஜெயம் எப்போதும்.......42

## ஜொ

ஜொலித்திடும் ஜொலித்திடும் தேவ அன்புதான் .......367
ஜோதி தோன்றும் ஓர் தேசமுண்டு .......330

## ஸ்

ஸ்தோத்திரம் (5) இயேசு தேவா .......425

## ஸ்ரீ

ஸ்ரீ மா தேவா .......372

****************

# துதிப்பாடல்கள்

## பாடல் – 1

**அல்லேலூயா கர்த்தரையே ஏகமாய்த் துதியுங்கள்**
அவர் நடத்தும் செயல்களெல்லாம் பார்த்தோரே துதியுங்கள்
வல்லமையாய் கிரியை செய்யும் வல்லோரைத் துதியுங்கள்
எல்லோரையும் ஏற்றுக்கொள்ளும் இயேசுவைத் துதியுங்கள்

இராஜாதி இராஜனாம் இயேசுராஜன்
பூமியில் ஆட்சி செய்வார்
அல்லேலூயா அல்லேலூயா
தேவனைத் துதியுங்கள்

2. தம்புரோடும் வீணையோடும் கர்த்தரைத் துதியுங்கள்
இரத்தத்தினால் பாவங்களைப் போக்கினார் துதியுங்கள்
எக்காளமும் கைத்தாளமும் முழங்கிடத் துதியுங்கள்
எக்காலமும் மாறாதவர் இயேசுவைத் துதியுங்கள் – இராஜாதி

3. பிள்ளைகளே, வாலிபரே தேவனைத் துதியுங்கள்
வாழ்வதனை அவர் பணிக்கே கொடுத்து நீர் துதியுங்கள்
பெரியவரே, பிரபுக்களே தேவனைத் துதியுங்கள்
செல்வங்களை இயேசுவுக்காய் செலுத்தியே துதியுங்கள் – இராஜாதி

4. ஆழ்கடலே, சமுத்திரமே தேவனைத் துதியுங்கள்
அலை அலையாய் ஊழியர்கள் எழும்பினார் துதியுங்கள்
தூதர்களே, முன்னோடிகளே தேவனைத் துதியுங்கள்
பரலோகத்தை இந்தியர்கள் நிரப்புவார் துதியுங்கள் – இராஜாதி

## பாடல் – 2

*பல்லவி*

**இயேசு என்ற திருநாமத்திற்கு**
எப்போதுமே மிகத் தோத்திரம்

*சரணங்கள்*

1. வானிலும் பூவிலும் மேலான நாமம்
வல்லமையுள்ள நாமமது
தூயர் சொல்லித் துதித்திடும் நாமமது – இயேசு

2. வேதாளம் பாதாளம் யாவையும் ஜெயித்த
வீரமுள்ள திரு நாமமது
நாமும் வென்றிடுவோமிந்த நாமத்திலே – இயேசு

3. பாவத்திலே மாளும் பாவியை மீட்கப்
பாரினில் வந்த மெய் நாமமது
பரலோகத்தில் சேர்க்கும் நாமமது – இயேசு

4. உத்தம பக்தர்கள் போற்றித் துதித்திடும்
உன்னத தேவனின் நாமமது
உலகெங்கும் ஜொலித்திடும் நாமமது – இயேசு

5. சஞ்சலம் வருத்தம் சோதனை நேரத்தில்
தாங்கி நடத்திடும் நாமமது
தடைமுற்று மகற்றிடும் நாமமது – இயேசு

## பாடல் – 3

*பல்லவி*

**இயேசு ராஜனின் திருவடிக்கு**
சரணம் சரணம் சரணம்
ஆத்ம நாதனின் மலரடிக்கு
சரணம் சரணம் சரணம்

1. துன்ப துயரம் சூழும் வேளையும் – வெகு
கஷ்ட நஷ்டம் வரும் நாளிலும்
அன்பருக்கருள் தரும் இன்பமே
சரணம் சரணம் சரணம் – இயேசு

2. ஆடுபோல் அடிக்கப்பட்டீரே – அன்பால்
தேடி எமை மீட்கவந்தீரே – எங்கள்
ஜீவ பலியாய் மாண்டீரே
சரணம் சரணம் சரணம் – இயேசு

3. பெலவீனம் யாவும் போக்கும் வல்லோரே
பெலன் ஈந்து வலக்கரம் பிடிப்பீரே
ஆவி ஆத்மா சரீரத்தைப் படைக்கிறேன்
சரணம் சரணம் சரணம் – இயேசு

## பாடல் – 4

**கர்த்தரைத் துதியுங்கள் அவர் நல்லவர்**
அவர் கிருபை என்றுமுள்ளது.

***பல்லவி***

2. தேவாதி தேவனைத் துதித்திடுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது.

3. கர்த்தாதி கர்த்தரைத் துதித்திடுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது.

4. அதிசயங்களைச் செய்கிறவரைத் துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது.

5. வானங்களை உண்டாக்கினவரைத் துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது.

6. தண்ணீர் மேல் பூமியைப் பரப்பினவரைத் துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது.

7. பெருஞ்சுடர்களை உண்டாக்கினவரைத் துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது.

8. பகலில் சூரியனைப் படைத்தவரைத் துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது.

9. இரவில் சந்திரனைப் படைத்தவரைத் துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது.

10. இரவில் நட்சத்திரங்களைப் படைத்தவரைத் துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது.

## பாடல் – 5

***பல்லவி***

**இயேசு பரனை எங்களின் ராஜனை**
ஏற்றியே போற்றியே வாழ்த்திடுவோம்

***அனுபல்லவி***

இகபர சுகத்தை ஏழைகளெமக்கு
இலவசமாய் அவரீந்தாரே

***சரணங்கள்***

1. காசினியில் கரிசனையாய் வந்து
கஷ்டத்தைச் சகித்தார் கர்த்தர் தாமே
பாசமாக பாடுவோம் நாமே
மேசியாவின் நாமத்தையே – இயேசு

2. மாண்டுபோன மாந்தரை மீட்க
மகிதலம் வந்த நம் மகிபனையே
மாசில்லாமல் ஆசையோடு
நேசரில் நாம் மகிழ்ந்திடவே – இயேசு

3. மரணபயத்தால் நடுங்கின நம்மை
மகிமையால் நிறைத்துமே மகிழச்செய்தார்
சேவையே புரிவோம் இயேசுவின் நாமம்
சிறந்து இலங்கி செழித்திடவே – இயேசு

4. தாசரைப் போல் தாழ்மையை அணிந்த
நேசரை நேயமாய்ப் பின்பற்றுவோம்
வேஷத்தை ஒழித்து தேவனில் நிலைத்து
வேதாளம் நடுங்கவே ஜெயித்திடுவோம் – இயேசு

5. தாவி வரும் பாவியை ஒருபோதும்
தள்ளாத இரட்சகன் ஜீவிப்பதால்
தாமதமேனோ பாவியே வாராய்
தயாபரனண்டை சேர்ந்திடவே – இயேசு

6. மேகமீதினில் மேசியா வருவார்
வேகமாய் நம்மைச் சேர்த்திடவே
வேறு ரூபமாய் மாறுவோம் நாமே
மேலோகத்திலென்றும் ஜீவிக்கவே – இயேசு

## பாடல் – 6

***பல்லவி***

**எந்தக் காலத்திலும் எந்த நேரத்திலும்**
நன்றியால் உம்மை நான் துதிப்பேன்
இயேசுவே உம்மை நான் துதிப்பேன் துதிப்பேன்
எந்த வேளையிலும் துதிப்பேன்

***சரணங்கள்***

1. ஆதியும் நீரே – அந்தமும் நீரே
ஜோதியும் நீரே – என் சொந்தமும் நேரே – எந்த

2. தாய் தந்தை நீரே தாதையும் நீரே
தாபரம் நீரே – என் தாரகம் நீரே – எந்த

3. வாழ்விலும் நீரே – தாழ்விலும் நீரே
வாதையில் நீரே – என் பாதையில் நீரே – எந்த

4. வானிலும் நீரே பூவிலும் நீரே
ஆழியில் நீரே – என் ஆபத்தில் நீரே – எந்த

5. துன்ப நேரத்தில் இன்பமும் நேரே
இன்னல் வேளையில் – என் மாறிடா நேசர் – எந்த

6. ஞான வைத்தியராம் – ஔஷதம் நீரே
ஆத்ம நேசராம் – என் நண்பரும் நீரே – எந்த

7. ஞானமும் நீரே – கானமும் நீரே
தானமும் நீரே – என் நாதனும் நீரே – எந்த

8. ஆறுதல் நீரே – ஆதாரம் நீரே
ஆசையும் நீரே – என் ஆனந்தம் நீரே – எந்த

9. மீட்பரும் நீரே – என் மேய்ப்பரும் நீரே
மேன்மையும் நீரே – என் மகிமையும் நீரே – எந்த

10. தேவனும் நீரே – என் ஜீவனும் நீரே
ராஜராஜனாம் – என் சர்வமும் நீரே – எந்த

## பாடல் – 7

**என்னை மறவா இயேசு நாதா**
உந்தன் தயவால் என்னை நடத்தும்

***சரணங்கள்***

1. வல்ல ஜீவ வாக்குத்தத்தங்கள்
வரைந்தெனக்காய் ஈந்ததாலே ஸ்தோத்திரம்!
ஆபத்திலே அரும் துணையே
பாதைக்கு நல்லதீபமிதே – என்னை

2. பயப்படாதே வலக்கரத்தாலே
பாதுகாப்பேன் என்றதாலே, ஸ்தோத்திரம்!
பாசம் என்மேல் நீர் வைத்ததினால்
பறிக்க இயலாதெவரு மென்னை – என்னை

3. தாய் தன் சேயை மறந்துவிட்டாலும்
மறவேன் உன்னை என்றதாலே ஸ்தோத்திரம்!
வரைந்தீரன்றோ உம் உள்ளங்கையில்
உன்னதா எந்தன் புகலிடமே – என்னை

4. திக்கற்றோராய்க் கைவிடேனே
கலங்கிடீரே என்றதாலே ஸ்தோத்திரம்!
நீர் அறியா தேதும் நேரிடா
என் தலைமுடியும் எண்ணினீரே – என்னை

5. உன்னைத் தொடுவோன் என் கண்மணியைத்
தொடுவதாக உரைத்ததாலே ஸ்தோத்திரம்!
அக்கினியின் மதிலாக
அன்பரே என்னைக் காத்திடுமே – என்னை

6. உனக்கெதிராய் எழும்பும் ஆயுதம்
வாய்த்திடாதே என்றதாலே ஸ்தோத்திரம்
பறந்திடுமே உம் நாமத்திலே
பரனே எனக்காய் ஜெயக்கொடியே – என்னை

7. என்னை முற்றும் ஒப்புவித்தேனே
ஏற்று என்றும் நடத்துவீரே ஸ்தோத்திரம்
எப்படியும் உம் வருகையிலே
ஏழை என்னை சேர்த்திடுமே – என்னை

## பாடல் – 8

**எங்குமுள்ளோர் யாரும் சேர்ந்து ஸ்தோத்தரிப்போமே**
இஸ்ரவேலின் கர்த்தருக்குத் துதி செலுத்துமே
யாக்கோபின் சந்ததியாரும் கூடி வாருமே
இயேசு எங்கள் கர்த்தர் என்றே ஸ்தோத்தரிப்போமே

1. தேவ மைந்தன் இயேசுவுக்காய் ஸ்தோத்தரிப்போமே
பரிசுத்தாகமம் ஈந்ததற்காய் ஸ்தோத்தரிப்போமே
கடந்த கால வீரருக்காய் ஸ்தோத்தரிப்போமே
ஜீவன் விட்ட சுத்தருக்காய் ஸ்தோத்தரிப்போமே
கோதுமை மணி தனித்தால் இலாபம் ஏது உண்டு பாரீர்
செத்ததாகில் பலன் மிகுதி ஸ்தோத்தரிப்போமே

2. நம்பிக்கை இழக்காவண்ணம் முன் நடப்போமே
இராஜாவின் கட்டளைக்குக் கனம் கொடுப்போமே
தேவசமூகப் பழக்கம் உள்ளோர் பயம் கொள்ள மாட்டார்
கீழ்ப்படியக் கற்றுக்கொண்டோர் தடுமாற்றம் கொள்ளார்
அவர்க்காய் இழந்தவர்க்குப் பரிசு நூறத்தனையாகக் கிட்டும்
நித்திய மகிழ்ச்சி அவரை மூடும் ஸ்தோத்தரிப்போமே

3. அத்தி மரம் துளிர்விடாமல் போனபோதிலும்
திராட்சைச்செடியின் கனி காணாமல் கருகிப்போயினும்
ஒலிவமரத்தின் பலன்கள் கூட அற்றுப்போயினும்
வயலில் மகசூல் இன்றி ஏக்கம் வந்தபோதிலும்
இம்மைக்காக அல்ல இயேசுநாதர் மேலே உள்ள பற்று
நம் இருப்பு பரலோகத்தில் ஸ்தோத்தரிப்போமே

## பாடல் – 9

**கர்த்தரைப் பாடியே போற்றிடுவோமே**
கருத்துடன் துதிப்போம் இனிய நாமமதை
கடலின் ஆழம்போல் கருணையாடிரக்கம்
கரையில்லை அவரன்பு கரையற்றதே

***பல்லவி***

இயேசு நல்லவர் இயேசு வல்லவர்
இயேசுவைப் போல் வேறோர் நேசரில்லையே

2. கொடுமையோர் சீறல் பெருவெள்ளம் போல
அடிக்கையில் மோதியே மதில்களின் மீதே
பெலனும் இவ்வேழைக்கும் எளியோர்க்கும் தினாய்
வெயிலுக்கும் ஒதுங்கும் விண் நிழலுமானார் – இயேசு

3. போராட்டம் சோதனை நிந்தை அவமானம்
கோரமாய் வந்தும் கிருபையில் நிலைக்க
தேவ குமாரனின் விசுவாசத்தாலே நான்
ஜீவித்து சேவிக்கத் திடமளித்தார் – இயேசு

4. கல்லும் முள்ளுகளுள்ள கடின பாதையிலே
கலக்கங்கள் நெருக்கங்கள் அகமதை வருத்த
எல்லையில்லா எதிர் எமக்கு வந்தாலும்
வல்லவர் இயேசு நம்முன் செல்கிறார் – இயேசு

5. சீயோனில் சிறப்புடன் சேர்ந்திட இயேசு
சீக்கிரம் வரும் நாள் நெருங்கி வந்திடுதே
முக முகமாகவே காண்போமே அவரை
யுக யுகமாகவே வாழ்ந்திடுவோம். – இயேசு

## பாடல் – 10

### *பல்லவி*

**காலையும் மாலையும் எவ்வேளையும் கர்த்தரைக்**
கருத்துடன் பாடிடுவேன்

### *அனுபல்லவி*

பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் எனத்தூதர்
பாடிடும் தொனி கேட்குதே

### *சரணங்கள்*

1. கர்த்தர் என் வெளிச்சம் ஜீவனின் பெலனும்
கிருபையாய் இரட்சிப்புமானார்
அஞ்சிடாமல் கலங்காமல் பயமின்றித் திகிலின்றி
அனுதினம் வாழ்ந்திடுவேன் – காலையும்

2. எனக்கெதிராய் ஓர் பாளையமிறங்கி
என்மேல் ஓர் யுத்தம் வந்தாலும்
பயப்படேன்; எதிராளி நிமித்தமாய் செவ்வையான
பாதையில் நடத்திடுவார் – காலையும்

3. ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன்
என்றும் தம் மகிமையைக் காண
ஜீவனுள்ள நாளெல்லாம் தம் ஆலயத்தில் தங்குவதை
வாஞ்சித்து நாடிடுவேன் – காலையும்

4. தீங்கு நாளில் தம் கூடார மறைவில்
தேடிச் சேர்த்தென்னை மறைப்பார்
உன்னதத்தில் மறைவாக ஒளித்தென்னைப் பாதுகாத்து
உயர்த்துவார் கன்மலைமேல் – காலையும்

5. எந்தன் முகத்தைத் தேடுங்கள் என்று
என் கர்த்தர் சொன்னதினாலே
தம் முகத்தைத் தேடுவேனே; கூப்பிடும் என் சத்தம் கேட்டு
தயவாகப் பதிலளிப்பார் – காலையும்

6. தகப்பனும் தாயும் கைவிட்டாலும் என்
கர்த்தர் என்னைச் சேர்த்துக்கொள்வார்
எந்தன் உள்ளம் ஸ்திரமாகத் திடமாகக் கர்த்தருக்கே
என்றென்றும் காத்திருக்கும் – காலையும்

7. எனக்காக யாவும் செய்து முடிப்பார்
என் கர்த்தர் வாக்கு மாறிடார்
தமக்கென்றும் பயந்திடும் பக்தர் யாவர் விருப்பமும்
தவறாமல் நிறைவேற்றுவார் – காலையும்

## பாடல் – 11

### *பல்லவி*

**கோடாகோடி ஸ்தோத்திரம் ஏறெடுப்போம்**
இராஜாதி ராஜன் தேவாதி தேவன்
இயேசு கிறிஸ்துவுக்கே மகிமை

### *சரணங்கள்*

1. பரிசுத்தவான்கள் சபை நடுவே
தரிசிக்கும் தேவ சமூகத்திலே
அல்லேலூயா அல்லேலூயா
ஆவியில் பாடி மகிழுவோம்
ஆண்டவர் இயேசுவைக் கொண்டாடுவோம் – கோடாகோடி

2. கிருபாசனத்தண்டை நெருங்குவோம்
திருரத்தம் கரத்தில் ஏந்தி நிற்போம்
அல்லேலூயா அல்லேலூயா
கண்டேன் சகாயம் இரக்கமே
கர்த்தர் கிருபை என்றும் உள்ளதே – கோடாகோடி

3. குருவி பறவை வானம்பாடியே
கவலையின்றிப் பறந்து பாடுதே
அல்லேலூயா அல்லேலூயா
அற்புதமான சிருஷ்டிகரே
அந்த விசுவாசம் கற்றறிந்தோம் – கோடாகோடி

4. கவலைப்படாதீர்கள் என்றுரைத்தீர்
காட்டுப் புஷ்பத்தை உடுத்துவித்தீர்
அல்லேலூயா அல்லேலூயா
ஆடை ஆகாரம் தேவை எல்லாம்
அன்றன்று தந்தெம்மை ஆதரித்தீர் – கோடாகோடி

5. கணக்கில்லா நன்மைகள் கர்த்தர் செய்தீர்
கருத்துடன் பாடி நன்றி கூறுவோம்
அல்லேலூயா அல்லேலூயா
தேவ குமாரன் வந்திடும் நாள்
துய முகம் கண்டு கெம்பீரிப்போம் – கோடாகோடி

## பாடல் – 12

### *பல்லவி*

**கோடாகோடி ஸ்தோத்திரம் பாடி**
கிறிஸ்துவின் அன்பை ருசிப்போமே

### *அனுபல்லவி*

சேற்றிலிருந்து தூக்கி எடுத்துத்
தேற்றி அணைத்துக் காத்துக்கொண்டாரே தேவசுதன்

### *சரணங்கள்*

1. பாவியை மீட்கப் பரன் சித்தங்கொண்டார்
பரலோகம் துறந்து பாரினில் பிறந்தார்
பரமனிவ் வேழையைத் தேடிவந்தாரே
பாதம் பணிந்தேன் பதில் ஏதுமுண்டோ? – பூவுலகில்

2. தேவனின் சித்தம் செய்யும் படியாய்
தாசனின் கோலம் தாமெடுத் தணிந்து
தற்பரன் நொறுக்கச் சித்தங் கொண்டாலும்
தம்மைப் பலியாய் தத்தம் செய்தாரே – எந்தனுக்காய்

3. ஆடுகளுக்காய் உயிர்தனைக் கொடுத்து
கேடுவராது காக்கும் நம் மேய்ப்பர்
இன்று மென்மேலே வைத்த நேசத்தால்
என்றென்றும் நன்றி கூறித்துதிப்பேன் – இறையவனை

4. தாவீது கோத்திர சிங்கமாய் வந்தும்
சாந்தத்தால் என்னைக் கவர்ந்து கொண்டாரே
தாழ்மையான ஆட்டுக் குட்டியுடனே
தங்கியிருப்பேன் சீயோன் மலையில் – நித்தியமாய்

5. குயவனின் கையில் களி மண்ணைப்போல
குருவே நீர் என்னை உருவாக்குமையா
மாசற்ற மணவாட்டியாய் என்னைக்
காத்துக்கொள்ளும்படி கருணைகூர் ஐயா – ஏழையென்னை

## பாடல் - 13

**சகல ஜனங்களே கைகொட்டி தேவனை**
கெம்பீர சத்தத்தோடே ஆர்ப்பரித்திடுவோமே (2)

***சரணங்கள்***

1. உன்னதமானவராகிய கர்த்தர்
எந்நாளும் அதிசயமானவராமே
மண்ணெங்கும் மகத்துவமான ராஜாவாம்
மகிழ்ந்து போற்றிடுவோம் - சகல

2. போற்றி போற்றி பாடிடுவோமே
தேற்றி நம்மைக் காத்திடும் தேவனை
ஆற்றிடுவாரே ஆவிதனையே
சாற்றிடுவோம் துதியை - சகல

3. தேவாதி தேவன் ஆர்ப்பரிப்போடும்
கர்த்தாதி கர்த்தன் எக்காளத்தோடும்
பிரதான தூதனுடைய சத்தத்தோடும்
எழுந்தருளி வருவார் - சகல

4. கர்த்தருக்குள் மரித்தோர் முதலுயிர்த்திடுவார்
சத்தியத்தில் நிற்போர் மறுரூபமடைவார்
விரைவில் இயேசு வேகமே வருவார்
சந்திக்க ஆயத்தமா? - சகல

5. அநேக ஸ்தலங்கள் அங்கேயும் உண்டு
அதில் ஒன்று நமக்காய் ஆயத்தம்பண்ணி
அழைக்கவே வருவார் அனுதினம் நாமும்
அல்லேலூயா பாடுவோம் - சகல

## பாடல் – 14

**சேனையதிபன் நம் கர்த்தருக்கே**
செலுத்துவோம் கனமும் மகிமையுமே
அற்புதமே தம் அன்பெமக்கே – அதை
அறிந்தே அகமகிழ்வோம் (2)

ஜெய கிறிஸ்து முன் செல்கிறார்
ஜெயமாக நடத்திடுவார்
ஜெய கீதங்கள் நாம் பாடியே
ஜெயக்கொடியும் ஏற்றிடுவோம்
ஜெயம் அல்லேலூயா அவர் நாமத்திற்கே

2. தாய் மறந்தாலும் நான் மறவேன்
திக்கற்றோராய் விட்டு விடேன்
என்றுரைத் தெம்மைத் தேற்றுகிறார்
என்றும் வாக்கு மாறிடாரே – ஜெய

3. மேய்ப்பனில்லாத ஆடுகட்கே
நானே நல்ல மேய்ப்பன் என்றார்
இன்ப சத்தம் பின் சென்றிடுவோம்
இன்பப் பாதை காட்டிடுவார் – ஜெய

4. சத்துருவின் கோட்டை தகர்ந்தொழிய
சத்தியம் நித்தியம் நிலைத்தோங்க
சாத்தானின் சேனை நடுங்கிடவே துதி
சாற்றி ஆர்ப்பரிப்போம். – ஜெய

5. கறை திரை முற்றும் நீங்கிடவே
கர்த்தர் நம்மைக் கழுவிடுவார்
வருகையில் எம்மைச் சேர்க்கும் வரை
வழுவாமல் காத்துக்கொள்வார் – ஜெய

## பாடல் – 15

***பல்லவி***

**தோத்திரம் தோத்திரமே இயேசு சுவாமிக்குத் தோத்திரமே**

***அனுபல்லவி***

தோஷி எனை இரட்சித்த பரிசுத்தர்க்குத் தோத்திரமே

***சரணங்கள்***

1. கோடா கோடி தூதர்கள் சபை கூடி நடனமாடி
பாடி உமைத் துதிக்கப் பாவியானும் உமைத் துதிப்பேன்– தோத்

2. கேருபீன் சேராபீன்கள் உடல் செட்டைகளால் மூடி
நேராய் உமைத் துதிக்க நீசன் யானும் உமைத் துதிப்பேன் – தோத்

3. கன்னியர் கீதம்பாடி இயேசு கர்த்தனையே போற்றி
உன்னித் துதித்திடவே பாவியானும் உமைத் துதிப்பேன் – தோத்

4. பரிசுத்தவான்கள் சங்கம் எங்கள் பார்த்திபன் இயேசுவையே
தரிசித்துப் போற்றிடவே தாசன் யானும் உமைத் துதிப்பேன் – தோத்

5. மூப்பர் சுற்றி நின்று எங்கள் முன்னவன் இயேசுவையே
ஆர்ப்பரித்துத் துதிக்க அடியானும் உமைத் துதிப்பேன் – தோத்

6. வானத்தின் ஜோதி எலலாம் தேவமைந்தனையே போற்றி
ஞாலத்திலே துதிக்கப் பாவியானும் உமைத் துதிப்பேன் – தோத்

7. பூமியின் தாவரங்கள் புஷ்பம் பூத்துத் துளிர் மலர்ந்து
சாமி உமைத் துதிக்கத் தாசன் யானும் உமைத் துதிப்பேன் – தோத்

8. தாழ்த்தித் தலை குனிந்து ரத்தச்சாட்சிகள் கூட்டமெல்லாம்
வாழ்த்தி உமைத் துதிக்கப் பாவியானும் உமைத் துதிப்பேன்–தோத்

## பாடல் - 16

***கண்ணிகள்***

**துதிப்பேன் இயேசுவின் பாதம் துதிக்கப் பெறுமற்புதரானதால்**
வணங்குவேன் வணங்குவேன் வணங்குவேனவர் பாதம் வீழ்ந்து நான்–துதி

2. பேயின் தலை மிதித்தவர் நோயின் பெலனழித்தவர்
போற்றுவேன் போற்றுவேன் போற்றுவேனேசு தேவசுதனை – துதி

3. வானம் பூமியுமடங்க வல்ல அற்புதரானதால்
அற்புதர், அற்புதர், அற்புதர், அவர் நாமமே அதைத் – துதி

4. ஜே! ஜே! ஜெயக்குமாரனும் ஜெயம்பெற்று விளங்கினார்
ஜொலிப்பாரே, ஜொலிப்பாரே, ஜொலிப்பாரே அவர் தாசர் என்றைக்கும் –துதி

5. தூதர் கூட்டங்கள் போற்றும் தூய சுந்தரராமிவர்
மகத்துவமே, மகத்துவமே, மகத்துவமே அவர் ராஜ்யமென்றைக்கும் – துதி

6. செல்வேன் இயேசுவின் பாதம் சொல்வேன் உள்ளத்தின் பாரம்
மகிழுவேன், மகிழுவேன், மகிழுவேன், அவர் வார்த்தையிலென்றும் – துதி

## பாடல் - 17

***பல்லவி***

**துதிப்போம் துதிப்போம் சபையோரே – இந்த**
கன்வென்ஷன் தந்த இயேசுவையே

***அனுபல்லவி***

நம் வாழ்நாளில் இதுவே கொண்டாட்டம் – பூவில்
எங்கும் கிடையாப் பெரும் பாக்கியம் பாடி – துதி

1. சுத்தர் பரிசுத்தராவாரே – எங்கும்
சுத்தமாய் நிற்கும் மெய்ப்பொருளே
துயராம் தூதர் பாடிப்போற்ற – அவர்
துதிக்குள்ளே வாசஞ்செய்வதாலே – பாடி – துதி

2. புறஜாதியாகவே ஜீவித்தோம் முன்பு
முறையீனமாகக் கெட்டுப்போனோம்
திறமாக இயேசு வந்துதித்து தம்
திரு இரத்தம் சிந்தி உயிர் தந்தார் – பாடி – துதி

3. எரிகோவின் கோட்டை விழுந்ததே – இந்த
துதியாகும் ஆயுதமதினால்
ஆகா! போற்றிக் களித்துத் துதிப்போமே – தீய
சாத்தானின் கோட்டைகள் விழவே – பாடி – துதி

4. ஆறு இருபதாசாரியர் – துதி
செய்தார் சாலமொன் ஆலயத்தில்
தேவன் மகிமையாய் வந்திறங்கினாரே இன்றும்
மகிமையாய் மத்தியில் வரவே – பாடி – துதி

5. முன்னால் நம்மேல் அன்புகூர்ந்து – இந்த
ஆண்டும் கன்வென்ஷனை நல்கினார்
ஆண்டுகள்தோறும் இந்த விதமே – அன்பின்
ஆண்டவர் அருள் செய்யவேண்டியே – பாடி – துதி

6. ஏதுமற்ற நரர் நம்மீது – இணை
ஏதுமில்லா மா அன்பு கொண்டே
ஏராளமான ஈவுகளை – தேவன்
தாராளமாய் நல்கினதாலே – பல – துதி

7. இரண்டாம் வருகையும் சமீபம் – பல
ஆண்டாக எச்சரித்தும் வாறார்
ஆண்டாம் இதிலே இயேசு வந்தால் – நாமும்
ஆயத்தமாக இருக்கவே – பாடி – துதி

## பாடல் – 18

**துதித்துப் பாடிட பாத்திரமே**
துங்கவன் இயேசுவின் நாமமதே
துதிகளின் மத்தியில் வாசஞ்செய்யும்
தூயனை நேயமாய் ஸ்தோத்தரிப்போமே

***பல்லவி***

ஆ! அற்புதமே அவர் நடத்துதலே
ஆனந்தமே பரமானந்தமே
நன்றியால் உள்ளமே மிக பொங்கிடுதே
நாம் அல்லேலூயா துதி சாற்றிடுவோம்

2. கடந்த நாட்களில் கண்மணிபோல்
கருத்துடன் நம்மைக் காத்தாரே
கர்த்தரையே நம்பி ஜீவித்திட
கிருபையும் ஈந்ததாலே ஸ்தோத்தரிப்போமே – ஆ! அற்

3. அக்கினி ஊடாய் நடந்தாலும்
ஆழியில் தண்ணீரைக் கடந்தாலும்
சோதனையோ மிகப் பெருகினாலும்
ஜெயம் நமக்கீந்ததால் ஸ்தோத்தரிப்போமே – ஆ! அற்

4. இந்த வனாந்திர யாத்திரையில்
இன்பராம் இயேசு நம்மோடிருப்பார்
போகையிலும் நம் வருகையிலும்
புகலிடம் ஆனதால் ஸ்தோத்தரிப்போமே – ஆ! அற்

5. வாஞ்சைகள் தீர்த்திட வந்திடுவார்
வாரும் என்றே நாம் அழைத்திடுவோம்
வானத்திலே ஒன்று சேர்ந்திடும் நாள்
விரைந்து நெருங்கிட ஸ்தோத்தரிப்போமே – ஆ! அற்

## பாடல் – 19

**துதிப்பேன், துதிப்பேன், துதிப்பேன்**
அண்ணல் இயேசுவையே துதிப்பேன்
காலா காலமெல்லாம் என்னைக் காத்தவரை
நான் உள்ளளவும் துதிப்பேன்

1. பாவங்கள் பல நான் செய்திட்டாலும்
பாவி என் மீது அன்பைச் சொரிந்து
என்னை மீட்டு காத்து நடத்திய
என் இறைவனைத் துதிப்பேன்

2. நண்பர்கள் பகைவராய் மாறிட்டாலும்
துன்பங்கள் துயரங்கள் சூழ்ந்திட்டாலும்
என்னைத் தேற்றி அன்புகூர்ந்த
என் இறைவனைத் துதிப்பேன்

3. வாழ்விலே உம்மை நான் ஏற்றிடவே
தாழ்விலும் என்னை நீர் தாங்கிட்டீரே
ஏழை நானே பாதம் பணிந்து
எந்தன் இறைவனைத் துதிப்பேன்

## பாடல் – 20

**தேவனைத் துதியுங்கள் நம் தேவனைத் துதியுங்கள்**
தூயோனை வாழ்த்துங்கள் நம் தேவனைப் போற்றுங்கள்

***பல்லவி***

போற்றுவோம் புகழுவோம் வாழ்த்துவோம் வணங்குவோம்
தேவாதி தேவனை வாழ்த்தி வணங்கிடுவோம்

2. காலைத் தள்ளாட ஒட்டார் உன்னைக் காக்கிறவர் உறங்கார்
கர்த்தர் உன்னைக் காப்பார் உன் ஆத்துமாவைக் காப்பார்

3. கர்த்தரின் சமூகத்தில் கிருபைகள் ஏராளம்
அண்டினோர்க் கென்றென்றும் சமாதானம் நிச்சயமே

4. நம்பி வருபவரை பாசமாய் சேர்த்துக்கொள்வார்
நேசகரம் நீட்டி மார்போடு அணைத்துக்கொள்வார்

## பாடல் - 21

### *பல்லவி*

**தேவ தேவனை ஏகமாய் நாம் பாடிப்போற்றிடுவோம்**
இயேசுவின் நாமத்தினால்
பாவரோக சாபம் நீங்கவே
விடுதலையும் அடைந்தோம் – என்றென்றுமாய்

### *சரணங்கள்*

1. உலகம் தரக்கூடா சமாதானமும்
சந்தோஷமும் தந்தார் இயேசு ராஜன்
மண்ணுலகில் ஜீவித்தாலும்
விண்ணுலகின்பத்தை அனுபவிக்க
இந்த நல்பாக்கியம் ஈந்தாரே – தேவதேவனை

2. துன்பமோ துக்கமோ தொல்லைகளோ
தொடர்ந்து வந்தாலும் திகிலடையோம்
சீயோனின் அரண்களைப் போல்
அசையாது நாம் வாழ்ந்திடுவோம்
சேனையதிபன் நம்மோடிருக்க – தேவதேவனை

3. எரிகோவைப் போல் பல எதிர்ப்புகளும்
எழும்பி வந்து நம்மை தடுத்தாலும்
முன் வைத்த காலைப்பின் வைப்பீரோ
வாலிபரே இபர்போர் முனையில்
வல்லமையோடவரைத் துதிப்போம் – தேவதேவனை

4. மாமிச சிந்தையால் ஆவியிலே
மரணமும் விழுகையும் சேர்ந்திடுமே
பயப்படுவீர் நீர் பயப்படுவீர்
பட்சிக்கும் தேவன் நம்மில் இருக்க
பரிசுத்த சிந்தையில் பலப்படுவீர் – தேவதேவனை

5. சீயோனுக்காய் இதோ சீக்கிரத்தில்
ஸ்ரீஇயேசு ராஜனும் தோன்றிடுவார்
அல்லேலூயா! ஆர்ப்பரிப்போம்!
ஆனந்தநாள் வேகம் நெருங்கிடுதே
ஆயத்தமாய் அவரைச் சந்திப்போம் – தேவதேவனை

## பாடல் – 22

*பல்லவி*

**தேவனைத் துதியுங்கள் – அல்லேலூயா**
தேவனைத் துதியுங்கள் – ஆ, ஆ, ஆ, ஆ

1. அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில்
அவரைத் துதியுங்கள் – அல்லேலூயா

2. அவர் வல்லமை விளங்கும் ஆகாய விரிவைப்
பார்த்து துதியுங்கள் – அல்லேலூயா

3. அவர் வல்லமையுள்ள கிரியைகளுக்காக
அவரைத் துதியுங்கள் – அல்லேலூயா

4. மாட்சிமை பொருந்திய மகத்துவத்திற்காய்
அவரைத் துதியுங்கள் – அல்லேலூயா

5. எக்காளத் தொனியோடே அவரைத் துதியுங்கள்
வீணை சுரமண்டலத்தோடே – அல்லேலூயா

6. தம்புரோடும் நடனத்தோடும் – துதியுங்கள்
யாழோடும் தீங்குழலோடும் – அல்லேலூயா

7. ஓசையுள்ள கைத்தாளங்களோடும்
அவரைத் துதியுங்கள் – அல்லேலூயா

8. பேராசையுள்ள கைத்தாளங்களோடும்
அவரைத் துதியுங்கள் – அல்லேலூயா

9. சுவாசமுள்ள யாவும் கர்த்தரைத் துதியுங்கள்
அல்லேலூயா ஆமென் அல்லேலூயா

## பாடல் – 23

**தொழுகிறோம் எங்கள் பிதாவே**
பொழுதெல்லாம் ஆவி உண்மையுடனே

***அனுபல்லவி***

பரிசுத்த அலங்காரத்துடனே
தரிசிப்பதினால் சரணம் சரணம்

***சரணங்கள்***

1. வெண்மையும் சிவப்புமானவர்
உண்மையே உருவாய்க் கொண்டவர்
என்னையே மீட்டுக் கொண்டவர்
அன்னையே இதோ சரணம் சரணம் – தொழு

2. தலை தங்க மயமானவர்
தலை மயிர் சுருள் சுருளானவர்
பதினாயிரம் பேரில் சிறந்தவர்
பதினாயிரமாம் சரணம் சரணம் – தொழு

3. கண்கள் புறாக்கண்கள் போல
கன்னங்கள் பாத்திகள் போல
சின்னங்கள் சிறந்ததாலே
எண்ணில்லாத சரணம் சரணம் – தொழு

4. கரங்கள் பொன் வளையல்கள் போல
நிறங்களும் தந்தத்தைப் போல
கால்களும் கல் தூண்கள் போல
காண்பதாலே சரணம் சரணம் – தொழு

5. சமஸ்த சபையின் சிரசே
நமஸ்காரம் எங்கள் அரசே
பிரதானம் எம் மூலைக்கல்லே
ஏராளமாய் சரணம் சரணம் – தொழு

6. அடியார்களின் அஸ்திபாரம்
அறிவுக்கெட்டாத விஸ்தாரம்
கூடி வந்த எம் அலங்காரம்
கோடா கோடியாம் சரணம் சரணம் – தொழு

7. பார்த்திபனே கன தோத்திரம்
கீர்த்தனம் மங்களம் நித்தியம்
வாழ்க வாழ்க வாழ்க என்றும்
அல்லேலூயா ஆமென் ஆமென் – தொழு

## பாடல் – 24

**தோத்திரம் இயேசுநாதா உமக்கென்றும் தோத்திரம் இயேசுநாதா**
தோத்திரம் செய்கிறோம் நின்னடியார்
திரு நாமத்தின் ஆதரவில்

2. வான தூதர் சேனைகள் மனோகர கீதங்களால் எப்போதும்
ஓய்வின்றிப் பாடி துதிக்கப் பெறும்
மன்னவனே உமக்கு

3. இத்தனை மகத்துவமுள்ள பதவி இவ்வேழைகள் எங்களுக்கு
எத்தனை மாதயவு நின் கிருபை
எத்தனை ஆச்சரியம்

4. நின் உதிரமதினால் திறந்த நின் ஜீவ புது வழியாம்
நின் அடியார்க்குப் பிதாவின் சந்நிதி
சேரவுமே சந்ததம்

5. இன்றைத் தினமதிலும் ஒருமித்துக் கூட உம் நாமத்தினால்
தந்த நின் கிருபைக்காய் உமக்கென்றும்
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே

6. நீரல்லால் எங்களுக்குப் பரலோகில் யாருண்டு ஜீவநாதா
நீரேயன்றி இகத்தில் வேறொரு
தேட்டமில்லை பரனே

## பாடல் – 25

**பல்லவி**

**தோத்திரம் துதி பாத்திரா உம்மை**
இன்றும் என்றும் துதித்திடுவேன்

***அனுபல்லவி***

காத்தீரே என்னைக் கருத்தாக
வழுவாமல் என்னை உமக்காக
எடுத்தீர் எனையும் உமக்காக
கொடுத்தீர் உமையும் எனக்காக – தோத்

***சரணங்கள்***

1. வல்ல வான ஞான விநோதா
துதியே துதியே துதித்திடுவேன்
எல்லாக் குறையும் தீர்த்தீரே
தொல்லை யாவும் தொலைத்தீரே
அல்லல் யாவும் அறுத்தீரே
அலையும் எனையும் மீட்டீரே – தோத்

2. நம்பினோரைக் காக்கும் தேவா
துதியே துதியே துதித்திடுவேன்
அம்புவியாவும் படைத்தீரே
அம்பரா உந்தன் வாக்காலே
எம்பரா எல்லாம் ஈந்தீரே
நம்பினோர்க் குந்தன் தயவாலே – தோத்

3. கண்ணின் மணிபோல் காத்தீரே எம்மைத்
துதியே துதியே துதித்திடுவேன்
அண்ணலே உந்தன் அருளாலே
அடியாரைக் கண் பார்த்தீரே
மன்னா எமக்கும் நீர் தாமே
எந்நாளும் எங்கள் துணை நீரே – தோத்

4. தீயோன் அம்புகள் தாக்காதே எம்மைத்
துதியே துதியே துதித்திடுவேன்
தேவா நீர் உந்தன் சிறகாலே
தினமும் மூடிக் காத்தீரே
தீதணு காதும் மறைவினிலே
தேடியுமதடி தங்கிடுவேன் – தோத்

5. அல்லேலூயா தோத்திரமே
துதியே துதியே துதித்திடுவேன்
அகில சிருஷ்டிகளும் துதிக்க
அடிமை துதியா திருப்பேனோ?
அல்லும் பகலும் நித்தியமாய்
அன்பே உமையும் துதித்திடுவேன் – தோத்

## பாடல் – 26

**தோத்திரம் பாடிப் போற்றுவேன்**
தோத்திரம் இயேசு ராஜனுக்கே
ஆதியும் அந்தமு மில்லோனே
அரூபனே உமக்கென்றும் தோத்திரம்

அல்லேலூயா அல்–லேலூயா
பொற்பரனே – ஓமேகாவே

2. பொன்னகர் மன்னன் பூவில் வந்தாரே
புல்லணை மீதிலே தோத்திரம்
பட்சமுற்று எந்தன் பாவம் தீர்த்த
பெத்தலை வாசனே தோத்திரம்

3. மாயமாம் உலகை மறந்து நானும்
மன்னவா உம்மன்பில் மகிழ்ந்திட
மயங்காமல் நீர் தாரணியில்
மனுவான அன்புக்காய் தோத்திரம்!

4. மங்களமே சீயோன் மணாளா!
மாறாத பூரண சீராளா!
மங்கிடா நித்திய வாசனே!
மாசற்ற அன்புக்காய் தோத்திரம்!

5. அமரர் போற்றும் அழகுள்ளோனே!
அரூபியே சொரூபியே தோத்திரம்!
அளியும் ஆதி அன்பையே!
வழியில் விரைந்து செல்லவே!

## பாடல் – 27

***பல்லவி***

**தோத்திரம் பாடியே போற்றிடுவேன்**
தேவாதி தேவனை ராஜாதி ராஜனை
வாழ்த்தி வணங்கிடுவேன்

***சரணங்கள்***

1. அற்புதமான அன்பே – என்னில்
பொற்பரன் பாராட்டும் தூய அன்பே
என்றும் மாறா தேவ அன்பே
என்னுள்ளம் தங்கும் அன்பே – தோத்

2. ஜோதியாய் வந்த அன்பே – பூவில்
ஜீவன் தந்து என்னை மீட்ட அன்பே
தியாகமான தேவ அன்பே
திவ்விய மதுர அன்பே – தோத்

3. மாய உலக அன்பை நம்பி
மாண்ட என்னைக் கண்டழைத்த அன்பே
என்னை வென்ற தேவ அன்பே
என்னில் பொங்கும் பேரன்பே – தோத்

4. ஆதரவான அன்பே – நித்தம்
அன்னை போல் என்னையும் தாங்கும் அன்பே
உன்னதமாம் தேவ அன்பே
உள்ளம் கவரும் அன்பே – தோத்

5. வாக்கு மாறாத அன்பே – திரு
வார்த்தையுரைத் தென்னைத் தேற்றும் அன்பே
சர்வ வல்ல தேவ அன்பே
சந்ததம் ஓங்கும் அன்பே – தோத்

## பாடல் – 28

### *பல்லவி*

**தோத்திரிப்பேன் தோத்திரிப்பேன் இயேசு தேவனை**
என் ஜீவனுள்ள நாட்களெல்லாம் தோத்திரிப்பேனே

### *சரணங்கள்*

1. உதடுகளின் கனியாகிய தோத்திர பலியை
இயேசுவின் நாமத்தினாலே செலுத்துகிறேன் யான் – தோத்

2. பாவக் கறை நீங்க என்னை முற்றிலுமாக
உம் சுத்தமுள்ள இரத்தத்திற்குள் தோய்த்ததினாலே – தோத்

3. என்னுடைய நோய்களை உம் காயங்களாலே
என்றைக்குமாய்த் தீர்த்ததினால் தோத்தரிப்பேன் யான் – தோத்

4. ஆகாயத்துப் பட்சிகளைப் போஷிக்கும் தேவன்
தினமும் என்னைப் போஷிப்பதால் தோத்தரிப்பேன் யான் – தோத்

5. நாளைத்தினம் ஊண் உடைக்காய் என் சிந்தனைகளைக்
கவலையற்ற தாக்கினதால் தோத்தரிப்பேன் யான் – தோத்

6. சீக்கிரமாய் வந்திடுவேன் என்றுரைத்தோனை
சீக்கிரமாய் காண்பதினால் தோத்தரிப்பேன் யான் – தோத்

## பாடல் – 29

**பாதம் போற்றியே பணிந்திடுவேன் – இயேசுவின்**
பாதம் போற்றியே பணிந்திடுவேன்

1. முன்னணைப் புல்லினை மிதித்திட்ட பாதம்
மன்னவர் மூவர் பணிந்திட்ட பாதம்
வண்ணமாய் மேய்ப்பர்கள் வணங்கிய பாதம்
எண்ணிலாத் தூதர்கள் சுமந்திட்ட பாதம்

2. நோய்களைத் தீர்த்திட விரைந்திட்ட பாதம்
பேய்களைத் துரத்திட சென்றிட்ட பாதம்
மாய்ந்திடும் பாவியை ஈட்டிடும் பாதம்
தூய்மையின் ஊற்றாம் இயேசுவின் பாதம்

3. பொங்கிடும் ஆழியின் அலைகளின் வேகம்
மங்கிய இருளும் சூழ்ந்திடும் நேரம்
ஏங்கிடும் சீஷரை மீட்டிடும் வண்ணம்
பாங்குடன் கடல் மேல் நடந்திட்ட பாதம்

4. பரிசேயன் வீட்டிற்கு சென்ற நற்பாதம்
உரிமையாய் பாவி வந்தவன் இல்லம்
பரிமள தைலத்தைப் பூசிய பாதம்
பரிவுடன் மன்னித்த இயேசுவின் பாதம்

5. கொல்கதா மலைபேல் நடந்திட்ட பாதம்
நல்லவர் இயேசுவின் மென்மையாம் பாதம்
வெள்ளமாய்க் குருதி ஓடிடும் வண்ணம்
அறைந்திடத்தானே கொடுத்த நற்பாதம்

## பாடல் – 30

**இயேசுவுக்கு ஸ்தோத்திரம் என் மீட்பராம்**
இயேசுவுக்கு ஸ்தோத்திரம் என் ராஜனாம்
இயேசுவுக்கு ஸ்தோத்திரம் என் ஜீவனாம்
இயேசுவுக்கு ஸ்தோத்திரம் என் தேவனாம்!

***பல்லவி***

அல்லேலூயா ஓசன்னா அல்லேலூயா (3)
அல்லேலூயா ஓசன்னா அல்லேலூயா

2. இயேசுவுக்கு ஸ்தோத்திரம்! மாறிடா நேசர்
இயேசுவுக்கு ஸ்தோத்திரம்! கைவிடா நேசர்
இயேசுவுக்கு ஸ்தோத்திரம்! வானிலும் நேசர்!
இயேசுவுக்கு ஸ்தோத்திரம்! பூவிலும் நேசர்! – அல்லேலூயா

3. இயேசுவுக்கு ஸ்தோத்திரம்! வாழ்விலும் அன்பர்
இயேசுவுக்கு ஸ்தோத்திரம்! தாழ்விலும் நண்பர்
இயேசுவுக்கு ஸ்தோத்திரம்! பாதையில் மேய்ப்பர்
இயேசுவுக்கு ஸ்தோத்திரம்! வாதையில் மீட்பர் – அல்லேலூயா

4. மாமிசம் பிசாசு லோகம் மாய்கையும்
மாறிப்போகும் யாவும் இயேசுவின் ரத்தத்தால்
லோக வாழ்வின் வாதை யோயும் சாபமும்
போகுமே எல்லாம் மேலான நாமத்தால் – அல்லேலூயா

5. சாத்தானை ஜெயித்து வெற்றி ஈந்தாரே
தாசராக சேர்த்துத் தஞ்சம் தந்தாரே
பாத்திரங்களாக்கி எமை ஏற்றுக் கொண்டாரே
பரிசுத்தர் கூட்டத்தில் சேர்த்துக் கொண்டாரே – அல்லேலூயா

## பாடல் – 31

**போற்றித் துதிப்போம் எம் தேவ தேவனை**
புதிய இதயமுடனே
நேற்றும் இன்றும் என்றும் மாறா
இயேசுவை நாம் என்றும் பாடித் துதிப்போம்

### *பல்லவி*

இயேசு என்னும் நாமமே
என் ஆத்துமாவின் கீதமே
என் நேசர் இயேசுவை நான்
என்றும் ஏற்றி மகிழ்ந்திடுவேன்

2. கோர பயங்கரமான புயலில்
கொடிய அலையின் மத்தியில்
காக்குங் கரம் கொண்டு மார்பில்
சேர்த்தணைத்த அன்பை என்றும் பாடுவேன் – இயேசு

3. யோர்தான் நதி போன்ற சோதனையிலும்
சோர்ந் தமிழ்ந்து மாளாதே
ஆர்க்கும் ஜெய தொனியோடே
பாதுகாத்த அன்பை என்றும் பாடுவேன் – இயேசு

4. தாய்தன் பாலகனையே மறப்பினும்
நான் மறவேன் என்று சொன்னதால்
தாழ்த்தி என்னை அவர் கையில் தந்து
ஜீவபாதை என்றும் ஓடுவேன் – இயேசு

5. பூமியகிலமும் சாட்சியாகவே
போங்களென்ற கட்டளையதால்
ஆவி ஆத்துமாவும் தேகம் யாவும் இன்று
தந்து தொண்டு செய்குவேன் – இயேசு

## பாடல் - 32

### *பல்லவி*

**போற்றிப் புகழ்ந்திடுவோம், அல்லேலூயா – துதி**
சாற்றி மகிழ்ந்திடுவோம், அல்லேலூயா

### *அனுபல்லவி*

கடந்திட்ட காலமெல்லாம் கண்ணின் மணியைப் போலக்
காத்தாரே தேவன் நம்மை அல்லேலூயா தினம் – போற்றி

### *சரணங்கள்*

1. பாவத்தைப் போக்கினாரே அல்லேலூயா – பாவ
சாபத்தை மாற்றினாரே அல்லேலூயா!
பாவத்தினாலுண்டான ரோகத்தை மாற்றியவர்
சோகத்தைத் தீர்த்ததாலே அல்லேலூயா – தினம் – போற்றி

2. தாய் உன்னை மறந்தாலும், அல்லேலூயா – தம்
சேயைப்போல் காத்திடுவார், அல்லேலூயா
நேயன் நம் இயேசுகிறிஸ்து தாயினு மேலவராய்
தூயவரம் அளித்தார், அல்லேலூயா – தினம் – போற்றி

3. சோதனைக் காலத்திலே அல்லேலூயா – நாம்
வேதனைப் பட்டிட்டாலும் அல்லேலூயா!
நாதன் நம் இயேசுகிறிஸ்து வேதம் நமக்கிருக்க
சேதம் ஒன்றும் வராது அல்லேலூயா – தினம் – போற்றி

4. பயங்கரப் புயல் உன்மேல், அல்லேலூயா – வெகு
வேகமாக வீசினாலும் அல்லேலூயா
கப்பலிலுள்ள கிறிஸ்து கரங்கொண்டு காத்திடுவார்
தட்டியெழுப்பிடுவாய், அல்லேலூயா – தினம் – போற்றி

5. பூமி முழுவதிலும், அல்லேலூயா – உன்னை
சாட்சியாய் வைத்திடுவார் அல்லேலூயா
மறுதலித்தாலும் நீதான் மனங்கசந்தழுதுமே
அருகில் வந்தாலணைப்பார், அல்லேலூயா – தினம் – போற்றி

## பாடல் – 33

**போற்றிடுவேன் பராபரனைச்**
சாற்றிடுவேன் சர்வ வல்லவரை
தோத்திர பாத்திரன் இயேசுவையே
நேத்திரமாய் என்றும் பாடுவேன்

***பல்லவி***

ஆ! ஆர்ப்பரித்தே அகமகிழ்வேன்
ஆண்டவர் அன்பதை எங்கும் கூறுவேன்
கண்மணி போல் கருத்துடனே
கைவிடாமல் என்னைக் காத்தனரே

2. எத்தனையோ பல நன்மைகள்
இத்தனை ஆண்டுகளாய் அளித்தார்
கர்த்தரே நல்லவர் என்பதையே
கருத்துடன் ருசித்திடுவேன் – ஆ

3. பயப்படாதே என்றுரைத்தனரே
பரிசுத்த ஆவியானவரே
வெள்ளம் போல் சத்துரு வந்திடினும்
விரைந்தவரே கொடியேற்றினார் – ஆ

4. பொருத்தனைகள் துதிபலிகள்
பணிவுடன் செலுத்தி ஜெபித்திடுவேன்
ஆபத்துக் காலத்தில் கூப்பிடுவேன்
ஆண்டவரே செவி கொடுப்பார் – ஆ

5. நித்தமும் போதித்து நடத்தி
நித்திய ஆலோசனை அளிப்பார்
முடிவிலே மகிமையில் சேர்த்திடுவார்
மகிழ்ந்திடுவேன் நித்தியமாய் – ஆ

## பாடல் – 34

### *பல்லவி*

**போற்றுவோமே போற்றுவோமே**
எம் தேவரீரை இவ்வேளையிலே நன்றியுடனே

1. துங்கன் யேசுவே தூயா உமக்கே
துதிகள் சாற்றிடுவேன்
மங்கா புகழும் மகிழ்ந்துபோற்றி
எங்கும் துதித்திடுவேன்
கங்குல் அற எங்குமே ஒளி
மங்கிடாமலே தங்கிட வேணும் – போற்றுவோமே

2. ஆழ்ந்த சேற்றினில் அமிழ்ந்த எம்மையே
அணைத்து எடுத்தோனே
ஆழிதன்னில் எம் பாவம் எறிந்த
அன்னை உத்தமனே
அன்றும் என்றும் என்றும் துதிப்பேன்
மன்னவனையே மண்ணிதினிலே – போற்றுவோமே

3. பாவம் போக்கியே கோபம் மாற்றியே
ரோகம் தொலைத்தோனே
துரோகி என்னையே சுத்திகரித்த
தூய வேந்தனே
தூயா நேயா காயமாற்றியே
கருணாநிதியே பரிகாரியே – போற்றுவோமே

4. பாரில் என்னையே பிரித்தெடுத்தோனே
தாவி வந்தோனே
அகமதினிலே ஆவி ஈந்திட
அருள் நிறைந்தவனே
தரிசனம் தந்த தேவனே
பரிசுத்தமாய் பாரில் ஜீவிக்க – போற்றுவோமே

5. பூரணர் ஆகவே பூவில் வாழ்ந்திட
கிருபை அளித்தோனே
புகழை விரும்பேன் மகிழ்வேன் தினமே
மகிமை செலுத்திடுவேன்
கோனே தேனே கோதில்லாதோனே
கானம் பாடியே துதித்திடுவேன் – போற்றுவோமே

## பாடல் – 35

**எண்ணில் அடங்கா ஸ்தோத்திரம் – தேவா**
என்றென்றும் நான் பாடுவேன்
இந்நாள் வரை என் வாழ்விலே
நீர் செய்த நன்மைக்கே

1. பூமியில் வாழ்கின்ற யாவும்
அதின் மேல் உள்ள ஆகாயமும்
வான்தூதர் சேனைகள் யாவும்
தேவா உம்மைப் போற்றுதே

2. சூரிய சந்திரரோடே
சகல நட்சத்திர கூட்டமும்
ஆகாயப் பறவைகள் யாவும்
தேவா உம்மைப் போற்றுதே

3. காட்டினில் வாழ்கின்ற யாவும்
கடும் காற்றும் பனித் தூறலும்
நாட்டினில் வாழ்கின்ற யாவும்
நாதா உம்மைப் போற்றுதே

4. பாவ மனுக்குலம் யாவும்
தேவா உம் அன்பினை உணர்ந்தே
சிலுவையின் தியாகத்தைக் கண்டு
ஓயா துதி பாடுதே

## பாடல் – 36

**நம் தேவனைத் துதித்துப்பாடி**
அவர் நாமம் போற்றுவோம்
களிகூர்ந்திடுவோம் அகமகிழ்ந்திடுவோம்
துதி சாற்றிடுவோம், புகழ் பாடிடுவோம்
அவர் நாமம் போற்றுவோம்

1. நம் பாவம் யாவும் நீக்கி மீட்டார்
அவர் நாமம் போற்றுவோம்
துன் மார்க்க வாசம் முற்றும் நீக்கி
அவர் நாமம் போற்றுவோம் – களி கூர்

2. மெய் ஜீவ பாதை தன்னில் சென்று
அவர் நாமம் போற்றுவோம்
நல் ஆவியின் கனிகள் ஈந்து
அவர் நாமம் போற்றுவோம் – களி கூர்

3. மேலோக தூதர் கீதம் பாடி
அவர் நாமம் போற்றுவோம்
பேரின்ப நாடு தன்னில் வாழ
அவர் நாமம் போற்றுவோம் – களி கூர்

## பாடல் – 37

***பல்லவி***

**நிகரே இல்லாத சர்வேசா**
திகழும் ஒளி பிரகாசா

***அனுபல்லவி***

துதிபாடிட இயேசு நாதா
பதினாயிரம் நாவுகள் போதா

***சரணங்கள்***

1. துங்கன் ஏசு மெய் பரிசுத்தரே
எங்கள் தேவனைத் தரிசிக்கவே
துதிகளுடன் கவிகளுடன்
தூய தூயனை நெருங்கிடுவோம் – நிகரே

2. கல்லும் மண்ணும் எம் கடவுளல்ல
கையின் சித்திரம் தெய்வமல்ல
ஆவியோடும் உண்மையோடும்
ஆதி தேவனை வணங்கிடுவோம் – நிகரே

3. பொன் பொருள்களும் அழிந்திடுமே
மண்ணும் மாயையும் மறைந்திடுமே
இதினும் விலை பெரும் பொருளே
இயேசு ஆண்டவர் திருவருளே – நிகரே

4. தேவ மைந்தனாய் அவதரித்தார்
பாவ சோதனை மடங்கடித்தார்
மனிதனுக்காய் உயிர் கொடுத்தார்
மாளும் மாந்தரை மீட்டெடுத்தார் – நிகரே

5. கொந்தளிக்கும் அலைகளையும்
கால் மிதிக்கும் கர்த்தரவர்
அடங்கிடுமே அதற்றிடவே
அக்கரை நாமும் சேர்ந்திடவே – நிகரே

6. ஜீவன் தந்தவர் மரித்தெழுந்தார்
ஜீவ தேவனே உயிர்த்தெழுந்தார்
மறுபடியும் வருவேனென்றார்
மாசந்தோஷ நாள் நெருங்கிடுதே – நிகரே

## பாடல் – 38

### *பல்லவி*

**துதிசெய் மனமே நிதம் துதிசெய்**
துதிசெய் இம்மட்டும் நடத்தின உன் தேவனை
இன்றும் என்றும் நன்றி மிகுந்த மனதோடே

### *சரணங்கள்*

1. முன் கால மெல்லாம் உன்னைத் தம் கரமதில் ஏந்தி
வேண்டிய நன்மைகள் யாவும் உகந்தளித்தாரே – துதி

2. ஏங்கிடும் வழியில் பாடுகள் பல நேர்ந்தபோது
எக பரன் உன் காவலனாய்யிருந்தாரே – துதி

3. சோதனை பலவாய் மேகம் போல் உன்னை சூழ்ந்தாலும்
சேதமுறாமல் முற்றிலும் காக்க வல்லோரை – துதி

4. தாய் தந்தை தானும் ஏகமாய் உன்னை மறந்தாலும்
தூயரின் கையில் உன் சாயல் உள்ளதை நினைத்தே – துதி

5. சந்ததம் உன்னை நடத்திடும் சத்திய தேவன்
சொந்தம் பாராட்டி உன்னுடன் இருப்பதினாலே – துதி

## பாடல் – 39

**சத்தாய் நிஷ்களமாயொரு சாமிய மும்மில தாய்ச்**
சித்தாயானந்தமாய்த் திகழ்கின்ற திரித்துவமே
எத்தால் நாயடியேன், கடைத்தேறுவனென் பாவந்தீர்ந்து
அத்தாவுன்னை யல்லா லெனக்கார் துணை யாருறவே?

2. எம்மாவிக்குருகி உயிரீந்து புரந்த தற்கோர்
கைம்மாறுண்டு கொலோ? கடைகாறும் கையடையாய்
சும்மா ரக்ஷணை செய் சொல் சுதந்தரம் யாதுமிலேன்
அம்மானுன்னையல்லா லெனக்கார் துணை யாருறவே?

3. ஈண்டே யென்னுள்ளத்தில் விசுவாச விளக்கிலங்கத்
தூண்டா யென்னிலந்தோ மயல் சூழ்ந்து கெடுத்திடுங்காண்
மாண்டா யெம் பிழைக்காய் உயிர்த்தாயெமை வாழ்விக்கவே
ஆண்டா யுன்னை யல்லாலெனக்கார் துணை யாருறவே?

4. மையார் கண்ணிருண்டு செவி வாயடைத்துக் குழறி
ஐயால் மூச்சொடுங்கி உயிராக்கை விட்டே கிடும்நாள்
நையேல் கை வெகிவேனுனை நாணுன் பஞ்சலென
ஐயா உன்னையல்லா லெனக்கார் துணை யாருறவே?

5. திரைசேர் வெம்பவமாங் கடல் மூழ்கிய தீயரெமைக்
கரை சேர்த்துய்க்க வென்றே புணையாயினை கண்ணிலியான்
பரசேன் பற்றுகிலேனெனைப் பற்றிய பற்றுவிடாய்
அரசேயுன்னை யல்லாலெனக்கார் துணை யாருறவே?

6. தாயே தந்தை தமர், குரு சம்பத்து நட்பெவையும்
நீயே எம் பெருமான் கதிவேறிலை நிண்ணயங்காண்,
ஏயே வென்றி கமுமுலகோடெனக் கென்னுரிமை
ஆயேவுன்னை அல்லால்லெனக் கார் துணை யாருறவே?

## பாடல் – 40

***பல்லவி***

**தேவனைத் துதிப்பதும்**
கீர்த்தனம் பண்ணுகிறதும் – நல்லது

***சரணங்கள்***

1. எருசலேமைக் கட்டியே கரிசனையாய்க் காக்கிறார்
துரத்துண்ட இஸ்ரவேலரைக் கரத்தால் கூட்டிச் சேர்க்கிறார் –தேவனை

2. இருதயம் நொறுங்குண்டோர்களை இவரே குணாமாக்குகிறார்
நறுங்குண்டோர் காயங்களை அருமையாய்க் கட்டுகிறார் –தேவனை

3. நட்சத்திரங்களின் இலக்கத்தை அட்சயன் எண்ணுகிறார்
பட்சமாய் அவைகளை உச்சரித்தழைக்கிறார் – தேவனை

4. ஆண்டவர் பெரியவர் மீண்டும் பெலமுள்ளவர்
அறிவில் அளவில்லாதவர் நெறியில் தவறாதவர் – தேவனை

5. சாந்தகுண முள்ளோர்களை வேந்தன் உயர்த்துகிறார்
மாந்தரில் துன்மார்க்கரை அகாந்தமாய்த் தாழ்த்துகிறார் – தேவனை

## பாடல் – 41

***பல்லவி***

**கர்த்தாவின் ஜனமே கைத்தாளமுடனே**
களிகூர்ந்து கீதம் பாடு!
சாலேமின் ராஜா நம் சொந்தமானார்
சங்கீதம் பாடி ஆடு!
அல்லேலூயா! அல்லேலூயா! (2)

***சரணங்கள்***

1. பாவத்தின் சுமையகற்றி – கொடும்
பாதாள வழி விலக்கி
பரிவாக நம்மைக் கரம் நீட்டிக் காத்த
பரிசுத்த தேவன் அவரே அல்லேலூயா (2) – கர்த்தாவின்

2. நீதியின் பாதையிலே – அவர்
நிதம் நம்மை நடத்துகின்றார்!
எது வந்த போதும் மாறாத இன்ப
புது வாழ்வைத் தருகின்றாரே அல்லேலூயா (2) – கர்த்தாவின்

3. மறுமையின் வாழ்வினிலே – இயேசு
மன்னவன் பாதத்திலே
பசிதாகமின்றி துதி கானம் பாடி
பரனோடு நிதம் வாழுவோம்! அல்லேலூயா (2) – கர்த்தாவின்

## பாடல் – 42

**ஜெயம் ஜெயம் அல்லேலூயா ஜெயம் ஜெயம் எப்போதும்**
யேசுநாதர் நாமத்திற்கு ஜெயம் ஜெயம் எப்போதும்.

1 உம்மைப் பின்செல்வேன் என் சுவாமி எனக்காக நீர் மரித்தீர்
எல்லாரும் ஓடினாலும் உமதன்பால் நானிருப்பேன்.

2 பாவி பாவி பாவி பாவி பரலோகம் சேரவா
பிராணநாதர் பாதத்தண்டை தாவியே ஓடிவா.

3 பாவ சஞ்சலத்தை விட நாளை வரக் காணாதே
ரட்சகரே அழைக்கிறார் பாவியே ஓடிவா.

4 நானே வழி சத்தியம் நானே ஜீவன் என்றாரே
நாதன் கிறிஸ்துவண்டை பாவியே ஓடி வா.

## பாடல் – 43

**இயேசு என்தன் சங்கீதமானவர்**
அரணான கோட்டையுமானவர்
ஜீவனின் அதிபதியான இயேசுவை
ஜீவிய காலமெல்லாம் வாழ்த்திடுவோம் – இயேசு

1 துதிகளின் மத்தியில் வாசம் செய்யும்
தூதர் கணங்கள் போற்றும் தேவன் அவரே
வேண்டிடும் பக்தர்களின் குறைகள் கேட்கும்
திக்கற்ற பிள்ளைகளின் தேவன் அவரே – இயேசு

2 இரண்டு மூன்று பேரெந்தன் நாமத்தினால்
இருதயம் ஒருமித்தால் அவர் நடுவில்
இருப்பேன் என்றவர் நமது தேவன்
இருகரம் தட்டி என்றும் வாழ்த்திடுவோம் – இயேசு

3 வானவர் கிறிஸ்தேசு நாமமதை
வாழ்நாள் முழுவதும் வாழ்த்துவோம்
வருகையில் அவரோடு இணைந்து என்றும்
வணங்குவோம் வாழ்த்துவோம் போற்றிடுவோம் – இயேசு

## இறை வேண்டல்

### பாடல் – 44

**அருளின் மா மழைபெய்யும்**
என்று வாக்களித்தோரே
மாரியாய் பெய்திடச் செய்யும்
லோகத்தின் ரட்சகரே

தேவன்பின் வெள்ளம்
தேவன்பின் வெள்ளம் தேவை
கொஞ்சம் ருசித்த என் உள்ளம்
கெஞ்சுதே இன்னும் தேவை

2. கற்பாறைபோல் பாவி உள்ளம்
கடினப்பட்டதையோ
பரிசுத்தாவியின் வெள்ளம்
கரைக்க வல்லதையோ – தேவன்பின்

3. வெட்டாந்தரை நிலந்தானும்
ஏதேன் போல் மாறுமென்றீர்
சாபத்துள்ளான முட்பூண்டு
கேதுருவாகுமென்றீர் – தேவன்பின்

4. தேசத்தின் இருளைப்பாரும்
லோகத்தின் மெய்த்தீபமே
ஆவியின் அருளைத்தாரும்
மனமாற்ற வல்லவரே – தேவன்பின்

5. ஏழை என் குறைகள் யாவும்
தீர்த்திடும் வல்லவரே
யுத்தத்தில் முன் செல்ல ஏவும்
சேனைத் தளகர்த்தரே – தேவன்பின்

## பாடல் – 45

**அருள் ஏராளமாய் பெய்யும்**
உறுதி வாக்கிதுவே!
ஆறுதல் தேறுதல் செய்யும்
சபையை உயிர்ப்பிக்குமே

***பல்லவி***

அருள் ஏராளம்
அருள் அவசியமே
அற்பமாய் சொற்பமாயல்ல
திரளாய் பெய்யட்டுமே

2. அருள் ஏராளமாய்ப் பெய்யும்
மேகமந்தார முண்டாம்
காடான நிலத்திலேயும்
செழிப்பும் பூரிப்புமாம் – அருள்

3. அருள் ஏராளமாய் பெய்யும்
இயேசு! வந்தருளுமேன்!
இங்குள்ள கூட்டத்திலேயும்
க்ரியை செய்தருளுமேன். – அருள்

4. அருள் ஏராளமாயப் பெய்யும்
பொழியும் இச்சணமே
அருளின் மாரியைத் தாரும்
ஜீவ தயாபரரே. – அருள்

## பாடல் – 46

***பல்லவி***

**உம் சித்தம் இயேசுவே நாளோர் மண்பாண்டமே**
உத்தம ஜீவியாய் உயர்த்த வேண்டுமே

***அனுபல்லவி***

நித்தம் என் பந்தயம் சத்திய சிலுவையே
சித்தம் அறிந்து யான் செய்திட வேண்டுமே

***சரணங்கள்***

1. அலகையின் ஆஸ்தியும் உலகின் சம்பாத்தியமும்
ஓர் நாளில் தூசியாய் ஒழிந்து போய்விடும்
அந்தர வானமும் அகில பூமியும்
வெந்த உருகிப்போம் நீர் வாரும் நாளிலே – உம்

2. உற்றாரும் மற்றாரும் உறவினர் யாவரும்
மருளவைத் தெந்தனை வெருள விரட்டினும்
அருளே என் தாபரம் ஆண்டவரின் கரம்
அணைத்து எடுத்துத் தம் அண்டையில் சேர்க்குமே – உம்

3. உயர்வான கல்வியும் உத்தியோகப் பட்டமும்
உலகத்தின் ஞானமும் என்னோடு சேருமோ
மரணத்தின் கூடவே மறைந்தே போகுமே
என்னோடு சேர்வதென பாவமும் புண்ணியமே – உம்

4. பெலவீன பாவி நான் சுகவீன தேகி நான்
உலகத்தின் மாய்கையில் அலைந்தழியாமல் நான்
உலக முடிவிலே உம்மை நான் சந்திக்க
என்னை நடத்தும் என் இயேசு நாதா – உம்

## பாடல் - 47

### *பல்லவி*

**என் தேவனே என் அன்பனே**
வந்திடுவீர் வல்லமையாய்

### *அனுபல்லவி*

ஆசீர்வாத நிறைவுடன்
அன்பே என் மேல் இறங்கிடும்

### *சரணங்கள்*

1. இரண்டோ மூன்றோ பேர்கள் எங்கே
உண்டோ அங்கே நானிருப்பேன்
என்றுரைத்த வாக்கின்படி
இன்றும் எம்மைச் சந்தித்திடும் – என் தேவனே

2. கல்வாரியில் ஜீவன் தந்த
எங்கள் தேவா இயேசு நாதா
எங்கள் உள்ளம் உந்தன் அன்பால்
நிறைந்தும்மைத் துதித்திட – என் தேவனே

3. அந்தோ ஜனம் பாவங்களால்
நொந்து மனம் வாடுதையோ
இன்ப முகம் கண்டால் போதும்
இருள் நீங்க ஒளி காண்பார் – என் தேவனே

4. ஆதரவாய் அன்றுன் கரம்
நீட்டி சுகம் ஈந்த தேவா
ஆவலுடன் வந்தோர் பிணி
யாவும் தீரும் அருள் நாதா – என் தேவனே

5. ஆதி அன்பால் தேவ ஜனம்
தாவி மனம் மகிழ்ந்திட
ஆவி ஆத்மா சரீரமும்
பரிசுத்தம் அடைந்திட – என் தேவனே

6. ஆவலுடன் உம் வரவை
எதிர் நோக்கிக் காத்திருக்க
ஆவி வரம் யாவும் பெற்று
நிறைவுடன் இலங்கிட – என் தேவனே

## பாடல் – 48

**என் ஜெபவேளை வாஞ்சிப்பேன்!**
அப்போதென் துக்கம் மறப்பேன்!
பிதாவின் பாதம் பணிவேன்
என் ஆசையாவும் சொல்லுவேன்!
என் நோவு வேளை தேற்றினார்
என் ஆத்ம பாரம் நீக்கினார்
ஒத்தாசை பெற்றுத் தேறினேன்
பிசாசை வென்று ஜெயித்தேன்

2. என் ஜெபவேளை வாஞ்சிப்பேன்!
மா தாழ்மையோடு பிரார்த்திப்பேன்
மன்றாட்டைக் கேட்போர் வருவார்
பேர் ஆசீர்வாதம் தருவார்
என் வாக்கின் மேல் விஸ்வாசமாய்
என் பாதம் தேடு ஊக்கமாய்
என்றோர்க்கென் நோவைச் சொல்லுவேன்
இவ்வேளையை நான் வாஞ்சிப்பேன்!

3. என் ஜெபவேளை வாஞ்சிப்பேன்!
ஆனந்த களிப்படைவேன்
பிஸ்காவின் மேலே ஏறுவேன்
என் மோட்ச வீட்டை நோக்குவேன்
இத்தேகத்தை விட்டேகுவேன்
விண் நித்திய வாழ்வைப் பெறுவேன்
பேரின்ப வீட்டில் வசிப்பேன்
வாடாத க்ரீடம் சூடுவேன்!

## பாடல் – 49

**கர்த்தாவே! இறங்கும்!**
ப்ரசன்னமாகுமேன்;
மெய்பக்தர் நெஞ்சில் இப்பவும்
வந்தனல் மூட்டுமேன்

***பல்லவி***

கர்த்தாவே! இறங்கும்!
நற்சீரைத் தாருமேன்;
மா வல்ல க்ரியை செய்யவும்
இந்நேரம் வாருமேன்;

2. கர்த்தாவே! இறங்கும்!
நல் மீட்பர் நாமமும்
மா சுடர்போல் ப்ரகாசிக்க
பேரன்பைக் காட்டவும் – கர்த்தாவே

3. கர்த்தாவே! இறங்கும்!
இவ்வருள் வேதத்தை
கேட்போரின் நெஞ்சில் பொழியும்
தேவானுக்கிரக்கத்தை – கர்த்தாவே

4. கர்த்தாவே! இறங்கும்!
பேர் நன்மை செய்யுமேன்
விண்மாரி பெய்ய மேன்மையும்
உண்டாகும் உமக்கே – கர்த்தாவே

## பாடல் – 50

**கருணைக் கடலாம் – இயேசுவே**
கனிவுடனே இப்போ – இறங்கிடுமே – எங்கள்

***சரணங்கள்***

1. வாரும் வல்லமையாய்த் தாரும் வரங்களை
வர்த்திக்க வேணும் விஸ்வா–சத்தை
புகழ்ந்திடவே திரு நா–மத்தை–எங்கள் – கருணை

2. தாரக மற்ற தரணி யோரை
தாமத மின்றியே மீட்டிட
எழுந்திடுமே இந்நே–ரமே– எங்கள் – கருணை

3. அப்போஸ்தலர் காலம் போல
அற்புதங்கள் அடையாளங்கள்
அதிசய நாமத்தில் ஓங்–கிட–எங்கள் – கருணை

4. முடவர் குதிக்க ஊமை துதிக்க
செவிடர் குருடர் கூ–னரும்
சுகமடைந்து உமைப் பா–டிட – எங்கள் – கருணை

5. கன்னியாகக் கறை களின்றி
மன்னன் தோன்றும் வே–ளையில்
பறந்திடவே சபை மே–கத்தில் – எங்கள் – கருணை

6. தயா கரமே தஞ்சம் நீரே
தியாகமே மேன்மையாம் தா–சரே
அபிஷேகித்து உபயோ–கியும் – எங்கள் – கருணை

## பாடல் – 51

**கடல் கொந்தளித்துப் பொங்க**
கப்பல் ஆடிச் செல்கையில்
புயல் காற்று சீறி வீச
பாய் கிழிந்து போகையில்
இயேசு எங்களிடம் வந்து
கப்பலோட்டியாயிரும்
காற்றமைத்துத் துணை நின்று
கரை சேரச் செய்திடும்

2. கப்பலிலே போவோருக்கு
கடும் மோசம் வரினும்
இடி, மின் முழக்கம் காற்று
உமக்கெல்லாம் அடங்கும்
இருளில் நீர் பரஞ்சோதி
வெயிலில் நீர் நிழலே
யாத்திரையில் திசை காட்டி
சாவில் எங்கள் ஜீவனே

3. எங்கள் உள்ளம் உம்மை நோக்கும்
இன்ப துன்ப காலத்தில்
எங்கள் ஆவி உம்மில் தங்கும்
இகபர ஸ்தலத்தில்
இயேசு எங்களிடம் வந்து
கப்பலோட்டியாயிரும்
காற்றமைத்துத் துணை நின்று
கரை சேரச் செய்திடும்

## பாடல் – 52

**கரம் பிடித்தென்னை வழி நடத்தும்**
இயேசுவே என்னை நான் ஒப்புவிக்கிறேன் (2)
பாதை தெரியாத பாவி நானைய்யா
என்னை உம் சித்தப்படி நீர் வழி நடத்தும் (2)
இயேசுவே இரங்குமே
வழி நடத்துமே (2)

2. பாவ இருள் நீக்கி வழி நடத்தும்
பாவக்கறை போக்கி சுத்திகரியும் (2)
செம்பாவம் அகற்றி வெண்மையாக்குமே
என்னை உம் சித்தப்படி நீர் வழி நடத்தும் (2) – இயேசுவே

3. நேசரே என்னை நீர் வழி நடத்தும்
காருண்யத்தைக் காட்டி அழைத்துச் செல்லும் (2)
உறைந்த மழையைப் போல் வெண்மையாக்குமே
என்னை உம் சித்தப்படி நீர் வழி நடத்தும் (2) – இயேசுவே

4. தீபம் காட்டி என்னை வழி நடத்தும்
ஆவியை கொடுத்துத் தேற்றியருளும் (2)
வெளிச்சத்தின் பாதையில் அழைத்துச் சென்று
என்னை உம் சித்தப்படி நீர் வழி நடத்தும் (2) – இயேசுவே

## பாடல் – 53

*பல்லவி*

**கிருபை வேண்டும் நாதா – இயேசுவே உம் திவ்விய**
கிருபை வேண்டும் நாதா – இவ்வாராதனையில்

1. உம் கிருபை தான் வேண்டும் சொர்லோக ராஜாவே
உம் கிருபை யல்லாது எங்களால் ஆகாது – கிருபை

2. ஏழு பிசாசுகள் ஓட்டியே மரியாளை
இன்பமாய் நேசித்து அன்பால் நிரப்பின – கிருபை

3. இருவராம் சீசரின் சஞ்சலங்கள் நீக்கி
இருதயம் குளிர்ந்திட இனிமையாய் பேசின – கிருபை

4. பாவத்தை இனிமேல் செய்யாதே என்றுமே
பாவியாம் ஸ்திரிக்கு நேசமாய்க் கூறின – கிருபை

5. பெந்தே கொஸ்தே நாளில் அன்பராம் சீஷர் மேல்
உந்தன் வரங்களை மாரிபோல் பொழிந்தே – கிருபை

6. தாசனாம் ஸ்தேவானின் சாயலை மாற்றின
நேசமாய் கிருபையை எம்மேலும் ஊற்றிடும் – கிருபை

7. வருகிறேன் சீக்கிரம் என்றுரைத்த நேசா
தருகிறேன் என்னையே ஆசீர்வதித்திட – கிருபை

8. அடியாராம் ஏழைகள் உம்மைச் சந்தித்திட
முடிவு வரைக்கும், காத்திடும் கிருபையால் – கிருபை

## பாடல் – 54

***சரணங்கள்***

**சத்தியமும் ஜீவனுமாய் நித்தமுமே வாழ்ந்திடும்**
கர்த்தனே எங்கட்கும் கரம் தந்து என்றும் தாங்கிடும்
சுத்தமாய் நடப்பதற்கும் சுத்த ஆவி தந்திடும்
சித்தமோடு இந்த வேளை வந்திறங்கிடும்

***பல்லவி***

வானந்திறந்தருளும் பல தாளங்களையிந் நேரமிதில்
வானவனே ஞானமுள்ள வல்ல குருநாதனே
தேனிலும் மதுரம் திவ்ய ஆசீர்வாதங்கள்

2. என்னை முற்றும் மாற்றிட உன்னத பெலனுற்றிடும்
இன்னும் இன்னும் ஈசனே! உம் நல்வரங்களீந்திடும்
கண்ணிகளிற் சிக்கிடாமற் கண்மணிபோல் காத்திடும்
கன்மலையும் மீட்பருமென் காவலும் நீரே – வானம்

3. சுயவாடம்பரம் முற்றும் சுட்டெரிக்க வேணுமே
தயவு தாழ்மை யினாவி தந்தருள வேணுமே
மாயமான யாவினின்றும் மனமதை பெணுமே
ஆயனே அடியார்களின் அடைக்கலமே – வானம்

4. அதிக மதிக அன்பில் அமிழ்ந்தே அனுதினம்
புதிய நாவுகளாலும் புகழ்ந்துமைப் போற்றிட
அதிசயமே அகத்தின் குறைகளகற்றியே
இது சமய முன்னத பெலனீந்திடும் – வானம்

## பாடல் – 55

**ஜீவனுள்ள தேவனே வாரும்**
ஜீவ பாதையிலே நடத்தும்
ஜீவத்தண்ணீர் ஊறும் ஊற்றிலே
ஜீவன் பெற என்னை நடத்தும்

***பல்லவி***

தேவனே நீர் பெரியவர், தேவனே நீர் பரிசுத்தர்
தேவனே நீர் நல்லவர், தேவனே நீர் வல்லவர்

2. பாவிகள் துரோகிகள் ஐயா
பாவ ஆதாம் மக்களே தூயா
பாதகர் எம் பாவம் போக்கவே
பாதகன் போல் தொங்கினீரல்லோ

3 ஐந்து கண்ட மக்களுக்காக
ஐந்து காயமேற்ற நேசரே
நொந்துருகி வந்த மக்கள் மேல்
நேச ஆவி வீசச் செய்குவீர்

4 வாக்குத்தத்தம் செய்த கர்த்தரே
வாக்கு மாறா உண்மை நாதனே
வாக்கை நம்பி வந்து நிற்கிறோம்
வல்ல ஆவி மாரி ஊற்றுவீர்

5 நியாயத்தீர்ப்பின் நாள் நெருங்குதே
நேசர் வர காலமாகுதே
மாய லோகம் நம்பி மாண்டிடும்
மானிடரை மீட்க மாட்டீரோ?

## பாடல் – 56

**ஜெபத்தைக் கேட்கும் எங்கள் தேவா,**
ஜெபத்தின் வாஞ்சை தந்தருளும்.
ஜெபத்திலே தரித்திருந்து,
ஜெபத்தின் மேன்மை காணச் செய்வீர்.

***பல்லவி***

ஜெபமே ஜீவன் ஜெபம் ஜெயம்
ஜீவியத்திற்கிதுவே சட்டம்
ஜெபமே ஜீவன் ஜெபம் ஜெயம்
ஜீவியத்திற்கிதுவே சட்டம்

2. ஊக்கத்துடனே ஓர் முகமாய்
வாக்குத்தத்தைப் பற்றிக் கொண்டு
நோக்கத்தை எல்லாம் நேர்மையாக்கி
கேட்கும்படி கிருபை செய்வீர் – ஜெபமே

3. ஆகாத நோக்கம் சிந்தனையை
அகற்றும் எங்கள் நெஞ்சை விட்டு
வாகானதாக்கும் மனமெல்லாம்
வல்லமையோடு வேண்டிக்கொள்வோம் – ஜெபமே

4. இடைவிடாமல் ஜெபம் செய்ய
இடையூறெல்லாம் நீக்கிவிடும்
சடைப்பில்லாமல் உந்தன் பாதம்
கடைசி மட்டும் காத்திருப்போம் – ஜெபமே

# ஜெபமே ஜெயம்

## பாடல் – 57

*பல்லவி*

**ஜெபத்தால் ஜெயத்தை காண்போமே**
ஜெப வீரரே ஜெய வீரரே
கரத்தை உயர்த்தி கர்த்தரை நோக்கி
இரவோ பகலோ நாம் ஜெபிப்போம்

*சரணங்கள்*

1. எலியா செய்த ஜெபம் போல
கருத்தாய் நாமும் ஜெபித்திட்டால்
வானமும் மழையை பொழிந்திடுமே
பூமியும் பலனைத் தந்திடுமே – ஜெபத்

2. தானியேல் செய்த ஜெபம் போல
இடைவிடா நாமும் ஜெபித்திட்டால்
தூதனை அனுப்பி நமக்கு என்றும்
சேதமும் நேரிடா காத்திடுவார் – ஜெபத்

3. அன்னாள் செய்த ஜெபம் போல
இதயத்தை ஊற்றி ஜெபித்திட்டால்
கிலேசமும் விசாரமும் நீங்கிப்போம்
இதயம் கர்த்தரில் களிகூரும் – ஜெபத்

4. கொர்னேலியு செய்த ஜெபம் போல
தேவ பக்தியில் ஜெபித்திட்டால்
பரிசுத்தாவின் வரம் இங்கே
பின் மாரியாகி பொழிந்திடுமே – ஜெபத்

5. பவுலும் சீலாவும் ஜெபித்தது போல்
தேவனைத் துதித்து ஜெபித்திட்டால்
கட்டுகள் எல்லாம் கழன்றிடுமே
கட்டினவன் மீட்கப்படுவானே! – ஜெபத்

6. ஊக்கத்தோடு ஜெபித்திடுவோம்
நோக்கத்தோடு ஜெபித்திடுவோம்
விசுவாசத்தோடு ஜெபித்திடுவோம்
இயேசுவின் நாமத்தில் ஜெபித்திடுவோம் – ஜெபத்

## பாடல் – 58

*பல்லவி*

**தாகத்தைத் தீருமையா – அபி**
ஷேகத்தைத் தாருமையா – எங்கள்

1. ஆகமம் முன்னே அறிவித்த வண்ணம்
ஆவியால் அடியாரை நிறைத்தீரல்லோ
ஏக கர்த்தாவே, ஏழைகள் மீது
இரங்கிடும் இப்போதே எம்மில் – எங்கள்

2. சத்துருவாலே சகிக்க வொண்ணாத
எத்தனையோ இடர் வந்ததையோ,
அத்தனே உமது அருள் பலத்தாலே
நித்தமும் ஜெயம் கொள்வோம் – நாங்கள் – எங்கள்

3. வேதத்தின் பொருளை விளக்கிட வல்ல
போதகராம் ஆவியானவரே,
பாதத்தில் விழுந்து பணிந்திடுவோமே
பரிசுத்த மாவோமே – நாங்கள் – எங்கள்

4. சுத்த ஜீவியமும் தூய ஊழியமும்
கர்த்தருக்கேற்ற நற்காணிக்கையாம்
சித்தம் கொண்டெமை நீர் பாவிப்பதாலே
மெத்தவும் பலன் காண்போம் – நாங்கள் – எங்கள்

## பாடல் – 59

***பல்லவி***

**திருப்பாதம் நம்பி வந்தேன்**
கிருபை நிறை இயேசுவே
தமதன்பைக் கண்டடைந்தேன்
தேவ சமூகத்திலே

***சரணங்கள்***

1. இளைப்பாறுதல் தரும் தேவா
களைத்தோரை தேற்றிடுமே
சிலுவை நிழல் எந்தன் தஞ்சம்
சுகமாய் அங்கு தங்கிடுவேன்

2. என்னை நோக்கி கூப்பிடு என்றீர்
இன்னல் துன்ப நேரத்திலும்
கருத்தாய் விசாரித்து என்றும்
கனிவோடென்னை நோக்கிடுமே

3. மனம் மாற மாந்தன் நீரல்ல
மனவேண்டுதல் கேட்டிடும்
எனதுள்ளம் ஊற்றி ஜெபித்தே
இயேசுவே உம்மை அண்டிடுவேன்

4. என்னைக் கைவிடாதிரும் நாதா
என்ன நிந்தை நேரிடினும்
உமக்காக யாவும் சகிப்பேன்
உமது பலன் ஈந்திடுமே

5. உம்மை ஊக்கமாய் நோக்கிப் பார்த்தே
உண்மையாய் வெட்கம் அடையேன்
தமது முகப் பிரகாசம்
தினமும் என்னில் வீசிடுதே

6. சத்துரு தலை கவிழ்ந்தோட
நித்தமும் கிரியை செய்திடும்
என்னைத் தேற்றிடும் அடையாளம்
இயேசுவே இன்று காட்டிடுமே

## பாடல் – 60

*பல்லவி*

**தூயாதி தூயவரே! உமது புகழை நான் பாடுவேன்**

*அனுபல்லவி*

பாரில் எனக்கு வேறென்ன வேண்டும்
உயிருள்ளவரை நின்புகழ் பாட வேண்டும் – தூயாதி

1. சீடரின் கால்களைக் கழுவினவர்
செந்நீரால் என்னுள்ளம் கழுவிடுமே – பாரில்

2. மக்களின் நோய்களை நீக்கினவா
பாவியென் பாவநோய் நீக்கிடுமே – பாரில்

3. துயரங்கள் பாரினில் அடைந்தவரே
துன்பங்கள் தாங்கிடப் பெலன் தாருமே – பாரில்

4. தன் ஜீவன் எனக்காகத் தந்தவரே
என்னுள்ளம் பலியாக ஏற்றிடுமே! – பாரில்

5. பரலோகில் இடமுண்டு என்றவரே
பரிவாக எனக்குமோரிடம் தாருமே – பாரில்

## பாடல் – 61

*பல்லவி*

**தேவ கிருபை ஆசீர்வாதம்**
தினமும் எங்களில் பெருகிட

***சரணங்கள்***

1. ஆவலாயும தோய்வு நாளில்
ஆலயந்தனில் பணிந்து புகழ
பாவ அறிக்கை செய்யும் ஜனங்கள்
பரனின் கிருபை பெற்று மகிழ – தேவ

2. ஆவலாய் எங்கள் ஆண் குழந்தைகள்
அழகான இள மரங்கள் போலவும்
பாவையர்களாம் பெண் குழந்தைகள்
பலத்த சித்திர அரண்கள் போலவும் – தேவ

3. எங்கள் மாடுகள் பலத்திருக்கவும்
இடுக்கணுள்ளே வராதிருக்கவும்
எங்கள் ஆடுகள் கிராமங்களிலே
லட்சங் கோடியாய்ப் பெருகி வரவும் – தேவ

4. எங்கள் பண்டகசாலை சகல
இன்ப வஸ்துக்கள் நிறைந்திருக்கவும்
பங்க வலசை பகலின் கூக்குரல்
பதியில் என்று மில்லாதிருக்கவும் – தேவ

5. ஆலயந்தனில் உமது வசனம்
அறிவிக்கும் போதக ரனைவருக்குள்ளும்
வேலை ஓய்ந்து பணியும் சபையார்
விரும்பிப் படிக்கும் சகலருக்குள்ளும் – தேவ

6. இத்தன்மையுடன் இருக்கும் ஜனங்கள்
இவர்கள் தாமென உலகம் சொல்லவும்
கர்த்தர் தெய்வமென் றிருக்கும் பாக்கியம்
கண்ட ஜனமென்றெம்மைச் சொல்லவும் – தேவ

7. உன்னதங்களின் இருக்கும் தெய்வத்தின்
உயர்ந்த நாமம் மகிமைப்படவும்
இந்நிலம் சமாதானம் பெற்றிட
இஷ்டம் மானிடர் மேலுண்டாகவும் – தேவ

8. இந்த வீட்டுக்குச் சமாதானம்
இன்ப சுகங்கள் அனைத்துண்டாகவும்
சந்ததியாய் நீடூழி வாழவும்
சபையனைவரும் துதித்திப் பாடவும் – தேவ

## பாடல் – 62

**ஆண்டவா! பிரசன்னமாகி**
ஜீவன் ஊதி உயிர்ப்பியும்
ஆசை காட்டும் தாசர் மீதில்
ஆசீர்வாதம் ஊற்றிடும்

***பல்லவி***

அருள்மாரி எங்கள் பேரில்
வருஷிக்கப் பண்ணுவீர்
ஆசையோடு நிற்கிறோமே
ஆசீர்வாதம் ஊற்றுவீர்

2. தேவரீரின் பாதத்தண்டை
ஆவலோடே கூடினோம்
உந்தன் திவ்விய அபிஷேகம்
நம்பி நாடி அண்டினோம். – அருள்மாரி

3. ஆண்டவா! மெய் பக்தர் செய்யும்
வேண்டுகோளைக் கேட்கிறீர்
அன்பின் ஸ்வாலை எங்கள் நெஞ்சில்
இன்று மூட்டி நிற்கிறீர். – அருள்மாரி

4. தாசர் தேடும் அபிஷேகம்
இயேசுவே! கடாட்சியும்
பெந்தே கோஸ்தின் திவ்விய ஈவை
தந்து ஆசீர்வதியும். – அருள்மாரி

## பாடல் – 63

**பாவ சஞ்சலத்தை நீக்க பிராண நண்பர்தான் உண்டே**
பாவ பாரம் தீர்ந்து போக மீட்பர் பாதம் தஞ்சமே;
சால துக்க துன்பத்தாலே நெஞ்சம் நொந்து சோருங்கால்
துன்பம் இன்பமாக மாறும் ஊக்கமான ஜெபத்தால்.

2. கஷ்ட நஷ்டம் உண்டானாலும் இயேசுவண்டை சேருவோம்,
மோச நாசம் நேரிட்டாலும் ஜெப தூபம் காட்டுவோம்
நீக்குவாரே நெஞ்சின் நோவை பெலவீனம் தாங்குவார்
நீக்குவாரே மனச் சோர்பை தீய குணம் மாற்றுவார்.

3. பெலவீனமான போதும் கிருபாசன உண்டே!
பந்து ஜனம் சாகும் போதும் புகலிடம் இதுவே
ஒப்பில்லாத பிராண நேசா! உம்மை நம்பி நேசிப்போம்
அளவற்ற அருள் நாதா! உம்மை நோக்கிக் கெஞ்சுவோம்.

## பாடல் – 64

**வந்தாளுமே எந்நாளுமே, உன் நாமமே என் தாபமே**
இந்நேரமே கண்பாருமே

2. தேவாவியே வரந்தாரும், இப்பாவியின் பாவம் தீரும்
உம் ஜோதியின் ஒளிவீசும்

3. சத்துருக்கள் சதி செய்ய நித்தம் என்னை நெருக்குகிறார்
அத்தனே நீர் அடைக்கலம்

4. இப்பாரிலே நின்பேரையே தப்பாமலே யான் பாடியே
எப்போதுமே கொண்டாடுவேன்

5. என் மேசையா உன் ஆசையைக் கொண்டோசையாய் நான் பேசவே
நின்னாசி தா நந் நேசமாய்

6. நாதனுன்னை எந்நேரமும் ஓதும் ஏழைப் பாவியேனை
ஆதரித்தே ஆண்டருள்வாய்

## பாடல் – 65

*பல்லவி*

**வாரும் வாரும் மகத்துவ தேவனே**
வல்லமையாக இப்போ வந்திடும்

1. மகிமைச் சொருபனே! மாவல்ல தேவனே!
மன்னா! வந்தாசீர்வாதம் தாருமே – வாரும்

2. தாய் தந்தை நீர் தாமே! தற்பரா! எங்கட்கு
தரணியில் வேறோர் துணை இல்லையே – வாரும்

3. பாவத்தை வெறுத்து பாவியை நேசிக்கும்
பரிசுத்த ராஜனே! நீர் வாருமே – வாரும்

4. பக்தரும் முக்தரும் பாடித் துதிக்கின்ற
பரலோக ராஜனே! நீர் வாருமே – வாரும்

5. காருண்ய தேவனே! கதியும்மை யண்டினோம்
கடைசிவரையும் காத்து இரட்சியும் – வாரும்

6. மன்னா! உம் வரவை எண்ணி யாம் ஜீவிக்க
ஏவுதல் தினம் தாரும் ஏகனே – வாரும்

7. விழிப்புள்ள ஜீவியம் விமலா! நீர் ஈந்துமே
வெற்றியடையக் கிருபை தாருமே – வாரும்

8. இவ்வித பாக்கியம் ஏழைகளெங்கட்கு
ஈந்ததாலுமக்கென்றும் ஸ்தோத்திரம் – வாரும்

## பாடல் – 66

*பல்லவி*

**வாவா ஜெகதீசா – வரந்தரவே**
வாவா ஜெகதீசா – இதுசமயம்
வாவா ஜெகதீசா – உன் மகிமையை
யார் யார் யார் அறிவார்?

*சரணங்கள்*

1. காவிற் கனிபுசித்த ஏவையின் மக்களுக்காய்
பூவில் கனி பாலுண்டவா, புகல் சொல்லாதே – வாவா

2. இரண்டு மூன்று பேர் கூடி தொண்டு புரியும் வேளை
அண்டையில் வருவேன் என்றீரே, அட்டி சொல்லாதே – வாவா

3. பன்னிரு சீஷர்களும் பரிசுத்த ஆவிபெற்று
பற்பல பாஷைகள் பேசினார், பிரசங்கம் செய்ய – வாவா

4. கேளுங்கள் அப்பொழுது கிருபையாகக் கொடுப்பேன்
தட்டுங்கள் திறப்பேன் என்றீரே, தாமதமென்ன – வாவா

5. மோசே முதலாயுள்ள தீர்க்கர் முனிவருக்கும்
ஆசீர்வாதங் கொடுத்தவா அருள் புரிய – வாவா

## பாடல் – 67

**வான பராபரனே இப்போ வாரும் எம்மத்தியிலே**
வந்து நின் திருக்கரத்தால் எம்மை ஆசீர்வதியுமையா
எல்லா மகிமை கனமும் துதியும் ஏற்றிட வாருமையா

2. பக்தரின் மறைவிடமே, ஏழை மக்களின் அதிபதியே!
பாதமே கூடும் பாலகர் எமக்கும் பரிசுத்த மீயுமையா
வாக்குமாறா தேவா வாரும் வல்லமையால் நிறைக்க

3. கிருபாசனப் பதியே, நின் கிருபையால் நிலைத்திடவே
கஷ்டமதிலும் நஷ்டமதிலும் நின் கருணையால் நின்றிடவே
நின் சக்தியோடும் பக்தியில் யாம் பூரணராகிடவே

4. தாய் என்னை மறந்தாலும் ஐயா, நீர் மறவாதிருக்க
ஆவியினால் எம் உள்ள மீதினில் அக்கினி பற்றிடவே
யெகோவாவே, எங்களின் ராஜா எழுந்து வாருமையா

5. நினைத்திடா தினமதினில் எம் கர்த்தரே வருவீரே
ஆவி ஆத்மா சரீரம் முற்றும் மகிமையில் சேர்த்திடவே
மாசிலாப் பரிசுத்தராக மண்மீது துலங்கிடவே

6. வாதை பிணி தீர எம் வாய்த்த மருந்தே நீர்
பாவ சாப ரோக முற்றும் மாற்றிடும் திரு ரத்தமே
கல்வாரி அன்பைப் பெற்றிட நாம் விரைந்து ஏகிடவே

7. ஆகாய மேகமீதில் எக்காளம் தொனித்திடவே
அன்பின் தயாளன் ஆனந்த பூமான்வரவே இரண்டாம் முறையே
ஆசையோடு காத்திருந்து ஜெபித்திட வல்லமையாய்

## பிராத்தனை

## பாடல் – 68

**எந்தன் உள்ளம் தங்கும் இயேசு நாயகா**
உந்தன் வீடாய்க் கொள்ளும் இயேசு நாயகா
இயேசு நாயகா இயேசு நாயகா
உந்தன் வீடாய்க் கொள்ளும் இயேசு நாயகா

2. மாம்சக்கிரியை போக்கும் இயேசு நாயகா
குழந்தை உள்ளம் ஆக்கும் இயேசு நாயகா
இயேசு நாயகா இயேசு நாயகா
குழந்தை உள்ளம் ஆக்கும் இயேசு நாயகா

3. திரும்ப விழாது பாரும் இயேசு நாயகா
கிருபை இழாது காரும் இயேசு நாயகா
இயேசு நாயகா இயேசு நாயகா
கிருபை இழாது காரும் இயேசு நாயகா

4. என்னை உமக்குத் தந்தேன் இயேசு நாயகா
இனி நான் அல்ல, நீரே இயேசு நாயகா
இயேசு நாயகா இயேசு நாயகா
இனி நான் அல்ல, நீரே இயேசு நாயகா

## காலை தியானம்

## பாடல் – 69

**அருணோதயம் எழுந்திடுவோம்**
பரனேசுவைத் துதிப்போம்
அருணோதயம் பரமானந்தம்
பரனோடுறவாடவும்.

2. இதைப் போன்றொரு அருணோதயம்
எம்மைச் சந்திக்கும் மனமே
ஆ! என்னானந்தம்! ஜோதி சூரியனாம்
எந்தன் நேச ரெழும்பும் நாள்.

3. நன்றியாலுள்ளம் பூரித்திடுதே
அன்னையாம் மேசு காருண்யம்
ஒவ்வொன்றா யிதைத் தியானம் செய்யவும்
எவ்வாறு மேற்ற சந்தர்ப்பம்

4. போன ராவினில் ஜீவித்தோர் பலர்
லோகம் விட்டுமே போய் விட்டார்
ஆயினும் நமக்கிந்தத் தினமும்
தந்த நேசரைத் துதிப்போம்

5. நானிர் வாணியாய் வந்த வண்ணமே நிர்
வாணியா யங்கு போகின்றேன்,
கூடச் செல்லவும் பூவிலொன்றுண்டோ?
நாடி போமந்த நாட்டிற்கே

6. ஆயென் நேசரின் அன்பை யெண்ணவும்
ஆனந்தம் பரமானந்தம்
ஆயென் நேசரோர் நவ வான் புவி
தானஞ் செய்ததே ஆனந்தம்

7. பார்! தன் நேசரின் மார்பில் சாய்ந்தேகும்
யாவரிள் இவ் வனாந்திரம்?
எந்தன் நேசரின் கூடச் செல்கிறேன்
சொந்த ராஜ்யத்தில் சேரவும்

8. கொண்டல் மோதும் வறண்ட நாடிதில்
நண்பரே கைவிடாதேயும்!
ஆசையோடு நான் வாறே னென் துக்கம்
பாசமா யங்கு தீர்த்திடும்

## பாடல் – 70

### *பல்லவி*

**கண்களை ஏறெடுப்பேன் – மாமேருநேராய் என்**
கண்களை ஏறெடுப்பேன்.

### *அனுபல்லவி*

விண்மண் உண்டாக்கிய வித்தகனிடமிருந்து
தெண்ணில்லா வொத்தாசை என்றனுக்கே வரும்

### *சரணங்கள்*

1. காலைத் தள்ளாட வொட்டார் – உறங்காது காப்பவர்
காலைத் தள்ளாட வொட்டார்,
வேலையில் நின்றிஸ்ரவேலரைக் காப்பவர்
காலையும் மாலையும் கண்ணுறங்காரவர் – கண்களை

2. பக்க நிழல் அவரே – எனை ஆதரித்திடும்
பக்க நிழல் அவரே
எக்கால நிலைமையும் எனைச் சேதப்படுத்தாது
அக்கோலம் கொண்டோனை அக்காலம் புரியவே – கண்களை

3. எல்லாத் தீமைகட்கும் – என்னை விலக்கியே
எல்லாத் தீமைகட்கும்
பொல்லா உலகினில் போக்குவரத்தையும்
நல்லாத்துமாவையும் நாடோறும் காப்பவர் – கண்களை

## பாடல் – 71

*பல்லவி*

**காலை நேரத்தில் கர்த்தன் இயேசுவை**
கனிவுடன் துதி பாடுவேன்

*அனுபல்லவி*

காலை நேரத்தைக் காணவும் செய்த
கருணை நாயனைப் போற்றுவேன்

1. கடந்த ராவினில் கண்மணியைப் போல்
காத்தவர் எங்கள் இயேசுவே
அடர்ந்த நோய் பிணி அணுகிடாமலே
அன்பர் இயேசுவே காக்கிறார்

2. பந்தம் தீர்த்தென்னைப் பாதுகாத்தவர்
பரம நாயகன் இயேசுவே
சொந்தமாய் என்னையாளும் நாயகன்
சந்ததம் என்னைக் காக்கிறார்

3. ஆதித்தன் ஒளி வீசும் காலையில்
அன்பர் தன் ஒளி காண்கிறேன்
ஆதித்தன் என்ற பேர் படைத்த என்
அன்பர் இயேசுவே காக்கிறார்

4. மத்தியானத்தின் பாழ்கடிப்பிலும்
கர்த்தன் இயேசுவே என் காவலன்
துத்தியம் துதிப்பாடிப் போற்வே
நித்தமும் கிருபை செய்குவீர்

5. இந்த நாளிலும் என்னைக் காப்பவர்
இன்பமான என் இயேசுவே
சந்ததம் உண்மை சாட்சி கூறவே
சிந்தை கூர்ந்தென்னைத் தேற்றுவீர்

6. இந்த நாளில் நான் செய்யும் ஊழியம்
எந்தையே உமக் கேற்றதாய்
சொந்தமாய் உந்தன் கணக்கிலே வைத்து
சந்ததம் என்னைத் தேற்றுவீர்

## பாடல் - 72

### *பல்லவி*

**வாழ்த்துகிறேன் இயேசு சுவாமி**
வாழ்த்துகிறேன் இக்காலையிலே

### *அனுபல்லவி*

அற்புதமாய் இராமுழுவதும் அடியேனைக் காத்தீரே – வாழ்

### *சரணங்கள்*

1. உமது செட்டை நிழலதிலே படுத்திருந்தேன் இராமுழுவதும்
உமது கரம் அணைத்திடவே ஆறுதலாம் நித்திரையும் –வாழ்

2. நித்திரையை இன்பமாக்கி பத்திரமாய் இருதயத்தை
சுத்தமான இரத்தத்திற்குள் சுத்தமாக வைத்திருந்தீர் – வாழ்

3. பலவிதமாம் சோதனைகள் எமைச்சூழ வந்திருந்தும்
ஒன்றும் எமை அணுகாமல் அன்புடன் பாதுகாத்தீர் – வாழ்

4. சந்திப்பீரே இக்காலைதனில் தந்திடவே திருவரங்கள்
சந்தோஷமாய் ஆவியினால் உமது திருச் சித்தமதில் – வாழ்

5. தந்திடுவீர் அபிஷேகம் புதிதாக இப்புதுநாளில்
நடத்திடுவீர் ஆவியினால் உமது திருச் சித்தமதில் – வாழ்

6. பாவமென்றும் அணுகிடாமல் பரிசுத்தமாம் பாதை செல்ல
தேவையான சர்வாயுதங்கள் தாரும் ஜெப ஆவியுடன் – வாழ்

7. படைக்கிறேன் என் இருதயத்தை பலிபீடத்தில் முற்றுமாக
கண்களுடன் செவியோடு வாயும் கையும் காலுமாக – வாழ்

8. செய்வேன் யான் எப்பொழுதும் உம் சித்தமே ஆசையுடன்
ஒழித்திடுவேன் வீண் வார்த்தை பேசிடுவேன் உம் வாக்கை – வாழ்

9. எனைக்காண்போர் உம்மைக்காண உம் சாயல் எனில் வேண்டும்
தந்திடுவீர் தாழ்மையையும் பொறுமையுடன் அன்புமாக – வாழ்

10. நேசரே உம் திருவருகை இந்நாளில் இருந்திடினும்
ஆசையுடன் சந்திக்கவே ஆயத்தமாய் வைத்துக்கொள்ளும் – வாழ்

## பாடல் – 73

### *பல்லவி*

**அதிகாலையிலுமைத் தேடுவேன் முழு மனதாலே**
தேவாசீர் வாதம் பெற நாடுவேன் ஜெபத்தாலே

### *அனுபல்லவி*

இதுகாறும் காத்த தந்தை நீரே;
இனிமேலும் காத்தருள் செய்வீரே,
பதிவாக உம்மிலே நான் நிலைக்கவே,
பத்திரமாய் எனை உத்தமனாக்கிடும் தேவே! – அதி

***சரணங்கள்***

1. போன ராமுழுவதும் பாதுகாத்தருளின போதா! – எப்
போதும் எங்களுடனிருப்பதாய் உரைத்த நல் நாதா
ஈனப்பாவிக்கேது துணை லோகிலுண்டு பொற்பாதா?
எனக்கான ஈசனே! வான ராசனே!
இந்த நாளிலும் ஒரு பந்த மில்லாமல் காரும் நீதா! – அதி

2. பல சோதனைகளால் சூழ்ந்து நான் கலங்கிடும்போது – தப்
பாது நின் கிருபை தாங்கிடவேணும் அப்போது
விலகாது என் சமூகம் என்ற வாக்கில் தவறேது?
விசுவாசங் கொண்டு மெய்ப் பாசமூண்டிட
விக்கினம் யாவிலும் வெற்றி காணுவேன் மலைவேது? – அதி

3. நரர் யாவர்க்கு முற்ற நண்பனாய் நடந்திடவையே! – தீ
நாவின் பாவமற நன்மைகள் மொழிந்திடச் செய்யே!
பரலோக ஆவியை நல் மாரிபோலெனிலே பெய்யே!
புகழான நாதனே! வேத போதனே!
பூரணமாய் உனைப் போற்றுவேன், தினம்தினம் மெய்யே – அதி

## மாலை தியானம்

### பாடல் – 74

**காரிருளில் என் நேச தீபமே, நடத்துமேன்**
வேறொளியில்லை, வீடும் தூரமே, நடத்துமேன்
நீர் தாங்கின் தூரக்காட்சி ஆசியேன்
ஓர் அடி மட்டும் என் முன் காட்டுமேன்.

2. என் இஷ்டப்படி நடந்தேன், ஐயோ! முன்னாளிலே
ஒத்தாசை தேடவில்லை இப்போதோ நடத்துமேன்
உல்லாசம் நாடினேன், திகிலிலும்
வீம்புகொண்டேன் அன்பாக மன்னியும்.

3. இம்மட்டும் என்னை ஆசீர்வதித்தீர்; இனிமேலும்
காடாறு சேறு குன்றில் தேவரீர் நடத்திடும்;
உதய நேரம் வரக் களிப்பேன்;
மறைந்து போன நேசரைக் காண்பேன்.

## பாடல் – 75

**வாருமையா போதகரே, வந்தெம்மிடம் தங்கியிரும்**
சேருமையா பந்தியினில், சிறியவராம் எங்களிடம்

2. ஒளி மங்கி இருளாச்சே உத்தமனே வாருமையா
களித்திரவு காத்திருப்போம், காதலனே கருணை செய்வாய்

3. ஆதரையிலென் ஆறுதலே, அன்பருக்குச் சதா உறவே
பேதையர்க்குப் பேரறிவே பாதை மெய் ஜீவ சற்குருவே

4. நாமிருப்போம் நடுவிலென்றீர், நாயனுன் நாமம் நமஸ்கரிக்க
தாமதமேன் தயை புரிய தற்பரனே நலம் தருவாய்

5. உந்தன் மனை திருச்சபையை வையமெங்கும் வளர்த்திடுவாய்
பந்த மற பரிகரித்தே பாக்கியமளித் தாண்டருள்வாய்

6. பாடும் தேவதாசரின் கவி பாரினில் கேட்டனுதினமும்
தேடும் தொண்டர் துலங்கவுந்தன் திவ்ய ஆவி தந்தருள்வாய்

## பாடல் – 76

**ஐயரே, நீர் தங்கும்! என்னிடம்**
ஐயரே, நீர் தங்கும் – இப்போ
அந்தி நேரம் பொழுதஸ்தமித்தாச்சே
ஐயா, நீர் இரங்கும்.

2. பகல் முழுவதும் காத்தீர் சென்ற
பகல் முழுவதும் காத்தீர் – தோத்திரம்
பரமனே, இந்த இரவிலும் வாரும்
பாவியை நீர் காரும்

3. தங்கா தொருபொருளும் என்னிடம்
தங்காதொரு பொருளும் – இயேசு
தற்பரனே நீர் ஒருவரே யென்னில்
தங்கித் தயை புரியும்.

4. உயிரே துமையன்றிப் பாவிக்
குயிரே துமையன்றி? – என்றன்
உடல் உயிர் உம்மால் உய்கிறதையா,
உத்தமனே, தங்கும்.

4. எனக்கு நீர் காவல் என்றும்
எனக்கு நீர் காவல் – எந்தன்
இனத்தார் ஜனத்தார் எளியோர் வலியோர்
எல்லாவர்க்குங் காவல்.

## பாடல் – 77

**நீங்காதிரும் என் நேச கர்த்தரே**
வெளிச்சம் மங்கி இருட்டாயிற்றே
மற்றோர் ஒத்தாசை அற்றுப்போயினும்
நீர் மெயச்சகாயரே நீங்காதிரும்

2. நீர் மேலே குமிழ் போல் என் ஆயுசும்
இம்மையில் இன்ப வாழ்வும் நீங்கிடும்
கண் கண்ட யாவும் மாறிப் போயினும்
மாறாத கர்த்தரே, நீங்காதிரும்

3. நீர் கூட நின்று தாங்கி வாருமேன்
அப்போது தீமைக்கு நான் தப்புவேன்
நீர் என் துணை என் பாதை காட்டியும்
என் இன்ப துன்பத்தில் நீங்காதிரும்

4. நான் அஞ்சிடேன், நீர் கூடத் தங்கினால்
என் கிலேசம் மாறும் உம் பிரசன்னத்தால்
சாவே எங்கே உன் கூரும் ஜெயமும்?
என்றாரவாரிப்பேன் நீங்காதிரும்

5. நான் சாகும் அந்தகார நேரமே
நீர் ஒளியாய் விண் காட்சி காட்டுமே
பேரின்ப ஜோதி வீசச் செய்திடும்
வாணாள் சாங்காலிலும் நீங்காதிரும்

## பாடல் – 78

*சரணங்கள்*

**பெத்தலெகேம் ஊரோரம் சத்திரத்தை நாடிக்**
கர்த்தன் இயேசு பாலனுக்கு துத்தியங்கள் பாடி
பக்தியுடன் இத்தினம் வா ஓடி – பெத்

2. காலம் நிறைவேறின போதிஸ்திரியின் வித்து
சீலகன்னி கர்ப்பத்தில் ஆவியால் உற்பவித்துப்
பாலனான யேசுநமின் சொத்து – பெத்

3. எல்லையில்லா ஞானபரன் வெல்லைமலையோரம்
புல்லனையிலே பிறந்தார் இல்லமெங்குமீரம்
தொல்லை மிகும் அவ்விருட்டு நேரம் – பெத்

4. வான் புவி வாழ் ராஜனுக்கு மாட்டகந்தான் வீடோ
வானவர்க்கு வாய்த்த மெத்தை வாடின புல்பூண்டோ
ஈனக் கோலமிது விந்தையல்லோ – பெத்

5. அந்தரத்தில் பாடுகின்றார் தூதர் சேனை கூடி
மந்தை ஆயர் ஓடுகின்றார் பாடல் கேட்கத் தேடி
இன்றிரவில் என்ன இந்த மோடி – பெத்

6. ஆட்டிடையர் அஞ்சுகிறார் அவர் மகிமை கண்டு
அட்டியின்றி காபிரியேல் சொன்ன செய்தி கொண்டு
நாட்டமுடன் ரட்சகரைக் கண்டு – பெத்

7. இந்திரியுடு கண்டரசர் மூவர் நடந்தாரே
சந்திரத் தூபம் போளம் வைத்துச் சுதனைப் பணிந்தாரே
விந்தையது பார்க்கலாம் வா நேரே – பெத்

## பெத்தலையில் பிறந்தவர்

### பாடல் – 79

*பல்லவி*

**பெத்தலையில் பிறந்தவரைப்**
போற்றித் துதி, மனமே – இன்னும்

*சரணங்கள்*

1. சருவத்தையும் படைத்தாண்ட சருவ வல்லவர் – இங்கு
தாழ்மையுள்ள தாய்மடியில் தலைசாய்க்கலானார். – பெத்

2. சிங்காசனம் வீற்றிருக்கும் தேவ மைந்தனார் – இங்கு
பங்கமுற்ற பசுத்தொட்டிலில் படுத்திருக்கிறார் – பெத்

3. முன்பு அவர் சொன்னபடி முடிப்பதற்காக – இங்கு
மோட்சம் விட்டுத் தாழ்ச்சியுள்ள முன்னணையிலே – பெத்

4. ஆவிகளின் போற்றுதலால் ஆனந்தங்கொண்டோர் – இங்கு
ஆக்களுட சத்தத்துக்குள் அழுது பிறந்தார் – பெத்

5. இந்தடைவாய் அன்பு வைத்த எம்பெருமானை – நாம்
எண்ணமுடன் போய்த்துதிக்க ஏகிடுவோமே – பெத்

## பாடல் – 80

**பிறந்தார், பிறந்தார்**
வானவர் புவி மானிடர் புகழ்
பாடிட பிறந்தார்

***சரணங்கள்***

1. மாட்டுத் தொழுவம் தெரிந்தெடுத்தார்
மா தேவ தேவனே
மேன்மை வெறுத்தார் தாழ்மை தரித்தார்
மா தியாகியாய் வளர்ந்தார் – பிறந்தார்

2. பாவ உலக மானிடர் மேல்
பாசம் அடைந்தவரே
மனக்காரிருளை எம்மில் நீக்கிடும் மெய்
மா ஜோதியாய் திகழ்ந்தார் – பிறந்தார்

3. பொறுமை, தாழ்மை, அன்புருக்கம்
பெருந்தன்மை உள்ளவரே
மரணம் வரையும் தன்னைத் தாழ்த்தினதால்
மேலான நாமம் பெற்றார் – பிறந்தார்

4. கந்தைத் துணியோ கர்த்தருக்கு
கடும் ஏழ்மைக் கோலமதோ
விலையேறப்பெற்ற உடை அலங்கரிப்பும்
வீண் ஆசையும் நமக்கேன் – பிறந்தார்

5. குருவைத் தொடரும் சீஷர்களும்
குருபோல மாறிடுவார்
அவர் நாமம் தரித்தவர் யாவருமே
அவர் பாதையில் நடப்போம் – பிறந்தார்

6. இயேசு பிறந்தார் உள்ளமதில்
இதை எங்கும் சாற்றிடுவோம்
புசிப்பும் குடிப்பும் தேவ ராஜ்யமல்ல
பரன் ஆவியில் மகிழ்வோம் – பிறந்தார்

## பாடல் – 81

**கண்மணி நீ கண்வளராய்**
விண்மணி நீ உறங்கிடுவாய்
கண்மணி நீ கண்வளராய்

1. தூங்கு கண்ணே தூதர் தாலாட்ட
நீங்கும் துன்பம் நித்திரை வர
ஏங்கும் மக்கள் இன்னல் நீங்கிட
தாங்கா துக்கம் துயர் மிஞ்சும் கடும் குளிரில்
கந்தை துணி பொதிந்தாயோ

2. சின்ன இயேசு செல்லப்பாலனே
உன்னை நானும் ஏற்பேன் வேந்தனே
என்னைப் பாரும் இன்ப மைந்தனே
உன்னத தேவ வாக்குன்னில் நிறைவேற
ஏழை மகவாய் வந்தனையோ

3. வீடும் இன்றி முன்னனைதானோ
காடும் குன்றும் சேர்ந்ததேனோ
பாடும் கீதம் கேளாயோ நீயும்
தேடும் மெய்யன்பர் உன்னடி பணிய
ஏழ்மைக் கோலம் கொண்டனையோ

# கிறிஸ்துவின் பாடுகள்

## பாடல் - 82

***பல்லவி***

**அந்தோ கல்வாரியில் அருமை இரட்சகரே**
சிறுமை அடைந்தே தொங்குறார்

***சரணங்கள்***

1. மகிமை மாட்சிமை மறந்திழந்தோராய்
கொடுமை குருசைத் தெரிந்தெடுத்தாரே
மாயலோகத்தோடழியாது யான்
தூய கல்வாரியின் அன்பை அண்டிடவே – அந்தோ

2. அழகுமில்லை சௌந்தரியமில்லை
அந்தக் கேடுற்றார் எந்தனை மீட்க
பல நிந்தைகள் சுமந்தாலுமே
பதினாயிரம் பேரிலும் சிறந்தவரே – அந்தோ

3. முள்ளின் முடியும் செவ்வங்கி அணிந்தும்
கால் கரங்கள் ஆணிகள் பாய்ந்தும்
குருதி வடிந்தவர் தொங்கினார்
வருந்தி மடிவோரை மீட்டிடவே – அந்தோ

4. அதிசயம் இது இயேசுவின் தியாகம்
அதிலும் இன்பம் அன்பரின் தியாகம்
அதை எண்ணியே நிதம் வாழுவேன்
அவர் பாதையை நான் தொடர்ந்தேகிடவே – அந்தோ

5. சிலுவைக் காட்சியை கண்டு முன்னேறி
சேவையே புரிவேன் ஜீவனும் வைத்தே
என்னைச் சேர்த்திட வருவேனென்றார்
என்றும் உண்மையுடன் நம்பி வாழ்ந்திடுவேன் – அந்தோ

## பாடல் – 83

*பல்லவி*

**பாரீர் கெத்சமனே**
பூங்காவில் என் நேசரையே
பாவி எனக்காய் வேண்டுதல் செய்திடும்
சத்தம் தொனித்திடுதே

*சரணங்கள்*

1. தேகமெல்லாம் வருந்தி
சோகமடைந்தவராய்
தேவாதி தேவன் ஏகசுதன்
படும் பாடு எனக்காகவே – பாரீர்

2. அப்பா என் பாத்திரமே
நீக்கும் நின் சித்தமானால்
எப்படியாயினும் சித்தம் செய்ய என்னை
தத்தம் செய்வேன் என்றாரே – பாரீர்

3. ரத்தத்தின் வேர்வையாலே
மெத்தவும் நனைந்ததே
இம்மானுவேல் உள்ளம் உருகியே
வேண்டுதல் செய்தாரே – பாரீர்

4. மும்முறை தரைமீது
தாங்கொணா வேதனையால்
உன்னதன் தாமே வீழ்ந்து ஜெபித்தாரே
பாதகன் மீட்புறவே – பாரீர்

## பாடல் – 84

**இரத்தத்தால் ஜெயம்**
இரத்தத்தால் ஜெயம்
இரத்தத்தால் ஜெயம் இயேசுவே
அல்லேலூயா! அல்லேலூயா!
இரத்தத்தால் ஜெயம், இயேசுவே

2. இயேசு ஜெயித்தார்
இயேசு ஜெயித்தார்
இயேசு ஜெயித்தார், சாத்தானை
அல்லேலூயா! அல்லேலூயா!
இயேசு ஜெயித்தார் சாத்தானை

3. நாமும் ஜெயிப்போம்
நாமும் ஜெயிப்போம்
நாமும் ஜெயிப்போம் சாத்தானை
அல்லேலூயா! அல்லேலூயா!
நாமும் ஜெயிப்போம் சாத்தானை

4. சாத்தான் தோல்வியுற்றான்
சாத்தான் தோல்வியுற்றான்
சாத்தான் தோல்வியுற்றான் இரத்தத்தால்
அல்லேலூயா! அல்லேலூயா!
சாத்தான் தோல்வியுற்றான் இரத்தத்தால்

## பாடல் – 85

**இம்மானுவேலின் இரத்தத்தால்**
நிறைந்த ஊற்றுண்டே
எப்பாவத் தீங்கும் அதனால்
நிவிர்த்தியாகுமே

***பல்லவி***

நான் நம்புவேன்! நான் நம்புவேன்!
இயேசு எனக்காய் மரித்தார் – மரித்தார்
பாவம் நீங்கச் சிலுவையில் உதிரம் சிந்தினார்

2. மா பாவியான கள்ளனும்
அவ்வூற்றில் மூழ்கினான்
மன்னிப்பும் மோட்சானந்தமும்
அடைந்து பூரித்தான் – நான்

3. அவ்வாறு நானும் யேசுவால்
விமோசனம் பெற்றேன்
என் பாவம் நீங்கிப் போனதால்
ஓயாமல் பாடுவேன். – நான்

4. காயத்தில் ஓடும் ரத்தத்தை
விஸ்வாசத்தால் கண்டேன்
ஒப்பற்ற மீட்பர் நேசத்தை
எங்கும் பிரஸ்தாபிப்பேன் – நான்

5. விண்ணில் வல்ல நாதரை
நான் கண்டு பூரிப்பேன்
அங்கென்னை மீட்ட நேசத்தைக்
கொண்டாடிப் போற்றுவேன் – நான்

## பாடல் – 86

### *பல்லவி*

**இயேசு எனக்காக சிலுவையில் மாண்டீரே!**

### *சரணங்கள்*

1. பாவி எனக்காக தேவே நீர்
ஆவியை விட்டீரோ!
கோரமாய்க் குருதி வடித்தீரோ – இயேசு
பாரத்தால் துவண்டு துடித்தீரோ! – இயேசு

2. நீச பாவச் செயல்களில்
ஈசனே உழன்றேனே!
பாவப் பாரத்தால் நான் சோர்வுற்றேன்
சிலுவையண்டை தாழ்ந்து வாரேன் நான் – இயேசு

3. தலை கைகள் கால்கள் விலா
நிலையில்லா வெள்ளமாய்
செந்நீர் வடிப்பதென் பாவமே – இவ்
வன்பிற்குப் பாத்திரன் அல்ல நான் – இயேசு

4. ஐயோ பாவி என்னை தேவா
உய்விக்க வந்தீரோ!
பாபமே ஆனீரோ பாவிக்காய் – இயேசு
சாபமே ஏற்றீரோ என்னால் நீர் – இயேசு

5. என் தேவனே தேவனே
ஏனென்னைக் கைவிட்டீர்
என் கைப்பற்றவல்லோ கைவிட்டீர் – இயேசு
கண்ணீரிவ்வன்பிற் கீடாகுமோ – இயேசு

6. இந்தக் கோரக் காட்சி காணத்
தந்தை சகியாமல்
மைந்தனை விட்டு நீர் திரும்பி – தேவா
இந்தப் பாவியைக் கண்ணோக்கினீர் – இயேசு

7. ஐயோ என் செய்வேன் பாவி நான்
உள்ளம் உடைவேனோ?
கண்ணீர் சொரிவேனோ என் இயேசுவே – ஐந்து
காயங்கள் கழுவக் கரைந்து – இயேசு

## பாடல் – 87

**பலிபீடத்தில் என்னைப் பரனே**
படைக்கிறேனே இந்த வேளை
அடியேனை திருச்சித்தம் போல
ஆண்டு நடத்திடுமே

***பல்லவி***

கல்வாரியின் அன்பினையே
கண்டு விரைந்தோடி வந்தேன்
கழுவும் உம் திரு இரத்தத்தாலே
கரை நீங்க இருதயத்தை

2. நீரன்றி என்னாலே பாரில்
ஏதும் நான் செய்திட இயலேன்
சேர்ப்பீரே வழுவாது என்னைக்
காத்துமக்காய் நிறுத்தி – கல்வாரியின்

3. ஆவியோடாத்மா சரீரம்
அன்பரே உமக்கென்றும் ஈந்தேன்
ஆலய மாக்கியே இப்போது
ஆசீர்வதித்தருளும் – கல்வாரியின்

4. சுயம்மென்னில் சாம்பலாய் மாற
சுத்தாவியே அனல் மூட்டும்
ஜெயம் பெற்று மாமிசம் மாய
தேவா அருள் செய்குவீர் – கல்வாரியின்

5. பொன்னையும் பொருளையும் விரும்பேன்
மண்ணின் வாழ்வையும் வெறுத்தேன்
மன்னவன் இயேசுவின் சாயல்
இந்நிலத்தில் கண்டதால் – கல்வாரியின்

## பாடல் – 88

***பல்லவி***

**உம் இரத்தமே உம் இரத்தமே சுத்தம் செய்யுமே**
உம் இரத்தமே என் பானமே

***சரணங்கள்***

1. பாய்ந்து வந்த நின் ரத்தமே
சாய்ந்தோர்கட்கு அடைக்கலமே
பாவிகள் நேசர் பாவி என்னை
கூவி கழுவினீர் என்னை – உம் இரத்தமே

2. நீ நேசச் சிலுவை சத்தியம்
நாசமடைவோர்க்குப் பைத்தியம்
இரட்சிப்படைவோர் சத்தியம்
நிச்சயம் காப்பார் நித்தியம் – உம் இரத்தமே

3. நின் சிலுவையில் சிந்தின
வன்மையுள்ள இரத்தத்தினால்
என் பாவத்தைப் பரிகரித்தீர்
அன்புள்ள தேவபுத்திரா – உம் இரத்தமே

4. பன்றிபோல் சேறில் புரண்டேன்
நன்றியில்லாமலே திரிந்தேன்
கரத்தால் அரவணைத்தீர்
வரத்தால் ஆசீர்வதித்தீர் – உம் இரத்தமே

5. விழுங்கப் பார்க்கும் சாத்தானை
மழுங்க வைத்தீர் அவனை
புழுங்காமல் போக்கினானே
களங்கமில்லாக் கர்த்தரே – உம் இரத்தமே

6. ஐயனே உமக்கு மகிமையும்
துய்யனே துதி கனமும்
மெய்யனே எல்லா வல்லமையும்
உய்யோனே உமக்கல்லேலூயா – உம் இரத்தமே

## பாடல் – 89

*பல்லவி*

**உருகாயோ நெஞ்சமே**
குருசினில் அந்தோபார்
கரங்கால்கள் ஆணியேறித்
திருமேனி நையுதே

***சரணங்கள்***

1. திண்டு போல எண்டிசையின்
தொண்டர் பாவம் ஆண்டான் மேலே
நின்றதே ஓர் பண்டு ஏவை
தின்ற சாபம் மண்டுதே – உருகாயோ

2. தாகம் மிஞ்சி நாவறண்டு
தங்க மேனி மங்குதே
ஏகபரன் கண்ணயர்ந்து
எத்தனையாய் ஏங்குறார்! – உருகாயோ

3. வல்ல பேயை வெல்ல வானம்
விட்டு வந்த தெய்வம் பாராய்!
புல்லரிதோ நன்றி கெட்டு
புறம்பாக்கினாரன்றோ? – உருகாயோ

4. மன்னுயிர்க்காய்த் தன்னுயிரை
மாய்க்க வந்த மன்னவனார்
இந்நில மெல்லாம் புரக்க
ஈனக்குரு சேறினார்! – உருகாயோ

5. மூவுலகும் தாங்கும் தேவன்
மூன்று ஆணி தாங்கிடவோ
சாகும் வேளை வந்த போது
சிலுவையில் தொங்கினார். – உருகாயோ

6. நித்திய காலம் பாத்திரராய்
நீசர் வாசஸ்தலம் உய்ய
சத்திய தாசர் சித்தமேவும்
சங்கை ராஜன் இங்கு பார்! – உருகாயோ

## பாடல் – 90

***பல்லவி***

**ஆணிகள் பாய்ந்த கரங்களை விரித்தே**
ஆவலாய் இயெசுன்னை அழைக்கிறாரே

***சரணங்கள்***

1. பார்! திருமேனி வாரடியேற்றவர்
பாரச் சிலுவைதனைச் சுமந்து சென்றனரே
பாவமும் சாபமும் சுமந்தாரே உனக்காய்
பயமின்றி வந்திடுவாய் – ஆணி

2. மயக்கிடுமோ இன்னும் மாயையின் இன்பம்
நயத்தாலே உந்தனை நாசமாக்கிடுமே
உணர்ந்திதையுடனே உன்னதனண்டை
சரண்புகுவாய் இத்தருணம் – ஆணி

3. கிருபையின் வாசல் அடைத்திடு முன்னே
மரணத்தின் சாயலில் இணைந்திடுவாயே
உருவாக்கியே புது சிருஷ்டியில் வளர
கிருபையும் அளித்திடுவார் – ஆணி

4. பரிசுத்த ஆவியால் பரமனின் அன்பினைப்
பகர்ந்திடுவார் உந்தன் இருதயந்தனிலே
மறுரூப நாளின் அச்சாரமதுவே
மகிமையும் அடைந்திடுவாய் – ஆணி

5. இயேசுவல்லாது இரட்சிப்புத் தருவோர்
இரட்சகர் வேறு இகமதிலுண்டோ
அவர் வழி சத்தியம் ஜீவனுமாமே
அவரே உன் நாயகரே – ஆணி

## பாடல் – 91

**என் அருள் நாதா யேசுவே!**
சிலுவைக் காட்சி பார்க்கையில்
பூலோக மேன்மை நஷ்டமே
என்றுணர்ந்தேன் என் உள்ளத்தில்

2. என் மீட்பர் சிலுவை அல்லால்
வேறெதை நான் பாராட்டுவேன்!
சிற்றின்பம் யாவும் அதினால்
தகாத தென்று தள்ளுவேன்.

3. கை, தலை, காலிலும் இதோ!
பேரன்பும் துன்பும் கலந்தே
பாய்ந்தோடும் காட்சிபோல் உண்டோ
முள் முடியும் ஒப்பற்றதே!

4. சராசரங்கள் அனைத்தும்
அவ்வன்புக்கு எம்மாத்திரம்
என் ஜீவன் சுகம் செல்வமும்
என் நேசருக்குப் பாத்தியம்

5. மாந்தர்க்கு மீட்பைக் கஸ்தியால்
சம்பாதித்தீந்த இயேசுவே
உமக்கு என்றும் தாசரால்
மா ஸ்தோத்திரம் உண்டாகவே.

## பாடல் – 92

*பல்லவி*

**என்ன தியாகம்! என் கல்வாரி நாயகா!**
என்னையும் உம்மைப்போல் மாற்றிடவோ

***சரணங்கள்***

1. விண் தூதர் போற்றிடும் உம் பிதாவையும்
விட்டிறங்கி வந்தீரே
மாட்டுக் கொட்டிலோ வாஞ்சித்தீரைய்யா!
மானிடர் மேல் அன்பினால் – என்ன

2. ஜெனித்த நான் முதலாய் – கல்வாரியில்
ஜீவனையும் ஈயும் வரை
பாடுகள் உம் பங்காய்க் கண்டீரையா
பாவியை மீட்பதற்காய் – என்ன

3. தலையைச் சாய்த்திடவோ – உமக்கு ஓர்
தலமோ எங்குமில்லை
உம் அடிச் சுவட்டில் நான் செல்லவோ
முன் பாதை காட்டினீரே – என்ன

4. தாய் தந்தை வீடு நாடும் – இன்னும்
தனக்குள்ளதெல்லாம் வெறுத்து
அனுதினமும் குருசைச் சுமப்பவரல்லோ
அப்போஸ்தலர் என்றீரே – என்ன

5. பாடுகளல்லவோ உம்மை – மகிமையில்
பூரணமாய்ச் சேர்த்ததே
உம்மோடு நானும் பாடு சகிப்பேன்
என் ஜீவனையும் வைத்தே – என்ன

6. இன்பம் எனக்கினியேன் – என் அருமை
இயேசுதான் என் பங்கல்லோ!
நேசரின் பின்னே போகத்துணிந்தேன்
பாசம் என்னில் வைத்ததால் – என்ன

## பாடல் – 93

*பல்லவி*

**எங்கே சுமந்து போகிறீர்? சிலுவையை நீர்**
எங்கே சுமந்து போகிறீர்?

*சரணங்கள்*

1. எங்கே சுமந்து போறீர்? இந்தக் கானலில் உம
தங்க முழுவதும் நோக, ஐயா, என் ஏசு நாதா – எங்கே

2. தோளில் பாரம் அழுத்த, தூக்கப் பெலமில்லாமல்
தாளும் தத்தளிக்கவே, தாப சோபம் உற நீர் – எங்கே

3. வாதையினால் உடலும் வாடித் தவிப்புண்டாக,
பேதம் இல்லாச் சீமோனும் பின்னாகத் தாங்கிவர – எங்கே

4. தாயார் அழுதுவர சார்ந்தவர் பின்தொடர
மாயம் இல்லாத ஞான மாதர் புலம்பி வர – எங்கே

5. வல்லபேயைக் கொல்லவும், மரணந்தனை வெல்லவும்
எல்லை இல்லாப் பாவங்கள் எல்லாம் நாசமாகவும் – எங்கே

6. மாசணுகாத சத்திய வாசகனே, உமது
தாசர்களைக் காக்கவும் தாங்காச் சுமையை எடுத்து – எங்கே

## பாடல் – 94

**சிலுவை நாதர் இயேசுவின்**
பேரொளி வீசிடும் தூய கண்கள்
என்னை நோக்கிப் பார்க்கின்றன – தம்
காயங்களையும் பார்க்கின்றன

1. என் கைகள் பாவங்கள் செய்திட்டால்
தம் கையின் காயங்கள் பார்க்கின்றாரே
தீய வழியில் என் கால்கள் சென்றதால்
தம் காலின் காயங்கள் பார்க்கின்றாரே

2. தீட்டுள்ள எண்ணம் இதயம் கொண்டால்
ஈட்டி பாய்ந்த நெஞ்சை நோக்குகின்றார்
வீண் பெருமை என்னில் இடம் பெற்றால்
முள் முடி பார்த்திட ஏங்குகின்றார்

3. திருந்திடா பாவிக்காய் அழுகின்றார்
வருந்திடா பிள்ளைக்காய்க் கலங்குகின்றார்
தம் கண்ணீர் காயத்தில் விழுந்திட
கண்ணீரும் ரத்தமும் சிந்துகின்றார்

4. அவர் இரத்தம் என் பாவம் கழுவிடும்
அவர் கண்ணீர் என்னை மெருகேற்றிடும்
கலங்கரை விளக்காக ஒளி வீசுவேன்
கலங்குவோரை அவர் மந்தை சேர்ப்பேன்

## பாடல் – 95

### *சரணங்கள்*

**ஓ! ஓ! பாவங்கள் எத்தனையோ**
என் கைகள் புரிந்தனவோ
உம் கைகளில் வழிந்தோடும் செங்குருதி என்
கைகளைக் கழுவிடாதோ

2. ஓ! ஓ! பாவங்கள் எத்தனையோ
என் கால்கள் புரிந்தனவோ
நின் கால்களில் வழிந்தோடும் செங்குருதி என்
கால்களைக் கழுவிடாதோ

3. ஓ! ஓ! பாவங்கள் எத்தனையோ
என் சிரசதும் எண்ணினதோ
நின் சிரசில் வழிந்தோடும் செங்குருதி என்
சிரசதை கழுவிடாதோ

4. ஓ! ஓ! பாவங்கள் எத்தனையோ
என் இதயம் இழைத்ததுவோ
உம் இதயத்தில் வழிந்தோடும் செங்குருதி என்
இதயத்தை கழுவிடாதோ

## பாடல் – 96

***பல்லவி***

**கல்வாரியே கல்வாரியே**
கல் மனம் உருக்கிடும் கல்வாரியே – என்

***சரணங்கள்***

1. பாவி துரோகி சண்டாளன் நானாயினும்
பாதகம் போக்கிப் பரிவுடன் இரட்சித்த – கல்வாரியே

2. பாவியை மீட்கவே நாயகன் இயேசு தம்
ஜீவனின் இரத்தத்தைச் சிந்தின உன்னத – கல்வாரியே

3. நாதன் எனக்காக ஆதரவற்றோராய்ப்
பாதகர் மத்தியில் பாதகன் போல் தொங்கும் – கல்வாரியே

4. முள் முடி சூடியே கூர் ஆணி மீதிலே
கள்ளனை போல என் நாயகன் தொங்கிடும் – கல்வாரியே

5. சர்வம் படைத்தாளும் சொர்லோக நாயகன்
கர்மத்தின் கோலமாய் நிற்பதைக் காண்பேனோ – கல்வாரியே

6. எண்ணும் நன்மை ஏதும் என்னிலே இல்லையே
பின்னை ஏன் நேசித்தீர் என்னை என் பொன் நாதா – கல்வாரியே

7. இவ்வித அன்பை நான் எங்குமே காணேனே
எவ்விதம் இதற்கீடு ஏழை நான் செய்குவேன் – கல்வாரியே

## பாடல் – 97

*பல்லவி*

**கொல்கொதாவே கொலை மரமே**
கோர மரணம் பாராய் மனமே – கொல்கதா

*அனுபல்லவி*

கோர மனிதர் கொலை செய்தார்
கோர காட்சி பார் மனமே – கொல்கதா

1. கந்தை அணிந்தார், நிந்தை சுமந்தார்
கள்ளார் நடுவில் கொலை மரத்தில்
எந்தனை மீட்க இத்தனைப் பாடேன்
எந்தன் ஜீவ நாயகா – கொல்கதா

2. என்னை மீட்ட கொலை மரமே
அன்னையே நான் என்ன செய்வேன்
என்னை உமக்கே ஒப்புவித்தேன்
என்றென்றுமாய் நான் வாழ – கொல்கதா

3. வானம் பூமி ஒன்றாய் இணைந்த
வல்ல தேவன் உமக்கே சரணம்
வாடி, வாடி, கொலை மரத்தில்
நிற்கும் காட்சி பார் மனமே – கொல்கதா

4. அல்லேலூயா, அல்லேலூயா
அல்லேலூயா, அல்லேலூயா
அல்லேலூயா, அல்லேலூயா
அல்லேலூயா, என்றென்றும் – கொல்கதா

## பாடல் – 98

**கொல்கதா கொலைமரம்**
பார்க்கவே பரிதாபம்
துங்கன் இயேசு நாதனார்
தொங்கும் காட்சி பார் இதோ!

*சரணங்கள்*

1. கை காலை ஆணி பீறிட்டே
குருதி புரண்டு ஓடிற்றே
முள்ளினால் ஓர் கிரீடமே
சூட்டினார் மா பாதகர் – கொல்

2. கல்வாரி நாதர் இயேசுவை
பற்றி நீயும் வந்திட்டால்
தூசியான உன்னையும்
மேசியா கைத் தூக்குவார் – கொல்

## பாடல் – 99

*பல்லவி*

**சிலுவை நிழலில் அனுதினம் அடியான்**
சாய்ந்திளைப்பாறிடுவேன் – ஆ! ஆ!

*அனுபல்லவி*

சிலுவையின் அன்பின் மறைவில்
கிருபையின் இனிய நிழலில்
ஆத்தும நேசரின் அருகில்
அடைகிறேன் ஆறுதல் மனதில்

*சரணங்கள்*

1. பாவப் பாரச் சுமையதால் சோர்ந்து
தளர்ந்த என் ஜீவியமே – ஆ! ஆ!
சிலுவையண்டை வந்ததினால்
சிறந்த சந்தோஷங் கண்டதினால்
இளைப்படையாது மேலோகம்
ஏகுவேன் பறந்தே வேகம் – சிலுவை

2. இன்பம் சுரந்திடும் திருமொழி கேட்டேன்
இன்னல்கள் மறந்திடுவேன் – ஆ! ஆ!
திருமறை இன்னிசை நாதம்
தேனிலு மினிய வேதம்
தருமெனக்கனந்த சந்தோஷம்
தீர்க்குமென் இதயத்தின் தோஷம் – சிலுவை

3. எவ்வித கொடிய இடருக்கு மஞ்சேன்
இயேசுவைச் சார்ந்து நிற்பேன் – ஆ! ஆ!
அவனியில் வியாகுலம் வந்தால்
அவரையே நான் அண்டிக் கொண்டால்
அலைமிக மோதிடும் அந்நாள்
ஆறுதல் அளிப்பதாய் சொன்னார் – சிலுவை

## பாடல் – 100

*பல்லவி*

**சிலுவை சுமந்த உருவம்**
சிந்தின இரத்தம் புரண்டோடியே
நதிபோலவே பாய்கின்றதே
நம்பி இயேசுவண்டை வா

1. பொல்லா உலக சிற்றின்பங்கள்
எல்லாம் அழியும் மாயை
காணாய் நிலையான சந்தோஷம் பூவில்
கர்த்தாவின் அன்பண்டைவா – சிலுவை

2. ஆத்தும மீட்பைப் பெற்றிடாமல்
ஆத்துமம் நஷ்டமடைந்தால்
லோகம் முழுவதும் ஆதாயமாக்கியும்
லாபம் ஒன்றுமில்லையே – சிலுவை

3. பாவ மனித ஜாதிகளைப்
பாசமாய் மீட்க வந்தார்
பாவப் பரிகாரி கர்த்தர் இயேசுநாதர்
பாவமெல்லாம் சுமந்தார் – சிலுவை

4. நித்திய ஜீவன் வாஞ்சிப்பாயோ
நித்திய மோட்ச வாழ்வில்
தேடி வாரோயோ பரிசுத்த ஜீவியம்
தேவை அதை அடைவாய் – சிலுவை

5. தாகமடைந்தோர் எல்லோருமே
தாகத்தை தீர்க்க வாரும்
ஜீவத் தண்ணீரான கர்த்தர் இயேசுநாதர்
ஜீவன் உமக்களிப்பார் – சிலுவை

## *பாடல் – 101*

**பாவ தோஷம் நீக்கிட**
மீட்பரின் ரத்தம் தானே!
தீய குணம் மாற்றிட
மீட்பரின் இரத்தம் தானே!

***பல்லவி***

மெய்யாம் ஜீவ நதி
பாவம் போக்கும் நதி
வேறே நதியை அறியேன்
மீட்பரின் இரத்தம் தானே

2. என்னைச் சுத்தமாக்கிட
மீட்பரின் ரத்தம் தானே!
மன்னிப்பை நான் பெற்றிட
மீட்பரின் இரத்தம் தானே!

3. வேறே ரட்சிப்பில்லையே!
மீட்பரின் ரத்தம் தானே!
புண்ணியக் கிரியை செல்லாதே
மீட்பரின் இரத்தம் தானே!

4. மோட்ச மார்க்கம் இதுவே
மீட்பரின் ரத்தம் தானே!
ஏசு சுத்த தீர்த்தமே
மீட்பரின் ரத்தம் தானே

## பாடல் - 102

*பல்லவி*

**பாவி யேசுனைத் தானே தேடித் துயர் மேவினார்**
இதைத் தியானியே

*சரணங்கள்*

1. பரம சீயோன் மலைக்கரசர் நற்பாலன்
பரிசுத்த தூதர் பணி செய்யும் பொற்பாதன்
மானிடனாக அவதரித்த தெய்வீகன்
வல்ல பேயை ஜெயித்த மாமனுவேலன். – பாவி

2. தீய பாவிகள் பாவ நித்திரை செய்ய
தேவ கோபாக்கினி அவர் மீதில் பெய்ய
தோஷம் சுமந்து யேசு தேவாட்டுக்குட்டி
துன்பக் கடலில் அமிழ்ந்தாற்றுதல் செய்ய. – பாவி

3. இந்தப் பாத்திரம் என்னை விட்டகலாதோ?
இல்லையானால் உமது இஷ்டமதென்றே
சிந்தை துயரடையச் செப்பினார், அன்றோ
சுவாமி உனக்காய் பிணைப்பட்டதால், அந்தோ! – பாவி

4. கெத்சமனேயில் ஏசு பட்டதை நினையே
கேவலமான உன்தன் பாவத்தை மறவே
ஆத்தும நேசர் பதம் ஆவலாய் பணியே
அன்பின் கரத்தாலுனை அணைப்பார் நிச்சயமே. – பாவி

## பாடல் – 103

### *பல்லவி*

**பாவிக்கு புகலிடம் இயேசு இரட்சகர்**
பாரினில் பலியாக மாண்டாரே

### *அனுபல்லவி*

பரிசுத்தரே பாவமானாரே
பாரமான சிலுவை சுமந்தவரே

### *சரணங்கள்*

1. காட்டிக் கொடுத்தான் முப்பது வெள்ளிக்
காசுக்காகவே கர்த்தன் இயேசுவை
கொலை செய்யவே கொண்டு போனாரே
கொல் கொதா மலைக்கு இயேசுவை – பாவிக்கு

2. கள்ளர் மத்தியில் ஒரு கள்ளன் போல்
குற்றமற்ற கிறிஸ்தேசு தொங்கினார்
பரிகாசமும் பசி தாகமும்
படுகாயமும் அடைந்தாரே – பாவிக்கு

3. கால்கள் கைகளில் ஆணி பாய்ந்திட
கிரீடம் முள்களில் பின்னி சூடிட
இரத்த வெள்ளத்தில் கர்த்தர் தொங்கினார்
இதைக் காணும் உள்ளம் தாங்குமோ – பாவிக்கு

4. உலகத்தின் இரட்சகர் இயேசுவே
உயிர் கொடுத்தார் உயிர்த்தெழுந்தார்
தம்மை நம்பினால் உன்னைக் கைவிடார்
தளராமல் நம்பி ஓடி வா – பாவிக்கு

5. பாவ சாபங்கள் தீரா வியாதிகள்
பல தோல்விகள் உந்தன் வாழ்க்கையில்
கண்டு நீ மனம் கலங்குவதேன்
கர்த்தன் இயேசுவண்டை ஓடிவா – பாவிக்கு

6. வருத்தப்பட்டு பாரம் சுமப்போரே
வாருங்கள் என்னண்டையில் என்கிறார்
இளைப்பாறுதல் தரும் இயேசுவை
இன்று தேடி நாடி நம்பி வா – பாவிக்கு

## பாடல் – 104

**நான் பிரமித்து நின்று பேரன்பின்**
பிரவாகத்தை நோக்கிப் பார்த்தேன்
என் உள்ளத்தில் மெய்ச் சமாதானம்
சம்பூரணமாய் அடைந்தேன்

*பல்லவி*

மா தூய உதிரத்தால்
என் பாவம் நீங்கக் கண்டேன்
இயேசையரின் இரட்சிப்பினால்
நான் ஆறுதல் கண்டடைந்தேன் – மா தூய

2. முன்னாளில் இவ்வாறுதல் காண
ஓயாமல் பிரயாசப்பட்டேன்
வீண் முயற்சி நீங்கின போதோ
என் மீட்பரால் அருள் பெற்றேன் – மா தூய

3. தம் கரத்தை என் மீதில் வைத்து
நீ சொஸ்தமாவாய் என்றனர்
நான் அவரின் வஸ்திரம் தொட
ஆரோக்கியம் அருளினார் – மா தூய

4. எந்நேரமும் புண்ணியநாதர்
என் பக்கத்தில் விளங்குவார்
தம் முகத்தின் அருள் பிரகாசம்
என் பேரிலே வீசச் செய்வார் – மா தூய

## பாடல் – 105

*பல்லவி*

**நெஞ்சமே, கெத்சமேனக்கு**
நீ நடந்து வந்திடாயோ?
சஞ்சலத்தால் நெஞ்சுருகி
தயங்குகின்றார் ஆண்டவனார்

2. ஆத்துமத்தில் வாதை மிஞ்சி
அங்கலாய்த்து வாடுகின்றார்
தேற்றுவார் இங்காருமின்றி
தியங்குகின்றார் ஆண்டவனார்.

3. தேவ கோபத் தீச்சூளையில்
சிந்தை நொந்து வெந்துருகி
ஆவலாய்த் தரையில் வீழ்ந்து
அழுது ஜெபம் செய்கின்றாரே.

4. அப்பா பிதாவே இப்பாத்ரம்
அகலச் செய்யும் சித்தமானால்
எப்படியும் நின் சித்தம்போல்
எனக்காகட்டும் என்கின்றாரே

5. ரத்த வேர்வையாலே தேகம்
மெத்த நனைந்திருக்குதே
குற்றமொன்றும் செய்திடாத
கொற்றவர்க் கிவ்வாதையேனோ?

6. இந்த ஆத்ம வாதையெல்லாம்
எந்தன் பாவத்தால் வந்ததே
சுந்தரம் சேர் யேசுவே என்
தோஷம் பொருத்தாளுமையா

## பாடல் – 106

**நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர்**
நேசிப்பார் பாவியை யாராயினும்
நோக்கிப் பாரேன் கொல்கதாவை
நேசரின் தியாகச் சிலுவையைப் பார் (2)

***பல்லவி***

பார், பார், பார் மனமே
பார சிலுவையில் யார்?
பாவியாம் என்னையும் மீட்டாரே
பாசமுடன் அழைக்கிறார் (2)

2. விண்ணின் மகிமையைப் படைத்தோரை
விண்வெளி வீரரும் தேடினரே
தேவ மைந்தன் தொங்குகின்றார்
தேவாட்டுக்குட்டி பலியானாரே (2) – பார்

3. தேடுங்கள் காண்பீர் என்றுரைத்தோரை
தேடினர் ஞானியர் தேசமெங்கும்
தேவ மைந்தன் தொங்குகின்றார்
தேவாட்டுக்குட்டி பலியானரே (2) – பார்

4. சிந்தினார் இரத்தம் பாவி உனக்காய்
சிந்தித்து பாவி என்றுணர்வாயா
சிறந்த வெற்றி உனக்கெதிரே
சித்தம் வைத்தே உன்னைச் சேர்த்திடுவார் (2)– பார்

## பாடல் – 107

***பல்லவி***

**விந்தை கிறிஸ்தேசு ராசா!**
உந்தஞ் சிலுவை என் மேன்மை

### *அனுபல்லவி*

சுந்தர மிகும் இந்த பூவில்
எந்த மேன்மைகள் எனக்கிருப்பினும் – விந்தை

### *சரணங்கள்*

1. திரண்ட ஆஸ்தி, உயர்ந்த கல்வி
செல்வாக்குகள் மிக விருப்பினும்
குருசை நோக்கி பார்க்க எனக்கு
உரிய பெருமைகள் யாவும் அற்பமே. – விந்தை

2. உம் குருசே ஆசிக்கெல்லாம்
ஊற்றாம் வற்றா ஜீவ நதியாம்
துங்க ரத்த ஊற்றில் மூழ்கித்
தூய்மையடைந்தே மேன்மையாகினேன் – விந்தை

3. சென்னி, விலா, கை, கானின்று
சிந்துதோ! துயரோடன்பு;
மன்னா, இதைப் போன்ற காட்சி
எந்நாளிலுமே எங்கும் காணேன் – விந்தை

4. இந்த விந்தை அன்புக் கீடாய்
என்ன காணிக்கை ஈந்திடுவேன்;
எந்த அரும் பொருள் ஈடாகும்?
என்னை முற்றிலும் உமக்களிக்கிறேன் – விந்தை

## பாடல் – 108

**கல்வாரி அன்பை எண்ணிடும் வேளை**
கண்கள் கலங்கிடுதே
கர்த்தா உம் பாடுகள் நித்தமும் நினைத்தால்
நெஞ்சம் நெகிழ்ந்திடுதே

1. கெத்சமனே பூங்காவிலே கதறி அழும் ஓசை
எத்திசை அந்தோ தொனிக்கின்றதே
எந்தன் மனம் திகைக்கின்றதே
கண்கள் கலங்கிடுதே – கல்வாரி

2. சிலுவையில் அறைந்து வதைத்தனரோ (செந்நிறமாக்கினரோ
அப்போது அவர்க்காய் வேண்டினீரோ
அன்போடு அவர்களைக் கண்டீரன்றோ
அப்பா உம் அன்பு பெரிதே – கல்வாரி

3. என்னையும் உம்மைப்போல் மாற்றிடவே உம் ஜீவன் தந்தீரன்றோ
என் தலை தரை மட்டும் தாழ்த்துகின்றேன்
தந்து விட்டோம் அன்புக் கரங்களிலே
ஏற்று என்றும் நடத்தும் – கல்வாரி

## கிறிஸ்துவின் உயிர்தெழுதல்

### பாடல் – 109

*பல்லவி*

**உயிர்த்தெழுந்தாரே அல்லேலூயா**
ஜெயித்தெழுந்தாரே
உயிருடன் எழுந்த மீட்பர் இயேசென்
சொந்தமானாரே

*சரணங்கள்*

1. கல்லறை திறந்திடவே
கடும் சேவகர் பயந்திடவே
வல்லவர் இயேசு உயிர்த்தெழுந்தாரே
வல்ல பிதாவின் செயலிதுவே – உயிர்

2. மரித்தவர் மத்தியிலே
ஜீவ தேவனைத் தேடுவாரோ?
நீதியின் அதிபதி உயிர்த்தெழுந்தாரே
நித்திய நம்பிக்கை பெருகிடுதே – உயிர்

3. எம்மா ஊர் சீஷர்களின்
எல்லா மன இருள் நீக்கினாரே
எம்மனக் கலக்கங்கள் நீங்கினதாலே
எல்லையில்லாப் பரமானந்தமே – உயிர்

4. மரணமுன் கூர் எங்கே?
பாதாள முன் ஜெய மெங்கே?
சாவையும் நோயையும் பேயையும் ஜெயித்தார்
சபையோரே துதி சாற்றிடுவோம் – உயிர்

5. ஆவியால் இன்றும் என்றும்
ஆ எம்மையும் உயிர்ப்பிக்கவே
ஆவியின் அச்சாரம் எனக்களித்தாரே
அல்லேலுயா துதி சாற்றிடுவோம் – உயிர்

6. பரிசுத்தமாகுதலை
பயத்தோடென்றும் காத்துக்கொள்வோம்
எக்காளம் தொனிக்கையில் மறுரூபமாக
எழும்புவோமே மகிமையிலே – உயிர்

## பாடல் – 110

*பல்லவி*

**யூத ராஜ சிங்கம் உயிர்த்தெழுந்தார்**
உயிர்த்தெழுந்தார் நரகை ஜெயித்தெழுந்தார்

***சரணங்கள்***

1. வேதாளக் கணங்கள் ஓடிடவே
ஓடிடவே உருகி வாடிடவே. – யூத

2. வானத்தின் சேனைகள் துதித்திடவே
துதித்திடவே பரனைத் துதித்திடவே – யூத

3. மரணத்தின் சங்கிலிகள் தெறிபட்டன
தெறிபட்டன நொடியில் முறிபட்டன – யூத

4. எழுந்தார் என்றதொனி எங்குங் கேட்குதே
எங்குங் கேட்குதே பயத்தை என்றும் நீக்குதே – யூத

5. மாதர் தூதரைக் கண்டகமகிழ்ந்தார்
அகமகிழ்ந்தார் பரனை அவர் புகழ்ந்தார் – யூத

6. மரித்த கிறிஸ்து இனி மரிப்பதில்லை
மரிப்பதில்லை இனி மரிப்பதில்லை – யூத

7. கிறிஸ்தோரே நாமவர் பாதம் பணிவோம்
பாதம் பணிவோம் பதத்தைச் சிரமணிவோம் – யூத

## பாடல் – 111

**உயிர்த்தெழும் காலை தன்னில்**
ஆவி தேகம் கூடவும்
துக்கம் நீங்கும் ஓலம் ஓயும்
நோவும் போம்

2. ஆவி தேகம் சிறு போது
நீங்க, தேகம் ஓய்வுறும்
தூய அமைதியில் தங்கி
துயிலும்

3. பாதம் உதயத்தை நோக்கி
சோர்ந்த தேகம் துயிலும்
உயிர்த்தெழும் மாட்சி நாளின்
வரைக்கும்.

4. ஆவியோ தியானம் மூழ்கி
ஆவலாய் செய் விண்ணப்பம்
கீதமாய் உயிர்க்கும் நாளில்
பாடிடும்.

5. சேர்ந்த ஆவி தேகமதை
அப்பால் பிரியாதொன்றும்
கிறிஸ்து சாயல் தன்னில் கண்டு
பூரிக்கும்

6. உயிர்த்தெழும் நாளின் மாட்சி
யாரால் சொல்லிமுடியும்?
நித்திய காலம் மா சந்தோஷம்
நிலைக்கும்.

7. ஆ அப்பாக்கிய மாட்சி நாளில்
மாண்டோர் உயிர்த்தெழுவார்
பெற்றோர் பிள்ளை சுற்றத்தாரும்
கூடுவார்.

8. நின் சிலுவை பற்றும் எம்மை
சாவில் நியாயத் தீர்ப்பிலும்
காத்து மா அக்கூட்டம் சேரும்
இயேசுவே.

## கிறிஸ்துவின் வருகை

### பாடல் - 112

*பல்லவி*

**அந்த நாள் இன்ப இன்ப இன்ப நாள்**
எங்கள் இயேசு ராஜன் வானில் தோன்றும் நாள்
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா

*சரணங்கள்*

1. இந்தப் பூமி வெந்துருகி சாம்பலாகுமே
சிந்தித்து மனந்திரும்பி அவரை அண்டிக்கொள்
விரைவுடன் ஓடிவா விண்ணிலே சேரவே
வேகமாய் வேகமாய் வேகமாய் - அந்த நாள்

2. கஷ்டம் நஷ்டம் பட்டப்பாடு பறந்து போகுமே
பஞ்சம் பசி தாகமுமே மறைந்து போகுமே
வாதை நோய் துன்பமும் வருத்தங்கள் யாவுமே
நீங்குமே நீங்குமே நீங்குமே - அந்த நாள்

3. ஆட்டுக்குட்டி பின்னே போவார் பாட்டுப் பாடுவார்
பரவசங்கள் சூழ்ந்து மிக ஆட்டம் ஆடுவார்
ஆனந்தம் என்றுமே ஆர்ப்பரிப்போம் அவரையே
மகிழுவோம் மகிழுவோம் மகிழுவோம் - அந்த நாள்

4. புதிய வானம் புதிய பூமி தோன்றும் நாளிலே
நித்திய காலம் நாமும் அங்கே வாழ்வோமென்றுமே
தூதர்கள் யாவரும் சேவைகள் புரிவாரே
என்றுமே என்றுமே என்றென்றுமே - அந்த நாள்

5. பாவமற்ற பரிசுத்தரின் ராஜ்யமதிலே
பாலர்கள் போல நாமும் பார்க்கப்படுவோமே
பாலுடன் தேனுமாய்ப் பழரசம் பாங்குடன்
பருகுவோம் பருகுவோம் பருகுவோம் - அந்த நாள்

## பாடல் – 113

**இந்தக் கடைசி நாளில் சந்தோஷம் நம்பிக்கையுண்டு**
ஆச்சர்யமாம் சத்தியமாய் ராஜாதி ராஜாவாய் ஆளுவார் – அவர்

### *பல்லவி*

அவர் வருவார் சீக்கிரமாய் வருவார்
ஆவலோடு எதிர்பார்க்கிறோம்
காலையிலோ மாலை நேரத்திலோ
வரவே வருவார் அறிவோம்

2. வானத்திலும் பூமியிலும் நாம் காணும் அடையாளங்கள்
அவர் வருகை சமீபம் எனவே சாட்சியாய் கூறுது – அவர்

3. கிறிஸ்துவுக்குள் மரித்த கணக்கில்லாத பக்தர்கள்
ஆகாயத்தில் பறந்துபோய் அவருடன் என்றென்றும் ஜீவிப்பார் –அவர்

4. உயிரோடிருக்கிற நாமும் நம் தேவனைச் சந்திப்போமே
இந்த நம்பிக்கை வீண்ணல்லவே நாம் ஒருவர் ஒருவரை தேற்றுவோம்
– அவர்

## பாடல் – 114

### *பல்லவி*

**இயேசு ராஜன் வருவார் தூதரோடும் வருவார்**
பக்தரை வானத்தில் சேர்த்திடவே – நான்
ஜோதியாய் அவர் முகம் கண்டிடுவேன் பின்னும்
ஜெய கம்பீரம் கொண்டுளம் பொங்கிடுமே

1. மணவாளனோடு மணவாட்டியாம் சபை
மங்களமாய் கவி சாற்றிடுமே அப்போ
மாட்சிமையோடு நாம் பாடிடுவோம் – அவர்
நேசத்தின் ஆழத்தை ருசித்திடுவோம் – இயேசு

2. முத்திரையிட்ட சுத்தர்கள் வெள்ளையங்கி தரித்து
கர்த்தர் சமூகத்தில் நின்றிடுவார் அதில்
சேர்ந்திடுவேன் நானும் பாடிடுவேன் – அன்று
பொற்கிரீடம் தரித்தாடிடுவேன் – இயேசு

3. காதலித்தேன் நான் காசினியின் இன்பம் விட்டு
கர்த்தரோடென்று முறவாடிட – அங்கு
கனக மணவறை ஜொலித்திடுமே – அப்போ
கர்த்தராம் யேசுவில் சுகிப்போம் – இயேசு

4. வானத்தின் எக்காளம் தொனித்திடும் சமயத்தில்
சுத்தர்கள் யாவரும் பறந்திடுவார் – அப்போ
அத்தனின் கலியாண விருந்ததிலே நாமும்
நித்தம் அவரோடார்ப்பரிப்போம் – இயேசு

## பாடல் – 115

**இயேசு கிறிஸ்து வருகிறார், வருகிறார், வருகிறார்,**
இயேசு கிறிஸ்து வருகிறார், அதிசீக்கிரமாய்
அதிசீக்கிரமாய், அதிசீக்கிரமாய்
இயேசு கிறிஸ்து வருகிறார் அதிசீக்கிரமாய்

2. சந்திக்க நீ ஆயத்தமா ..................
இன்று இயேசு வந்தால் ..................

3. ஆயத்தப்படு இல்லையென்றால் ..................
கிருபை நாளில் ....................

4. ஆயத்தமுள்ளோன் பக்தியுள்ளோன் .................
வருகையை நேசிப்பவன் ....................

5. ஆயத்த முள்ளோன் விழிப்புள்ளோன்
வருகையை நேசிப்பவன் ....................

6. ஆயத்தமுள்ளோன் புத்தியுள்ளோன் ............
வருகையை நேசிப்பவன் ......................

7. ஆயத்தமுள்ளோன் சுத்தமுள்ளோன் ...........
வருகையை நேசிப்பவன் ...................

8. பாவ அவயங்களை அழிப்பவன் ..............
வருகையை நேசிப்பவன் ...........

9. ஆயத்தமுள்ளோன் பொறுமையுள்ளோன்
வருகையை நேசிப்பவன் ...................

## பாடல் – 116

**இராஜாதி இராஜன் இயேசு வருவார்**
சந்திக்க ஆயத்தமா?
வருவேன் என்றவர் சீக்கிரம் வருவார்
சந்திக்க ஆயத்தமா?

***பல்லவி***

கேள்! கேள்! மானிடரே
சந்திக்க ஆயத்தமா?
இராஜாதி இராஜனாய் வந்திடுவார்
சந்திக்க ஆயத்தமா?

2. பல்லாயிரம் மக்கள் ஆயத்தமே
சந்திக்க ஆயத்தமா?
பரலோக வாழ்வின் நல்பாக்கியத்தை
சந்திக்க ஆயத்தமா? – கேள்! கேள்!

3. குத்தினோர் யாவரும் கண்டிடுவார்
சந்திக்க ஆயத்தமா?
கத்திக் கதறியே தாழிடுவார்
சந்திக்க ஆயத்தமா? – கேள்! கேள்!

4. உலகமனைத்துமே கண்டிடுமே
சந்திக்க ஆயத்தமா?
பரிசுத்தவான்களின் போர் நிற்குமே
சந்திக்க ஆயத்தமா? – கேள்! கேள்!

## பாடல் – 117

***பல்லவி***

**எழும்பு சீயோனே! இயேசு இதோ வருகிறார் – இயேசு**

1. இயேசுவின் வருகை மிக சமீபமாகுதே – இனி
மோசந்தான் அசதியாக ஜீவித்து வந்தால் – பின்பு
அலறிடுவாயே இயேசு கைவிடும்போது! – வேகம்

2. பூலோக நேசம் உன்னில் சற்றும் வேண்டாமே
மேலோகம் பார்த்துப் பார்த்து லோகத்தை வெறு – இது
மாய லோகமே உன்னை மோசம் போக்குமே! – வேகம்

3. பாவங்கள் இருதயத்தில் ஏதேனுண்டோ – சிறு
பாரங்கள் உன்னைக் கீழே தள்ளிவிடுமோ – உந்தன்
இருதயத்தை நீ பரிசுத்தமாக்காயோ? – வேகம்

4. லௌகீகக் கவலையோடும் பெருந்தீனியும் – வெறு
மாமிச சுபாவத்தோடு நான் என்பதுமே – உனை
மோசம் போக்குமே உந்தன் ஆசை அழியுமே! – வேகம்

5. மேகத்தில் இயேசு ராஜன் வேகம் வரவே பரம்
ஏறுவார் பரிசுத்தர் வேறு ரூபமாய் – அன்று
மேகமேறிட நீயும் ஆயத்தந்தானா? – வேகம்

6. ஆகாயத்தில் நடக்கும் கல்யாணத்திலே – சுத்தர்
பாடுவார் அல்லேலூயா செட்டை அடித்து – அப்போ
அங்கிருப்பாயோ பூவில் ஓடி ஒளிப்பாயோ? – வேகம்

7. அந்தி கிறிஸ்து அரசாட்சி செய்யும் வேளையில் – கோப
அக்கினி பூமியில் சொரியும் வேளையில் – நீயும்
அகப்படாமலே இன்று தப்பிக்கொள்வாயோ? – வேகம்

## பாடல் – 118

**எக்காள சத்தம் வானில் முழங்கவே**
பறந்திடுவேன் நானும் ஆ – ஆ!

2. சுத்தரோ யொன்றாய்க் கீதங்க்ள பாடிக்
கர்த்தரையே போற்றிடுவேன் ஆ – ஆ!

3. தினமும் கீதங்கள் பாடி மகிழ்வேன்
மனமாற வாழ்த்திடுவேன் ஆ – ஆ!

4. இயேசு மணாளன் வேகம்தான் வந்து
ஏற்றுக் கொள்வாரென்னை ஆ – ஆ!

5. லோகத்தில் நிந்தை பரிகாசம் வந்திடும்
சோர்ந்திடாதே மனமே ஆ – ஆ!

6. கல்வாரிக் குருசில் காணும் மா அன்பு
யாரால் வர்ணிக்கலாகும் ஆ – ஆ!

7. மணவாளன் இயேசுவுடன் சபை நிற்கும் காட்சி
வர்ணிப்பதும் இயலா ஆ – ஆ!

## பாடல் – 119

*பல்லவி*

**எக்காள சத்தம் வானில் தொனித்திடவே**
எம் இயேசு மாராஜனே வந்திடுவார்

***சரணங்கள்***

1. அந்த நாள் மிக சமீபமே
சுத்தர்கள் யாவரும் சேர்ந்திடவே
தேவ எக்காளம் வானில் முழங்க
தேவாதி தேவனை சந்திப்போமே

2. கர்த்தரின் வேளையை நாம் அறியோம்
கர்த்தரின் சித்தமே செய்திடுவோம்
பலன்கள் யாவையும் அவரே அளிப்பார்
பரமனோடென்றும் வாழ்ந்திடுவோம்

3. கண்ணிமை நேரத்தில் மாறிடுவோம்
விண்ணிலே யாவரும் சேர்ந்திடுவோம்
கண்ணீர் கவலை அங்கே இல்லை
கர்த்தர் தாமே வெளிச்சமாவார்

## பாடல் – 120

***பல்லவி***

**குதூகலம் நிறைந்த நன்னாள்**
நடுவானில் மின்னிடுமே
இதுவரை இருந்த துன்பமில்லை
இனி என்றுமே ஆனந்தம்

1. தள கர்த்தனாம் இயேசு நின்று
யுத்தம் செய்திடுவார் நன்று
அவர் ஆவியினால் புது பெலனடைந்து
ஜெயகீதங்கள் பாடிடுவோம் – குதூகலம்

2. புவி மீதினில் சரீர மீட்பு
என்று காண்போம் என ஏங்கும்
மன மகிழ்ந்திடவே அவர் வந்திடுவார்
மணவாட்டியாய்ச் சேர்த்திடவே – குதூகலம்

3. ஜெப விழிப்புடன் வாஞ்சையாக
அவர் வருகையை எதிர் நோக்கி
நவ எருசலேமாய் தூயாலங்கிர்தமாய்
நாம் ஆயத்தமாகிடுவோம் – குதூகலம்

4. ஜீவ ஒளி வீசும் கற்களாக
சீயோன் நகர்தனிலே சேர்க்க
அருள் சுரந்திருந்தார் நாமம் வரைந்திருந்தார்
அவர் மகிமையில் ஆர்ப்பரிப்போம் – குதூகலம்

5. தேவ தூதர்கள் கானமுடன்
ஆரவார தொனி கேட்கும்
அவர் கிருபையினால் மறுரூபமாக
நம்மை இனிதுடன் சேர்த்திடுவார் – குதூகலம்

## பாடல் – 121

**வரவேணும், என தரசே,**
மனுவேல், இஸரேல் சிரசே.
அருணோதயம் ஒளிர் பிரகாசா,
அசரீரி ஒரே சருவேசா! – வர

### *சரணங்கள்*

1. வேதா கருணாகரா, மெய்யான பராபரா
ஆதார நிராதரா அன்பான சகோதரா
தாதாவும் தாய் சகலமும் நீயே
நாதா, உன் தாபரம் நல்குவாயே – வர

2. படியோர் பவ மோசனா, பரலோக சிம்மாசனா
முடியாதருள் போசனா, முதன் மாமறை வாசனா
இடையர் குடிலிடை மேவி எழுந்தாய்
இமையவர் அடி தொழு மேன்மையின் எந்தாய். – வர

3. வானோர் தொழும் நாதனே, மறையாகம போதனே
கானாவின் அதீதனே, கலிலேய வினோதனே
ஞானாகரமே, நடு நிலை யோவா
நண்பா, உனத நன்மையின் மகா தேவா! – வர

## பாடல் – 122

**தேவசேனை வானமீது கோடி கோடியாகத் தோன்றும்**
பலகோடித் திரள் கூடிக் குகை தேடி வேகம் ஓடும்
விண் மீன்கள் இடம் மாறிப் பாரெங்கும் வந்து கொட்டும்
நானோ ஆடி மிகப்பாடி என் நேசருடன் சேர்வேன்

### *பல்லவி*

அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா (2)

2. ஐந்து கண்டம் தன்னில் ஆளும் ஆட்சியாவும் அற்றுப்போகும்
இருள் சூழும் இடி முழங்கும் கூச்சல் கேட்டு கண்ணீர் சிந்தும்
தூயர் கூட்டம் சுத்த உள்ளம் சாட்சி பாடல் எங்கும் கேட்கும்
நானும் ஆடி மிகப்பாடி என் நேசருடன் சேர்வேன் – அல்

3. கடல் குமுறும் கரை உடையும் கப்பல் கவிழும் பெரும் நாசம்
போக்குவரத்து யாவும் நிற்கும் இனி உலகம் என்பதில்லை
வாக்குமாறா வேதம் கூறும் வார்த்தை யாவும் நிறைவேறும்
நானோ ஆடி மிகப்பாடி என் நேசருடன் சேர்வேன் – அல்

## பாடல் – 123

**நம் இயேசுவின் வருகை இன்று**
வெகு சமீபமாய்த் தெரிகின்றது
உன் வாழ்க்கையில் ஒரு திருப்பம்
வெகு அவசியமாகின்றது

*பல்லவி*

ஓ மானிடரே இதைச் சிந்திப்பீரே
இயேசு கிறிஸ்து வருகின்றார்
ஓ மானிடரே இதைச் சிந்திப்பீரே
இயேசு கிறிஸ்து வருகின்றார்.

2. பாவத்தில் புரளுவதும்
மா சாபத்தில் முடியும் அன்று
உன் வாழ்க்கையில் ஒரு திருப்பம்
மிக அவசியமாகின்றது – ஓ மானிடரே

3. தேவனைத் தள்ளுபவர்
மா வேதனை அடைவார் அன்று
உன் வாழ்க்கையில் ஒரு திருப்பம்
மிக அவசியமாகின்றது – ஓ மானிடரே

4. அன்பினால் வரும் அழைப்பு
நல்லதோர் எச்சரிப்பு
உன் வாழ்க்கையில் ஒரு திருப்பம்
மிக அவசியமாகின்றது – ஓ மானிடரே

5. தயவாக ஓடியே வா
கிருபையின் வாசல் உண்டு
உன் வாழ்க்கையில் ஒரு திருப்பம்
மிக அவசியமாகின்றது – ஓ மானிடரே

## பாடல் – 124

**இயேசு மீண்டுமாக வந்திடும் நாள் சமீபமே**
தாசர் ஆவலோடு அவர்க்காய் காத்திடுவாரே
ஜீவ மார்க்கத்திலே முடிவுவரை நடத்திடுவாரே
ஏக பாலனை அந்நாளிலே பெற்றிடுவாரே

இயேசு வந்திடுவாரே மீண்டும் வந்திடுவாரே
வேகமாக மேகமீது வந்திடுவாரே
ஜீவ மார்க்கத்திலே முடிவுவரை சென்றிடுவோமே
ஏக பலனை அந்நாளிலே பெற்றிடுவோமே

2. இயேசு மீண்டுமாக வந்திடும் நாள் வரையிலே
ஆத்துமாக்களை ஆதாயம் செய்திடுவோமே
மின்னல் வானத்திலே சடுதியாக தோன்றுவது போல்
மன்னர் இயேசு இமைப்பொழுதே தோன்றிடுவாரே – இயேசு

3. இயேசு மீண்டுமாக வந்திடும் நாளறியோமே
புத்தியுள்ள கன்னிகைபோல் விழித்திருப்போமே
எஜமானும் நம்மை உத்தம ஊழியனாக
நிச்சயமாகக் கண்டு பாக்கியம் அளிப்பாரே – இயேசு

## பாடல் – 125

### *பல்லவி*

**பிரதான தூதன் எக்காளம் முழங்க**
பரமன் இயேசு வருவார் (2)

### *அனுபல்லவி*

சாயங்காலத்திலோ, நடுராவினிலோ
சேவல் கூவிடும் நேரத்திலோ
அதிகாலையிலோ எந்த வேளையிலோ
பரமன் இயேசு வருவார்

### *சரணங்கள்*

1. இருவர் வயலில் இருப்பார்
இரண்டு ஸ்திரிகள் எந்திரம் அரைப்பார்
ஒருவர் கைவிடப்படுவார்
ஏற்றுக்கொள்ளப்படுவார் ஒருவர் – சாயங்

2. நோவா காலத்தின் சம்பவம் போல்
நடந்திடும் அந்த நாட்களிலே
புசித்தும் குடித்தும் பெண் கொண்டும்
பலர் அசந்து வெறித்திருப்பார் – சாயங்

3. லௌகீகக் கவலைகளினாலும்
இலட்சை மிகுந்த வெறியினாலும்
எம் இதயம் பாரம் அடையாமல்
எச்சரிக்கையுடன் காத்திருப்போம் – சாயங்

4. இரவும் பகலும் விழிப்பாய்
இருதயம் நொருங்கி ஜெபிப்போம்
கற்புள்ள கன்னிகையாக நாமும்
கர்த்தர் வருகைக்குக் காத்திருப்போம் – சாயங்

5. தவிக்கும் உலகம் அந்த நாளில்
தலைகளை உயர்த்தி நடப்போம்
வருகை நெருங்க கர்த்தர் இயேசு
வாசற்படியில் வந்து நிற்கிறார் – சாயங்

## பாடல் – 126

***பல்லவி***

**மேகமீதில் இயேசு சுவாமி**
வேகம் வாராரே

***அனுபல்லவி***

ஆயத்தமுள்ளோரை ஆகாயஞ் சேர்க்கவே
அவர் வாராரே

1. ஆண்டவர் தாமே ஆர்ப்பரிப்போடே
அவனியில் வாராரே
மீண்டவரோ மேலோகமே செல்ல
மேதினியை விடுவார் – மேகமீதில்

2. கிறிஸ்துவுக்குள் மரித்தோரெல்லாம்
கிளம்பியே யெழும்பிடுவார்
மரிக்காதிருக்கும் பரிசுத்தரெல்லாம்
மறைந்தே போவாரே – மேகமீதில்

3. பாடுபட்டோருக்குப் பலனளிப்பாரே
பாடுபட்டவர் தாமே
கூடும் நமக்கோ குறைவில்லாப் பலனையே
கூவியே கொடுத்திடுவார் – மேகமீதில்

4. அவருரைத்த அடையாளங்களெல்லாம்
தவறாமல் நடக்கின்றதே
அவர் வரும் வேளையை எவருமே அறியார்
ஆண்டவரே யறிவார் – மேகமீதில்

5. ஆயிரம் வருஷம் ஆளுகை செய்வார்
ஆண்டவர் இயேசு தாமே
நீதி சமாதானம் நிறைந்தேயிருக்கும்
ஜோதியின் ஆளுகையில் – மேகமீதில்

6. அல்லேலூயா கீதமே பாடி
அகமகிழ்ந்தாடிடுவோம்
வல்லவர் வரும் வேளையுமிதோ
மெல்லவே நெருங்கிற்றே – மேகமீதில்

## பாடல் – 127

**வானிலோர் திருநாள் உண்டே**
வானிலோர் திருநாள்

1. வான் முடி மன்னன் தான் வருவாரே அன்றும் அன்றும்
வருவாரே எனக் காறுதலவரே
விரைவோடு செல்லுவோம் ஓரிமைப் பொழுதில்
அரசன் இயேசுவுடனே ஆ, ஆ! – வானி

2. வானம் முழங்குமே
வருவாரே வெகு சேனைகளுடனே
ஆர்ப்பரித்திடுவோம், ஆனந்தமுறுவோம்
ஆகாய மீதிலே ஆ, ஆ! – வானி

3. தூதர்கள் தொனியுடன் நாதங்கள் கேட்குமே அன்றும் அன்றும்
துதிப்போமே போற்றியே கீதங்கள் பாடுவோம்
தூயனைப் போற்றியே கீதங்கள் பாடுவோம்
நேயனைச் சேருவோம் ஆ, ஆ! – வானி

4. முள்முடி நமக்காய் அணிந்தவர் திருமுகம் காண்போம்
காண்போம் நம் நாதரை விரைவினில் காண்போம்
நொடிதனில் செல்லுவோம், அவரடி பணிவோம்
அவரையே சேவிப்போம் ஆ, ஆ! – வானி

5. ஆனந்தம் முழங்கும் ஆனந்த புரியில் எங்கும் எங்கும்
துலங்கும் அவர் ஜோதியே அங்கும்
அவர் பெயர் ஓங்குமே அவர் துதி தங்குமே
அன்பரின் நாவிலே ஆ, ஆ! – வானி

## பாடல் – 128

**நியாயத்தீர்ப்பின் நாளான அந்தநாள்**
மகா பெரிய நாள் – இந்த
பூவிலுள்ளோர் யாவருமே நடுங்கும் நாள்
அந்த நாள்!

1. வலது புறத்தில் நிற்போரெல்லாம் ஆசிபெற்றிட
இடது புறத்தில் நிற்போரெல்லாம் சபிக்கவே பட – நியா

2. இம்மையில் இயேசுவுக்காய் ஜீவிப்பாயானால்
நன்மையாலே உன்னை அவர் நிரப்பிடுவாரே – நியா

3. சீக்கிரமாய் வருவேன் என்ற இயேசு நாதரே
சிங்காசனத்தில் வீற்றிருந்து நியாயத் தீர்ப்பாரே – நியா

4. விசுவாசிகள் பரலோகத்தில் சேர்க்கப்படுவாரே
பிசாசின் மக்கள் நரகலோகத்தில் தள்ளப்படுவாரே – நியா

## பாடல் – 129

**தேவன் இயேசு வருவார் – நம்**
தேவை யாவும் அறிவார்
காலம் அறிந்தே வருவார் – நம்மைக்
கண் போலக் காத்து அருள்வார்

***சரணங்கள்***

1. பிள்ளை அப்பமதைக் கேட்கும்போது
தந்தை கல்லினைத் தருவதுண்டோ?
முட்டைக்கு பதிலாய் பாம்பினையும்
மூடன் எவனும் தருவதுண்டோ?
விண்ணவராம் இயேசுவே நம் தந்தையல்லவா
வேண்டுவன தருவதும் மிக உறுதியல்லவா? – ஆகாகா – தேவன்

2. நீங்கள் உள்ளத்திலே கவலை கொள்ளாமல்
உங்கள் தேவனுக்குத் தெரிவியுங்கள்
கானக புஷ்பங்களைப் போஷிப்பவர்
கருத்துடன் நம்மையும் காத்திடுவார்
காலம் வரும் வாழ்வும் வரும் உறுதி கொள்ளுவோம்
கர்த்தரவர் பாதத்தில் காத்து இருப்போம் – ஆகாகா – தேவன்

## கிறிஸ்துவின் நம்பிக்கை

### பாடல் - 130

**அற்புதம் அற்புதம் இதுதான்**
அண்ணல் இயேசுவின் மகிமைதான்
ஆனந்தமாக நாம் ஆர்ப்பரிப்போம்
அல்லேலூயா பாடிடுவோம் - அற்புதம்

1. ஏசாயாவின் வாக்கு நிறைவேற
ஏசுபரன் இனி வந்திடுவார்
எனக்காக உயிர் தந்தவர்
இத்தரணியை ஆண்டிடுவார் - அற்புதம்

2. ஆட்டுக்குட்டியின் இரத்தம் சிந்தக்கண்டீர் - இனி
அல்பா ஒமேகா நிற்கக் காண்பீர்
நியாயம் தீர்க்க வந்திடுவார்
நித்திய ஜீவனையும் தருவார் - அற்புதம்

3. பரிசுத்த ஸ்தலத்தில் இடமுண்டு - அங்கே
பக்தர்கள் மத்தியில் பங்குண்டு
இன்னல்கள் இனி இல்லை
இன்பமாக வாழ்ந்திடுவோம் - அற்புதம்

### பாடல் - 131

*பல்லவி*

**ஆச்சரியமே! அதிசயமே**
ஆண்டவர் செயல்கள் ஆதி பக்தனிடம்

*சரணங்கள்*

1. செங்கடல் இரண்டாய்ப் பிரிந்து போக
சொந்த ஜனங்களைக் கடத்தினாரே
இஸ்ரவேலின் துதிகளாலே
ஈன எரிகோ வீழ்ந்ததுவே – ஆச்சரியமே

2. ஏழு மடங்கு எரி நெருப்பில்
ஏழை தம் தாசருடன் நடந்தார்
தானியேலைச் சிங்கக் கெபியில்
தூதன் துணையால் காத்தனரே – ஆச்சரியமே

3. பனி மழையை நிறுத்தினாரே
பக்தன் எலியா தன் வாக்கிலே
யோசுவாவின் வார்த்தையாலே
யேகும் சூரியன் நின்றதுவே – ஆச்சரியமே

4. மதிலைத் தாண்டி சேனைக்குள் பாயும்
மாபெலன் தேவனிடம் அடைந்தான்
வீழ்த்தினானே கோலியாத்தை
வீரன் தாவீது கல் எறிந்தே – ஆச்சரியமே

5. நம் முற்பிதாக்கள் நம்பின தேவன்
நேற்றும் இன்றும் என்றும் மாறிடாரே
தம்மை நோக்கி வேண்டும் போது
தாங்கி நம்மை ஆதரிப்பார் – ஆச்சரியமே

## பாடல் – 132

*பல்லவி*

**இயேசுதானே அதிசய தெய்வம்**
என்றும் ஜீவிக்கிறார் நம் தெய்வம்

***சரணங்கள்***

1. அதிசயமே அவர் அவதாரம்
அதிலும் இனிமை அவர் உபகாரம்
அவரைத் தெய்வமாகக் கொள்வதே பாக்கியம்
அவரில் நிலைதிருப்பதே சிலாக்கியம் – இயேசு

2. இருவர் ஒருமித்து அவர் நாமத்திலே
இருந்தால் வருவார் இருவர் மத்தியிலே
அந்தரங்கத்தில் அழுது நீ ஜெபித்தால்
அவர் கரத்தால் முகம் தொட்டு துடைப்பார் – இயேசு

3. மனிதன் மறு பிறப்படைவதவசியம்
மரித்த இயேசுவால் அடையும் இரகசியம்
மறையும் முன்னே மகிபனைத் தேடு
இறைவனோடு பரலோகம் சேரு – இயேசு

4. ஆவியினால் அறிந்திடும் தெய்வம்
பாவிகளை நேசிக்கும் தெய்வம்
ஆவியோடு உண்மையாய் தொழுதால்
தேவசாயலாய் மாறி நீ மகிழ்வாய் – இயேசு

## பாடல் – 133

**இயேசுவை நம்பினோர் மாண்டதில்லை**
என்னென்ன துன்பங்கள் நேரிட்டாலும்
சிங்கத்தின் வாயின்றும் இரட்சிப்பார்
பங்கம் வராதுன்னை ஆசீர்வதிப்பார்

***பல்லவி***

நெஞ்சமே நீ அஞ்சிடாதே
நம்பினோரைக் கிருபை சூழ்ந்திட
இம்மட்டும் காத்தவர் இம்மானுவேல்
இன்னமும் காத்துன்னை நடத்துவார்

2. நாசியில் சுவாசமுள்ள மாந்தரை
நம்புவதில்லை தம் ஆலோசனை
கோர பயங்கர காற்றடித்தும்
கன்மலைமேல் கட்டும் வீடு நிற்கும் – நெஞ்சமே

3. இயேசுவின் நாமத்தில் ஜெயம் பெற்றே
ஏகிப் பறந்திடும் பக்தரோடே
சேர்ந்தென்றும் வாழ்த்திடும் ஐக்கியத்திலே
ஜெய கம்பீரமே உனக்குண்டே – நெஞ்சமே

4. விஸ்வாசத்தால் நீதிமான் பிழைப்பான்
வறட்சி மிகுந்த காலத்திலும்
பக்தன் வலது பாரிசத்திலே
கர்த்தன் தாம் நிற்பதால் அசைந்திடான் – நெஞ்சமே

5. ஏழை உன் ஆத்துமா பாதாளத்தில்
என்றும் அழிந்திட விட்டு விடார்
தம் சமூகம் நித்திய பேரின்பமே
சம்பூரண ஆனந்தம் பொங்கிடுமே – நெஞ்சமே

6. அங்கே அநேக வாசஸ்தலங்கள்
அன்பின் பிதா வீட்டில் ஜொலிக்குதே
நேர்த்தியான இடங்களில் உந்தன்
நித்திய பங்கு கிடைத்திடுமே – நெஞ்சமே

## பாடல் – 134

*பல்லவி*

**இயேசு என் ஆண்டவா**
உமக்காய் ஜீவிப்பேன் (2)

### *சரணங்கள்*

1. சோர்பு நேரிட்டாலும்
சோதனை வந்தாலும்
மற்றோர் வெறுத்தாலும்
சாத்தான் எரித்தாலும் – இயேசு

2. உலகம் பகைத்தாலும்
உற்றார் கைவிட்டாலும்
எல்லாம் அழிந்தாலும்
என் ஜீவன் போனாலும் – இயேசு

3. காலங்கள் மாறினாலும்
காரிருள் தோன்றினாலும்
கால்கள் தளர்ந்தாலும்
காவலர் கைவிட்டாலும் – இயேசு

4. வாலிபம் மாயையே
வாழ்க்கையும் மாறுமே
வாழ்வெல்லாம் இயேசுவே
வாழ்வோம் இயேசுவுடன் – இயேசு

## பாடல் – 135

### *பல்லவி*

**இதோ மனுஷரின் மத்தியில் தேவாதி தேவனே**
வாசஞ் செய்கிறாரே!

### *சரணங்கள்*

1. தேவன் தாபரிக்கும் ஸ்தலமே
தம் ஜனத்தாரின் மத்தியிலாம்
தேவன் தாம் அவர்கள் – தேவனாயிருந்தே
கண்ணீர் யாவையும் துடைக்கிறாரே! – இதோ

2. தேவ ஆலயமும் அவரே
தூய ஒளி விளக்கும் அவரே
ஜீவனாலே தம் ஜனங்களின் – தாகம் தீர்க்கும்
சுத்த ஜீவ நதியும் அவரே! – இதோ

3. மகிமை நிறை பூரணமே
மகா பரிசுத்த ஸ்தல மதுவே
என்றும் துதியுடனே – அதன் வாசல் உள்ளே
எங்கள் பாதங்கள் நிற்கிறதே! – இதோ

4. சீயோனே உன் வாசல்களை
ஜீவ தேவனே நேசிக்கிறார்
சீர் மிகுந்திடு மிச் – சுவிசேஷந்தனை
கூறி உயர்த்திடுவோம் உனையே! – இதோ

5. முன்னோடியாய் இயேசு பரன்
மூலைக் கல்லாகி சீயோனிலே
வாசஞ் செய்திடும் உன்னத சிகரமதை
வாஞ்சையோடு நாம் நாடிடுவோம் – இதோ

## பாடல் – 136

**என் ஜீவன் சுகம் பெலன் யாது?**
என் இயேசுவே யல்லாமலேது
நான் நோக்கும் போதெல்லாம்
இயேசுவையல்லாமல் வேறெதுங் காணேன்

***பல்லவி***

கண்டு களிப்பேன் நானே
கண் குளிரப் பார்ப்பேனே
கதி பெறுவேன், நான் கதி பெறுவேன்
அல்லேலூயா! அல்லேலூயா! – ஓ

ஆமென்! ஆமென் சுவாமி ஏசு நாதரோடு
அல்லும் பகலுமாயவர் திருப்பாதமதி லமர்ந்திடுவேன்
அறிந்திடுமோ லோக மறிந்திடுமோ – லோக
மறிந்திடுமோ – லோகம்
அறிந்திட்டால் இயேசுவைக் கண்டானந்திக்குமே

2. ஈலோகக் காட்சி எல்லாம் மாய்கை!
மேலோகம் பார்க்கவே என் ஆசை!
காணுதே மனம் காணுதே என் மனம்
காருண்ய இயேசுவை
நித்திய ஜீவியத்திலே
அத்தனோடுறவாட
அருள் புரிந்தார், இயேசு அருள் புரிந்தார்
அல்லேலூயா அல்லேயா! – ஓ
ஆனந்தமே! பரமானந்தமே, தேவ
ஆலயம் என் அகம் ஆனதினாலே துதி ஆனந்தமிதே
அகமகிழ்வேன், நானே அகமகிழ்வேன் – நானே
இயேசுவோடென்றும் மகிழ்ந்திடுவேன்!

## பாடல் – 137

**எனக்கொத்தாசை வரும் பர்வதம் நேராய்**
கண்களை ஏறெடுப்பேன்

### *பல்லவி*

1. வானமும் பூமியும் படைத்த
வல்ல தேவனிடமிருந்து
எண்ணுக்கடங்கா நன்மைகள் வருமே
என் கண்கள் ஏறெடுப்பேன் – எனக்

2. மலைகள் பெயர்ந்தகன்றிடினும்
நிலைமாறி புவியகன்றிடினும்
மாறிடுமோ அவர் கிருபை எந்நாளும்
ஆறுதல் எனக்கவரே – எனக்

3. என் காலைத் தள்ளாட வொட்டார்
என்னைக் காக்கும் தேவன் உறங்கார்
இஸ்ரவேலைக் காக்கும் நல் தேவன்
இராப்பகல் உறங்காரே – எனக்

4. வலப்பக்கத்தில் நிழல் அவரே
வழுவாமல் காப்பவர் அவரே
சூரியன் பகலில் சந்திரன் இரவில்
சேதப்படுத்தாதே – எனக்

5. எத்தீங்கும் என்னை அணுகாமல்
ஆத்துமாவைக் காக்குமென் தேவன்
போக்கையும் வரத்தையும் பத்திரமாக
காப்பாரே இது முதலாய் – எனக்

## பாடல் – 138

**ஒன்றுமில்லை நான் (2)**
அன்பு எனக்கிராவிட்டால்
ஒன்றுமில்லை நான்

***சரணங்கள்***

1. பல பல பாஷை படித்தறிந்தாலும்
கல கல வென்னும் கை மணியாமே
என் பொருள் யாவும் ஈந்தளித்தாலும்
அன்பு இல்லையென்றால் ஒன்றுமில்லை நான் – ஒன்று

2. கண் கண்ட பிறனிடம் அன்பு கூராதவன்
கண் காணா தேவனில் அன்பு கூருவானோ
விண்ணவர் மொழிதனை கற்றறிந்தாலும்
அன்பு இல்லையென்றால் ஒன்றுமில்லை நான் – ஒன்று

3. சகலத்தைத் தாங்கி சகலத்தைச் சகித்து
சகலத்தையும் விசுவாசித்து நம்பி
சாந்தமும் தயவும் பொறுமையுமுள்ள
அன்பு இல்லையென்றால் ஒன்றுமில்லை நான் – ஒன்று

## பாடல் – 139

**கர்த்தர் உன் வீட்டைக் கட்டாராகில்**
அதைக் கட்டும் உந்தன் பாடு விருதா
கர்த்தர் நகரத்தைக் காவல் செய்யாவிடில்
உன் கண் விழிப்பும் விருதா

***பல்லவி***

ஆதலால் உன் உள்ளமே சதா அவர் சமூகம்
நிதம் நேசரையே துதித்திடட்டும்
கர்த்தருக்குப் பயந்து அவர் வழி நடந்தால்
நீ பாக்கியம் கண்டடைவாய்

2. உன் வழிகளிலெல்லாம்
உன்னைத் தூதர்கள் காத்திடுவார்
உன் பாதம் கல்லில் இடறாதபடி
தங்கள் கரங்களில் ஏந்திடுவார் – ஆதலால்

3. இரவின் பயங்கரத்திற்கும்
பகலில் பறக்கும் அம்புக்கும்
இருளில் நடமாடும் கொள்ளை நோய்க்கும்
நீ பயப்படவே மாட்டாய் – ஆதலால்

4. சிங்கத்தின் மேலும் நடந்து
வலு சர்ப்பத்தையும் மிதிப்பாய்
அவர் நாமத்தை நீ முற்றும் நம்பினதால்
உன்னை விடுவித்துக் காத்திடுவார் – ஆதலால்

5. ஆபத்திலும் அவரை நீ
நோக்கிக் கூப்பிடும் வேளையிலும்
உன்னைத் தப்புவித்தே முற்றும் இரட்சிப்பாரே
உன் ஆத்தும நேசரவர் – ஆதலால்

6. கர்த்தருக்குப் பயப்பட்டவன்
இவ்வித ஆசீர்வாதம் பெறுவான்
கர்த்தர் சீயோனில் இருந்து உன்னை
கடைசி மட்டும் ஆசீர்வதிப்பார் – ஆதலால்

## பாடல் – 140

***பல்லவி***

**சீயோனிலே என் திட அஸ்திபாரம் கிறிஸ்துவே – அவர்**
நான் என்றும் நம்பும் கன்மலை

***சரணங்கள்***

1. கலங்கிடுவேனோ பதறிடுவேனோ
கர்த்தரில் விசுவாசம் இருக்கையிலே
அசையா என் நம்பிக்கை நங்கூரமே
இயேசுவில் மாத்திரமே – சீயோ

2. புயலடித்தாலும் அலை மோதினாலும்
எவர் எனக்கெதிராய் எழும்பினாலும்
எனக்கு எட்டாத உயரத்திலே
எடுத்தவர் நிறுத்திடுவார் – சீயோ

3. வியாதியினாலே காயம் வருந்தி
வாடியே மரண நிழல் சூழினும்
விசுவாசத்தின் கரத்தாலவர்
வாக்கை நான் பற்றிடுவேன் – சீயோ

4. மாபரிசுத்த விசுவாசத்தாலே
மாபரிசுத்த ஸ்தலம் ஏகிடவே
திரை வழியாம் தன் சரீரத்தினால்
திறந்தாரே தூய வழி – சீயோ

5. நான் விசுவாசிப்போர் இன்னாரென்றறிவேன்
என்னையே படைத்திட்டேன் அவர் கரத்தில்
முடிவுவரை நடத்திடுவார்
முற்றுமாய் இரட்சிப்பாரே – சீயோ

## பாடல் – 141

**திருக்கரத்தால் தாங்கி என்னை**
திருச்சித்தம் போல் நடத்திடுமே
குயவன் கையில் களிமண் நான்
அனுதினமும் வனைந்திடுமே

1. உம் வசனம் தியானிக்கையில்
இதயமதில் ஆறுதலே
காரிருளில் நடக்கையிலே
தீபமாக வழி நடத்தும் (2)

2. ஆழ் கடலில் அலைகளினால்
அசையும்போது என் படகில்
ஆத்ம நண்பர் இயேசு உண்டே
சேர்ந்திடுவேன் அவர் சமூகம் (2)

3. அவர் நமக்காய் ஜீவன் தந்து
அளித்தனரே பெரிய மீட்பு
கண்களினால் காண்கிறேனே
இன்பக் கானான் தேசமதை (2)

## பாடல் - 142

*பல்லவி*

**தேவ சாயல் ஆகா மாறி**
தேவனோடிருப்பேன் நானும்

*சரணங்கள்*

1. அந்த நாளும் நெருங்கிடுதே
அதி விரைவாய் நிறைவேறுதே
மண்ணின் சாயலை நான் களைந்தே – தம்
விண்ணவர் சாயல் அடைவேன் – தேவ

2. பூமியின் கூடாரம் என்றும்
பெலவீனமே அழிந்திடுமே
கைவேலையல்லாத பொன்வீடு
கண்டடைந்து வாழ்ந்திடுவேன் – தேவ

3. சோரும் உள்ளான மனிதன்
சோதனையில் பெலனடைய
ஆற்றி தேற்றிடும் தேற்றரவாளன்
ஆண்டவர் என்னோடிருப்பார் – தேவ

4. ஆவியின் அச்சார மீந்தார்
ஆயத்தமாய் சேர்ந்திடவே
ஜீவனே எனது கிறிஸ்தேசு
சாவு எந்தன் ஆதாயமே – தேவ

5. காத்திருந்து ஜெபிப்பதினால்
கழுகுபோல பறந்தெழும்பி
ஜீவ யாத்திரை ஓடி முடித்து
ஜீவ கிரீடம் பெற்றிடுவேன் – தேவ

6. மூன்றில் ஒன்றாய் ஜொலிப்பவரை
முகமுகமாய் தரிசித்திட
வாஞ்சையாய் தவிக்கும் எனதுள்ளம்
வாரும் என்று கூப்பிடுதே – தேவ

7. உன்னத சீயோன் மலைமேல்
என் அருமை இயேசுவுடன்
ஜெப வீட்டினி லகமகிழ்ந்திடுவேன் நான்
ஜீவிப்பேனே நீடுழிவாய் – தேவ

## பாடல் – 143

**தொல்லை கஷ்டங்கள் சூழ்ந்திடும்**
துன்பம் துக்கம் வரும்
இன்பத்தில் துன்பம் நேர்ந்திடும்
இருளாய்த் தோன்றும் எங்கும்
சோதனை வரும் வேளையில்
சொற்கேட்கும் செவியிலே
பரத்திலிருந்து ஜெயம் வரும்
பரன் உன்னைக் காக்க வல்லோர்

*பல்லவி*

காக்கும் வல்ல மீட்பர் உண்டெனக்கு (3)
காக்கும் வல்ல மீட்பர் உண்டெனக்கு
காத்திடுவார் என்றுமே

2. ஐயமிருந்ததோர் காலத்தில்
ஆவிக் குறைவால் தான்
மீட்பர் உதிர பெலத்தால்
சத்துருவை வென்றேன்
என் பயம் யாவும் நீங்கிற்று
இயேசு கை தூக்கினார்
முற்றும் என்னுள்ளம் மாறிற்று
இயேசென்னைக் காக்க வல்லோர் – காக்கும்

3. என்ன வந்தாலும் நம்புவேன்
என் நேச மீட்பரை
யார் கைவிட்டாலும் பின் செல்வேன்
எனது இயேசுவை
அகல ஆழ உயரமாய்
எவ்வளவன்பு கூர்ந்தார்
என்ன துன்பங்கள் வந்தாலும் – அவர்
என்னைக் கைவிடமாட்டார் – காக்கும்

## பாடல் – 144

***சரணங்கள்***

**நித்தியானந்த கர்த்தர் இயேசுவே**
நித்தமும் பிரகாசிக்கின்றார்
பர்வதம் மீதிலே பக்தர் பாதங்கள்
பரிசுத்தமுடன் மின்னுதே

***பல்லவி***

சீயோனிலே சுவிசேஷகர்
ஜெப ஐக்கியமே காணுவோம்
ஜெயங் கொண்டோராய் ஜெப வீரராய்
சிலுவை யாத்திரை செல்லுவோம்

2. சிறு மந்தையின் பெரிய மேய்ப்பர்
நெருங்கி வந்து நிற்கிறார்
சின்னவன் ஆயிரம் பதினாயிரம்
சேனைத் திரளாய் மாறுவான் – சீயோனிலே

3. உலகமெங்கும் சுவிசேஷத்தின்
உயர்ந்த கொடி பறக்கும்
திறந்த வாசலுள் பிரவேசித்து
சிறந்த சேவை செய்குவோம் – சீயோனிலே

4. நரக வழி செல்லும் மாந்தருக்காய்
நாடு இராப்பகல் அழுதே
நம் தலை தண்ணீராய் கண்கள் கண்ணீராய்
நனைந்து வருந்தி ஜெபிப்போம் – சீயோனிலே

5. அவமானங்கள் பரிகாசங்கள்
அடைந்தாலும் நாம் உழைப்போம்
ஆத்தும பாரமும் பிரயாசமும்
அல்லும் பகலும் நாடுவோம் – சீயோனிலே

6. எதிரிகள் எதிரே பந்தி
எமக் காயத்தப் படுத்தி
எம் தலை எண்ணெயால் அபிஷேகித்தார்
எரிகோ மதிலும் வீழ்ந்திடும் – சீயோனிலே

7. சீயோன் என்னும் சுவிசேஷகி
சிகரத்தில் ஏறுகின்றாள்
இலட்சத்து நாற்பத்து நாலாயிரம்
இலக்கம் நோக்கியே ஓடுவோம் – சீயோனிலே

## பாடல் – 145

**உம்மைப் போல் யாருண்டு**
எந்தன் இயேசு நாதா
இந்தப் பார்தலத்தில்
உம்மைப் போல் யாருண்டு
பாவத்தின்பிடியில் சிக்கி நான் உழன்றேன்
தேவா தம் அன்பினால் மன்னித்தீர் – உம்மைப்

1. உலகம் மாமிசம் பிசாசுக் கடியில்
அடிமை யாகவே பாவி நான் ஜீவித்தேன்
நிம்மதி இழந்தேன் தூய்மையை மறந்தேன்
மனம் போல் நடந்தேன் ஏமாற்றம் அடைந்தேன்
என்னையா தேடினீர் ஐயா இயேசு நாதா
உம்மை மறந்த ஓர் துரோகி நான்
என்னையா தேடினீர் ஐயா இயேசு நாதா
அடிமை உமக்கே இனி நான் – உம்மைப்

2. இன்றைக்கு நான் செய்யும் இந்தத் தீர்மானத்தை
என்றைக்கும் காத்திட ஆவியால் நிரப்பும்
நொறுக்கும், உருக்கும், உடையும் வனையும்
உமக்கே உகந்த தூய சரீரமாய்
ஐம் பொறிகளையும் உமக்குள் அடக்கும்
இயேசுவே ஆவியால் நிரப்பும்
வெற்றி வாழ்க்கையுள்ள மகனாய்த் திகழ
அக்கினி என் உள்ளம் இறக்கும் – உம்மைப்

3. வீட்டிலும் ஊரிலும் செல்லுமிடமெங்கும்
சோதனை வந்திடில் கர்த்தா நீர் காத்திடும்
மேசியா வருகை வரையில் பலரை
சிலுவைக் கருகில் அழைக்க ஏவிடும்
முழங்காலில் நிற்க வேதத்தை அறிய
தினந்தோறும் தேவா உணர்த்தும்
உமக்கும் எனக்கும் இடையில் எதுவும்
என்றுமே வராமல் காத்திடும் – உம்மைப்

## பாடல் – 146

**விழித்தெழு விசுவாசியே நீ**
விழித்தெழுக் கண்களை ஏறிட்டுப்பார்
எழுந்து கட்டுவோம் வாருங்கள் என்றே
எழுந்து கட்டிட வா (2)

1. எருசலேமின் அலங்கத்தைப் பார்
தெருக்களின் அலங்கோலத்தைப் பார்
நெருங்கி ஜெபித்து நெருங்கி நீயும் வா
விரும்பி அலங்கத்தை கட்டிடவா (2) – விழித்தெழு

2. பாவத்தை வெறுக்கும் மனிதர் தேவை
ஆவியின் நிரப்புதல் பெற்றோர் தேவை
பாவியின் சாவை கூவி உரைக்கும்
ஆவிபெற்ற பரிசுத்தர் தேவை (2) – விழித்தெழு

3. அர்ப்பணம் தூயனே என்னை அளித்தேன்
அற்பனே ஆயினும் ஏற்றுக்கொள்ளும்
அறுவடைப் பணியைக் கருத்துடன் செய்ய
தருகிறேன் என்னை ஏற்றுக்கொள்ளும் (2) – விழித்தெழு

## பாடல் – 147

**ஆதியும் அந்தமுமானவரே**
அதிசயமானவரே

1. சிருஷ்டிப்பின் ஆதிகாரணரே
ஜீவனின் அதிபதியானவரே
நேற்றும் இன்றும் என்றும் மாறாதவரே
நிலைவரமானவரே

2. ஒருமனதோடே தேடுவோரே
உண்மையாய் ஏற்றுக் கொள்பவரே
ஊக்கமாய் ஜெபிப்போர்க்குள்ள பலனை
உடனடி அளிப்பவரே

3. தாகமுள்ளோர்க்கு ஜீவநீரை
தாராளமா யிடுவேன் என்றவரே
ஆவியாம் ஜீவ தண்ணீரை எமக்கு
மேவியே இன்று ஈவீரே

4. பாவிக்கு பாதை காண்பிக்கவே
பாரினில் ஈவாய் தோன்றினீரே
பாதகன் போல பாரக் குருசில்
தேவனே தொங்கினீரே

5. சீக்கிரமாய் இதோ வருபவரே
மணவாட்டி சபையைச் சேர்த்திடவே
மாசற்றோராய் உம் மகிமையில் சேர
மன்னவனே அருள் ஈவாரே

## பாடல் – 148

***பல்லவி***

**கர்த்தருக்குக் காத்திருப்போர் யாரும்**
வெட்கப்பட்டுப் போவதில்லை – (2)

***சரணங்கள்***

1. துன்பங்கள் தொல்லைகள், கஷ்டங்கள் வந்தாலும்
கர்த்தருக்குக் காத்திருப்போர் வெட்கப்பட்டுப் போவதில்லை
–கர்த்தருக்கு

2. வியாதிகள் வறுமை, வேதனை வந்தாலும்
கர்த்தருக்குக் காத்திருப்போர் வெட்கப்பட்டுப் போவதில்லை
– கர்த்தருக்கு

3.தேசத்தில் கொள்ளைநோய், யுத்தங்கள் வந்தாலும்
கர்த்தருக்குக் காத்திருப்போர் வெட்கப்பட்டுப் போவதில்லை
– கர்த்தருக்கு

4. பாவத்தின் கொடுமையால் பல ஜனம் அழிந்தாலும்
கர்த்தருக்குக் காத்திருப்போர் வெட்கப்பட்டுப் போவதில்லை
– கர்த்தருக்கு

## பாடல் – 149

**மான்கள் நீரோடை வாஞ்சித்து**
கதறும் போல் தேவனே
எந்தன் ஆத்துமா உம்மையே
வாஞ்சித்து கதறுதே
தஞ்சமே நீர் அடைக்கலம் நீர்
கோட்டையும் நீர் என்றும் காப்பீர்

1. தேவன் மேல் ஆத்துமாவே
தாகமாயிருக்கிறதே
தேவனின் சந்நிதியில் நின்றிட
ஆத்துமா வாஞ்சிக்குதே – மான்

2. ஆத்துமா கலங்குவதேன்
நேசரை நினைத்திடுவாய்
அன்பரின் இரட்சிப்பினால் தினமும்
துதித்து போற்றிடுவோம் – மான்

3. யோர்தான் தேசத்திலும்
எர்மோன் மலைகளிலும்
சிறுமலைகளிலிருந்தும் உம்மை
தினமும் நினைக்கின்றேன் – மான்

4. தேவரீர் பகற் காலத்தில்
கிருபையைத் தருகின்றீர்
இரவில் பாடும் பாட்டு என்தன்
வாயிலிருக்கிறதே – மான்

5. கன் மலையாம் தேவன்
நீர் என்னை ஏன் மறந்தீர்
எதிரிகளால் ஏங்கி அடியேன்
துக்கத்தால் திரிவதேனோ? – மான்

## பாடல் – 150

**கிருபையிதே தேவ கிருபையிதே**
தாங்கி நடத்தியதே
இயேசுவிலே பொன் நேசரிலே
அகமகிழ்ந்தே நாம் ஆனந்திப்போம்

1. ஆருயிர் அன்பராய் எங்களுடனே
ஜீவிய பாதையிலே – இயேசுபரன்
அனுதினமும் வழி நடந்தே
அவரது நாமத்தில் காத்தனரே – கிருபையிதே

2. எத்தனையோ பரிசுத்தர்கள் மறைந்தே
மகிமை சேர்ந்தனரே – பூரணமாய்
காத்தனரே கர்த்தர் எமை
கருணையினால் தூய சேவை செய்ய – கிருபையிதே

3. அன்பின் அகலமும் நீளம் உயரமும்
ஆழமும் அறிந்துணர – அனுக்கிரகித்தார்
கிறிஸ்துவிலே ஒரு மனையாய்
சிருஷ்டித்தே நிறுத்தினார் அவர் சுதராய் – கிருபையிதே

4. நல்ல போராட்டம் போராடி ஜெயித்தே
நித்திய ஜீவனை நாம் – பெற்றிடவே
விசுவாசத்தில் நிலைத்திடுவோம்
அசையாது அழைப்பினை காத்துக்கொள்வோம் – கிருபையிதே

5. ஆவியும் மணவாட்டியும் ஆவலுடன்
வாருமென்றழைக்கின்றாரே – வாருமென்பீர்
சீயோனே நீ பார் உனக்காய்
நாயகன் இயேசு தாம் வெளிப்படுவார் – கிருபையிதே

6. வார்த்தையினால் அவர் தீர்த்தார் எந்தன்
வியாதியும் வேதனையும் – வைத்தியராய்
இயேசுவல்லால் சார்ந்திடவோ
இகமதில் வேறெமக் காருமில்லை – கிருபையிதே

## பாடல் – 151

**கிறிஸ்துவின் அடைக்கலத்தில்**
சிலுவையின் மாநிழலில்
கன் மலை வெடிப்பதனில்
புகலிடம் கண்டு கொண்டோம்

1. கர்ச்சிக்கும் சிங்கங்களும்
ஓநாயின் கூட்டங்களும்
ஆடிடைக் குடிலினில்
மந்தைகள் நடுவினில்
நெருங்கவும் முடியாது – நாம்

2. இரட்சிப்பின் கீதங்களும்
மகிழ்ச்சியின் சப்தங்களும்
கார்மேக இருட்டினில்
தீபமாய் இலங்கிடும்
கர்த்தரால் இசை வளரும் – (2) – நாம்

3. தேவனின் இராஜ்ஜியத்தை
திசை எங்கும் விரிவாக்கிடும்
ஆசையில் ஜெபித்திடும்
அதற்கென்றே வாழ்ந்திடும்
யாருக்கும் கலக்கம் இல்லை – (2) – நாம்

4. பொல்லோனின் பொறாமைகளும்
மறைவான சதி பலவும்
வல்லோனின் கரத்தினில்
வரை படமாயுள்ள
யாரையும் அணுகாது – (2) – நாம்

## பாடல் – 152

**இயேசு எந்தன் வாழ்வின் பெலனானால்**
எனக்கென்ன ஆனந்தம் (2)

***சரணங்கள்***

1. எந்தன் வாலிப காலமெல்லாம்
எந்தன் வாழ்க்கையின் துணையானார்
உம் நாமமே தழைத்தோங்க
நான் பாடுவேன் உமக்காக

எந்தன் இதயமே உம்மைப் பாடும்
எந்தன் நினைவுகள் உமதாகும்

2. பெரும் தீமைகள் அகன்றோட
பொல்லா மாயைகள் மறைந்தோட
உமதாவியின் அருள் காண
வரும் காலங்கள் உமதாகும் – எந்தன்

3. இந்த உலகத்தை நீர் படைத்தீர்
எல்லா உரிமையும் எனக்களித்தீர்
உம் நாமமே தழைத்தோங்க
நான் பாடுவேன் உமக்காக – எந்தன்

## பாடல் – 153

**இருள் சூழ்ந்த லோகத்தில்**
இமைப் பொழுதும் தூங்காமல்
கண்மணி போல் என்னை
கர்த்தர் இயேசு காத்தாரே
கானங்களால் பாடுவேன் (2)

அஞ்சிடேன் அஞ்சிடேன்
என் இயேசு என்னோடிருப்பதால்

2. மரணப் பள்ளத்தாக்கில்
நான் நடந்த வேளைகளில்
கர்த்தரே என்னோடிருந்து
தேற்றினார் தம் கோலினால்
பாத்திரம் நிரம்பி வழிய
ஆவியால் அபிஷேகித்தார் – அஞ்சிடேன்

3. அலைகள் படகின் மேல்
மோதியே ஆழ்த்தினாலும்
கடல்மேல் நடந்து வந்து
கர்த்தரே என்னைத் தூக்கினார்
அடல் நீக்கியவர்
அமைதிப் படுத்தினார் – அஞ்சிடேன்

## பாடல் – 154

*பல்லவி*

**சத்திய வேதம் பக்தரின் கீதம்**
சுத்தர்கள் போகும் பாதையின் தீபம்
உத்தம மார்க்கம் காட்டும்

***அனுபல்லவி***

எத்தனை துன்பம் துயரம் வந்தும்
பக்தனைத் தேற்றிடும் ஔஷதம்

***சரணங்கள்***

1. நித்தம் விரும்பும் கர்த்தர் வசனம்
சுத்தம் பசும்பொன் தெளிந்திடும் தேன்
இதயம் மகிழும் கண்கள் தெளியும்
இருண்ட ஆத்மா உயிரடையும்

2. பேதைகளிடம் ஞானம் அருளும்
வேத புத்தகம் மேன்மை தரும்
இரவும் பகலும் இதன் தியானம்
இனிமை தங்கும் தனிமையிலும்

3. வேதப் பிரியர் தேவ புதல்வர்
சேதமடையா நடந்திடுவார்
இலைகள் உதிரா மரங்கள் போல
இவர்கள் நல்ல கனி தருவார்

4. உள்ளம் உதிக்கும் உறுதி அளிக்கும்
கள்ளங் கபடெல்லாம் அகற்றும்
கடிந்துக் கொள்ளும் கறைகள் போக்கும்
கனமடைய வழி நடத்தும்

5. கர்த்தர் வசனம் வல்ல சம்மட்டி
கன் மலையையும் நொறுக்கிடுமே
இதய நினைவை வகையாய் அறுக்கும்
இரு புறமும் கருக்குள்ளதே

6. வானம் அகலும் பூமி அழியும்
வேத வசனம் நிலைத்திருக்கும்
பரமன் வேதம் எனது செல்வம்
பரவசம் நிதம் அருளும்

## பாடல் – 155

**காது குளிர பாடுங்கள் கிருபா சத்தியம்**
புத்தி தெளியக் காட்டுங்கள் திவ்விய வசனம்
வெல்க சத்திய வேதம் வாழ்க நித்திய வேதம்

***பல்லவி***

அமிர்தமே அற்புதமே திவ்விய சத்தியம்
அமிர்தமே அற்புதமே திவ்விய வசனம்

2. நல்ல செய்தியைக் கூறுமே கிருபா சத்தியம்
பாவ நாசத்தைக் காட்டுமே திவ்விய வசனம்
வான வருஷமாரி ஞான பொக்கிஷவாரி – அமிர்தமே

3. வேத நாயகர் பொழியும் கிருபா சத்தியம்
ஜீவ மங்கள மொழியும் திவ்விய வசனம்
யேசு மீட்பரைக் காட்டும் இரட்சண்ய வழியைக் காட்டும்
– அமிர்தமே

## பாடல் – 156

**தேனிலும் இனிய வேதமே**
தித்திக்கும் திவ்விய வேதமே
பாதைக்குப் பண்புள்ள தீபமே

***பல்லவி***

வேதமே தீபமே
பாதைக்குப் பண்புள்ள தீபமே

2. துன்பத்தில் இன்பம் அளிக்கும்
தூய வழியைக் காட்டுமே
மாயமான வாழ்வை நீக்குமே
மாநிலத்தில் என்னைக் காக்குமே – வேதமே

3. என்னைக் எனக்குக் காட்டுமே
நன்மையில் என்னை நாட்டுமே
அல்லும் பகலும் என் ஆதரவே
எல்லையில்லா இன்ப ஊற்றாமே – வேதமே

## பாடல் – 157

*பல்லவி*

**வேத வசன விதைதனைப் புவியில்**
விதைப்பில் தெளிப்பில் வெகு பல பாடம்

*அனுபல்லவி*

போதனையைக் கேட்டுப் புத்தியாக நடப்போர்
வேதனைகள் நீங்கி விண்ணிலென்றும் வாழ்வர்

*சரணங்கள்*

1. அதிசய வசனம் இந்திய கரையில்
செடியாய் மரமாய் நடப்பட்டு வருதே
நடப்பட்டு வருதே நலமிக்கத் தருதே
பெரும் பாவியிடம் பேர் பெற்று வருதே – வேத

2. தீயராம் பாவிகள் துன்புறும் வேளையில்
தூணாய்த் துணையாய் துலங்கிடும் வசனம்
இந்தியர் மனதில் இறுகவே பாய
ஈசனின் கிருபை இலங்கிடச் செய்யும் – வேத

3. நால் வகைத் தாளங்களோடு
ஆட பாட சபை மிகக் கூட
சபை மிகக்கூட சாமி வந்து சேர
சங்கீதங்கள் பாட சந்தோஷங் கொண்டாட – வேத

## பாடல் – 158

*பல்லவி*

**வேதத்தைத் தியானம் செய்**
சேதம் வராதே – என் மனமே

*சரணங்கள்*

1. பொன்னிலும் மேலான பசும் பொன்னாம்
விண்ணில் நமைச் சேர்க்குமாம் – வேதத்தை

2. தெளி தேனிலும் மதுரமுள்ளதாம்
களிப்புறச் செய்கிறதாம் – வேதத்தை

3. இருபுறமும் கருக்கான பட்டயமாம்
உருக்கிடும் கருவியாம் – வேதத்தை

4. கால்களுக்கேற்ற கர்த்தர் தீபமாம்
பாதைக்கு வெளிச்சமாம் – வேதத்தை

5. குறைகளைக் காட்டும் மறையாம் கண்ணாடி
மலையை உடைக்கும் சம்மட்டி – வேதத்தை

6. அழுக்கை கழுவும் அருள் தண்ணீராம்
அழித்திடும் அக்கினியாம் – வேதத்தை

7. வானத்தைச் சேர்ந்த ஞானப்பாலாம்
பானமே செய்திடலாம் – வேதத்தை

# திருச்சபை

## பாடல் – 159

**இயேசுவின் குடும்பம் ஒன்று உண்டு**
அன்பு நிறைந்திடும் இடம் உண்டு (2)

1. உயர்வுமில்லை அங்கு தாழ்வுமில்லை
ஏழை இல்லை பணக்காரனில்லை
இராஜாதி இராஜா இயேசு
என்றென்றும் ஆண்டிடுவார் – இயேசுவின்

2. பாவமில்லை அங்கு சாபமில்லை
வியாதியில்லை கடும் பசியுமில்லை
இராஜாதி இராஜா இயேசு
என்றென்றும் காத்திடுவார் – இயேசுவின்

3. இன்பம் உண்டு சமாதானம் உண்டு
வெற்றி உண்டு துதி பாடல் உண்டு
இராஜாதி இராஜா இயேசு
என்றென்றும் ஈந்திடுவார் – இயேசுவின்

## பாடல் – 160

**மங்கள கீதங்கள் பாடிடுவோம்**
மணவாளன் இயேசு மனமகிழ
கரைதிறை நீக்கி திருச்சபையாக்கி
கர்த்தனர் கற்புள்ள கன்னிகையாய்

***பல்லவி***

கோத்திரமே யூதா கூட்டமே
தோத்திரமே துதி சாற்றிடுவோம்
புழுதியின் றெம்மை உயர்த்தினாரே
புகழ்ந்தவர் நாமத்தைப் போற்றிடுவோம்

2. இராஜா குமாரத்தி ஸ்தானத்திலே
இராஜாதி ராஜன் இயேசுவோடே
இனஜன நாடு தகப்பனின் வீடு
இன்பம் மறந்து நாம் சென்றிடுவோம் – கோத்

3. சித்திர தையலுடை அணிந்தே
சிறந்த உள்ளமான மகிமையிலே
பழுதொன்றுமில்லா பரிசுத்தமான
பாவைகளாகப் பறந்திடுவோம் – கோத்

4. ஆரங்கள் பூட்டி அலங்கரித்தே
அவர் மணவாட்டி ஆக்கினாரே
விருந்தறை நேசர் கோடி ஒளி வீச
வீற்றிருப்போம் சிங்காசனத்தில் – கோத்

5. தந்தத்தினால் செய்த மாளிகையில்
தயாபரன் ஏசு புறப்படுவார்
மகிழ் கமழ் வீச மகத்துவ நேசர்
மன்னன் மணாளன் வந்திடுவார் – கோத்

## திருமுழுக்கு

### பாடல் – 161

***பல்லவி***

**இந்தக் குழந்தையை நீர் ஏற்றுக்கொள்ளும் கர்த்தாவே**

***அனுபல்லவி***

உந்தம் ஞானஸ்நானத்தால் உமக்குப் பிள்ளையாய் வந்த – இந்த

***சரணங்கள்***

1. பிள்ளைகள் எனக்கதிகப் பிரியம் வரலாம் என்று
உள்ளமுருகிச் சொன்ன உத்தம சத்தியனே – இந்த

2. பாலரைக் கையில் ஏந்தி பண்பாய் ஆசீர்வதித்த
சீலமாயின்றும் வந்தாசீர்வாதம் செய்யும் ஐயா – இந்த

3. உமக்கூழியஞ் செய்யவும் உம்மைச் சிநேகிக்கவும்
உமது ஆவியைத் தந்து உம்முட மந்தை சேர்த்து - இந்த

4. உலகமும் பேய்ப் பிசாசும் ஒன்றும் தீது செய்யாமல்
நலமாய் இதைக் காத்தாளும் நன்மை பராபரனே - இந்த

5. விசுவாசத் தோடிதுந்தன் மேய்ப்புக்கும் உள்ளடங்கிப்
பசிய மரம் போல் தெய்வ பக்தியிலே வளர - இந்த

## திருப்பணி

### பாடல் - 162

**அறுப்பு மிகுதி ராஜாவே**
ஊழியர் தந்திடும்
வெறுப்பில் அலையும் ஜனத்தின் மேல்
எம் பொறுப்பை உணர்த்திடும்

***பல்லவி***

இந்தியாவில் கோடி கோடி
உம்மை அறியாரே
என்னை அனுப்பும் ராஜாவே
நீர் என்னை அனுப்பிடும்

2. பாதாள சேனை இன்னும் இன்னும்
ஜெயிக்க விடாதிரும்?
சேனை வீரராய் வாலிபர் பலர்
எழும்பச் செய்திடும்

3. மதுரை சென்னை சிதம்பரம்
கலைக் கழகங்களில் வந்து
மெய் வீரர்கள் மிஷனெரிகள்
தெரிந்தெடுப்பு செய்யும்

4. யாரை அனுப்ப யார் போவார்
என்றலையும் இயேசுவே
என்னை உந்தன் கண்கள் காண
உம்முன் நிற்கிறேன்

5. மெய் வீரனாக ராஜாவே
நான் எழுந்து வருகிறேன்
கோதுமை மணியாக மாற
என்னைப் படைக்கிறேன்

## பாடல் – 163

**ரட்சிப்பை உயர்த்திக் கூறுவோம், லோகம் நடுங்க**
நரகாக்கினையைச் சொல்லுவோம் பாவ மடங்க – ஓ
பூர்வ கால தேவதாசர் விஸ்தரித்தாற்போல்
மோட்ச லோகம் போகும் முன்னமே

### *பல்லவி*

செல்வோம் செல்வோம் ஆர்ப்பரிப்புடனே
செய்வோம் செய்வோம் போர் பலத்துடனே – ஓ
நானா ஜாதி பாஷைக்காரர் ரட்சிப்படைய
மோட்ச லோகம் போகும் முன்னமே

2. சுவிசேஷ யுத்த சத்தம் பூமியெங்கும் கேள்
மீட்படைந்த பேதைகளின் சாட்சிகளும் கேள் – ஓ
முழுலோகத்தையும் வெல்ல இன்னும் கொஞ்ச நாள்
மோட்ச லோகம் போகும் முன்னமே – செல்வோம்

3. தீதாய் சத்துருக்களென்ன சொன்ன போதிலும்
சுத்த ஆவியின் பெலத்தைப் பெற்று யாவிலும் – ஓ
உண்மையாகப் போர் புரிந்தால் வெல்வோம் சாவிலும்
மோட்ச லோகம் போகும் முன்னமே – செல்வோம்

## பாடல் – 164

*பல்லவி*

**இயேசு கிறிஸ்து நாதர்**
எல்லாருக்கும் ரட்சகர்

*சரணங்கள்*

1. மாசில்லாத மெய்த் தேவன்
மானிடரூ புடையார்
இயேசு கிறிஸ்து வென்ற
இனிய நாமமுடையார் – இயேசு கிறிஸ்து

2. வம்பு நிறைந்த இந்த
மானிட ஜாதகள் மேல்
அன்பு நிறைந்த கர்த்தர்
அதிக உருக்க முள்ளோர் – இயேசு கிறிஸ்து

3. பாவத்தில் கோபம் வைப்பார்
பாவி மேல கோபம் வையார்
ஆவலாய் நம்பும் பாவிக்
கடைக்கலம் ஆக நிற்பார் – இயேசு கிறிஸ்து

4. தன்னுயிர் தன்னை விட்டுச்
சருவ லோகத்திலுள்ள
மன்னுயிர்களை மீட்க
மரித்து உயிர்த்த கர்த்தர் – இயேசு கிறிஸ்து

5. அந்தர வானத்திலும்
அகிலாண்ட கோடியிலும்
எந்தெந்த லோகத்திலும்
இவரிவரே ரட்சகர் – இயேசு கிறிஸ்து

## பாடல் – 165

***பல்லவி***

**இயேசு நாமம் ஒன்றை நம்புவீர்**
பூலோகத்தாரே

***சரணங்கள்***

1. இயேசு நாமம் ஒன்றை நம்பும்
ரட்சண்யத்துக் கிதுவே ஸ்தம்பம்
பேசும் வேறே நாமமெல்லாம்
பேயின் வம்பும் தும்புமாகும் – இயேசு

2. மூவரிலொருவருமாய்
முத்தொழில் புரிவோருமாய்
ஆவியாய் அனாதியாய்
ரூப ரூப வஸ்துவான – இயேசு

3. ஐயன் இயேசையா உரைத்து
ஆரணத் தெழுதி வைத்து
வையகம் புரக்கும் நாயன்
தையல் தரும் தூயசேயன் – இயேசு

4. பார்த்திபன் தாவீது குல
கோத்திர கன்னிமரிபால்
நேத்திரம் போல உதித்துத்
தாத்திரி ரட்சகனாக – இயேசு

5. பூதலத் தஞ்ஞான இருள்
போக்கவே மெஞ்ஞான பெரும்
ஜோதியாய் விளங்கி நிற்கும்
நீதியின் சூரியன் ஆன – இயேசு

6. பாவிகளீடேற மோட்ச
பாக்கியம் பெறுவதற்காய்
ஜீவன் விட்டுயிர்த்தெழுந்து
சேணுலகுக் கேறிச்சென்று – இயேசு

7. விண்டலத்தவர்கள் சூழ
கண்டலகை பதறிவிழ
மண்டலத்தைத் தீர்வை செய்ய
கொண்டல் மிசை வரும் ராஜன் – இயேசு

## பாடல் – 166

*பல்லவி*

**இயேசு என்னும் இனிய நாமம்**
இந்தக் காசினியோர் அறிய நாமும்
சுவிசேஷத்தைப் பாரினிலே காட்டுவோம்
விசுவாசமதை நாட்டில் நிலை நாட்டுவோம்

*சரணங்கள்*

1. பாவத்தைப் போக்க சாபதர்தை நீக்க
பக்தராய் வந்தார், பரிசுத்தராய் வந்தார் – இயேசு

2. நிந்தை சுமந்து கந்தை அணிந்து
விந்தையாகவே அவர் சொந்தமாய் வந்தார் – இயேசு

3. ஆதிபன் மேன்மை அத்தனையும் வெறுத்து
ஆயர் அறிய அவர் ஆகுடில் வந்தார் – இயேசு

4. மாட்சி கெடாத மாது மரியின்
பாலனாய் வந்தார் அனு கூலனாய் வந்தார் – இயேசு

5. வேதாளப் பேயைப் பாதாளம் வரையில்
ஒழிக்க வந்தார் அதை அழிக்க வந்தார் – இயேசு

6. பரிசுத்தவான்கள் பருகிக் கழிக்க
இகத்தில் வந்தார் அவர் அகத்தில் வந்தார் – இயேசு

7. வாதை நோய் துன்பம் யாவையும் நீக்க
கர்த்தராய் வந்தார் தம்மைத் தத்தமாய்த் தந்தார் – இயேசு

## பாடல் – 167

***பல்லவி***

**இயேசுவின் நிந்தையைச் சுமப்போம்**
வாசலுக்குப் புறம்பே போவோம்

***சரணங்கள்***

1. சன்பல்லாத் தொபியா சக்கந்தங்களையும்
துன்புறுத்தும் தீயர் கேள்விகளையும்
அன்பருடனே இன்பமாய் ஏற்போம்
புறப்பட்டுப் போகக் கடவோம்

2. ஸ்தேவான் மேல் விழுந்த கற்களை நினைத்து
சீஷர்கள் அடைந்த சிறைகளைச் சிந்தித்து
மோசங்களென்றாலும் நேசமாய் ஏற்போம்
புறப்பட்டுப் போகக்கடவோம்

3. கள்ளச் சகோதரர் கைவிடுவார்கள்
சொல்லாதவைகளைச் சுமத்திடுவார்கள்
நல்ல கிறிஸ்தேசுவை மறுதலிப்பார்கள்
புறப்பட்டுப் போகக்கடவோம்

4. கோலால் கொடுமையாய் அடிக்கப்பட்டாலும்
வாளால் துண்டாக வகுக்கப்பட்டாலும்
நாளெல்லாம் நரரால் நசுக்கப்பட்டாலும்
புறப்பட்டுப் போகக்கடவோம்

5. வருத்தங்கள் வகைவகையாகவே வரும்
திருத்தங்கள் சிலரால் பொருத்தமாய்ச் சேரும்
செருக்கானவர்களால் நெருக்குதல் நேரும்
புறப்பட்டுப் போகக்கடவோம்

6. அக்கினிக்கு நம்மை இரையாக்கினாலும்
விக்கினங்கள் வெகுவாய்ச் சூழ்ந்தாலும்
அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியைப் பார்த்தே
புறப்பட்டுப் போகக்கடவோம்

7. அமர்ந்திருந்து அவர் கர்த்தரென்றறியுங்கள்
நடந்திடும் யுத்தம் நாதனுடையதே
ஸ்தோத்திர பலியை நேர்த்தியாய்ச் செலுத்தி
அல்லேலூயா பாடக்கடவோம்

## பாடல் – 168

**உள்ளத்தில் அவர்பால் பேரன்புள்ளோரெல்லாம்**
எண்ணத்தில் தெளிவைப் பெறுவீர்
சொல்லதில் கூறுவீர் வாழ்வதில் சாதிப்பீர்
இயேசு தேடும் நபர் இவரே

1. பரமன் பேரிலே பற்று கொண்டோரெல்லாம்
எளிதில் புரிவார் அவரின் பாரத்தை
உலகின் பேரிலே இயேசுவின் அக்கரை
தமதாக்கியவர் வாழுவார், மாளுவார்
உண்மை அடியவர் இயேசுவை அறிவார்
தம்மையே அவர்க்காய் அளிப்பார்

2. தேசங்கள் தீவுகள் பல பிராந்தியங்கள்
பாவத்தால் நிறைந்து சாபமாகிறது
திறப்பின் வாயிலே நிற்கத்தக்கதாக
தேவன் தேடும் நபர் நம்மிலே யார் யாரோ?
உண்மை அடியவர் இயேசுவை அறிவார்
தம்மையே அவர்க்காய் அளிப்பார்

3. செல்வம் சீர் சிறப்பு நற்குடிப் பிறப்பு
செல்வாக்கு அந்தஸ்து படாடோபவஸ்து
யாவையும் பெரினும் சாகையில் என் செய்வீர்?
உலகின் சம்பத்து குப்பை என்றே சொல்வீர்
உண்மை அடியவர் இயேசுவை அறிவார்
தம்மையே அவர்க்காய் அளிப்பார்

## பாடல் - 169

**எடுத்துச்செல்வீர் இந்த சுவிசேஷத்தை**

எடுத்துச்செல்வீர் இந்த சுவிசேஷத்தை
அடுக்கடுக்காக இடங்கள் உண்டு
எடுத்துச்செல்வீர் இந்த சுவிசேஷத்தை

1. பல கோடி மக்கள் பசியால் வாட
தனித்து உண்ணும் யாரும் கிறிஸ்தவரா
நான்குபேர் அவர்கள் குஷ்டரோகம்
கொடுத்து உண்டார் அவர் உள்ளம் தங்கம்

2. இந்நிலை பார்த்தும் தாமதித்தால்
இரட்சிப்பு பிரிதொரு வழி எழும்பும்
உன் நிலை அன்று என்னவாகும்?
தயக்கத்தின் முடிவு அழிவே ஆகும்

3. இயேசுவின் அடிமை ஆகுகின்றேன்
கர்த்தாவே சொல்லும் அடியேன் கேட்பேன்
என்னை அனுப்பும் நான் சொல்லுவேன்
உமது கோல் தடி என்னை வழி நடத்தும்

## பாடல் - 170

*பல்லவி*

**எத்தனை நாட்கள் செல்லும்**
இயேசுவின் சுவிசேஷம்
அத்தனை நாட்டவரும் அறிய
எத்தனை நாட்கள் செல்லும்

*சரணங்கள்*

1. ஆடுகள் ஏராளம் அலைந்து திரிந்திடுதே
தேடுவோர் யாவருக்கும் – என் பெலன் தாராளம் – எத்தனை

2. சாத்தானின் சக்திகளும் – பெருகிடும் நாட்களில்
தேவனின் பிள்ளைகளுக்குள் – ஒரு மனம் என்று வரும் – எத்தனை

3. தேவைகள் நிறைந்து நிற்க – வாய்ப்புகள் நழுவிச் செல்ல
தாழ்மையாய் ஊழியர்கள் இணைவது என்று வரும்? – எத்தனை

4. கோபங்கள் சீற்றங்களும் – பொறாமையும் பிரிவுகளும்
ஊழியர் என்று சொல்வார் – நடுவினில் நின்றகலும் – எத்தனை

5. உண்மையாம் கோதுமைகள் – மணியாக மண்ணடியில்
மறைந்திடும் நாள் வருமா–நாம் உடைபடும் நாள்வருமா–எத்தனை

## பாடல் - 171

**கறையேறி உமதண்டை**
நிற்கும்போது ரட்சகா
உதவாமல் பலனற்று
வெட்கப்பட்டுப் போவேனோ

*பல்லவி*

ஆத்மா ஒன்றும் ரட்சிக்காமல்
வெட்கத்தோடு ஆண்டவா
வெறுங்கையனாக உம்மைக்
கண்டுகொள்ளல் ஆகுமா?

2. ஆத்துமாக்கள் பேரில் வாஞ்சை
வைத்திடாமல் சோம்பலாய்க்
காலங்கழித்தோர் அந்நாளில்
துக்கிப்பார் நிர்ப்பந்தராய்

3. தேவரீர் கை தாங்க சற்றும்
சாவுக்கஞ்சிக் கலங்கேன்
ஆயினும் நான் பெலன் காண
உழைக்காமற் போயினேன்

4. வாணாள் எல்லாம் வீணாளாகச்
சென்று போயிற்றே ஐயோ
மோசம் போனேன் விட்ட நன்மை
அழுதாலும் வருமோ?

5. பக்தரே உற்சாகத்தோடு
எழும்பிப் பிரகாசிப்பீர்
ஆத்துமாக்கள் யேசுவண்டை
வந்துசேர உழைப்பீர்

## பாடல் – 172

*பல்லவி*

**சுவிசேஷத்தைக் கேட்பீரே**
சுதன் இயேசுவை ஏற்பீரே

***சரணங்கள்***

1. நம் பாவங்கட்காகவே இம் மானிலம் வரவே
சிலுவையைச் சுமந்தாரே
ஜீவனையும் ஈந்தாரே – சுவி

2. நானே வழியும் சத்தியமும் ஜீவனுமே என்றாரே
அவராலே யன்றி நித்திய
ஜீவனில்லை என்றாரே – சுவி

3. வருத்தப்பட்டுப் பாரமே சுமப்பவர்கள் யாவரும்
வருவீரே என்னிடமே
தருவேன் இளைப்பாருதலே – சுவி

4. முள் முடியுடன் சிலுவையிலே முடிந்தது எல்லாம் என்றாரே
உள்ளத்தில் விசுவாசித்தால் வல்ல
இரட்சிப்பைப் பெறுவாய் – சுவி

5. இவ்வளவு பெரிதான இரட்சிப்பை அறியாது
கவலையற்றிருப்போரே
தண்டனைக்குத் தப்புவீரோ? – சுவி

## பாடல் – 173

***சரணங்கள்***

**சீயோன் பாதையில் செல்லுகின்ற**
இயேசுவின் போர் வீரரே
இயேசுவின் நாமத்தை உயர்த்திடுவோம்
இருண்ட இவ்வுலகினிலே

***பல்லவி***

சேனையின் அதிபன்
சர்வ வல்ல இயேசுவே
சுவிசேஷத்தின் கொடி ஏற்றியே
சாற்றுவோம் அவர் சத்தியமே

2. தேவன் ஈந்த சர்வாயுதமே
தேவை இப்போர் முனையில்
சாத்தானின் சைன்னியம் நடுங்கிடவே
சந்தோஷித்தே மகிழ்ந்திடுவோம் – சேனையின்

3. ஸ்தோத்திர தொனியுமே முழங்கிடுவோம்
யுத்தத்தில் போர் வீரரே
இயேசுவின் நிந்தைகள் சுமப்பவரே
இப்போரில் ஜெயம் பெறுவோம் – சேனையின்

4. கேளும் பூமியின் எல்லைகளும்
மாளும் பல ஜாதியும்
என்றுமே சொந்தமாய்த் தந்திடுவேன்
என்றவர் வாக்களித்தாரே – சேனையின்

5. லோக சிற்றின்பம் நமக்கினியேன்
தியாகத்தின் பாதையிலே
இரத்த சாட்சியின் ஆவியோடே
சுவிசேஷப் படையெடுப்போம் – சேனையின்

6. அகில உலகமும் அறிந்திடவே
அவர் சுவிசேஷமே
கால் மதிக்கும் இடம் தந்திடவே
கர்த்தர் நம்மோடிருக்கிறார் – சேனையின்

## பாடல் – 174

**ஜீவனுள்ள தேவனைச் சேவிப்பார் யாருண்டோ?**
ஜீவனை அவர்க்காயளிக்க இங்கு யாருண்டோ?
ஜீவனை இரட்சிப்பவன் இழந்து போவானே
ஜீவனை வெறுப்பவனோ பற்றிக்கொள்வானே – நம்மிலே

2. மனிதர் இன்றும் உலகில் வாழ்ந்து வருவதெவ்வாறு?
ஜீவாதிபதி இயேசு தம் ஜீவன் கொடுத்ததால்
திருச்சபையின் வளர்ச்சி ஓங்கச் செய்த தெவ்வாறு
பரிசுத்தரின் பரிவாரம் ஜீவன் விட்டதால் – நம்மிலே

3. சாத்ராக் மேஷாக் ஆபேத்நேகோ உயர்ந்ததெவ்வாறு
ராஜாவின் உள்ளத்தில் மாற்றம் வந்ததெவ்வாறு?
ஜீவனைப் பணயம் வைத்துத் தீக்குள் சென்றதால்
சிலையை வணங்கத் தயக்கமின்றி மறுத்து நின்றதால் – நம்மிலே

4. பரலோகத்தின் பாக்கியத்தைப் பெறுவோர் யாவரும்
உபத்திரவத்தின் குகைக்குள் நுழைந்து சென்று திரும்பணும்
உலகத்தையும் மேன்மையையும் உதறித் தள்ளணும்
சிலுவையை மட்டும் எடுத்து சுகித்திருக்கணும் – நம்மிலே

5. வெள்ளை அங்கி தரித்து நிற்கும் கூட்டம் யார் இவர்?
இரத்தத்தில் தம் அங்கிகளைத் தோய்த்து வெளுத்தவர்
ஜீவனை வெறுத்துச் சிலுவையை எடுத்து
வெற்றிக்கீதம் பாடும் கூட்டம் உலகில் உதிக்கட்டும் – நம்மிலே

## பாடல் – 175

***பல்லவி***

**தாசரே, இத்தரணியை அன்பாய்**
இயேசுவுக்கு சொந்தமாக்குவோம்.

***அனுபல்லவி***

நேசமாய் இயேசுவைக் கூறுவோம் அவரைக்
காண்பிப்போம், மாவிருள் நீக்குவோம்
வெளிச்சம் வீசுவோம்

*சரணங்கள்*

1. வருத்தப்பட்டுப் பாரஞ்சுமந்தோரை
வருந்தியன்பாய் அழைத்திடுவோம்
உரித்தாய் இயேசு பாவப் பாரத்தை, நமது துக்கத்தை
நமது துன்பத்தைச் சுமந்து தீர்த்தாரே – தாசரே

2. பசியுற்றோர்க்குப் பிணியாளிகட்குப்
பட்சமாக உதவி செய்வோம்
உசித நன்மைகள் நிறைந்து தமை மறந்து
இயேசு கனிந்து திரிந்தனரே – தாசரே

3. நெருக்கப்பட்டு ஒடுக்கப்பட்டோரை
நீசரை நாம் உயர்த்திடுவோம்
பொறுக்க வொண்ணாக் கஷ்டத்துக்குள், நிஷ்டூரத்துக்குள்
படுகுழிக்குள் விழுந்தனரே – தாசரே

4. இந்து தேசமாது சிரோமணிகளை
விந்தையொளிக்குள் வரவழைப்போம்
சுந்தர குணங்களடைந்து, அறிவிலுயர்ந்து
நிர்பந்தங்கள் தீர்ந்து, சிறந்திலங்கிட – தாசரே

5. மார்க்கம் தப்பி நடப்போரைச் சத்ய
வழிக்குள் வந்திடச் சேர்த்திடுவோம்
ஊக்கமாக ஜெபித்திடுவோம் நம் முயன்றிடுவோம்
நாம் உழைத்திடுவோம் நாம் ஜெயித்திடுவோம் – தாசரே

## பாடல் – 176

*பல்லவி*

**பிரிய இயேசுவின் சேனை வீரர்கள் நாம்**
சேனை வீரர்கள் நாம், சேனை வீரர்கள் நாம்
சிலுவை தோளில் சுமந்து போகலாம்
சேனை வீரர்கள் நாம், சேனை வீரர்கள் நாம்

### *சரணங்கள்*

1. நம் தேவன் சமாதானப் பிரபுவே,
நம் சர்வாயுத வர்க்கம் தாழ்மை தானே
நம் ஆத்ம சகாயர் அவரே
சேனை வீரர்கள் நாம் சேனை வீரர்கள் நாம் – பிரிய

2. எப்போதுமே இயேசுவை தியானிப்போம்
எல்லோரும் ஜீவியத்தைத் தியாகஞ் செய்வோம்
இயேசுவின் மகா அன்புக்காய்த் தத்தஞ் செய்வோம்
சேனை வீரர்கள் நாம் சேனை வீரர்கள் நாம் – பிரிய

3. இயேசுவின் அன்புக்காய் இறந்திடுவோம்
புல் பூண்டுமேயானாலும் புசித்திடுவோம்
முன் வைத்த காலை பின் வைக்க மாட்டோம்
சேனை வீரர்கள் நாம் சேனை வீரர்கள் நாம் – பிரிய

4. உலக நேசத்தின் ஊற்றை உடைத்து விட்டோம்
உள்ள மாயைகளை யெல்லாம் ஒழித்து விட்டோம்
உள்ளத்தையெல்லாம் உடையவர்க்கொதுக்கி விட்டோம்
சேனை வீரர்கள் நாம், சேனை வீரர்கள் நாம் – பிரிய

5. இதொன்றே இரட்சண்ய வழி யென்றுணர்ந்தோம்
இதை இருதயத்திலிறுக, இணைத்து விட்டோம்
ஒன்றாயுயிர் வாழ்வோம் இன்றே உயிர் விடுவோம்
சேனை வீரர்கள் நாம், சேனை வீரர்கள் நாம் – பிரிய

6. சாத்தான் கோட்டைகளை யெல்லாம் தகர்த்திடுவோம்
தக்க சமயத்தில் சத்தியத்தைச் சாற்றிடுவோம்
சற்றும் தயங்காமல் சாட்சியைத் தந்திடுவோம்
சேனை வீரர்கள் நாம், சேனை வீரர்கள் நாம் – பிரிய

7. அல்லேலூயா ஜெயத்தை அறிவித்திடுவோம்
அவர் வருகையைப் பற்றி யுரைத்திடுவோம்
அந்தகார ஆதிக்கங்களை அவமாக்குவோம்
சேனை வீரர்கள் நாம், சேனை வீரர்கள் நாம் – பிரிய

## பாடல் - 177

**நல்ல செய்தி இயேசுவை**
நோக்கிப்பார் ரட்சிப்பார்
நம்பிவந்து அவரை
நோக்கிப்பார் ரட்சிப்பார்
எந்தப் பாவியாயினும்
தள்ளமாட்டேன் என்கிறார்
துரோகம் செய்த போதிலும்
நோக்கிப்பார் ரட்சிப்பார்

2. எங்கும் செய்தி சொல்லுவோம்
நோக்கிப்பார் ரட்சிப்பார்
தேசா தேசம் கூறுவோம்
நோக்கிப்பார் ரட்சிப்பார்
எந்த நாடு தீவிலும்
யேசு காத்து நிற்கிறார்
மூடன் நீசன் ஆகிலும்
நோக்கிப்பார் ரட்சிப்பார்

3. இன்னும் கேள் மா நேசராம்
இயேசுவே காக்கிறார்
நம்பும் பக்தரையெல்லாம்
காக்கிறார் காக்கிறார்
சற்றும் தவறாமலும்
கையில் ஏந்திக் கொள்ளுவார்
கேடு பாடில்லாமலும்
காக்கிறார் காக்கிறார்

4. சுவிசேஷம் இதுவே
காக்கிறார் காக்கிறார்
பாவம் நீங்கிப் பின்னுமே
காக்கிறார் காக்கிறார்
மோட்சம் சேருமளவும்
தாங்கிக் கொண்டே இருப்பார்
தீமையைச் செய்யாமலும்
காக்கிறார் காக்கிறார்

## பாடல் - 178

*பல்லவி*

**மந்தையில் சேரா ஆடுகளே**
எங்கிலும் கோடி கோடி உண்டே
சிந்தையில் ஆன்ம பாரம் கொண்டே
தேடுவோம் வாரீர் திருச்சபையே
மந்தையில் சேரா ஆடுகளே

*அனுபல்லவி*

அழைக்கிறார் இயேசு
அவரிடம் பேசு
நடத்திடுவார்

1. காடுகளில் பல நாடுகளில் என்
ஜனம் சிதறுண்டு சாகுவதா?
பாடு பட்டேன் அதற்காகவுமே
தேடுவார் யார் என் ஆடுகளை

2. சொல்லப்பட்டிராத இடங்கள் உண்டு
என்னை அங்கு சொல்ல இங்கு ஆட்கள் உண்டு
அழைப்புப் பெற்றோர் யாரும் புறப்படுவீர்
இது ஆண்டவர் கட்டளை கீழ்ப்படிவீர்

3. எனக்காய் பேசிட நாவு வேண்டும்
என்னைப்போல் அலைந்திடக் கால்கள் வேண்டும்
என்னில் அன்புகூர ஆட்கள் வேண்டும்
இதை உன்னிடம் கேட்கிறேன் தர வேண்டும்

## பாடல் – 179

### *பல்லவி*

**வா, வா, நேசா மலர் சுவிசேஷத்தின்**
மது தனை யுண்டிடவே

### *அனுபல்லவி*

தேவாமிர்தமாம் ஜீவனைக் கண்டிட
சாவாமிர்தமாம் சாமியை அண்டிட

### *சரணங்கள்*

1. ஜீவ போஜனம் ஜீவ நீரதும் தினமும் சுரந்திடுமே
தினமும் பார்த்திட தினமும் கேட்டிட, சிந்தை வருந்திடுமே
பாவ மனைத்தையும் பாடுடனழித்திடும்
ஓவா மகிழ்ச்சியை உளமதிலளித்திடும் – வா வா

2. நானா துலகினில் நலம் பலவடைந்திட நல்லவழி தருமே
நன்மை எடுத்துடன் தின்மை விடுத்திட நல்ல மனம் வருமே
கானாக் கடவுளைக் கண்ணில் காட்டிடும் தோனாத்
துணையதைச் சுபமுடனூட்டிடும் – வா வா

3. கோரக்காப்பிரி, கொல்லும் தீவினர் கொடுமை நீக்கியதே
கோடா கோடியாம் நரரைக் கூட்டி நல்குணம் தாக்கியதே
சோரர்கள் சூதினர் சுத்தராய் மாறினார்
பேரதும் மாறியே பெருமையில் – வா வா

4. இயேசு நாம மதெங்குங் குலாவுமோ இன்பம் அளித்திடுமே
இனிய மறையது இடமே தேடிடில் இதயம் விழித்திடுமே
பேசிடும் பேயெல்லாம் பெயர்ந்திட ஓடிடும்
வீசிடும் ஒளியதை வீறுடன் நீட்டிடும் – வா வா

5. கரும்பைப் புசித்திடக் கையில் கூலியைக் கனிவாய்க் கொடுப்பாருண்டோ?
கண்டிலும் மேலதாய் இனிக்கும் பொருளிதைக் கடிந்து தடுப்பாருண்டோ?
விரும்பியே எடுத்திட வேதமும் வேறில்லை
திரும்பியே அடுத்திட தேவரும் வேறில்லை – வா வா

## பாடல் – 180

### *பல்லவி*

**வாருமே, இயேசு பாதம் சேருமே**
பாரில் பாவம் தீருமே

### *அனுபல்லவி*

வாரும் யாரையும் தள்ளேனென்று வாக்கு அன்பாய்க் கூறினாரே

1. பாவமே அது பொல்லா விஷமே அது உன்னை நாசமாய்ப்
போகச் செய்வதும் தீ நரகினில்
வேகச் செய்யுமே எந்தக் காலமும் – வாருமே

2. மரணமே நினையா நேரமே பிரிவினை செய்யுமே
தருணம் போக்காதே கிருபை தாங்குது
இது சமயம் தேடு ஜல்தியில் – வாருமே

## பாடல் - 181

**விதைப்பும் அறுப்புமே**
பூமியின் மீதினிலே
மாறி மாறி வருமே
பகலும் இரவுமாய்
வருடங்கள் மாயமாய்
நழுவியே சென்றிடுமே

*பல்லவி*

சிந்திப்பீர், சிந்திப்பீர்
காலங்களைச் சிந்திப்பீர்
இயேசு கிறிஸ்துவின்
வேலை ஒன்றே – இன்று
பிரதானம்

2. ஒன்று இரண்டென
எத்தனை வருடங்கள்
கனவென கழிந்தது பார்
எஞ்சிய நாட்களை வஞ்சிக்காது
தேவப் போரினில் ஈடுபடு – சிந்திப்பீர்

3. நாடுகள் நடுவினில்
வாய்ப்புகள் உனக்காக
எத்தனை நாட்கள் உண்டு
சாதகமானதோர் வாசல் இங்கு கண்டு
வந்து பயன்படுத்து – சிந்திப்பீர்

4. ஆழக்கடல்களில்
படகைச் செலுத்திட
கடல்போன்ற தேவையல்லோ?
பாவக் கடலினில் மூழ்கிடும் யாவருக்கும்
படகு உன் சாட்சியல்லோ? – சிந்திப்பீர்

## பாடல் - 182

### *பல்லவி*

**சத்தம் கேட்டு சித்தம் செய்ய அழைக்கிறாரே – இயேசு**
சத்தம் கேட்டு சித்தம் செய்ய அழைக்கிறாரே
சத்தம் கேட்டு சித்தம் செய்ய வருந்தி அழைக்கின்றாரே

### *சரணங்கள்*

காலத்தின் வேகத்தைப் பார்க்கும்போது (ஆ ஆ)
கருத்தாய் கவனமாய் ஜாக்கிரதையாய்
வாழ்ந்து விடும்படி அழைக்கின்றாரே (2)

1. கற்பனைகள் யாவும் நன்றல்லவோ – ஆ அதை கடை பிடித்தாக வேண்டுமே
கீழ்ப்படிந்தவர்கள் அவர்க்குச் சொந்த சம்பத்து அல்லவோ
கீழ்ப்படிந்தால் ஆசீர்வாதம் பெருகும்
கீழ்ப்படியாவிட்டால் சாபம் பெருகும் – சத்தம்

2. தேவை அதிகம் ஏராளம் ஆ ஏராளம் ஏராளமே
குஜராத் பீகார் யூபியில் ஏராளம் ஏராளமே
இராஜஸ்தான், எம்பி, ஒரிஸாவில்
நீ செல்ல மறுத்தால் யார் செல்லுவார் – சத்தம்

3. உலக மாமிசப் பிடியினின்றும் ஆ பிசாசின் தந்திர வலையினுன்றும்
விடுவித்துக் கொள்வோம் செயல்படுவோம் சாத்தானை முறியடிப்போம்
உப்பைப் போல கரைந்து விடு
மெழுகைப் போல உருகி விடு – சத்தம்

4. வெற்றியே தரும் ஆண்டவருக்கு ஆ காணிக்கை காணிக்கையே
உடல் பொருள் யாவும் இயேசுவுக்கே காணிக்கை காணிக்கையே
தேசம் இயேசுவைக் கண்டுவிடும்
சபைகள் ஏராளம் பெருகிவிடும் – சத்தம்

## பாடல் – 183

**அர்ப்பணித்தேன் என்னை முற்றிலுமாய்**
அற்புத நாதா உம் கரத்தில்
அனைத்தும் உமக்கே சொந்தம் என்று
அன்பரே என்னையே தத்தம் செய்தேன்

*பல்லவி*

அனைத்தும் கிறிஸ்துவுக்கே – எந்தன்
அனைத்தும் அர்ப்பணமே
என் முழு தன்மைகள் ஆவல்களும்
அனைத்தும் கிறிஸ்துவுக்கே

2. என் எண்ணம் போல நான் அலைந்தேனே
என்னைத் தடுத்திட்ட தாருமில்லை
உம் சிலுவை அன்பை சந்தித்தேனே
நொறுங்கி வீழ்ந்தேனே உம் பாதத்தில்

3. ஐம்புலன்கள் யாவும் அடங்கிட
ஐம்பெருங் காயங்கள் ஏற்ற நாதா
வான் புவி கிரகங்கள் ஆள்பவரே
என்னையும் ஆண்டிட நீரே வல்லோர்

4. என் வாழ்வில் இழந்த நன்மைக்கீடாய்
எஞ்சிய நாட்களில் உழைப்பேனே
நீர் தந்த ஈவு வரங்கள் யாவும்
உம் பணி சிறந்திட முற்றும் தந்தேன்

## பாடல் – 184

*பல்லவி*

**அன்பரே கூடுங்கள் ஆனந்தம் பாடுங்கள்**
எம்பரன் இயேசுவை என்றென்றும் நாடுங்கள்

1. நல்லநாள் இதிலே நாதனைப் பணியுங்கள்
செல்வ பாக்கியந்தரும் சீமானைத் தேடுங்கள் – அன்பரே

2. சுவிசேஷப் பண்டிகை சோபன தினமதில்
கவி பாடிப் போற்றியே கர்த்தனைக் கொண்டாடுங்கள் – அன்பரே

3. வல்ல தேவன் நம்மோடு வந்திட மன்றாடுங்கள்
தொல்லையணுகாமலே சுத்தனருள் செய்குவார் – அன்பரே

4. கர்த்தரின் கட்டளை கைக்கொண்டு திட்டமாய்
உத்தமரின் திவ்ய ரட்சிப்பைக் கூறுவோம் – அன்பரே

5. பக்தியாய் ஜெபித்துப்பாடியே பூரிப்போம்
நித்தனார் நம்மையே நீடூழி வாழ்விப்பார் – அன்பரே

6. ஆத்தும ஆதாயம் அன்புடனே செய்குவோம்
பாத்திர ராக்கியே பரனாசீர் புரிவார் – அன்பரே

## பாடல் – 185

*பல்லவி*

**இயேசு அழைக்கிறார் இயேசு அழைக்கிறார்**
ஆவலாய் உன்னைத் தம் கரங்கள் நீட்டியே
இயேசு அழைக்கிறார் – இயேசு அழைக்கிறார்

1. எத்துன்ப நேரத்திலும் ஆறுதல் உனக்களிப்பார்
என்றுணர்ந்து நீயும் இயேசுவை நோக்கினால்
எல்லையில்லா இன்பம் பெற்றிடுவாய் – இயேசு

2. கண்ணீரெல்லாம் துடைப்பார் கண்மணிபோல் காப்பார்
கார்மேகம் போன்ற கஷ்டங்கள் வந்தாலும்
கருத்துடன் உன்னைக் காத்திடவே – இயேசு

3. சோர்வடையும் நேரத்தில் பெலன் உனக்களிப்பார்
அவர் உன் வெளிச்சம் இரட்சிப்புமானதால்
தாமதமின்றி நீ வந்திடுவாய் – இயேசு

4. சகல வியாதியையும் குணமாக்க வல்லவராம்
யாராயிருந்தாலும் பேதங்கள் இன்றியே
கிருபையாய் அன்பை அளித்திடவே – இயேசு

## பாடல் – 186

**நெஞ்சத்திலே துய்மையுண்டோ**
இயேசு வருகின்றார்
நொறுங்குண்ட நெஞ்சத்தையே
இயேசு அழைக்கிறார்

1. வருந்தி சுமக்கும் பாவம்
உன்னை கொடிய இருளில் சேர்க்கும்
செய்த பாவம் இனி போதும்
அவர் பாதம் வந்து சேரும்
அவர் பாதம் வந்து சேரும் (2) – நெஞ்

2. குருதி சிந்தும் நெஞ்சம்
உன்னைக் கூர்ந்து நோக்கும் கண்கள்
செய்த பாவம் இனி போதும்
அவர் பாதம் வந்து சேரும்
அவர் பாதம் வந்து சேரும் (2) – நெஞ்

## பாடல் – 187

***பல்லவி***

**அழைக்கிறார் அழைக்கிறார்**
அன்பாய் இன்றே உன்னை
கல்லும் கரையும் கல்வாரியண்டை
கர்த்தர் அழைக்கிறார்

***சரணங்கள்***

1. கேட்டின் மகன் கெட்டழிந்தான்
கெட்ட குமாரனைப்போல்
பாவத்தின் சம்பளம் மரணமே
பாவத்தில் மாளாதே – அழை

2. உந்தன் நீதி கந்தையாகும்
உன்னில் நன்மை ஒன்றில்லை
பாவஞ் செய்தே மகிமையிழந்தாய்
பாவியை நேசித்தார் – அழை

3. பாவங்களை மறைப்பவன்
பாரில் வாழ்வை அடையான்
சன்மார்க்கன் துன்மார்க்கன் இருவரும்
சங்காரம் அடைவார் – அழை

4. நானே வழி சத்தியமும்
நித்திய ஜீவன் என்றார்
இயேசுவை நம்பி நீ ஜெபிப்பதால்
இரட்சணியம் அடைவாய் – அழை

5. காலங்களும் கடந்திடும்
வால வயதும் மாறும்
தேவனைச் சந்திக்கும் வேளையிதே
தேடி நீ வாராயோ – அழை

## பாடல் – 188

***பல்லவி***

**நான் பயப்படவே மாட்டேன்**
என் தேவன் என்னோடு
நான் கலங்கிடவே மாட்டேன்
என் கர்த்தர் என்னோடு

### *அனுபல்லவி*

பாடுவேன் பாடுவேன் பாடிடுவேன்
உம்மை துதிப்பேன் துதிப்பேன் துதித்திடுவேன்

### *சரணங்கள்*

1. மரணம் வருவதாயிருந்தாலும் பயப்படவே மாட்டேன்
துன்பம் தொல்லைகள் வந்தாலும் பயப்படவே மாட்டேன்
ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால் அதனை ஜெயித்திடுவேன்
சாட்சியின் வசனத்தினால் சாத்தானை முறியடிப்பேன் – நான்

2. அக்கினி ஊடாய் நடந்தாலும் பயப்படவே மாட்டேன்
ஆபத்து இடையில் வந்தாலும் பயப்படவே மாட்டேன்
என் இயேசு எப்போதும் என்னோடு இருக்கின்றார்
என்னை அவர் தம் கரத்தால் தாங்கியே அணைத்திடுவார் – நான்

3. தீமை என்னை தொடர்ந்தாலும் பயப்படவே மாட்டேன்
சோதனை என்னை சூழ்ந்தாலும் பயப்படவே மாட்டேன்
வாக்குரைத்த வல்லவர் என்னோடு வருகின்றார்
வருகையில் அவரோடு நானும் பறந்திடுவென் – நான்

## பாடல் – 189

### *பல்லவி*

**அழைக்கிறார் அழைக்கிறார் இதோ**
நீயும் வா உந்தன் நேசர்
ஆவலாய் அழைக்கிறார் – இதோ

### *சரணங்கள்*

1. பாவத்தை ஏற்றவர் பலியாய் மாண்டவர்
கல்வாரியின் மேட்டினில் கண்கொள்ளாத காட்சியே
கண்டிடும், வேண்டிடும் பாவப்பாரம் நீங்கிடும் – அழை

2. நோயையும் ஏற்றவர் பேயையும் வென்றவர்
நேசர் உந்தன் நோய்களை நிச்சயமாய் தீர்த்தாரே
நோயுற்ற உன்னையே நேயமாய் அழைக்கிறார் - அழை

3. துன்பம் சகித்தவர், துயரடைந்தவர்
இன்னலுற்ற உன்னையே அண்ணல் யேசழைக்கிறார்
துன்புறும் நெஞ்சமே துரிதமாக வாராயோ - அழை

4. அந்தக் கேடடைந்தார் அழகற்றுத் தோன்றினார்
சொந்தமாகச் சேர்ந்திட இந்தப் பாடடைந்தாரே
நிந்திக்கும் உன்னையும் சந்திப்பார் நீ வாராயோ - அழை

5. கல்லறைத் திறக்கக் காவலர் நடுங்கக்
கஸ்திகளடைந்தாரே கட்டுகளறுத்தாரே
உயிர்த்தார், ஜெயித்தார் உண்டு மீட்புனக்குமே - அழை

6. சாந்த சொரூபனே! சத்திய வாசனே!
வஞ்சமற்ற வாயனே வந்தணைக்கும் நேயனே
தஞ்சமே தன்னையே தந்துனை அழைக்கிறார் - அழை

## பாடல் - 190

**இயேசு மீட்பருந்தன் நெஞ்சில்**
வாசம் பண்ணவிடாயோ?
உந்தன் பாவம் சுமந்தோரை
இன்று ஏற்றுக் கொள்ளாயோ?

இயேசு மகாராஜர் இதோ
வாசலண்டை நிற்கிறார்
பாவி! நீ இவ்வன்பை எண்ணி
வாசலைத் திறக்கப் பார்

2. பாவம் லோகம் ஆபாசம்
யாவும் இடம் பெற்றதோ
நீசச் சிலுவையில் மாண்ட
நேசர்க் கிடமில்லையோ?

3. இன்னுமே நீ தாமத்தித்தால்
பின்பு மோசம் வருமே
இப்போதே இரட்சண்ய காலம்
அப்பால் பிந்திப் போகுமே

4. கூவி நிற்கும் மீட்பர் சத்தம்
பாவி கேட்டுத் திறப்பாய்
உந்தன் ஜீவன் பெலன் யாவும்
இன்றே தத்தம் செய்குவாய்

## பாடல் – 191

**இருள் சூழும் காலம் இனி வருதே**
அருள் உள்ள நாட்கள் பயன்படுத்தும்
திறவுண்ட வாசல் அடைபடுமுன்
நொருங்குண்ட மனதாய் முன் செல்வார் யார்?

***பல்லவி***

திறவுண்ட வாசல் அடைபடுமுன்
நொருங்குண்ட மனதாய் முன் செல்வார் யார்?
நாட்கள் கொடியதாய் மாறிடுதே
காலத்தை ஆதாயம் செய்திடுவோம்

2. தரிசு நிலங்கள் அநேகம் உண்டு
தரிசனம் பெற்றோர் நீர் முன் வருவீர்
பரிசாக இயேசுவை அவர்களுக்கும்
அளித்திட அன்பினால் எழுந்து செல்வீர்

3. எத்தனை நாடுகள் இந்நாட்களில்
கர்த்தரின் பணிக்குத்தான் கதவடைத்தார்
திறந்த வாசல் இன்று உனக்கெதிரில்
பயன்படுத்தும் மக்கள் ஞானவான்கள்

4. விசுவாசிகள் எனும் கூட்டம் உண்டு
அன்பு ஒன்றே அவர் நடுவில் உண்டு
ஒருமனம் ஒற்றுமை அங்கு உண்டு
என்று சொல்லும் நாட்கள் இன்று வேண்டும்

5. இனி வரும் நாட்களில் நமது கடன்
வெகு அதிகம் விசுவாசிகளே
நம்மிடை உள்ள ஐக்கியமே
வெற்றியும் தோல்வியும் ஆக்கிடுமே

6. இயேசுவே எங்கள் உள்ளங்களை
அன்பெனும் ஆவியால் நிறைத்திடுமே
இந்தியாவின் எல்லா தெருக்களிலும்
இயேசுவின் நாமமும் விரைந்திடுமே

## பாடல் - 192

***பல்லவி***

**உன்னதர் இயேசுவுக்கே – உந்தன்**
உள்ளத்தைத் தந்திடாயோ

***சரணங்கள்***

1. வருந்தும் பாவப் பாரமதை
வருந்தியே சுமக்கும் மானிடனே
வல்லவராம் இயேசுவண்டை
வந்தே சுகம் பெறுவாய் – உன்னதர்

2. வானில் விரைந்தே பறந்தாலும்
பூமியில் கடலினிலே அலைந்தாலும்
தன் ஜீவனைத் தந்தோருன்னை
அன்போடு காத்திடுவார் – உன்னதர்

3. பசும்புல் வெளியில் மேய்த்திடுவார்
பாதையில் வாதையில் காத்திடுவார்
தாகம் வரா ஜீவ தண்ணீர்
தந்துன்னைத் தேற்றிடுவார் – உன்னதர்

4. வழியும், ஜீவன், சத்தியமும்
விழிதனில் ஒளியும் அவர்தானே
அவரையே நீ நம்பி வந்தால்
ஆறுதல் கண்டடைவாய் – உன்னதர்

5. ஜீவ பலியாய் உன்னிதயம்
இயேசுவுக்கு நீ தந்து விட்டால்
மண்ணினிலே சந்தோஷமும்
விண்ணில் வாழ்வும் பெறுவாய் – உன்னதர்

## பாடல் – 193

**உன்னத தேவன் உன்னை அழைக்கிறார்**
நம்பியே வந்திடுவாய் (2)

***அனுபல்லவி***

சிலுவை சுமந்தே உனக்காய் அவர் மரித்தாரே

***சரணங்கள்***

1. பாவத்தில் அழியாதே
தேவனை மறவாதே
இருதயம் தட்டுகிறார்
இன்றதை திறந்தளிப்பாய் – உன்

2. இன்று உன் ஜீவன் போனால்
எங்கு நீ சென்றிடுவாய்
இந்த வேளை சிந்தனை செய்
இயேசுன்னை அழைக்கிறாரே – உன்

3. நரகத்தின் பாதையிலும்
மரணத்தின் வழிகளிலும்
உல்லாசமாய் நடப்பது ஏன்?
உண்மையாய் அறிந்திடுவாய் – உன்

4. தம்மிடம் வருபவரை
தள்ளிடவே மாட்டார்
அன்புகரம் விரித்தவராய்
ஆண்டவர் அழைக்கிறாரே – உன்

## பாடல் – 194

**உலகோர் உன்னைப் பகைத்தாலும்**
உண்மையாய் அன்பு கூருவாயா? (2)
உற்றார் உன்னை வெறுத்தாலும்
உந்தன் சிலுவை சுமப்பாயா? (2)

***பல்லவி***

உனக்காக நான் மரித்தேனே
எனக்காக நீ என்ன செய்தாய் (2)

2. உலக மேன்மை அற்பம் என்றும்
உலக ஆஸ்தி குப்பை என்றும்
உள்ளத்தினின்று கூருவாயா?
ஊழியம் செய்ய வருவாயா (2) – உனக்காக

3. மேய்ப்பன் இல்லாத ஆடுகள் போல்
மேய்கிறார் பாவப்புல் வெளியில் (2)
மேய்ப்பன் இயேசுவை அறிந்த நீயும்
மேன்மையை நாடி ஓடுகின்றாயோ? (2) – உனக்காக

4. இயேசு என்றால் என்ன விலை
என்றே கேட்டிடும் எத்தனை பேர் (2)
பிள்ளைகள் அப்பம் கேட்கின்றனர்
ஜீவ அப்பம் கொடுப்பாயா? (2) – உனக்காக

5. ஐந்து சகோதரர் அழிகின்றாரே
யாரையாவது அனுப்பிடுமே (2)
யாரை நான் அனுப்பிடுவேன்
யார்தான் போவார் எனக்காக (2) – உனக்காக

## பாடல் – 195

**என்னண்டை வந்திடாயோ**
பின்பற்றி வந்திடாயோ
உன்னை நீ வெறுத்து சிலுவையை எடுத்து
பின்பற்றி வந்திடாயோ (2) – என்

2. உலகை ஆதாயம் செய்தும்
ஜீவனோ நஷ்டப்பட்டால்
மரணம் வரும் வேளை மறுமைக்குள் செல்கையில்
என்ன லாபம் உனக்கு (2) – என்

3. கல்வாரி காட்சி கண்டும்
கல் மனம் உருகலையோ
ஐங்காயங்கள் தனில் அடைக்கலம் அளித்திட
அழைப்போரை பாராயோ (2) – என்

## பாடல் - 196

*பல்லவி*

**ஏழை மனுவுருவை எடுத்த**
இயேசு ராஜன் உன்னண்டை நிற்கிறார்
ஏற்றுக்கொள் அவரைத் தள்ளாதே

1. கைகளில் கால்களில் ஆணிகள் கடாவ
கடும் முள் முடி பொன் சிரசில் சூடிட
கந்தையும் நிந்தையும் வேதனையும் சகித்தார்
சொந்தமான இரத்தம் சிந்தினார் உனக்காய்
கனிவுடன் உன்னை அழைக்கிறாரே (2) - ஏழை

2. அவர் தலையும் சாய்க்க ஸ்தலமுமில்லை
அன்று தாகத்தைத் தீர்க்கவோ பானமுமில்லை
ஆறுதல் சொல்லவோ அங்கே ஒருவரில்லை
அருமை இரட்சகர் தொங்குகிறார் தனியே
அந்தப் பாடுகள் உன்னை மீட்கவே (2) - ஏழை

3. அவர் மரணத்தால் சாத்தானின் தலை நசுங்க
அவர் ரத்தத்தால் பாவக் கறைகள் நீங்க
உந்தன் வியாதியின் வேதனையும் ஒழிய
நீயும் சாபத்தினின்று விடுதலை அடைய
சிலுவையில் ஜெயித்தார் யாவையும் - ஏழை

4. மாயை உலகம் அதையும் நம்பாதே
மனுமக்கள் மனமும் மாறிப் போகுமே
நித்திய தேவனை நேசித்தால் இப்போதே
நிச்சயம் சந்தோஷம் பெற்று நீ மகிழ
நம்பிக்கையோடே வந்திடுவாய் - ஏழை

5. இன்னமும் தமதம் உனக்கேன் மகனே
இன்ப இயேசுவண்டை எழுந்து வாராயோ
இந்த உலகம் தரக்கூடா சமாதானத்தை
இன்று உனக்குத் தரக் காத்து நிற்கிறாரே
அண்ணல் இயேசுன்னை அழைக்கிறாரே – ஏழை

## பாடல் – 197

*பல்லவி*

**ஓடி வாராயோ நண்பா உன்**
நேசர் அழைக்கிறார் இன்றே
இன்றே திரும்புவாய் கண்டு

*சரணங்கள்*

1. ஆழ்ந்த கடலில் அமிழும் போது
அணைத்துக் காப்பதும் அவர் கரம் – அன்பின்
குரலின் பெயரை அழைத்தே
தாவி அணைப்பதும் அவர் கரம் – ஓடிவா

2. கள்ளமற்ற அன்பை வார்த்தே
காத்துக் கொள்வதும் அவர் கரம் – ஒன்றும்
இல்லாத் தூசி நம்மை
உயர்த்துவதும் அவர் கரம் – ஓடிவா

3. சீறும் புயலின் தீமை நின்றே
மறைத்து காப்பதும் அவர் கரம் – பாதை
மாறிய கால்களுக்குத்
தீபம் காட்டும் அவர் கரம் – ஓடிவா

4. உற்ற உறவும் கைவிட்டாலும்
உரிமை கொள்ளும் அவர் கரம் – உண்மை
அறிவும் சிறந்த ஞானமும்
ஏந்தி தருவதும் அவர் கரம் – ஓடிவா

5. எங்கு பார்த்தாலும் காயம்தோய்ந்த
ஒளியின் கரங்கள் காணுதே – ஓடி
வந்து பலத்த மார்பில்
சாய்ந்து கொள்ள மாட்டாயோ – ஓடிவா

## பாடல் – 198

*பல்லவி*

**கண்டில்லையோ கவையில்லையோ**
ஆண்டவர் அழைக்கிறார் கேட்கலையோ
வையகமனைத்தும் அவர் சத்தம் பேச
உன்னையும் விரும்புகின்றார்

1. பிள்ளைகள் அப்பம் கேட்டு நின்றார்
வாலிபர் தெருவில் மூர்ச்சையானார்
வயோதிகர் வகை தெரியாது நின்றார் – இன்று
வழிகாட்டி கிறிஸ்தவரே – கண்டில்லையோ

2. அடியவர் தியாகத்தை அணிந்து கொண்டால்
அடியவர் தானாய்த் திருந்திடுவார்
அறியாமை உலகை மூடுவதேன் – என்
பொறுப்பை நான் அறியாததே – கண்டில்லையோ

3. உலகத்தில் வெளிச்சம் வீச வேண்டி
பரலோகத் தந்தை ஆணையிட்டார்
நினைப்பவர் யாரோ உழைப்பவர் எவரோ
உதவுவார் யார் யாரோ – கண்டில்லையோ

## பாடல் – 199

**சிலுவைக் காட்சி காண வாராய்**
சிந்தின ரத்தம் ஓடுவதை பாரா

### *சரணங்கள்*

1. அண்ணல் இயேசு உன் அதிபதியாக
இன்று ஏற்றுக்கொள் தள்ளிவிடாதே
இன்னல் ஏதும் உன்னைச் சேராதே
இன்றே வா (2) – சிலுவை

2. பாவியென் றெண்ணி தியங்காதே
பரன் இயேசுவை தள்ளிவிடாதே
பாவ தோஷம் எல்லாம் தீர்ப்பாரே
இன்றே வா (2) – சிலுவை

3. இன்று உன் ஜீவன் போனால்
உன் நித்திய வாழ்வெங்கே கழிப்பாய்
இதயம் திறந்தே ஏற்றுக் கொள்வாய்
இன்றே வா (2) – சிலுவை

4. உன் வாழ்க்கையின் வழி ஜீவன் இயேசு
உணர்ந்து அவரிடம் வந்து பேசு
உலக ரட்சகர் உன் இயேசு
இன்றே வா (2) – சிலுவை

## பாடல் – 200

**பாவியே ஜீவ ஊற்றண்டை வா**
மேவியே ஜீவனடைவாய்
கூவியே இயேசு கூப்பிடுகிறார்
தாவியே ஓடி நீ வா

### *பல்லவி*

தாமதமே செய்திடாதே
தருணமே இதை விடாதே
தற்பரன் இயேசு உன்னை இரட்சிப்பார்
பொற்பதம் ஓடியே வா

2. உள்ள நிலைமையுடனோடிவா
கள்ள உலகை விட்டு
தள்ள மாட்டாரே எப்பாவியையும்
வல்ல இயேசு நாதரே – தாமதமே

3. பாவியொருவன் திரும்பும் போது
மேவிகள் அவர் முன்னால்
காவியங்கள் கொண்ட பாடல்களை
கூவியே கூப்பிடுகிறார் – தாமதமே

4. உண்மையாய் இயேசுவை ஏற்பவரே
வெண்மையாக மாற்றுவார்
நன்மையை நாடெங்கும் செய்திட்டவர்
உன்னையும் அழைக்கிறார் – தாமதமே

## பாடல் – 201

***சரணங்கள்***

**பாவி உன் மீட்பர் கரிசனையாய்**
அழைக்கிறார்! அழைக்கிறார்!
அலைந்து திரிந்து ஏன் கெடுவாய்?
இயேசுவின் இரட்சிப்பைப் பார்

***பல்லவி***

அழைக்கிறார்! அழைக்கிறார்!
விரும்பி வருந்தி உந்தனை அழைக்கிறார்

2. இளைத்தும் தவித்தும் போனவனை
அழைக்கிறார்! அழைக்கிறார்
நம்பிக்கையோடவர் சரணத்தை
சேருவாய் தள்ள மாட்டார்

3. தாமதமின்றி இந்நேரத்தினில்
வந்திடுவாய்! வந்திடுவாய்!
பாவமுமற உன் நெஞ்சத்தினில்
வாழ்வையும் பெற்றிடுவாய்

4. விரும்பி வருந்தி அழைக்கிறார்
ஓடியே வா! ஓடியே வா!
வந்திடுவோரைச் சந்தோஷிப்பிப்பார்
உடனே உடனே வா!

## பாடல் - 202

***பல்லவி***

**பாவம் பெருகுதே**
பாரும் பரன் இயேசுவே
அழியும் மனுக்குலம்
அதையும் இரட்சிப்பீரே!

***சரணங்கள்***

1. ஆத்துமா இரட்சிப்பிழந்தவர்
ஆயிரம் ஆயிரமாய்
அன்றாடகம் இந்த மண்ணடியில்
அழிந்து சாகின்றாரே – பாவம்

2. இரட்சிப்பின் நற்செய்தி கேட்டவர்
எச்சரிப்பை வெறுத்து
இரட்சகர் இயேசுவை இழந்தோராய்
இன்றும் கெட்டழிகின்றார் – பாவம்

3. தானியேல் போல ஜெபித்திடும்
தாசர் பலர் மறைந்தார்
திறப்பின் வாசலில் நிற்கும் சிலர்
தூங்கிக் களைத்துப் போனார் – பாவம்

4. எமது காரியமாகவே
யாரை அனுப்பிடுவேன்
என்றவர் அழைக்கும் தூய சத்தம்
என்னுள்ளம் தொனிக்குதே – பாவம்

5. ஜீவனை வெறுத்துத் தியாகமாய்
சேவையும் செய்திடுவேன்
சேவைக்கு ஈடாக ஜனங்களை
ஜீவ தேவன் தருவார் – பாவம்

6. வெறுங்கையாய் பரலோகத்தில்
வந்திடோம் இயேசு நாதா
ஆத்துமா ஆதாயம் செய்திடவே
ஆசீர் பொழிந்தனுப்பும் – பாவம்

## பாடல் – 203

**காலம் கடந்திடும் முன்னர் கருத்துக் கொள்வார் வாருமே**
ஞாலத்தில் இயேசுவின் நாமம் எடுத்துச் செல்லச் சேருமே
சுத்தக் கரத்தை உயர்த்தி பரிசுத்தர் யாரும் சேருமே
பாவத்தில் சாகும் ஜனத்தை தடுத்து நிறுத்தக் கூடுமே – இன்றே

காலம் கடந்திடும் முன்னர்
கருத்துக் கொள்வார் வாருமே
ஞாலத்தில் இயேசுவின் நாமம்
எடுத்துச் செல்லச் சேருமே

2. தன் கடன் செய்யா மனிதர், கவலையில் வாடி நிற்பார்
தீபத்தில் எண்ணெய் பெறாதோர் துக்கத்தில் மூழ்கிடுவார்
ஆத்தும ஆதாயம் சொய்யார், சிரசினில் அடித்துக் கொள்வார்
மாயமாலம் புரிந்தோர்க்கு செம்மையாயப் பதில் கொடுப்பார்– இன்றே

3. சீஷர்கள் யாவரும் ஒன்றாய் ஜோதியாய் திகழ்ந்திடுவார்
இரத்த சாட்சிகளின் கூட்டம், வெற்றி முழக்கம் செய்யும்
ஜெபித்தோர், சிரத்தை எடுத்தோர், ஆனந்த பாடல் செய்குவார்
இராஜாதி இராஜன் இயேசுவே, நீதியாய் அரசாளுவார் – இன்றே

4. நீ வாழும் இப்பூமி நாசம் ஆகும் காலம் வருதே
உலகின் கடைசி சந்ததி, நீயாக இருக்கலாமே
எழும்பு, எழும்பு தெபொராள் பாராக்கே விழித்துவிடு
தேவைக்கு ஏற்ற பெலனை, இன்றைக்கே பெற்றெழும்பு – இன்றே

## பாடல் – 204

**காலத்தின் அருமையை உணர்ந்து**
வாழாவிடில் கண்ணீர் விடுவாயே

***அனுபல்லவி***

ஞாலத்தில் பரனுன்னை நாட்டின நோக்கத்தை
சீலமாய் நினைத்தவர் மூலம் பிழைத்திடுவாய்

***சரணங்கள்***

1. மதியை இழந்து தீய வழியிலே நீ நடந்தால்
வருங்கோபம் அறிந்திடாயோ?
கதியாம் ரட்சண்ய வாழ்வை நீ கண்டு மகிழ்ந்திட
காலம் இதுவே நல்ல காலம் என்றறியாயோ?

2. இகத்தினில் ஊழியம் அகத்தினில் நிறைவேற
யேசுனை அழைத்தாரல்லோ,
மகத்துவ வேலையை மறந்து தூங்குவாயானால்
பகற்கால முடியும் ராக்காலத்திலென்ன செய்வாய்?

3. முந்தின எரேமியா அனனியாவுக் குரைத்த
முடிவை நீ அறியாயோ?
எந்தக் காலமும் சிரஞ்சீவி யென்றெண்ணிடாமல்
ஏற்ற ஆயத்தமாய் எப்போதும் இருந்திடாயோ? – காலத்தின்

## பாடல் - 205

**காலமோ செல்லுதே**
வாலிபமும் மறையுதே
எண்ணமெல்லாம் வீணாகும்
கல்வி எல்லாம் மண்ணாகும்

மகிமையில் இயேசுவை
தரிசிக்கும் நேரத்தில்
அந்த நாள் நல்ல நாள்
பாக்கிய நாள் - மகிமையில்

2. கருணையின் அழைப்பினால்
மரண நேரம் வருகையில்
சுற்றத்தார் சூழ்ந்திட
பற்றுள்ளோர் பதறிட - மகிமையில்

3. துன்பமெல்லாம் மறைந்துபோம்
இன்னலெல்லாம் மாறிப்போம்
வியாதி எல்லாம் நீங்கிப்போம்
நாயகன் நம் இயேசுவால் - மகிமையில்

4. உலகத்தின் மாந்தரே
கலங்காது வாருமேன்
இயேசுவை அண்டினால்
கிலேசங்கள் மாறிப்போம் - மகிமையில்

## பாடல் - 206

*பல்லவி*

**பொங்கிவரும் அருள் மனிதரை மாற்றிடுதே**
மங்கிப்போன மனம் புது வாழ்வில் மலர்ந்திடுதே

***சரணங்கள்***

1. தீயவர் திருடரும், கொடியவர் கொலைஞரும்
இயேசுவில் மாற்றம் பெற்றார்
மாறிய மனதுடன் மங்கள வாழ்விற்கு
அழைக்கிறார் – ஓடியே வா

2. தேவனின் ஆவியால் விடுதலை வாழ்வினை
பெற்றவர் பலருமுண்டு
இயேசு மகா இராஜன் உன்னைத் தான் அழைக்கிறார்
நம்பி நீ ஓடியே வா

3. கிருபையின் நாட்களைத் தயவுடன் ஏற்றிடக்
கனிவுடன் வேண்டுகிறோம்
வருகையின் நாளினில் வருந்திட வேண்டாம் நீ
அழைக்கிறார் – ஓடியே வா

## பாடல் – 207

**பெலமுள்ள நகரமாம் இயேசு வண்டை**
பயமின்றி ஓடி நீ வந்திடுவாய்
சஞ்சலத்தில் வேறு வழியில்லை
சந்ததம் அவர் நம்மைக் காத்துக் கொள்வார்

2. நிலையில்லா உலகத்தின் அலைகளாலே
அலைந்திடும் பயனென்ன புதல்வனே நீ
விசுவாசக் கப்பலில் சேமமாக
யாத்திரை செய்பவர்க்கு லோகம் வேண்டாம்

3. கழுகைப் போல பறந்து நீ உன்னதத்தில்
வாழ்கின்ற வாழ்வையே வாஞ்சித்துக் கொள்
காத்திருந்தால் அவர் ஈந்திடுவார்
பெருக்கமுள்ள பலன் மக்களுக்கு

4. மரணம் தான் வருகினும் பயப்படாதே
விரைந்துன்னைக் கர்த்தர் தாம் காத்திடுவார்
யாதொன்றும் உன்னைப் பயப்படுத்த
எங்குமில்லை யென்று விசுவாசிப்பாய்

5. ஆறுதலடையு மாநாடு சென்று
இயேசுவின் மார்பில் நாம் ஆனந்திப்போம்
பரம சுகம் தரும் ஊற்றுகளில்
பரனோடு நித்தியம் வாழ்ந்திடுவோம்

## பாடல் – 208

**நீ இயேசு மார்பில் சாய்ந்து இரு**
உன்னை ஆதரிப்பார், ஆதரிப்பார்
அவரின் மாறா அன்பை நம்பு
உன்னைப் பூரிப்பாக்குவார்

*பல்லவி*

சாய்ந்து இரு நீ நம்பிக்கையோடே
சாய்ந்து இரு நீ பாக்கியம் பெறுவாய்
சாய்ந்து இரு நீ பரத்தை நோக்கி
கிறிஸ்துவிலே சாய்ந்திரு

2. நீ இயேசு மார்பில் சாய்ந்து இரு
பாதை சீராக்குவார், சீராக்குவார்,
மெல்லிய அவர் சத்தம் கேளு
அவரைப் பின் செல்லு – சாய்ந்து

3. நீ இயேசு மார்பில் சாய்ந்து இரு
தள்ளு கவலைகள், கவலைகள்
உன் விசார மெல்லாம் அவரண்டை
ஜெபத்திலே ஒப்புவி – சாய்ந்து

4. நீ இயேசு மார்பில் சாய்ந்து இரு
நீ பிரகாசிப்பாய், பிரகாசிப்பாய்
உன் பாவ இருளெல்லாம் அகற்றி
உன்னைத் தீபமாக்குவார் – சாய்ந்து

5. நீ இயேசு மார்பில் சாய்ந்து இரு
நித்திய இராஜ்யமதில், இராஜ்யமதில்
நீதியின் கிரீடமென்றும் அணிந்து
நிலை பெற்றிருப்பாய் – சாய்ந்து

## பாடல் – 209

**நீங்காத பாவம் நீங்காத தேனோ**
நீங்கிடும் நாள் தான் இதோ
பாவியை ஒருபோதும் தள்ளாத நேசர்
வாவென்று அழைக்கிறார்

2. காணாத ஆட்டை தேடிடும் மேய்ப்பர்
கண்டுன்னைச் சேர்த்திடுவார்
பாவியை ஒருபோதும் தள்ளாத நேசர்
வாவென்று அழைக்கிறார்

3. என் பாவம் போக்கி என்னையும் மீட்டார்
உன்னையும் மீட்டிடுவார்
பாவியை ஒருபோதும் தள்ளாத நேசர்
வாவென்று அழைக்கிறார்

3. நினையாத நேரம் மரணம் சந்தித்தால்
எங்கு நீ சென்றிடுவாய்
பாவியை ஒருபோதும் தள்ளாத நேசர்
வாவென்று அழைக்கிறார்

## பாடல் – 210

### *பல்லவி*

**மகனே ஓ மகளே உன் இதயத்தைத் தாராயோ**
இப்போ தாராயோ இப்போ தாராயோ

### *சரணங்கள்*

1. கெட்ட மகனைப் போலத் துட்ட வழிகளில்
மட்டு மிஞ்சி நீ அலைந்தாய் – உன்னைக்
கட்டிப் பிடித்து முத்த மிட்டே அரவணைப்பேன்
திட்டம் இது ஓடிவா – மகனே

2. அஞ்சா மனதுடனே பஞ்சமா பாதகங்கள்
மிச்சவுமே புரிந்தாய் – உன்
நெஞ்சம் உருகுதப்பா பஞ்ச காயங்களிலே
தஞ்சம் தருவேன் வாராயோ – மகனே

3. அங்கரங்கள் துளைக்க செங்குருதி சுரக்க
தொங்கிக் குருசில் மரித்தேன் – உன்
பங்கம் அனைத்தும் போக்கித் தங்க அரண்மனையில்
சிங்காசனத்தில் அமர்த்த – மகனே

4. கையில் உனை எடுத்து மெய்யாய் அரவணைத்துக்
கண்ணீர்கள் யாவும் துடைப்பேன் – நீ
செய்யும் ஜெபங்கள் கேட்டுப் பெய்வேன் ஆசீர்வாதங்கள்
நையாது காத்திடுவேன் – மகனே

5. நித்திய இராச்சியத்தில் நித்திய ஜீவனோடு
நித்திய காலம் வாழலாம் – பரி
சுத்த உலகமதில் அத்தன் மணவறையில்
நித்தம் சுகித்திடலாம் வா – மகனே

## பாடல் - 211

*பல்லவி*

**வருவாய் தருணமிதுவே அழைக்கிறாரே**
வல்ல ஆண்டவர் இயேசுவண்டை

1. வாழ்நாளை எல்லாம் வீண் நாளாய்
வருத்தத்தோடே கழிப்பது ஏன்
வந்தவர் பாதம் சரணடைந்தால்
வாழ்வித்து உன்னைச் சேர்த்துக் கொள்வார் - வரு

2. கட்டின வீடும் நிலம் பொருளும்
கண்டிடும் உற்றார் உறவினரும்
கூடு விட்டு உன் ஆவி போனால்
கூட உன்னோடு வருவதில்லை - வரு

3. அழகும் மாயை நிலைத்திடாதே
அதை நம்பாதே மயக்கிடுமே
மரணம் ஓர் நாள் சந்திக்குமே
மறவாதே உன் ஆண்டவரை - வரு

4. வானத்தின் கீழே பூமிமேலே
வானவர் இயேசு நாமம் அல்லால்
இரட்சிப்படைய வழி இல்லையே
இரட்சகர் இயேசு வழி அவரே - வரு

5. தீராத பாவம், வியாதியையும்
மாறாத உந்தன் பெலவீனமும்
கோரக் குருசில் சுமந்து தீர்த்தார்
காயங்களால் நீ குணமடைய - வரு

6. சத்திய வாக்கை நம்பியே வா
நித்திய ஜீவன் உனக்களிப்பார்
உன் பெயரை ஜீவ புஸ்கத்தில்
உண்மையாய் இன்று எழுதிடுவார் - வரு

## பாடல் - 212

**வா–வா இயேசு பாதம் தருவாராசீர்வாதம்**
வருவாய் ஓ இந்நேரம் உனக்கேன் தாமதம்
வாராய் தீவிரமாய் வாசலண்டை
நிற்கும் நேசர் பாராய் – வா–வா

### *சரணங்கள்*

1. ஓ காடு மேடாகச் சாடி ஓடும் ஆடே – உன்
கோனார் நாடித்தேடி வாறார் உன் காலடி
நில்–நில் நீங்காமல் நில்–நாச பாதை
தனில் சென்றிடாமல் – வா–வா

2. ஓ கால் கரங் கன்னம் குருதி பாயு தின்னம்
உருகுதவர் உள்ளம் உனக்கேன் கல் மனம்
பார் பார் மார்பினில் பார் பாரிலுனக்காய்த்
தாம் பலியானார் – வா–வா

3. ஓ பஞ்சைப் போல் தஞ்சம் –உன் நெஞ்சதனில் கொஞ்சம்
ஓ பஞ்சரித்துக் கெஞ்சும் குரல் கேள் இக்கணம்
கேள்–கேள் நேசர் குரல் வேகமாய்
திறந்திடுவாய் வாசல் – வா–வா

## பாடல் - 213

### *பல்லவி*

**வா வா பாவி அழைக்கிறார் இயேசு**
ஆவலாய் தம்மிடம் – ஆ ஆ ஆ

### *அனுபல்லவி*

தேவ குமாரன் தானே
தேடியுனை அலைந்தாரே
தேவ கோபம் வருமுன்னே
ஜீவன் பெறத் தடை என்ன? – வா வா

## *சரணங்கள்*

1. தன்னிடம் வருவோர் எவரானாலும்
தள்ள மாட்டார் இயேசு
உன்னிடம் அன்போடவர்க்கு
உருக்கமும் உண்டு அதற்கு
உண்மையான அத்தாட்சி
தன்னைக் கொடுத்ததே சாட்சி – வா வா

2. வருந்தி நீ பாவப்பாரம் சுமப்பதைப்
பார்க்கச் சகிக்காமல்
வருந்தி அழைக்கிறார் இயேசு
வந்து அவரிடம் பேசு
திருந்தி மனங் கொண்டு வந்தால்
அறிந்திடுவாய் அவரன்பை – வா வா

3. கல்மனமோ கல்வாரியைக் கண்டும்
கரையாதோ உன் உள்ளம்
நில் சிலுவையண்டை சற்றே
நீசக் கோலம் தான் உற்றே
நீசன் உன்னையே மீட்டாரே
பாசமாய் அழைக்கிறார் தாமே – வாவா

4. ஆனந்த பாக்கியம் நீ அடைந்திடுவாய்
அவர் பிள்ளையாகும்போது
கானம் இசைத்து நீ மகிழ்வாய்
கர்த்தரின் நாமம் புகழ்வாய்
தானங்கள் பலவுவே பெறுவாய்
வானவர் வரவில் இன்புறுவாய் – வா வா

## பாடல் – 214

***பல்லவி***

**வாலிப நாளில் உன் தேவனைத் தேடி ஓடிவா**
பாவி உன்னை அழைக்கிறார் இயேசு ராஜனே

***சரணங்கள்***

1. பாவம் உன்னை தொடருமே சாபம் கொல்லுமே
உன் இன்ப லாபம் எல்லாமே சாபம் காலம் இதுவே – வாலிப

2. எத்தனையோ விபத்தினின்று உன்னை விலக்கினார்
நித்தம் உன்னை பத்திரமாய் நடத்தி வருகிறார் – வாலிப

3. அந்தரங்க பாவத்தினால் வேதனையுற்றேன்
உந்தன் திருரத்தத்தினால் ஆனந்தம் பெற்றேன் – வாலிப

4. உன் கோர பாவம் எல்லாம் சுமந்து தீர்த்தே
வன் கொலையின் வாதை எல்லாம் மகிழ்ந்து சுகித்தாரே – வாலிப

## பாடல் – 215

***பல்லவி***

**வாசலண்டை நின்று ஆசையாய் தட்டும்**
நேசர் இயேசுவுக்குன்னுள்ளம் திறவாயோ

***அனுபல்லவி***

பாவியை ஒருபோதும் தள்ளாத நேசர்
வாவென்று உன்னை அழைக்கிறாரே

***சரணங்கள்***

1. ஆதரிப்பார் ஆருமில்லை யென்றெண்ணி
ஆதரை மீதினில் அலைந்திடுவாயே
காணாத ஆட்டைத் தேடி வந்த மேய்ப்பர்
கண்டுன்னை மந்தையில் சேர்த்திடுவார் – வாச

2. அற்ப வாழ்வை நித்திய வாழ்வு என்றெண்ணி
தற்பரன் தயவை தள்ளிடலாமா?
நினையாத நேரம் மரணம் சந்தித்தால்
நித்தியத்தை எங்கு நீ கழிப்பாய்? – வாச

3. பாவத்தினால் சாப ரோகத்தால் தொய்ந்து
மாயையில் ஆழ்ந்து மடிந்திடுவானேன்
பாவத்தைப் போக்கிடும் தூய உதிரத்தின்
ஜீவ ஊற்றில் மூழ்கி மீட்புறாயோ – வாச

4. மனம் மாறி மறுபடி பிறந்திடாயாகில்
மகிபரின் இராஜ்ஜியம் காணக் கூடுமோ
பிறந்தாலோ ஜலத்தாலும் ஆவியாலும் மெய்யாய்
பிரவேசிப்பாய் தேவ இராஜ்ஜியத்தில் – வாச

5. வழியும் சத்தியமும் ஜீவனும் இயேசு
வாசலும் மேய்ப்பனும் நாதனும் இயேசு
இயேசுவல்லால் வேறு இரட்சிப்பு இல்லையே
இரட்சண்ய நாள் இன்றே வந்திடாயோ – வாச

## பாடல் – 216

**வாசலண்டை நிற்கும் நேசரை**
பாராயோ கேளாயோ

1. காடு மேடாய் ஓடும் ஆடே
நாடி தேடி வாராரே
பாடுபட்டார் பாவம் தீர்க்க
நாடும் என்றும் நாதன் பாதம்

2. உந்தன் பாவம் சுமந்தோரை
சொந்தமாய் ஏற்றிடாயோ
மிஞ்சும் உன் பாவம் நீக்கிடுவார்
தஞ்சம் அவரே தாங்கிடுவார்

3. நல்லாயன் நான் என்று சொன்னாரே
வல்லவர் இயேசு தாமே
பொல்லாத எந்தப் பாவியையும்
அல்லல் வராமல் தாங்கிடுவார்

4. உள்ளே வாரும் எந்தன் இயேசுவே
தள்ளாமல் ஏற்றுக் கொள்வேன்
உள்ளம் யாவும் தூய்மையாக்கி
பிள்ளையாய்ப் பாவி என்னை ஏற்பீர்

## பாடல் – 217

**வாழ்வல்லவோ இது வளமான வாழ்வு**
வாழ்வின் பகுதிகள் எல்லாம் இயேசுவால்
வளமாய் வளர்ச்சி பெறும் (2)

1. பாவத்தால் தேயும் உன் உள்ளமே
சாபத்தில் தேடும் மெய் நிம்மதி
இன்றைக்கே ஈவார் நல் மன மாற்றம்
ஏற்றுக்கொள் இயேசுவின் மன்னிப்பையே (2) – வாழ்வல்லவோ

2. கட்டின்றி ஓடும் உன் வாழ்வினை
கட்டாறாய்ப் பாயும் உன் தாலந்தை
மட்டின்றி ஊரும் தம் அன்பினாலே
மாற்றியே மாற்றுவார் பிறரையே (2) – வாழ்வல்லவோ

3. ஏதேனில் பாய்ந்த நல்வாழ்விது
கல்வாரி மீட்ட நல்வாழ்விது
என்றுமே நாம் வாழ் இவ்வாழ்வினை வாழ
மீண்டும் நம் இயேசுவே வருகின்றார் (2) – வாழ்வல்லவோ

அட்டவணை

## பாடல் - 218

**வாராயோ இயேசுவண்டை**
தாராயோ உன் உள்ளத்தை (2)

1. பாழும் உலகின் பாதங்களில்
பாவி சிக்குண்டலை கின்றாயோ
பாசம் மிகுந்து பாரில் உதித்த
நேசர் இயேசு சத்தம் கேள்

2. செல்வப் பற்றினால் சீர் கேட்டைந்து
நல்லப் பாதையை மறந்தாயோ
இல்லான் போலவே இகத்தில் திரிந்த
வல்ல இயேசு சத்தம் கேள்

3. ஈசனோடு உள்ள பாச உறவை
நீச துரோகத்தால் இழந்தாயோ
நீசச் சிலுவை மீதில் தொங்கின
நேசர் இயேசு சத்தம் கேள்

4. நன்றி மறந்து நாட்டைத் துறந்து
பன்றி தவிட்டை உண்கின்றாயோ
இன்று உன்னையே நின்று அழைக்கும்
இன்ப இயேசு சத்தம் கேள்

5. பாவச் சேற்றினில் உழன்று தவித்து
ஜீவ பாதையை மறந்தாயோ
மேவி உன்னையும் மீட்க மரித்த
தேவன் இயேசு சத்தம் கேள்

## பாடல் - 219

**அனுதினம் அவர் பாதம் ஆசையாய் அமர்ந்து**
அவருக்கு முதலன்பை ஆவலாய் அளித்து
இயேசுவே வாஞ்சையாய் இன்பமாய் கருதும்
உள்ளமுடையோனே உண்மை சீஷன்

சீஷனாய் மாறுவேன் நான்
சீஷராய் மாற்றுவேன் நான்
என்னாலே ஒன்றுமில்லையே
எல்லாம் என் இயேசுவால் கூடுமே (2)

2. சுயத்தை வெறுத்து சிலுவையை சுகித்து
சுய சித்தம் உடைத்து அவயவம் படைத்து
இயேசுவின் சாயலில் அனுதினம் வளரும்
இன்பம் பெற்றவனே உண்மை சீஷன் – சீஷனாய்

3. உடைப்பட்ட அப்பமாய் உலகத்தின் உப்பாக
ஜோதியாய் ஜொலிக்கும் வெளிச்சமாய்
எங்கெங்கும் செல்லினும் இயேசுவைச் சொல்லிடும்
இயேசுவின் சாட்சியே உண்மை சீஷன் – சீஷனாய்

4. ஆவியின் கனிகள் அதிகம் நிறைந்து
அவருக்கே மகிமையை அகத்தினில் அளித்து
ஆவியில் நிறைந்து அன்புக்கிரியை செய்யும்
ஆண்டவர் அடிமையே உண்மை சீஷன் – சீஷனாய்

## பாடல் – 220

**ஒப்புவித்தேன் ஐயனே**
உம் சித்தம் செய்ய தந்தேனே
முற்றிலுமாய் அர்ப்பணித்தேன்
ஏற்றுக் கொள்ளும் இயேசுவே

1. சுட்டெரிக்கும் அக்கினியால்
சுத்திகரித் தெம்மை மாற்றிடுமே
ஆவி ஆத்மா சரீரமும்
ஆத்தும நேசரே படைக்கிறேன்

2. அத்தி மரம் துளிர் விடாமல்
ஆஸ்திகள் யாவும் அழிந்திடினும்
கர்த்தர் தம் அன்பை விட்டு நீங்கா
தூய கிருபை தந்தருளும்

3. எந்தனின் சிந்தை முன்னறிவீர்
எந்தனின் பாதை நீர் அறிவீர்
நல்ல பாதை நடந்திட
நாதனே என்னையும் அர்ப்பணித்தேன்

4. சோதனை எம்மை சூழ்ந்திடினும்
சொர்ந்திடா உள்ளம் தந்தருளும்
ஜீவ கிரீடம் முன்னே வைத்தே
ஜீவியக் காலம் நடந்திட

## பாடல் - 221

**உத்தமமாய் முன் செல்ல உதவி செய்யும் யெகோவா**
ஊக்கமதைக் கைவிடாமல் காத்துக்கொள்ள உதவும் (2)

2. பலவிதமாம் சோதனைகள் உலகத்தில் எமை வருத்தும்
சாத்தானின் அக்கினி அஸ்திரங்கள் எண்ணா நேரத்தில் தாக்கும்(2)

3. தீர்மானங்கள் தோற்கா வண்ணம் காத்துக்கொள்ள உதவும்
நேர்மையாக வாக்கைக் காக்க வழி வகுத்தருள வேண்டும் (2)

4. இவ்வுலக மாயாபுரி அழியப்போவது நிச்சயம்
இரட்சகனே நீர் இராஜாவாக வருவது அதி நிச்சயம் (2)

5. தூதருடன் பாடலோடு பரலோகில் நான் உலாவ
கிருபை செய்யும் இயேசு தேவா உண்மை வழி காட்டியே (2)

## பாடல் - 222

**சாட்சிகள் இயேசுவின் சாட்சிகள்**
சாட்சிகள் உலகில் நாங்கள் சாட்சிகள்

1. பரிசுத்த ஆவியினால் பெலனடைந்த சாட்சிகள்
உன்னத தேவனால் உயிரடைந்த சாட்சிகள்

எருசலேமில் சாட்சிகள்
யூதேயாவில் சாட்சிகள்
சமாரியாவில் சாட்சிகள்
உலகமெங்கும் சாட்சிகள்

2. இயேசுவில் நிலைத்திருக்கும் நித்தியமான சாட்சிகள்
கனிகொடுத்து கர்த்தரை மகிமைப்படுத்தும் சாட்சிகள் – எரு

3. தெரிந்து கொள்ளப்பட்ட எங்கள் தேவனின் சாட்சிகள்
துன்பப்படுத்தப்பட்டும் துணிந்த வீர சாட்சிகள் – எரு

## பாடல் - 223

**அன்புள்ள இயேசையா**
உம் பிள்ளை நான் ஐயா
ஆனந்த ஒளி பிறக்கும்
வாழ்வெல்லாம் வழி திறக்கும் – 2

1. காடு மேடு ஓடிய ஆடு
என்று என்னை வெறுத்திடவில்லை
நாடி என்னைத் தேடிய தயவல்லவோ
பாடுவேன் வாழ்வெல்லாம் இன்பம் – அன்புள்ள

2. பகலில் மேகம் இரவில் ஜோதி
பசிக்கு மன்னா ருசிக்கவும் அன்பு – 2
நாடி என்னைத் தேடிய தயவல்லவோ
பாடுவேன் வாழ்வெல்லாம் இன்பம் – அன்புள்ள

3. தாகம் தீர ஜீவ தண்ணீர்
உள்ளங்கையில் என்னையும் கண்டீர் – 2
நாடி என்னைத் தேடிய தயவல்லவோ
பாடுவேன் வாழ்வெல்லாம் இன்பம் – அன்புள்ள

## பாடல் – 224

### *பல்லவி*

**தந்தேன் என்னை இயேசுவே**
இந்த நேரமே உமக்கே

### *அனுபல்லவி*

உந்தனுக்கே ஊழியஞ்செய்யத்
தந்தேன் என்னைத் தாங்கியருளும் – தந்தேன்

### *சரணங்கள்*

1. ஜீவ காலம் முழுதும்
தேவ பணி செய்திடுவேன்
பூவில் கடும் போர் புரிகையில்
காவும் உந்தன் கரத்தினில் வைத்து – தந்தேன்

2. உலகோர் என்னை நெருக்கிப்
பலமாய் யுத்தம் செய்திடினும்
நலமாய் சர்வ ஆயுதம் பூண்டு
நானிலத்தினில் நாதா வெல்லுவேன் – தந்தேன்

3. உந்தன் சித்தமே செய்வேன்
எந்தன் சித்தம் ஒழித்திடுவேன்
எந்த இடம் எனக்குக் காட்டினும்
இயேசுவே அங்கே இதோ போகிறேன் – தந்தேன்

4. கஷ்டம் நஷ்டம் வந்தாலும்
துஷ்டர் கூடிச் சூழ்ந்திட்டாலும்
அஷ்டதிக்கும் ஆளும் தேவனே
அடியேன் உம்மில் அமரச் செய்திடும் – தந்தேன்

5. ஒன்றுமில்லை நான் ஐயா
உம்மாலன்றி ஒன்றும் செய்யேன்
அன்று சீஷர்க்களித்த ஆவியால்
இன்றே அடியேனை நிரப்பும் – தந்தேன்

## பாடல் – 225

***பல்லவி***

**தத்தமாய்த் தந்தேன் என்னையே**
நித்தமும் உந்தனின் சேவைக்கே

***சரணங்கள்***

1. துட்டனாய் அலைந்த பாவி நானே
கட்டளை யாவையும் மீறினேனே
பட்டமா பாடுகள் போதுமென்றே
கிட்டி உம் பாதமே வந்து நின்றே – தத்தமாய்

2. எந்தனின் உள்ளத்தில் ஆட்சி செய்வீர்
சிந்தின ரத்தத்தால் சுத்தம் செய்வீர்
எந்த இடத்திலும் எந்நேரமும்
உந்தனின் சாட்சியாய் நின்றிடவே – தத்தமாய்

3. நீர் தந்த வேலையை நித்தமும் நான்
நேர்மையாகச் செய்திட சக்தி ஈவீர்
ஏழ்மையில் ஏங்கிடும் மாந்தருக்கு
தாழ்மையாய்த் தொண்டு நான் செய்திடவே – தத்தமாய்

## பாடல் - 226

*பல்லவி*

**தேவனே நான் உமதண்டையில் - இன்னும்**
நெருங்கிச் சேர்வதே என் ஆவல் பூமியில்

*அனுபல்லவி*

மா வலிய கோரமாக வன் சிலுவை மீதினில் நான்
கோவே, தொங்க நேரிடினும் ஆவலாய் உம்மண்டை சேர்வேன்

*சரணங்கள்*

1. யாக்கோபைப் போல் போகும் பாதையில் பொழுதுபட்டு
இராவில் இருள் வந்து மூடிட
துக்கத்தால் நான் கல்லில் சாய்ந்து தூங்கினாலும் என் கனாவில்
நோக்கியும்மைக் கிட்டிச் சேர்வேன்; வாக்கடங்கா நல்ல நாதா

2. பரத்துக்கேறும் படிகள் போலவே - என் பாதை தோன்றப்
பண்ணும் ஐயா என்றன் தேவனே
கிருபையாக நீர் எனக்குத் தருவதெல்லாம் உமதண்டை
அருமையாய் என்னையழைத்து அன்பின் தூதராகச் செய்யும்

3. நித்திரையினின்று விழித்துக் - காலை எழுந்து
கர்த்தாவே நான் உம்மைப் போற்றுவேன்
இத்தரையில் உந்தன் வீடாய் என் துயர் கல் நாட்டுவேனே
என்றன் துன்பத்தின் வழியாய் இன்னும் உம்மைக் கிட்டிச் சேர்வேன்

4. ஆனந்தமாம் செட்டை விரித்துப் - பரவசமாய்
ஆகாயத்தில் ஏறிப்போயினும்
வான மண்டலம் கடந்து பறந்து மேலே சென்றிடினும்
மகிழ்வுறு காலத்திலும் நான் மருவியும்மைக் கிட்டிச் சேர்வேன்

## பாடல் - 227

**கர்த்தனே எம் துணையானீர்**
நித்தமும் எம் நிழலானீர்
கர்த்தனே எம் துணையானீர்

1. எத்தனை இடர் வந்து சேர்ந்தாலும்
கர்த்தனே அடைக்கல மாயினார் (2)
மனு மக்களில் இவர் போலுண்டோ
விண் உலகிலும் இவர் சிறந்தவர் – கர்த்தனே

2. பாவி என்றெனைப் பலர் தள்ளினார்
ஆவி இல்லை என்றிகழ்ந்தும் விட்டார் (2)
ராஜா உம் அன்பு எனைக் கண்டது
உம்மைப்போல் ஐயா எங்கும் கண்டதில்லை – கர்த்தனே

3. சுற்றத்தாரும் காலத்தில் குளிர்ந்திட்டார்
நம்பினோரும் எதிராக வந்திட்டார் (2)
கொள்கை கூறியே பலர் பிரிந்திட்டார்
ஐயா உம்மைப்போல் நான் எங்கும் கண்டதில்லை – கர்த்தனே

4. ஆயிரம் நாவுகள் நீர் தந்தாலும்
ராஜனே உம்மைப் பாடக் கூடுமோ? (2)
ஜீவனை உமக்களிக்கின்றேனே
உம்மைப்போல் ஐயா, எங்கும் கண்டதில்லை – கர்த்தனே

## பாடல் – 228

***பல்லவி***

**நிலையில்லா உலகத்தில் அலைந்தேனையா**
நினைத்தென்னை அழைத்தீரோ எனதேசையா

***சரணங்கள்***

1. மறந்தும்மை மறுதலித் தடங்காமலே
மனம் போன வழிகளில் நடந்தேனையா
மடிந்திடும் என்னைக் கண்டு விரைந்தென்னருகில் வந்து
மனதுருகினீரே ஐயா – என் மேல்

2. சிறந்த உம் முகம் காண விரைந்தாசித்தேன்
சிலுவையின் தரிசனம் அளித்தீரையா
இனிய உன் சத்தம் கேட்டேன் கொடிய என் குணம் விட்டேன்
இனிமேல் என் துணை நீரையா – பூவில்

3. உமக்காக என்னையும் நீர் தெரிந்தெடுத்தீர்
உமதாவி என்னிலிருந்து பெலனளித்தீர்
உமையன்றி பூவில் வேறு அடைக்கலம் எனக்கில்லை
உம்மை நம்பி ஜீவிப்பேனையா – இனி

4. அதி சீக்கிரமாய் நீங்கும் உபத்திரவம்
அதிக நித்திய கன மகிமை தரும்
பலவித இன்னல் கண்டும் சிலவேளை சிட்சை வந்தும்
பதறாமல் பொறுப்பேனையா – இன்னும்

5. உடுக்க உடையும் உண்ண உணவும் தந்தீர்
இடுக்கமான உம் பாதை எமக்களித்தீர்
விசுவாசப் பிரயாணத்தை தொடங்கின தினமுதல்
விசுவாசம் பெருகுதையா – என்னில்

6. இருண்ட கெத்சமனேயில் ஒளி தோன்றுதே
இனிய இயேசையா உந்தன் திருமுகமோ
எனக்குந்தன் அனுபவம் அளித்திட திரும்பவும்
தினம் ஜெபம் செய்கின்றேனையா – தேவா

7. எனது மரணமோ உம் வருகை நாளோ
எது முன்பு என்னை வந்து அழைத்திடுமோ
கடைசி முடிவு நாளில் மறவாதீர் என்னை நாதா
கனிவாய் வேண்டுகின்றேனையா – இப்போ

## பாடல் – 229

**மாசற்ற தூய நல் அன்பே அன்பே**
மாறிடா மங்கிடா அன்பே அன்பே
காலத்தில் அடங்கா ஞாலத்தில் சிறந்த
உள்ளம் உடைக்கும் அன்பே

1. எருசலேம் தெருக்களில் ஓலம் ஏன்?
கொல்கதா மலையில் கூட்டம் ஏன்?
என்னைத் திருத்திட என் அன்பு சாகுதே
ஓ நல்ல தேவ அன்பே!

2. சிலுவையின் அடியில் இரத்தக்கறை
என் உள்ளக் கறையை கழுவவோ!
ஏனையா இத்தனை என் மீது அக்கறை
ஓ நல்ல தேவ அன்பே!

3. நேசத்திற் கெதிராய் ஒன்றும் செய்யேன்
அன்பிற்கு அடிமை ஆகுகின்றேன்
என் யாவும் அன்பிற்கே என் எல்லாம் அன்பிற்கே
உள்ளம் மகிழ்கின்றேனே!

## பாடல் - 230

**உள்ளமெல்லாம் உருகுதையோ**
உத்தமனை நினைக்கையிலே
உம்மை யன்றி வேறே தெய்வம்
உண்மையாய் இங்கில்லையே

கள்ளனென்றும் தள்ளிடாமல்
அள்ளி என்னை அணைத்தவா
சொல்லடங்கா நேசத்தாலே
உம் சொந்த மாக்கிக் கொண்டீரே

2. எத்தன் என்னை உத்தமனாக்க
சித்தம் கொண்ட என் இயேசையா
எத்தனையோ துரோகம் நான் செய்தேன்
அத்தனையும் நீர் மன்னித்தீர்

இரத்தம் சிந்த வைத்தேனே நான்
அத்தனையும் என் பாவமன்றோ
கர்த்தனே உம் அன்புக்கீடாய்
நித்தம் செய்வேன் உம் சேவையே

3. வானமீதில் இயேசு ராஜன்
வேகம் வரும் நாளன்றோ
லோக மீதில் காத்திருப்போர்
ஏகமாகக் கூடிட

தியாக ராஜன் இயேசுவை நான்
முகமுகமாய்த் தரிசிக்க
ஆவலோடு ஏங்கும் தாசன்
சோகம் நீங்கும் நாளன்றோ?

## ஆயத்தமா?

### பாடல் – 231

**உன் தேவனைச் சந்திக்க நீ ஆயத்தமா?**

1. பூவில் இயேசு வரும்போது பொல்லாரோடிடுவார்
இந்த விதம் நீ இருந்தால் என்ன செய்திடுவாய்? – உன்

2. மேகங்களுடன் வருவேனென்று சொன்னவர்
இப்போ மேகந்தனில் வரும்நேரம் கிட்டிச் சேருதே – உன்

3. தேவ தூதரோடும் பெரும் எக்காளத்தோடும்
தம் பக்தரைச் சந்திக்கும் நேரம் கிட்டிச் சேருதே – உன்

4. அவபக்தர் அக்காலத்தில் அழுதிடுவார்
அவர் வரும்போது இரட்சிப்படைய மாட்டார் – உன்

5. பாவங்களில் ஜீவிப்பார் பதுங்கிடுவார்
பரிசுத்த மாக்கப்பட்டோர் பறந்திடுவார் – உன்

6. இரக்கமுள்ள இந்த நாளில் மனந்திரும்பு
இந் நிமிஷம் ஏற்றுக்கொள்ளும் மன்னிப்புப்பெற – உன்

7. உனக்காய் மரித்த இயேசு காத்து நிற்கிறார்
இயேசு உன்னைப் பட்சமாக ஏற்றுக்கொள்வார் – உன்

8. பரனை ஏற்றுக் கொள்ளாதோர் அந்த நாளிலே
பதுங்கி நித்தியமாகப் பரிதவிப்பார் – உன்

## பாடல் – 232

***பல்லவி***

**என் ஜனம் அழிகிறதே ஆ! ஆ! ஆ!**
எனக்கார்தானோ பாவார் பூவிலே – சேவை செய்ய

***சரணங்கள்***

1. தீமை செய்யும் தீயோர் அதிகம்
ஜீவனீவார் யாருமே இல்லையே – என்

2. லோக இன்பம், பாவ நேசம்
துரோக சிந்தை மேற்கொண்டு விட்டதே – என்

3. தேவ அன்பை அறியார் அநேகர்
தேவ வசனம் வாஞ்சிப்போரு மில்லையே – என்

4. மாயை யதிலே தயங்குகிறாரே
மாளுவோரை மீட்போரு மில்லையே – என்

5. அழிவே வழியில் சந்தித்திடுதே
அந்தோ! அந்தோ! இக்காட்சி பாருமே – என்

6. யாரோ யாரோ போவா ரெனக்காய்
ஆத்துமாக்கள் சேர்க்க ஜீவனுக்காய் – என்

7. அனலில்லாத சபைகளதிகம்
ஆத்துமாக்களைக் கொல்வோரு மநேகர் – என்

## பாடல் – 233

*பல்லவி*

**எத்தருணத்தில் உயிர் எவ்வழி பிரியுமோ?**
இதை உணராய் நெஞ்சமே

*அனுபல்லவி*

சுத்த பரமன் பதம் இத்தரையில் அடைந்து
சொர்க்க பதவிக்கிப்போ பக்குவம் செய்யாவிடில் – எத்

*சரணங்கள்*

1. பால வயதினிலோ பாடும் சமயத்திலோ
கோலமாய் மணக்கோலம் கொள்ளும் தருணத்திலோ
சீலமுடன் பரனைத் தேடும் சமயத்திலோ?
காலன் வரவுண்டு கலங்கும் தருணத்திலோ? – எத்

2. வாலிபன் நான் இப்போ வயது மதிகமில்லை
காலன் வரவுக்கின்னும் காலம் அதிகமென்று
மேலான எண்ணம் கொண்டு வீண் நாட் கழிக்கும்போதோ
கோலொன்று கையில் தாங்கி குறுநடை கொள்ளும்போதோ – எத்

3. தாய், தந்தை, தமர், தாரம் சகலமுமிருந்தாலும்
சஞ்சீவி மருந்துகள் கைவசமிருந்தாலும்
தீயன் வலையில் சிக்கித் திகைக்கும் தருணமதில்
நாயன் உதவி இல்லாமல் நசிவது திண்ணம் திண்ணம் – எத்

## பாடல் – 234

**பாவத்தின் பலன் நரகம், ஓ பாவி நடுங்கிடாயோ?**
காண்பதெல்லாம் அழியும், காணாததல்லோ நித்தியம்

இயேசு ராஜா வருவார்
இன்னும் கொஞ்சங் காலந்தான்
மோட்சலோகம் சேர்ந்திடுவோம் – இயேசு

2. உலக இன்பம் நம்பாதே
அதின் இச்சை யாவும் ஒழியும்
உன் ஜீவன் போகும் நாளிலே
ஓர் காசும் கூட வாராதே! – இயேசு

3. உன் காலமெல்லாம் போகுதே
உலக மாய்கையிலே
ஓ தேவ கோபம் வருமுன்
உன் மீட்பரண்டை வாராயோ – இயேசு

4. தேவன் பின் வெள்ளம் ஓடுதே
கல்வாரி மலை தன்னிலே
உன் பாவம் யாவும் நீங்கிப்போம்
அதில் ஸ்நானம் செய்வதாலே – இயேசு

5. மா பாவியான என்னையும்
என் நேசர் ஏற்றுக் கொண்டாரே
ஓ பாவி நீயும் ஓடிவா
தேவாசீர்வாதம் பெறுவாய் – இயேசு

## பாடல் – 235

*சரணங்கள்*

**நம்ப வேண்டாம் நம்ப வேண்டாம்**
இந்தப் பொய்யுலகை நம்ப வேண்டாம்
நேசம் காட்டித் துரோகம் செய்யும்
இந்தப் பாழுலகை நம்ப வேண்டாம்

2. உன்னைப் பெற்ற மாதா எங்கே?
போஷித்த உன் தந்தை எங்கே?
போய் விட்டாரோ போய் விட்டாரோ?
உன்னை விட்டுப் போய்விட்டாரோ?

3. அண்ணனெங்கே தம்பி எங்கே
அக்காளெங்கே தங்கை எங்கே?
ஆசையாகத் தேடி வைத்த
ஆஸ்தி செல்வம் தானுமெங்கே

4. திருடனைப்போல் சாவு வரும்
திடுக்கிடுவாய் நீயுமப்போ
பாம்பின் வாயில் தவளை போலப்
பரிதவிப்பாய் பரிதவிப்பாய்

5. இயேசு நாதர் பாதம் தேடு
மீட்பை இன்றே பெற்றுக் கொள்வாய்
குருசில் தொங்கும் நேசர் பாரும்
குணமாக்குவார் இப்போ வாரும்.

## பாடல் – 236

***பல்லவி***

**உலக முன் சதமென்று எண்ணியிராதே**
பலவித பாதாள வலையிற்சிக்காதே – உலகமும் சதமல்ல

***சரணங்கள்***

1. மாதா பிதா மற்றுஞ் செல்வமிருந்தாலும்
மரணம் வந்தே யுந்தன் வாழ்வைக் குலைக்கும் – உலக

2. சாவின் கோரக் காட்சி நெஞ்கையில்
பாவி! நான் என் செய்வேனென்று திகைப்பாய் – உலக

3. நித்திய வாதைக்கு இரையாகி விடுமுன்
சத்தியர் பாதத்தைப் பாவி நீ தேடு – உலக

4. நரகத்தில் புழுக்களும் நெருப்பு மட்டுமல்ல
பரலோக கீதங்களுன்னை வதைக்கும் – உலக

5. பாவ விமோசன மிப்போதே பெறுவாய்
தாவியுன் மீட்பரின் பாதத்தைத் தேடு – உலக

## பாடல் – 237

***பல்லவி***

**மறந்திடாதே நீ**
மன்னவன் இயேசுவின் மாண்பினைக் கூற
மறந்திடாதே

***சரணங்கள்***

1. பாலைவனமதில் வாழுகின்றார் – சிலர்
பட்டண வீதியில் அலைகின்றார்
பார் புகழும்படி நடக்கின்றார் சிலர்
பகலிர வெதிலும் உழைக்கின்றார் – இவர்களை

2. வான மெட்டும் வண்ண மாளிகையில் – சிலர்
வானரம் வாழ்ந்திடும் கானகத்தில்
வற்றா நதிகளில் மீன் பிடிப்பார் – சிலர்
வயல் வெளிகளில் பயிரிடுகின்றார் – இவர்களை

3. பற்பல தேசத்தில் வாழுபவர் – பலர்
அற்புத அன்பினை அறியாரே
அத்தனை பேருமே அறிந்திடவே தினம்
அறிவிக்க இயேசுன்னை அழைக்கின்றார் – இவர்களை

## பாடல் – 238

**உலக மாய்கையிலே உன் சிந்தனையே வேண்டாம்**
ஈலோகம் மாறிடுமே, இயேசுவைச் சேர்ந்திடாயோ!

***பல்லவி***

உன் இயேசுவை அண்டிக்கொள்
உன் நேசர் பாதம் தேடிக்கொள்
உன்மேல் தன் கண்ணை வைத்து
இன்பப் பாதை காட்டிடுவார்

2. இளைத்துத் தவித்த உன்னை வருந்தி அழைக்கிறாரே
அலைந்து திரிந்த உன்னை விரும்பிக் கேட்கிறாரே –உன்

3. சஞ்சல முற்றோருக்குத் தஞ்சம் கொடுப்பாரே
பாவம் பாடுள்ளோரை ஈடேற்றி நடத்துவாரே – உன்

4. ஆறுதல் வாழ்வு ஜீவன் அன்பாலே ஈந்திடுவார்
அப்பாலே மோட்ச வாழ்வையும் தயாளர் தந்திடுவார் – உன்

5. பாவி நீ ஓடி வந்து தாவி பாதம் பிடித்திடுவாய்
பூவின் வாழ்வைவிட்டு ஆவியில் நிறைந்திடுவாய் – உன்

6. வாக்குத்தத்தம் செய்தவர் வாக்குத் தவறிடாரே
மானிடர் மாறிடுவார் என் நேசர் மாறிடாரே – உன்

## பாடல் – 239

**இயேசு கிறிஸ்துவின் நல் சீடராகுவோம்**
விசுவாசத்தில் முன் நடப்போம்
இனி எல்லோருமே அவர் பணிக்கெனவே
ஒன்றாய் எந்நாளும் உழைத்திடுவோம்

நம் இயேசு இராஜாவே இதோ வேகம் வாராரே
அதிவேகமாய் செயல்படுவோம்

2. மனிதர் யாரிடமும் பாசம் காட்டுவோம்
இயேசு மந்தைக்குள் அழைத்திடுவோம்
அதி உற்சாகமாய் அதி சீக்கிரமாய்
இராஜ பாதையைச் செம்மையாக்குவோம்

நம் இயேசு இராஜாவே இதோ வேகம் வாராரே
அதிவேகமாய் செயல்படுவோம்

3. சாத்தானின் சதிகளைத் தகர்த்திடுவோம்
இனி இயேசுவுக்காய் வாழ்ந்திடுவோம்
இந்தப் பார் முழுதும் இயேசு நாமத்தையே
எல்லா ஊரிலும் எடுத்துரைப்போம்

நம் இயேசு இராஜாவே இதோ வேகம் வாராரே
அதிவேகமாய் செயல்படுவோம்

4. ஆவி, ஆத்துமா, தேகம் அவர் பணிக்கே
இனி நான் அல்ல, அவரே எல்லாம்
என முடிவு செய்தோம் அதில் நிலைத்திருப்போம்
அவர் நாளினில் மகிழ்ந்திடுவோம்

நம் இயேசு இராஜாவே இதோ வேகம் வாராரே
அதிவேகமாய் செயல்படுவோம்

## பாடல் – 240

**விளைந்த பலனை அறுப்பாரில்லை**
விளைவின் நற்பலன் வாடிடுதே
அறுவடை மிகுதி ஆளோ இல்லை
அந்தோ மனிதர் அழிகின்றாரே

***சரணங்கள்***

1. அவர்போல் பேசிட நாவ இல்லை
அவர்போல் அலைந்திட கால்கள் இல்லை
எண்ணிலடங்கா மாந்தர் சப்தம்
உந்தன் செவியினில் தொனிக்கலையோ – விளைந்த

2. ஆத்தும இரட்சண்யம் அடையாதவர்
ஆயிரம் ஆயிரம் அழிகிறாரே
திறப்பின் வாசலில் நிற்பவர் யார்?
தினமும் அவர் குரல் கேட்கலையோ? – விளைந்த

3. ஆத்தும தரிசனம் கண்டிடுவாய்
ஆண்டவர் வாக்கினை ஏற்றிடுவாய்
விரைந்து சென்று சேவை செய்வாய்
விளைவின் பலனை அறிந்திடுவாய் – விளைந்த

4. ஒரு மனம் ஒற்றுமை ஏகசிந்தை
சபைதனில் விளங்கிட செயல்படுவாய்
நிமிர்ந்து நிற்கும் தூண்களைப் போல்
நிலைவரமாய் என்றும் தாங்கி நிற்பாய் – விளைந்த

5. ஆவியின் வரங்கள் ஒன்பதனை
ஆவலுடன் நீயும் பெற்றிடுவாய்
சபையின் நன்மைக்காய் உபயோகிப்பாய்
சந்ததம் சபையினில் நிலைத்திருப்பாய் – விளைந்த

6. தேவனின் சேவையில் பொறுப்பெடுப்பாய்
மனிதனின் பங்கினை ஏற்றிடுவாய்
கர்த்தர் நாட்டின தோட்டத்திலே
கடைசி வரை நீயும் கனி கொடுப்பாய் – விளைந்த

## பாடல் – 241

**இயேசுவே உம் நாமத்தினால்**
இன்பமுண்டு யாவருக்கும்
நன்றியுள்ள இதயத்துடன்
கூடினோம் இந் நன்னாளிலே

எங்கள் தேவனே எங்கள் ராஜனே
என்றும் உம்மையே சேவிப்போம்
நன்றியுள்ள சாட்சியாக
உமக்கென்றும் ஜீவிப்போம்

2. நிலையில்லா இவ்வுலகில்
நெறி தவறி நாம் அலைந்தோம்
நின்னொளி பிரகாசித்திட
நீங்கா ஜீவன் கண்டடைந்தோம் – எங்கள்

3. மண்ணை நாடி பொன்னை அடைந்தோம்
புகழ் தேடி ஏமாற்றங் கொண்டோம்
விண்ணை நோக்கி ஜெயம் பெற்றோம்
இயேசுவின் தரிசனத்தால் – எங்கள்

4. உன்னைக் கண்டழைக்கும் சத்தத்தை
கேட்டாயோ ஓ! பாவியே
இன்றும் இயேசுவண்டை வாராயோ
நித்திய இராஜ்ஜியம் பெற்றிடவே – எங்கள்

5. இயேசுவை நாம் பின் செல்லுவோம்
உலகை என்றும் வெறுப்போம்
துன்பப் பாதை சென்றிடுவோம்
என்றும் அவரின் பெலத்தால் – எங்கள்

## பாடல் – 242

**புத்தம் புதிய பாடல் தந்தார்**
நித்தம் அவரைத் துதித்திடவே

1. காலையில் கூவிடும் பறவைகளும்
மாலையில் கூப்பிடும் விலங்குகளும்
இன்பமாய் இயேசுவை துதிக்கின்றன
என்னையும் துதித்திட அழைக்கின்றன

2. மரங்களில் மோதிடும் தென்றல் காற்றும்
பாறையில் மோதிடும் கடலலையும்
துள்ளியே களிப்புடன் துதிக்கின்றன
என்னையும் துதித்திட அழைக்கின்றன

3. காகங்கள் கரைந்திடும் குரலைக்கேட்டு
படைத்தவர் மகிழ்ந்திடும் வேளையிலே
பாவி என் பாடலில் துதி கேட்டு
என் தேவனை களித்திட மகிழுவேன் நான்

4. உள்ளத்தில் பாவங்கள் இருக்கும் வரை
உண்மையாய் துதித்திட முடியவில்லை
கல்வாரி இரத்தத்தால் கழுவப் பெற்றேன்
இன்பமாய் இயேசுவை துதித்து வாழ்வேன்

## பாடல் – 243

**காக்கும் கரங்கள் உண்டெனக்கு**
காத்திடுவார் கிருபையாலே
அல்லேலூயா பாடிப்பாடி
அலைகளை நான் தாண்டிடுவேன்
நம்பிவா இயேசுவை நம்பி வா இயேசுவை

1. நிந்தனைகள் போராட்டம் வந்தும்
நீதியின் தேவன் தாங்கினாரே
நேசக்கொடி என் மேல் பறக்க
நேசருக்காய் ஜீவித்திடுவேன் – நம்பி

2. கன்மலைகள் பெயர்க்கும் படியாய்
கர்த்தர் உன்னைக் கரம் பிடித்தார்
காத்திருந்து பெலன் அடைந்து
கழுகு போலே எழும்பிடுவாய் – நம்பி

3. அத்திமரம் துளிர்விடாமல்
ஆட்டுமந்தை முதலற்றாலும்
கர்த்தருக்குக் காத்திருப்போர்
வெட்கப்பட்டுப் போவதில்லை – நம்பி

## பாடல் – 244

**உன்னதமானவரின் – உயர் மறைவிலிருக்கிறவன்**
சர்வ வல்லவரின் நிழலில் தங்குவான்
இது பரம சிலாக்கியமே

***பல்லவி***

அவர் செட்டையின் கீழ் அடைக்கலம் புகவே
தம் சிறகுகளால் மூடுவார்

2. தேவன் என் அடைக்கலமே
என் கோட்டையும் அரணுமவர்
அவர் சத்தியம் பரிசையும் கேடகமாம்
என் நம்பிக்கையும் அவரே – அவர்

3. இரவின் பயங்கரத்துக்கும்
பகலில் பறக்கும் அம்புக்கும்
இருளில் நடமாடும் கொள்ளை நோய்க்கும்
நான் பயப்படவே மாட்டேன் – அவர்

4. ஆயிரம் பதினாயிரம்
பேர்கள் உன் பக்கம் விழுந்தாலும்
அது ஒரு காலத்தும் உன்னை அணுகிடாதே
உன் தேவன் உன் தாபரமே – அவர்

5. தேவன் உன் அடைக்கலமே
ஒரு பொல்லாப்பும் உன்னைச் சேருமோ
ஒரு வாதையும் உன் கூடாரத்தையே
அணுகாமலே காத்திடுவார் – அவர்

6. உன் வழிகளிலெல்லாம்
உன்னை தூதர்கள் காத்திடுவார்
உன் பாதம் கல்லில் இடறாதபடி
தம் கரங்களில் ஏந்திடுவார் – அவர்

7. சிங்கத்தின் மேலும் நடந்து
வலுசர்ப்பத்தையும் மிதிப்பாய்
அவர் நாமத்தை நீ முற்றும் நம்பினதால்
உன்னை விடுவித்துக் காத்திடுவார் – அவர்

8. ஆபத்திலும் அவரை நான்
நோக்கிக் கூப்பிடும் வேளையிலும்
என்னை தப்புவித்தே முற்றும் இரட்சிப்பாரே
என் ஆத்தும நேசரவர் – அவர்

**பாடல் – 245**

***பல்லவி***

**உறக்கம் தெளிவோம்**
உற்சாகம் கொள்வோம்
உலகத்தின் இறுதிவரை
கல்வாரித் தொனிதான
மழை மாரி பொழியும்
நாள்வரை உழைத்திடுவோம்

***சரணங்கள்***

1. அசுத்தம் களைவோம்
அன்பை அழைப்போம்
ஆவியில் அனலும் கொள்வோம்
அவர் படை ஜெயிக்க
நம்மிடை கருத்து
வேற்றுமையின்றி வாழ்வோம் – உறக்கம்

2. அச்சம் தவிர்ப்போம்
தைரியம் கொள்வோம்
சரித்திரம் சாட்சி கூறும்
இரத்தச் சாட்சிகள்
நம்மிடைத் தோன்றி
நாதனுக்காய் மடிவோம் – உறக்கம்

3. கிறிஸ்துவுக்காய்
இழந்தவர் எவரும்
தரித்திரர் ஆனதில்லை
இராஜ்ஜிய மேன்மைக்காய்
கஷ்டம் அடைந்தோர்
நஷ்டப்பட்டதில்லை – உறக்கம்

4. உயிர் பெறுவீர்
ஒன்று கூடுவீர்
உலர்ந்த எலும்புகளே
நீங்கள் அறியா
ஒருவர் உங்கள்
நடுவில் வந்துவிட்டார் – உறக்கம்

## பாடல் – 246

**என் மீட்பர் சென்ற பாதையில் போக ஆயத்தமா?**
கொல்கதா மலை வாதையில் பங்கைப் பெறுவாயா?

***பல்லவி***

சிலுவையை நான் விடேன்
சிலுவையை நான் விடேன்

2. ஊரார் இனத்தார் மத்தியில் துன்பம் சகிப்பாயா?
மூர்க்கர் கோபிகள் நடுவில் திடனாய் நிற்பாயா? – சிலுவையை

3. தாகத்தாலும் பசியாலும் தோய்ந்தாலும் நிற்பாயா?
அவமானங்கள் வந்தாலும் சிலுவை சுமப்பாயா? – சிலுவையை

4. பாவாத்துமாக்கள் குணப்பட நீ தத்தம் செய்வாயா?
கோழை நெஞ்சர் திடப்பட மெய் யுத்தஞ் செய்வாயா? – சிலுவையை

5. லோகத்தார் மாண்டு போகிறார் மெய் வீரர் இல்லாமல்
பார் மீட்பர் ஜீவனை விட்டார் தொங்கிச் சிலுவையில் –சிலுவையை

## பாடல் - 247

**கர்த்தரின் கை குறுகவில்லை**
கர்த்தரின் வாக்கு மாறிடாதே
சுத்தர்களாய் மாறிடவே
சுதன் அருள் புரிந்தனரே

*பல்லவி*

விசுவாசியே நீ பதறாதே
விசுவாசியே நீ கலங்காதே
விசுவாசத்தால் நீதிமான்
இன்றும் என்றும் பிழைப்பான்

2. திருச்சபையே நீ கிரியை செய்வாய்
திவ்விய அன்பில் பெருகிடுவாய்
தலைமுறையாய் தலைமுறையாய்
தழைத்திட அருள் புரிவாய் - விசுவாசியே

3. நெஞ்சமே நீ அஞ்சிடாதே
தஞ்சம் இயேசு உன் அரணே
தம் ஜனத்தை சீக்கிரமாய்
தம்முடன் சேர்த்துக் கொள்வார் - விசுவாசியே

4. மேகம் போன்ற வாக்குத்தத்தம்
சூழ நின்றே காத்திருக்க
விசுவாசத்தால் உரிமை கொள்வாய்
விரைந்து முன் ஏகிடுவாய் - விசுவாசியே

## பாடல் - 248

*பல்லவி*

**என் சபையைக் கட்டுவேன் - என்ற**
இயேசு பேசுகின்றார்
உள்ளத்தைக் கேட்கின்றார்
உனக்குள்ளத்தைக் கேட்கின்றார்
வாராயோ? தாராயோ?
உந்தன் இயேசு கேட்கின்றார்

***சரணங்கள்***

1. காலங்கள் வேகமாய் கடந்து செல்லும்
பருவங்கள் விரைவினில் பறந்து போகும்
வாய்ப்புள்ள போதெ செயல்படவா
ஆண்டவர் திருப்பணி செய்திடவா – என் சபையைக்

2. இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டோர்
ஆவியின் வரங்களை நிரம்பப் பெற்றோர்
தரிசனம் பெற்றிடக் காத்திருந்தால்
தெய்வத் திருத்தொண்டு செய்பவர் யார் – என் சபையைக்

3. பெலனில்லை அறிவில்லை வரமுமில்லை
குறைவுள்ளவன் என் தயங்கிடாதே
இயேசுவின் கரங்களில் தந்துவிடு
வல்லநல் ஆயுத மாக்கிடுவார் – என் சபையைக்

4. கொள்கையால் பரிந்திடும் காலமில்லை
உறங்கியே கழித்திடும் நேரமில்லை
ஆஸ்திகள் பெருக்கிடும் சமயமில்லை
ஆத்தும அறுவடை செய்திடவா – என் சபையைக்

## பாடல் – 249

**என்னை நேசிக்கின்றாயா?**
என்னை நேசிக்கின்றாயா?
கல்வாரிக் காட்சியை கண்ட பின்னும்
நேசியாமல் இருப்பாயா?

***சரணங்கள்***

1. பாவத்தின் அகோரத்தைப் பார்
பாதகத்தின் முடிவினைப் பார்
பரிகாசச் சின்னமாய் சிலுவையிலே
பலியானேன் பாவி உனக்காய் – என்னை

2. பாவம் பாரா பரிசுத்தர் நான்
பாவி உன்னை அழைக்கின்றேன் பார்
உன் பாவம் யாவும் சுமப்பேன் என்றேன்
பாதம் தன்னில் இளைப்பாற வா – என்னை

3. வானம் பூமி படைத்திருந்தும்
வாடினேன் உன்னை இழந்ததினால்
தேடி இரட்சிக்க பிதா என்னை அனுப்பிடவே
ஓடி வந்தேன் மானிடனாய் – என்னை

## பாடல் – 250

**ஒரு குடும்பம் ஒரு குடும்பம்**
உலகமெல்லாம் ஒரு குடும்பம்

***அனுபல்லவி***

இயேசு ராஜா நம் தந்தை
நாமெல்லாரும் அவர் பிள்ளைகள் – ஒரு குடும்பம்

1. நம்மில் நிறங்கள் வேறாயினும்
பேசும் மொழிகள் பலவாயினும் (2) – இயேசு

2. வாழும் இடங்கள் வேறாயினும்
வாழும் முறைகள் பலவாயினும் (2) – இயேசு

3. அன்பு என்ற ஒரு சொல்லிலே
அவனியெல்லாம் ஒன்றாகுமே (2) – இயேசு

4. இயேசு சென்ற வழி செல்லுவோம்
இன்ப வாழ்க்கை நாம் காணுவோம் (2) – இயேசு

## பாடல் - 251

**எந்தன் வாயில் புதுப்பாட்டு இயேசு தருகிறார்**
எந்தன் உள்ளம் அன்பினால் நிறையுதே
இந்த இயேசுவே மேகத்தில் வருவார்
எந்தன் துன்பமெல்லாம் அன்று தீருமே
நான் புதுப்பாட்டு என்றும் பாடுவேன்

ஆனந்தம்! ஆ ஆனந்தம்! ஆனந்தம்
ஆத்ம நாதனோடு எந்தன் வாசம் ஆனந்தம்

2. இப்புவியின் இன்பம் என்கொன்றும் வேண்டாமே
ரட்சகனாம் இயேசுவின் சமூகம் போதுமே
தேவ மகிமையில் பறந்து நான் செல்லுவேன்
அச்சணத்தில் இயேசு என்னை சந்திப்பார்
ஆ! எந்தன் பாக்கியம் யார்க்கும் வர்ணிப்பேன் - ஆ

3. இலக்கை நோக்கி நான் எந்தன் ஓட்டம் ஓடியே
லாபமான யாவையும் வெறுத்துத் தள்ளினேன்
பெற்றுக் கொள்ளுங்கள் நிச்சயம் பிரதி பலன்
ஆலக்ஷா லக்ஷம் தூதர் முன்பாக
நான் ஜீவகிரீடம் அன்று சூடுவேன் - ஆ

4. ஜீவ ஜல நதியிலே தாகம் தீர்ப்பேனே
ஜீவ விருட்சத்தின் பலன் நான் புசிப்பேனே
ஜீவ நாயகன் இயேசுவின் கூடவே
ஜீவ பரதீசில் நானும் இளைப்பாறுவேன்
நான் தூதரோடு அங்கு வாழுவேன் - ஆ

5. வீணை வாத்தியக்காரரை நான் காணுவேன்
விண் தூதசைனியத்தையும் அங்கு காணுவேன்
விண்ணதிபனும் மகிமையின் தேவன்
பொன்னின் முடியோட அதிவேகம் காணுவேன்
நான் விண்ணிலே பாடி போற்றுவேன் - ஆ

## பாடல் - 252

***பல்லவி***

**எந்தன் நாவில் புதுப்பாட்டு**
எந்தன் இயேசு தருகிறார் (2)

***அனுபல்லவி***

ஆனந்தம் கொள்ளுவேன் அவரை நான் பாடுவேன்
உயிருள்ள நாள் வரையில் (2) - எந்தன்

***சரணங்கள்***

1. பாவ இருள் என்னை வந்து சூழ்ந்து கொள்கையில்
தேவனவர் தீபமாம் என்னைத் தேற்றினார் - ஆனந்தம்

2. வாதை நோயும் வந்தபோது வேண்டல் கேட்டிட்டார்
பாதை காட்டி துன்பமெல்லாம் நீக்கி மீட்டிட்டார் - ஆனந்தம்

3. சேற்றில் வீழ்ந்த என்னையவர் தூக்கியெடுத்தார்
நாற்றமெல்லாம் ஜீவரத்தம் கொண்டு மாற்றினார் - ஆனந்தம்

4. தந்தை தாயும் நண்பருற்றார் யாவுமாகினார்
நிந்தை தாங்கி எங்குமவர் மேன்மை சொல்லுவேன் - ஆனந்தம்

5. இவ்வுலக பாடு என்னை என்ன செய்திடும்
அவ்வுலக வாழ்வைக் காண காத்திருக்கிறேன் - ஆனந்தம்

## பாடல் - 253

**என் ஆத்தும நேசர் இயேசுவை**
நான் அண்டிக் கொள்வேனே (4)

1. நிலையில்லா என்னைக் கண்டிட்டார்
நித்திய வழிக்குள் நடத்திட்டார்
விலையில்லா இரத்தம் சிந்தினார்
விந்தையாய் என்னைச் சந்தித்தார்

பரகதி வாழ்வை தந்தவர்
பரமன் இயேசு கர்த்தரே
நித்திய வழிக்குள் நடத்தியவர்
நிதம் அவர் துதி நான் பாடிடுவேன்
அல்லேலூயா அல்லேலூயா – அல்லேலூயா – என்

2. பாவத்தை கழுவி பரிகரித்தார்
சாபத்தை நீக்கி சங்கரித்தார்
லாபம் இன்றென் ஜீவனே
தாபம் எனக்கினி அவர்தானே – பரகதி

3. என்னையே மீட்க என் இயேசு
தன்னையே தியாகம் செய்தாரே
அன்னையாய் அப்பனாய் ஆனவர்
உன்னையும் அன்பாய் அழைக்கிறார் – பரகதி

## பாடல் – 254

**கர்த்தரை நம்பியே ஜீவிப்போம்**
கவலை கஷ்டங்கள் தீர்ந்திடும்
கைவிடா காத்திடும் பரமனின்
கரங்களை நாம் பற்றிக் கொள்வோம்

1. ஜீவ தேவன் பின் செல்லுவோம்
ஜீவ ஒளிதனைக் கண்டடைவோம்
மனதின் காரிருள் நீங்கிடவே
மா சமாதானம் தங்கும் – கர்த்தரை

2. உண்மை வழி நடந்திடும்
உத்தமனுக்கென்றும் கர்த்தர் துணை
கண்கள் அவன்மீது வைத்திடுவார்
கருத்தாய்க் காத்திடுவார் – கர்த்தரை

3. உள்ளமதின் பாரங்களை
ஊக்கமாய்க் கர்த்தரிடம் சொல்லுவோம்
இக்கட்டு நேரத்தில் கூப்பிடுவோம்
இயேசு வந்தாதரிப்பார் – கர்த்தரை

## பாடல் – 255

**கர்த்தரிலும் தம் வல்லமையிலும்**
கிருபையாய் யாவரும் பலப்படுவோம்
தீங்கு நாளிலே சாத்தானை எதிர்த்து நின்று
திராணியுடன் போர் புரிவோம்

***பல்லவி***

சர்வாயுத வர்க்கத்தை எடுத்துக் கொள்வோம்
சாத்தானின் சேனை முறித்திடுவோம் – அவர்
சத்துவ வல்லமையால்

2. மாமிசம், இரத்தத்துடனுமல்ல
துரைத்தனம் அதிகாரம் அந்தகாரத்தின்
லோகாதிபதியோடும் பொல்லா ஆவியோடும்
போராட்டம் நமக்கு உண்டு – சர்வாயுத

3. சத்தியமாம் கச்சையைக் கட்டியே
நீதியின் மார்கவசம் தரித்தே
சமாதானத்தின் சுவிசேஷ பாதரட்சை
நாம் கால்களில் தொடுத்துக் கொள்வோம் – சர்வாயுத

4. பொல்லாங்கன் எய்யும் அம்புகளை
வல்லமையோ டெதிர்க்கும் ஆயுதம்
விசுவாசமென்னும் கேடகம் மேலே
வீரமுடன் பிடித்து நிற்போம் – சர்வாயுத

5. இரட்சண்யமாம் தலை சீராவும்
எச்சணமும் அணிந்து கொள்வோம்
தேவ வசனமென்னும் ஆவியின் பட்டயம்
தேவை அதைப் பிடித்துக் கொள்வோம் – சர்வாயுத

6. எந்த சமயத்திலும் சகல
வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும்
பரிசுத்தர்கட்காகவே ஆவியினால்
மன உறுதியுடன் ஜெபிப்போம் – சர்வாயுத

## பாடல் – 256

**கிறிஸ்துவின் சேனை வீரர்கள் நாம் என்றும்**
கிறிஸ்துவுக்காய் சேவை செய்திடுவோம்
உயர்விலும் தாழ்விலும் காட்டிலும், நாட்டிலும்
உன்னதர் படையில் பணிபுரிவோம்

இறைமகன் இயேசு வாழ்க, வாழ்க
அதிசயமானவர் வாழ்க வாழ்க
வல்லமையுள்ளவர் வாழ்க வாழ்க
மரித்துயிர்த் தெழுந்தாரே

2. சத்திய கச்சையை அரையினில் கட்டியே
நீதியின் மார்க்கவசம் தரிப்போம்
ஆயத்த பாதரட்சையைத் தொடுத்தே
விசுவாச கேடகத்தை பிடிப்போம் – இறைமகன்

3. ரட்சண்ய தலைச்சீராவை அணிந்து
வசனத்தின் பட்டயத்தை எடுப்போம்
சர்வாயுதத்தை அணிந்த வீரர் நாம்
இயேசுவுக்காய் யுத்தம் செய்திடுவோம் – இறைமகன்

வாழ்க வாழ்க வாழ்க (2)
வாழ்க நீர் வாழ்க உன் நாமம் வாழ்க
உன் புகழ் வாழ்க, என்றென்றும் வாழ்க

## பாடல் – 257

**நமது இயேசு கிறிஸ்துவின் நாமம்**
நானிலமெங்கும் ஓங்கிடவே
புனிதமான பரிசுத்த வாழ்வை
மனிதராம் எமக்களித்தார்

***பல்லவி***

தேவ கிருபை எங்கும் பெருக
தேவனை ஸ்தோத்திரிப்போம்
பாவ இருள் அகல
தேவ ஒளி அடைந்தோம்

2. அவரை நோக்கி கூப்பிடும் வேளை
அறிவிப்பாரே அற்புதங்கள்
எனக்கெட்டாத அறிந்திடலாகா
எத்தனையோ பதிலளித்தார் – தேவ

3. பதறிப்போன பாவிகளாக
சிதறி எங்குமே அலைந்தோம்
அவரை நாம் தெரிந்தறியோமே
அவர் நம்மைத் தெரிந்தெடுத்தார் – தேவ

4. பலத்த ஜாதி ஆயிரமாக
படர்ந்து ஓங்கி நாம் வளர
எளிமையும் சிறுமையுமான
எமக்கவர் அருள் புரிவார் – தேவ

5. நமது கால்கள் மான்களைப் போல
நடந்து ஓடிப் பாய்ந்திடவே
உயர் ஸ்தலத்தில் ஏற்றுகின்றாரே
உன்னதமான ஊழியத்தில் – தேவ

6. பரமனேசு வந்திடும் போது
பறந்து நாமும் சென்றிடுவோம்
பரமனோடு நீடூழி வாழும்
பரம பாக்கியம் பெறுவோம் – தேவ

## பாடல் – 258

*சரணங்கள்*

**நான் பாவச் சேற்றினிலே வாழ்ந்தேன்**
நான் சாபத்திலே மாண்டேன்
எண்ணிலடங்கா பாவங்கள் போக்கி
இயேசென்னை மீட்டாரே

*பல்லவி*

என் நாவிலே புதுப் பாட்டுகள்
என்றென்றும் கவி தங்கிடும்
மா சந்தோஷம் மறு பிறப்பீந்து
மன இருள் நீக்கினார்

2. என் ஆத்த மீட்பை அருமையாய்
இயேசாண்டவர் எண்ணியதால்
சொந்தம் தம் ஜீவனாம் இரத்தம் எனக்காய்ச்
சிந்தி இரட்சித்தாரே – என்

3. கார்மேகம் போல் என் பாவங்கள்
கர்த்தர் அகற்றினாரே
மூழ்கியே தள்ளும் சமுத்திர ஆழம்
தூக்கி எறிந்தாரே – என்

4. என் ஜென்ம கரும பாவங்கள்
எல்லாம் தொலைத்தாரே
மன்னித்து என்றும் மறந்து விட்டாரே
மா பரமானந்தம் – என்

5. இரத்தாம்பரம் போல் சிவப்பான
இதய பாவங்களை
பஞ்சையும் போலவே வெண்மையுமாக்கி
தஞ்சம் எனக்கீந்தார் – என்

6. மேற்குத் திசைக்கும் கிழக்குக்கும்
மா எண்ணிலா தூரம்
எந்தன் பாவங்கள் அத்தனை தூரம்
இயேசு விலக்கினார் – என்

7. அங்கேயும் சீயோன் மலைமீதே
ஆனந்தக் கீதங்கள்
ஆயிரம் ஆயிரம் தூதர்கள் சூழ
அன்பரைப் பாடிடுவேன் – என்

## பாடல் – 259

**மோட்ச யாத்திரை செல்கின்றோம் மேலோகவாசிகள் – இம்**
மாய லோகம் தாண்டியே எம் வீடு தோன்றுதே
கடந்து செல்கின்றோம் கரையின் ஓரமே
காத்திருந்த ராஜ்ஜியம் கண்டடைவோம்

***பல்லவி***

ஆனந்தமே ஆ ஆனந்தமே
ஆண்டவருடன் நாம் என்றும் ஆளுவோம்
ஆதி முற்பிதாக்களோடு தூதருமாய்
ஆர்ப்பரிப்புடன் கூடி வாழுவோம்

2. சத்திய சுவிசேஷம் எடுத்துரைத்துமே – தம்
நித்திய இராஜ்ஜியம் மக்களை ஆயத்தமாக்கவே
தேசமெங்குமே அலைந்து செல்கிறோம்
நேசர் இயேசு வாக்குரைகள் நம்பியே – ஆனந்தமே

3. அள்ளித் தூவிடும்விதை சுமந்து செல்கின்றோம் தம்
அண்ணல் இயேசுவின் சமூகம் முன்னே செல்லுதே
கண்ணீர் யாவுமே கடைசி நாளிலே
கர்த்தரே துடைத்து எம்மைத் தேற்றுவார் – ஆனந்தமே

4. கர்த்தர் எம் அடைக்கலம் கவலை இல்லையே – இக்
கட்டு துன்ப நேரமோ கலக்கமில்லையே
கஷ்டம் நீக்குவார் கவலை போக்குவார்
கைவிடாமல் நித்தமும் நடத்துவார் – ஆனந்தமே

## பாடல் – 260

***பல்லவி***

**பரலோகமே என் சொந்தமே**
என்று காண்பேனோ
என் இன்ப இயேசுவை
என்று காண்பேனோ

***சரணங்கள்***

1. வருத்தம் பசி தாகம்
மனத்துயரம் அங்கே இல்லை
விண் கிரீடம் வாஞ்சிப்பேன்
விண்ணவர் பாதம் சேர்வேன் – பரலோகமே

2. சிலுவையில் அறையுண்டேன்
இனி நானல்ல இயேசுவே
அவரின் மகிமையே
எனது இலட்சியமே – பரலோகமே

3. இயேசு என் நம்பிக்கையாம்
இந்த பூமியும் சொந்தமல்ல
பரிசுத்த சிந்தையுடன்
இயேசுவைப் பின்பற்றுவேன் – பரலோகமே

4. ஓட்டத்தை ஜெயமுடன்
நானும் ஓடிட அருள் செய்வார்
விசுவாச பாதையில்
சோராது ஓடிடுவேன் – பரலோகமே

5. பரம சுகம் காண்பேன்
பரன் தேசம் அதில் சேர்வேன்
இராப்பகல் இல்லையே
இரட்சகர் வெளிச்சமே – பரலோகமே

6. அழைப்பின் சத்தம் கேட்டு
நானும் ஆயத்தமாகிடுவேன்
நாட்களும் நெருங்குதே
வாஞ்சையும் பெருகுதே – பரலோகமே

7. பளிங்கு நதியோரம்
சுத்தர் தாகம் தீர்த்திடுவார்
தூதர்கள் பாடிட
தூயனை தரிசிப்பேன் – பரலோகமே

## பாடல் – 261

*பல்லவி*

**ஜீவிக்கிறார் இயேசு ஜீவிக்கிறார்**
என்னுள்ளத்தில் அவர் ஜீவிக்கிறார்
துன்பத்தில் என் நல் துணை அவரே
என்றென்றும் ஜீவிக்கிறார்

2. செங்கடல் அவர் சொல்ல இரண்டாய் நின்றது
பெருங்கோட்டை ஒன்று தரைமட்டமானது
அவர் சொல்லக் குருடனின் கண் திறந்தது
அவர் தொடக் குஷ்டரோகி சுத்தமாயினான் – ஜீவிக்கிறார்

3. உம்மை என்றும் விடாமல் நான் தொடரவே
என்னை என்றும் விடாமல் நீர் பிடிக்கவே
நான் மரிக்கும் நேரத்தில் பரலோகத்தில்
உம் வீட்டைக் காட்டும் நல்ல மேய்ப்பரே – ஜீவிக்கிறார்

## பாடல் – 262

**பரம எருசலேமே பரலோகம் விட்டிறங்குதே**
அலங்கார மணவாட்டியாய் அழகாக ஜொலித்திடுதே

ஆமென் அல்லேலூயா (4)

1. எருசலேமே கோழி தன் குஞ்சுகளை
ஏற்றணைக்கும் ஏக்கத்தின் குரல் கேட்டேன்
தாய்ப்பறவை துடித்திடும் பாசம் கண்டேன்
தாபரமாய் சிறகினில் தஞ்சமானேன் – கனிவான எருசலேமே

2. ஜீவ தேவன் நகரினில் குடிபுகுந்தேன்
சீயோன் மலைச் சீருக்குச் சொந்தமானேன்
நீதி தேவன் நீளடி சிரம் புதைத்தேன்
நீதிமான்கள் ஆவியில் மருவி நின்றேன் – மேலான எருசலேமே

3. சர்வ சங்க சபையின் அங்கமானேன்
சர்வலோக நடுவரின் அருகில் வந்தேன்
பரிந்துரைக்கும் இரத்தத்தில் மூழ்கி நின்றேன்
பரிவாரமாய் தூதர்கள் ஆடி நின்றார் – ஆஹா என் எருசலேமே

4. விடுதலையே விடுதலை விடுதலையே
லோகமதின் மோகத்தில் விடுதலையே
நானேயெனும் சுயவாழ்வில் விடுதலையே
நாதர் தனில் வாழ்வதால் விடுதலையே – சுயாதீன எருசலேமே

5. கண்ணீர் யாவும் கனிவோடு துடைத்திடுவார்
எண்ணமதின் ஏக்கங்கள் தீர்த்திடுவார்
மரணமில்லை மனநோயின் துயரமில்லை
அலறலில்லை அழுகையின் சோகமில்லை–தலைநகராம் எருசலேமே

## பாடல் – 263

***பல்லவி***

**அன்பிலே பூரணரே – எங்கள்**
ஆனந்த ரூபா அதிசய ராஜா

***அனுபல்லவி***

அழகில் சிறந்தோனே – எங்கள்
ஆசையின் கோமானே
ஆ! ஆனந்தம் ஆ! ஆனந்தம்
அந்நியராம் ஏமை அழைத்தனைத்தீரே – அன்பிலே

***சரணங்கள்***

1. காத்தீரே கருணையுடன் – எம்
கலக்கங்கள் நீக்கிக் கனிவுடன் தூக்கிக்
கதியில்லா ஏழைகளின் – பெரும்
கவலைகளைப் போக்கி
ஆ! ஆனந்தம் ஆ! ஆனந்தம்
ஆறுதலளித்தீர் அனுதினம் துதிப்பேன் – அன்பிலே

2. ஆனந்தம் ஆனந்தமே உம்
ஆருயிர் ஈந்திர் அவனியில் வந்தீர்
அலகைதனை வென்றீர் அவன்
அடிமைகளை மீட்டீர்
ஆ! ஆனந்தம் ஆ! ஆனந்தம்
அல்லேலூயா பாடி அகமகிழ்ந்திடுவோம் – அன்பிலே

3. கோடையில் குளிர்தருவே – கடும்
வாடையின் மறைவே ஏழையின் உறவே
கூடுவோம் திருப்பாதம் – தினம்
பாடுவோரும் அவர் கீதம்
ஆ! ஆனந்தம் ஆ! ஆனந்தம்
அன்பே, இன்பமே, அன்னையின் மேலாய் – அன்பிலே

4. நித்திய பரிசுத்தரே – உம்
வருகையில் அடியாரைப் பரிசுத்ம் செய்யும்
உத்தம ஜீவிகளாய் நல்
நித்திய வாழ்வினிலே
ஆ! ஆனந்தம் ஆ! ஆனந்தம்
அல்லேலூயா கீதம் பாடி மகிழ்வோம் – அன்பிலே

5. தோத்திரம் துதியுமக்கே – தேவ
அன்பின் ஆழம் அறிந்து புகழ்வோம்
ஆயத்தமுள்ளோர்க்கே நீர்
அருணோதயமாவீர்
ஆ! ஆனந்தம் ஆ! ஆனந்தம்
அல்லேலூயா பாடி அகமகிழ்ந்திடுவோம் – அன்பிலே

## பாடல் – 264

### *பல்லவி*

**அல்லேலூயா! அல்லேலூயா! அல்லேலூயா! ஆ! ஆ! ஆமென்**
அல்லேலூயா! அல்லேலூயா! அல்லேலூயா! ஆ! ஆ! ஆமென்

***சரணங்கள்***

1. இயேசுவையே நேசி, அவரையே ஆசி
அவரே என்றும் உன் மீட்பர் – அல்லேலூயா

2. விண்ணினைத் துறந்தார், மண்ணினிற் பிறந்தார்
உயிர்தனைத் துறந்தார் பாவி உனக்காய் – அல்லேலூயா

3. பாவத்தைச் சுமந்தார் சாபத்தை தீர்த்தார்
மரணத்தை ஜெயித்தார் நித்தியமாய் – அல்லேலூயா

4. அலகையை எதிர்த்து அவனையே ஜெயித்து
மனிதனை மீட்டு ஜெயித்தெழுந்தார் – அல்லேலூயா

5. உனை மீட்க வந்தார் பரலோகம் சென்றார்
பரிந்துமே பேச உனை உயர்த்த – அல்லேலூயா

6. கிருபைக் காலத்தில் மறுக்காமல் வந்து
அவரையே அண்டு இப்பொழுதே – அல்லேலூயா

7. அழைப்பினை மறுத்து அவரை நீ வெறுத்தால்
நரகினில் வீழ்ந்து அழிந்திடுவாய் – அல்லேலூயா

## பாடல் – 265

***பல்லவி***

**ஆனந்த கீதங்கள் எந்நாளும் பாடி**
ஆண்டவர் இயேசுவை வாழ்த்திடுவோம்
அல்லேலூயா ஜெயம் அல்லேலூயா
அல்லேலூயா ஜெயம் அல்லேலூயா

***சரணங்கள்***

1. புதுமை பாலன் திரு மனுவேலன்
வறுமை கோலம் எடுத்தவதரித்தார்
முன்னுரைப்படியே முன்னணை மீதே
மன்னுயிர் மீட்கவே பிறந்தாரே – ஆனந்த

2. மகிமை தேவன் மகத்துவராஜன்
அடிமை ரூபம் தரித்திகலோகம்
தூதரும் பாட மேய்ப்பரும் போற்ற
துதிக்குப் பாத்திரன் பிறந்தாரே – ஆனந்த

3. மனதின் பாரம் யாவையும் நீக்கி
மரண பயமும் புறம்பே தள்ளி
மா சமாதானம் மா தேவ அன்பும்
மாறா விஸ்வாசமும் அளித்தாரே – ஆனந்த

4. அருமை இயேசுவின் திருநாமம்
இனிமை தங்கும் இன்னல்கள் நீக்கும்
கொடுமை பேயின் பெலன் ஒடுக்கும்
வலிமை வாய்ந்திடும் நாமமிதே – ஆனந்த

5. கருணை பொங்க திருவருள் தங்க
கிருபை பொழிய ஆர்ப்பரிப்போமே
எம்முள்ளம் இயேசு பிறந்த பாக்கியம்
எண்ணியே பாடிக் கொண்டாடுவோம் – ஆனந்த

## பாடல் – 266

### *பல்லவி*

**ஆகா என்ன இன்பம் பரலோக இன்பம்**
இன்ப இயேசு அளித்தனரே
அளவிற்கடங்கா புத்திக்கும் எட்டிடா!
அன்பை கூற நாவும் போதுமோ

### *சரணங்கள்*

1. நீசத்துரோகி எந்தனை – பாசமாய் ஏற்றீரோ நீர்
பாவ உளையினின்றே – தூக்கி எடுத்தீரோ நீர் – ஆகா

2. நாசபுரி நோக்கியே – விரைந்து சென்ற என்னை
பாசம் வைத்தேன் உந்தனில் என்று கூவி அழைத்தீரே நீர் – ஆகா

3. நெரிந்த நாணல் என்னை முறித்திடும் தருணம்
பரிந்து பேசி அன்பால் – நிலையாய் நிறுத்தினீரே – ஆகா

4. எச்சரிப்பின் சத்தத்தை – தள்ளி விட்டபோதிலும்
அன்பின் சவுக்கடியால் – சேர்த்தன்பாய் ஆதரித்தீர் – ஆகா

5. காரிருள் சூழும் வேளை – கலங்கித் தவிக்கையில்
காத்து நீர் என்னைத் தேற்றிக் – கருத்தாய் ஆதரித்தீர் – ஆகா

6. பிராணநாதா உந்தனை என்று நான் கண்டிடுவேன்
ஆருயிர் நேசா உம்மை காண ஆசை பொங்குதே – ஆகா

7. அழைப்பின் சத்தம் கேட்க – நாட்கள் அதிகமாமோ
நேசர் மார்ப்பில் சாய்திட – வாஞ்சை பெருகிடுதே – ஆகா

8. ஆகாய மேகந்தனில் சேர்ந்திடும் நேரந்தனில்
ஆனந்தம் ஆனந்தமே – என்றென்றும் ஆனந்தமே – ஆகா

## பாடல் – 267

***பல்லவி***

**ஆனந்தமே பரமானந்தமே – இயேசு**
அண்ணலை அண்டினோர்க் கானந்தமே

***சரணங்கள்***

1. இந்தப் புவி ஒரு சொந்தம் அல்ல என்று
இயேசு என் நேசர் மொழிந்தனரே
இக்கட்டும் துன்பமும் இயேசுவின் தொண்டர்க்கு
இங்கேயே பங்காய் கிடைத்திடினும் – ஆனந்தமே

2. கர்த்தாவே நீர் எந்தன் காருண்ய கோட்டையே
காரணமின்றி கலங்கேனே நான்
விஸ்வாசப் பேழையில் மேலோகம் வந்திட
மேவியே சுக்கான் பிடித்திடுமே – ஆனந்தமே

3. என்னுள்ளமே உன்னில் சஞ்சலம் ஏன் வீணாய்?
கண்ணீரின் பள்ளத்தாக்கல்லோ இது!
சீயோன் நகரத்தில் சீக்கிரம் சென்று நாம்
ஜெய கீதம் பாடி மகிழ்ந்திடலாம் – ஆனந்தமே

4. கூடார வாசிகளாகும் நமக்கிங்கு
வீடென்றும் நாடென்றும் சொல்லலாமோ?
கைவேலையில்லாத வீடொன்றை மேலேதான்
செய்வேன் எனச் சொல்லிப் போகலையோ – ஆனந்தமே

5. துன்பங்கள் தொல்லை இடுக்கண் இடர் இவை
தொண்டர் எமை அண்டி வந்திடினும்
சொல்லி முடியாத ஆறுதல் கிருபையை
துன்பத்தினூடே அனுப்பிடுவார் – ஆனந்தமே

6. இயேசுவே சீக்கிரம் இத்தரை வாருமேன்
ஏழை வெகுவாய்க் கலங்குகிறேனே
என் நேசர் தன் முக ஜோதியதேயல்லாமல்
இன்பம் தரும் பொருள் ஏதுமில்லை – ஆனந்தமே

## பாடல் – 268

*சரணங்கள்*

**ஆனந்தமாய் நாமே ஆர்ப்பரிப்போமே**
அருமையாம் இயேசு நமக்களித்த
அளவில்லாக் கிருபை பெரிதல்லவோ
அனுதின ஜீவியத்தில்

***பல்லவி***

ஆத்துமமே என் முழு உள்ளமே
உன் அற்புத தேவனையே ஸ்தோத்திரி
பொங்கிடுதே என் உள்ளத்திலே
பேரன்பின் பெரு வெள்ளமே

2. கருணையாய் இதுவரை கைவிடாமலே
கண்மணிபோல் எமைக் காத்தாரே
கவலைகள் போக்கி கண்ணீர் துடைத்தார்
கருத்துடன் பாடிடுவோம் – ஆத்துமமே

3. படகிலே படுத்து உறங்கினாலும்
கடும் புயல் அடித்து கவிழ்த்தினாலும்
கடலையுங் காற்றையும் அமர்த்தியெமைக்
காப்பாரே அல்லேலூயா – ஆத்துமமே

4. யோர்தானைக் கடப்போம் அவர் பெலத்தால்
எரிகோவைத் தகர்ப்போம் அவர் துதியால்
இயேசுவின் நாமத்தில் ஜெயம் எடுத்தே
என்றென்றுமாய் வாழ்வோம் – ஆத்துமமே

5. பரிசுத்தவான்களின் பாடுகளெல்லாம்
அதி சீக்கிரமாய் முடிகிறதே
விழிப்புடன் கூடித் தரித்திருப்போம்
விரைந்தவர் வந்திடுவார் – ஆத்துமமே

## பாடல் – 269

**வான் புகழ் வல்ல தேவனையே நித்தம்**
வாழ்த்தியே துத்தியம் செய்திடுவோமே
காத்திடும் கரகதின் வல்லமையை என்றும்
கனிவுடன் பாடியே போற்றிடுவோமே

***சரணங்கள்***

1. யாக்கோபின் ஏணியின் முன் நின்றவர் தாம்
யாக்கோபின் தேவனின் சேனை அவர் தாம்
யாத்திரையில் நம்மை சூழ்ந்திடும் கர்த்தர்
நேத்திரம் போல் பாதுகாத்திடுவாரே – வான்

2. பட்சிக்கும் சிங்கங்கள் வாயிலிருந்து
இரட்சித்தாரே வீர தானியேலின் தேவன்
அற்புத அடையாளம் நிகழ்த்தியே நித்தம்
கர்த்தன் தன் சேனைகொண்டு காத்திடுவாரே – வான்

3. உக்கிரமாய் எரியும் அக்கினி நடுவில்
சுற்றி உலாவின நித்திய தேவன்
மகிமையின் சாயலாய் திகழ்ந்திடும் கர்த்தர்
முற்றும் தம் தாசரைக் காத்திடுவாரே – வான்

4. சிறைச்சாலைக் கதவுகள் அதிர்ந்து நொறுங்க
சீஷரை சிறை மீட்டார் சத்திய தேவன்
சத்துருவின் எண்ணங்கள் சிதறுண்டு மாள
சேனைகளின் கர்த்தர் காத்திடுவாரே – வான்

5. அழைத்தனரே தம் மகிமைக்கென்றே எம்மை
தெரிந்தெடுத்தாரே தம் சாயலை அணிய
வழுவ விடாமலே காத்திடும் தேவன்
மாசற்றோராய் தம்முன் நிறுத்திடுவாரே – வான்

6. மகத்துவ தேவன் வானில் ஆயத்தமாக
மகிமையாய் நிற்கிறார் சடுதியாய் இறங்க
மணவாளன் வரும்வேளை அறியலாகாதே
மணவாட்டி சபையே நீர் விழிப்புடனிருப்பீர் – வான்

## பாடல் – 270

**கர்த்தரே நித்தம் என் கன்மலையாமே**
யுத்தங்கள் வந்தும் என் கேடகம் நீரே
மேக மீதினில் தேவன் ராஜாவாகவே
வேகம் வாருமே அழகு லீலி புஷ்பமே

1. பள்ளத்தாக்கிலே நாங்கள் நடந்த போதிலும்
பாசமாகவே எம்மைத் தூக்கி மீட்டீரே
காலைதோறுமே தேவ சுத்த கிருபையே
பனியைப் போலவே என்றும் வந்து இறங்குதே
ஜீவனுள்ள தேவனை சொந்தமாகவே
ஏற்றுக்கொண்டதாலே என்றும் செழித்து ஓங்குவோம் – கர்த்தரே

2. கருவில் வளரும்போது தேவன் கண்கள் கண்டதே
இருளில் நடக்கும்போது தேவன் ஒளியும் தந்தீரே
அமர்ந்த தண்ணீர் அருகில் நீரும் அழைத்து சென்றீரே
உயர்ந்த சீயோன் மலையின் மீது நிறுத்தி வைத்தீரே
மங்கி எரியும் திரியைப் போல மாறிடாமலே
மன்னா உந்தன் ஆவி என்னை நெருங்கி ஏவுதே – கர்த்தரே

3. வார்த்தையாலே படைத்த இந்த வானம் பூமியும்
வல்ல தேவ நாமம் என்றும் சொல்லிப் பாடுதே
வார்த்தையாக இருந்த தேவ சொந்த மைந்தனும்
நிந்தை சுமக்க இந்த பூமி வந்து பிறந்தாரே
அன்பினாலே நம்மை சேர்த்த அன்பு தேவனை
இன்பமாகவே இன்றும் என்றும் பாடி போற்றுவோம் – கர்த்தரே

## பாடல் – 271

**நெஞ்சமே துதி பாடிடு**
அஞ்சிடாதே நீ ஆடிடு
வல்லவர் செய்த நன்மைகள்
சொல்லிப் பாடிடு

1. பாடுகின்ற பறவைகள்
ஓடும் நதிகளும்
வானமும் பூமியும்
தேவன் தந்திட்டார்

2. வண்ண மலர்கள் போலவே
உன்னை உடுத்திட்டார்
உண்ணவும் உறங்கவும்
தேவன் தந்திட்டார்

## பாடல் – 272

***பல்லவி***

**ஆனந்தமாய் இன்பக் கானான் ஏகிடுவேன்**
தூய பிதாவின் முகம் தரிசிப்பேன்

***அனுபல்லவி***

நாளுக்கு நாள் அற்புதமாய் என்னைத் தாங்கிடும்
நாதன் இயேசு என்னோடிருப்பார்

***சரணங்கள்***

1. சேற்றினின்றென்னைத் தூக்கியெடுத்து
மாற்றி உள்ளம் புதிதாக்கினாரே
கல்லான என் உள்ளம் உருக்கின கல்வாரியைக்
கண்டு நன்றியுடன் பாடிடுவேன் – ஆனந்தமாய்

2. வாலிப நாளில் இயேசுவைக் கண்டேன்
வாஞ்சையுடன் என்னைத் தேடி வந்தார்
எதற்குமே உதவா என்னையும் கண்டெடுத்தார்
இயேசுவின் அன்பை நான் என் சொல்லுவேன் – ஆனந்தமாய்

3. கர்த்தரின் சித்தம் செய்திட நித்தம்
தத்தம் செய்தே என்னை அர்ப்பணித்தேன்
இயேசு அல்லால் ஆசை இப்பூவினில் வேறே இல்லை
என்றும் எனக்கவர் ஆதரவே – ஆனந்தமாய்

4. உம்மைப் பின் சென்று ஊழியம் செய்து
உம்பாதம் சேர வாஞ்சிக்கிறேன்
தாரும் தேவா ஏழைக்கும் மாறாத உம் கிருபை
கண் பாரும் என்றும் நான் உம் அடிமை – ஆனந்தமாய்

5. தேற்றிடுதே உம் வாக்குகள் என்னை
ஆற்றிடுதே உந்தன் சமூகமே
பெலத்தின் மேல் பெலனடைந்து நான் சேருவேன்
பேரின்ப சீயோனில் வாழ்ந்திடுவேன் – ஆனந்தமாய்

## பாடல் – 273

**ஆயிரம் ஆயிரம் பாடல்களை**
ஆவியில் மகிழ்ந்தே பாடுங்களேன்
யாவரும் தேமொழிப் பாடல்களால்
இயேசுவைப் பாடிட வாருங்களேன்

அல்லேலூயா! அல்லேலூயா!
என்றெல்லாரும் பாடிடுவோம்
அல்லலில்லை! அல்லலில்லை!
ஆனந்தமாய்ப் பாடிடுவோம்

2. புதிய புதிய பாடல்களைப்
புனைந்தே பண்களும் சேருங்களேன்
துதிகள் நிறையும் கானங்களால்
தொழுதே இறைவனைக் காணுங்களேன் – அல்லேலூயா

3. நெஞ்சின் நாவின் நாதங்களே
நன்றி கூறும் கீதங்களால்
மிஞ்சும் ஓசைத் தாளங்கலால்
மேலும் பரவசம் கூடுங்களேன் – அல்லேலூயா

4. எந்த நாளும் காலங்களும்
இறைவனைப் போற்றும் நேரங்களே
சிந்தை குளிர்ந்தே ஆண்டுகளாய்
சீயோனின் கீதம் பாடுங்களேன் – அல்லேலூயா

### பாடல் – 274

**மாட்சி மிகும் மோட்ச நகர் மகிமை என் சொல்வேன் – அந்த**
மங்களம் சேர் மாளிகைக்குள் என்று சேருவேன்

2. பட்டணத்து வீதியெல்லாம் சுத்தப் பொன்னாமே – அங்கு
பாடுவோரும் ஆடுவோரும் கோடாக் கோடியே

3. முத்து மயமாயிலங்கும் பட்டணமது நமது
முன்னோரெல்லாம் போயிருக்கும் பட்டணமது

4. ஜீவநதி பாயுகின்ற பட்டணமது – நிதம்
சித்திரமுடனிலங்கும் பட்டணமது

5. நாமெல்லோரும் நாடுகின்ற பட்டணமது – நமது
நாதரேசு வீற்றிருக்கும் பட்டணமது

6. சாவு துக்கமேயில்லாத பட்டணமது – நிதம்
சங்கீதமுடனிலங்கும் பட்டணமது

### பாடல் – 275

**ஆனந்தமாக அன்பரைப்பாடுவேன்**
ஆசையவரென் ஆத்துமாவிற்கே
ஆனந்தமான ஆசிகளருளும்
ஆண்டவர் இயேசு போல் ஆருமில்லையே

*பல்லவி*

இயேசுவல்லால் இயேசுவல்லால்
இன்பம் இகத்தில் வேறு எங்குமில்லையே
இயேசுவல்லால் இயேசுவல்லால்
இன்பம் வேறு எங்குமில்லையே

2. தந்தை தாயு முன் சொந்தமானோர்களும்
தள்ளிடினும் நான் தள்ளிடுவேனோ
தாங்கிடுவே னென் நீதியின் கரத்தால்
தாபரமும் நல்ல நாதனுமென்றார் – இயேசு

3. அழுகையின் தாழ்வில் நடப்பவரே
ஆழிபோல் வான் மழை நிறைக்குமே
சேர்ந்திட சீயோனில் தேவனின் சந்நிதி
ஜெயத்தின் மேல் ஜெயமடைந்திடுவோம் – இயேசு

4. கிறிஸ்து இயேசு பிரசன்னமாகவே
கிருபையும் வெளியாகினதே
நீக்கியே சாவினை நற் சுவிசேஷத்தால்
ஜீவன் அழியாமை வெளியாக்கினார் – இயேசு

5. ஒப்பில்லாத நம்பிக்கை சந்தோஷமும்
மகிழ்ச்சியின் கிரீடமாகவே
அப்போஸ்தலர் தம் ஊழியத்தாலே
விசுவாசத்தில் வளர்ந்திடுவோம் – இயேசு

## பாடல் – 276

*பல்லவி*

**உம் பாதம் பணிந்தேன் எந்நாளும் துதியே**
உம்மையன்றி யாரைப்பாடுவேன் – ஏசையா
உந்தன் அன்பு உள்ளம் பொங்குதே

***சரணங்கள்***

1. பரிசுத்தமே பரவசமே
பரனேசருளே வரம் பொருளே
தேடினதால் கண்டடைந்தேன்
பாடிட பாடல்கள் ஈந்தளித்தீர் – உம்பாதம்

2. புது எண்ணெய்யால் புது பெலத்தால்
புதிய கிருபை புது கவியால்
நிரப்பி நிதம் நடத்துகின்றீர்
நூதன சாலேமில் சேர்த்திடுவீர் – உம்பாதம்

3. நெருக்கத்திலே உம்மை அழைத்தேன்
நெருங்கி உதவி எனக்களித்தீர்
திசைக் கெட்டெங்கும் அலைந்திடாமல்
தீவிரம் வந்தென்னைத் தாங்குகின்றீர் – உம்பாதம்

4. என் முன் செல்லும் உம் சமூகம்
எனக்கு அளிக்கும் இளைப்பாறுதல்
உமது கோலும் உம் தடியும்
உண்மையாய் என்னையும் தேற்றிடுதே – உம்பாதம்

5. கனிசெடி நீர் நிலைத்திருக்கும்
கொடியாய் அடியேன் படர்ந்திலங்க
கினை நறுக்கிக் கிளை பிடுங்கி
கர்த்தரே காத்தென்னை சுத்தம் செய்தீர் – உம்பாதம்

6. என் இதய தெய்வமே நீர்
எனது இறைவா ஆருயிரே
நேசிக்கிறேன் இயேசுவே உம்
நேசமுகம் என்று கண்டிடுவேன் – உம்பாதம்

7. சீருடனே பேருடனே
சிறந்து ஜொலிக்கும் கொடுமுடியில்
சீக்கிரமாய் சேர்த்திடுவீர்
சீயோனை வாஞ்சித்து நாடிடுவேன் – உம்பாதம்

## பாடல் - 277

**எந்தன் உள்ளம் புதுக்கவியாலே பொங்க**
இயேசுவைப் பாடிடுவேன்
அவர் நாமம் ஊற்றுண்ட பரிமளதைலம்
அவரையே நேசிக்கிறேன்

### *பல்லவி*

அல்லேலுயா துதி அல்லேலூயா – எந்தன்
அண்ணலாம் இயேசுவைப் பாடிடுவேன்
இத்தனை கிருபைகள் நித்தமும் அருளிய
கர்த்தனைக் கொண்டாடுவேன்

2. சென்ற காலம் முழுவதும் காத்தாரே ஓர்
சேதமும் அணுகாமல்
சொந்தமாக ஆசீர் பொழிந்தெனக்கென்றும்
சுகபெலன் அளித்தாரே – அல்லே

3. சிலவேளை இமைப்பொழுதே தம் முகத்தை
சிருஷ்டிகர் மறைத்தாரே
கடும்கோபம் நீங்கி திரும்பவும் என்மேல்
கிருபையும் பொழிந்தாரே – அல்லே

4. பஞ்சகாலம் பெருகிட நேர்ந்தாலும் தாம்
தஞ்சமே யானாரே
அங்கும் இங்கும் நோய்கள் பரவி வந்தாலும்
அடைக்கலம் அளித்தாரே – அல்லே

5. களிப்போடு விரைந்தெம்மைச் சேர்த்திட என்
கர்த்தரே வருவாரே
ஆவலோடு நாளும் வானத்தை நோக்கி
அனுதினம் காத்திருப்போம் – அல்லே

## பாடல் – 278

**எனக்கின்பம் ஏதெனக் கேளு நான் காரணம் சொல்வேன்**
என் பாரம் நீங்கிற்றே
வம்பன் வந்தென்னை நோக்கி, நீங்கிற்றென்றால்
தெம்பாய் நீங்கிற்றென்பேன்

***பல்லவி***

அதைக் கல்வாரியின் ரத்தத்தால் மூடியாச்சுதே
அவை வானம் பூமி போல நீங்கிற்றே
அன்பர் மறதிக் கடலுள்ளே ஆழ்ந்தது நன்றே
ஆமென் சுத்தமானேன்

2. அன்றொரு நாளில் இயேசு என் உள்ளத்தில் வந்தார்
என் பாரம் நீங்கிற்றே
என் உள்ளம் பொங்கிட்டதே பிசாசோடிப் போனான்
அன்றே சுகமானேன் – அதை

3. சாத்தான் என்னிடம் வந்து சந்தேக மூட்டினால்
சீ போ நீங்கிற்றென்பேன்
நீ துன்பத்துள் ஆக்கிட்டாய் என் இயேசென்னை மீட்டார்
நேசர் சுகம் தந்தார் – அதை

4. எப்போதும் நேசருடன் என் நாளெல்லாம்
அப்போதென் பாக்கியமாம்
தப்பாது பாட்டுப்பாடி ஜெபித்துப் போற்றுவேன்
ஆஹா பேரின்பமே – அதை

## பாடல் – 279

**என்ன என் ஆனந்தம்! என்ன என் ஆனந்தம்!**
சொல்லக் கூடாதே:
மன்னன் கிறிஸ்து என் பாவத்தை எல்லாம்
மன்னித்து விட்டாரே

2. கூடுவோம் ஆடுவோம் பாடுவோம் ஒன்றாய்
மகிழ் கொண்டாடுவோம்;
நாடியே நம்மைத் தேடியே வந்த
நாதனைப் போற்றிடுவோம்.

3. பாவங்கள் சாபங்கள் கோபங்கள் எல்லாம்
பரிகரித்தாரே;
தேவாதி தேவன் என் உள்ளத்தில் வந்து
தேற்றியே விட்டாரே.

4. அட்சயன் பட்சமாய் இரட்சிப்பை எங்களுக்
கருளின தாலே
நிச்சயம் சுவாமியைப் பற்றியே சாட்சி
பகர வேண்டியதே.

5. வெண்ணங்கி பொன் முடி வாத்தியம் மேல் வீடு
ஜெயக் கொடியுடனே
மண்ணுலகில் வந்து விண்ணுலகில் சென்ற
மன்னனைத் தோத்தரிப்போம்.

## பாடல் – 280

**என் பாவம் தீர்ந்த நாளையே**
அன்போடு எண்ணி ஜீவிப்பேன்
அந்நாளில் பெற்ற ஈவையே
சந்தோஷமாய்க் கொண்டாடுவேன்

***பல்லவி***

இன்ப நாள்! இன்ப நாள்!
என் பாவம் தீர்ந்து போன நாள்!
பேரன்பர் என்னை ரட்சித்தார்
சீராக்கி இன்பம் நல்கினார்
இன்ப நாள்! இன்ப நாள்!
என் பாவம் தீர்ந்து போன நாள்!

2. இம்மானுவேல் இப்பாவியைத்
தம் சொந்தமாக்கிக் கொண்டனர்
சந்தேகம் நீக்கி மன்னிப்பைத்
தந்தென்னை அன்பாய் சேர்த்தனர்

3. என் உள்ளமே உன் மீட்பரை
என்றைக்கும் சார்ந்து வாழுவாய்
ஆருயிர் தந்த நாதரை
ஓர்காலும் விட்டு நீங்கிடாய்

4. ஆட்கொண்ட நாதா! எந்தனை
நாடோறும் தத்தம் செய்குவேன்
பின் மோட்ச வீட்டில் பேரன்பை
இன்னோசையாலே பாடுவேன்.

## பாடல் – 281

**எந்தன் அன்புள்ள ஆண்டவர் இயேசுவே நான்**
உந்தன் நாமத்தைப் போற்றிடுவேன்
உம்மைப் போல் ஒரு தேவனைப் பூமியில் அறிந்திடேன்
உயிர் தந்த தெய்வம் நீரே

***பல்லவி***

ஆ! ஆனந்தம் ஆனந்தமே
அல்லும் பகலிலும் பாடிடுவேன்
இயேசுவே எந்தன் ஆருயிரே

2. பெற்ற தாயும் என் தந்தையுமானவரே
மற்றும் எல்லாம் எனக்கு நீரே
வானம் பூமியும் யாவுமே மாறிடினும் நீரோ
வாக்கு மாறாதவரே

3. உயர் அடைக்கலத்தில் என்னை வைத்தவரே
உந்தன் நாமத்தை நம்பிடுவேன்
உம்மையல்லாதிப் பூமியில் யாரையும் நம்பிடேன்
உயிருள்ள தெய்வம் நீரே

4. எந்தன் சிருஷ்டிகரே உம்மை நினைத்திடவே
தந்த வாலிப நாட்களிலே
இந்த மாய உலகத்தை வெறுத்திட அளித்தீரே
பரிசுத்த ஜீவியமே

5. பொன் வெள்ளியுமோ பெரும் பேர் புகழோ
பண ஆஸ்தியும் வீண் அல்லவோ
பரலோகத்தின் செல்வமே என் அருள் இயேசுவே
போதும் எனக்கு நீரே

## பாடல் – 282

### *பல்லவி*

**கர்த்தரின் சத்தம் வல்லமையுள்ளது**
கர்த்தரின் சத்தம் மகத்துவமுள்ளது
திரண்ட தண்ணீர் மேல் ஜலப் பிரவாகம் மேல்
தற்பரன் முழங்குகின்றார் அல்லேலூயா!

### *சரணங்கள்*

1. பலவான்களின் புத்திரரே
பரிசுத்த அலங்காரமாய்
கனம், வல்லமை, மகிமை
கர்த்தருக்கே செலுத்திடுங்கள்
பிதா, குமாரன் பரிசுத்தாவியின்
புதிய ஆசீர்வாதம் பெருக – கர்த்தரின்

2. கேதுரு மரங்களையும்
லீபனோனின் மரங்களையும்
கர்த்தரின் வலிய சத்தம்
கோரமாக முறிக்கின்றது
சேனை அதிபன் நமது முன்னிலை
ஜெய வீரனாகச் செல்கின்றார் – கர்த்தரின்

3. அக்கினி ஜுவாலைகளை
அவர் சத்தம் பிளக்கின்றது
காதேஸ் வனாந்திரத்தை
கர்த்தர் சத்தம் அதிரப்பண்ணும்
ராஜாவாகவே கர்த்தர் வீற்றிருப்பார்
ராஜரீக மெங்கும் ஜொலிக்கும் – கர்த்தரின்

4. பெண் மான்கள் ஈனும்படி
பெலத்த கிரியை செய்திடும்
காட்டையும் வெளியாக்கும்
கர்த்தரின் வலிய சத்தம்
பெலன் கொடுத்து சமாதானமீந்து
பரன் எம்மை ஆசீர்வதிப்பார் – கர்த்தரின்

## பாடல் – 283

**சந்தோஷம் பொங்குதே (2)**
சந்தோஷம் என்னில் பொங்குதே
இயேசு என்னை இரட்சித்தார்
முற்றும் என்னை மாற்றினார்
சந்தோஷம் பொங்கிப் பொங்குதே

1. வழி தப்பி நான் திரிந்தேன் – பாவப்
பழியதைச் சுமந்தலைந்தேன்
அவர் அன்புக் குரலே
அழைத்தது என்னையே
அந்த இன்ப நாளில் எந்தன்
பாவம் நீங்கிற்றே – சந்தோஷம்

2. சத்துரு சோதித்திட தேவ
உத்திரவுடன் வருவான்
ஆனால் இயேசு கைவிடார்
தானாய் வந்து இரட்சிப்பார்
இந்த நல்ல ஏசு எந்தன்
சொந்தமானாரே – சந்தோஷம்

3. பாவத்தில் ஜீவிப்பவர்
பாதாளத்தில் அழிந்திடுவார்
அவரும் பரலோகத்தில்
ஆண்டவரோடு வாழவே
நானும் தேவ அன்பையே
நாளும் கூறிடுவேன் – சந்தோஷம்

## பாடல் – 284

*பல்லவி*

**சீயோனே ஆர்ப்பரி**
சிருஷ்டி கர்த்தரான உந்தன்
சர்வ வல்ல தேவனே

*சரணங்கள்*

1. சென்றதாம் பாதைகளிலே
சேதமே யாதுமணுகா
கண்மணி போலக் காவல் செய்தோனை
நன்றியுடன் பாடுவோம் – சீயோனே

2. நீக்கினார் பாவப்பாரமே
போக்கினார் சாபம் யாவுமே
தாழ்த்தியே நீசக் கோலமதாகி
தம் ஜீவனை ஈந்தாரே – சீயோனே

3. ஆதரவற்ற நேரத்தில்
ஆறுதலில்லா வேளையில்
அன்பாலணைத்து ஆறுதலீந்த
அன்பனைப் போற்றிடுவோம் – சீயோனே

4. நிந்தையில் சோதனையிலும்
வந்ததாலம் தொல்லைகளிலும்
மாண்டவரோடு எம்மையும் மாளா
ஆண்டவர் ஆதரித்தார் – சீயோனே

## பாடல் – 285

**தினம் தினம் இயேசு நாயகனை**
மனம் மனம் மகிழ்ந்து பாடுவேன்!
ஆனந்தமாக என் நேசர் மார்பில்
அன்போடு சாய்ந்து அகமகிழ்வேன்! – தினம்

1. கருவில் என்னைத் தெரிந்து கொண்டு
கருத்தாய் அவரை பாட வைத்தார் – ஆனந்தமாக

2. வலையை எனக்காய் சாத்தான் விரிக்க
வழியை மாற்றி அழைத்துச் சென்றார் – ஆனந்தமாக

3. தேவன் தன்னை விலையாய்த் தந்தே
பாவி என்னை மந்தை சேர்த்தார் – ஆனந்தமாக

4. மன்னவன் இயேசு என்னுள் இருக்க
மனிதன் எனக்கு என்ன செய்வான் – ஆனந்தமாக

5. அல்லல் நீக்கி மார்பில் அணைத்தார்
அல்லேலூயா பாடுகிறேன் – ஆனந்தமாக

## பாடல் – 286

*பல்லவி*

**தேவ கிருபை என்றுமுள்ளதே**
அவர் கிருபை என்றுமுள்ளதே
அவரைப் போற்றி துதித்துப்பாடி
அல்லேலூயா என்றார்ப்பரிப்போம்

1. நெருக்கப்பட்டோம் மடிந்திடாமல்
கர்த்தர் தாம் நம்மைக் காத்ததாலே
அவர் நல்லவர் அவர் வல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளதே – தேவ கிருபை

2. சத்துரு சேனை தொடர்ந்து சூழ்கையில்
பக்தனாம் தாவீதின் தேவன் நமக்கு
முன் சென்றாரே அவர் நல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளதே – தேவ கிருபை

3. காரிருள் போன்ற கஷ்டங்கள் வந்தும்
பாரினில் அவர் என் பாதையில் ஒளியாய்
என்னை நடத்தினார் அவர் நல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளதே – தேவ கிருபை

4. வெள்ளம் போல் நிந்தை மேற்கொள்ள வந்தும்
வீரன் நெகேமியா ஆவியை அளித்தே
திட நம்பிக்கை தைரியமும் ஈந்தாரே
அவர் கிருபை என்றுமுள்ளது – தேவ கிருபை

5. நித்திய தேவனாம் சத்தியபரன் தான்
நித்தமும் நம்முடன் இருப்பதாலே
அவர் நல்லவர் என்றும் துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளதே – தேவ கிருபை

## பாடல் – 287

**பார் போற்றும் வேந்தன் இப்பாழ் உள்ளம் வந்தார்**
பூரிப்பால் உள்ளம் யாவும் நிறைத்தார்
பரிசுத்தவான்களோடு இணைத்தார்
இந்த வாழ்க்கை என்றும் இன்ப வாழ்க்கையே

அல்லேலூயா கீதம் நான் என்றும் பாடுவேன்
ஆர்ப்பரித்து உள்ளம் மகிழ்ந்து பூரிப்பேன்
ஜீவனுள்ள மட்டும் என்றும் கூறுவேன்
அல்லேலூயா! அல்லேலூயா

2. பாவ மேகம் யாவும் கலைந்து சென்றதே
பரிசுத்த ஜுவாலை கவர்ந்து கொண்டதே
உடல், பொருள், ஆவி, ஆன்மா யாவுமே
இயேசுவின் சிலுவை அடிவாரமே

3. தாழ்மை உள்ளம் கொண்டு பின்செல்வேன் நானே
கந்தல் அல்லவோ என் நற்செயல் எல்லாம்
உள்ளத்தில் கிறிஸ்து வந்து தங்கலே
வல்ல தேவன் காட்டும் சுத்தக் கிருபையே

4. நாள்தோறும் நாதன் வழியை ஆசிப்பேன்
விட்டு வந்த பாவக் கிடங்கிற்குச் செல்லேன்
என் முன்னே அநேக சுத்தர் செல்கின்றார்
இப்பாதையே என்தன் ஜீவ பாதையே

## பாடல் – 288

*பல்லவி*

**பாடும் பாடல் இயேசுவுக்காக**
பாடுவேன் நான் எந்த நாளுமே
என் ராஜா வண்ண ரோஜா
பள்ளத்தாக்கின் லீலி அவரே

***சரணங்கள்***

1. அழகென்றால் அவர் போல
யார் தான் உண்டு இந்த லோகத்தில்
வண்ண மேனியோனை எண்ணிப் பாடிடவே
என் உள்ளம் மகிழ்வாகுதே – பாடும்

2. அன்பினிலே என் நேசர்க்கே
என்றென்றுமே இணையில்லையே
என்னை மீட்டிடவே தன் ஜீவன் தந்தார்
என் நேசர் அன்பில் மகிழ்வேன் – பாடும்

3. தெய்வம் என்றால் இயேசுதானே
சாவைவென்று உயிர்த்தெழுந்தாரே
என் பொன் நேசரின் மார்பினில் சாய்ந்தோனாக
நான் பாடுவேன் பாமாலைகள் – பாடும்

## பாடல் – 289

**நான் உம்மைப் பற்றி ரட்சகா**
வீண் வெட்கம் அடையேன்
பேரன்பைக் குறித்தாண்டவா
நான் சாட்சி கூறுவேன்.

***பல்லவி***

சிலுவையண்டையில்
நம்பி வந்து நிற்கையில்
பாவப் பாரம் நீங்கி, வாழ்வடைந்தேன்
எந்த நேரமும் என துள்ளத்திலும்
பேரானந்தம் பொங்கிப் பாடுவேன்.

2. ஆ! உந்தன் வல்ல நாமத்தை
நான் நம்பிச் சார்வதால்
நீர் கைவிடீர் இவ்வேழையைக்
காப்பீர் தேவாவியால்

3. மா வல்ல வாக்கின் உண்மையைக்
கண்டுணரச் செய்தீர்
நான் ஒப்புவித்த பொருளை
விடாமல் காக்கிறீர்

4. நீர் மாட்சியோடு வருவீர்
அப்போது களிப்பேன்
ஓர் வாசஸ்தலம் கொடுப்பீர்
மெய் பாக்கியம் அடைவேன்.

## பாடல் – 290

**மகிழ்வோம் இயேசுவில் மகிழ்வோம் பரன்**
மகிமை யுற்றுமே மகிழ்வோம்

***அனுபல்லவி***

மகிழ்வோம், மகிழ்வோம், மகிழ்வோம், மகிமையில் மகிழ – மகிழ்

***சரணங்கள்***

1. வானில் யாவரும் மகிழ – இயேசு
வாருமே என்றுமே பகர
மாறுவோர்க்கொரு சிகரம் – மன
தாரத் தற்பனதருள
மகிமை, கனமும், மகிமையில் மிகவும் மகிழ – மகிழ்

2. சுத்த ஜீவனுடைய – தேவ
புத்திரர் துலங்கிடவே
சர்வ சிருஷ்டிகளுடைய – மகா
கர்மங்கள் அகன்றகல
மகிழும் தினமும், மகிபரின் தினமும் வரவே – மகிழ்

3. அடிமையானவர் கூடி – பரன்
அளித்த பொன் முடி சூடி
ஆயிரமாண்டுகளாகக் கடன்
மாறியே அரசாள்
மயிலும், குயிலும் ஆடும் புலியுடன் வாழ — மகிழ்

4. வானம் பூமியுமகல – நவ
வானம் பூவுமே நிகழ
சாபம் பாவமும் சகல – கடும்
ரோக மோடியே விலக
சுகமும், ஜெபமும், சகலரும் சகித்து மகிழ — மகிழ்

5. பொன்னால் வீதிகளுடைய – அரும்
சொல்லால் உரைப்பதற்கரிய
மின்னும் வச்சிர வொளியே – நரர்
கண்டு களித்திடு மகலே
கண்ணீர் கவலையும் நண்ணா நகரில் மகிழ — மகிழ்

6. பளிங்கு போல் ஜீவ நதியே – இரு
கரையும் ஜீவனின் மரமே
பசியும் தாகமுமில்லையே – அங்கு
புசிக்க ஜீவனின் கனியே
புசிப்போம், ருசிப்போம் இயேசுவில் நித்தியம் மகிழ — மகிழ்

7. சுத்த ஆவியும் சுதனும் – செய்த
மீட்பின் செயலைப் பரனும்
மற்றும் தூதர் கணமும் அங்கு
உற்று உள்ளம் மகிழ
போற்றிப் புகழ்வோம், தூதர் செயலில் மகிழ — மகிழ்

## பாடல் – 291

*பல்லவி*

**மகிழுவேன் மகிழுவேன்**
இரட்சிப்பின் தேவனின் மகிழுவேன்

***சரணங்கள்***

1. அத்தி மரம் துளிர் விடாமற் போயினும்
திராட்சைச் செடி பழம் கொடாமற் போயினும் – மகிழுவேன்

2. ஒலிவ மரம் காய்க்காமற் போயினும்
வயலில் விளைச்சல் இல்லாமற் போயினும் – மகிழுவேன்

3. கிடையில் ஆடு முதலற்றாலும்
தொழுவத்தில் மாடு இல்லாமற் போயினும் – மகிழுவேன்

4. என் கால்களை அவர் மான் கால் போலாக்கி
உன்னத ஸ்தலங்களில் நடத்துகிறார் – மகிழுவேன்

5. என் கோட்டை என் பெலன் என் யெகோவா
உமக்குள் நித்தியம் மகிழுவேன் – மகிழுவேன்

## பாடல் – 292

**மகிழுவேன் மகிழுவேன்**
**இரட்சிப்பில் மகிழ்வேன்**
கர்த்தரின் கிருபையை
என்றென்றும் பாடுவேன்

1. பத்து நரம்பு வீணையோடும்
பக்தியுடன் கைத்தாளத்தோடும்
தம்புரு யாழ் குழலோடும்
தற்பரனில் மகிழ்வேன் ஆ ஆ ஆ

2. நம்பிக்கை கொண்டு வாழ்ந்திடுவேன்
நாவால் துதியை செலுத்திடுன்
நல்கிடு மின் நன்மைகளை
நன்றியால் உரைத்திடுவேன் – ஆ ஆ ஆ

3. தெரிந்தெடுத்தீர் உம் சேவை செய்ய
பிரித்தெடுத்தீர் பரிசுத்தராக்க
பறந்திடுவேன் உம் வருகையிலே
பரமனின் பக்தரோடே – ஆ ஆ ஆ

## பாடல் – 293

**மகிழ்வோம் மகிழ்வோம் தினம் அகமகிழ்வோம்**
இயேசு இராஜன் நம் சொந்தமாயினார்
இந்தப் பார்தலத்தின் சொந்தக்காரர் அவர்
எந்தன் உள்ளத்தில் சொந்தமானார்

ஆ ஆ ஆனந்தமே பரமானந்தமே
இது மாபெரும் பாக்கியமே

2. சின்னஞ்சிறு வயதில் என்னைக் குறித்து விட்டார்
தூரம் போயினும் கண்டு கொண்டார்
தமது ஜீவனை எனக்கும் அளித்து
ஜீவன் பெற்றுக்கொள் என்றுரைத்தார்

3. எந்தச் சூழ்நிலையும், அவர் அன்பினின்று
என்னைப் பிரிக்காது காத்துக்கொள்வார்
என்னை நம்பி அவர் தந்த பொறுப்பதனை
அவர் வரும்வரை காத்துக்கொள்வேன்

4. அவர் வரும் நாளினில் என்னை கரம் அசைத்து
அன்பாய் கூப்பிட்டு சேர்த்துக் கொள்வார்
அவர் சமூகமதில் அங்கே அவருடனே
ஆடிப்பாடியே மகிழ்ந்திடுவேன்

## பாடல் – 294

**அன்பின் தேவனே**
ஆருயிர் நாதனே
மீட்டுக் கொண்டீர் என்னை (2)

1. பாவத்தில் இருந்தும் நீர்
சாபத்தில் இருந்தும் நீர்
அன்பின் கரத்தால் அரவணைத்து
காத்துக் கொண்டீர் என்னை (2)

2. துன்பத்திலிருந்தும் நீர்
துயரத்திலிருந்தும் நீர்
தூய கரத்தால் அரவணைத்து
காத்துக் கொண்டீர் என்னை (2)

3. கஷ்டத்திலிருந்தும் நீர்
நஷ்டத்திலிருந்தும் நீர்
நேசக்கரத்தால் அரவணைத்து
காத்துக் கொண்டீர் என்னை (2)

## பாடல் – 295

***பல்லவி***

**இரட்டிப்பான நன்மைகள் தந்திட**
இயேசு வாக்களித்தாரே

***அனுபல்லவி***

முன்மாரி மேல் விண் மாறி மழையே
உன்னதத்தினின்று வந்திறங்குதே – இரட்டிப்பான

1. பெலத்தின் மேலே மா பெலனே
புது பெலன் நாம் பெற்றிட
சால்வை தனை எலிசா அடைந்தாற்போல்
சோர்வின்றி பெலன் என்றும் நாடுவோம் – இரட்டிப்பான

2. கிருபையின் மேல் மா கிருபை
கர்த்தரிடம் நாம் பெற்றிட
ஸ்திரீ களுக்குள் மரியாள் பெற்ற பாக்யம்
ஸ்தோத்திரம் பாடி என்றும் தேடுவோம் – இரட்டிப்பான

3. ஜெயத்தின் மேலே மா ஜெயமே
ஜெய தொனியாய்ப் பெற்றிட
போர் முனையில் சிறு தாவீது போல
போர் வீரராக என்றும் ஜெபிப்போம் – இரட்டிப்பான

4. நம்பிக்கையின் மேல் நம்பிக்கை
நல்விசுவாசம் பெற்றிட
ஆதி அப்போஸ்தலர்கள் காலம் நடந்த
அற்புதங்கள் நாம் என்றும் காணுவோம் – இரட்டிப்பான

5. பரிசுத்தம் மேல் பரிசுத்தம்
பங்கமில்லாமல் பெற்றிட
நீதியின் சூரியன் இயேசுவுடனே
நீதி அணிந்து என்றும் ஆளுவோம் – இரட்டிப்பான

6. மகிமையின் மேல் மா மகிமை
மறு ரூபம் நாம் பெற்றிட
கண்ணிமை நேரத்திலே பறந்தேகி
கர்த்தருடன் நாம் என்றும் வாழுவோம் – இரட்டிப்பான

## பாடல் – 296

*பல்லவி*

**தூய ஆவியானவர் இறங்கும்**
துரிதமாக வந்திறங்கும்
தடையாவையும் தயவாய் நீக்கி இறங்கும்

பரிசுத்த பிதாவே இறங்கும்
இயேசுவின் மூலம் இறங்கும்

2. பல பல வருடங்கள் கழிந்தும்
பாரினில் இன்னும் இருளும்
அகலவில்லை எனவே நீரே இறங்கும்

3. ஜெயிப்பவர் பலரையும் எழுப்பும்
கிறிஸ்தவ சமூகத்தைத் திருத்தும்
தயாபரனே தயவாய் வேகம் இறங்கும்

4. ஐந்து கண்டம் வாழும் மனிதர்
ஐந்து காயம் காண இறங்கும்
பாடுபட்ட நாதரே இன்றே இறங்கும்

## பாடல் - 297

***பல்லவி***

**பரிசுத்த அக்கினி அனுப்பும் தேவா**
பரந்து ஜுவாலிக்க கொளுத்தும் தேவா

***சரணங்கள்***

1. இரக்கமாய் அக்கினித் தழலைக் கொண்டு
உருக்கமாய் உள்ளத்தைத் தொட்டருளும் – பரி

2. தேசமெங்கும் திவ்ய அக்கினியால்
தீவினை யாவையும் சுட்டெரிக்க – பரி

3. கன்னிகை விருத்தர் வாலிபரும்
உன்னத ஆவியால் நிரம்பிடவும் – பரி

4. பாவிகள் யாவரும் மனந்திரும்ப
பரலோக அக்கினி நாவருளும் – பரி

5. இயேசுவின் பேரன்பை யுணர்ந்து விசு
வாசத்தில் யாவரும் வளர்ந்திடவே – பரி

## பாடல் – 298

### *பல்லவி*

**பூர்வீகமான பெந்தெகொஸ்தே ஆவி**
அருளுவீர் தே.... வா

### *சரணங்கள்*

1. அசுத்தத்தை அகற்றி விட்டுப் பரிசுத்தம் பெற்றிட
அருளுவீர் தே... வா
ஆதி ஆவி இப்போ – நலமுடன் – பூர்வீகமான

2. இருதயத்தில் இதை எடுத்திடாதிருக்கின்றோர்
காருண்யத்தில் இ... ன்று
இயேசுவின் பாதம் சேர – நலமுடன் – பூர்வீகமான

3. அந்தகார லோகத்தில் நாசத்திற் கோடுவோரை
பந்துவான இயே...சு
சொந்தமாய்ச் சேர்த்திடவே – நலமுடன் – பூர்வீகமான

4. சக்தியான சாட்சியாய் எங்கும் யான் கண்டிடவே
சக்தி நல்கும் தே... வா
இத்தினம் நின் தாசரில் – நலமுடன் – பூர்வீகமான

5. ஆயிரம் ஆயிரமாய் ஆத்துமாதாயஞ் செய்ய
அதிகாலை ஜீ...வன்
அடியாரில் அருளிடும் – நலமுடன் – பூர்வீகமான

## பாடல் – 299

**நல்லாவி ஊற்றும் தேவா**
நற்கனி நான் தர நித்தம் துதிபாட
நல்லாவி ஊற்றும் தேவா

1. பெந்தெகோஸ்தே நாளிலே
உந்தனாவி ஈந்தீரே
இந்த வேளையில் இறங்கிடுவீரே
விந்தை செய் விண் ஆவியே – நல்லாவி

2. மெத்த அசுத்தன் நானே
சுத்தாவி கொண்டெனையே
சித்தம் வைத்தென்றும் சுத்தம் செய்வீரே
சத்திய பரிசுத்தனே – நல்லாவி

3. ஆவியின் கனி ஒன்பதும்
மேவி நான் தந்திடவும்
ஜீவியமெல்லாம் புவி மீதிலே
சுவிசேஷ பணியாற்றவும் – நல்லாவி

4. பாவம் செய்யாதிருக்க
பாரில் சாட்சி பகர
பார் மீட்க வந்த பரமனையே
பாரோர்க்கு எடுத்துரைக்க – நல்லாவி

## பாடல் – 300

### *பல்லவி*

**வல்லமை தேவை தேவா வல்லமை தாரும் தேவா**
இன்றே தேவை தேவா, இப்போ தாரும் தேவா

### *அனுபல்லவி*

பொழிந்திடும் வல்லமை உன்னதத்தின் வல்லமை
ஆவியின் வல்லமை அக்கினியின் வல்லமை

### *சரணங்கள்*

1. மாம்சமான யாவர் மேலும் ஆவியை ஊற்றுவேன் என்றீர்
மூப்பர் வாலிபர் யாவரும் தீர்க்க தரிசனம் சொல்வாரே

2. நித்திய காலம் வாசம் செய்யும் சத்திய ஆவியைத் தாரும்
திக்கற்றோனாய் விட்டிடாமல் தேற்றரவாளனாய் வந்திடும்

3. மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையான ஆவியைத்தாரும்
பிதாவே என்று அழைக்க புத்ர சுவிகாரம் ஈந்திடும்

## பாடல் – 301

***பல்லவி***

**அக்கினி அபிஷேகம் ஈந்திடும்**
தேவ ஆவியால் நிறைத்திடும்
தேவா தேவா இக்கணமே ஈந்திடும்

***சரணங்கள்***

1. பரமன் இயேசுவை நிறைத்தீரே
பரிசுத்த ஆவியால் நிறைத்திடும்
உந்தன் சீஷருக்களித்தீரெ
அன்பின் அபிஷேகம் ஈந்திடும்
தேவா தேவா இக்கணமே ஈந்திடும் – அக்கினி

2. சிம்சோன் கிதியோனை நிறைத்தீரே
கர்த்தரின் வல்லமையால் நிறைத்திடும்
தீர்க்கன் எலிசாவுக் களித்தீரே
இரட்டிப்பின் வரங்களால் நிறைத்திடும்
தேவா தேவா இக்கணமே ஈந்திடும் – அக்கினி

3. அன்பர் இயேசுவின் நாமத்திலே
வன் துயர் பேய் பிணி நீங்கவே
அற்புதம் அடையாளம் நிகழ்ந்திடவே
பொற்பரன் ஆவியால் நிறைத்திடும்
தேவா தேவா இக்கணமே ஈந்திடும் – அக்கினி

4. வானில் இயேசு வருகையிலே
நானும் மறுரூபம் ஆகவே
எந்தன் சாயல் மாறிடவே
மைந்தன் ஆவியால் நிறைத்திடும்
தேவா தேவா இக்கணமே ஈந்திடும் – அக்கினி

## பாடல் – 302

**பரிசுத்தர் கூட்டம் நடுவில்**
ஜொலித்திடும் சுத்த ஜோதியே
அரூபியே இவ்வேளையில்
அடியார் நெஞ்சம் வாரீரோ

1. மீன் கேட்டால் பாம்பை அருள்வார் உண்டோ
கல்தின்ன கொடுக்கும் பெற்றோர் உண்டோ
பொல்லாதோர் கூட செய்திடார்
நற்பிதா அருளிடுவார் – பரிசுத்தர்

2. சுத்தம் விரும்பும் சுத்த ஜோதியே
விரும்பா அசுத்தம் யாவும் போக்குமே
பாவி நீச பாவி நானையா
தேவா இரக்கம் செய்ய மாட்டீரோ – பரிசுத்தர்

3. பாரும் தந்தையே எந்தன் உள்ளத்தை
யாரும் காணா உள் அலங்கோலத்தை
மனம் நொந்து மருளுகின்றேன்
பரிசுத்தம் கெஞ்சுகின்றேன் – பரிசுத்தர்

4. துணை வேண்டும் தகப்பனே உலகிலே
என்னை எதிர்க்கும் சக்திகள் பல உண்டே
என் ஜீவன் எல்லை எங்கிலும்
பரிசுத்தம் என எழுதும் – பரிசுத்தர்

## பாடல் – 303

**பரிசுத்தம் பெற வந்திட்டீர்களா?**
ஒப்பில்லா திருஸ்நானத்தினால்
பாவதோஷம் நீங்க நம்பினீர்களா?
ஆட்டுக்குட்டியின் ரத்தத்தினால்

***பல்லவி***

மாசில்லா–சுத்தமா
திருப்புண்ணிய தீர்த்தத்தினால்
குற்றம் நீங்கிவிட குணம்மாறிற்றா
ஆட்டுக்குட்டியின் ரத்தத்தினால்

2. பரலோக சிந்தை அணிந்தீர்களா
வல்ல மீட்பர் தயாளத்தினால்
மறு ஜன்ம குணமடைந்தீர்களா
ஆட்டுக்குட்டியின் ரத்தத்தினால்

3. மணவாளன் வரக்களிப்பீர்களா
தூய நதியின் ஸ்நானத்தினால்
மோட்ச கரை ஏறிச் சுகிப்பீர்களா
ஆட்டுக்குட்டியின் ரத்தத்தினால்

4. மாசு கரை நீங்கும் நீசப்பாவியே
சுத்த ரத்தத்தின் சக்தியினால்
முத்திப் பேறுண்டாகும் குற்றவாளியே
ஆட்டுக்குட்டியின் ரத்தத்தினால்

## பாடல் – 304

**பரிசுத்தப்படுத்தும் தேவா – என்றும்**
பரிசுத்தப்படுத்தும் தேவா
பாங்காய் உம் பாதை நான் நடக்க
என்னைப் பரிசுத்தப்படுத்தும் தேவா

1. உம் அன்பை உணராமல்
உம் முகம் பாராமல்
தீயனாய் அலைகின்றேன் – நீர்
எந்தனை ஏற்றுக்கொண்டு – பரிசுத்தப்படுத்தும்

2. உம் சத்தம் கேளாமல்
உம் பாதை நடக்காமல்
வழி தவறுகிறேன் – நீர்
நேர் வழி காட்டி என்னை – பரிசுத்தப்படுத்தும்

3. உம் அருள் அறியாமல்
உம்மோடு இணையாமல்
சாத்தானின் வன் பிடியில் – என்றும்
சிக்கித் தவிக்கும் என்னை – பரிசுத்தப்படுத்தும்

## பாடல் – 305

### *பல்லவி*

**அனாதி தேவன் உன் அடைக்கலமே**
அவர் நித்திய புயங்கள் உன் ஆதாரமே

### *அனுபல்லவி*

இந்த தேவன் என்றென்றுமுள்ள
சதா காலமும் நமது தேவன்
மரண பரியந்தம் நம்மை நடத்திடுவார்

### *சரணங்கள்*

1. காருண்யத்தாலே இழுத்துக் கொண்டார்
தூய தேவ அன்பே
இவ்வனாந்திரத்தில் நயங்காட்டி உன்னை
இனிதாய் வருந்தி அழைத்தார் – இந்த

2. கானகப் பாதை காரிருளில்
தூய தேவ ஒளியே
அழுகை நிறைந்த பள்ளத் தாக்குகளை
அரும் நீரூற்றாய் மாற்றினாரே – இந்த

3. கிருபை கூர்ந்து மன துருகும்
தூய தேவ அன்பே
உன் சமாதானத்தின் உடன்படிக்கைகளை
உண்மையாய் கர்த்தர் காத்துக்கொள்வார் – இந்த

4. இப்புவி யாத்திரை கடந்திடுவாய்
தூய தேவ தயவால்
கடும் கானகத்தில் கர்த்தர் மார்பினிலே
கிடைக்கும் இளைப்பாறுதலே – இந்த

5. வறண்ட வாழ்க்கை செழித்திடுமே
தூய தேவ அருளால்
நித்திய மகிழ்ச்சி தலைமேல் இருக்கும்
சஞ்சலம் தவிப்பும் ஓடிப்போம் – இந்த

6. ஆனந்தம் பாடித் திரும்பியே வா
தூய தேவ பெலத்தால்
சீயோன் பர்வதம் உன்னைச் சேர்த்திடுவார்
சந்ததம் மகிழ்ச்சி அடைவாய் – இந்த

## பாடல் – 306

*பல்லவி*

**அடைக்கலமே உமதடிமை நானே**
ஆர்ப்பரிப்பேனே அகமகிழ்ந்தே
கர்த்தர் நீர் செய்த நன்மைகளையே
நித்தம் நித்தம் நான் நினைப்பேனே

***சரணங்கள்***

1. அளவற்ற அன்பினால் அணைப்பவரே
எண்ணற்ற நன்மையால் நிறைப்பவரே
மாசில்லாத நேசரே மகிமைப் பிரதாபா
பாசத்தால் உம் பாதம் பற்றிடுவேனே – ஆ

2. கர்த்தரே உம் செய்கைகள் பெரியவைகளே
சுத்தரே உம் செயல்கள் மகத்துவமானதே
நித்தியரே உம் நியாயங்கள் என்றும் நிற்குமே
பக்தரின் பேரின்ப பாக்கியமிதே – ஆ

3. என்னை என்றும் போதித்து நடத்துபவரே
கண்ணை வைத்து ஆலோசனை சொல்லுபவரே
நடக்கும் வழிதனைக் காட்டுபவரே
நம்பி வந்தோனைக் கிருபை சூழ்ந்து கொள்ளுமே – ஆ

4. கரம் பற்றி நடத்தும் கர்த்தர் நீரல்லோ
கூப்பிட்ட என்னை குணமாக்கினீரல்லோ
குழியில் விழாதபடி காத்துக் கொண்டீரே
அழுகையைக் களிப்பாக மாற்றி விட்டீரே – ஆ

5. பாவங்களைப் பாராதென்னைப் பற்றிக் கொண்டீரே
சாபங்களை நீக்கி சுத்த உள்ளம் தந்தீரே
இரட்சணியத்தின் சந்தோஷத்தை திரும்பத் தந்தீரே
உற்சாக ஆவி என்னைத் தாங்கச் செய்தீரே – ஆ

## பாடல் – 307

**வளர்ந்தே பெருகுக என்றே – உளம்**
மகிழ்ந்தே புகழ்ந்திட வாரீர்
தளர்ந்தே சோர்வுறும் கால்களே – பலம்
அடைந்தே நடந்திட வாரீர்

*பல்லவி*

பெருகுவோம் – வளர்ந்து
பெருகுவோம் – தேவன்
அருளும் ஆவியின்
அருமையாம் ஒளியில் – வளர்ந்தே பெருகுவோம்

2. இருநூறாண்டுகள் இறைவன் – நெல்லைத்
திருச்சபை வளர்ந்திட நேர்ந்தார்
வரும்பல ஆண்டுகள் எல்லாம் – இன்னும்
பெருகிட அருள்வரம் ஈவார்

3. பிரிவினை எழுந்திடும் நேரம் – நம்மைக்
கரிசனை யோடவர் இணைத்தார்
உரிமையாய் ஒருமையில் வளர – அவர்
பரிவுடன் தினம் நடத்திடுவார்

4. தூய்மையில் தவறிய வேளை – நம்மைத்
தூயவர் தூக்கியே எடுத்தார்
தாய்மையின் கரம் கொண்டு மேலும் – நம்மைத்
தாங்கியே தினம் அணைத்திடுவார்

5. ஒளியென உலகினில் வந்தார் – நம்மை
ஒளியென விளங்கிட அழைத்தார்
ஒளிதரும் தீபங்களாக – என்றும்
ஒளிர்ந்திட ஓடியே வாரீர்

## பாடல் – 308

*பல்லவி*

**இயேசுவை நோக்கி நான் முன் நடப்பேன்**
அவர் முகத்திரு ஒளி என் முன்வீச
என் பின்னே இருள்தான் பின்னோக்கிடேன்
முன்னேறி பயணம் நான் தொடர்ந்திடுவேன்

### *சரணங்கள்*

1. கோடிக் கோடி மக்கள் அழியும்போது
ஓடி நீ தப்பிடு என்றார் என்னை
மலை மீது ஏறிப் பின்னிட்டுப் பார்த்து
சிலையாக மாறுவதா? (2)

2. கடல் மீது நடந்திட நான் துணிந்தேன்
அலைமோதும் நிலை கண்டு பின்னோக்கினேன்
ஆழ்ந்திட்ட என்னைத் தம் கரம் நீட்டி
என்னுயிர் மீட்டு விட்டார் (2)

3. கலப்பையில் கை வைத்துப் பின் திரும்பி
நலமான தகுதியை இழப்பதுண்மை
சிலரேனும் இயேசு மந்தையில் சேர
பெலத்தோடு பணிபுரிவேன் (2)

4. அவர் அடிச்சுவட்டிலே நான் நடந்தால்
அவர் பாதக் காயத்தில் பாய்ந்த இரத்தம்
என் பாதம் நனைக்க என்னுள்ளம் குளிர
பின் வாங்கி இனி சோர்வேனோ (2)

## பாடல் – 309

### *பல்லவி*

**உத்தமக் கிறிஸ்தவர் யாரோ**
நித்தமும் கிறிஸ்துவைப் பின்பற்றுவோரே (2)
உத்தமக் கிறிஸ்தவரே

### *சரணங்கள்*

1. அன்பினால் எதையும் வென்றிடுவாயா
மன்னிக்கப் பிறரை முந்திடுவார்
உண்மையே என்றும் பேசுவார்
இன்முகமே தினம் காட்டிடுவார் – உத்தம

2. ஆலயம் ஒழுங்காய்ச் சென்றிடுவார்
உள்ளமே ஆலயம் ஆக்கிடுவார்
வேதத்தை ஆவலாய்ப் படித்திடுவார்
பாதைக்குத் தீபமாய்க் கொண்டிடுவார் – உத்தம

3. செய் தொழில் ஊக்கமாய் செய்திடுவார்
பொய் வழி சென்றிட மறுத்திடுவார்
அரசியலில் அவர் இறங்கிடுவார்
அநியாய வழிதனை விடுத்திடுவார் – உத்தம

4. திருச்சபை தேர்தலில் பங்கு கொள்வார்
பரிசுத்தத் தலைவரைத் தெரிந்தெடுப்பார்
பொறுப்புகள் ஏற்றுமே பணிபுரிவார்
பொறுமையின் சின்னமாய் விளங்கிடுவார் – உத்தம

5. வாழ்க்கையில் கிறிஸ்துவைக் காட்டிடுவார்
சொல்லோடு நின்றிட மறுத்திடுவார்
சொல் செயல் சிந்தனை மூன்றிலுமே
பிறர்க்கென வாழ்ந்திட முயன்றிடுவார் – உத்தம

## பாடல் – 310

**உலகில் நீ ஓர் தனிப் பிறவி**
உன்பால் இயேசு அருள் மேவி
தமது ஜீவனை உன்மேல் ஊதி
பாருக்குள் அனுப்பினார் இது பாரீர்

உலகின் கண்ணிற்குப் புரியாத
கல்வியில் சான்றோரும் விளங்காத
வாழ்க்கை ஒன்றே நீ மேற்கொண்டுள்ளாய்
கவனம் கவனம் முன் ஏகிச் செல்வாய்

2. சிரிப்பார் சீறுவார் முணுமுணுப்பார்
உன் நிலை அறியாத மனிதர் பலர்
உன் ஜெபம் பாட்டு பேச்சு எல்லாம்
புரியார் பலர் உன்னை பகடி செய்வார்

3. கிறிஸ்துவை வெளிதள்ளிக் கொலை செய்தார்
பக்தர்கள் பலரையும் சிறை செய்தோர்
கம்பத்தில் கட்டி வதை வதைத்தோர்
பலரும் இப்பூமியில் நிரம்ப உண்டு

4. தயக்கமும் கலக்கமும் நடையில் வேண்டாம்
லௌகீகக் கவலைகள் எதுவும் வேண்டாம்
கல்வாரி மேட்டினில் கடைமனிதன்
ஏறும் வரை நாம் உறங்க வேண்டாம்

## பாடல் – 311

**உன்னையும் என்னையும் இரட்சிக்கவே**
இயேசு தம் ஜீவனை ஈந்தனரே
குருசில் கண்டேன் (2) என் இயேசுவை

2. பாவத்தின் தோஷத்தை மன்னிக்கவே
பரன் தம் இரத்தத்தைச் சிந்தினாரே
குருசில் கண்டேன் (2) என் இயேசுவை

3. மன்னிப்பும் மோட்சமும் அடைந்திட
நானே வழி சத்தியம் ஜீவன் என்றார்
சோர்ந்திடாதே நம்பியேவா
நிச்சயம் நேசர் ஏற்றுக்கொள்வார்

4. இயேசு உன்னை அன்பாய் அழைக்கிறார்
அவரை நீ இன்று ஏற்றுக்கொள்வாய்
அழைக்கிறார் (3) அன்புடனே

5. இரட்சகர் பாதம் நீ பற்றிக்கொண்டால்
நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வாய்
அல்லேலூயா (3) ஆமென்

## பாடல் - 312

**எனக்காய் ஜீவன் விட்டவரே**
என்னோடிருக்க எழுந்தவரே
என்னை என்றும் வழி நடத்துவாரே
என்னைச் சந்திக்க வந்திடுவாரே

### *பல்லவி*

இயேசு போதுமே இயேசு போதுமே
எந்த நாளிலுமே எந்நிலையிலுமே
எந்தன் வாழ்வினிலே இயேசு போதுமே

2. பிசாசின் சோதனை பெருகிட்டாலும்
சோர்ந்து போகாமல் முன் செல்லவே
உலகமும் மாமிசமும் மயக்கிட்டாலும்
மயங்கிடாமல் முன்னேறவே - இயேசு

3. புல்லுள்ள இடங்களில் மேய்த்திடுவார்
அமர்ந்த தண்ணீரண்டை நடத்திடுவார்
ஆத்துமாவைத் தினம் தேற்றிடுவார்
மரணப் பள்ளத்தாக்கில் காத்திடுவார் - இயேசு

4. மனிதர் என்னைக் கைவிட்டாலும்
மாமிசம் அழுகி நாறிட்டாலும்
ஐசுவரியம் யாவும் அழிந்திட்டாலும்
ஆகாதவன் என்று தள்ளிவிட்டாலும் - இயேசு

## பாடல் - 313

### *பல்லவி*

**அன்பிற்கு இலக்கணம் யாரோ**
இயேசு அவர் இயேசு
அன்பிற்கு அடையாளம் ஏதோ
சிலுவை அது சிலுவை

### *அனுபல்லவி*

அன்பில்லை என்றால் ஒன்றுமில்லை
ஒன்றுமில்லை நான் ஒன்றுமில்லை

### *சரணங்கள்*

1. நண்பரை சிநேகிப்பது நட்பு – ஆனால்
பகைவரை நேசிப்பதோ அன்பு

2. நல்லோரை நேசிப்பது மரபு – ஆனால்
பொல்லாரை நேசிப்பதோ அன்பு

3. வலியோரை மதிப்பது இயல்பு – ஆனால்
எளியோரை நேசிப்பது அன்பு

4. தேவ பகைஞானம் என்னை – இயேசு
சிலுவையில் நேசித்ததோ அன்பு

## பாடல் – 314

**கல்வாரி மாமலைமேல் கை கால்கள் ஆணிகளால்**
கடாவப் பட்டவராய் கர்த்தர் தொங்கக் கண்டேன்
குருசின் வேதனையும் சிரசின் முள் முடியும்
குருதி சிந்துவதும் உருக்கிற்றென் மனதை

2. அஞ்சாதே என் மகனே மிஞ்சும் உன் பாவமதால்
நெஞ்சம் கலங்காதே தஞ்சம் நானே உனக்கு
எனக்கேன் இப்பாடு உனக்காகத்தானே
ஈனக்கோல மடைந்தேன் உன்னை ரட்சித்தேன் என்றார்

3. கர்த்தரின் சத்தமதை சத்தியம் என்று நம்பி
பக்தியுடன் விழுந்து முத்தம் செய்தேன் அவரை
என் பாவம் நீங்கியதே எக்கேடும் ஓடியதே
சந்தேகம் மாறியதே சந்தோஷம் பொங்கியதே

## பாடல் – 315

**இயேசுவை வாழ்க்கையில் காட்டுங்களே**
பேச்சில் அல்ல செயலில் நல்ல
இயேசுவை வாழ்வோராய் காட்டுங்களே

2. ஆலயம் அருளுரைப் போதாதே
ஆசரிப்பும் இனிப் போதாதே
ஆண்டவர் தொழுத்தின் வெளியிலுள்ளோர்
ஆடுகள் தேடியே ஆவல் கொண்டே – இயேசுவை

3. பரவச மொழிவரம் போதாதே
கரகோஷ ஆட்டமும் போதாதே
பரமனின் திருவுளம் அமர்ந்தறிந்தே
பரிசுத்த ஆவியைச் சுமந்து கொண்டே – இயேசுவை

4. வாய்ச் சொல்லில் நேசித்தல் மா எளிதாம்
வாய்மோ செயலுள்ளோர் நல் அன்பராம்
உன்னதர் இயேசுவின் அரசுயர
ஒளி உப்பாய் உலகினில் இலங்கிடுவோம் – இயேசுவை

## பாடல் – 316

### *பல்லவி*

**கர்த்தாவே என் பெலனே**
உம்மில் அன்பு கூடுவேன்
உத்தமமானதும் வழிதானே

### *சரணங்கள்*

1. என் கன்மலையும் என் கோட்டையும்
என் ரட்சகரும் என் தேவனும்
என் கேடகமும் ரட்சண்யக் கொம்பும்
என் உயர்ந்த அடைக்கலமானவர் – கர்த்தாவே

2. மரணக் கட்டுகள் சூழ்ந்து கொண்டது
துர்ச்சன ப்ரவாகம் பயப்படுத்தினது
பாதாளக் கட்டுகள் சூழ்ந்து கொண்டது
மரணக் கண்ணிகளென் மேல் விழுந்தது – கர்த்தாவே

3. வானங்களைத் தாழ்த்தி இறங்கினார்
பாதங்களின் கீழ் இருள் இருந்தது
கேரூபீன் மேலேறி வேகமாய்ச் சென்றார்
காற்றின் செட்டைகளைக் கொண்டு பறந்தார் – கர்த்தாவே

4. இருளை தமக்கு மறைவிடமாக்கி
மேகங்களைக் கூடாரமாக்கினார்
வானங்களில் கர்த்தர் குமுறினார்
தமது சத்தத்தைக் தொனிக்கப்பண்ணினார் – கர்த்தாவே

5. தயவுள்ளவனுக்குத் தயவுள்ளவரே
உத்தமனுக்கு நீர் உத்தமரே
புனிதனுக்கு நீர் புனிதரானவரே
மாறுகிறவனுக்கு நீர் மாறுகிறவரே – கர்த்தாவே

6. சிறுமைப்பட்ட ஜனத்தை ரட்சிப்பீர்
மேட்டிமையான கண்களைத் தாழ்த்துவீர்
தேவரீர் என் விளக்கை ஏற்றுவீர்
இருளை நீர் வெளிச்சமாக்குவீர் – கர்த்தாவே

7. உம்மாலே ஒரு சேனைக்குள் பாய்வேன்
தம்மாலே ஒரு மதிலைத் தாண்டுவேன்
சத்துருவை நான் தொடர்ந்து பிடிப்பேன்
நிர்மூலமாக்கும் வரைக்கும் திரும்பேன் – கர்த்தாவே

## பாடல் – 317

**கிறிஸ்தவ ஜீவியம் சௌபாக்கிய ஜீவியம்**
கிறிஸ்துவின் மக்கட்கோர் ஆனந்த ஜீவியம்
கஷ்டங்கள் வந்தாலும் நஷ்டங்கள் வந்தாலும்
கிறிஸ்தேசு நாயகன் கூட்டாளி அல்லவோ

2. பூலோக இன்பங்கள் மாறிப்போய்விடுமே
லோகத்தாரெல்லாரும் கைவிடுவாரல்லோ
உற்றார் உறவினர் தள்ளி வெறுத்தாலும்
யோசேப்பின் தெய்வமென் கூட்டாளி அல்லவோ

3. நம்பும் சகோதரர் வம்பு செய்திடுவார்
அப்பம் புசித்திட்டோர் குதிங் காலைத் தூக்கிடுவார்
ஆறாத்துயரிலும் மாறாக் கண்ணீரிலும்
ஆற்றிடும் தெய்வமென் கூட்டாளி அல்லவோ

4. இயேசு என் நல் மேய்ப்பர், இயேசு என் சிநேகிதர்
நித்யமாய் ராஜா என் கூட்டாளி அல்லவோ
என்னே இப்பாரங்கள் என்னே இக்கிலேசங்கள்
கிறிஸ்தேசு இராஜா என் கூட்டாளி அல்லவோ

5. எக்காள நாதம் நான் கேட்டிடும் வேளையை
கஷ்டங்கள் யாவுமே நீங்கிடும் நேரமே
என்று நீர் வருவீர் எப்போ நீர் வருவீர்
என் கண்ணீர் துடைக்க என் நேசக் கூட்டாளியே

## பாடல் – 318

**என் இயேசுவே நான் என்றும் உந்தன் சொந்தம்**
என் ராஜனே அனுதினமும் வழிநடத்தும் (2)

1. உளையான சேற்றின் மேல் தூக்கியே நிறுத்தினீரே (2)
உந்தனை நான் மறவேன் உந்தனைப் போற்றிடுவேன் – என்

2. அலைமோதும் கடலதனை அடக்கியே அமர்த்தினீரே (2)
வார்த்தையின் வல்லமையை என்றுமே காணச் செய்வீர் – என்

3. தாயினும் அன்பு வைத்தே தாங்கியே காப்பவரே (2)
ஜீவிய காலமெல்லாம் உந்தனைப் பின்செல்லுவேன் – என்

## பாடல் – 319

**கிறிஸ்துவின் வீரர் நாம் பிசாசை ஜெயிப்போம்**
கீதம் முழங்கிடுவோம் (2)
பாரெங்கும் தொனிக்க நற் செய்தி கூறியே
பாடிடுவோம் (2)

இயேசு என் மீட்பர்
இயேசு என் நல் நண்பர்
இயேசு என் நல் மேய்ப்பர்
யுத்தத்தில் தலைவரே

2. ஆவியின் பட்டயம் ஆயுதம் தரித்து
ஆயத்தமாகிடுவோம்
சோதனை சூழ்ந்தாலும் சோர்புகள் வந்தாலும்
வென்றிடுவோம்

3. போராட்டம் போராடி, ஓட்டத்தை முடிப்போம்
பேரருள் பெற்றிடுவோம்
பேரின்ப நாட்டில் பொற்கிரீடம் பெறுவோம்
பறந்திடுவோம்

4. கிறிஸ்துவைப் பின்பற்றும் வாலிபராகவே
வாஞ்சித்து நாடுகிறோம்
உலகை வெறுத்து உம்மையே நேசிக்க
படைக்கிறோம்.

## பாடல் – 320

**கிறிஸ்துவின் சீடர் சேனையின் வீரர்**
கிருபை வரம் பெற்ற விசுவாசிகள்
ஆவியின் கனிகள் ஒன்பதும் பெற்று
அற்புத இயேசுவை பின்பற்றுவோம்

இயேசுவின் அடிச்சுவட்டில்
இயேசுவின் சாயலிலே
என்றென்றும் வாழ்பவனே
கிறிஸ்துவின் உண்மை சீஷன்

2. உலகத்தின் உப்பாய் உடைபட்ட அப்பமாய்
உலகெங்கும் அலைந்து உண்மையாய் உழைத்து
அன்பினால் நிறைந்து புது பெலன் பெற்று
அன்பராம் இயேசுவை பின்பற்றுவோம் – இயேசுவின்

3. இலட்சியத்தோடு இலக்கை நோக்கி
இறுதி வரை விசுவாசத்தால் வளர்ந்து
பொறுமையின் போர்க்கொடி அனுதினம் அணிந்தே
பரிசுத்த இயேசுவை பின்பற்றுவோம் – இயேசுவின்

## பாடல் – 321

**ஜீவியமே ஒரே ஜீவியமே**
அண்ட சராசரம் அனைத்திலுமே
மேவி வசிக்கும் மனிதர் அனைத்தும்
பூமியில் வாழ்வது ஒரே தரமே – ஜீவியமே

***சரணங்கள்***

1. பிறப்பதும் இறப்பதும் தெய்வ செயல்
இடையில் இருப்பது வாழ்க்கையாகும்
இயேசுவில் சார்வதால் பரிசுத்தம் காணும்
பரிசுத்தர் ஆட்சியில் சாட்சி கூறும்
இதைவிடில் முடிவது வீழ்ச்சியாகும் – ஜீவியமே

2. நித்தம் நம்மைவிட்டு செல்வார் பாரீர்
அவர் பாரும் செல்லும் அவ்விடமும் பாரீர்
அலறலும் புலம்பலும் உடல்தனைக் கீறலும்
நரகத்தின் தினசரி காட்சி கேளீர்
இரக்கத்தின் வழி காணார் கதியும் காண்பீர் – ஜீவியமே

3. திறப்பின் முகம் நிற்க ஆட்கள் தேவை
தியாகத்தின் பாதைக்குச் செல்வோர் தேவை
என் ஜனம் அழியுதே என ஏங்கும் ஆண்டவர்
துக்கத்தை தணிக்கும் சீஷர் தேவை
முன் வருவோர் யார்க்கும் இதுவே வேளை – ஜீவியமே

4. எண்ணிப்பார் கழிந்திட்டக் காலமதை
கதையைப் போல் மனிதரின் நாட்கள் செல்லும்
உலகத்துச் சேவை சாகையில் ஓயும்
உன்னுடன் மரித்த பின் வருவதேது
கிறிஸ்துவின் சேவையே நிலைத்து நிற்கும் – ஜீவியமே

5. அர்ப்பணம் தந்தையே கை அளித்தேன்
கல்வி செல்வம் சுகம் பொருள் அனைத்தும்
செல்லுவேன் சொல்லுவேன் யேசுவே வழி என
வாழ்க்கையில் தம்மையே கொண்டு வாழ்வேன்
என்றுமே அங்கே நான் உம்மில் வாழ்வேன் – ஜீவியமே

## பாடல் – 322

**அன்பே பெரியது அன்பே சிறந்தது**
அன்பே யாவிலும் பெரியது (2)

***சரணங்கள்***

1. பாவத்திலிருந்து நம்மை மீட்டிட
பரிசுத்தர் இயேசு ஜீவன் தந்தாரே (2)
இந்த அன்பு பெரியது
இந்த அன்பு சிறந்தது (2) – அன்பே பெரியது

2. சிலுவையில் தன்னை ஈந்த அன்புதான்
அயலானை நேசிக்க உன்னை ஏவுதே (2)
இந்த அன்பு பெரியது
இந்த அன்பு சிறந்தது (2) – அன்பே பெரியது

3. ஒருக்காலும் ஒழியாத தேவ அன்பையே
மறக்காமல் கூறிடு பாரெங்கிலும் (2)

இந்த அன்பு பெரியது
இந்த அன்பு சிறந்தது (2) – அன்பே பெரியது

## பாடல் – 323

**நான் இயேசுவின் ஒளியில் நடக்கிறேன்**
இராப்பகலை ஒழுங்காய் கடக்கிறேன்
என்றும் நடக்கிறேன் பின் திரும்பேனே
இயேசு ரட்சகர் பின்னே

### *பல்லவி*

நடக்கிறேனே இரட்சகருடனே
கடக்கிறேனே கரம் பிடித்தே
விழிப்பாயிருந்து ஜெயங்காண்பேனே
ஒளியில் நடக்கிறேனே

2. நான் இயேசுவின் ஒளியில் நடக்கிறேன்
வான் காரிருள் மூடினும் பயப்படேன்
சீயோன் கீதம் பாடிச் செல்வேனே
ஆயன் இயேசுவின் பின்னே – நடக்கிறேனே

3. நான் இயேசுவின் ஒளியில் நடக்கிறேன்
வான் ஆசீர்வாதங்கள் அடைகிறேன்
வீண் பாரங்களை விடுகிறேனே
என் இயேசுவின் பின்னே – நடக்கிறேனே

4. நான் இயேசுவின் ஒளியில் நடக்கிறேன்
மேய்ப்பன் அவர் சத்தம் அறிகிறேன்
நோய் வாய்ப்பட்டாலும் நடப்பேனே
தூயன் இயேசுவின் பின்னே – நடக்கிறேனே

5. நான் இயேசுவின் ஒளியில் நடக்கிறேன்
முன்னோடின அவரை நோக்குகிறேன்
என் சிலுவை எடுத்துச் செல்வேனே
என் இயேசுவின் பின்னே – நடக்கிறேனே

## பாடல் – 324

**வெற்றி வெற்றி வெற்றி**
அற்புதர் இயேசுவால் வெற்றி
அன்றும் இன்றும் என்றுமே வெற்றி
அன்பர் இயேசு இரட்சிப்பால் வெற்றி
அந்தரங்கம் அனைத்திலும் வெற்றி
அந்தகார சக்திகள் மேலும் வெற்றி

சோதனை வேதனை நெருங்கினாலும்
சாத்தானின் சதிகள் பெருகினாலும்
சோர்ந்திடாதே ஓடிடாதே
இயேசுவையே பார்

2. வெற்றி வெற்றி வெற்றி
வேதத்தை வாசிப்பதால் வெற்றி
வேதத்தைத் தியானிப்பதால் வெற்றி
வேதத்தை நேசிப்பதால் வெற்றி
வேத வசன பாடல்களில் மகிழ்ச்சி
வேதம் கொண்டு செல்வதும் சாட்சி – சோதனை

3. வெற்றி வெற்றி வெற்றி
ஊக்கமான ஜெபத்தால் வெற்றி
உண்மையான ஜெபத்தால் வெற்றி
ஊழியர்க்காய் ஜெபிப்பதில் வெற்றி
உன்னில் அவர் சித்தம் செயலாற்றி
உலகை அவர் சொந்தமாக மாற்று – சோதனை

4. வெற்றி வெற்றி வெற்றி
விசுவாச ஐக்கியத்தில் வெற்றி
விண்ணவரின் ஐக்கியத்தில் வெற்றி
விண்ணரசர் ஐக்கியத்தில் வெற்றி
விண்ணப்பங்களை ஏறெடுப்போம் கூடி
விண்ணுலகம் சேர்வோம் அங்கும் வெற்றி – சோதனை

## பாடல் – 325

### *பல்லவி*

**அதிசயமான ஒளிமய நாடாம்**
நேசரின் நாடாம் – நான்
வாஞ்சிக்கும் நாடாம் – என்

### *சரணங்கள்*

1. பாவம் இல்லாத நாடு
ஒரு சாபமும் காணா நாடு
நித்திய மகிழ்ச்சி ஓயாத கீதம்
உன்னதத்தில் ஓசன்னா அல்லேலூயா – அதிசய

2. சந்திர சூரியன் இல்லை
ஆனால் இருள் ஏதும் காணவில்லை
தேவ குமாரன் ஜோதியில் ஜோதி
நித்திய வெளிச்சமாவார் – என்றும் பகல் – அதிசய

3. விதவிதக் கொள்கை இல்லை
பலப் பிரிவுள்ள பலகை இல்லை
ஒரே ஒரு குடும்பம் ஒரே ஒரு தலைவர்
எங்குமே அன்பு மயம் – அன்புள்ளோர் செல்லும் – அதிசய

4. பிரச்சனை ஏதும் இல்லை
வீண் குழப்பங்கள் ஒன்றும் இல்லை
மொழி, நிறம், ஜாதி பற்று உடையோர்
எவருமே அங்கு இல்லை – அன்பே மொழி – அதிசய

5. கடைத்தெரு ஏதும் இல்லை
தொழிற்சாலைகள் ஒன்றும் இல்லை
தரித்திரர், செல்வர், சிறியவர், பெரியோர்
ஆகிய சிறப்பும் இல்லை – எல்லாம் சமம் – அதிசய

6. பல பலத் திட்டம் இல்லை – ஆளும்
சட்டங்கள் ஏதுமில்லை
காவல் துறையில்லை, கண்டிப்பும் இல்லை
மனிதனின் ஆட்சி இல்லை – பேரானந்தம் – அதிசய

7. இயேசுவின் இரத்தத்தினால் – பாவம்
கழுவினால் செல்லலாமே
இத்தனை பெரிய சிலாக்கியம் இழப்போர்
இப்பூமியில் எவரும் வேண்டாம் – இன்றே வாரீர் – அதிசய

## பாடல் – 326

### *பல்லவி*

**இயேசு மணாளனே – என்**
நம்பிக்கையின் தீபமே
என் ஆசை ஒன்று மாத்திரமே
விண் வீட்டில் உம்மைக் காண்பதே

### *அனுபல்லவி*

காணுவேன், காணுவேன்
நேசரை நான் காணுவேன்
அந்நிய கண்களாலே அல்ல
சொந்த கண்ணால் காணுவேன்

### *சரணங்கள்*

1. கண்ணீரின் பள்ளத்தாக்கிதே
உம்மில் மறைந்தே வாழுவேன்
கண் மூடும் நொடி நேரத்தில்
சேர்வேன் நான் பியூலா தீரத்தில்

2. மேகம் எழும்பி செல்லுதே
கானானின் ஓரம் காணுதே
ஆசாபாசம் ஆகும் கட்டையே
அறுத்தெறிந்திடுவோமே

3. உயிர்த்தெழும்பும் காலையில்
தூதர் சங்கீதம் கேட்கையில்
தங்க கிரீட கூட்டத்தில்
என்பேர் அழைக்கும் நேரத்தில்

4. என் ஓட்டமும் பிரயாசமும்
நான் காத்த என் விசுவாசமும்
வீணல்ல அது சத்தியம்
நேசரைக் காண்பேன் நித்தியம்

## பாடல் – 327

***பல்லவி***

**என்ன சுகம் ஆஹா என்ன சுகம்**
என் ரட்சகரின் சமூகம் பேரானந்தம்
பரமானந்த மோட்ச சுகானந்தம்
அதைப் பெற்று அனுபவித்தால் என்ன சுகம்

***சரணங்கள்***

1. பொன்னகர் மேடையில் எந்நேரம் பாடலாம்
கின்னரம் தம்புருவீணை இன்னோசை கேட்கலாம் – என்ன சுகம்

2. வெற்றி பொன் வெண் அங்கி தரித்துக் கொள்ளலாம்
சுத்தப் பொன்னால் செய்த வீதியில் உலாவலாம் – என்ன சுகம்

3. ஜீவ நதியில் குளித்துக் களிக்கலாம்
ஜீவ விருஷக் கனியைப் புசிக்கலாம் – என்ன சுகம்

4. தங்கக் கிரீடம் தலையில் தரிக்கலாம்
சிங்காசனத்தினின்று ஜெயகீதம் பாடலாம் – என்ன சுகம்

5. வாட்டம் பசி தாகம் பட்டினி சாவில்லை
கேட்டின் மனுடர் வந்து ஊடே யிருப்பதில்லை – என்ன சுகம்

6. இயேசுவின் ரத்தத்தால் மீட்பை யடைந்தவர்கள்
ஆசனம் மீதிருந்து ஜெயகீதம் பாடுவார்கள் – என்ன சுகம்

## பாடல் – 328

**என்ன என் ஆனந்தம் என்ன என் பேரின்பம்**
தூதரோடு சேர்ந்து நானும் அன்பரைப் பாடிடுவேன்

2. லோக ஜீவனே புல்லுக்கு ஒப்பானதே
வாடிப்போகும் பூவைப்போல மாண்டு போகுமே – என்ன

3. இத்தரை யாத்திரையே முற்றிலும் போராட்டமே
மண்ணில் வெற்றி சிறந்தோர்க்கு நித்திய மகிமையே – என்ன

4. வீணை சப்தமும் தம்புரு முழக்கமும்
கர்த்தரின் சப்தம் கேட்டு நானும் மகிழ்ந்து பூரிப்பேன் – என்ன

5. என் நேசர் மார்பில் நான் சாயும் நேரத்தில்
என்ன இன்பம் என்ன மதுரம் சொல்லரிதே – என்ன

6. இப்பாழுலகத்தில் என் ஆசை ஒன்றுண்டோ
பஞ்சுபோல் பறந்து போமே பாழுலகமே – என்ன

## பாடல் – 329

**கீதம் பாடியே பாதையில் திடன் கொள்வோம்**
கொஞ்சநாளில் வீடு செல்லுவோம்
நித்ய நாளுதயமாம் ராவொழிந்துபோம்
கொஞ்சநாளில் வீடு செல்வோம்

*பல்லவி*

இன்னும் கொஞ்ச நாள் இன்னும் கொஞ்ச நாள்
யோர்தான் அலைதாண்டுவோம்
கண்டு சந்திப்போம் கொண்டல் ஓய்ந்திடும் அந்நாள்
கொஞ்ச நாளில் வீடு செல்லுவோம்.

2. கைக்கு நேரிடும் வேலை சீராய் செய்குவோம்
கொஞ்ச நாளில் வீடு செல்லுவோம்
திவ்ய கிருபையால் தினம் பெலன் கொள்ளுவோம்
கொஞ்ச நாளில் வீடு செல்லுவோம்

3. சோர்ந்த மாந்தர்க்காய்ப் பாதை செவ்வை பண்ணுவோம்
கொஞ்ச நாளில் வீடு செல்லுவோம்
ஓ! நம் நேச நெஞ்சின் செல்வாக்கை வீசுவோம்
கொஞ்ச நாளில் வீடு செல்லுவோம்

4. துன்பங் கவலை நீங்கிக் களைப்பாறுவோம்
கொஞ்ச நாளில் வீடு செல்லுவோம்
கணணீரோழியும் கானான் நாட்டில் வாழ்வோம்
கொஞ்ச நாளில் வீடு செல்வோம்

## பாடல் – 330

**ஜோதி தோன்றும் ஓர் தேசமுண்டு**
விசுவாசக் கண்ணால் காண்கிறோம்
நம்பிதா அழைக்கும்பொழுது
நாமங்கே வசிக்கச் செல்லுவோம்

*பல்லவி*

இன்பராய் ஈற்றிலே
மோட்சகரையில் நாம் சந்திப்போம் – அல்லேலூயா
இன்பராய் ஈற்றிலே
மோட்சகரையில் நாம் சந்திப்போம்

2. அந்த வான் கரையில் நாம் நின்று
விண்ணோர் கீதங்களைப் பாடுவோம்
துக்கம் யாவும் அற்று மகிழ்ந்து
சுத்தரில் ஆறுதல் அடைவோம் – இன்பராய்

3. நம் பிதாவின் அன்பை நினைத்து
அவரில் மகிழ்ந்து பூரிப்போம்
மீட்பின் நன்மைகளை உணர்ந்து
அவரை வணங்கித் துதிப்போம். – இன்பராய்

4. அந்த மோட்சகரையடைந்து
வானசேனையுடன் களிப்போம்
நம் தொல்லை யாத்திரை முடித்து
விண் கிரீடத்தை நாம் தரிப்போம் – இன்பராய்

5. சாவற்றோர் பூரிக்கும் தேசத்தில்
சந்திப்போம் ஆடுவோம் பாடுவோம்
துக்கம் நோவழிந்த ஸ்தலத்தில்
சேமமாய் நாம் இளைப்பாறுவோம் – இன்பராய்

6. அங்கே நம் இரட்சகர் என்றென்றும்
ஆளுகை செய்து வீற்றிருப்பார்
துக்கம் நோய் சாவுகள் நீங்கிடும்
தேவன் நம் கண்ணீரைத் துடைப்பார். – இன்பராய்

7. தூதர் சூழ்ந்து நின்று பாடுவோர்
கேட்டு நாம் யாவரும் மகிழ்வோம்
பக்தர் அங்கே முடிசூடுவார்
ஓர் முடி அங்குண்டு எனக்கும் – இன்பராய்

8. என் உற்றார் போய்விட்டார் முன் அங்கே
ஆயினும் நான் மீளவும் சந்திப்பேன்
அவர் கூட்டத்தில் நான் விண்ணிலே
ஒப்பற்ற பேரின்பம் கொள்ளுவேன் – இன்பராய்

9. ஏழைக்கும் மாளிகை அங்குண்டு
என்று நல் மீட்பர் அழைக்கிறார்
மாந்தர் யாவருக்கும் இடமுண்டு
எல்லோரும் வாருங்கள் என்கிறார் – இன்பராய்

## பாடல் – 331

**திவ்ய காளச் சத்தம் கேட்க யேசு தோன்றும் காலத்தில்**
ஆவலாய் அக்காட்சி கண்டானந்திப்பேன்
மீட்கப்பட்ட தாசர் ஒன்றுகூடி மோட்ச லோகத்தில்
நிற்கும் போது நானும் கூடவே நிற்பேன்

***பல்லவி***

தாசர் விண்ணில் ஒன்று கூடி
தாசர் விண்ணில் ஒன்று கூடி
தாசர் விண்ணில் ஒன்று கூடி
நிற்கும் போது நானும் கூடவே நிற்பேன்

2. நித்திரை செய்த பக்தர் உயிர்த்து வானமேறியேகுவார்
மீட்பர் மாண்பைக் கண்டு ஆரவாரிப்பேன்
விசுவாசிகள் எல்லோரும் விண்ணில் கூடி வாழுவார்
அந்த நாளில் நானும் கூட வாழுவேன் – தாசர்

3. யேசு நாதரின் பேன்பை எங்கும் கூறும்படிக்கே
சோர்பில்லாமல் வேலை செய்து ஜீவிப்பேன்
பின்பு தாசர் ஒன்று கூடி தேவ சந்நிதியிலே
நிற்கும்போது நானும் கூடவே நிற்பேன் – தாசர்

## பாடல் – 332

***பல்லவி***

**பரலோக நாடெந்தன் இன்ப நாடாமெனக்கு**
என்று நான் கண்டு களிப்பேனோ?

***அனுபல்லவி***

ஆ மகிமையே! ஆ பேரின்பமே!
என்று நான் கண்டானந்திப்பேனோ – பரலோக

1. சேவை செய்திடுவார் தூதர்கள் – நானங்கு
சேவிப்பேன் நித்தியும் நேசரை!
ஆ என் இன்பமே! ஆனந்த பாக்கியமே!
நாவினா லியம்பவு மேலாதே! – பரலோக

2. சொர்க்கத்தில் ஆ எந்தன் நம்பிக்கை அழியாத
சொர்ண மயமான வேலைகள்
சோபன கீதமே, சுந்தர நாடதே!
சுதர்த ரொருமித்து வாழ்வாரே! – பரலோக

3. தெய்வ சித்தம் செய்யும் பிள்ளைகள் – ஜீவிப்பார்
மாதா பிதா மற்றும் சோதரர்,
உத்தம ஜீவிகள், சொர்க்கத்தின் வாசிகள்
கஷ்டம் சகித்திட்ட சுத்தர்கள்! – பரலோக

4. யேசுவே என் சம்பத்தல்லவோ நிச்சயம்
என்று மழியா சுதந்தரம்!
ஈலோக இன்பத்தைக் குப்பை யென்றெண்ணினேன்
யேசுவே எந்தனின் இன்பமே! – பரலோக

5. வெறுத்துவிடுவேன் எந்தன் ஜீவனை – லோகத்தில்
செல்லுவேன் கஷ்டத்தின் பாதையில்
மாயை மாயையே லோகத்தின் இன்பமே!
வாடா முடி சூட ஏகுவேன் – பரலோக

## பாடல் – 333

**பரிசுத்தர் கூட்டம் இயேசுவைப் போற்றிப்**
பாடி மகிழ்ந்தாடி யங்கே கூடிட
பரமானந்த கீதம் அங்கெழும்ப
நீ அங்கிருப்பாயோ சொல் என் மனமே

*பல்லவி*

நான் அங்கிருப்பேனே நான் அங்கிருப்பேனே
நான் அங்கிருப்பேனே, என் இயேசுவோடே!

2. ஆட்டுக்குட்டியும் அரசாட்சி செய்ய
அண்டினோரெவரும் அவரைச் சேர
அன்பர் அன்றெல்லார் கண்ணீரும் துடைக்க
நீ அங்கிருப்பாயோ, சொல் என் மனமே! – நான்

3. பேதுரு பவுலும் யோவானும் அங்கே
பின்னும் முற்பிதாக்கள் அப்போஸ்தலரும்
இரத்தச் சாட்சிகளும் திரளாய்க் கூட
நீ அங்கிருப்பாயோ? சொல் என் மனமே! – நான்

4. ஜெகத்தில் சிலுவை சுமந்தோரெல்லாம்
திருமுடி யணிந்திலங்கிடவும்
தேவ சேயர்களா யெல்லாரும் மாற
நீ அங்கிருப்பாயோ? சொல் என் மனமே! – நான்

5. சோதனைகளை வென்றவரெவரும்,
துன்பம் தொல்லைகளைச் சகித்தவரும்
ஜோதி ரூபமாய் சொர்லோகில் ஜொலிக்க
நீ அங்கிருப்பாயோ? சொல் என் மனமே! – நான்

6. கன்னிகையைப் போல் கர்த்தன் சபையன்றும்
மன்னர் மணாளனேசுவை மணந்து
பின்னும் சொல்லரிதாம் நிலை ருசிக்க
நீ அங்கிருப்பாயோ? சொல் என் மனமே! – நான்

## *பாடல் – 334*

**பாவம் பிரவேசியாய்**
பொன்னகரம் உண்டே
தீட்டானதொன்றும்
தீட்டானதொன்றும்
ஓர்காலும் சேராதே

2. இதோ நல் மீட்பரே
உம்மண்டையில் வந்தேன்
என் பாவம் நீக்கி,
என் பாவம் நீக்கி
நீர் சுத்தமாக்குமேன்

3. உம் நேசப் பிள்ளையாய்
நீர் சேர்த்துக்கொள்ளுவீர்
தீமை செய்யாமல்
தீமை செய்யாமல்
என்னைக் காப்பாற்றுவீர்

4. பின் மோட்ச தேசத்தில்
வெண் வஸ்திரம் தரிப்பேன்
குற்றமில்லாமல்
குற்றமில்லாமல்
இன்பமாய் வாழுவேன்

## பாடல் – 335

**பூரண வடிவுள்ள சீயோனிலே**
பாரினில் ஜெயங்கொண்டே பரிசுத்தரே
ஆர்ப்பரிப்போடு கீதங்கள் பாட
ஆனந்தம் பொங்கிடும்

***பல்லவி***

சீயோன் சீயோன் சிகரம்
சீயோன் தூய்மையின் சிகரம்
எருசலேம் பரம நகரம்
ஏகுவோம் என்றென்றும் வாழவே

2. தூய பிதாவின் தேசமதில்
நேயர்கள் அவர் முகம் கண்டிடுவார்
கண்ணீர்கள் யாவும் தேவனே துடைப்பார்
கவலைகள் ஒழிந்திடுமே

3. பளிங்கு நதியின் இரு கரைகளிலே
பன்னிரு கனிதரும் விருட்சமுண்டே
பரமனின் அன்பால் நிறைந்தவர் பாடும்
பாட்டிற்கோர் இணையில்லையே

4. கற்புள்ள கன்னிகை கறையற்றவள்
கருத்துடன் ஆட்டுக்குட்டியானவரை
மகிழ்வுடன் நித்தம் பின் சென்றதாலே
மகிபனோடாட்சி செய்வார்

5. நகரத்தில் மூலைக்கல் மகிபனேசு
நானிலமெங்கும் ஒளி வீசுதே
சீயோனைப் பணிந்து தேவாதி தேவன்
சீக்கிரம் வெளிப்படுவார்

## பாடல் – 336

**மகிழ்வோம் மகிழ்வோம் இயேசு நாதரில்**
அகமகிழ்ந்திடுவோமே மோட்ச ராஜ்யம்
நமக்காய் ஆயத்தமாகுது என்றென்றும் ஆனந்தமே

2. துன்பமுமில்லை, துயரமுமில்லை
அன்பு நிறைந்த வீடாம் – இன்பம் நிறைந்து துதிப்பார்
அங்கேயுள்ளோர் ரத்தத்தால் மீட்படைந்தோர்

3. பஞ்சமுமில்லை பசியுமுமில்லை
கொஞ்சமேயில்லை – தஞ்சம் இயேசு நாயகன்
தரணியே ஜெயித்தவர் அரமனை ஆட்சி செய்வார்

4. சாத்தானில்லை, சத்துருவில்லை
கத்துவோரில்லை – அத்தன் இயேசுவோடு
கூடிப்பாடி யோடி யுலாவலாம்

5. தங்கத் தெருவாம் இங்கித வீட்டில்
மங்களம் பாடலாம் – சொந்தம் இயேசு அண்ணலை
ஸ்துதித்துப் பாடுவார் நாமும் பாடலாம்

6. அல்லேலூயா பாடி மிகவும்
ஆர்ப்பரித்திடலாம் நாம் – இல்லை மாய உலகம்
அங்கேயில்லை பூரித்திடலாம்

7. கெட்ட குமாரனும், பட்ட மனிதனும்
துஷ்ட மானிடரும் – விட்ட இயேசு நாதரை
முட்டியே அழைத்தால் பட்டணம் போகலாமே

## *பாடல் – 337*

**மேகங்கள் நடுவே வழி பிறக்கும்**
பூதங்கள் கடந்து கடந்து வரும்
தூதர்கள் கூட்டங்கள் சூழ்ந்து நிற்கும்
பறந்திடுவேன் நான் பறந்திடுவேன்

***பல்லவி***

வானத்தில் வானத்தில் நடுவானத்தில்
இயேசுவின் கைகளில் நான் இருப்பேன்
பரமன் இயேசுவின் புன்னகை முகம் – என்
கண்களில் உள்ளத்தில் நிறைந்து நிற்கும்

2. நாற்றிசையினின்றும் கூடிடுவார்
நாதனின் இரத்தத்தால் கழுவப்பட்டோர்
தோத்திரக் கீதமே தொனித்து நிற்கும்
பறந்திடுவேன் நான் பறந்திடுவேன்

3. கண்ணீரும் துன்பமும் கடந்துபோகும்
கண்ணிமைப் பொழுதில் நடந்துவிடும்
கர்த்தரின் வருகை நாளின்போது
பறந்திடுவேன் நான் பறந்திடுவேன்

4. திருடன் வருகை போலிருக்கும்
தீவிரம் அவர் நாள் வெகு சமீபம்
காலையோ மாலையோ நள்ளிரவோ
பறந்திடுவேன் நான் பறந்திடுவேன்

## பாடல் - 338

**விடுதலை விடுதலை விடுதலை பெற்றேன்**
விதவிதமாய் பாவத்திலே ஜீவித்த நானே
இந்த நாளில் எந்தன் இயேசு சொந்த இரத்தத்தால்
தந்திட்டாரே எந்தன் ஆத்ம மீட்பின் விடுதலை

1. தடுக்கும் பாவத் தளைகளில் விடுதலை
கொடுக்கும் தீய பழக்கத்தில் விடுதலை (2)
என்ன சந்தோஷம் இந்த விடுதலை (2)
எந்தன் இயேசு இலவசமாய் தந்த சந்தோஷம் (2) - விடுதலை

2. எரிக்கும் கோபப் பிடியினில் விடுதலை
விதைக்கும் தீய பொறாமையில் விடுதலை
அன்பர் இயேசுவே தந்த விடுதலை
இன்பக் கானான் சென்றிடும் வரை உண்டே - விடுதலை

3. அடுக்காய் பேசும் பொய்யினில் விடுதலை
மிடுக்காய் வீசும் பெருமையில் விடுதலை
ஏழ்மை ரூபமே கொண்ட இயேசுவே
தாழ்மை கொள்ள உண்மை பேச ஈந்தார் என்னிலே - விடுதலை

## பாடல் - 339

**இன்ப இயேசு ராஜாவை நான் பார்த்தால் போதும்**
மகிமையில் அவரோடு நான் வாழ்ந்தால் போதும்
நித்தியமாம் மோட்ச வீட்டில் சேர்ந்தால் போதும்
அல்லேலூயா கூட்டத்தில் நான் மகிழ்ந்தால் போதும்

2. இயேசுவின் இரத்தத்தாலே மீட்கப்பட்டு
வசனமாம் வேலியாலே காக்கப்பட்டு
கறைதிரை அற்ற பரிசுத்தரோடு
ஏழையான் பொன் வீதியில் உலாவிடுவேன் - இன்ப

3. தூதர்கள் வீணைகளை மீட்டும் போது
நிறைவான ஜெய கோஷம் முழங்கும் போது
அல்லேலூயா கீதம் பாடிக் கொண்டு
அன்பராம் இயேசுவோடு அகமகிழ்வேன் - இன்ப

4. முட்கிரீடம் சூட்டப்பட்ட தலையைப் பார்ப்பேன்
பொற்கிரீடம் சூட்டி நானும் புகழ்ந்திடுவேன்
வாரினால் அடிப்பட்ட முதுகைப் பார்த்து
ஒவ்வொரு காயங்களால் முத்தம் செய்வேன் - இன்ப

5. என்னுள்ளம் நன்றியால் நிறைந்திடுதே
எந்தனின் பாக்கிய வீட்டை நினைக்கையிலே
அல்லேலூயா ஆமென் அல்லேலூயா
வர்ணிக்க எந்தன் நாவு போதாதையா - இன்ப

6. ஆகா எக்காளம் என்று முழங்கிடுமோ
ஏழை என் ஆவல் என்று தீர்த்திடுமோ
அப்பா என் கண்ணீர் என்று துடைக்கிறாரோ
ஆவலாய் ஏங்கிடுதே எனதுள்ளம் - இன்ப

## பாடல் – 340

*பல்லவி*

**அன்பே மாறிடா திரு அன்பே – என்னைத்**
தாங்கிடும் தேவன்பே

1. மாளும் வேளை எனையும் தேடின அன்பே
மயங்கிய அன்பே, அணைத்த பேரன்பே
செலுத்துவேன் துதியுமக்கே – மாறிடா

2. பாதுகாத்தீர் அரசே, இது வரையெனையும்
பயங்கர துன்பம் பல்கி வந்தாலும்
தாங்கினீர் அன்பினாலே – மாறிடா

3. சோரும் போதும் எனக்கும் திருமுகங்காட்டி
சொல் தவறாது சொந்தம் பாராட்டி
ஜொலித்திட ஜெயமளித்தீர் – மாறிடா

4. ஆழம் நீளம் உயரம் அன்பதின் அகலம்
அறிந்திடற்காயோ அழைத்தீரென் அன்பே
ஆச்சரியமே களிப்பேன் – மாறிடா

5. பொங்குதே யென்னி தயம் புது ரசத்தாலே
போற்றுவேன் நாதா யாதொன்று மியலேன்
தோத்திரம், தோத்திரமே – மாறிடா

## பாடல் – 341

*பல்லவி*

**ஆதி மெய்தேவனே உம் அன்பிற்கோர் எல்லையுண்டோ**
நீதியாம் ஜோதி அனாதி தேவனே – உம்
நீதிக்கோர் எல்லையுண்டோ – இயேசு

***சரணங்கள்***

1. எத்தனையோ பாவங்கள் அத்தனே அகற்றினீர்
பத்திலோர் பங்கு போதா தென்றெண்ணி – நான்
தத்தம் செய்தேன் உமக்கே – ஆதி

2. எத்தன் எனக்காக – இன்னுயிர் கொடுத்தீரே
எதைச் செலுத்துவேன் இயேசுவின் அன்பிற்கு
இதயம் ஈடாகுமோ? – ஆதி

3. ஆழ்ந்த கடலில் அமிழ்ந்து போன என்னைத்
தூக்கி எடுத்த உம் அன்பை நினைக்க என்
என் துதிகள் தான் போதுமோ? – ஆதி

4. பாவத்தில் மாண்ட என்னைக் கோபத்தால் அழிக்காமல்
இரட்சித்த உந்தன் அன்பை நினைத்து – நான்
பட்சமாய் போற்றிடுவேன் – ஆதி

5. அலையும் புயலுமாய் அமிழ்த்தி வீழ்த்துகையில்
நான்தான் பயப்படாதிருங்கள் என்று உம்
அன்பின் தொனி கேட்குதே – ஆதி

6. கெத்சமெனே பூங்காவில் பட்சமாய் வேண்டி நிற்கும்
இரத்த வியர்வையில் வேதனை தரும் உம்
சத்தம் தொனித்திடுதே – ஆதி

7. எண்ணும் நன்மை எதுவும் எண்ணிலே இல்லை ஐயா
பின்னே ஏன் என்னை நேசித்தீரோ
என்னில் கொண்ட உம் அன்புதானோ – ஆதி

## பாடல் – 342

***பல்லவி***

**இயேசுவை நாம் எங்கே காணலாம்**
அவர் பேசுவதை எங்கே கேட்கலாம்

### *அனுபல்லவி*

பனி படர்ந்த மலையின் மேல் பாக்க முடியுமா?
கனி நிறைந்த சோலையின் நடுவே காண முடியுமோ?

### *சரணங்கள்*

1. ஓடுகின்ற அருவியெல்லாம் தேடி அலைந்தேனே
ஆடுகின்ற அலைகடலில் நாடி அயர்ந்தேனே
தேடுகின்ற என் எதிரே தெய்வத்தைக் காணேனே
பாடுபடும் ஏழை நான் அழுது வாடினேனே – இயேசுவை

2. வானமதில் பவனி வரும் கார்முகில் கூட்டங்களே
வந்தருளும் இயேசுவையே காட்டிட மாட்டீரோ
காலமெல்லாம் அவனியின்மேல் வீசிடும் காற்றே நீ
கர்த்தர் இயேசு வாழுமிடம் கூறிட மாட்டாயோ – இயேசுவை

3. கண்ணிரண்டும் புனலாக நெஞ்சம் அனலாக
மண்டியிட்டு வீழ்ந்தேன் நான் திருமறைமுன்பாக
விண்ணரசர் அன்புடனே கண்விழிப்பாய் என்றார்
கண்விழித்தேன் என் முன்னே கர்த்தர் இயேசு நின்றார் – இயேசுவை

## பாடல் – 343

**அழகான அத்திமரம்**
பசுமையான அத்திமரம்
பசியோடு இயேசு வந்தாரே
கனி தேடி அருகில் வந்தாரே
கனி ஒன்றுமில்லை பயன் ஏதுமில்லை
அழகான அத்திமரம் காய்ந்து போனதே (2)

2. பொலிவுள்ள பழத்தோட்டம்
வேலியுள்ள கனித்தோட்டம்
கோபுரமும் ஆலை அமைத்தவர்
ஆவலுடன் அருகில் வந்தாரே
கனிகள் தந்தது கசப்பான கனிகள்
தேவன் தந்த பாதுகாப்பை இழந்து போயிற்றே (2)

3. கனி தேடி வந்து விட்டார்
உந்தன் அருகில் வந்துவிட்டார்
இயேசுவை நீ ஏமாற்றிடாதே
அருமையான கனிகள் தந்திடு
ஆவியின் கனிகள் அனைத்துமே தந்து
ஆண்டவரின் ஆசியை பெற்று மகிழ்ந்திடு (2)

## பாடல் – 344

**இஸ்ரவேலின் சேனைகளின் முன்னடந்த தெய்வமே**
எங்கள் சேனாதிபதியாக எங்கள் முன்னே செல்லுமே

2. உம்மை நம்பி உம்மை சார்ந்து உம்மை மகிமைப்படுத்தவே
அடியார் தொடுக்கும் வேலையை நீர் ஆசீர்வதிக்க வேணுமே

3. ஸ்நானகன் யோவானோடே இயேசு ஸ்நானம் வாங்கும் வேளையில்
வந்தமர்ந்த வான்புறாவே வாருமிந்த நேரத்தில்

4. அன்று நூற்றிருபதுபேர் சென்றதோர் மேல் வீட்டினில்
வந்தமர்ந்த அக்கினியே வாருமிந்த நேரத்தில்

5. சமுத்திரத்தை இரண்டாக பிளந்த எங்கள் தெய்வமே
உலர்ந்த தரையை எங்களுக்காய் ஒழுங்கு செய்ய வேணுமே

6. ஆறு லட்சம் இஸ்ரவேலர் அப்பம் தண்ணீர் குறைவில்லாமல்
நாற்பதாண்டு வனாந்தரம் நடத்தின எம் தெய்வமே

7. யோசுவாவின் போர்க்களத்தில் வீரனாய் முன்னின்றவா
சந்திர சூரிய மண்டலங்கள் தரித்து நிற்கச் செய்தவா

8. ஏழை எலியாவின் மேலே வல்லமையாய் நின்றவா
பாரில் பாகால் கோபுரங்கள் அழித்துப் போடும் தெய்வமே

9. ஆதி கிறிஸ்து சீஷர் முதல் இன்று வரை பக்தரை
ஆசீர்வதித்து வல்லமையாய் ஆளுமெங்கள் தெய்வமே

10. புதிய வானம் புதிய பூமி ஆக்கி ஆள வருவாரே
புதிய எருசலேமீதில் ஏழைகளைச் சேருமே

## பாடல் – 345

*பல்லவி*

**உமை நம்பினோர் மாண்டதில்லை**
மா்டதில்லை மாண்டதில்லை – தாசர்

*சரணங்கள்*

1. துன்பங்கள் பலமாய் நெருங்கி வந்தாலும்
தொல்லைகள் எமை அணுகி வந்தாலும்
காக்க வல்லவர் காக்க வல்லவர் காக்க வல்லவர் வல்லவர்

2. சிங்கத்தின் குட்டிகள் தாழ்ச்சியுற்றாலும்
பங்கம் வாராதென்னைக் காத்திடுவீரே
ஓங்குமே, பலன் ஓங்குமே, எமைத் தாங்குமே துயர் நீங்குமே

3. நிறுத்திடு வீரென்னைக் களங்கமில்லாமல்
பொறுத்தெந்தன் குறைகள் யாவையுமகற்றி
காப்பீரே எனைக் காப்பீரே சுத்தம் செய்வீரே முத்தி சேர்ப்பீரே

4. தாரகை போல் நின்று இலங்கின சுத்தர்
பாதை விட்டோடி மறுத்து வீழ்ந்தாலும்
பாதை காட்டவும் பாதுகாக்கவும் பாதஞ்சேர்க்கவும் வல்லவர்

5. மாட்சியே இன்னும் வந்திடுவீரே
மகிமையிலே என்னைச் சேர்த்துக் கொள்வீரே
மன்னவர் நீரே வல்லவர் இன்றும் வல்லவர் என்றும் நல்லவர்

## பாடல் – 346

***பல்லவி***

**எந்தன் ஆத்ம நேசர் எங்கே!**

***அனுபல்லவி***

அவர் எங்கே – எவர் எங்கே
அவர் எங்கே எங்கே எங்கே – எந்தன்

***சரணங்கள்***

1. நகரத்தின் தெரு வீதி சென்று
நான் நலமுடன் தேடினேன் நின்று
ஐயோ தேடியும் காணாமல் நின்று
முகம் வாடி மயங்குகிறேன் நின்று – எந்தன்

2. காட்டு மரங்களில் தானும்
நல்ல கிச்சிலி மரம் போல தோணும்
நல்ல குமாரர்க்குள்ளே இவர் தானும்
குடியிருப்பது போலவே தோணும் – எந்தன்

3. பதினாயிரம் பேரில் சிறந்தோர்
அதி வெண்மை சிவப்பு நிறமானோர்
தலை பொன் மயமாய் விளங்கிடுமே
மயிர் சுருள் சுருளாய் இருப்பவரே – எந்தன்

4. லீபனோன் போலவர் ரூபம்
மிக மதுரமவர் வாயின் வசனம்
லீலிப் புஷ்பங்கள் போன்றவருதட்டில்
நின்று வாசனை வெள்ளைப்போளம் வடியும் – எந்தன்

5. இடது கை என் தலை கீழ் வைத்து
அவர் வலது கையாலரவணைத்து
என்னை மனதாய் அணைத்துக் கொள்வதாலே
நான் சோகமடையேன் நேசத்தாலே – எந்தன்

## பாடல் – 347

**எந்தன் இயேசு உன்னதத்தில் அன்புள்ளோராய் வாழும்போது**
ஏழையேன் கலங்குகின்றேன் இப்பூமியில் – அதால்
என்றுமவர் கிருபை மட்டும் போதுமே

2. இன்னல்களாம் குன்றுதனில் பின்னிடாமல் ஏறுதற்கு
இயேசு தன் கால் தன்னை மான் கால்போலாக்கி – என்னை
இன்பமான யென் பாதையோடச் செய்குவார்

3. ஆரும் துணை இல்லை என்றோ ஏகனாய் நான் ஆனேன் என்றோ
என் மனதில் எண்ணிடேன் ஓர் நாளுமே – இயேசு
என்னுடனில்லாமல் எங்கு போயினர்

4. என்னருமைத் தோழரன்றோ தெய்வ தூத சங்கமெல்லாம்
இப்போதவர் என் பிதாமுன் நிற்கிறார்
என்னையும் தம் ஊழியத்தால் தேற்றுவார்

5. வியாகுலம் என் வீட்டை விட்டுக் காட்டிலோடப் பண்ணினும்
அங்கேயொரு தூதன் என்னைச் சந்தித்து – சூடாம்
அப்பமும் ஜலமும் தந்து தேற்றுவான்

6. வரும் நாளுக்காக வீணாய் என் மனம் நொந்தென்ன புண்ணியம்
என்னைத் தினம் போஷிப்பவரில்லையோ இன்னும்
ஏழையென் அவரை மட்டும் நம்புவேன்

7. கவனிப்பாய் காகத்தை நீ விதைப்பு உண்டோ? அறுப்பு உண்டோ?
விலையின்றிப் போற்றவில்லையோ நாதன் – லீலிப்
புஷ்பங்களில் வண்மையைத்தான் வைத்ததார்

8. பத்முதீவில் ஏகனாய் நான் தங்கிவிடினும் பயப்படேன்
வானந்திறந் தேசுநாதர் ஜோதியாய் – எனைப்
பரதீசில் ஆவிக்குள் எடுப்பாரே

9. ஹா மகேசா! கருணேசா! பொன்னுநாதா! நீரெனக்காய்
வேண்டியதெல்லாம் தயவாய்த் தந்தால் – நான் என்
வாணாளெல்லாம் உம்மைப் போற்றிப் பாடுவேன்

## பாடல் – 348

*பல்லவி*

**எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டதோ**
எவன் பாவம் மூடப்பட்டதோ அவன் பாக்கியவான்

*சரணங்கள்*

1. எவன் அக்கிரமத்தைக் கர்த்தர் எண்ணமாட்டாரோ
ஆவியில் கபடமில்லாதவன் பாக்கியவான்

2. நான் அடக்கி வைத்த மட்டும் என் எலும்புகள்
நித்தம் என் கதறுதலினால் உலர்ந்தது

3. இரவும் பகலும் என் மேல் உந்தன் கை
என் பாவத்தை உமக்கு அறிவித்தேன்

4. என் அக்கிரமத்தை நான் மறைக்காமல்
என் பாவத்தை உமக்கு அறிவித்தேன்

5. கர்த்தருக் கென் மீறுதலை அறிக்கை செய்தேன்
தேவரீர் என் பாவதோஷத்தை மன்னித்தீர்

6. இதற்காகச் சகாயம் கிடைக்குங் காலத்தில்
பக்தியுள்ளவன் உமக்கு விண்ணப்பஞ் செய்வான்

7. மிகுந்த ஜலப்பிரவாகம் வந்தாலும்
அப்பொழுது அது அவனை அணுகாது

8. எனக்கு நீர் மறைவிடமாயிருக்கிறீர்
என்னை விலக்கிக் காரும் இக்கட்டுக்கு நீர்

## பாடல் – 349

**ஒருபோதும் மறவாத உண்மைப் பிதாவிருக்க**
உனக்கென்ன குறை மகனே – ஒரு

### பல்லவி

சிறுவந் தொட்டுனை யொரு
செல்லப் பிள்ளை போற் காத்த
உரிமைத் தந்தை யென்றென்றும்
உயிரோடிப்பா ருன்னை – ஒரு

### சரணங்கள்

1. கப்பலின் அடித்தட்டில் – களைப்புடன் தூங்குவார்
கதறுமுன் சத்தங்கேட்டால் – கடல் புயலமர்த்துவார்
எப்பெரிய போரிலும் – ஏற்ற ஆயுதமீவார்
ஏழைப்பிள்ளை எல்லோருக்கும் – ஏற்ற தந்தை நானென்பார் – ஒரு

2. கடல் தனக் கதிகாரி – கர்த்தரென்றறிவாயே
கடவாதிருக்க வெல்லை – கற்பித்தாரவர் சேயே
விடுவாளோ பிள்ளையத் தாய் – மேதினியிற் றனியே?
மெய்ப்பரனை நீ தினம் விசுவாசித்திருப்பாயே – ஒரு

3. சிலபோது தரித்திரத்தால் – நோயால் வருத்துவார்
சிட்சித் துருக்கினாலும் – சிறந்த பொன்னாக்குவார்
பல பாடுனக்கென்றாலும் – பலன் பெறாத் திருத்துவார்
பட்சம் நிறைந்த கையை – முத்தி செய் இலகுவாய் – ஒரு

4. உன்னாசை விசுவாசம் – ஜெபமும் வீணாகுமா
உறக்க மில்லாதவர் கண் – உன்னை விட்டொழியுமா
இந்நில மீதிலுனக் கென்ன வந்தாலும் சும்மா
இருக்குமா அவர் மனம் – உருக்கமில்லாதே போமா? – ஒரு

5. உலகப் பேயுடலாசை – உன்னை மோசஞ் செய்யாது
ஊக்கம் விடாதே திரு – உள்முனை மறவாதே
இலகும் பரிசுத்தாவி எழில் வரம் ஒழியாது
என்றும் மாறாத நண்பன் – இரட்சகருடன் சேர்ந்து – ஒரு

## பாடல் - 350

### *பல்லவி*

**கர்த்தருக்குள் மகிழ்ந்திருப்பதே**
பக்தர்களின் பெலனே

### *அனுபல்லவி*

இன்பங்கொள்வோம் அன்பர்களே
துன்பங்களின் முன்னே

### *சரணங்கள்*

1. நீர்ப்பாய்ச்சலான தோட்டமாவோம்
வற்றா நீர் ஊற்றைப் போலிருப்போம் - இன்பம்

2. நாமங்கள் பரலோகத்திலே
எழுதப்பட்டிருப்பதாலே - இன்பம்

3. தேவ சமுகத்தில் ஆனந்தமாம்
வலப்பக்கம் நித்திய பேரின்பம் - இன்பம்

4. கர்த்தரிடம் நாம் மகிழ்ந்திருப்போம்
வேண்டுதலை அவர் அருள் செய்வார் - இன்பம்

5. தேவ சித்தமதைச் செய்திடுவோம்
தேவ பெலனைத் தினம் பெற்றிடுவோம் - இன்பம்

6. குறைகள் யாவும் ஒழித்திடுவார்
நிறைவாய் சந்தோஷம் அளித்திடுவார் - இன்பம்

7. அவமானத்தை ஆனந்தமாய்
தவறாதனுதினம் சகிப்பவராய் - இன்பம்

## பாடல் – 351

*பல்லவி*

**அன்பே! அன்பே! அன்பே!**
ஆருயிர் உறவே
ஆனந்தம்! ஆனந்தமே!

*சரணங்கள்*

1. ஒருநாள் உம் தயை கண்டேனையா
அந்நாளென்னை வெறுத்தேனையா
உம்தயை பெரிதையா – என் மேல்
உம் தயை பெரிதையா

2. பரலோகத்தின் அருமைப் பொருளே,
நரலோகரி லன்பேனையா?
ஆழம் அறிவேனோ – அன்பின்
ஆழம் அறிவேனோ?

3. அலைந்தேன் பலநாள் உமையுமறியா
மறந்தே திரிந்த துரோகியை
அணைத்தீர் அன்பாலே – எனையும்
அணைத்தீர் அன்பாலே

4. பூலோகத்தின் பொருளில் மகிமை
அழியும் புல்லின் பூவைப் போல
வாடாதே ஐயா – அன்பு
வாடாதே ஐயா

5. இப்பாரினில் உம் அன்பின் இனிமை
இயம்பற் கியலாதாகில் யான்
இசைக்கவும் எளிதாமோ – பரத்தில்
இசைக்கவும் எளிதாமொ

## பாடல் – 352

**அன்பிதோ! அன்பிதோ! அன்பிதோ! என்னை**
அழைத்தீரரசே அருளாலே

### *சரணங்கள்*

1. நாறிக்கிடந்த என் நாற்றத்தை நீக்கியதும் கிருபை
நாசணுமாகாமல் பாதுகாத்தணைத்து
மந்தையில் சேர்த்துக் கொண்டீரே – அன்பிதோ

2. சுத்த ஜலத்தினால் சுத்திகரித்தீர் என்னை தமக்காய்
மீறிப்போகும் எந்தன் சிந்தை அகற்றி தம்
சித்தத்தைச் செய்யச் செய்தீரே – அன்பிதோ

3. ஆவியீந்து எந்தன் காயம் தம் பரிசுத்தாலயமாம்
ஆதி தேவன் என்னைச் சொந்தமாக்கிக் கொண்டார்
என்னை பேரின்பமெனக்கே – அன்பிதோ

4. தூய ஜீவியம் இப்பூலோகத்தில் யானும் நடத்த
தூய கீதமுடன் துயருடன் பாட
ஏழைக்கும் கிருபை செய்தீரே! – அன்பிதோ

5. உம்மைச் சந்தித்திட தூய உம் சாயலெனக்கருளும்
உன்னதங்களிலே என்றும் உம்மோடொன்றாய்
தங்கிடத் தயவருளும் – அன்பிதோ

## பாடல் – 353

### *பல்லவி*

**அன்பர் அன்பை யாரால் கூறலாம் – ஆ! ஆச்சரியம்**
அன்பாகவே இருக்கும் என் நேசர்!

### *அனுபல்லவி*

அன்பின் உயரம் நீளம் அகலம் ஆழம் அளக்க யாரால் கூடும்!
அன்பரின் பேரன்பை இங்கு அழகாய்க் கூற யாரால் கூடும்! –அன்பர்

*சரணங்கள்*

1. எல்லா ஜலமும் மையானாலுமே – அன்பை எழுதிட
எல்லா மரமும் பேனாவானாலுமே
ஆகாயத்தைத் தாளாக்கி அதிலெல்லாம் எழுதினாலும்
அன்பின் அம்சம் எழதித் தீர்க்க அன்பர் எங்குதானுண்டு – அன்பர்

2. மாந்தர் மேலே பாய்ந்த அன்பைத்தான் – ஆழ்ந்து தூதரும்
பார்ப்பதில் பணிந்து குனிகிறார்
பாவி மேலே பாய்ந்த அன்பு சாவின் கூரை ஒடித்து வென்றது
என்ன அன்பு என்ன நேசம் மன்னரேசின் மகத்துவநேசம்! – அன்பர்

3. ஏழை என்னில் பாய்ந்த அன்புதான் – ஆ! ஏராளம்
ஏழை என்னால் பகரக் கூடுமோ
அல்லும் பகலும் கூடிப்பாடி அங்கும் இங்கும் அன்பைக் கூறுவேன்
அன்பின் இன்பம் ருசித்துப் புசித்து அன்பை மட்டும் எங்கும்
கூறுவேன்! – அன்பர்

## பாடல் – 354

**கல்லறைக் காவலில் காயமுடன்**
கடும் அசுத்தாவி பிடித்தோனவன்
கனிவுடன் இயேசுவைப் பணிந்து நின்றான்

1. விலங் கொடிக்கும் கொடும் லேகியோனவன் – இனி
வேதனை வேண்டாமென்றான்
விரட்டும் எம்மை பன்றிகளுள் என்றன் பேய்களுமே – கல்லறை

2. கட்டளை பெற்று பன்றிக் கூட்டத்துள் செல்ல – அவை
கடலினில் மாய்ந்தனவே
கரைதனில் பேய் பிடித்தோன் சுகமடைந்தான் உடனே – கல்லறை

3. அதிசய நோய் பேய்களெல்லாம் இயேசு
நாதனைக் கண்டோடும்
அவரையே நீ நம்புவாயானால் ஆதரிப்பார் உன்னையே – கல்லறை

## பாடல் – 355

### *பல்லவி*

**காப்பார் உன்னைக் காப்பார்**
காத்தவர் காப்பார், இன்னும் இனிமேல் காத்திடுவார்
கலங்காதே மனமே – காத்திடுவார்

### *சரணங்கள்*

1. கண்டுனை அழைத்தவர் கரமதைப்பார், அவர் கைவிடாதிருப்பார்
ஆண்டுகள் தோறும் உனக்கவர் அளித்த ஆசிகளை எண்ணிப்பார்
என்னிப்பார், என்னிப்பார், எண்ணிப்பார்
ஒன்றொன்றாயதை எண்ணிப்பார் – காப்பார்

2. இஸ்ரவேலுக்கு வாக்குப்படி இன்பக் கானான் அளிக்கவில்லையோ
இப்போதிவர்களை நிர்மூலம் செய்வதென்று பின்னும் இரங்கவில்லையோ
இல்லையோ, இல்லையோ, இல்லையோ
மனஸ்தாபம் கொள்ளவில்லையோ – காப்பார்

3. வீழ்ச்சியில் விழித்துன்னை மீட்பவரும் இகழ்ந்துவிடாது சேர்ப்பவரும்
சிற்சில வேளையில் சிட்சையினாலுன்னைக் கிட்டியிழுப்பவரும்
ஜெயமும், கனமும், சுகமும்
இரக்கமா யுனக்களிப்பவரும் – காப்பார்

4. தாயின் கட்டில் வருமுன் உனக்காய்த் தாமுயிர் கொடுத்தவரே
காயீனைப் போலுனைத் தள்ளிவிடாது கை கொடுத்தெடுத்தவரே
அன்பு கொண்டு மணந்தவரே – காப்பார்

5. ஆதரவாய்ப் பல ஆண்டுகளில் பரன் அடைக்கலமாயிருந்தார்
காதலுடன்னவர் கைப்பணி செய்திடக் கனிவுடனாதரித்தார்
பரிசுத்தத்தில் லங்கரித்தார் – காப்பார்

## பாடல் – 356

**கிறிஸ்து இயேசு தயாள பிரபு**
சிருஷ்டித்த தயவு
இரட்சித்த உந்தன் முடிவு
கீதம் பாடவே

***சரணங்கள்***

1. மாநிலத்தில் நீர் மானிடனானீர்
மாந்தர்கள் மத்தியில் சுற்றித் திரிந்தீர்
மாபெரும் துன்ப துக்கங்கள் ஏற்றீர்
பாவி என்னை இரட்சிக்க – பிரிய இயேசு

2. விஸ்வாசப் பேழை ஆழியிலிருக்க
புயல்களெல்லாம் அலைக் கழிக்க
இயேசுவே நீரே அலை அதட்டி
அக்கரைப் படுத்தினீர் – பிரிய இயேசு

3. பாவப் பிணியால் வாதிக்கப்பட்டேன்
பாடுகள் பட்டும் பயனைக் காணேன்
பின்வந்து உந்தன் வஸ்திரந் தொட்டேன்
பிழைத்தேன் அச்சணமே – பிரிய இயேசு

## பாடல் – 357

***சரணங்கள்***

**பாவி வா, பாவி வா பரனண்டையே வா**
பாவப் பாரம் சுமந்திளைத்தோனே நீ வா

2. பாவி வா, பாவி வா திகையாதே நீ வா
வரும் பாவியை ஓர் போதும் தள்ளேனே வா

3. காணாத ஆட்டை மேய்ப்பன் தேடும் மாதிரிபோல்
நானே நல்ல மேய்ப்பன் உன்னைத் தேடி வந்தேன்

4. தாகம் மிகுந்தோனே, தண்ணீரண்டை நீ வா
தாகம் தீர்த்திடுவேன் ஜீவ தண்ணீரினால்

5. உந்தன் பாவத்துக்காய் நானே பாடுபட்டேன்
எந்தனுக்கு உந்தன் நெஞ்சம் தந்திடவா

6. உனக்காய் மரித்தேன் ஈனக் கோலமதாய்
எனக்கே உனையே படைப்பாய் நிதமே.

## பாடல் – 358

*பல்லவி*

**சுய அதிகாரா சுந்தரக் குமாரா**
சொந்த உலகந்தனை துறந்த மரிமைந்தனான – சுய

*சரணங்கள்*

1. அகிலத்தை ஒரு சொல்லில் அமைத்தனையே
அதை ஒரு பம்பரம் போலிசைத்தனையே
துகில் போல் ஆகாயமதை லகுவாய் சமைத்ததிலே
ஜோதி பல மாதிரியாய்த் தூக்கி வைத்தி லங்கவைத்த – சுய

2. கரை மத கற்ற குளம் புவியிலுண்டோ?
கடலுக்கவன் சொல்லயன்றிக் கரைகளுண்டோ?
திரை திரையாக ஜலம் மலைபோற் குவிழ்ந்தெழுந்தும்
சேதமின்றிப் பூதலத்தை மா தயவாய் பாதுகாக்கும் – சுய

3. நரர் பலர் கூடி ஒரு மனை முடிக்க
நாளெல்லாம் உழைத்திட்டாலும் நாள் பிடிக்குமே
மர முயிர் தாது இன்னும் வான்புவி அனைத்தையும் ஓர்
வார்த்தையால் ஷணப் பொழுதில் நேர்த்தியாய் உண்டாக்கி
வைத்த – சுய

4. பாவ மனுவோர் முகத்தைப் பார்த்தீரே
பாவப்பிணி தோள் சுமந்து தீர்த்தீரே
சுவாமி உம்மைப் பற்றும் சுவாமி தாசருக் கிரங்க வேண்டும்
தஞ்சம் தஞ்சம் ஓடி வந்தோம், கெஞ்சமனுக் கேட்டருள்வாய் – சுய

## பாடல் – 359

**ஒரே வழி எந்தன் இயேசுவின் வழி**
இன்ப மோட்ச நாட்டை நாம் சேரும் வழி
பாமில்லாப் பாடு பரலோக நாடு
அந்த நாடு சேர இயேசுவே வழி (2)

1. பூமியில் பிறந்ததின் நோக்கத்தை நினைத்துக்
கலங்கிச் சோர்வாயொ?
நோக்கிப்பார் இயேசுவை
நோக்கமும் அர்த்தமும் ஈந்திடுவார் – ஒரே வழி

2. பாவத்தின் பிடியினில் ஆத்துமா கலங்கி
பாரம் சுமப்பாயோ?
நோக்கிப்பார் இயேசுவை
பாவமும் பாரமும் நீக்கிடுவார் – ஒரே வழி

3. திரும்பி நீ பார்த்துமே பாவத்தில் விழுந்து
நிம்மதி இழந்தாயோ?
நோக்கிப்பார் இயேசுவை
இரட்சிப்பின் சந்தோஷம் தந்திடுவார் – ஒரே வழி

4. பாவத்தின் சம்பளம் மரணத்தை அழிக்க
இயேசு தோன்றினார்
மரித்தாரே உயிர்த்தாரே
பாதையாய் தீபமாய் மாறினாரே – ஒரே வழி

## பாடல் – 360

*பல்லவி*

**தாகம் தீர்க்கும் ஜீவ நதி**
தரணியில் உண்டோ எனத் தேடினேன்

*சரணங்கள்*

1. அருவியின் நீரை பருகி விட்டேன்
ஆற்றினில் ஊற்றையும் பருகிவிட்டேன்
துரவுகள் கடலும் தாகம் தீர்க்க வில்லை
தூரத்துக் கானலாய் ஆகியதே – தாகம்

2. கானகம் சோலையும் தேடியபின்
வானகம் நோக்கியே அபயமிட்டேன்
கண்களைத் திறந்தேன் ஐந்தருவியென
கன்மலையொன்றில் நீர் சுரக்கக் கண்டேன் – தாகம்

3. பருகியே வாழ்த்தினேன் தாகமில்லை
அருகினில் சென்றேன் கன்மலையுமில்லை
காயங்கள் தன்னில் செந்நீர் சுரக்க
கன்மலையாக என் இயேசு நின்றார் – தாகம்

4. ஐயனின் திருவடி வீழ்ந்தேன் நான்
ஆன்மாவின் தாகமும் தீர்ந்த தென்றேன்
புன்னகை பூத்த புனிதனும் மறைய
புது பெலனடைந்தேன் என் உள்ளத்திலே – தாகம்

## பாடல் – 361

**சிலுவை கொடி ஏந்தி செல்லுவோம்**
இனிமை கவி பாடி வெல்லுவோம்
செல்லுவோம், சொல்லுவோம், வெலலுவோம் (2)

*சரணங்கள்*

1. காடு மலைகளும் கடந்து செல்லுவோம்
கடின உள்ளங்கள் உருக பாடுவோம் (2) – சிலுவை

2. வேதம் என்னும் மெய் தீபம் ஏற்றியே
பேதையர்க்கு நாம் பாதை காட்டுவோம் – சிலுவை

3. துன்பம் வந்தாலும், தொல்லை நேர்ந்தாலும்
தூயர் சேவையில் பின்னடையோமே (2) – சிலுவை

4. இயேசு ராஜாவின் ராஜ்ஜியம் வளர
இன்ப நாமத்தை எங்கும் கூறுவோம் (2) – சிலுவை

## பாடல் – 362

*பல்லவி*

**பயப்படாதே பாரிலிப்போதே**
திகையாதே கலங்காதே

*அனுபல்லவி*

தெரிந்து கொண்டேன் பேர் சொல்லி அழைத்தேன்
அறிந்து கொண்டேன் நீ என்னுடையவன்

*சரணங்கள்*

1. தண்ணீரை நீ கடக்கும்போது
உன்னோடு கூட நானிருப்பேன்
ஆறுகளை நீ கடக்கும்போது
அவைகள் உன்மேல் புரளுவதில்லை – பயப்படாதே

1. தண்ணீரை நீ கடக்கும்போது
உன்னோடு கூட நானிருப்பேன்
ஆறுகளை நீ கடக்கும்போது
அவைகள் உன்மேல் புரளுவதில்லை – பயப்படாதே

2. அக்கினியில் நடக்கும் போது
அஞ்சவேண்டாம் வேகாதிருப்பாய்
அக்கினி ஜுவாலை உன்னைப் பற்றாது
விக்கினங்கள் ஏதும் சுற்றாது – பயப்படாதே

3. இஸ்ரவேலின் பரிசுத்தர் நானே
இரட்சகரான தேவனே
உன்னை மீட்க நான் வந்தேனே
கண்மணிபோல் அருமையானவனே – பயப்படாதே

4. உன்னை நானே உருவாக்கினேனே
அன்னை போலவும் ஆதரிப்பேனே
கண்ணை மூடாமல் காப்பேனே
சொன்னதை நிறைவேற்றிடுவேனே – பயப்படாதே

5. முந்தினதை நினைக்க வேண்டாம்
பூர்வமானத்தை சிந்திக்க வேண்டாம்
எந்த துன்பத்தில் சோர வேண்டாம்
இந்த வாக்குகளை விடவேண்டாம் – பயப்படாதே

6. ஒன்றுக்கும் நீ கவலைப்படாதே
என்றும் ஜெபத்தையும் விடாதே
கடந்ததை எண்ணி வாடாதே
நடந்ததை வீணாய் நாடாதே – பயப்படாதே

7. அல்லேலூயாவுக் கருகனே
அல்லும் பகலும் ஆதரிப்பேனே
அல்பா ஒமேகாதான் நானே
வல்ல கண்ணால் நடத்துவேனே – பயப்படாதே

## பாடல் – 363

**மாறிடா எம்மா நேசரே – ஆ**
மாறாதவர் அன்பெந்நாளுமே
கல்வாரி சிலுவை மீதிலே
காணுதே இம்மா அன்பிதே – ஆ

***பல்லவி***

ஆ! இயேசுவின் மகா அன்பிதே
அதன் ஆழம் அறியலாகுமோ
இதற்கிணையேதும் வேறில்லையே
இணை ஏதும் வேறில்லையே

2. பாவியாக இருக்கையிலே – அன்பால்
பாரில் உன்னைத் தேடி வந்தாரே
நீசன் என்றுன்னைத் தள்ளாமலே
நேசனாக மாற்றிடவே – ஆ! இயேசு

3. உள்ளத்தால் அவரைத் தள்ளினும் – தம்
உள்ளம் போல் நேசித்ததினால்
அல்லல் யாவும் அகற்றிடவே
ஆதி தேவன் பலியானாரே – ஆ! இயேசு

4. ஆவியால் அன்பைப் பகிர்ந்திட – தூய
தேவனின் விண் சாயல் அணிய
ஆவியாலே அன்பைச் சொரிந்தார்
ஆவலாய் அவரைச் சந்திக்க – ஆ! இயேசு

5. நியாய விதி தினமதிலே – நீயும்
நிலையாகும் தைரியம் பெறவே
பூரணமாய் அன்பு பெருக
புண்ணியரின் அன்பு வல்லதே – ஆ! இயேசு

6. பயமதை நீக்கிடுமே – யாவும்
பாரினிலே சகித்திடுமே
அது விசுவாசம் நாடிடுமே
அன்பு ஒருக்காலும் ஒழியாதே – ஆ! இயேசு

## பாடல் - 365

**இயேசுவின் நாமம் இனிதான நாமம்**
இணையில்லா நாமம் இன்ப நாமம்

1. பாவத்தைப் போக்கும் பயமதை நீக்கும்
பரம சந்தோஷம் பக்தருக்களிக்கும் - இயேசுவின்

2. பரிமள தைலமாம் இயேசுவின் நாமம்
பார் எங்கும் வாசனை வீசிடும் நாமம் - இயேசுவின்

3. வானிலும் பூவிலும் மேலான நாமம்
வானாதி வானவர் இயேசுவின் நாமம் - இயேசுவின்

4. நேற்றும் இன்றும் என்றும் மாறிடா நாமம்
நம்பினோரை என்றும் கைவிடா நாமம் - இயேசுவின்

5. முழங்கால் யாவும் முடக்கிடும் நாமம்
மூன்றில் ஒன்றாக ஜொலிப்பவர் நாமம் - இயேசுவின்

6. சாத்தானின் சேனையை ஜெயித்திட்ட நாமம்
சாபப் பிசாசை துரத்திட்ட நாமம் - இயேசுவின்

## பாடல் - 364

**தொண்டு செய்வேன் என்றும்**
தொண்டு செய்வேன் என்றும்
தொண்டு செய்வேன் என் ஆண்டவர்கே

1. அவர் அழைப்பை அனுசரித்து
தொண்டு செய்வேன் என் ஆண்டவர்கே – தொண்டு

2. வீடானாலும், காடானாலும்

3. கந்தையானாலும், நிந்தையானாலும்

4. அடியானாலும், மிதியானாலும்

5. மழையானாலும், வெயிலானாலும்

6. வெப்பமானாலும், இன்பமானாலும்

7. தனித்தானாலும், கூட்டமானாலும்

8. மலையானாலும் பள்ளமானாலும்

தொண்டு செய்வேன் என் ஆண்டவர்கே – தொண்டு

**பாடல் – 366**

**யுத்தம் ஒன்று வருதே, தேவ சேனை புறப்படு**
சத்துரு முன்னே வருகின்றான் இன்றே அவனை ஒழித்திடு

1. இயேசுவை நீ பற்றிக்கொள்
உறுதியாகப் பிடித்துக்கொள்
தீங்கு நாளும் நெருங்கி வருதே
வல்ல ஆவி உன்னைத் தாங்குவார்
தங்கி உன்னைத் தாங்குவார்
துடிக்கும் இரத்தத்தோடு எழுந்து வா

2. பயப்படாதே மகனே
நான் உனக்குக் துணையல்லோ
ஒருவனும் உன்னை அசைப்பதில்லையே
நான் உனக்கு கேடகம்
மகா பெரிய பெலனாம்
ஆவியின் பட்டயம் எடுத்து வா

3. மாம்சத்தோடும் இரத்தத்தோடும்
ஒழிவதில்லை நம்யுத்தம்
தொடரும் வாழ்வின் கடைசி நாள் மட்டும்
இரத்தம் சிந்த நேரிட்டாலும்
அஞ்சா நெஞ்சர் இயேசுவின் பின்னே
துணிச்சலோடு பயணம் வைத்து வா

## பாடல் – 367

**ஜொலித்திடும் ஜொலித்திடும் தேவ அன்புதான்**
ஜோதியாய் விளங்கிடும் தேவ மக்களில்
ஜொலித்திடும் ஜொலித்திடும் தேவ அன்புதான்

2. மகிழுதே மகிழுதே எந்தன் உள்ளமே
மகிழ்ச்சி பொங்கும் நாடதை நாடிச் செல்லுதே

3. வருகையின் காலமோ கிட்டிச் சேருதே
கிருபையின் காலமோ பறந்து செல்லுதே

4. பாவியை அழைக்கிறார் இயேசு இரட்சகர்
பாசமாய் அழைப்பவரை நம்பி ஓடிவா

## பாடல் – 368

**மாயையில் மனம் ஓடவையாதே – உன்னை**
விட்டாலது கொஞ்சம் நில்லாது;
பாவையில் கட்டின கயிற்றைப் போல் – அகற்றுப்
போகக் காலம் கிட்டி வருகுதைய்யோ;
ஒரு வழி பாரு தினம் உன்னை நேரு

2. பூலோக வாழ்வதின் புகழென்ன? – பூ
வாடி உதிர்ந்தால் அதின் நிறமென்ன?
மாய உலகிலுனக்கென்ன? – ஜீவன்
வம்பில் விடுத்தால் அதன் பலமென்ன?
மாயை மறந்தோடு சுக இடம் தேடு

3. பலமுள்ள சிம்சோனைக் குறைவு செய்த – படு
பாதகி நீயே தாசி தெலீலாளே!
மன திழந்த மொழியைக் கேட்டாயே – கெட்ட
பெலிஸ்தர் கையிலவனைக் கொடுத்தாயே
படுபாதகியே, நரகவாசி நீயே

4. கழுதை எலும்பால் ஜெயங்கொண்டவனே – நீ
அழுது புலம்பி மாவரைப்பதென்ன?
பரகதி வாழ்வை நீ கெடுத்தாயே – பலர்
பரிகாசம் செய்ய உன்னைக் கொடுத்தாயே
மதி மறந்தவனே, துயரடைந்தவனே

## திருமணப் பாடல்கள்

### பாடல் – 369

*பல்லவி*

**மணவாழ்வு புவி வாழ்வினில் வாழ்வு – மங்கள வாழ்வு**
மருவிய சோபன சுப வாழ்வு

*சரணங்கள்*

1. துணை பிரியாது, தோகையிம்மாது
துப மண மகளிவர் இதுபோது
மனமுறை யோது வசனம் விடாது
வந்தன ருமதருள் பெறவேது – நல்ல – மண

2. ஜீவ தயாகரா, சிருஷ்டியதிகாரா
தெய்வீக மாமண வலங்காரா,
தேவ குமாரா, திருவெல்லையூரா
சேர்ந்தவர்க்கருள் தராதிருப்பீரா? – நல்ல – மண

3. குடித்தன வீரம், குணமுள்ள தாரம்
கொடுத்துக் கொண்டாலது சமுசாரம்
அடக்கமாசாரம், அன்பு, உதாரம்
அம்புவி தனில் மனைக்கலங்காரம் – நல்ல – மண

4. மன்றல் செய் தேவி, மணாளனுக்காவி
மந்திரம் அவர்குறை மேதாவி
மன்றியிப் பூவி லமிர்த சஞ்சீவி
அவளையில்லாதவ னொரு பாவி – நல்ல – மண

## பாடல் – 370

### *சரணங்கள்*

**ஆசீர்வதியும் கர்த்தரே ஆனந்த மிகவே**
நேசா உதியும் சுத்தரே நித்தம் மகிழவே

### *பல்லவி*

வீசீரோ வானஜோதி கதிரிங்கே
மேசியா எம் மணவாளனே
ஆசாரியரும் வான் ராஜனும்
ஆசீர் வதித்திடும்.

2. இம்மண வீட்டில் வாரீரோ, ஏசு ராயரே
உம் மணம் வீசச் செய்யீரோ, ஓங்கும் நேசமதால்

இம் மணமக்கள் மீதிறங்கிடவே
இவ்விரு பேரையுங் காக்கவே
விண் மக்களாக நடக்கவே
வேந்தா நடத்துமே – வீசீரோ

3. இம்மண மக்களோடென்றும் என்றென்றும் தங்கிடும்
உம்மையே கண்டும் பின் சென்றும் ஓங்கச் செய்தருளும்

இம்மையே மோட்சமாக்கும் வல்லவரே
இன்பத்தோடென் பாக்கி சூட்சமே
உம்மிலே தங்கித்தரிக்க
ஊக்கமருளுமே – வீசீரோ

4. ஒற்றுமையாக்கும் இவரை ஊடாக நீர் நின்றே
பற்றோடும் மீது சாய்ந்துமே பாரில் வசிக்கவே

வெற்றி பெற்றோங்குமே இவர் நெஞ்சத்திலே
வீற்றாளும் நீர் ஏசு ராஜனாம்
உற்றவான் ராயர் சேயர்க்கே
ஒப்பாய் ஒழுகவே. – வீசீரோ

5. பூதல ஆசீர்வாதத்தால் பூரணமாகவே
ஆதரித்தாளும் கர்த்தரே ஆசீர்வதித்திடும்

மாதிரளாக இவர் சந்ததியார்
வந்து துதித்தும்மை என்றும் பிரஸ்தாபிக்க
ஆ தேவ கிருபை தீர்மானம்
ஆம் போல் அருளுமேன். – வீசீரோ

6. ஞான விவாகம் எப்பொழுதும் ஞாபமாகவே
வான மணாளன் வாஞ்சித்து வாழ்க மனை யாளை

ஆனந்தமாகவே தூய தன்மையைதை
ஆடையாய் நீர் ஈயத்தரித்து
சேனையோடே நீர் வரையில்
சேர்ந்து நீர் சுகிக்கவே. – வீசீரோ

## பாடல் – 371

**ஏதேனில் ஆதி மணம்**
உண்டான நாளிலே
பிறந்த ஆசீர்வாதம்
மாறாதிருக்குமே.

2. இப்போதும் பக்தியுள்ளோர்
மணமும் தூய்மையாம்
மூவர் பிரசன்னமாவார்
மும்முறை வாழ்த்துண்டாம்.

3. ஆதாமுக்கு ஏவாளைக்
கொடுத்த பிதாவே
இம்மாப்பிள்ளைக்கிப் பெண்ணை
அளிக்க வாருமே

4. இரு தன்மையும் சேர்ந்த
கன்னியின் மைந்தனே
இவர் இருவரையும் (இரு கையும்)
இணைக்க வாருமே

5. மெய் மணவாளனான
தெய்வ குமாரர்க்கே
சபையாம் மனையாளை
ஜோடிக்கும் ஆவியே

6. நீரும் இந்நேரம் வந்து
இவ்விரு பேரையும்
உம் செட்டையை விரித்து
மெய்பாக்கியம் ஈந்திடும்

7. கிறிஸ்துவின் பாரியோடே
எழும்பும் வரைக்கும்
எத்தீங்கில் நின்று காத்து
பேர் வாழ்வு ஈந்திடும்.

## பாடல் – 372

**ஸ்ரீ மா தேவா**
திருவருள் புரியஇத் தருணமிங்கு நீயும்வா

***சரணங்கள்***

1. அந்தரமாய் வானம் பூமி ஜோதி படைத்து
சந்ததமாய் ஏதேன் வாழ்வும் கொடுத்து
சிந்தை களிகூர ஆசீர்வாதம் கொடுத்து
தினமும் அவரோடு கூடிக் குலாவ வந்தாயே

2. வானமும் பூமி வாழவந்த மனுவேலனே
தீனத் துயர் நின்றும் மீட்ட தேவராயனே
ஞான மணவாளனான நாதர் நீ வர
கானம் பாடிக் காத்திருந்துகனிந்து கும்பிட்டேன்

3. முந்து கானா ஊரின் கலியானத்தில் வந்தே
சிந்தை களிகூரகுறை தீர்க்க முன்னின்றே
சிந்து ரசமாக்கி மகிழ சேரவும் வந்தாய்
அந்தவிதம் இங்கும்வர அழைத்து கும்பிட்டேன்

4. தேவா இங்கு வந்தால் எந்தன் சிந்தை களிக்கும்
ஜீவ முடியாடை முகம் ஜோதி ஜொலிக்கும்
பாவத் துயர் கண்டு என்றும் பயந்து ஒளிக்கும்
ஆவலாக வந்தால் எந்தன் அறிமுகம் செழிக்கும்

5. எண்ணும் நன்மை யாவுந்தர என்னோடே இரும்
இன்னதென்று சொல்லு முன்பே தந்து கொண்டிரும்
முன்னம் சென்று தங்குமிடம் தந்து கொண்டிரும்
இந்த வேளைக் காருமில்லையென்று கும்பிட்டேன்

## பாடல் – 373

***சரணங்கள்***

**புத்திக்கெட்டாத அன்பின் வாரி பாரும்**
உம்பாதம் அண்டினோமே தேவரீர்
விவாகத்தால் இணைக்கும் இருபேரும்
ஒன்றாக வாழும் அன்பை ஈகுவீர்

2. ஆ! ஜீவ ஊற்றே இவரில் உம் நேசம்
நல் நம்பிக்கையும், நோவு சாவிலும்
உம் பேரில் சாரும் ஊக்கம் விசுவாசம்
குன்றாத தீரமும் தந்தருளும்

3. பூலோகத் துன்பம் இன்பமாக மாற்றி
மெய்ச் சமாதானம் தந்து தேற்றுவீர்
வாழ்நாளின் ஈற்றில் மோட்ச கரையேற்றி
நிறைந்த ஜீவன், அன்பும் நல்குவீர்

## பாடல் – 374

***பல்லவி***

**மங்களம் செழிக்க கிருபை அருளும் மங்கள நாதனே**

***சரணங்கள்***

1. மங்கள நித்திய மங்கள நீ
மங்கள முத்தியும் நாதனும் நீ
எங்கள் புங்கவ நீ எங்கள் துங்கவ நீ
உத்தம சத்திய நித்திய தத்துவ மெத்த மகத்துவ
அத்தனுக் கத்தனாம் ஆபிராம் தேவ நீ – மங்கள

2. மணமகன் ............................ அவர்களுக்கும்
மணமகள் ................................ அம்மாளுக்கும்
மானு வேலர்க்கும் மகானுபவர்க்கும்
பக்தியுடன் புத்தி முத்தியளித்திடும் நித்தியனே உனைத்
துத்தியம் செய்திடும் சத்திய வேதர்க்கும் – மங்களம்

3. சங்கை நித்திய நாதனும் நீ
பங்கமில் சத்திய போதனும் நீ
மங்கா மாட்சிமை நீ தங்கக் காசியும் நீ
இத்தரை இத் திருமணத்தின் இருவர்
ஒத்து நல் இன்பம் உற்றவர் வாழ நடத்தியருளுமே – மங்களம்

**பாடல் – 375**

**ஆ நல்ல சோபனம்**
அன்பாக இயேசுவும்
ஆசீர்வதித்து மகிழும்
கானாக் கலியாணம்

2. நேசர் தாமே பக்கம்
நின்றாசீர்வதிக்கும்
மணவாளன் மணமகள்
மா பாக்கியராவார்

3. அன்றுமைக் காணவும்
ஆறு ஜாடித் தண்ணீர்
அற்புத ரசமாகவும்
ஆண்டவா நீர் செய்தீர்

4. நீரே எங்கள் நேசம்
நித்திய ஜீவன் தாரும்
என்றும் தங்கும் மெய் பாக்கியம்
இன்றே ஈய வாரும்

5. ஏதேன் மணமக்கள்
ஏற்ற ஆசீர்வாதம்
இயேசு இவர் பக்கம் நின்று
ஊற்றும் இவர் மீது

6. என்றும் காத்தருளும்
ஒன்றாய் இணைத்தோனே
என்றும் சிலுவையாசனம்
முன் கெஞ்சி நிற்கிறோம்

## பாடல் - 376

### *பல்லவி*

**யேசு நாயகா, வந்தாளும் – எந்நாளும் திவ்ய**
யேசு நாயகா, வந்தாளும்

### *அனுபல்லவி*

ஆசீர்வாதமாக இந்த நேச மணமே நன்றாக – யேசு

### *சரணங்கள்*

1. சுந்தரம் மிகும்படி முன் அந்த மணவீட்டில்
உந்தன் அருள் தந்த தயை போல அன்பாலே – யேசு

2. உத்தம சன்மார்க்க நெறி, பக்தி, விசுவாசம்
நித்திய சமாதானம் உற்று, வாழ, மிகவாழ – யேசு

3. துங்கம் மிகு நன்கனம் விளங்கி, வளமாக
மங்களம ஓங்க, நலம் தாங்க – யேசு

4. நித்திய சுபசோபனமோ டெத்திசையினும் பெருகப்
புத்திர சந்தானமே செழிக்க தழைக்க – யேசு

## பாடல் - 377

### *பல்லவி*

**இம்மணர்க் குன்னருள் ஈயும் பர வாசா!**
ஏசுக் கிறிஸ்தையா, ஓ! சருவேசா!

### *சரணங்கள்*

1. செம்மையும் நன்மையும் செல்வமும் தாரும்
தேவரீர் இவ்வீரு பேரையும் காரும். –இம்

2. ஆதாமோ டேவையை அன்றமைத்தீரே
அவ்விதமாக நீர் இன்றும் செய்வீரே. –இம்

3. அன்பன் ஈசாக்கு ரெபேக்காட் கிரங்கி
ஆபிரகாமுடன் சாராளைக் காத்தீர். –இம்

4. உந்தயை பெற்றிவர் ஓங்கிப் பெருகவும்
ஒருவர்க்கொருவர் நல்லன்பில் நிலைக்கவும். –இம்

5. தாழ்மை பொறுமைகள் சற்குண மேன்மைகள்
தந்தும தாவியைக் கொண்டு காத்தாளுமேன். –இம்

6. இயேசு கிறிஸ்துவை நேசித்து வாழவும்
இன்ப விசுவாச வீட்டார் என்றாகவும். –இம்

## பாடல் – 378

### *பல்லவி*

**இந்த மங்களம் செழிக்கவே – கிருபை செய்யும்**
எங்கள் திரித்துவ தேவனே!

### *அனுபல்லவி*

சுந்தரக் கானாவின் மணப் பந்தலில் சென்றம் மணத்தைக்
கந்தரசமாகச் செய்த விந்தை போல், இங்கேயும் வந்து. – இந்த

### *சரணங்கள்*

1. ஆதிதொடுத் தன்பை எடுத்தாய், மானிடர்தமை
ஆணும் பெண்ணுமாகப் படைத்தாய்
நீதி வரம் நாலுங்கொடுத்தாய் — பெற்றுப் பெறுகி
நிற்க உலகத்தில் விடுத்தாய்
மாதவர் பணியும் வேத போதனே அந்தப்படி உன்
ஆதரவைக் கொண்டு அதன் நீதியை நம்பிப்புரிந்த – இந்த

2. தக்க ஆபிராமும் விண்டனன் – அதனை மன
துக்குள் எலியேசர் கொண்டனன்
முக்கிய ஆரன் நிலத்தண்டினன்; – நினைத்தபடி
சக்கிமதாகக் கண்டனன்
பக்குவம் உரைத்திடா ரெபேக்காளும் ஈசாக்குவுக்கு
தக்க மணவாளியாகத் தந்து தயை செய்தாற் போல. – இந்த

3. சத்திய வேதத்தின் வாசனே – அருளுபரி
சுத்த சுவிசேட நேசனே
பக்தர்கள் பவ விமோசனே – பழுதணுவும்
அற்ற கிறிஸ்தேசுராசனே
வெற்றியால் யாக்கோபுவுக்கு முற்றிலும் அளித்த பேறாய்ப்
புத்திர சம்பத்துண்டாக்கி நித்ய சுபசோபனமாய். – இந்த

## பாடல் – 379

*பல்லவி*

**ரோஜாப்பூ வாசமலர்கள் நாம் இப்போ**
நேச மணாளர் மேல் தூவிடுவோம்

*சரணங்கள்*

1. மல்லிகை முல்லை சிவந்தி பிச்சி
மெல்லியர் சேர்ந்து அள்ளியே வீசி
நல் மணமக்கள் மீது நாம்
எல்லா மலரும் தூவிடுவோம் – ரோஜாப்பூ

2. மன்னனாம்.......................... மணமகளோடு
அன்றிலும் பேடும்போல் ஒன்றித்துவாழ
ஆண்டவர் ஆசீர்வதிக்க நம்
வேண்டுதலோடு தூவிடுவோம். – ரோஜாப்பூ

3. மணமகள் ................. இணைபிரியாது
மணமகன் மீது மிக அன்புகூர்ந்து
மனைவிக் கழகு தருங்குணம் யாவும்
பெற்றி இலங்கிடத் தூவிடுவோம் – ரோஜாப்பூ

4. புத்திர பாக்கியம் புகழும் நல் வாழ்வும்
சத்தியம் சாந்தம் சுத்த நல் இதயம்
நித்திய ஜீவனும் பெற்றிவ ரென்றும்
பக்தியாய் வாழ்ந்திடத் தூவிடுவோம் – ரோஜாப்பூ

## பாடல் - 380

**மங்கா சுபகன மங்களமே – மனம்**
நீங்கா திம்மணர் தாம் பெறவே ... நிறை
சிங்கா தனபதி நீ அருளே
மங்களம் மங்களம் மங்களமே

### *பல்லவி*

ஓங்கா உனதருள் பொங்கா
உனதொளி தாங்கா சகலமும்
வாங்கா திருவொளி

2. கானாவூர்க் கலியாணக் குறைவை நீக்கி – நல்
சோனா ரசமது பொழிந்தவர் நீர் – இம்
மணமக்கள் இருவர் மேலுமே நீர்
உம்மாசீர்வாதம் இன்றருளும் – ஓங்கா

3. ஈசாக்கு ரெபேக்காள் போலிவர்கள் – நல்
ஈசனருள் வரம் பெற்று வாழ – நம்
ஈசாயின் கிளையை அண்டினோராய் உம்
நாம மகிமைக் கென்றுழைக்க – ஓங்கா

4. தந்திவர் சமதம் உமக்கென்றுமே – அதில்
உந்தனின் ஜெபத்தகம் பதித்தென்றுமே
தந்திர சோதனை ஜெயித்தென்றுமே
சந்ததம் சந்ததம் சந்ததமே – ஓங்கா

5. பாடகர் பாடலின் கவி பலிக்க – தூதர்
துத்திய கீதங்கள் நிதமுடிக்க – மண
மாப்பிள்ளை பெண்மேல் பதம் படிக்க
நித்திய நித்தியமே செழிக்க – ஓங்கா

6. மங்களம் சோபனம் உமக்கென்றுமே – எம்
மங்கள கீர்த்தனம் துதி உமக்கே – தூதர்
துத்திய ஸ்தோத்திரம் என்றென்றுமே
ஆவி பிதா சுதனானவர்க்கே – ஓங்கா

## பாடல் – 381

**மங்களம் மங்களம் மங்களமே(3)**
மணமக்கள் மாண்புறவே
மணவாழ்வு இன்புறவே (2)
மணவாளன் இயேசுவின்
மாசில்லா ஆசியால்
மணமக்கள் இணைந்திடவே
ஆ ஆ ஆ – மங்களம்

2. ஆதாமும் ஏவாளோடு
ஆபிரகாம் சாராளோடு (2)
ஆதியில் ஆண்டவர் அனாதி திட்டம்போல்
மணமக்கள் இணைந்திடவே
ஆ ஆ ஆ – மங்களம்

3. இல்லறம் இலங்கிடவே
நல்லறம் துலங்கிடவே (2)
வல்லவர் வான் பரன் வழி காட்டும் வாழ்க்கையில்
பல்லாண்டு வாழ்ந்திடவே
ஆ ஆ ஆ – மங்களம்

## பாடல் – 382

### *பல்லவி*

**சீர் ஏசு நாதனுக்கு ஜெயமங்களம் ஆதி**
திரியேக நாதனுக்குச் சுபமங்களம்

### *அனுபல்லவி*

பாரேறு நீதனுக்கு, பரமபொற் பாதனுக்கு
நேரேறு போதனுக்கு நித்திய சங்கீதனுக்கு – சீர்

***சரணங்கள்***

1. ஆதி சரு வேசனுக்கு ஈசனுக்கு மங்களம்
அகிலப் பிர காசனுக்கு நேசனுக்கு மங்களம்
நீதிபரன் பாலனுக்கு நித்திய குணாலனுக்கு
ஓதும் அனுகூலனுக்கு உயர் மனுவேலனுக்கு – சீர்

2. மானாபி மானனுக்கு வானனுக்கு மங்களம்
வளர் கலைக்கியானனுக்கு, ஞானனுக்கு மங்களம்
கானான் நல் தேயனுக்கு கன்னிமரி சேயனுக்கு
கோனார் சகாயனுக்கு கூறு பெத்தலேயனுக்கு – சீர்

3. பத்து லட்ச ணத்தனுக்கு சுத்தனுக்கு மங்களம்
பரம பதத்தனுக்கு நித்தனுக்கு மங்களம்
சத்திய விஸ்தாரனுக்குச் சருவாதிகாரனுக்கு
பத்தர் உபகாரனுக்குப் பரம குமாரனுக்கு – சீர்

## பாடல் – 383

**சீரார் விவாகம் ஏதேன் காவிலே**
நேராய் அமைத்த தேவ தேவனே
தாராய் மன்றலாசியே
வாராய் சுபம் சேரவே

***பல்லவி***

நேயனே மகா தூய தேவ தேவனே
சீர்மேவும் மெய்மனாசி நீ தரவா
நேயனே மகா தூய தேவ தேவனே
சீர் மேவுமே ஆசிதா

2. மங்கள மணமகன் ....................
மங்கள மணமகள் .......................
நேச தேவ தயவாய்
பாசத்துணை சேர்த்துவை – நேயனே

3. நாடோரும் செல்ல பாதைத் தீபமாய்
நாடு உயர்ந்த தேவ நூலதைத்
தேடித்துணை கொண்டன்பாய்
நீடித்திவர் வாழ்ந்திட – நேயனே

4. ஆன்றோர் எந்நாளும் போற்றும் சேயரும்
வானோர் சிறந்த கல்விச் செல்வமும்
சான்றோர் போற்றும் நேயரும்
தோன்றித்திகழ் சீரருள் – நேயனே

5. வாழ்க வாழ்க என்றும் இம்மணர்
வாழ்க இலங்கும் தந்தை தாயாரும்
வாழ்க சுற்றத்தார் அன்பர்
வாழ்க சுபமன்றலும் – நேயனே

## பாடல் – 384

### ஆபிரகாமை ஆசீர்வதித்த ஆண்டவா அருளுமே

1. கல்லின் மனைபோல கணவனும்
இல்லின் விளக்கென காரிகையும்
என்றும் ஆசிபெற்று இனிது வாழவே
இல்லறமாம் இன்ப நல்லறச் சோலையில்
இன்னிசை எழுப்பி இங்கிதமா யென்றும்
இணைந்து வாழவே – இணைந்து வாழவே – ஆபிரகாமை

2. அன்பும் அறனும் அங்கோங்குமெனின்
பண்பும் பயனும் உண்டாமே
இன்பமோடே அங்ஙன மென்றும் வாழப்பாரும்
என்றுமிதே இன்பம் கொண்டிவன் வாழவே
நற்புகழடைந்து நண்பருடன் சுற்றம்
நயந்து வாழவே, நயந்து வாழவே – ஆபிரகாமை

3. உள்ளம் விரும்பிய செல்வமுடன்
உத்தமச் சேய்களையே தாரும்
நல்ல கீர்த்திகொண்டு நாளும் வாழப் பாரும்
ஐயமது கொள்ளாது அன்பினிற் கூடியே
வையகந்தனில் வல்லபிதா உம்மை
வணங்கி வாழவே – வணங்கி வாழவே – ஆபிரகாமை

## பாடல் – 385

**நேச ராஜாவாம் பொன்னேசு நாதா**
வாசமாய் இம்மன்றல் சிறந்தோங்க
ஆசையோடெழுந்து அன்பின் நாதா
தேசு நல்குவீர் சுகம் நூங்க.

***பல்லவி***

நித்யானந்த செல்வம் நிறைவாரி
சத்ய சுருதியின் மொழிபோல் – உம்
சித்தமாகிப் பெய்யும் அருள் மாரி
நித்தம் எமின் கண்மணிகள் மேல்

2. பிரபை சூழ்ந்த பாக்யம் ஈயும் நேயா
பிரியம் தோய்ந்த செல்வம் யாவும் கூட – நல்
ஸ்திரமாக உந்தன் பாதம் சார்ந்து
கிருபை ஊக்கமோடென்றும் தேட – நித்யா

3. தேவ சேவைக்கான மேல் வரங்கள்
சேயர் மீதேராளமாகத் தங்க
ஜீவ காருண்யரின் பொற்குணங்கள்
செல்வர் ஜீவியத்தில் விளங்க – நித்யா

4. ஆசி தாரும் அன்பரிரு பேர்க்கும்
அருள் ப்ரபை இவர் மேலே வீசும்
நேசர்க்கும் முகப்பிரசன்னம் நல்கும்
நீர் மெய்ச் சமாதானம் ஈயுமேன் – நித்யா

## பாடல் – 386

### *பல்லவி*

**சோபனமாக சுப தினமே**
மாபெரும் ஆசிகள் மகிழந்தருள்வீர்
சுப ஜெய மங்களமே (3) – ஆமென்

### *அனுபல்லவி*

சீர்பெற திருமணம் என்றும் வாழ்க
அருளோடும் புகழோடும் வாழ்ந்திடவே

### *சரணங்கள்*

1. ஆனந்தமாக வாழ்ந்திடவே
ஆண்டவனருளால் அனுதினமே
அன்பு கொண்டுந்தன் பதந் தொழுதே
அல்லல்கள் நீங்கி அகமகிழ்ந்தே – சீர்பெற

2. மாநில மீதில் மனமுவந்தே
மங்கள வாழ்வு தனிற் சிறந்தே
பாலெனப் பொங்கிப் பல வளனும்
பாக்கியம் புகழும் பரவிடவே – சீர்பெற

3. சந்ததி பெருகித் தழைத்திடவே
சாஸ்தவமாக நிலைத்திடவே
ஆனந்தமாக அமைந்திடவே
ஆரருள் வாழ்க்கை அழகுறவே – சீர்பெற

4. மங்களமாகும் இத்தினம்போல்
மகிழ்வுடன் மாண்பாய் இருபேரும்
தங்கவண் செல்வ நாயகனின்
தாழ்வறு திவ்விய அடி நிழற்கீழ் – சீர்பெற

## பாடல் – 387

**கலியாணமாம் கலியாணம்**
கானாவூரு கலியாணம்
கர்த்தன் இயேசு கனிவுடனே
கலந்து கொண்ட கலியாணம்

1. விருந்தினர்கள் விரும்பியே
அருந்த ரசமும் இல்லையே
அறிந்த மரியாள் அவரிடம்
அறிவிக்கவே விரைந்தனள்

2. கருணை வள்ளல் இயேசுவும்
கனிவாய் நீரை ரசமதாய்
மாற்றி அனைவர் பசியையும்
ஆற்றி அருளை வழங்கினார்

3. இல்லறமாம் பாதையில்
இல்லை என்னும் வேளையில்
சொல்லிடுவீர் அவரிடம்
நல்லறமாய் வாழுவீர்

## பாடல் – 388

*பல்லவி*

**உள்ளத்தை உமக்கென்று திறந்தே – ஜெப**
உறவாலே உரையாடி மகிழ்வேன்

1. விருப்பங்கள் நிறைவேற வேண்டும் – என்று
வீணான வேண்டல்கள் செய்யேன்
வருத்தங்கள் மறைந்தோடச் செய்யும் – என்ற
விதமாக மன்றாடேன் என்றும்

2. நீர் பேசும் நான் கேட்பேன் என்பேன் – எனது
நெஞ்சத்தில் உம்வார்த்தை கொள்வேன்
சீரான உம் சித்தம் கண்டே – அதைச்
செய்தென்றும் உமைச்சார்ந்து வாழ்வேன்

3. பிறருக்காய் வேண்டல்கள் புரிவேன் – உலகின்
பலமாந்தர் நலமொன்றே நினைவேன்
இறைவா நீர் என்வேண்டல் கேளும் – என்றும்
என்மீட்பர் கிறிஸ்தேசு மூலம்

## பாடல் – 389

***பல்லவி***

**பாதை தெரியாத ஆட்டைப் போல**
அலைந்தேன் உலகிலே
நல்ல நேசராக வந்து
என்னை மீட்டீரே

***சரணங்கள்***

1. கலங்கினேன் நீர் என்னைக் கண்டீர்
பதறினேன் நீர் என்னைப் பார்த்தீர்
கல்வாரியின் அண்டை வந்தேன்
பாவம் தீர நான் அழுதேன் – பாதை

2. என் காயம் பார்த்திடு என்றீர்
உன் காயம் ஆறிடும் என்றீர்
நம்பிக்கையோடே நீ வந்தால்
துணையாக இருப்பேனே என்றீர் – பாதை

3. ஊனினை உருக்கிட வேண்டும்
உள்ளொளி பெருக்கிட வேண்டும்
உம் ஆவியைத் தர வேண்டும்
எம் நெஞ்சம் மகிழ்ந்திட வேண்டும் – பாதை

## பாடல் – 390

*பல்லவி*

**பாத்திரம் நிரம்பி வழிகின்றதே**
பாடலும் நாவில் எழுகின்றதே
பாடுவேன் என்றும் இயேசுவையே
பாகமும் பங்கும் எனக்கவரே

*சரணங்கள்*

1. பலத்தின் மேலே பலனடைந்தேன்
பரத்தின் ஆவி வரமதனால்
பள்ளம் மேடுகள் பலவரினும்
பாடுகள் பட்டிட நான் தயங்கேன்

2. அருளின் மேலே அருளடைந்தேன்
ஆண்டவர் இயேசு கிறிஸ்துவினால்
அகலா முள் தான் இருந்திடினும்
அருளேபோதும் என்றிடுவேன்

3. மகிமை மேலே மகிமையுண்டே
மாண்பு மேலும் மேலுமுண்டே
மண்ணில் வாழும் வாழ்வதிலே
மகிமை கண்டேன் முன் சுவையாய்

## பாடல் – 391

*பல்லவி*

**பிறர் வாழவேண்டுமெனில்**
நான் சாக வேண்டும்
நான் சாகவேண்டுமெனில்
அவர் வாழ வேண்டும் – எனில் இயேசு
தினம் வாழவேண்டும்

1. நான் என்னும் ஆணவத்தால்
நாளெல்லாம் வாழ்ந்திருந்தேன்
பிறர் வாழ்வை எண்ணாமல்
பாதையிலே மயங்கி நின்றேன்
இன்றே என்னை அர்ப்பணம் செய்திடுவேன்

2. மற்றவர்கள் மனம் மகிழ
மன்னவனே நீ மரித்தாய்
மற்றவர்கள் மனம் நோக
மதியிழந்து நான் இருந்தேன்
இன்றே என்னை அர்ப்பணம் செய்திடுவேன்

3. உலகுக்காய் நான் வாழ
ஒரு மனது துடிக்கையிலே
உள்ளுக்குள் கறைபட்ட
மறுமனது மறுத்ததையா
இன்றே என்னை அர்ப்பணம் செய்திடுவேன்

## பாடல் – 392

*பல்லவி*

**புதுவாழ்வு நமக்குப் புதுவாழ்வு**
பெரு வாழ்வு கிறிஸ்து தரும் வாழ்வு

1. பிறந்தவர் இறப்பது பொது மரபு – இங்கு
இறந்தவர் எழுவதோ புதுச்சிறப்பு
இறைவனின் திருமகன் உயிர்த்தெழுந்தார் – கொடும்
மரணத்தின் பிடியினைத் தகர்த்தெறிந்தார்

2. கல்லறை உலகினில் பல உண்டு – அவை
சொல்லிடும் கதைகளில் கனிவுண்டு
வல்லவர் இயேசுவின் கல்லறையோ – அவர்
இல்லையே என்னிடம் என்றிடுதே

3. இயேசுவின் உயிர்த்தெழல் பெருநிகழ்ச்சி – அவர்
நேசரின் வாழ்விலும் வரும் நிகழ்ச்சி
நாசமோ மோசமோ நமக்கில்லை – விசு
வாசிகள் தமக்கு இறப்பில்லை

## பாடல் – 393

*பல்லவி*

**பூமியின் மாந்தரீர் கூடிவாரீர்**
பூரித்தே பேரின்பமாய்ப் பாடி வாரீர்
தேமிசைப் பாமலர் சூடிடுவீர்
தேவனின் திருமுன்னே நாடிடுவீர்

2. நம்மையிங் காக்கியோன் ஓரிறையாம்
நாமவர் உடைமையாம் ஓர் நிறையாம்
மெய்மையின் மேய்ச்சலின் செம்மறிநாம்
மேவிநம் ஆயனை நாமறிவோம்

3. வாசலில் நன்றி கூர் உணர்வோடே
வாருங்கள் திருச்சுற்றில் துதியோடே
நேசமாய் உளமெல்லாம் கனிந்தெழுந்தே
நிறைபெயர் போற்றுங்கள் மலர்ந்துயர்ந்தே

4. ஆண்டவன் நன்மையின் மயமாவான்
ஆரருள் மாறாத நயமாவான்
ஆண்டவன் பேருண்மை தலைமுறையாய்
ஆண்டென்றும் தாங்கிடும் அருள் நிறைவாய்

## பாடல் – 394

*பல்லவி*

**மலைமா நதியோ மிகு ஆழ் கடலோ**
மருள் சூழும் கானக வனமோ – எங்கும்
மீட்பர் சிலுவை சுமப்பேனே

1. பள்ளம் மேடு தடை தாண்டியே
பசாசின் கண்ணிக்கு நீங்கியே
உள்ளார்வமுடன் விண் பார்வையுடன் – நான்
மெள்ள மெள்ள நடந்தே எனின்
மீட்பர் சிலுவை சுமப்பேனே

2. இன்னல் துயர் பிணி வாதையில்
ஈனரெனைத் தாக்கும் வேளையில்
துன்பம் களைந்தே துயரம் ஒழிந்தே – நான்
தூயன் பாதையில் ஊர்ந்தே அவர்
தூயச் சிலுவை சுமப்பேனே

3. பூலோக மேன்மை நாடிடேன்
புவிமேவும் செல்வம் தேடிடேன்
சீலன் சிலுவை சிறியேன் மேன்மை – என்
ஜீவன் வழி மறை இயேசுவே – அவர்
ஜீவ சிலுவை சுமப்பேனே

## பாடல் – 395

### *பல்லவி*

**வருகின்றார் – இறைவன் – வருகின்றார்**
வான் புவி படைத்த வல்லவன் இறைவன்
வாழ்வதின் ஊற்றாம் விண்ணவன் இறைவன்

1. வரலாற்றின் அகரத்தையே வகுத்தவர் அவரே
வரலாற்றின் மானிடனாய் வந்தவர் அவரே
வரலாற்றின் போக்கை மாற்றிஅமைப்பவர் அவரே
வரலாற்றின் புதுமைதனை வடிப்பவர் அவரே

2. இல்லறத்தை நல்லறமாய் இணைப்பவர் அவரே
அல்லல் உறும் வேளை வந்து அணைப்பர் அவரே
எல்லையில்லா அமைதிதனை அளிப்பவர் அவரே
இல்லம் வரும் இளையனை ஏற்பவர் அவரே

3. உரிமையுடன் ஆட்கொள்ளும் உத்தமர் அவரே
பிரிவினையாம் சுவர்களையே தகர்ப்பவர் அவரே
நிறைவான ஒளி வாழ்வைத் தருபவர் அவரே
மறைவாக ஏழை உருவில் வருபவர் அவரே

## பாடல் – 396

### *பல்லவி*

**பாவியே நீ போகும் போது கூட வருவதென்ன?**
கூட வருவதென்ன? கொண்டு நீ வந்ததென்ன?

1. ஆடு மாடு நன்செய் புன்செய் வீடுவாசல் தான் வருமோ?
பாடுபட்டு லாயக்காய் தேடும் பணம் வருமோ? – பாவி

2. உத்தியோக மதிப்புகளும் பி.ஏ., எம்.ஏ. பட்டங்களும்
மெத்தவே அரையில் கட்டும் ஆடைகளும் வருமோ? – பாவி

3. மாயை மாயை மாயை என்று சொல்லுகிறான் பிரசங்கி
ஞாயமாய்த் தீர்ப்பு செய்தார் ஞானி சாலமோன் தானே – பாவி

4. தேடு நீ கண்டடைவாய் தட்டுத் திறப்பேனென்றார்
கேளு கொடுப்பேனென்றார் கேட்டவரம் தருவார் – பாவி

## பாடல் – 397

**பாவத்தின் பாரத்தினால் தவித்திடும் பாவி என்னை**
நின் கிருபை பிரவாகத்தால் ஏற்றிடும் இயேசுநாதா

2. கெட்ட குமாரனைப் போல் துஷ்டன் நான் அலைந்தேனப்பா
நின் அன்பை உணராமல் துரோகம் நான் செய்தேனே

3. தந்தையை விட்ட பின்பு தவிடுதான் ஆகாரமோ
மனங்கசிந்து நொந்தேன் கண்ணீரைத் துடைத்திடுமே

4. கள்ளானாயினும் நான் நீ பெற்ற பிள்ளையல்லோ
கள்ளனுக்கருள் செய்த நீ தள்ளாதே சிலுவை நாதா

5. தாய் தந்தை தமரெல்லாம் என்னைக் கைவிடுவார்கள்
சாகும் நாளென்னைத் தாங்குவார் நீரல்லால் யாருமில்லை

## வீடு பிரதிஷ்டை

**(மெட்டு: தோத்திரம் செய்வேனே)**

## பாடல் – 398

*பல்லவி*

**தோத்திரம் செய்வோமே – இரட்சகனைத்**
தோத்திரம் செய்வோமே (3)

### *அனுபல்லவி*

இப்புது மனைதனில் இறையன்பின் பிசன்னம்
எப்போதும் நிலைகொண்டு இருந்திட கீதம் பாடி – தோத்திரம்

### *சரணங்கள்*

1. கையின் பிரயாசமதை – தயவாய், சுபமாய், நிறைவாய்
கனிந்திடச் செய்தவரை
கைவிடேன் ஒருபோதும் என்றநல் கர்த்தனை
கைகூப்பி வணங்கிய கரத்துடன் கீதம் பாடி – தோத்திரம்

2. இல்லத்தின் ஒளி அவராய் – இரந்து, தொடர்ந்து, நிறைந்த
இன்பங்கள் நல்கிடவே
இம்மையின் காலங்கள் யாவிலும் அவரருள்
இவ்வடியாருடன் இருந்திட கீதம் பாடி – தோத்திரம்

## பாடல் – 399

### *(மெட்டு: உம்மைத் துதிக்கிறோம்)*

**ஆ இன்ப இல்லமே நீ என்றும்**
தழைத்து வாழ்க
அன்புடன் பாலர் யாரும் அங்கு
ஐக்கியமாய் ஓங்க
அன்னை தந்தை
ஆவலாய்ப் பாலகரை
ஆண்டவன் பாதம் படைக்க

2. ஆ இன்ப இல்லமே உன் செல்வம்
சுகம் தழைக்க;
உன் மக்கள் யாவரும் ஓர் வேலை
உகந்து செய்ய
பக்தியுடன்
பற்பல சேவை ஆற்றி
கர்த்தன் அருள் பெற்று ஓங்க

3. ஆ இன்ப இல்லமே உன்
உண்மை நண்பர் கிறிஸ்தேசு
அன்பர் அவர் பிரசன்னம்
உன்னை என்றும் நடத்தும்
இவ்வாழ்வின் பின்
உன் மக்களை அவரே
விண்ணோடு சேர்த்துக் காப்பாரே

## பாடல் - 400

**என்றும் கர்த்தாவுடன்**
நான் கூடி வாழுவேன்
அவ்வாக்கினால் சாகாவரன்
செத்தாலும் ஜீவிப்பேன்
பற்றாசையால் உம்மை
விட்டே நான் அலைந்தேன்
நாடோறும் வழி நடந்தே
விண் வீட்டைக் கிட்டுவேன்

2. அதோ சமீபமே
பிதாவின் வீடுதான்
என் ஞானக் கண்கள் காணுமே
மின்னும் பொன்னகர் வான்
தூயோர் சுதந்தரம்
நான் நேசிக்கும் நாடே
என் ஆவி மேலெருசலேம்
சேரத் தவிக்குமே.

3. கர்த்தாவுடன் என்றும்
பிதாவே, இங்கும் நீர்
இவ்வாக்கை நிறைவேற்றவும்
சித்தம் கொண்டருள்வீர்
என் பக்கம் தங்கிடின்
தப்பாமலே நிற்பேன்
கை தூக்கி என்னைத் தாங்கிடின்
போராடி வெல்லுவேன்.

4. என் ஜீவன் போகும் நாள்
கிழியும் இத்திரை
சாவை அழிப்பேன் சாவினால்
சாகா உயிர் பெற்றே
என் தேவனைக் காண்பேன்
நின்று களிப்புடன்
சிம்மாசனத்தின் முன் சொல்வேன்
என்றும் கர்த்தாவுடன்

## பாடல் – 401

**எருசலேம் என் ஆலயம்**
ஆசித்த வீடதே
நான் அதைக் கண்டு பாக்கியம்
அடைய வேண்டுமே.

2. பொற்றளம் போட்ட வீதியில்
எப்போதுலாவுவேன்?
பளிங்காய்த் தோன்றும் ஸ்தலத்தில்
எப்போது பணிவேன்?

3. எந்நாளும் கூட்டம் கூட்டமாய்
நிற்கும் அம்மோட்சத்தார்
கர்த்தாவைப் போற்றிக் களிப்பாய்
ஓய்வின்றிப் பாடுவார்.

4. நானும் அங்குள்ள கூட்டத்தில்
சேர்ந்தும்மைக் காணவே
வாஞ்சித்து லோக துன்பத்தில்
களிப்பேன் இயேசுவே.

5. எருசலேம் என் ஆலயம்
நான் உன்னில் வாழுவேன்
என் ஆவல் என் அடைக்கலம்
எப்போது சேருவேன்?

## பாடல் – 402

**திரும்பு மனந்திரும்பு**
பரலோகம் சமீபமே
விரும்பு இயேசுவை விரும்பு – அவர்
வருகை சமீபமே

***அனுபல்லவி***

காலங்கள் போனால் திரும்பாது
கிருபையின் நாட்களைத் தள்ளாதே (2) – திரும்பு

1. நாளை நாளை என்று நாளைக் கடத்தியே
நாசம் அடையாதே
மாய உலகத்தின் மயக்கும் பாதையில்
மனதைச் செலுத்தாலே – காலங்கள்

2. கர்த்தர் வருகையின் தாமதம் எண்ணியே
ஏளனம் செய்யாதே
கடின உள்ளத்தோர் எவரும் மாறிட
சந்தர்ப்பம் தருவாரே – காலங்கள்

3. கரங்களை நீட்டி அழைத்திடும் தேவன்
பாசத்தை உணராயோ?
பாவ வாழ்க்கையை உதறித்தள்ளியே
பரமனைச் சேராயோ? – காலங்கள்

## பாடல் – 403

***சரணங்கள்***

**அந்தோ சிலுவைப் பவனி பார் – நமது**
ஆண்டவர் படுந்துயர் ஆறுமோ – நாம்
அழுதாலுந்தான் தீருமோ – குரு
சன்றி மீட்பு ஒப்பேறுமா – சகி சகி

2. தோளில் பாரம் அழுந்தவே – அவர்
தேய்ந்து கீழே விழுகிறார் – ஐயோ
தூக்கிவிடுவார் இல்லையோ – மா
தோஷி என்னால் இத்தொல்லையோ – சகி சகி

3. தூக்கென்றவரை அதட்டுறான் – ஒரு
தோஷி முறுக்கிப் பிதற்றுறான் – அங்கே
துடுக்காய் சவுக்கை சுழற்றுறான் – ஒருவன்
தொந்தரை செய்தே அலட்டுறான் – சகி சகி

4. மெல்ல இயேசு நடக்கிறார் – வேர்த்து
மெய் சோர்ந் துடைந்து சடைக்கிறார் – தம்மைப்
பலியாய் விருப்புடன் படைக்கிறார் – எந்தன்
பாவக் கடன்களை அடைக்கிறார் – சகி சகி

5. மாதா ஏங்கித் தேம்புறாள் – நன்மை
வாங்கினோர் புலம்பி ஏங்குறார் – சீமோன்
மதிசோர்ந்து குருசைத் தாங்குறான் – ஐயோ
மருகி யோவான் முகம் வீங்குறான் – சகி சகி

6. கல்வாரி மலையில் ஏறுகிறார் – மெய்
கருகி அன்பர் சோர்கிறார் – சாலேம்
மாதர் புலம்பி அழுகிறார் – அவர்க்
காறுதல் மொழிகள் கூறுகிறார் – சகி சகி

7. சோலையில் வந்த பாவத்தால் இயேசு
சாலையின் வழியே போகிறார் – அலங்
கோலமாகி என்னால் சாகிறார் – தேவ
கோபாக்கினையில் வேகிறார் – சகி சகி

## பாடல் – 404

### *சரணங்கள்*

**ஆதி பராபரனின் சுதனே, கிறிஸ்தேசுநாதா – இந்த**
அறிவில்லா யூதர்க்காய் ஐயனை வேண்டினீர் – யேசுநாதா

2. பாடு படுத்து வோர்க்கோ நீர் மன்னிப்பீந்தீர் – யேசு நாதா
இந்தப் பாவியாம் என் பாவப் பாரம் பெரிதல்லோ – யேசு நாதா

3. யூதரிலும் பொல்லாப் பாதகரானோமே – யேசுநாதா
மன யூகமுற்று முழுத் துரோகம் செய்தோமல்லோ – யேசு நாதா

4. அறிந்து மதிகமாய்ப் பாவங்கள் செய்தோமே – யேசுநாதா
அவை அத்தனையும் பொறுத்தருளும் கிருபையால் – யேசுநாதா

5. அன்புமிகும் வல்ல ஆண்டவரே கிறிஸ்து – யேசுநாதா
இனி ஆகாதோனாய்க் காணேன் ஆணைகள் செய்கின்றேன் – யேசுநாதா

6. மற்றவர் குற்றத்தை யாமும் மன்னித்திட – யேசுநாதா
நல்ல வாஞ்சையளித்து வரங்கள் புரிந்தருள் – யேசுநாதா

7. பரதேசிகளெம்மை அரவணையும் கிறிஸ்து – யேசுநாதா
திருப்பாதம் பணிந்து மன்றாடுகிறோம் கிறிஸ்து – யேசு நாதா

## பாடல் – 405

***சரணங்கள்***

**திட்டியே நகைத்து சேவகர் காடி**
தேடியோர் நொடியினில் கொணர்ந்து
எட்டிடாத் தூரத்தினில் அதை நீட்ட
இறைவனும் ருசித்திடா திருக்க

2. துட்டனா மிடது பாரிசக் கள்ளன்
துணிவு கொண்டையனை வைய
மற்றவனவனைக் கடிந்து பகர
வாயெடுத்தனன் அந்த நேரம்

3. குற்றமோ அணுவுமற்ற ஆண்டவன் மேல்
குறைசொல்ல அச்சமில்லையோ?
பட்டு நாம் தொலைக்கப் பல பாவம் புரிந்தோம்
பரிசுத்தன் யாதும் செய்திலரே

4. கிட்டி நான் ராச்சியந்தனில் வரும்போது
கிருபையாய் நினைத்தருளு மென்றான்
மட்டிலாப் பரதீஸ் வாழ்வையும் அளித்தார்
மாசில்லா யேசு நாயகனே

5. வலது பாரிசத்துக் கள்ளனுக் கன்பாய்
வாக்குறைத்த வல்ல பரனே
நிலைவரமான ஆவியை ஈந்து
நின்னுடன் இருப்பமெக் களிப்பாய்

6. நிலையில்லா உலகை சதமென்று திரிந்து
நின்னையும் பரத்தையும் மறந்து
அலைகடல் துரும்பின் கதியடையாது
ஆட்கொள்வாய் யேசு நாயகனே

## பாடல் – 406

***பல்லவி***

**என் செய்வேன் மகனே நான்**
இதற்கோ உன்னைப் பெற்றெடுத்தேன்
இறையோ பவச் சோதனையோ
இப்படி முடிந்திட

***சரணங்கள்***

1. ஐயையோ பாலகனே, அதிசயமாய் வந்துதித்தாய்
அருமையாய் வளர்ந்திங்கு, அவதிக்குள் அமைந்தனையே
அருமை திருமைந்தனே வயிறு எரிகுதையோ

2. கன்னத்தில் அடிபடவும் கனத்த சிலுவை தூக்கவும்
கள்ளரோ டடிபடவும் காலமோ என் மகனே
கருத்தாய் உரித்தாய் கரத்தால் எடுத்தேனே

3. இப்போ நான் வாடி நிற்க இக்கட்டு வந்ததையோ
அப்பா நின் திருமேனி ஆணிகளால் தொங்குதையோ
அன்பே முன்பே ஆதரவில்லை ஐயா

4. பாவிகளைத் தேற்ற, பாவக்கறை யகற்ற
படுகிற பாடுகளை நான் பார்ப்பேனோ என் மகனே
பலமாய் உறமாய் அடிகள் விழுகுதையோ

5. நேசன் யோவானையுமே நியமித்தாய் என் மகனே
நின்னையும் நான் நினைத்தால் நெஞ்சமோ ஆறுதில்லை
நினைவே கனவே நிலையில்லா தழிவேனே

6. சாவுரு வேளைகளில் யாம், சான்றோர்களை நினைத்து
சற்குரு நின் போதனையைச் சரிவரச் சாற்றிவைத்தாய்
கர்த்தா கர்த்தா காரும் காருமெனை

## பாடல் – 407

### *சரணங்கள்*

**ஆறாம் மணி வேளை முதல் ஒன்பது மட்டும்**
வீரா யுலகெங்கும் இருளுண்டான தென்றால்
வேறா ருவரும் மாறிட வெய்யோனு மிருண்டு
மாறாகின தோர் ஒன்பதாமணி வேளையில் ஐயன்

2. தனதாகவே ஏலி, ஏலி, லாமா சபக்தானி
எனவே வலுசத்தத்தோடு கூப்பிட்டார் இதுவோ
கனிவான என்பரனே எனின்பரனே நீர் கைவிட்ட
தேன் என்றனை என் ரத்தமே இதயங்களுமுண்டே

3. அங்குற்ற சிலர் கேட்டபோ ததிரா எலியாவை
இங்குற்றிடவே கூப்பிடுகின்றாரிது வென்றார்
அங்கமதின் மேலே யேசு யாவும் முடிவாகில்
தங்கட்புறமே தீர்ந்ததென்றே தம்மிலறிந்தார்

4. கூப்பிட நல்லேசு பாவப்பலியாய் திரு ஆடு
தெய்வத்தன்மை உதவியற்று தேகம் மனுஷீகம்
கைவிடப்பட்டோர் போல் துன்ப சாகரத்திலாழ்து
பாடுகளைப் பாவிகட்குக் காட்ட சத்தமிட்டார்

5. பாவி யடியார்கள் பல ஆபத்து இக்கட்டில்
அகப்பட்டால் கைவிடப்பட்டார் போலவே தோன்றும்
மனதில் திடனற்றுப் போகாதவரைப் பக்தியோடு
மன்றாடி நிலைநிற்கும் மாதிரியாகவே செய்தார்

## பாடல் - 408

### *பல்லவி*

**ஏலி ஏலி லாமா சபக்தானி**
சால மெஞ்ஞானி சர்வ நித்யானி

### *சரணங்கள்*

1. நேச குமாரன் என்று சொன்னீரே
பாசமில்லையோ பரம செங்கோலா – ஏலி

2. மகனையும் மறக்க மனமும் வந்ததுவோ
ஜெகத் தோர்க்காய் வந்த நற்பலனிதுவோ – ஏலி

3. பாவிகள் படுத்தும் பாடுபோதாதோ
காவலர் நீரும் கைவிடலாமோ – ஏலி

4. பலர் படும் பாட்டை ஒருவர் சுமந்தால்
நிலைக்குமோ தேகம் நிமிஷத்து நேரம் – ஏலி

## பாடல் – 409

### *பல்லவி*

**தாகமானீரோ இயேசு தற்பரா சுவாமி**
தாரணியோர் மேல் கடுந் தாகமானீரோ

### *சரணங்கள்*

1. நித்திய ஜீவநதி நீரே யாயினும்
நீசக் குருசில நாதா தாகமானீரோ – தாக

2. கடற்காளானின் கடும் காடியோ உமக்
கான பானமாம் நல்ல கர்த்தனே தேவா – தாக

3. பாவியடி யார் உம்மில் பாசம் வைத்திட
ஞான தாகத்தால் வெகு நாட்டங் கொண்டீரோ – தாக

4. தேவ வசன ஞான திவ்விய பாலில்
தேட்டமாய் நானும் என்றும் உண்டு பருக – தாக

5. உந்தன் மாமிசம் ரத்தம் போஜன பானம்
எந்தன் ஜீவனுக்கென்றும் ஏற்றதாய்க் கொள்ள – தாக

## பாடல் – 410

### *பல்லவி*

**முடிந்ததென்றீரோ ஐயா**
முன்னால் வினையான தெல்லாம்

### *சரணங்கள்*

1. தேவ பிதா சித்தமதைத் திட்டமாகவே
செய்து நிறைவேற்றி இப்போ சிலுவை மீதேறி நின்று – முடி

2. பூரணரான இயேசு புண்ணியக் கிரியை
பூர்த்தியாய் செய்து இப்போ பூமி விட்டேகு முன்னே – முடி

3. வேண்டிய பாடனைத்தும் வேதனே தீரும்
தாண்டியே உத்தரித்து தாரணி விட்டேகு முன்னே – முடி

4. தேவ கற்பனைகளெல்லாம் திடமாகவே
செய்து முடித்தானபின்பு ஜெயசீலராக இன்று – முடி

## பாடல் – 411

### *கண்ணிகள்*

**சிலுவைதனில் உயிர்ப்பிரிய திருமகனார் முகநோக்கி**
தேவ அன்னையும் கூவி அழுதாள் வெகுவாய் ஆ! ஆ!

2. உலகமதில் இருசோரார் நடுவாக மரமீதில்
உறங்குவதும் சுகமாச்சுதோ – மகனே ஆ! ஆ!

3. ஐயாயிரர் பசியை அமர்த்தி அரவணைத்த
அருட்கை அயர்ந்து சோர்ந்ததுவோ – மகனே ஆ! ஆ!

4. பல பல பேர் அவமாக பகடியோடு பாராட்ட
பாங்குதனில் நித்திரையானீரோ – மகனே ஆ! ஆ!

5. ஆங்குமுன் சொற்படி சோர்வை எல்லாம் திரண்டு
அம்புவியால் வெம்பினேனே – மகனே ஆ! ஆ!

## பாடல் – 412

### *பல்லவி*

**பார் பார் பார் இயேசுவின் ஜீவன் போகுது பார்**

### *சரணங்கள்*

1. கண்விழி வீழ்ந்திட கைகளயர்ந்திட கால்கரம் சாய்ந்துவிழ
விண்ணொளி மங்கி ஆவி பிரிந்து திருமேனி குளிர்ந்திடுதே – பார்

2. பஞ்சகாயங்களில் செஞ்சுனை பாயுதுபாவி நெஞ்சைக் கழுவ
சஞ்சீவி பஞ்சப் பிரளயம் சாவது தற்பரன் பக்கத்திலே – பார்

3. பாவநாசத்திலே புண்ணிய கன்மலை பார் முனி ஓங்கிய கோல்
கோபதாபத்திலே வீசின வீச்சிலே குமிழி விட்டோடுது – பார்

4. கல்வாரி வெப்பிலே கார் இருட்டிலே காணுது செவ்வானம்
நல்வாரி வீசுது செவ்வாரி பெய்யுது நாடு செவ்வானம் – பார்

5. பார்த்தால் கேட்ட மனுப்படிக் காகும் ஓ பாவி சிலுவையைப் – பார்
தீர்த்தார் பாவம் தீர்த்தபடி தகை தீர்த்திடலாம் ஓடிவா – பார்

## பாடல் – 413

### *பல்லவி*

**கல்வாரி மலையோரம் வாரும் பாவம் தீரும்**

### *அனுபல்லவி*

செல்வராயன் கிறிஸ்து தியாகேசன் தொங்கினாரே – ஜோதி

### *சரணங்கள்*

1. லோகத்தின் பாவமெல்லாம் ஏகமாய்த் திரண்டு
நொம்பலப்பட வைக்க ஐயன் மேலுருண்டு
தாகத்தினால் வாடிக்கருகியே சுருண்டு
சடலமெல்லாம் உதிரப் பிரளயம் புரண்டு
சாகின்றாரே நமது நாதா ஜீவ நாதா – ஜோதி – கல்

2. பொன் முடி மன்னனுக்கு முண்முடியாச்சே
உபகாரம் பரிகாரம் சிதையவுமாச்சே
விண்ணிலுலாவும் பாதம் புண்ணாகலாச்சே
மேனியெல்லாம் வீங்கி விதனிக்கலாச்சே
மேசையன் அப்பன் கோபம் மேலே இறங்கலாச்சே – ஜோதி – கல்

3. மலர்ந்த சுந்தரக் கண்கள் மயங்குவது மேனோ
மதுரிக்கும் திருநாவு வறண்டது மேனோ
தளர்ந்திடாத கரங்கள் துவண்டது மேனோ
ஜலத்தில் நடந்த பாதம் சவண்டது மேனோ
சண்டாளர் நம்மால்தானே நம்மால்தானே – ஜோதி – கல்

4. ரட்சகனை மறந்தால் ரட்சண்யமில்லை
நாமக் கிறிஸ்தவர்க்கு இரு பங்கு தொல்லை
பட்சபாதம் ஒன்றும் பரதீசில் இல்லை
பரதீசில் பங்கில்லோருக்குப் பாடென்றும் தொல்லை
பந்தயத்திலே முந்தப்பாரும் முந்தப்பாரும் – ஜோதி – கல்

## பாடல் – 414

**பாடுபட்ட யேசையா பட்டபலன் தாருமையா**
கேடுகெட்ட மானிடர்மேல் கிருபை பரிபாலித்தாய்

2. கள்ளனைக் கண்பார்த்து விண்ணில் சேர்த்த கருணாகரா
சொல்லி முடியாத பாவம் செய்த கள்ளன் நானையா

3. கொன்ற பொல்லாத யூதருக்காய் மன்றாடின மேசையா
நன்றிகெட்ட பாவி எந்தன் ரண்டகங்களை தீரையா

4. மறுதலித்த சீடனுக்கு மாப்புச் செய்த ஆவண்டவா
பொறுதிவைத்தென் பாவமுற்றும் போக்கியருளப்பனே

5. முட்கிரீடம் தாங்கி ஜீவ பொற்கிரீடம் வாங்கினீர்
துட்டனுக்கும் ஒரு சிறிய பொற்கிரீடம் தா ஐயா

## பாடல் – 415

**விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்**
விசுவாசியே பதறாதே
கலங்காதே திகையாதே விசுவாசியே
கல்வாரி நாயகன் கைவிடாரே (2)

1. கொடும் வறுமையின் உழன்றாலும்
கடும் பசியினில் வாடினாலும்
அன்று எலியாவை போஷித்தவர் – இன்று
இன்று உன் பசி ஆற்றிடாரோ – கலங்காதே

2. பெரும் நோய்தனி கலங்கிடாதே
பாசத்தால் உன்னை சோதிப்பாரே
திமிர் வாதத்தால் அசைவற்றவன் – தேவ
தயவினால் நடக்கலையோ – கலங்காதே

3. தந்தை தாய் உன்னை வெறுத்திட்டாலும்
பந்த பாசங்கள் அறுந்திட்டாலும்
நிந்தை தாங்கிட்ட தேவன் உன்னை – சொந்த
கரங்களால் அணைத்துக் கொள்வார் – கலங்காதே

## பாடல் – 416

**போற்றுவோம் துதி சாற்றுவோம் நிதம்**
ஏற்றுவோம் பரன் நாம மதை
பாடுவோம் புகழ் பாடுவோம் தினம்
நாடுவோம் அவர் பாதமதை

1. நம்மைப் படைத்து இந்நாள் வரையும்
நம் குறை தீர்த்து நம்மோடிருந்து
நன்மைகள் தீமைகள் எதுவரினும்
நல்வழி நடத்திய நாயகன் ஏசுவை

2. சோதனை வந்திடும் நேரத்தில்
வேதனை நிந்தனை சூழ்ந்திடினும்
நாதனே என்று நாம் நோக்குகையில்
ஆதரவாய் வந்த ஆண்டவன் ஏசுவை

3. உற்றார் உறவினர் கைவிட்டாலும்
பெற்றவர் பிள்ளையை மறந்திட்டாலும்
சற்றுமே நான் மறவேன் எனவே
பற்றுடன் அணைத்திடும் பார்த்திபன் ஏசுவை

## பாடல் – 417

**நன்றியால் துதிபாடு – நம் இயேசுவை**
நாவாலே என்றும் பாடு
வல்லவர் நல்லவர் போதுமானவர்
வார்த்தையில் உண்மையுள்ளவர் – நன்றி

1. எரிகோ மதிலும் முன்னே வந்தாலும்
இயேசு உந்தன் முன்னே செல்கிறார்
கலங்கிடாதே திகைத்திடாதே
துதியினால் இடிந்து விழும் – நன்றியால்

2. துன்மார்க்கத்திற்கேதுவான வெறி கொள்ளாமல்
தெய்வ பயத்தோடு என்றுமே
ஆவியினால் என்றும் நிறைந்தே
சங்கீத கீர்த்தனம் பாடு – நன்றியால்

3. சரீரம் ஆத்துமா ஆவியினாலும்
சோர்ந்து போகும் வேளையிலெல்லாம்
துதி சத்தத்தால் உள்ளம் நிறைந்தால்
தூயரின் பெலன் கிடைக்கும் – நன்றியால்

## பாடல் – 418

**துதிப்பதே என் தகுதியல்லோ**
துதித்திடுவேன் என் இயேசுவை

1. வேதம் நிறைந்த இதயம் தந்தார்
ஜெபம் நிறைந்த நேரம் தந்தார்
கண்ணீர் நிறைந்த கண்கள் தந்தார்
கருணை நிறைந்த கரங்கள் தந்தார் – துதிப்பதே

2. மனதில் நிறைந்த மகிழ்ச்சி தந்தார்
பார்வை நிறைந்த தூய்மை தந்தார்
சிந்தனை நிறைந்த ஊழியம் தந்தார்
செயல் நிறைந்த திட்டங்கள் தந்தார் – துதிப்பதே

3. சாட்சி நிறைந்த ஜீவியம் தந்தார்
சத்தியம் நிறைந்த சபை தந்தார்
இயேசுவில் நிறைந்த ஞானம் தந்தார்
ஊழியம் நிறைந்த வழி திறந்தார் – துதிப்பதே

## பாடல் – 419

**நம் கர்த்தர் என்றும் நல்லவர்**
அவர் கிருபை என்றுமுள்ளதே (2)
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா (2)

1. நீ நடக்கும் வழிதனிலே நிதம்
உன்னை நடததுகின்றார்
கர்த்தர் உந்தன் ஆத்துமாவினை
தினம் திருப்தியாக்குகின்றார் – நம் கர்த்தர்

2. நீ அவரை கூப்பிடுவாய்
மறு உத்தரவு அருள்வார்
நீ சத்தமிடும்போது இதோ
இருக்கிறேன் என்பாரே – நம் கர்த்தர்

3. வருஷத்தை நன்மையினால்
முடிசூட்டி மகிழ்விக்கின்றார்
அதின் பாதை முழவதிலும்
நெய்யாக பொழியச் செய்தார் – நம் கர்த்தர்

## பாடல் – 420

**அற்புதர் (4) இயேசு அற்புதர்**
அண்டினோர் வாழ்வை இன்பமாய் மாற்றும் இயேசு அற்புதர்

எல்லோரும் பாடுங்கள்
கைத்தாளம் போடுங்கள்
சந்தோஷத்துடன் சங்கீதம் பாடுங்கள் (2)

1. எத்தனை துன்பங்கள் நம்மில் வந்தபோது
தீர்த்த இயேசு அற்புதர்
என்னென்ன தொல்லைகள் நம்மைச் சூழ்ந்த போது
காத்த இயேசு அற்புதர் (2)
உலகத்திலிருப்போரிலும் எங்கள்
இயேசு பெரியவர் அற்புதரே
உண்மையாய் அவரை தேடும் யாவருக்கும்
இயேசு அற்புதர் – எல்லோரும்

2. அலைகடல் மேலே நடந்தவர்
எங்கள் இயேசு அற்புதர்
அகோரக் காற்றையும் அமைதிப்படுத்திய
இயேசு அற்புதர் (2)
அறைந்தனர் சிலுவையிலே
ஆண்டவர் மரித்தார் அந்நாளினிலே (2)
ஆகிலும் மூன்றாம் நாள் உயிருடன்
எழுந்த இயேசு அற்புதரே (2) – எல்லோரும்

## பாடல் – 421

**மன்னன் இயேசு வருகின்றார் நீ மகிழ்ந்து பாடிடு**
மணவாளன் வருகின்றார் நீ ஆயத்தப்படு
அல்லேலூயா ஆனந்தமே
ஆடிப்பாடி நடனமாடி ஆனந்தித்திடு (2)

1. மகிமையானவர் மறுரூபமானவர்
கிச்சிலிப் பழம் அவர் கின்னரத்தோட்டம்
லீலி புஷ்பமே சாரோனின் ரோஜாவே
மென்மையானவர் மகா மேன்மையானவர்

2. பொற்தள வீதி அது பொற்பரன் வீதி
பளிங்கு கற்களும் அங்கு பளிச்சிடுதே
இரத்தினங்களும் இள நீலமும்
படிகப்பச்சை மரகதமும் பாடிப் போற்றுதே

3. வெண் குதிரை மேல் உலாவ வருகின்றார்
வெண் கிரீடமும் தலையில் ஜொலிக்குதே
வெண் சிங்காசனம் புன்சிரிக்குதே
நட்சத்திரங்கள் கை கொட்டிப் பாடுதே

## பாடல் – 422

**நல்லவர் நல்லவர் நல்லவர் நல்லவர் இயேசு நல்லவர்**
நாங்கள் இங்கே பாடும் எங்கள் இயேசு நல்லவர்
உண்மை தெய்வம் இவர் உலகை இரட்சித்தவர்
நன்மை செய்தே இவர் உலகை நாடெங்கும் சுற்றியவர்
நானிலத்தோர்க்கு நன்மைகள் செய்த நல்லவர் – இயேசு

1. அன்பாய் பிறரை நேசிப்பவர்க்கு இயேசு நல்லவர் (1)
ஆதரவில்லா அனாதைகட்கு இயேசு நல்லவர்
திக்கற்றோர்க்கும் விதவைகளுக்கும் இயேசு நல்லவர்
தீய வழிகளிலிருந்து திரும்பியவர்க்கு இயேசு நல்லவர் (2)
– இயேசு நல்லவர் (4)

2. குருடர்களுக்கு பார்வை கொடுத்த இயேசு நல்லவர் (2)
குஷ்டரோகிகளையும் சொஸ்தமாக்கிடும் இயேசு நல்லவர் (2)
முடவர்களையும் நடந்திட செய்த இயேசு நல்லவர் (2)
முட்களின் நடுவே லீலியின் ரோஜா இயேசு நல்லவர் (2)
– இயேசு நல்லவர் (4)

3. பாவத்தை போக்கி பயமதை நீக்கிய இயேசு நல்லவர் (2)
பரலோக சந்தோஷம் பக்தருக்களித்த இயேசு நல்லவர் (2)
பரிமள தைலமாய் வாசனை தந்த என் இயேசு நல்லவர் (2)
பாரினில் இவர்போல் தெய்வமும் இல்லை
என் இயேசு நல்லவர் (2) – இயேசு நல்லவர் (4)

4. இருளில் வாழும் ஜனங்களை மீட்ட இயேசு நல்லவர் (2)
ஈன லோகத்திற்காக சிலுவை சுமந்த இயேசு நல்லவர் (2)
மண்ணுயிர்க் காக்க தன்னுயிர் தந்த இயேசு நல்லவர் (2)
மூன்றாம் நாளில் மரித்துயிர்த்தெழுந்த இயேசு நல்லவர் (2)
– இயேசு நல்லவர் (4)

## பாடல் – 423

**தோத்திரம் கோடா கோடி துங்கவனே உமக்கு**
தோத்திரம் கோடி தோத்திரமே

2. நன்னயமாக நாங்கள் இன்றுமோர் நாளைக் கண்டோம்
உன்னதனே உன் கிருபை

3. எத்தனையோ கிருவை நித்தம் நித்தம் புதிதாய்
உததமமாய்க் கடாட்சித்தீர்

4. பாவத்திற்கேற்றபடி பலனை மேல் சுத்தாமல்
மேவித் தாய் தந்தை போல் காத்தீர்

5. இம்மானுவேலரசே இம்மட்டெம்மைக் காத்தவரே
இனிமேலும் காப்பவர் நீரே

6. பலவீனர் சுகவீனரைப் பட்சமாயக் காருமையா
பெலன் சுகம் ஜீவன் உம்மாலே

7. இன்றைக்குத் தேவையான யாவையும் தாருமையா
இந்நிமிஷமே அனுப்புமே

8. வாழ்க கிறிஸ்து சபை வாழ்க பரிசுத்தாவியும்
வாழ்க பிதா, குமாரனும்

## பாடல் – 424

**துதிப்பேன் துதிப்பேன் தேவனை**
துதிகள் மத்தியில் வசிப்போனை

### *அனுபல்லவி*

அதிசயமானவனை அதிலுமேலானவனை

1. இரண்டு மூன்று பேர்கள் நாமத்தில்
கூடினால் வருவேன் என்றீரே
என்றுரைத்த வாக்கை நிறைவேற்ற
எங்களில் வந்தவா ஆனந்தம் – துதிப்பேன்

2. கடந்த துன்பத்தின் காலங்களில்
அடைந்த ஆறா துயரங்களில்
ஆறுதல் தேறுதல் அளித்திட
மாறாத இயேசுக்கானந்தம் – துதிப்பேன்

3. இன்றைத்தினம் வரைக் காத்தீரே
எல்லோரையும் கூட்டி சேர்த்தீரே
நின் கிருபையால் கடந்து வந்தோம்
அன்பே ஆருயிரே ஆனந்தம் – துதிப்பேன்

4. ஆனந்தமே பரமானந்தமே
அண்ணலை அண்டினோர் கானந்தமே
அல்லேலூயா உமக்கல்லேலூயா
எல்லா நாளும் உமக்கல்லேலூயா – துதிப்பேன்

## பாடல் – 425

**ஸ்தோத்திரம் (5) இயேசு தேவா**
ஸ்தோத்திரம் (5) துதியுமக்கே – தேவா

1. கருவில் கண்டீர் ஸ்தோத்திரம் தேவா
தெரிந்து கொண்டீர் ஸ்தோத்திரம் தேவா
என்னை அழைத்தீர் ஸ்தோத்திரம் தேவா
உந்தனின் சேவை செய்ய – தேவா (2)

2. எனக்காய் வந்தீர் ஸ்தோத்திரம் தேவா
சிலுவையில் மரித்தீர் ஸ்தோத்திரம் தேவா
இரத்தம் சிந்தினீர் ஸ்தோத்திரம் தேவா
என்னை இரட்சிக்கவே – தேவா (2)

3. உயிர்த்தெழுந்தீர் ஸ்தோத்திரம் தேவா
பரலோகம் சென்றீர் ஸ்தோத்திரம் தேவா
வரங்களை அளித்தீர் ஸ்தோத்திரம் தேவா
உமக்கென்று வாழ்ந்திடவே – தேவா (2)

4. எக்காளம் தொனிக்கும் ஸ்தோத்திரம் தேவா
தூதர்கள் சூழ ஸ்தோத்திரம் தேவா
மறுபடியும் வருவீர் ஸ்தோத்திரம் தேவா
பரலோகம் கொண்டு செல்ல என்னை – தேவா (2)

## பாடல் – 426

**துதி கீதங்களால் புகழ்வேன்**
உந்தன் நாம மகத்வங்களை
இயேசுவே இரட்சகா
உந்தன் நாமம் எங்கள் ஆறுதல் – துதி

1. தினத்தோறும் உம் தானங்களால்
நிறைத்திடுமே எங்களை நீர்
திரு உள்ளமது போல் எம்மை மாற்றிடுமே
கனிவோடெங்களை உந்தன் காருண்யத்தால் – துதி

2. அலை மோதும் இவ்வாழ்க்கையிலே
அனுகூலங்கள் மாறும்போது
வழிகாட்டிடுமே துணை செய்திடுமே
கனிவோடடியார்களைக் காருண்யத்தால் – துதி

## பாடல் – 427

**துதிப்போம் அல்லேலூயா பாடி**
மகிழ்வோம் மகிபனைப் போற்றி
மகிமை தேவ மகிமை
தேவ தேவனுக்கே மகிமை (2)

1. தேவன் நன்மை வந்தடையச் செய்தார்
தம்மை என்றும் அதற்காகத் தந்தார்
அற்புதங்கள் செய்யும் சர்வவல்ல தேவன்
அடைக்கலம் கொடுத்திடுவார்

2. அஞ்சிடேனே இருளிலே என்றும்
நடமாடும் கொள்ளை நோயைக் கண்டும்
பயங்கரத்திற்கும் பறக்கும் அம்பிற்கும்
பயந்திடேன் ஜெயித்திடுவேன்

3. தேவன் எந்தன் அடைக்கலமாமே
ஒருபோதும் பொல்லாப்பு வராதே
சர்வ வல்ல தேவன் தாபரமாக நின்றே
விடுவித்துக் காத்திடுவார்

4. கூப்பிடும் வேளைகளிலே என்னை
தப்புவிக்க ஆத்திரமாய் வந்தார்
சிங்கத்தின் மேலே நடந்திடுவேனே
சர்ப்பங்களை மிதித்திடுவேன்

5. பாதம் கல்லில் என்றும் இடறாமல்
கரங்களில் தாங்கிடுவார் தூதர்
ஒருபோதும் வாதை என் கூடாரத்தை
அணுகாமலே காத்திடுவார்

## பாடல் – 428

**தேவ ஜனமே பாடி துதிப்போம்**
தேவ தேவனை போற்றுவோம்
துதிகள் என்றும் ஏற்றியே
அவரைப் பணிந்திடுவோம்

1. சென்ற நாளில் கண்ணின் மணிபோல்
காத்த தேவனை துதித்திடுவோம் (2)
நீதி தயவு கிருபை நல்கும்
ஜீவ தேவனை துதித்திடுவோம் (2) – தேவ

2. வானம் பூமி ஆளும் தேவன்
வாக்கை என்றும் காத்திடுவார்
அவரின் உண்மை என்றும் நிலைக்கும்
மகிமை தேவனை துதித்திடுவோம் – தேவ

3. கர்த்தர் நாமம் ஓங்கிப் படர
தேவ மகிமை விளங்கிடவே
தேவ சுதராய் சேவை செய்து
தேவ ராஜனை வாழ்த்திடுவோம் – தேவ

4. தம்மை நோக்கி வேண்டும்போது
தாங்கி என்றுமே ஆதரிப்பார்
மறந்திடாமல் உறங்கிடாமல்
நினைத்த தேவனை துதித்திடுவோம் – தேவ

5. நமது போரை தாமே முடித்து
ஜெயமே என்றும் அளித்திடுவார்
சேனை அதிபன் நமது தேவன்
அவரை என்றும் போற்றிடுவோம் – தேவ

## பாடல் – 429

**நான் பாடும் கானங்களால்**
என் இயேசுவைப் புகழ்வேன்
எந்தன் ஜீவிய காலம்வரை
அவர் மாறாத சந்தோஷமே – நான்

1. பாவ ரோகங்கள் மாற்றியே
எந்தன் கண்ணீரைத் துடைப்பவரே
உலகம் வெறுத்தென்னைத் தள்ள
பாவியம் என்னை மீட்டெடுத்தீர் – நான்

2. இளமைப் பிராய வீழ்ச்சிகள் இல்லை
யாதொரு பயமுமில்லை
அவர் ஸ்நேக தீபத்தின் வழியில்
தம் கரங்களால் தாங்கிடுவார் – நான்

3. நல்ல போராட்டம் போராடி
எந்தன் ஓட்டத்தை முடித்திடுவேன்
விலையேறிய திருவசனம்
எந்தன் பாதைக்குத் தீபமாகும் – நான்

## பாடல் – 430

*பல்லவி*

**இன்ப இயேசுவின் இணையில்லா நாமத்தைப் புகழ்ந்து**
இகமதில் பாடிட தருணமிதே
இயேசுவைப் போல் நல்ல நேசரில்லை
இன்றும் என்றென்றும் அவர் துதி சாற்றிடுவேன்

1. நித்தியமான பர்வதமே உந்தனில் நிலைத்திருப்பேன்
நீக்கிடாதென்னை தோளின் மேல் சுமந்தே நித்தம் நடத்துகிறீர்
என்னையும் உம் ஜனமாய் நினைத்தே – ஈந்தீர்
உன்னத வெளிப்படுத்தல் நிறைவாய் – இன்ப

2. பாவத்தில் வீழ்ந்து மாயையிலே ஆழ்ந்து நான் மாள்கையிலே
பரிந்து தேவ அன்பினைக் காட்டியே
பட்சமாய் பிரிந்தெடுத்தீர்
பாரில் பரிசுத்தராகுதற்காய் – மிக
பரலோக நன்மைகளால் நிறைந்தீர் – இன்ப

3. மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுமாப்போல்
என் ஆத்துமா உம் பொன் முகம் காணவே
வாஞ்சித்து கதறிடுதே
வானிலும் இந்தப் பூமிலும் நீர் – என்
வாஞ்சைகள் தீர்ப்பவராய் நினைத்தே – இன்ப

4. ஆர்ப்பரிப்போடே ஸ்தோத்திரிப்போம் அன்பரை உளம் கனிந்தே
அளவில்லாத ஜீவனை அளித்தே
அற்புத ஜெயம் ஈந்தீரே
அல்லேலூயா துதி கன மகிமை – உம்
நாமத்திற்கே நிதம் சாற்றிடுவோம் – இன்ப

## பாடல் – 431

**ஆராதிக்க கூடினோம்**
ஆர்ப்பரித்து பாடிடுவோம்
வல்ல இயேசு நல் தேவன்
என்றென்றும் அவர் நம் தேவன்

1. தேவ வாசஸ்தலம் என்றும் இன்பமானதே
மகிமை தேவன் கிறிஸ்து இயேசு பிரசன்னம் இங்கே
மகிமை மகிமையே என் மனம் பாடுதே
மக்கள் மத்தியில் என் மகிழ்ச்சி பொங்குதே – ஆராதிக்க

2. சீயோன் பெலனே வெற்றி சிகரமே
சேனைகளின் கர்த்தர் இயேசு கிரியை செய்கிறார்
ஜீவன் பெலனும் ஆசீர்வாதமே
நித்திய ஜீவன் இன்றும் என்னில் ஓங்கி நிற்குதே – ஆராதிக்க

3. கர்த்தர் சமூகம் என் வாழ்வின் மேன்மையே
கர்த்தர் இயேசு ராஜன் என்றும் உயர்ந்து நிற்கிறார்
அல்லேலூயா என் ஆவி பாடுதே
ஆராதனை அழகு என்னை கவர்ந்து கொண்டதே – ஆராதிக்க

## பாடல் – 432

**இனிக்கும் தமிழினில் இயேசுவைப் பாடுவேன்**
இதயக் கனிவுடன் இசைமலர் தொடுப்பேன்
எளியவன் நானும் இறை புகழுரைப்பேன்
எல்லாப் பண்ணிலும் இயேசுவை இணைப்பேன்

1. மரி உபதேசிகர் மறைஞர் சாமுவேல்
பெரியண்ணன் மற்றும் பால்மருடனே
அரியராம் பரமானந்தர் பாடிய – இனிக்கும்

2. மறைமுதற் கலைஞரும் மீட்புக் கவிஞரும்
குறைவில்லாப் புலவர் சந்தியாகரும்
நிறை மொழி மாசில் மணியரும் பாடிய – இனிக்கும்

3. வேதக் கண்ணரும் வீர முனிவரும்
போதகர் வேத நாயகருடனே
மேதை யோசேப் பண்ணலும் பாடிய – இனிக்கும்

4. ஆபிராம் கலைஞரும் காபிரியேலரும்
தாவீது ஐயர் தைரியம் எழுத்தர்
பாவலர் பலரும் பயின்று பாடிய – இனிக்கும்

## பாடல் – 433

**வானகம் வாழ்ந்திடும் எங்கள் தந்தாய்**
வாழ்க உம் திருநாமம்
வருக உம் அரசு பெருக உம் விருப்பம்
வாழ்க ........................

2. வானகம் போல வையகம் தனிலும்
வாழ்க ..........................
தினமெங்கும் உணவை தயவுடன் தாரும்
வாழ்க ..........................

3. பாவங்கள் யாவும் பொறுத்தெமை ஆளும்
வாழ்க ..........................
பிறர் பிழை நாங்கள் பொறுப்பது போல
வாழ்க ..........................

4. சோதனை நின்றெமை விலக்கியே காரும்
வாழ்க ..........................
தீவினையிருந்தே மீட்டிட வாரும்
வாழ்க ..........................

5. ஆட்சியும் ஆற்றலும் அனைத்துள மாண்பும்
வாழ்க ..........................
இன்றுபோல் என்றும் இறைவனே உமதே
வாழ்க ..........................

6. ஆமென் ஆமென் அநாதியாய் ஆமென்
வாழ்க ..........................
ஆமென் ஆமென் அநாதியாய் ஆமென்
வாழ்க ..........................

## பாடல் – 434

**நன்றியால் பாடிடுவோம்**
நல்லவர் இயேசு நல்கிய எல்லா
நன்மைகளை நினைத்தே

*சரணங்கள்*

1. செங்கடல்தனை நடுவாய்ப் பிரித்த எங்கள் தேவனின் கரமே
தாங்கியதே இந்நாள் வரையும் தயவாய் மாதயவாய் – நன்றி

2. மரணத்தை நீக்கியே ஜீவனை அருளிய – மாபெருங்கிருபை
மாநிலத்தோர்க் கீந்தார் இயேசு சுவிசேஷ ஒளியாய் – நன்றி

3. உயிர்ப்பித்தே உயத்தினார் உன்னதம் வரை உடன் சுதந்தரராயிருக்க
கிருபையாய் ஈவாய் வரும் காலங்கள் விளங்க ஒளி விளங்க – நன்றி

4. அழைக்கப்பட்டோரே உன்னத அழைப்பினை அறிந்தே வந்திடுவீர்
அளவில்லாத்திரு ஆக்கமிதனை அவனியோர்க்களிப்பீர் – நன்றி

5. சீயோனைப் பணிந்துமே கிறிஸ்தேசு இராஜனாய் சீக்கிரம் வருவார்
சிந்தை வைப்போம் சந்திக்கவே இயேசுவின் முகமே – நன்றி

## பாடல் – 435

*பல்லவி*

**உம்மைத் துதிப்பேன் கர்த்தாதி கர்த்தரே**
உம் கிரியைகள் மிக அற்புதமானதே
உம்மைப் பணிவேன் தேவாதி தேவனே
உம் ஆலோசனைகள் அருமையானதே

*சரணங்கள்*

1. என்னை ஆராய்ந்து அறிந்திருக்கிறீர்
என் நினைவையும் தூரத்தில் அறிவீர்
எந்தன் நாவில் சொல் பிறவா முன்னமே
எந்தன் தேவனே அவையாவும் அறிவீர்

2. உமக்கு மறைவாய் இருளும் மூடாதே
இரவும் பகல் போல் வெளிச்சமாகுமே
உமது கரத்தை என்மேல் வைக்கிறீர்
இந்த அறிவுதான் மா விந்தையானதே

3. வானில் சென்றாலும் அங்கேயும் இருக்கிறீர்
விடியற்காலத்துச் செட்டையில் பறந்தாலும்
பாதாளத்திலே படுக்கை போட்டாலும்
உமது கரத்தால் என்னைப் பிடிக்கிறீர்

4. என்னை ஆராய்ந்து அறிந்து கொள்ளுமே
வேதனை வழி என்னின்று அகல
நித்ய வழியிலே என்னை நடத்துமே
எந்தையே எந்தன் உள்ளம் பாடிட

## பாடல் – 436

**இயேசு ராஜா முன்னே செல்கிறார்**
ஓசன்னா கீதம் பாடுவோம்
வேகம் சென்றிடுவோம்
ஓசன்னா ஜெயமே (2)
ஓசன்னா ஜெயம் நமக்கே

1. அல்லேலூயா துதி மகிமை – என்றும்
அல்லேலூயா துதி மகிமை
இயேசு ராஜா எங்கள் ராஜா (2)
என்றென்றும் போற்றிடுவோம்
ஓசன்னா ஜெயமே (2)
ஓசன்னா ஜெயம் நமக்கே

2. துன்பங்கள் சூழ்ந்து வந்தாலும்
தொல்லை கஷ்டங்கள் தேடி வந்தாலும்
பயமுமில்லை கலக்கமில்லை
கர்த்தர் நம்முடனே
ஓசன்னா ஜெயமே (2)
ஓசன்னா ஜெயம் நமக்கே

3. யோர்தானின் வெள்ளம் வந்தாலும்
எரிகோ கோட்டை எதிர் நின்றாலும்
பயமுமில்லை கலக்கமில்லை
மீட்பர் நம்முடனே
ஓசன்னா ஜெயமே (2)
ஓசன்னா ஜெயம் நமக்கே

## பாடல் – 437

**தாவீதைப் போல நடனமாடி**
அப்பாவை ஸ்தோத்தரிப்பேன் (2)

1. என்ன வந்தாலும் எது நடந்தாலும்
அப்பாவை ஸ்தோத்திரிப்பேன் (2)
– இயேசப்பா ஸ்தேதாத்திரம் (4)

2. கைத்தாளத்தோடும் மத்தாளத்தோடும்
அப்பாவை ஸ்தோத்திரிப்பேன் (2) – இயேசப்பா

3. பரிசுத்த இரத்தத்தால் பாவங்கள் கழுவிய
அப்பாவை ஸ்தோத்திரிப்பேன் (2) – இயேசப்பா

4. ஆவியினாலே அபிஷேகம் செய்த
அப்பாவை ஸ்தோத்திரிப்பேன் (2) – இயேசப்பா

## பாடல் – 438

**இயேசுவே வழி சத்தியம் ஜீவன்**
இயேசுவே ஒளி நித்யம் தேவன்

1. புது வாழ்வு எனக்கு தந்தார்
சமாதானம் நிறைவாய் அளித்தார்
பாவங்கள் யாவும் மன்னித்தார்
சாபங்கள் யாவும் தொலைத்தார்

2. கல்வாரி மீதில் எனக்காய்
தம் உதிரம் சிந்தி மரித்தார்
மூன்றாம் நாளில் உயிர்த்தார்
உன்னதத்தில் அமர்ந்தார்

3. நல் மேய்ப்பனாக காத்தார்
எனை தமையனாகக் கொண்டார்
என் நண்பனாக வந்தார்
என் தலைவனாக நின்றார்

4. மேகங்கள் மீதில் ஓர்நாள்
மணவாளனாக வருவார்
என்னை அழைத்துக் கொள்வார்
வானில் கொண்டு செல்வார்

## பாடல் - 439

**இயேசு இன்பமானவர் இயேசு மகிமையானவர்**
பாவ சாப ரோகம் நீக்க வல்லமையானவர் (2)

1. அதிசயமானவர் அற்புதமானவர் (2)
அருமையானவர் அடைக்கலமானவர் (2) - இயேசு

2. உன்னதமானவர் உண்மையானவர் (2)
வெண்மையானவர் அடைக்கலமானவர் (2) - இயேசு

3 நித்தியமானவர் நிரந்தரமானவர் (2)
நீதியானவா நிலைவரமானவர் (2) - இயேசு

## பாடல் - 440

**இயேசுவின் மார்பில் நான் சாய்ந்துமே**
இன்றும் என்றும் எந்தன் ஜீவ பாதையில்
பாரிலே பாடுகள் மறந்து நான்
பாடுவேன் என் நேசரை நான் போற்றியே

***பல்லவி***

வாழ்த்துவேன் போற்றுவேன்
உம்மை மாத்திரம் நோக்கி
பாடுவேன் என் நேசரே நான் போற்றியே

***சரணங்கள்***

1. சோதனை யாலென்னுல்லாம் சோர்ந்திடும்
வேதனையான வேளை வந்திடும்
என் மனப்பாரம் எல்லாம் மாறிடும்
தம் கிருபை என்றும் என்னைத் தாங்கிடும் – வாழ்த்துவேன்

2. சிநேகிதர் எல்லாம் கைவிட்டிடினும்
நேசரே இயேசென்னோடிருப்பதால்
மண்ணில் என் வாழ்வை நான் விட்டேகியே
மன்னவனாம் இயேசுவோடு சேருவேன் – வாழ்த்துவேன்

3. என்றும் என் வேண்டுதல்கள் கேட்பாரே
என்றும் என் கண்ணீரைத் துடைப்பாரே
ஏழை என் கஷ்டம் யாவும் நீங்கியே
இயேசுவோடு சேர்த்து நித்தம் வாழ்வேன் – வாழ்த்துவேன்

## பாடல் – 441

**இயேசுவின் மகிமையைப் பாடுவோம்**
இயேசுவின் மகிமைக்காய் வாழுவோம் (2)
இயேசுவே எங்கள் மேன்மையே
இயேசுவே எங்கள் மகிமையே

1. இயேசுவின் பெயரைச் சொல்லவே
பேய்களும் பறந்தோடுதே
இயேசுவின் நாமம் கூறவே
நோய்களும் குணமாகுதே – இயேசுவின்

2. இயேசுவின் வேதம் படிக்கவே
பேதையும் ஞானியாகிறான்
இயேசுவின் பாதை நடக்கவே
பாவியும் தூய்மை அடைகிறான் – இயேசுவின்

3. இயேசுவின் சிலுவை காணவே
கல்மனம் கரைந்து உருகுதே
இயேசுவின் இரத்தம் சொல்லவே
துன்பமும் நீங்கிப் போகுதே – இயேசுவின்

## பாடல் – 442

**பாரீர் அருணோதயம் போல்**
உதித்து வரும் இவர் யாரோ
முகம் சூரியன் போல் பிரகாசம்
சத்தம் பெரு வெள்ள இரைச்சல் போலே

இயேசுவே ஆத்ம நேசரே
சாரோனின் ரோஜாவும் லீலி புஷ்பமும்
பதினாயிரங்களில் சிறந்தோர் – ஆ

1. காட்டு மரங்களில் கிச்சிலி போல்
எந்தன் நேசர் அதோ நிற்கிறார்
நாமம் ஊற்றுண்ட பரிமளமே
இன்பம் ரசத்திலும் அதி மதுரம் – இயேசுவே

2. அவர் இடது கை என் தலை கீழ்
வலக்கரத்தாலே தாங்குகிறார்
அவர் நேசத்தால் சோகமானேன்
என் மேல் பறந்த கொடி நேசமே – இயேசுவே

3. என் பிரியமே ரூபவதி
என அழைத்திடும் இன்ப சத்தம்
கேட்டு அவர் பின்னே ஓடிடுவேன்
அவர் சமூகத்தில் மகிழ்ந்திடுவேன் – இயேசுவே

4. என் நேசர் என்னுடையவரே
அவர் மார்பினின் சாய்ந்திடுவேன்
மணவாளியே வா என்பாரே
நான் செல்வேன் அந்நேரமே – இயேசுவே

## பாடல் – 443

**ஆர்ப்பரி ஆர்ப்பரி அல்லேலூயா (2)**
அல்லேலூயா அல்லேலூயா ஆர்ப்பரி (2)

1. உன் துயர் துடைத்தோரை ஸ்தோத்திரி (2)
மானிடனாக மாற்றினார் அல்லேலூயா (2) – ஆர்ப்பரி

2. மாறிடா கரத்தால் காப்போரை ஸ்தோத்தரி (2)
கலக்கம் எல்லாம் மாற்றினார் அல்லேலூயா (2) – ஆர்ப்பரி

3. ஜீவன் பெலன் ஈந்தோரை ஸ்தோத்தரி (2)
(தம்) மைந்தனாய் மாற்றினார் அல்லேலூயா (2) – ஆர்ப்பரி

4. நித்திய ஜீவன் ஈந்தோரை ஸ்தோத்தரி (2)
நீதியின் பாதையில் நடத்தினார் அல்லேலூயா (2) – ஆர்ப்பரி

5. நானே வழி என்றோரை ஸ்தோத்தரி (2)
சத்திய ஜீவன் ஈந்தாரே அல்லேலூயா (2) – ஆர்ப்பரி

## பாடல் – 444

**இயேசுவின் கரங்கள் அன்பின் கரங்கள்**
ஆதரிக்கும் கரங்கள்
பாவத்திலிருந்து பாவியை மீட்கும்
பரிசுத்தரின் கரங்கள் அல்லேலூயா (4)

1. கானாவூரில் கனிரசம் தந்ததும்
குருடனின் கண்களை திறந்ததும்
இயேசுவின் கரங்கள் – என் நேசரின் கரங்கள்
அல்லேலூயா (2) – இயேசுவின்

2. பேதுருவை கடலினில் தூக்கியதும்
பாடை தொட்டு வாலிபனை உயிர்ப்பித்ததும்
இயேசுவின் கரங்கள் – என் நேசரின் கரங்கள்
அல்லேலூயா (2) – இயேசுவின்

3. தோமாவின் சந்தேகம் தீர்த்ததும்
தவித்திட்ட எந்தனைத் தேற்றியதும்
இயேசுவின் கரங்கள் – என் நேசரின் கரங்கள்
அல்லேலூயா (2) – இயேசுவின்

4. பார்தலப் பாவங்கள் போக்கிடவே
பாரமாம் சிலுவையை சுமந்திடவே
ஆணி அறைந்திடவே – மிக துடி துடித்த கரங்கள்
அல்லேலூயா (2) – இயேசுவின்

## பாடல் – 445

**துதி கனம் மகிமை எல்லாம்**
நம் இயேசு இராஜாவுக்கே

***சரணங்கள்***

1. தூதர்களே துதியுங்கள்
தூத சேனையே துதியுங்கள்
சூரிய சந்திரரே துதியுங்கள்
பிரகாச நட்சத்திரமே துதியுங்கள் – துதி

2. வானாதி வானங்களே துதியுங்கள்
ஆகாய மண்டலமே துதியுங்கள்
தண்ணீர் ஆழங்களே துதியுங்கள்
பூமியிலுள்ளவைகளே துதியுங்கள் – துதி

3. அக்கினி கல் மழையே துதியுங்கள்
மூடுபனி பெருங்காற்றே துதியுங்கள்
மலைகள் மேடுகளே துதியுங்கள்
பறவை பிராணிகளே துதியுங்கள் – துதி

4. வாலிபர் கன்னியரே துதியுங்கள்
பெரியோர் முதியோரே துதியுங்கள்
பிள்ளைகளே மகிழ்ந்து துதியுங்கள் – நம்
இயேசுவை என்றுமே துதித்திடுவோம் – துதி

## பாடல் – 446

**ஆனந்த துதி ஒலி கேட்கும்**
ஆடல் பாடல் சத்தமும் தொனிக்கும்
ஆகாய விண்மீனாய் அவர் ஜனம் பெருகும்
ஆண்டவர் வாக்கு பலிக்கும்

1. மகிமைப் படுத்துவேனென்றாரே
மகிபனின் பாசம் பெரிதே
மங்காத புகழுடன் வாழ்வோம்
மாட்சி பெற்றுயர்ந்திடுவோம்
குறுகிட மாட்டோம் குன்றிட மாட்டோம்
கரையில்லா தேவனின் வாக்கு – ஆ ஆ

2. ஆதி நிலை எகுவோமே
ஆசீர் திரும்பப் பெறுவோம்
பாழான மண்மேடுகள் யாவும்
பாராளும் வேந்தன் மணியாகும்
சிறை வாழ்வு மறையும் சீர் வாழ்வு மலரும்
சீயோனின் மகிமை திரும்பும் – ஆ ஆ

3. விடுதலை முழங்கிடுவோமே
விக்கினம் யாவும் அகலும்
இடுக்கங்கள் சூழ்ந்திடும் வேளை
இரட்சகன் மீட்பருள்வாரே
நகங்கள் முறிந்திடும் கட்டுகள் அறுத்திடும்
விடுதலை பெருவிழா காண்போம் – ஆ ஆ

4. யாக்கோபு நடுங்கிடுவானோ
யாக்கோபின் தேவன் துணையே
அமரிக்கை வாழ்வை அழைப்போம்
ஆண்டவர் மார்பில் சுகிப்போம்
பதறாத வாழ்வும் சிதறாத மனமும்
பரிசாக தேவனருள்வார் – ஆ ஆ

## பாடல் – 447

**அப்பா நான் உம்மைப் பார்க்கிறேன்**
அன்பே நான் உம்மைத் துதிக்கிறேன்

1. நீரே என் வழி நீரே என் சத்தியம்
நீரே என் ஜீவனன்றோ – அப்பா

2. அப்பாவும் நீரே அம்மாவும் நீரே
நான் உந்தன் பிள்ளையன்றோ – அப்பா

3. நல்ல மேய்ப்பன் நீர் தானே
நான் உந்தன் ஆட்டுக்குட்டி – அப்பா

4. ஜீவ நீருற்று நீர் தானே
உந்தன் மேல் தாகம் கொண்டேன் – அப்பா

## பாடல் – 448

**அன்பைத் தந்த இயேசுவைப் பாடுவேன்**
அருளைத் தந்த இயேசுவைப் பாடுவேன்

1. இரக்கம் தந்த இயேசுவைப் பாடுவேன்
இன்னல் தீர்த்த இயேசுவைப் பாடுவேன்

2. ஒளியைத் தந்த இயேசுவைப் பாடுவேன்
இருளைப் போக்கும் இயேசுவைப் பாடுவேன்

3. கவலைகள் தீர்த்த இயேசுவைப் பாடுவேன்
கண்ணீர் துடைத்த இயேசுவைப் பாடுவேன்

4. சத்தியம் தந்த இயேசுவைப் பாடுவேன்
நித்தியரான இயேசுவைப் பாடுவேன்

5. ஜீவன் தந்த இயேசுவைப் பாடுவேன்
என்றும் மாறா இயேசுவைப் பாடுவேன்

## பாடல் – 449

**நாவில் வந்திருப்பாயே நசரேயா**
நாவில் வந்திருப்பாயே

1. தேவ செங்கோலா திருமனுவேலா
தாவீதரசு பாலா நசரேயா – நாவில்

2. பாவியின் நேசா பரம சந்தோசா
ஆவியை அருளீசா நசரேயா – நாவில்

3. உள்ளங்கள் உருக உன் சபை பெருக
வள்ளலே தயை தருக நசரேயா – நாவில்

4. நின் கவிமானம் நிகழ்ந்த மெஞ்ஞானம்
கல்மனம் உருகும்படி நசரேயா – நாவில்

5. ஆவியால் நிறைந்து அமலனை பாட
ஆசியும் பொழிந்திடுவாய் நசரேயா – நாவில்

## பாடல் – 450

**வா எங்கள் சுவாமி வா இந்த நேரத்தில்**
வந்து நின் சுந்தரக்கையால் தந்திடும் நன்மையெல்லாம்

1. இராப்பகலெங்களைக் காரும் போக்குவரத்திலெல்லாம்
கூப்பிடும் போதெல்லாம் கேட்டுக் கொண்டணைத்தன்பு செய்வாய்

2. உன்னடியாரெங்கள் வம்சம் உம்மை அடைந்திடவே
உச்சித ரட்சண்ய வேலை ஊக்கமாய்ச் செய்திடவே

3. கல்வாரி ராயரின் புண்யம் கன்மிகள் எங்களுக்கே
அல்லேலூயா சொல்லும் நாங்கள் ஐயனின் பொன்னடிக்கே

4. ஏசையனும் மையல்லாமல் எங்களுக்காருமில்லை
நீசரென்றெம்மை விடாதே நின்னடி தஞ்சமையா

5. வந்தனம் வந்தனம் ராஜா சந்ததம் எங்களைக் கார்
வல்லபம் தந்திட கட்டி வானகரின் வழி சேர்

## பாடல் – 451

**இந்த வேளை வரவேணும் என் இயேசு நாதா**
இந்த வேளை வரவேணும்
இந்த வேளை வரவேணும் என் துயரம் தீரவேணும்
சிந்தை காட்சி தரவேணும் சீயோன் மலை இயேசு நாதா – இந்த

1. மெத்தவே துயரமாகினேன் வெயிலைக் கண்ட
மெழுகு போல் உருகி வாடுகிறேன்
கர்த்தனே கடாட்சம் வைத்துக் காட்சி தர வாருமையா
சித்தம் வைத்துக் காத்தருளும் சீயோன் மலை இயேசுநாதா– இந்த

2. பத்துத் தலை கோபுரங்களாம் பொன்னாலே செய்து
பளிங்கு மாமணி மண்டபங்களாம்
அத்தனையும் விட்டிறங்கி ஆதரிக்க வாருமையா
செத்த பாவியை எழுப்பும் சீயோன் மலை இயேசு நாதா – இந்த

3. கூவியழும் பாவிகட்கெல்லாம் உமது வல்ல
ஆவியை அருளும் இரட்சகா
பாவியின் இருதயத்தில் ஆவியின் கனி பழுக்க
தேவ நதி பாயச் செய்யும் சீயோன் மலை இயேசு நாதா – இந்த

## பாடல் - 452

### *பல்லவி*

**பாவி பரமசுதன் தாவி உனைத் தயவாய்**
கூவி அழைக்கிறாரே பாராயோ – ஓ

### *அனுபல்லவி*

பூவின் பாவப் பாரத்தை மேவிச் சுமந்து தீர்த்த
தேவாட்டுக்குட்டி இதோ பாராயோ – ஓ பாவி

### *சரணங்கள்*

1. ஜென்மப் பாவத்தினோடு கன்மப் பாவமுமுன்னை
சின்னப் படுத்துவதைப் பார் பார் பார் – உனின்
நன்மை ஏதுமில்லாத தன்மையதை அறிந்து
நன் மணவாளனேசைச் சேர் சேர் சேர் – ஓ பாவி

2. சிற்றொளி தீபம் சுற்றிப் பரந்து நிற்கும்
சிற்றுயிர் புட்கள் தனைப் போலவே – உனைச்
சுற்றி உவகளிக்கும் சிற்றின்பமான சுகம்
தொற்றிப் பாவி நீ சேராயோ? – ஓ பாவி

3. எத்தனை தான தர்மம் நித்தம் செய் பூசை பலி
அத்தனையாலும் பாவம் தீராதே – பரி
சுத்தன் இயேசுவின் திரு ரத்தம் பாவக் கறையை
சுத்திகரித்திடும் நீ சேராயோ? – ஓ பாவி

4. தந்தை தேவன் தமது சொந்தக் குமாரன் தனைத்
தந்து உலகில் தயை புரிந்தாரே – நீயும்
சொந்த சேயனாகவே உந்தன் விசுவாசத்தால்
சொந்தம் உண்டாகுமென்று பகர்ந்தாரே – ஓ பாவி

5. நீடிய பாவ மன்னிப்போடு மெய்ப் பரிசுத்தம்
நித்திய ஜீவனுமுன் பங்காமே – இன்பம்
நாடி ஜீவ கிரீடம் சூடிப் பராபரனைப்
பாடி மகிழ்வதும் உன் பங்காமே

## பாடல் – 453

**பாவம் என்னைத் தொடர்ந்தாலும் – இயேசு**
தேவா, உம்மை மறவேனே

1. செய் பாவம் நினைத்து நான் அழுகின்றேன் – அதை
செய்யாமல் இருந்திட பலமுமில்லை
மெய்யாக உம் துணை வேண்டுமய்யா – எந்தன்
அய்யா நின் பிள்ளை நானல்லவோ – பாவம்

2. உள்ளத்தில் நல்லலெண்ணம் பல உண்டு – ஆனால்
வெள்ளத்தில் அடிபட்டுச் செல்லுகின்றேன்
உள்ளதை உம்மிடம் சொல்லிவிட்டேன் – எந்தன்
உடலையே உமக்கென தந்துவிட்டேன் – பாவம்

3. மன்னவா உம்மிடம் ஓடி வந்தேன் – பாவ
மன்னிப்பு உண்டென நம்பி வந்தேன்
மன்னிப்பு வழங்கினால் போதாது – என்னை
மாற்றாமல் போய்விடில் வாழ்வேது – பாவம்

## பாடல் – 454

**அனுதினமும் உம்மில் நான் வளர்ந்திடவே**
உம் அனுக்கிரகம் தரவேண்டுமே
என்னால் ஒன்றும் கூடாதையா
எல்லாம் உம்மால் கூடும்

1. என் ஞானம் கல்வி செல்வங்கள் யாவும்
ஒன்றுமில்லை குப்பை என்றெண்ணுகிறேன்
என் நீதி நியாயம் அழுக்கான கந்தை
என்றே உணர்ந்தேன் என் இயேசுவே

2. அழைத்தவரே உன்னில் பிழைத்திடவே
அவனியில் உமக்காய் உழைத்திடவே
அர்ப்பணிக்கின்றேன் என்னை இன்று
ஏற்றுக் கொள்ளும் என் இயேசுவே

## பாடல் – 455

**அன்பில் என்னை பரிசுத்தனாக்க**
உம்மைக் கொண்டு சகலத்தையும்
உருவாக்கியே நீர் முதற்பேறானீரோ
தந்தை நோக்கம் அநாதியன்றோ

***பல்லவி***

என் இயேசுவே நேசித்தீரோ
எம்மாத்திரம் மண்ணான நான்
இன்னும் நன்றியுடன் துதிப்பேன்

2. மரித்தோரில் முதல் எழுந்ததினால்
புது சிருஷ்டியின் தலையானீரே
சபையாம் உம் சரீரம் சீர் பொருந்திடவே
ஈவாய் அளித்தீர் அப்போஸ்தலரை – என்

3. முன்னறிந்தே என்னை அழைத்தீரே
முதற்பேராய் நீர் இருக்க
ஆவியால் அபிஷேகத்தீர் என்னையுமே
உம் சாயலில் நான் வளர — என்

4. வருங்காலங்களில் முதற்பேராய்
நீர் இருக்க நாம் சோதரராய்
உம் கிருபையின் வார்த்தையை வெளிப்படுத்தி
ஆளுவோம் புது சிருஷ்டியிலே — என்

5. நன்றியால் என் உள்ளம் நிறைந்திடுதே
நான் எப்படி பதில் செய்குவேன்
உம்மகா நோக்கம் முற்றுமாய் நிறைவேறிட
என்னை தந்தேன் நடத்திடுமே — என்

## பாடல் – 456

*பல்லவி*

**ஓ இயேசு உமதன்பு எத்தனை பெரியது**
ஆகாயம் பூமி மலை ஆழிகளுக்கெல்லாம் பெரியது

1. அளவில்லா ஆனந்தத்தால் அகம் நிறைந்தது
ஆண்டவர் காரியங்கள் அதிகம் சிறந்தது
அன்றாடம் காலை மாலையிலும் துதிக்க உயர்ந்தது
துதிக்க உயர்ந்தது — ஓ யேசு

2. சங்கட சமங்களில் மங்கியே வாடுகிறேன்
துங்கனே இறங்குமென ஏய்ங்கியே நாடுகிறேன்
பங்கமில்லாமல் பதிலளிப்பேன் என்றதால் பாடுகிறேன்
என்றதால் பாடுகிறேன் — ஓ யேசு

3. இருளாம் பள்ளத்தாக்கில் மருகியே நடந்தாலும்
அருமேந்தன் மேய்ப்பராய் அருகிலிருப்பதாலும்
கருணையா என்னைக் கரம் பிடித்தே
கர்த்தரே காப்பதாலும் கர்த்தரே காப்பதாலும் — ஓ யேசு

4. குறைவுள்ளோனானாலும் கூடவே இருக்கிறீர்
நிறைவாம் புல் தரைகளில் மெதுவாகவே நடத்துகிறீர்
இறைவனாம் யேசு எல்லாவற்றிலும்
திருப்தியாக்குகிறீர், திருப்தியாக்குகிறீர் – ஓ யேசு

5. தேவனுடைய வீட்டில் சித்தப்படி துதிப்பேன்
ஏக இருதயத்துடனே என்றுமதை மதிப்பேன்
ஆராதிக்க அருகராம் யேசு அல்லேலூயா ஆமென்
அல்லேலூயா ஆமென் – ஓ யேசு

## பாடல் – 457

**நான் நேசிக்கும் தேவன் இயேசு இன்றும் ஜீவிக்கிறார்**
அவர் நேற்றும் இன்றும் நாளை என்றும் மாறாதவர் (2)
நான் பாடி மகிழ்ந்திடுவேன் என் இயேசுவைத் துதித்திடுவேன்
என் ஜீவிய காலமெல்லாம் அவர் பாதத்தில் அமர்ந்திருப்பேன்

1. கடலாம் துன்பத்தில் தவிக்கும் வேளையில்
படகாய் அவர் வருவார்
இருள்தனிலே பகலவனாய்
இயேசுவே ஒளி தருவார் – நான் பாடி

2. பாவ நோயாலே வாடும் நேரத்தில்
மருத்துவர் ஆகிடுவார்
மயங்கி விழும் பசிதனிலே
மன்னாவைத் தந்திடுவார் – நான் பாடி

3. தூற்றும் மாந்தரின் நடுவில் எந்தனைத்
தேற்றிட வந்திடுவார்
கால் தளரும் வேளையிலே
ஊன்று கோலாகிடுவார் – நான் பாடி

4. நேசர் என்னோடு துணையாய் ஜீவிக்க
நான் இனிக் கலங்கிடேனே
எந்தனுக்குக் காவலர்
நான் உடல் அவர் உயிரே – நான் பாடி

## பாடல் – 458

**இயேசு கூட வருவார்**
எல்லாவித அற்புதம் செய்வார் (2)
அல்லேலூயா ஆமென் – 2

***சரணங்கள்***

1. நோய்கள் பேய்கள் ஓட்டிடுவார்
நொந்துபோன உள்ளத்தை நேற்றிடுவார் (2) – இயேசு

2. வேதனை துன்பம் நீக்கிடுவார்
சமாதானம் சந்தோஷம் எனக்குத் தருவார் (2) – இயேசு

3. கடன் தொல்லை கஷ்டங்கள் நீக்கிடுவார்
கண்ணீர்கள் அனைத்தையும் துடைத்திடுவார் (2) – இயேசு

4. எடுத்த காரியத்தில் வெற்றி பெறுவேன்
எதிரியான சாத்தானை முறியடிப்பேன் (2) – இயேசு

## பாடல் – 459

**ஆனந்தம் ஆனந்தம் இயேசுவோடு**
வாழ்வதென்றால் ஆனந்தம் ஆனந்தம்

***சரணங்கள்***

1. பாவ உலகம் ஒழிந்ததே ஆனந்தம்
பரம சுகம் நமக்குண்டே ஆனந்தம்

2. பொன்னகரின் பாடலாமே ஆனந்தம்
தென்னகத்தின் தடைகள் இல்லை ஆனந்தம்

3. காவல்துறை அங்கு இல்லை ஆனந்தம்
கைதி என்ற பெயரும் இல்லை ஆனந்தம்

4. தூக்குமேடை அங்கு இல்லை ஆனந்தம்
தொங்கு கயிறு அங்கு இல்லை ஆனந்தம்

5. பேய் உலகம் ஒழிந்ததே ஆனந்தம்
புது உலகம் போவோமே ஆனந்தம்

## பாடல் – 460

**வழி நடத்தும் வல்ல தேவன் வாழ்விலே நாயகனே**
வாழ்வில் நாயகனே நம் தாழ்வில் நாயகனே

1. பரதேசப் பிரயாணிகளே நாம் வாழும் பாரினிலே
பரமானந்தத்தோடே செல்வோம்
பரமன் நாட்டினிற்கே – இயேசு
பரன் தம் வீட்டினிற்கே

2. போகும் வழியை காட்டி நல்ல போதனை செய்வார்
ஏகும் சுத்தர் மீது கண்கள்
இருத்தி நடத்துவார் – இயேசு
திருத்தி நடத்துவார்

3. அந்தகார சக்திகள் எம்மை அணுகிடாமலே
சொந்தமான தம் ஜனத்தை
சூழ்ந்து காப்பாரே – இயேசு
துணையாய் நிற்பாரே

4. வாதை நோய்கள் வன்துன்பங்கள் வருத்திய போதும்
பாதையில் நாம் சோர்ந்திடாமல்
பலப்படுத்திடுவார் – இயேசு
திடப்படுத்திடுவார்

5. காடானாலும் மேடானாலும் கடந்து சென்றிடுவோம்
பாடானாலும் பாடி செல்வோம்
பரவசமுடனே – இயேசு
பரன் தான் நம்முடனே

## பாடல் – 461

**அற்புதமான சிருஷ்டிகரே**
ஆச்சரியமான இயேசு நீரே
மழையானாலும்
வெயிலானாலும்
இருளானாலும் காத்திடுவாரே (2)

***சரணங்கள்***

1. கடும் வெயில் வீசும் பெருமழை சொரியும்
கறவலாடுகளை மெதுவாய் நடத்தி சென்றிடுவார் (2)

2. கண்ணீர் நீக்கிடுவார் கவலை போக்கிடுவார்
ஜீவ தண்ணீரினால் நம் தாகம் தீர்த்திடுவார் (2)

3. பாவங்கள் போக்கிடுவார் பரிசுத்தம் தந்திடுவார்
பரிசுத்தவான்களோடே நம்மை நிச்சயம் சேர்த்திடுவார் (2)

## பாடல் – 462

**கானான் பயணமோ தூரம் எகிப்தை**
கடந்து நாம் சென்றிடுவோம்
கர்த்தர் இயேசு உடன் வருவாரே – கானானில்
களிப்புடன் சேர்ந்திடுவோம் – கானான்

2. பார்வோனின் சேனை பின் தொடர்ந்தாலும்
செங்கடல் எதிரே தெரிந்தாலும்
செங்கடலைப் பிளந்து இஸ்ரவேலை நடத்தும்
சேனைகளின் கர்த்தர் உடன் வருவார் – ஒரு
சேதமின்றி நம்மை நடத்திடுவார் – கானான்

3. வனாந்திர வழியே நடத்திடுவார்
வாதைகள் ஏதுமின்றி காத்திடுவார்
வானத்தின் மன்னாவால் போஷித்து காக்கும்
வல்ல நம் கர்த்தர் உடன் வருவார் – தினம்
வழுவாமல் நம்மை நடத்திடுவார் – கானான்

4. மாராவின் தண்ணீரைக் கடந்திடுவார்
ஏலீம்மின் நீரூற்றைக் கண்டிடுவோம்
மாராவின் தண்ணீரை மதுரமாய் மாற்றும்
மகிமையுள்ள கர்த்தர் உடன் வருவார் – அந்த
மகிழ்ச்சியினால் நாம் கடந்திடுவோம் – கானான்

## பாடல் – 463

**எலியாவின் தேவன் நம் தேவன்**
வல்லமையின் தேவன் நம் தேவன்
தாசர்களின் ஜெபம் கேட்பார்
வல்ல பெரும் காரியம் செய்திடுவார்

கர்த்தரே தேவன் (2)
என்றே ஆர்ப்பரிப்போம் (2)

1. வேண்டிடும் பக்தர்களின் ஜெபம் கேட்டே
பனிமழை நிறுத்தினார் வல்ல தேவன்
பஞ்ச காலத்தில் விதவை வீட்டில்
பாத்திரங்களை அவர் ஆசீர்வதித்தார் – கர்த்தரே

2. சத்துருக்கள் முன்னிலையில் தேவ மனிதன்
வீரமுடன் முழங்கினான் தேவ மனிதன்
அக்கினியால் பதிலளிக்கும்
தேவனே தேவன் என்றார் தேவ மனிதன் – கர்த்தரே

3. தேவ ஜனம் கூட்டிச் சேர்த்தே தேவ மனிதன்
பலிபீடம் செப்பனிட்டு பலியுமீந்தார்
கேட்டருளும் கேட்டருளும்
என்றே கதறினார் தேவ மனிதன் – கர்த்தரே

4. வானங்களை திறந்தே வல்ல தேவன்
அக்கினியால் பதில் தந்தார் ஜீவ தேவன்
கர்த்தரே தேவன் (2)
என்றே பணிந்தனர் தேவ ஜனங்கள் – கர்த்தரே

## பாடல் – 464

**நான் உன்னை விட்டு விலகுவதில்லை**
நான் உன்னை என்றும் கைவிடுவதில்லை
நான் உன்னை காண்கிற தேவன்
கண்மணி போல் உன்னைக் காப்பேன்

1. பயப்படாதே நீ மனமே – நான்
காத்திடுவேன் உன்னை தினமே
அற்புதங்கள் நான் செய்திடுவேன் – உன்னை
அதிசயமாய் நான் நடத்திடுவேன் – நான்

2. திகையாதே கலங்காதே மனமே – நான்
உன்னுடன் இருக்க பயம் ஏன்?
கண்ணீர் யாவையும் துடைத்திடுவேன் – உன்
கவலைகள் யாவையும் போக்கிடுவேன் – நான்

3. அனுதினம் என்னை தேடிடுவாய் – நான்
அளித்திடும் பலனை பெற்றிடுவாய்
அத்திமரம் போல் செழித்திடுவாய் – நான்
ஆசையாய் உண்ண கனி கொடுப்பாய் – நான்

3. நீதியின் வலக்கரத்தாலே – உன்னை
தாங்குவேன் நான் அன்பினாலே
ஆவியில் உண்மையாய் ஜெபித்திடுவாய்
அல்லேலுயா என்றார்ப்பரிப்பாய் – நான்

## பாடல் – 465

**இன்று கண்ட எகிப்தியனை**
என்றுமே இனி காண்பதில்லை (2)
இஸ்ரவேலைக் காக்கும் தேவன்
உறங்கவில்லை தூங்கவில்லை

1. கசந்த மாரா மதுரமாகும்
வசந்தமாய் உன் வாழ்க்கை மாறும் (2)
கண்ணீரோடு நீ விதைத்தால்
கெம்பீரமாய் அறுத்திடுவாய் (2)

2. தண்ணீரை நீ கடக்கும்போது
கண்ணீரை அவர் துடைத்திடுவார் (2)
வெள்ளம் போல சத்துரு வந்தால்
ஆவியில் கொடியேற்றிடுவார் (2)

3. வாதை உந்தன் கூடாரத்தை
அணுகிடாமல் காத்திடுவார் (2)
பாதையிலே காக்கும் படிக்கு
தூதர்களை அனுப்பிடுவார் (2)

4. சோர்ந்து போன உனக்கு அவர்
சத்துவத்தை அளித்திடுவார் (2)
கோரமான புயல் வந்தாலும்
போதகத்தால் தேற்றிடுவார் (2)

## பாடல் – 466

**கூடாதது ஒன்றுமில்லையே (4)**
நம் தேவனால் கூடாதது
கூடாதது ஒன்றுமில்லையே

***சரணங்கள்***

1. ஒரே ஒரு வார்த்தை சொன்னாரே
வேலைக்காரன் சொஸ்தமானானே (2)
சுத்தமாகு என்று சொன்னாரே
குஷ்டரோகி சொஸ்தமானானே (2)

2. கடலின் மேல் நடந்தாரே
கடும் புயல் அதட்டினாரே
பாடையை தொட்டாரே
வாலிபன் பிழைத்தானே

3. நீ விசுவாசித்தாலே
தேவ மகிமை காண்பாயே
பெலப்படுத்தும் கிறிஸ்துவாலே
பெரிய காரியம் செய்வாயே

4. பாவங்கள் போக்குவாரே
சாபங்கள் நீக்குவாரே
தீராத நோய்களையும்
தீர்ப்பார் கிறிஸ்து இயேசுவே

## பாடல் – 467

**என்னை உண்டாக்கிய என் தேவாதி தேவன்**
அவர் தூங்குவதுமில்லை, உறங்குவதுமில்லை (2)

1. என் மேல் அவர் கண்ணை வைத்து ஆலோசனை சொல்லுவார்
சத்தியத்தின் பாதையிலே நித்தமும் நடத்துவார்
பரிசுத்த ஆவியால் உள்ளத்தை நிரப்புவார்
பரிசுத்தர் பரிசுத்தர் அவர் பெயரே – என்னை

2. பெலவீன நாட்களிலே பெலன் தந்து தாங்குவார்
பலவித சோதனையில் ஜெயம் நமக்களிப்பார்
ஆபத்துக் காலத்தில் அரணான கோட்டையும்
கேடகமும், துருகமும் பெலன் அவரே – என்னை

3. ஆவியான தேவனுக்கு ரூபமொன்றுமில்லையே
ரூபமொன்றுமில்லையதால் சொரூபமொன்றுமில்லையே
வாஞ்சையுள்ள ஆத்துமாவின் இருதயந்தன்னிலே
வார்த்தையாலே பேசுகின்ற ஆண்டவர் இவர் – என்னை

## பாடல் – 468

**கலங்காதே கலங்காதே**
கர்த்தர் உன்னைக் கைவிடமாட்டர் – கலங்காதே

1. முள்முடி உனக்காக இரத்தமெல்லாம் உனக்காக
பாவங்களை அறிக்கையிடு பரிசுத்தமாகிவிடு (2) – கலங்காதே

2. கல்வாரி மலைமேலே காயப்பட்ட இயேசுவைப்பார்
கரம் விரித்து அழைக்கின்றார் கண்ணீரோடு ஓடி வா (2) – கலங்காதே

3. காலமெல்லாம் உடனிருந்து கரம்பிடித்து நடத்திச் செல்வார்
கண்ணீரெல்லாம் துடைப்பார் கண்மணிபோல் காத்திடுவார்
– உன்னை (2)–கலங்காதே

4. உலகத்தின் வெளிச்சம் நீ எழுந்து ஒளி வீசு
மலைமேல் உள்ள பட்டணம் நீ மறைவாக இருக்காதே –கலங்காதே

## பாடல் – 469

**நல்ல சமாரியன் இயேசு**
என்னைத் தேடி வந்தாரே (2)

1. என்னைக் கண்டாரே
அணைத்துக் கொண்டாரே (2) – நல்ல

2. அருகில் வந்தாரே
மனது உருகினாரே (2) – நல்ல

3. இரசத்தை வார்த்தாரே
இரட்சிப்பைத் தந்தாரே (2) – நல்ல

4. எண்ணெய் வார்த்தாரே
அபிஷேகம் செய்தாரே (2) – நல்ல

5. காயம் கட்டினாரே
தோள்மேல் சுமந்தாரே (2) – நல்ல

## பாடல் – 470

**கர்த்தர் என்னை விசாரிப்பவர்**
கர்த்தர் என்னை ஆதரிப்பவர்
கர்த்தர் என்னை உயர்த்துபவர்
கர்த்தர் என்னைத் தப்புவிப்பவர்

1. பெயரைச் சொல்லிக் கூப்பிட்டு என்னை
அவர் நித்தம் நடத்திச் செல்வதால்
எந்தன் கவலை பாரத்தை முற்றும்
அவர் மீது வைத்திடுவேன் நான்

2. எந்தன் தலையிலுள்ள மயிரெல்லாம்
உன்னதரே எண்ணி வைத்துள்ளார்
அவரின் உத்தரவில்லா தொன்றும்
கீழே விழாது என்று அறிவேன் நான்

3. தேவன் எந்தன் பட்சத்தில் இருக்க
மனிதன் எனக்கு என்னதான் செய்வான்
எந்தன் கண்ணீரைத் தம் துருத்தியில்
அவரின் கணக்கில் வைத்துள்ளாரல்லோ

4. வலது கரத்தைப் பிடித்து என்னையும்
உனது துணை நான் என்று சொல்லி
வழக்காடுவோர் அனைவரையுமே
வெட்கப்பட்டு போக செய்வாரே

5. தேவன் தமது ஐசுவரியத்தினால்
எந்தன் குறைகளை எல்லாமே
கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையில்
நிறைவாக்குவாரே கவலை ஏன்

## பாடல் – 471

**யார் என்னைக் கைவிட்டாலும்**
இயேசு கைவிடமாட்டார்

1. தாயும் அவரே தந்தையும் அவரே
தாலாட்டுவார் சீராட்டுவார் – யார்

2. வேதனை துன்பம் நெருக்கும் போதெல்லாம்
வேண்டிடுவேனே காத்திடுவாரே – யார்

3. எனக்காகவே மனிதனானார்
எனக்காகவே பாடுபட்டார் – யார்

4. இரத்தத்தாலே கழுவி விட்டாரே
இரட்சிப்பின் சந்தோஷம் எனக்குத் தந்தாரே – யார்

5. எனக்காகவே காயப்பட்டார்
என் நோய்கள் சுமந்துக் கொண்டார் – யார்

6. ஆவியினாலே அபிஷேகம் செய்து
அன்பு வசனத்தால நடத்துகின்றாரே – யார்

## பாடல் – 472

**இம்மட்டும் கைவிடா தேவன்**
இனியும் கைவிடமாட்டார்
தாயின் வயிற்றில் தாங்கினார்
ஆயுள் முழுதும் தாங்குவார்
தாங்குவார் தப்புவிப்பார்
ஏந்துவார் என் தெய்வம்

1. ஆயன் இயேசு ஆடு நான்
ஆதலால் பயமில்லை
சாத்தான் பறிக்க முடியாது
சபிக்கின்றேன் இயேசு நாமத்தில் – தாங்குவார்

2. இயேசு கிறிஸ்து வசனத்தால்
எல்லா நாளும் சந்தோஷம்
வியாதி வறுமை வேதனை
எது தான் பிரிக்க முடியுமோ – தாங்குவார்

3. கர்த்தர் எனக்காய் யுத்தம் செய்வார்
கலக்கம் எனக்கு இனியில்லை
துதித்து துதித்து நாளெல்லாம்
துரத்திடுவேன் சத்துருவை – தாங்குவார்

## பாடல் – 473

**எந்தன் இயேசு கைவிடமாட்டார்**
என்னை மறந்திட மாட்டார்
அல்லேலுயா (2) ஆர்ப்பரிப்போமே
அல்லேலூயா (2) அகமகிழ்வோமே

1. நிந்தனை போராட்டத்தில்
நேசர் என்னைத் தாங்கினார்
சோதனை வந்த போதெல்லாம்
தப்பிச் செல்ல வழி காட்டினார் – அல்லேலூயா

2. கடந்ததை மறக்கின்றேன்
கண் முன்னால் என் இயேசுதான்
காத்திருந்து பெலன் அடைந்து
கழுகைப் போல் எழும்பிடுவேன் – அல்லேலூயா

3. ஆயிரம் துன்பம் வந்தாலும்
அச்சம் எனக்கில்லையே
அரணும் கோட்டையும் அவர்
அத்தனையும் தகர்த்திடுவாரே – அல்லேலூயா

4. சீக்கிரம் வரப் போகின்ற
நேசருக்காய் காத்திருப்பேன்
எரியும் விளக்கேந்துவேன்
இயேசுவின் பின் நடப்பேன் – அல்லேலூயா

## பாடல் - 474

**என்னைத் தேடி இயேசு வந்தார்**
எந்தன் வாழ்வை மாற்றி விட்டார் (2)
அல்லேலூயா நான் பாடுவேன்
ஆடிப்பாடித் துதித்திடுவேன் – என்னை

1. தேர்ந்து கொண்டார் என்னைத்
தெரிந்து கொண்டார்
பரிசுத்தனும் புனிதனுமாய்
அவர் திருமுன் வாழ – என்னை

2. மகனானேன் நான்
மகளானேன்
அப்பா பிதாவே என்றழைக்கும்
உரிமையை எனக்குத் தந்தார் – என்னை

3. ஆவி தந்தார் – துய
ஆவி தந்தார்
வல்லமையும் அன்பும் ஞானமும் கொண்ட
பரிசுத்த ஆவி தந்தார் – என்னை

4. சுகமானேன் நான்
சுகமானேன்
இயேசு கிறிஸ்துவின் காயங்களால்
சுகமானேன் சுகமானேன் – என்னை

## பாடல் - 475

**உம்மோடு இருக்கனுமே – இயேசு**
உம்மைப்போல் மாறணுமே
உலகின் ஒளியாய் மலைமேல் அமர்ந்து
வெளிச்சம் கொடுக்கனுமே – நான்

*சரணங்கள்*

1. ஓடும் நதியின் ஓரம் வளரும்
மரமாய் மாறணுமே
எல்லா நாளும் இலைகளோடு
கனிகள் கொடுக்கணுமே – நான்

2. உலகப் பெருமை இன்பமெல்லாம்
குப்பையாய் மாறணுமே
உம்மையே என் கண்முன் வைத்து
ஓடி ஜெயிக்கணுமே – நான்

3. வார்த்தை என்னும் வாளையேந்தி
யுத்தம் செய்யணுமே
விசுவாசம் என்னும் கேடகத்தால்
பிசாசை வெல்லணுமே – நான்

3. ஆத்ம பார உருக்கத்தோடு
அழுது புலம்பணுமே
இரவும் பகலும் விழித்து ஜெபிக்கும்
மேய்ப்பனாகணுமே – நான்

## பாடல் – 476

**எனக்காக யாவற்றையும் செய்பவரே**
எனக்கினி பயமில்லை உலகினிலே
எனக்காக யாவற்றையும் செய்வதினால் – நான்
இரட்சிப்பின் பாத்திரம் ஏந்தி தொழுதிடுவேன்

1. ஆகாயத்துப் பறவையை கவனித்துப் பார்
அவை விதைப்பதில்லை அவைகள் அறுப்பதில்லை
அவைகளைப் பிழைப் பூட்டும் பரம பிதா – அவர்
நம்மையும் நடத்துவது உண்மையல்லவா

2. நாளைய தினத்திற்காகக் கவலை வேண்டாம்
நாதன் இயேசு இருக்கிறார் அஞ்ச வேண்டாம்
நாளைய தினத்திற்காகக் கவலைப்படும் – அந்த
நாளுக்கு அதனதன் பாடு போதும்

3. பஞ்சத்திலே எலியாவுக்கு அப்பம் கொடுத்தார்
பஞ்சமின்றி எலியாவை ஆசீர்வதித்தார்
பஞ்சம் நீங்கி வரும் வரை அந்த வீட்டில் – என்றும்
பானையிலே எண்ணை மாவும் குறையவில்லை

## பாடல் – 477

**எப்படி பாடுவேன் நான் – என்**
இயேசு எனக்குச் செய்ததை
ஆயுள் முழுவதும் என் கர்த்தருக்காய்
ஆத்தும ஆதாயம் செய்வேன் (2)

1. ஒரு வழி அடையும் போது
புது வழி திறந்த தேவா
திறந்த வாசலை என் வாழ்க்கையில்
அடைக்காத ஆண்டவரல்லோ – 2

2. எப்பக்கம் நெருக்கப்பட்டும்
ஒடுங்கி நான் போவதில்லை
அப்பனின் மார்பினில் சாய்ந்தென்றுமே
எப்போதும் பாடிடுவேன் – 2

3. கடந்து வந்த பாதையில்
கண்மணி போல் காத்திட்டீர்
கடுகளவும் குறை வைக்காமலே
அதிகமாய் ஆசிர்வதித்தீர் – 2

## பாடல் – 478

**என் மேய்ப்பராய் இயேசு இருக்கின்றபோது**
என் வாழ்விலே குறைகள் என்பது ஏன்?

1. என்னை அவர் பசும்புல் பூமியிலே
எந்நேரமும் நடத்திடும் போதினிலே
என்றும் இன்பம் ஆஹா என்றும் இன்பம்
ஆஹா என்றென்றும் இன்பமல்லவா – என்

2. தம் பாதையில் என்னை நடத்திடவே
என் கரத்தை பிடித்தே முன் நடப்பார்
அஞ்சிடனே நான் அஞ்சிடனே
நான் ஒன்றுக்கும் அஞ்சிடனே – என்

3. என்னோடவர் நடந்திடும் போதினிலே
எங்கே இருள் சூழ்ந்திடும் பாதையிலே
எங்கும் ஒளி ஆஹா எங்கும் ஒளி
ஆஹா எங்கெங்கும் ஒளியல்லவா – என்

4. என்னை அவர் அன்பால் நிரப்பியதால்
எல்லோருக்கும் நண்பராய் ஆகியதால்
என்னுள்ளமே ஆஹா என் தேவனே ஆஹா
எந்நாளும் புகழ்ந்திடுவேன். – என்

5. என் வாழ்க்கையை தூய்மையாய் காத்துக்கொள்ள
என்னை என்றும் போதித்து நடத்துகின்றார்
என் கிரீடத்தை நான் பெற்றுக்கொள்ள
என் ஓட்டத்தை தொடர்ந்திடுவேன் – என்

6. விண்மீதினில் வேகம் தம் வருகைக்காய்
என்னையவர் ஆயத்தமாக்கினார்
என்னானந்தம் ஆஹா என்னானந்தம்
எனக்கென்றும் பேரானந்தமே – என்

## பாடல் – 479

**தேவன் வருவார் தேவன் வருவார்**
இன்னல் நீக்குவார் இன்பம் நல்குவார்

1. தேடுகின்ற உள்ளத்திலே தேவன் வருவார்
தீராக தொல்லைகளை தீர்த்து முடிப்பார்
துணையாக வந்து நம் துன்பங்கள் நீக்குவார்
தினம் தேடும் உள்ளத்தில் அரசாளுவார் – தேவன்

2. தேவன் வந்த உள்ளத்திலே பாவம் இல்லையே
தேவன் வந்த உள்ளத்திலே கவலை இல்லையே
கண்ணீரும் மாறிடும் புது வாழ்வு தோன்றிடும்
விண் தூதர் போலவே பண்பாடலாம் – தேவன்

3. ஜீவன் தந்த இயேசுவை நீ ஏற்றுக் கொள்வாயோ
ஜீவன் மாற்றமதை நாடி வாராயோ?
கல்வாரி நாயகன் கதவோரம் நிற்கிறார்
கல்லுள்ளம் திறந்திட ஆயத்தமா – தேவன்

## பாடல் – 480

**கிருபை எம்மை சூழ்ந்து கொள்ளும் – தம் கிருபை**
கர்த்தரில் மகிழ்வோம் களி கூர்ந்திடுவோம்
கண்டடைந்தோம் கிருபை

1. யோர்தானைக் கடந்து வந்தோம் – எங்கள்
இயேசுவின் பெலன் அடைந்தோம்
சேனையின் கர்த்தர் முன்னே நடந்தார்
சோர்வின்றிக் காத்துக் கொண்டார் – கிருபை

2. தேசமே பயப்படாதே – எங்கள்
தேவன் கிரியை செய்கின்றார்
தேசத்தின் நன்மை க்ஷேமம் அருள்வார்
தாசகர்கள் வேண்டிடுவோம் – கிருபை

3. கர்த்தர் இவ்வாண்டினிலே – பெரும்
காரியம் செய்திடுவார்
கால் வைக்கும் தேசம் இயேசு தருவார்
காத்திருந்தே அடைவோம் – கிருபை

4. ஆண்டுகள் நன்மையினால் – முடி
சூண்டு வளம் பெருக
தேசத்தின் மீதே கண்களை வைத்தே
பாசமாய் நோக்கிடுவார் – கிருபை

5. ஜாதி ஜனங்களையும் – வந்து
மோதி அசைந்திடுவார்
காத்து தவிக்கும் உள்ளம் மகிழும்
கர்த்தரே வந்திடுவார் – கிருபை

6. உண்மையும் நேர்மையுமாய் – இந்த
ஊழியம் செய்திடுவோம்
தூய கற்புள்ள தேவ சபையாய்
தீவிரம் சேர்ந்திடுவோம் – கிருபை

## பாடல் – 481

**கைவிடார் இயேசு கைவிடார் – நம்மை**
ஒருபோதும் அவர் கைவிடார்
கைவிடார் இயேசு கைவிடார் (2)

1. சாத்தானின் சேனைகள் வந்தாலும்
சதி நாச மோசங்கள் பெருகினாலும்
சேனைகளின் கர்த்தர் இயேசு
நமக்காக யுத்தங்கள் செய்வார் – கைவிடார்

2. சாவின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும்
சத்துருவின் சேனைகள் தினம் பெருகினாலும்
இவ்வுலகத்தை ஜெயித்த நம் இயேசு
நமக்காக யுத்தங்கள் செய்வார் – கைவிடார்

3. மக்கள் யாவரும் நம்மை பகைத்திட்டாலும்
எந்தக் காரணமின்றி எள்ளி நகைத்திட்டாலும்
ஜெய கர்த்தராம் நம் இயேசு
ஜெயம் காண கிருபை செய்வார் – கைவிடார்

## பாடல் – 482

**சேனைகளின் தேவன்**
நம்மோடு இருக்கின்றார்
நல்லவர் அவர் வல்லவர்
அடைக்கலமானவர்

1. எரிகோ போன்ற சோதனைகள்
எதிரிட்டு வந்தாலும்
தகர்த்திடுவார் நொறுக்கிடுவார்
ஜெயத்தை தந்திடுவார்

2. சேனையின் கர்த்தரை நம்பிடுவோம்
பாக்கியம் அடைந்திடுவோம்
உயர்த்திடுவார் தாங்கிடுவார்
நன்மையால் நிரப்பிடுவார்

3. தேவ வார்த்தைகள் ஜீவனாமே
என்றென்றும் அறிக்கை செய்வோம்
ஜெயம் தருவார் ஜெயித்திடுவோம்
ஜெயம் பெற்று வாழ்ந்திடுவோம்

## பாடல் – 483

**இனிமை இனிமை இது இனிமை**
மகிமை மகிமை புது மகிமை
இயேசுவின் மார்பில் நான் சாய்ந்து கொண்டிருந்தால்
இந்நாள் முழுவதும் இல்லை தனிமை (3)

***சரணங்கள்***

1. காலையும் மாலையும் புது கிருபை
கண்ணின் மணிபோல் காக்கும் கிருபை
இறுதி வரைக்கும் வரும் கிருபை
நிலைத்திருக்கும் நம் தேவ கிருபை – இனிமை

2. மலைகள் விலகினாலும் மாறாக் கிருபை
மன்னன் இயேசு வாக்களித்த வல்ல கிருபை
பர்வதங்கள் பெயர்ந்து பயங்கரம் சூழ்ந்தாலும்
பரிசுத்தவான்களைக் காக்கும் கிருபை – இனிமை

3. அனாதி சிநேகத்தால் வந்த கிருபை
ஆயிரம் தலைமுறை காக்கும் கிருபை
அழகிய தேவ குமாரன் இயேசு
அளித்திட்ட அதிசயமான கிருபை – இனிமை

4. வனாந்தர வழிதனில் வந்த கிருபை
வழி தப்பிப் போனோரைக் காக்கும் கிருபை
வல்லமையுள்ள தேவனின் ஆவி
வரம் தந்து காத்திட்ட தேவ கிருபை – இனிமை

## பாடல் – 484

***பல்லவி***

**ஏழையை மீட்ட இயேசுவே ஸ்வாமி, அடிமை சரண் புகுந்தேன்**

***அனுபல்லவி***

நீசனா மென்னைத் தேடினீரோ காசினியிலன்பு கூர்ந்து – ஏழை

***சரணங்கள்***

1. என் பாவம் போக்க எடுத்தீரிறைவா ஈனக் கோலமதை
   என்னதான் இதற்கீடு செய்வேன் அன்னையே விளம்புவீரே

2. தூரமாய்க் கிடந்தே, தொல்லைகளடைந்தே தூயா உம்மை மறந்தேன்
   தூக்கினீர் எனைச் சேற்றினின்றே, தேற்றினீரும் மாவியாலே

3. விண்ணை நீர் மறந்தீர், விரோதியாமெனையே விண்ணில் சேர்த்திடவே
   வேண்டுதல் கேளும் வேந்தனே, அருள் தேவனே சகாயனே

4. பாவத்தின் கூலி மரணமாம், பயத்தை ஜெயித்தவர் யேசு
   ஜீவனும் சமாதானமுமீந்து, தேவனின் சமுகமீந்தார்

5. மாயமாம் உலகின் நேசத்தை வெறுத்தேன் மன்னா உம் அன்பினாலே
   சொன்னீரே பரலோகில் சேர்ப்பதாய் உன்னதா, உம் வாக்கை நம்பி.

## பாடல் – 485

**நம் தேவன் அன்புள்ளவர், நம் தேவன் பரிசுத்தர்**
நம் தேவன் நீதிபரர், நமக்காக ஜீவன் தந்த இயேசு அவரே

1. நன்மை ஏதும் ஒன்றும் நம்மில் இல்லையே
   என்ற போதும் நம்மை நேசித்தாரே
   ஆ அந்த அன்பில் மகிழ்வோம்
   அவரின் பாதம் பணிவோம் (2) – நம்

2. அத்திமரம் துளிர் விடாமற் போனாலும்
   திராட்சைச் செடி கனி கொடாமற் போனாலும்
   ஆ அவர் காயம் நோக்குவோம்
   அதுவே என்றும் போதுமே (2) – நம்

3. வானமீதில் இயேசு இறங்கி வருவார்
   தேவதுதர் போல மகிமை அடைவோம்
   ஆ எங்கள் தேவா வாருமே
   அழைத்து வானில் செல்லுமே (2) – நம்

4. அல்லேலூயா கீதம் நாம் என்றும் பாடுவோம்
ஆண்டவரோடென்றும் நாம் ஆளுகை செய்வோம்
ஆ அந்த நாள் நெருங்குதே
நினைத்தால் நெஞ்சம் பொங்குதே (2) – நம்

## பாடல் – 486

**பாடுவேன் பரவசமாகுவேன்**
பறந்தோடும் இன்னலே

1. அலை அலையாய் துன்பம் சூழ்ந்து
நிலை கலங்கி ஆழ்த்தையில்
அலை கடல் தடுத்து நடு வழி விடுத்து
கடத்தியே சென்ற கர்த்தனை – பாடுவேன்

2. என்று மாறும் எந்தன் துயரம்
என்றே மனமும் ஏங்கையில்
மாராவின் கசப்பை மதுரமாக்கி
மகிழ்வித்த மகிபனையே – பாடுவேன்

3. வனாந்திரமாய் வாழ்க்கை மாறி
பட்டினி சஞ்சலம் நேர்கையில்
வான மன்னாவால் ஞானமாய் போஷித்த
காணாத மன்னா இயேசுவே – பாடுவேன்

4. ஒன்றுமில்லா வெறுமை நிலையில்
உதவுவாரற்றுப் போகையில்
கன்மலை பிளந்து தண்ணீரைச் ஈந்து
தாகம் தீர்த்த தயவை – பாடுவேன்

## பாடல் – 487

**உம் தானம் நான் அனுபித்தேன்**
உம் ஸ்நேகம் இனி மறப்பதில்லை
இயேசுவே எந்தன் பிரியமே
நீர் போதும் என் வாழ்விலே – உம் தானம்

1. நீர் எனக்கு செய்த
நன்மைகள் நினைக்கும்போது
நன்றி கொண்டென் மனம் பாடிடுமே
ஸ்தோத்திர கானத்தில் பல்லவிகள் – உம் தானம்

2. இயேசுவே உந்தன் அன்பை
ஏற்க நான் தள்ளிச் சென்றேன்
அன்று நான் அன்னியனாய் அனாதயாய் அலைந்தேன்
இன்றோ உம் சொந்தமானேன் – உம் தானம்

3. என் ஜீவன் போய்விட்டாலும்
எனக்கதின் பாரம் இல்லை
எந்தனின் ஆத்மா நித்திய ஜீவன் பெற
இயேசுதான் ஏற்றுக்கொண்டார் – உம் தானம்

## பாடல் – 488

**கிறிஸ்துவுக்குள் வாழும் எனக்கு**
எப்போதும் வெற்றி உண்டு

1. என்னென்ன துன்பம் வந்தாலும்
நான் கலங்கிடவே மாட்டேன்
யார் என்ன சொன்னாலும்
நான் சோர்ந்து போகமாட்டேன் – கிறிஸ்து

2. சாத்தானின் அதிகாரமெல்லாம்
என் நேசர் பறித்துக் கொண்டார்
சிலுவையில் அறைந்துவிட்டார்
காலாலே மிதித்துவிட்டார் – கிறிஸ்து

3. பாவங்கள் போக்கி விட்டார்
சாபங்கள் நீக்கிவிட்டார்
இயேசுவின் தழும்புகளால்
சுகமானேன் சுகமானேன் – கிறிஸ்து

4. மேகங்கள் நடுவினிலே
என் நேசர் வரப் போகிறார்
கரம் பிடித்து அழைத்துச் செல்வார்
கண்ணீரெல்லாம் துடைப்பார் – கிறிஸ்து

## பாடல் – 489

**நம்முடைய தெய்வம் இயேசுவல்லால் – இந்த**
நானிலத்தில் வேறு தெய்வமில்லை – நம்

1. கர்த்தரை தெய்வமாய் கொண்ட ஜனம்
பாக்கியமுள்ளது எனப்படுமாம் – நம்

2. பாவமறியாத பரிசுத்தராம் இயேசு
பாவிகளை இரட்சிக்க வந்தவராம் – நம்

3. பற்பல கிருபைகள் பகருகின்றார் – நாம்
கற்புடன் அவர் பணி செய்திடவே – நம்

4. கற்சிலை பேசுமோ வாய்திறந்து – நம்
கர்த்தர் இயேசு இன்றும் ஜீவிக்கிறார் – நம்

5. மறப்பாளோ தாய் தன் பாலகனை – நான்
மறப்பதில்லை என்றும் அன்பு தெய்வம் – நம்

6. ஏறெடுக்கும் நம் தேவைகட்கு – அவர்
மாறாமல் பதில் தரும் மகிபனவர் – நம்

7. சகலமும் படைத்த சர்வாதிகாரி – இயேசு
சகலமும் ஜெயித்திட்ட சர்தாரி – நம்

## பாடல் – 490

**சிங்கக் குட்டிகள் பட்டினி கிடக்கும்**
ஆண்டவரைத் தேடுவோர்க்கு குறையில்லையே
குறையில்லையே குறையில்லையே
ஆண்டவரைத் தேடுவோர்க்கு குறையில்லையே

1. புல்லுள்ள இடங்களிலே
என்னை மேய்க்கின்றார்
தண்ணீரண்டை கூட்டிச் சென்று
தாகம் தீர்க்கின்றார் – சிங்கக்

2. ஆத்துமாவை தேற்றுகின்றார்
ஆவி பொழிகின்றார்
ஜீவனுள்ள நாட்களெல்லாம்
கிருபை என்னைத் தொடரும் – சிங்கக்

3. எதிரிகள் முன் விருந்தொன்றை
ஆயத்தப்படுத்துகிறார்
என் தலையை எண்ணெயினால்
அபிஷேகம் செய்கின்றார் – சிங்கக்

4. என் தேவன் தம்முடைய
மகிமை செல்வத்தினால்
குறைகளையே கிறிஸ்துவுக்குள்
நிறைவாக்கி நடத்திடுவார் – சிங்கக்

## பாடல் – 491

**பூமி அதிர்ந்தாலும்**
ஆழி பொங்கினாலும்
என்ன நேரிட்டாலும்
அஞ்சிடேன்

***சரணங்கள்***

1. யெகோவா துணை நிற்கிறார்
அஞ்சிடேன்
எக்காலும் அவர் கைவிடார்
அஞ்சிடேன்

2. ஓர் ஜீவ நதியுண்டு பார்
அஞ்சிடேன்
அத்தால் சந்தோஷம் செய்கிறார்
அஞ்சிடேன்

3. நான் உன்தன் தேவன் என்கிறார்
அஞ்சிடேன்
மாற்றாரை ஓடப் பண்ணுவார்
அஞ்சிடேன்

4. என் யேசு நாதர் நாமம் ஜெயம்
நம்புவேன்
என் யேசு நாதர் நாமம் ஜெயம்
நம்புவேன்

யேசு நாமம் ஜெயம்
யேசு நாமம் ஜெயம்
யேசு நாமம் ஜெயம்
நம்புவேன்

## பாடல் – 492

**சோர்ந்து போகாதே மனமே**
சோர்ந்து போகாதே போராட
சோர்ந்து போகாதே

***அனுபல்லவி***

கண்டுனை அழைத்த தேவன் கைவிடுவாரோ – சோர்ந்து

***சரணங்கள்***

1. வாக்களித்த தேவனை நீ பாடிக் கொண்டாடு
ஊக்கமான ஆவி உன்னைத் தாங்க மன்றாடு – சோர்ந்து

2. துன்பங்கள் தொல்லைகள் உன்னைச் சூழ்ந்து கொண்டாலும்
அன்பர் உன்னைத் தேற்றும் நேரம் ஆனந்தமல்லோ – சோர்ந்து

3. சோதனைகளை ஜெயிப்பேன் பாக்கியவானல்லோ
ஜீவகிரீடம் சூடும் நேரம் என்ன பேரின்பம் – சோர்ந்து

## பாடல் – 493

**என் இன்ப துன்ப நேரம்**
நான் உன்னை சேருவேன்
நான் நம்பிடுவேன்
பாரில் உம்மை சார்ந்திடுவேன்

1. நான் நம்பிடும் தெய்வம்
இயேசுவே நான் என்றுமே நம்பிடுவேன்
தேவனே ராஜனே
தேற்றி என்னை தாங்கிடுவார் – என் இன்ப

2. இவரே நல்ல நேசர் என்றுமே
தாங்கி என்னை நடத்துவார்
தீமைகள் சேதங்கள்
சேரா என்னை காத்திடுவார் – என் இன்ப

3. பார் போற்றும் ராஜன் புவியில்
நான் வென்றிட செய்திடுவார்
மேகத்தில் தோன்றுவார்
அவரைப் போல் மாறிடுவேன் – என் இன்ப

## பாடல் – 494

**என் இயேசு ராஜா சாரோனின் ரோஜா**
உம் கிருபை தந்தாலே போதும்
அலை மோதும் வாழ்வில் அலையாமல் செல்ல
உம் கிருபை முன் செல்ல அருளும்

1. கடல் என்னும் வாழ்வில் கலங்கும் என் படகில்
சுக்கான் பிடித்து நடத்தும் என் தேவா
கடலினைக் கண்டித்த கர்த்தர் நீர் அல்லவோ
கடவாத எல்லையை என் வாழ்வில் தாரும்

2. பிளவுண்ட மலையே புகலிடம் நீரே
புயல் வீசும் வாழ்வில் பாதுகாத்தருளும்
பாரினில் காரிருள் சேதங்கள் அணுகாது
பரமனே என் முன் தீபமாய் வாரும்

3. எதிர்க்காற்று வீச எதிர்ப்போரும் பேச
என்னோடிருப்பவர் பெரியவர் நீரே
இயேசுவே யாத்திரையில் கரை சேர்க்கும் தேவன்
என் ஜீவ படகின் நங்கூரம் நீரே

## பாடல் – 495

**இன்ப துன்ப நேரத்திலும் உன்**
அன்புள்ள இயேசுவைப் பார்

1. இன்பத்தினால் அகமகிழ்ந்து – கிலேசத்தினால் துக்கித்து
சிற்றின்பப் பேருலகில் – சிக்கிக் கொண்டு இருக்கும் போதும் –இன்ப

2. சோதனையில் பிடிபட்டு – இடுக்கணில் இருக்கும்போதும்
சாத்தான் உனை மேற்கொள்ளும் போதும், அக்கினியாஸ்திரம்
எறியும்போதும் – இன்ப

3. தோழரால் பகைக்கப்பட்டு – மனக்கிலேசம் அடையும்போதும்
உலகம் உன்னை இகழ்ச்சி செய்து – தன்னிடத்தை விட்டோடும்போதும்
– இன்ப

4. அவர் தாமே சோதிக்கப்பட்டு – பாடு நமக்காய்ப் பட்டதினால்
அவர் சோதிக்கப்படும் நமக்கு – உதவி செய்ய வல்லவராம் – இன்ப

5. வறுமையினால் யாசித்து – பாடு மிகப்படும் போதும்
சாத்தான் உன்னை பகடிபண்ணி – உன் விசுவாசத்தைக்
குறைக்கும்போதும் – இன்ப

6. கடு நோயால் பெலன் குன்றி பெலவீனத்தால் தள்ளாடி
ஜீவன் உனக்குக் கசப்பாகி – சாவை நீ விரும்பும் போதும் – இன்ப

7. பகைஞரால் கல்லெறியுண்டு – மரண நேரம் கிட்டும்போதும்
பக்தன் ஸ்தேவானைப்போல் – தைரியமாய் உன் இயேசுவைப் பார்–இன்ப

8. நான் என் இயேசுவின் தரிசனத்தை நிமிஷந்தோறும் காண்கிறதால்
நான்தான் பயப்படாதிரு என்றவர் என்னைத் தேற்றுகிறார் – இன்ப

## பாடல் – 496

**உந்தன் சித்தம் போல் நடத்தும்**
கர்த்தாவே நீர் நித்தம் என்னை
எந்தன் சித்தம் போல வேண்டாம்
என் பிதாவே என் யெகோவா

1. இன்பமான வாழ்க்கை வேண்டேன்
இனிய செல்வம் சீரும் வேண்டேன்
துன்பமற்ற சுகமும் வேண்டேன்
நின் தொண்டு செய்யும் அடியேன்

2. நேர் சமனாம் நின் வழியோ
சிறு துரமோ மா தொலைவோ
எவ்விதத் துயர்க் கடலோ
ஏழையின் வாழ்வு எதிலும்

3. அக்னி ஸ்தம்பம் மேக ஸ்தம்பம்
ஆம் இவற்றால் நீர் நடத்தி
அனுதினம் என்னோடிருப்பீர்
ஐயனே கடை கனியே

## பாடல் - 497

**கர்த்தர் என் மேய்ப்பரே**
குறை எனக்கில்லையே
அநுதினம் நல் மேய்ச்சல்
அன்புடன் அளித்திடுவார்

1. மரணத்தின் இருள் தன்னில் நடந்திட நேர்ந்தாலும்
மீட்பரின் துணையுடனே மகிழ்வுடன் காத்திடுவேன்

2. பகைவரின் கண்களில் முன் பரமன் எனக்கோர் விருந்தை
பாங்குடன் அருளுகின்றார் பரவசம் கொள்ளுகின்றேன்

3. எண்ணெயால் என் தலையை இன்பமாய் அபிஷேகம்
செய்கிறார் என் தேவன் உள்ளமும் பொங்கிடுதே

4. ஜீவனின் நாட்களெல்லாம் நன்மையும் கிருபையுமே
தொடர்ந்திட வாழ்ந்திடுவேன் கர்த்தரின் வீட்டினிலே

## பாடல் - 498

**வானங்களும் வானாதி, வானங்களும் உமைக்**
கொள்ளா அற்புதா!

***சரணங்கள்***

1. கிருபையும் நிபந்தனையும் – அருமையாய்க் காத்த தேவா
பார்த்து வந்தீர், பராமரித்தீர், சேர்ந்து இம்மட்டும் நடத்தினீர் –வானங்

2. எல்லா ஜாதி ஜனங்களும், வல்ல இரட்சிப்படையச் செய்யும்
கல்வாரியின் இரத்தத்தினால், பொல்லாததைச் சுத்தி செய்யும் – வானங்

3. நீதி நியாயமுள்ள தேவா – ஜோதியில் வாசஞ் செய்பவர்
பாவிகளைச் சிநேகிப்பவர், போதியதைப் பொழிகிறவர் – வானங்

4. நீரே ராஜாதி ராஜாவே – கர்த்தாதி கர்த்தரானவரே
எங்களை ராஜாவாக்கினீரே, ஆசாரியர்களாக்கினீரே – வானங்

5. பஞ்சம் பட்டினி கொள்ளை நோயில், கொஞ்சுவோரின் தஞ்சமானவர்
அஞ்சுகிறோம் நெஞ்சில் தேவா, எஞ்சுகிறோம் மிஞ்சும் மூவா – வானங்

6. கைகளினால் கட்டப்பட்டதில், காணப்படா வல்ல தேவா
மெய்யாயெம்மில் இருக்கிறவா, செய்கைகளினால் தெரிகிறவா – வானங்

7. நித்திய வாசியானவர் – சத்தியமாம் பெயர் கொண்டவா
இத்தரையில் எம்மோடுள்ளவா, அதிபனே உமக்கல்லேலூயா – வானங்

## பாடல் – 499

**எக்காலும் இயேசுவே சகாயராயிரும்**
அன்பான சத்தத்தால் என் ஏக்கம் நீங்கிடும்

எந்நாளும் நீரே வேண்டும் இந்த நாளும் வேண்டும்
நீர் என்னை நோக்கிப் பாரும் பேரன்பரே!

1. எப்போதும் இயேசுவே இப்பாவியோடிரும்
தீயோனின் சோதனை ஓயாமல் விலக்கும் – எந்நாளும்

2. எக்காலும் இயேசுவே இக்கட்டு வாழ்விலும்
அன்பாகத் தங்குவீர் என் நீச நெஞ்சிலும் – எந்நாளும்

3. எப்போதும் இயேசுவே இப்பேதைக் கிரங்கும்
மெய்ஞானம் சத்தியம் செய் நன்றி போதியும் – எந்நாளும்

4. எக்காலும் இயேசுவே எக்கேடும் நீக்குமேன்
காருண்ய நாயகா நீர் என்னை ஆளுமேன் – எந்நாளும்

## பாடல் – 500

**இயேசு என் அஸ்திபாரம் ஆசை எனக்கவரே**
நேச முசிப்பாறுதல் இயேசுவில் கண்டேன்யானும்

1. என்ன மதுரம் அவர் நன்னய நாமச் சுவை
என்னகத்தில் நினைத்தால் இன்னல் பறந்திடுமே

2. பஞ்சம் பசியுடனே மிஞ்சும் துயர் வந்தாலும்
அஞ்சிடேன் இவையை என் தஞ்சம் இயேசு இருக்கையில்

3. வியாதியால் எந்தனது காயங்கெட்டுப் போயினும்
மாயத்தோற்றத்தை இயேசு நாயகன் மாற்றிடுவார்

4. லோகம் என்னை எதிர்த்துப் போவென்று சொல்லிடினும்
சோகம் அடைவேனோ? என் ஏகன் எனக்கிருக்க

5. என்னென்ன மாயலோகக்கன்னல் என்மேல் வந்தாலும்
முன்னும் பின்னுமாய் இயேசு என்னை நடத்திடுவார்

6. பாவத்தால் என்னில் வந்த சாபக்கறைகள் மாற்றி
சோபித நீதியுடை ஆபரணமாய் ஈவார்

7. ஆசை என் மணவாட்டி ஆக்குவேன் உன்னை எனும்
நேச உறுதியுரை இயேசு எனக்களித்தார்

## பாடல் – 501

**குயவனே குயவனே**
படைப்பின் காரணனே
களி மண்ணான என்னையுமே
கண் நோக்கி பார்த்திடுமேன்

1. வெறுமையான பாத்திரம் நான்
வெறுத்து தள்ளாமலே
நிரம்பி வழியும் பாத்திரமாய்
விளங்கச் செய்யுமே

2. வேதத்தில் காணும் பாத்திரம் எல்லாம்
இயேசுவை போற்றிடுதே
என்னையும் அவ்வித பாத்திரமாய்
வனைந்து கொள்ளுமே

## பாடல் – 502

**மனிதனை மனிதனாய் நடத்திடுவோம் – இறைவனின்**
மைந்தராய் எவரையும் நோக்கிடுவோம்

### *சரணங்கள்*

1. இறைவனின் மைந்தராம் இயேசுபிரான்
தரைமீது சிலுவையில் தம்முயிரால்
திரைபோல் மக்களை பிரித்து நின்ற கறையாம்
பிரிவினை ஒழித்தாரே

2. சமயத்தின் பெயரிலே சகலரையும்
சமமாகக் கண்டிட மறுத்தனரே
சமாரியப் பெண்ணையும் ரோமனையும்
சமமாகக் கண்டவர் இயேசுபிரான்

3. கிறிஸ்தவன் புறத்தவன் என்றதுமே
பறந்திடும் பந்தம் பாசமுமே
இந்நிலை மாறியே யாரையும்
சொந்த சகோதரர் ஆக்கிடுவோம்

4. வெள்ளையன் கறுத்தவன் வேற்றுமையும்
உள்ளவன் இல்லாதவன் என்றும் பல
உள்ள நம் பேதங்கள் ஒழித்திடுவோம்
உள்ளத்தில் அன்பினைப் பூண்டிடுவோம்

## பாடல் – 503

**பேசினது போதுமப்பா – நண்பா**
பேசினது போதுமப்பா

1. எங்கெங்கு பார்த்தாலும் பேச்சு
இதுவா திருச்சபையின் மூச்சு
பாங்காக உழைப்பதோ போச்சு
பேச்சோடு நிறுத்திட லாச்சு

2. அன்பினைப் பற்றியே பேசி
அழகான சொற்களையே வீசி
அயலார்க்கு உதவிடவோ மறந்து
ஆண்டவனின் பணி செய்யா திருந்து

3. எத்தனை மாநாடு கூட்டினோம்
எத்தனையோ தீர்மானம் எழுதினோம்
என்னதான் நடந்தது சொல்லப்பா
என்னென்ன பணி செய்தோம் கூறப்பா

## பாடல் – 504

**சின்ன சின்ன பிள்ளை என்று நினைக்காதீங்க – இது**
சொன்னபடி நீங்களும் நடக்கணுங்க
எட்டுத்திசை இருப்பவரும் ஓடி வாருங்க
நம்மை வாழவைக்கும் பிள்ளையிது கண்டுகொள்ளுங்க

### *சரணங்கள்*

1. ஏரோது இராஜாவாயிருக்க லாமுங்க –இவர்
சர்வ லோக ராஜாவாம் தெரிஞ்சிக்கிடுங்க
பார்வோனின் சேனையெல்லாம் முங்கிப் போச்சுங்க
நம்மை வாழவைக்கும் பிள்ளையிது கண்டுகொள்ளுங்க

2. யூதமதத் தலைவரென்று நினைக்காதீங்க – உங்கள்
மதங்களுக்கு ஜீவ நாடி இவர்தானுங்க
உப்பு இல்லா உபதேசங்கள் தேவைதானாங்க
நம்மை வாழவைக்கும் பிள்ளையிது கண்டுகொள்ளுங்க

3. படிப்பு, பவுசு, ஜாதி, நாடு பார்க்காதீங்க – இந்த
பிள்ளை முன்னால் எல்லாம் சமம் தெரிஞ்சிக்கிடுங்க
புதிய ஒரு சமுதாயம் பிறக்கப் போகுதுங்க
நம்மை வாழவைக்கும் பிள்ளையிது கண்டுகொள்ளுங்க

## பாடல் – 505

**சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுவது**
எத்தனை எத்தனை இன்பமாக இருக்கும்

1. அது ஆரோனின் சிரசின் மேல் ஊற்றப்பட்டதாயும்
அங்கிருந்து இறங்கிடும் தைலமாயிருக்கும் (2)
கர்த்தர் அங்கே வாசம் செய்வார்
ஆசீர்வாதம் தந்திடுவார் (2)

2. அது சமாதானம் சந்தோஷம் நிறைவுள்ள சம்பத்தாகும்
கிறிஸ்துவில் நிலைத்திடும் புதிய வாழ்வைத் தரும் (2)
கர்த்தர் அங்கே வாசம் செய்வார்
ஆசீர்வாதம் தந்திடுவார் (2)

3. அது பரலோக இன்பத்தை இங்கே கொண்டுவரும்
தேவனின் சாயலை பெற்றிட உதவி செய்யும் (2)
கர்த்தர் அங்கே வாசம் செய்வார் ஆசீர்வாதம் தந்திடுவார் (2)

## பாடல் – 506

**எளியவர்க்கு சொந்தம் இந்த உலகம் என்று – நம்**
இயேசு சொன்ன நல்ல காலம் வருமோ? என்று

***அனுபல்லவி***

ஒளியிழந்து விளங்குதவர் வாழ்வு இன்று – அவர்
உலகை என்று ஆள்வதோ தலை நிமிர்ந்து நின்று

1. இறைவனது இல்லமன்றோ இந்த உலகம் – அதில்
எல்லோர்க்கும் உரிமையுடன் உண்டு இடம்
அறைகளிலே கதவுகளோ எதுவுமில்லை – இங்கு
அன்புடனே வாழ்ந்திருந்தால் மறையும் தொல்லை

2. உள்ளமெனும் சோலையிலே அன்பு மலர்ந்தால் இந்த
உலகத்திலே சம உரிமை மணம் கமழும்
வெள்ளமென இறை அன்பு வழிந்தோடினால் – இங்கு
வறியவர்கள் வாழ்வினிலே வலிமை வரும்

3. தனி மனிதன் திருந்தி விட்டால் போதாது – இந்த
தாரணியே முழுத்திருப்பம் பெற வேண்டும்
இனிமேலே வரும் என்று இருந்திடாதே – இன்றே
எளியவர்கள் உணர்வூக்கம் பெற வேண்டும்

## பாடல் – 507

**எனக்குப் பிறன் யார் என்றே**
ஏசுவிடம் நான் கேட்டேன்
என்னையே நல்ல பிறனாக
இருந்திட அவர் சொன்னார்

1. கள்ளர் கையில் அகப்பட்ட மனிதர்
உள்ளம் நைந்து உழன்றிடும் மனிதர்
கொள்ளை அடித்து உயர்ந்திடம் மனிதர்
அத்தனை பேருக்கும் நான்தான் பிறனே

2. குறைவு கண்டு குலைந்திடும் மனிதர்
சிறையில் வாழ்ந்து சோர்ந்திடம் மனிதர்
நிறைவில் பிறரை மறந்திடும் மனிதர்
அத்தனை பேருக்கும் நான்தான் பிறனே

3. இல்லம் ஏதும் இல்லா மனிதர்
நல்லோர் நட்பைத் தெரிந்திடா மனிதர்
இல்லோர் நாமென்றிருந்திடும் மனிதர்
அத்தனை பேருக்கும் நான்தான் பிறனே

## பாடல் – 508

**திருமறையின் மொழிகளிலே தேன் வழியும் அதன்**
அருள் நிறைந்த உரைகளினால் தீங்கழியும்

***சரணங்கள்***

1. அறுபத்து ஆறாகும் அதன் மணிகள் – அவை
அழியாத அமுதூறும் சுவை கனிகள்
ஒருமித்த நோக்கொன்றே அவை காட்டும் இந்த
உலகோருக் கென்றென்றும் அருள் கூட்டும்

2. இறைமைந்தர் இயேசுவையே எடுத்துரைக்கும் – அதன்
ஏடுகளில் அவர் பெயரே எதிரொலிக்கும்
நிறைவேறும் பாங்கிலவர் வாழ்வடங்கும் அதில்
நிகழ்கால வரலாற்றில் பொருள் விளங்கும்

3. ஆவியினால் நிறைந்தோராம் அடியார்கள் அதை
அவர் காலச் சூழலிலே வரைந்தார்கள்
பூவுலகின் சூழல்களில் மறைபேசும் என்றும்
புது நெறியின் தீபமதாய் ஒளிவீசும்

4. முறையாகத் திருமறையைப் பயின்றிடுவோம் அதன்
முழுப்பொருளை அறிந்திடவே முயன்றிடுவோம்
நிறைவான வாழ்வதனை அடைந்திடவே – மறை
நிழல்படியும் பாதையிலே நடந்திடுவோம்

## பாடல் – 509

**யாரிடம் செல்வோம் இறைவா**
வாழ்வு தரும் வார்த்தையெல்லாம்
உம்மிடம் அன்றோ உள்ளன
யாரிடம் செல்வோம் இறைவா
இறைவா, இறைவா – யாரிடம் செல்வோம்

***சரணங்கள்***

1. அலை மோதும் உலகினிலே
ஆறுதல் நீ தரவேண்டும்
அண்டி வந்தோம் அடைக்கலம் நீ
ஆதரித்தே அரணைப்பாய் (2) – இறைவா

2. வேரறுந்த மரங்களிலே
விளைந்திருக்கும் மலரினைப்போல்
உலகிருக்கும் நிலைகண்டும்
உமது மனம் இரங்காதோ (2) – இறைவா

3. மனதினிலே போராட்டம்
மனிதனையே வாட்டுதையா
குணமதிலே மாறாட்டம்
குவலயம்தான் இணைவதெப்போ (2) – இறைவா

4. அமைதி ஒன்றைத் தேடிவந்தேன்
நீ என்றே உன்னைத் தொடர்ந்தேன்
பாருலகில் என் ஆறுதல் யார்
நீஅன்றேல் என் துணையார் (2) – இறைவா

## பாடல் – 510

**உண்மையாம் உபாசம் எது?**
உண்ணாமல் இருப்பதா அது?

1. உள்ளத்தில் அன்பினையேப் பேணாமல்
உடல் தன்னை ஒடுக்கினால் போதுமா
சடங்கா நோன்பினை மேற்கொண்டால்
சிந்தையில் மாற்றமே ஆகுமா?

2. உடையின்றி தவித்திடும் ஒருவனுக்கு
உடையீந்தால் அதுவன்றோ உபவாசம்
தடையின்றி பிறருக்குத் தயைகாட்டி
சடைப்பின்றி உழைப்பதே உபவாசம்

3. துன்பத்தில் இருப்போரின் துயர் நீக்கி
தனிமையில் வாடினால் துணையாகி
எளியோரின் தோழனாய் இணைந்தென்றும்
இருப்பதே உள்ளத்தின் உபவாசம்

## பாடல் – 511

**அமைதியில் இறைவனைக் காணுவோம்**
அமர்ந்தே அவர் அன்பைப் பூணுவோம்
சுமைகளை அவர் பதம் போடுவோம்
சோர்வுகள் நீங்கியே வாழுவோம்

1. நம்மாலே எல்லாம் ஆகும் என்று
நம்பியே வாழ்ந்தது போதும் என்று
பெம்மானின் பாதமே பணிந்து நின்று
பேரருள் நாடும் வேண்டி நின்று

2. கடந்ததை கடவுள் நினைப்பதில்லை
கணக்குகள் பார்த்துமே கணிப்பதில்லை
நடந்திடும் பாதையில் கூட வந்து
நம் நலம் நாடுவோர் ஏங்கி நின்று

## பாடல் – 512

**இல்லத்தின் தலைவராய் இயேசு இருந்தால்**
இல்லை என்பது இல்லையே

1. நிறைவான வாழ்வினைத் தருவார் – தந்து
குறையாவும் போக்கியே விடுவார்
மறைவான விருந்தினராவார் – இன்ப
மறை ஞான விருந்தினைத் தருவார்

2. வழியாக வருபவர் அவரே – வழியில்
ஒளியாக திகழ்பவர் அவரே
வழுவாமல் காப்பவர் அவரே நம்மைத்
தழுவியே அணைப்பர் அவரே

3. அவர் பாதம் தொடர்ந்திட வேண்டும் – நித்தம்
அவர் பாதை நடந்திட வேண்டும்
அவர்போல் வாழ்ந்திட வேண்டும் – என்றும்
பிறர்க்காக உழைத்திட வேண்டும்

## பாடல் – 513

**நானும் என் வீட்டாருமோவென்றால்**
கர்த்தரையே சேவிப்போம்
நீயும் சேவிப்பாயா? நீயும் சேவிப்பாயா?

1. கர்த்தரையே சேவிப்பது
ஆகாததென்று கண்டால்
யாரை நீ சேவிப்பாய் என்பதை
இன்றே நீ தீர்மானம் செய்வாய் – நானும்

2. அடிமையான நம்மையுமே
தேவாதி தேவன் மீட்டார்
மாபெரும் அடையாளங்கள் செய்திட்ட
கர்த்தரை சேவிப்பாயா? – நானும்

3. நம் பாதையில் காப்பாற்றியே
கர்த்தர் நடத்தினாரே
கர்த்தர் தந்த ஆசீர் யாவும் கண்டு
நன்றியாய் சேவிப்பாயா? – நானும்

4. நன்மையான ஈவுகளைத்
தேவாதி தேவன் தந்தார்
கீழ்படிந்து அவர் சத்தம் கேட்டு
சாட்சியாய் ஜீவிப்பாயா – நானும்

## பாடல் – 514

**என் சகோதரா (சகோதரி) எங்கு செல்கின்றாய்**
இன்று நீ ஓர் நற்செய்தியை கேட்டு செல்வாயே

1. கஷ்டமான வாழ்க்கை உனதோ
கவலைகளும் தோல்விகளும் உண்டா
காத்திருக்கின்றார் உன் இயேசு ராஜனே
கல்வாரியின் அன்பினாலே ஜெயம் தருவார்

2. பஞ்சங்களும் பிரச்சனைகளும்
பூமியின் மேல் கண்ணியாய் வருமே
அன்பு தணியும் (மனிதர்) ஆறுதல் போகும்
அளித்திடுவார் உந்தனுக்கே நித்ய சந்தோஷம்

3. தீய மாந்தர் எதிர்த்திடுவார்
தீமை சக்திகளும் அலைக்கழிக்கும்
தடுமாறாதே (உண்மை) தேவனைத் தேடு
தூய வாழ்வதை தந்திடுவார் இயேசுவை நாடு

4. பாவ சேற்றில் தாழ்விடங்களில்
தூரமாய் கிடக்கும் உன்னை மீட்க
அழைக்கின்றாரே (உந்தன்) அன்பின் தேவனே
இரட்சிப்பின் சந்தோஷத்தை நீ பெற்று செல்வாயே

## பாடல் – 515

**இமய முதல் குமரி வரை**
சென்றிடுவோம் நாம்
இயேசுவின் சிலுவையை
உயர்த்திடுவோம் நாம் (2)

1. அல்லேலூயா கீதம் பாடி
இரட்சிப்பின் செய்தியைக் கூறி
இயேசுவின் நாமத்தை உயர்த்தி
துதிகள் செலுத்திடுவோம் ஆ ஆ ஆ (2)
சாட்சிகளாய் வாழ்ந்திடுவோம்
உன்னத வாழ்வினிலே (2) – இமய முதல்

2. உலகமெங்கும் சென்று
இயேசுவின் வார்த்தையைக் கூறி
சீஷரை யாவரும் மாற
இயேசுவின் வழிநடப்போம் ஆ ஆ ஆ – சாட்சி

3. விசுவாச வாழ்வில் உயர
விசுவாச ஜீவியம் செய்து
சத்தியத்தில் நாம் நிலைத்து
சிறந்து வாழ்ந்திடுவோம் ஆ ஆ ஆ ஆ – சாட்சி

4. அற்புதம் செய்வார் இயேசு
அதிசயம் செய்வார் இயேசு
இயேசுவின் நாமத்தில் எங்கும்
சீஷராய் மாற்றிடுவோம் ஆ ஆ ஆ – சாட்சி

## பாடல் – 516

**மனிதர் எவர்க்கும் ஒரே சுவிசேஷம்**
பரலோகம் தந்த ஒரே விசேஷம்

1. பாவ மன்னிப்புத் தரும் சுவிசேஷம்
கடவுள் பலியாக வந்த விசேஷம்
இயேசுவே அந்த நற்சுவிசேஷம்
ஏற்றுக்கொள் உனக்கு உகந்த விசேஷம்

2. சுத்த இருதயம் தரும் சுவிசேஷம்
கடவுள் தொடர்பு வழங்கும் விசேஷம்
சுவைக்க சுவைக்க நற்சுவிசேஷம்
ஏற்றுக்கொள் உனக்கு உகந்த விசேஷம்

3. பரலோக பாக்கியம் தரும் சுவிசேஷம்
மரணம் மங்களம் என்ற விசேஷம்
தருணம் இதுவே நற்சுவிசேஷம்
ஏற்றுக்கொள் உனக்கு உகந்த விசேஷம்

## பாடல் – 517

**கர்த்தரின் சேனைக்கு நீ காவலாளி**
கர்த்தரின் சிருஷ்டிக்கு நீ காவலாளி
காவலாளி நீயே காவலாளி (2)

1. இஸ்ரவேல் ஜனங்களுக்கு மோசே காவலாளராயிருந்தார்
இந்திய மக்களுக்கு பெண்களே (ஆண்களே)
நீங்களே காவலாளி (2) – கர்த்தரின்

2. இடிந்த அலங்கத்துக்கு நெகேமியா காவலாளியாயிருந்தார்
இடிந்துபோன உள்ளங்கட்கு பெண்களே (ஆண்களே)
நீங்களே காவலாளி (2) – கர்த்தரின்

3. சன்பல்லாத் தொபியாக்கள் சேர்ந்துமே எழுந்து வந்தாலும்
சோர்ந்திடாமல் இடைவிடாமல்
ஜெபித்திடும் மக்களே காவலாளி (2) – கர்த்தரின்

## பாடல் – 518

**ஒரு நாள் வருவார் இராஜாதி இராஜன்**
ஆயத்தமாகிடுவோம்
நம் கால மனிதர் இயேசுவை காண
ஆயத்தமாக்கிடுவோம்
நீ ஆயத்தமாகு ஆயத்தப்படுத்து
வருகை மிகச் சமீபம்

2. தீபத்தில் எண்ணை வற்றாது காத்து
ஆயத்தமாகிடுவோம்
தாலந்தைத் தரையில் புதைத்து விடாமல்
ஆயத்தமாகிடுவோம்

3. முந்தினோர் அநேகர் பிந்தினோராவார்
ஆயத்தமாகிடுவோம்
முடிவு பரியந்தம் நிற்பவர் மகிழ்வார்
ஆயத்தமாகிடுவோம் – நம் கால மனிதர்

4. தேடாதே உனக்கு பெரிய காரியம்
ஆயத்தமாகிடுவோம்
தேடு தொழுவத்தில் இல்லாத ஆடுகளை
ஆயத்தமாகிடுவோம் – நம் கால மனிதர்

## பாடல் – 519

**சிந்திக்கும் காலம் செயல்படும் நேரம்**
இது சிந்திக்கும் காலம் செயல்படும் நேரம்
மௌனமாயிருக்காதே
மௌனமாயிருக்காதே (2) நீ

1. அறுவடைக் காலத்தில் மௌனமாயிருந்தால்
அறுவடை இழப்பாயே
ஆண்டவர் காலத்தில் மௌனமாயிருந்தால்
இரட்சிப்பு தான் வருமோ? – இது

2. இந்தியா இயேசுவை அறிந்திடும் காலம்
இதுதான் இதுதானே
இந்தக் காலத்தில் மௌனமாயிருந்தால்
இரட்சிப்பு தான் வருமோ? – இது

3. பகட்டு வாழ்வோ பரமனின் அன்போ
எது உன்னை இழுக்கிறது?
கணக்கு கேட்கும் கர்த்தர் வருவார்
வெறுங்கையாய் நிற்பாயோ? – இது

## பாடல் – 520

**காலமோ கடைசி காலம்**
கண் எதிரில் தெரிவதெல்லாம்
கர்த்தன் இயேசு இராஜனையே
தம் எதிரில் அழைத்திடவே – காலமோ

### *சரணங்கள்*

1. யுத்தங்களும் சண்டைகளும்
நித்தம் நித்தம் கண்கள் காண
எந்த நேரம் வந்திடுவார்
சொந்த மக்கள் இன்பம் கொள்வார் – காலமோ

2. பாவங்களில் புரளுகிறார்
கோபங் கொள்வார் கூறிவிட்டால்
நாகரீகமானவர்கள்
நடத்தையில் தரம் இழந்தார் – காலமோ

3. ஊழியர்கள் நடுவினிலே
ஒருமனம் நிலவவில்லை
எல்லாம் பெற்ற உலகமதில்
அன்புமட்டும் காணவில்லை – காலமோ

4. செல்வங்கள் பெருகினாலும்
ஏழைகள் அதிகமானார்
மருத்துவம் சிறந்த போதும்
கொல்லும் நோய்கள் மிகப் பெருக்கம் – காலமோ

5. உலகத்தின் தலைவர் எல்லாம்
சமாதானம் முயற்சித்தாலும்
கலங்கிய மனித உள்ளம்
அலைமோதி தவிக்கின்றது – காலமோ

6. பகலிலோ இரவினிலோ
காலையோ மாலையோ
மகிமையாய் வரப்போகிறார்
ஏற்றுக்கொண்டோர் எழுந்து செல்வார் – காலமோ

7. எந்த எந்த தொழிலாயினும்
தங்கும் இடம் எதுவாயினும்
ஒன்றே ஒன்று எனது வாஞ்சை
வருகையில் மகிழ வேண்டும் – காலமோ

## பாடல் – 521

**லேவியரே ஆசாரியரே**
ஆனந்தமாய் நாம் கூடி வந்தோமே
இயேசுவின் பாதத்தில் பரவசமாய்
பாரத மீட்புக்காய் கிருபை பெறுவோம் – லேவியரே

1. எட்டுத் திசைக்கும் இயேசு புகழ் பரவ
நித்திய சுவிசேஷம் ஏந்திச் செல்லுவோம்
சாத்தானின் கட்டுகளை அறுத்திடுவோம்
சத்திய சபை கட்டி எழுப்பிடுவோம் – லேவியரே

2. விசுவாச வீரர்களாய் எழுபிடுவோம்
வெளிப்பாடு வரங்களை உபயோகிப்போம்
பாதாளக் கட்டுகளை அறுத்திடுவோம்
பரலோக பலன்களை சேர்த்துக்குவிப்போம் – லேவியரே

3. நம்பிக்கை நங்கூரமாய் நடந்திடுவோம்
தாழ்மையின் ரூபங்களால் வளர்ந்திடுவோம்
பாவத்தின் கட்டுகளை அறுத்திடுவோம்
காரிய சமர்த்தர்களாய் நின்றிடுவோம் – லேவியரே

4. ஜெபத்தின் ஜெயங்களாய் முன் செல்லுவோம்
தியான ஊற்றுகளில் தூது பெறுவோம்
மாமிசத்தின் கட்டுகளை அறுத்திடுவோம்
கண்ணீரின் பள்ளத்தாக்கில் கர்த்தரைக் காண்போம் – லேவியரே

5. பேச்சின் தூதர்களாய் பறந்திடுவோம்
நடக்கையின் நகல்களாய் விரைந்திடுவோம்
சமூதாயக் கட்டுகளை அறுத்திடுவோம்
நன்மையின் வாசல்களாய் விழித்திடுவோம் – லேவியரே

6. இயேசுவின் காயங்களின் கனிகளே நாம்
களிகூர்ந்து மகிழ்ந்து ஆடிப்பாடுவோம்
அப்போஸ்தல ஊழியத்தில் ஆர்ப்பரிப்போம்
ஆசீர்வாத மழைக்கு மேகங்களாவோம் – லேவியரே

## பாடல் – 522

**சமாதானம் நல்கும் நாமம்**

இயேசு நாமமே – மன சாந்தி
தரும் இனிய நாமம் இயேசு நாமமே
இயேசு நாமமே இயேசு நாமமே
கிறிஸ்தேசு நாமமே

*சரணங்கள்*

1. அன்னை தந்தை சொந்தம் யாவும்
இயேசு நாமமே
தன்னை தந்த இன்ப நாமம்
இயேசு நாமமே

2. பாவவினை போக்கும் நாமம்
இயேசு நாமமே
பரலோக வாழ்வில் சேர்க்கும் நாமம்
இயேசு நாமமே

3. பயங்கள் யாவும் போக்கும் நாமம்
இயேசு நாமமே
உயர் பக்தி தன்னை வளர்க்கும் நாமம்
இயேசு நாமமே

4. பொன் வெள்ளி புகழ் பொருளும்
இயேசு நாமமே
என் உள்ளில் வாழும் ஏக நாமம்
இயேசு நாமமே

## பாடல் - 523

**வாழ்வளிக்கின்றார் இயேசு வாழ்வளிக்கின்றார்**
வந்திடும் யாவரும் விந்தையில் மூழ்கிட

1. பாவிகள் என்றாலும் இயேசு பாசமாய் ஏற்கின்றார்
பண்புகள் இழந்தவர் பலமுறை விழுந்தவர்
பணிவுடன் மனமுடைந்தவரிடம் வந்திடில் - வாழ்

2. ஞானியர் என்றாலும் இயேசுநேசமாய் ஏற்கின்றார்
நன்னெறி அறிந்தவர் நடந்திட முயன்றவர்
நலம்பெறும் விழைவுடன் அவரிடம் வந்திடில் - வாழ்

3. தேவைகள் உள்ளோரை இயேசு தாவியே ஏற்கின்றார்
தம் நிலை உணர்ந்தவர் தளர்வுகள் அடைந்தவர்
தலை நிமிர்ந்துயர்ந்திட அவரிடம் வந்திடில் – வாழ்

## பாடல் – 524

**இனிக்காத தேனுமில்லை**
மின்னாத பொன்னுமில்லை
கிறிஸ்தேசு நாயகரின் நற்செய்தி தன்னை
அறிவிக்காம கிறிஸ்தவனேயில்ல

1. கத்தியழைச்சி மொத்தமாகக் கூடி
காக்கைகள் உண்பது போல – நாம்
பெத்த இன்பத்தை மத்தவரோடே
பகிர்ந்தளிக்கணுந்தானே

2. உப்பத்த மீன் குழம்பு
குப்பைக்கு போவது போல்
அப்பன் கிறிஸ்தையனின் – நற்செய்தி தன்னை
அறிவிக்காமற் கிறிஸ்தவனேயில்ல

3. பெத்து வளத்து பத்துக் கொடுத்த
உத்தமங்கப் பத்திச் சொல்ல – நாம்
வெக்கத்தை கொண்டா அச்சம் பக்கத்தார்
துப்பிச் சிரிச்சிடுவாங்க

4. பத்துக்கோடி பெத்தவங்க
மொத்த அன்பை கூட்டினாலும்
உத்தமரின் அன்பாகுமோ – அதை சொல்லமறந்தா
உசிரில்லாத வெறும் பொணமா ஆவேனே

## பாடல் - 525

**வாடும் உள்ளங்களே**
வாரீர் இறைவனிடம்
தேடும் உள்ள அமைதி
தேவன் தந்திடுவார்

1. வருந்தி சுமை சுமந்து
வாழ்வில் பெலன் இழந்து
தேடும் உள்ள அமைதி
தேவன் தந்திடுவார்

2. உலக இன்பமதில்
உழன்று அலைந்திடாதே
குருசை சுமந்து சென்ற
குருவைப் பின் தொடர்வோம்

3. இன்பம் என்றென்றுமே
இயேசுவின் அன்பினாலே
நாடிச் சென்றிடுவோம்
மோட்சம் அடைந்திடுவோம்

## பாடல் - 526

**இயேசுவின் நாமம் எல்லாவற்றிற்கும்**
மேலான நாமம் இயேசுவின் நாமம்
எல்லாவற்றிற்கும் மேலான நாமம்
இயேசுவின் நாமம் இயேசுவின் நாமம்

1. துரைத்தனத்திற்கும் அதிகாரத்திற்கும்
பேய் பிசாசின் தந்திரத்திற்கும்
எல்லாவற்றிற்கும் மேலான நாமம்
இயேசுவின் நாமம் இயேசுவின் நாமம்

2. வல்லமைக்கும் கர்த்தத்துவத்திற்கும்
இம்மையிலும் மறுமையிலும்
எல்லாவற்றிற்கும் மேலான நாமம்
இயேசுவின் நாமம் இயேசுவின் நாமம்

3. ஸ்தோத்தரிப்பீர் ஸ்தோத்தரிப்பீர்
விசுவாசிப்போர் ஸ்தோத்தரிப்பீர்
எல்லாவற்றிற்கும் மேலான நாமம்
இயேசுவின் நாமம் இயேசுவின் நாமம்

## பாடல் – 527

**ஊற்றுத் தண்ணீரே எந்தன் தேவ ஆவியே**
ஜீவ நதியே என்னில் பொங்கி பொங்கிவா (2)
ஆசீர்வதியும் என் நேச கர்த்தரே
ஆவியின் வரங்களினால் என்னை நிரப்பும்

***சரணங்கள்***

1. கன்மலையைப் பிளந்து வனாந்திரத்திலே
கர்த்தாவே உம் ஜனங்களின் தாகம் தீர்த்தீரே
பள்ளத்தாக்கிலும் மலைகளிலும்
தண்ணீர் பாயும் தேசத்தை நீர் வாக்களித்தீரே – ஊற்று

2. ஜீவத் தண்ணீராம் எந்தன் நல்ல கர்த்தரே
ஜீவ ஊற்றினால் என்னை நிறைத்திடுவீர்
கனி தந்திட நான் செழித்தோங்கிட
கர்த்தரின் கரத்தில் நித்தம் கனம் பெற்றிட – ஊற்று

3. திறக்கப்பட்டதாம் ஊற்று சிலுவையிலே
இரட்சகரின் காயங்கள் வெளிப்படுதே
பாவக் கறைகள் முற்றும் நீங்கிட
பரிசுத்த சமூகத்தில் ஜெயம் பெற்றிட – ஊற்று

4. கிருபையின் ஊற்றுக்கள் பெருகிடவே
புதுபெலன் அடைந்து நான் மகிழ்ந்திடவே
பரிசுத்தத்தை பயத்துடனே
பூரணமாக்கிட தேவ பெலன் தாருமே – ஊற்று

## பாடல் – 528

**உன்னதத்தின் ஆவியே**
உந்தன் பக்தர் உள்ளத்தில்
ஊற்ற வேண்டும் இந்த நாளிலே
உலகமெங்கும் சாட்சி நாங்களே

***சரணங்கள்***

1. பெந்தெகோஸ்தே பெருவிழாவிலே
பெருமழைபோல் ஆவி ஊற்றினீர்
துயரமான உலகிலே, சோர்ந்துபோகும் எங்களை
தாங்க வேண்டும் உந்தன் ஆவியால் – உன்னத

2. ஆவியின் கொடைகள் வேண்டுமே
அயல் மொழியில் துதிக்க வேண்டுமே
ஆற்றலோடு பேசவும், அன்புகொண்டு வாழவும்
ஆவி ஊற்றும் அன்பு தெய்வமே – உன்னத

3. ஜெப தூபம் எழுப்ப வேண்டுமே
ஜெய தொனியும் முழங்க வேண்டுமே
இந்தியாவில் எங்குமே, சிலுவை கொடி பறக்கவே
கிரியை செய்யும் உந்தன் ஆவியால் – உன்னத

## பாடல் – 529

**வான்புறாவே எங்கள் மீது வந்தமர்ந்திடும்**
வன் செட்டைகள் விரித்தே – எம்
அச்சமெல்லாம் அகல
வன் செயலாய் வந்திறங்கிடும் – எம்மில்

1. ஆவியின் அக்கினியால் தகித்திடவே
அனலுள்ள இருதயம் அளித்திடுமே
அன்பினால் அனைத்தோடும் கனலடைய
அனுதினம் அருள்மாரி சொரிந்திடுமே

ஊற்றிடுவீர் உமதாவியை
மாற்றிடுமே உம்மைப் போலவே – வான்

2. சோர்ந்திடும் உள்ளங்கள் உணர்வடைய
மாய்ந்திடும் சரீரங்கள் உயிரடைய (2)
ஆண்டிடும் சக்திகள் அகன்றோடவே
அண்டிவரும் எமக்கு நின் ஜெயம் தாருமே (2) – ஊற்றிடுவீர்

3. பற்பல பாஷைகள் மகிழ்ந்துரைக்க
அற்புத திருவன்பை புகழ்ந்துரைக்க (2)
நற் செய்கையாம் நல் சிருஷ்டியதில்
பொற்பரனே வளர்ந்திட பொழிந்திடுவீர் (2) – ஊற்றிடுவீர்

## பாடல் – 530

**வல்லமை அருள் நிறைவே வாரும்**
பின்மாரி பொழிந்திடுமே
தேவ ஆவியே தாகம் தீருமே
வல்லமையால் இன்று எமை நிரப்பிடுமே

### *சரணங்கள்*

1. புது எண்ணெய் அபிஷேகம்
புதுபெலன் அளித்திடுமே
நவமொழியால் துதித்திடவே
வல்லமை அளித்திடுமே – வல்லமை

2. சத்திய ஆவியே நீர்
நித்தமும் நடத்திடுமே
முத்திரையாய் அபிஷேகியும்
ஆவியின் அச்சாரமாய் – வல்லமை

3. அக்கினி அபிஷேகம்
நுகத்தினை முறித்திடுமே
சத்துருவை ஜெயித்திடவே
சத்துவம் அளித்திடுமே – வல்லமை

4. தூய நல் ஆவிதனை
துக்கமும் படுத்தாமல்
தூய வழி நடந்திடவே
பெலன் தந்து காத்திடுமே – வல்லமை

5. பெற்ற நல் ஆவிதனை
காத்திட வரம் தாரும்
ஆவியினால் நடந்திடவே
ஆளுகை செய்திடும் – வல்லமை

6. உலர்ந்திடும் எலும்புகளும்
உயிர்பெற்று எழும்பிடவே
எழுப்புதலை கண்டிடவே
வல்லமை அளித்திடுமே – வல்லமை

## பாடல் – 531

**அன்பின் உருவம் ஆண்டவர்**
அழைக்கிறார் நீ அருகில் வா
தொய்ந்துபோன உன் வாழ்வினை
கேட்கிறார் நீ அருகில் வா

ஓடிவா நீ ஓடிவா
கண் கலங்கியே நீயே வா
தூரமாய் நிற்கும் உன்னைத்தான்
அழைக்கிறார் நீ அருகில் வா

1. மனிதர் பலரை நம்பினாய்
பலமுறை தடுமாறினாய்
உற்றார் பெற்றார் அன்பெல்லாம்
கனவு போன்று அகலுமே

2. நண்பர் பலரும் இருப்பினும்
நாடும் அன்பைப் பெற்றாயோ
செல்வம் எல்லாம் மாய்கையே
உலகம் கானல் நீராமே

3. ஒருமுறை அன்பை ருசித்துமே
விழுந்துபோன நீ எழும்பி வா
பலமுறை துரோகம் செய்ததால்
இயேசுவின் கண்ணீர் துடைக்கவா

4. இன்னும் நொந்து போவானேன்
இன்றே அருகில் ஓடிவா
உள்ளம் முழுவதும் உன்னையே
தள்ளேன் என்றார் ஓடிவா

## பாடல் - 532

**கலிலேயா கடற்கரையோரம்**
ஓர் மனிதர் நடந்து சென்றார்
அவர்தான் இயேசு இரட்சகர்
உன் பாவத்தை போக்கும் உத்தமர்

1. காரிருள் சூழ்ந்தாலும் பெருங்கவலைகள்
தொடர்ந்தாலும் கண்ணீர் வடித்தாலும்
பெரும் கலக்கங்கள் பிடித்தாலும்
கர்த்தரின் குரல் உன்னை அழைக்கிறது
உன் கவலையை மாற்றிட துடிக்கிறது

நெஞ்சமே நினைத்திடு அவர்
அன்பினை ருசித்திடு

2. நண்பர்கள் பகைத்தாலும் – இந்த
நானிலம் வெறுத்தாலும்
பெற்றோர்கள் மறந்தாலும் உன்
உற்றார்கள் பிரிந்தாலும்
நாயகர் இயேசு உன்னை அறிந்திடுவார் – அவர்
நன்மையினால் வழி நடத்திடுவார் – நெஞ்சமே

3. ஏன் இந்த வேதனைகள்
என்று ஏங்கிடும் மனிதர்களே
என் இயேசுவின் போதனையை
ஏன் இன்று மறந்தீர்களோ
வேதனை தீர்த்திடும் வேந்தனவர் – மன
பாரத்தை போக்கிடும் தேவனவர் – நெஞ்சமே

## பாடல் – 533

**அன்பு இயேசுவின் அன்பு – அது**
அளவிட முடியாதது – நம்பு
இதை நீ நம்பு இந்த இகமதில் கிடைக்காதது

***சரணங்கள்***

1. தாய் தந்தை அன்பொருநாள் – அது
தணிந்தே போய்விடும்
நல்ல பிள்ளைகள் அன்பொருநாள் – அது
பிரிந்தே போய்விடும்

என்றென்றும் மாறாதது என் இயேசுவின்
தூய அன்பு
என் வாழ்வில் தீராதது என் தேவனின்
ஜீவ அன்பு

2. நண்பனின் அன்பொரு நாள் – அது
நலிந்தே போய்விடும்
நீ நம்பினோர் அன்பொருநாள் – அது
தணிந்தே போய்விடும் – என்றென்றும்

3. கணவனின் அன்பொருநாள் – அது
கரைந்தே போய்விடும்
நல்ல மனைவியின் அன்பொருநாள் – அது
மறைந்தே போய்விடும் – என்றென்றும்

4. தேசத்தின் அன்பொருநாள் – அது
தேய்ந்தே போய்விடும்
நல்ல பாசத்தின் அன்பொருநாள் – அது
பறந்தே போய்விடும் – என்றென்றும்

5. உறவினர் அன்பொருநாள் – அது
ஒழிந்தே போய்விடும்
உடன் பிறந்தவர் அன்பொருநாள் – அது
அழிந்தே போய்விடும் – என்றென்றும்

## பாடல் – 534

**இந்த காலம் பொல்லாதது – உன்னை**
கர்த்தர் அழைக்கிறார் (2)
நீ வாழும் வாழ்க்கைதான்
அது வாடகை வீடு தான்

1. உன்னை இரட்சிக்க உன் கூடவே இருக்கிறேன்
என்று வாக்கு அளித்தவர்
இன்று காத்து வருகிறார் – இந்த காலம்

2. வாலிப நாட்களில் உன் தேவனை தேடிவா
சாத்தான் களத்தில் போரிட
செயல் வீரராய் திகழவா – இந்த காலம்

3. பாவத்தின் சம்பளம் எரிநகரம் தான் திண்ணமே
சத்திய தேவனின் கிருபையோ
நித்திய ஜீவனை அருளுமே – இந்த காலம்

4. காலமோ முடியுதே தேவராஜ்ஜியம் நெருங்குதே
மனம் திரும்பி நீ வாழவே
மன்னன் இயேசு உன்னை அழைக்கிறார் – இந்த காலம்

5. அல்லேலூயா பாடியே பரலோகமே சேருவாய்
பரன் இயேசுவின் பாதத்தில்
நல்ல பங்கினை பெற்றிடுவாய் – இந்த காலம்

## பாடல் – 535

**கர்த்தருக்குக் காத்திருந்து**
கழுகுபோல் பெலனடைந்து
செட்டைகளை அடித்து
உயரே எழும்பிடுவாய்

புதுபெலன் அடைந்திடுவாய் நீ (8)

1. தாகமுள்ளன் மேல்
ஆவியை ஊற்றிடுவார்
வறண்ட நிலத்தின் மேல்
தண்ணீரை ஊற்றிடுவார் – புது பெலன்

2. சர்ப்பங்களையும் எடுப்பாய்
தேள்களையும் மிதிப்பாய்
சத்துருவின் அதிகாரம்
சகலமும் மேற்கொள்வாய் – புது பெலன்

3. சாத்தானின் கோட்டைகளை
சத்தியத்தால் தகர்ப்பாய்
சிலுவையை சுமந்திடுவாய்
ஜெயக்கொடி ஏற்றிடுவாய் – புது பெலன்

4. கர்த்தரில் பலனடையும்
பாக்கியம் பெற்றிடுவோம்
பெலத்தின் மேல் பெலனடைந்து
சீயோனுக்கு வருவாய் – புது பெலன்

## பாடல் – 536

**மணவாளன் கர்த்தர் இயேசு வருகின்றாரே**
மணவாட்டி சந்திக்க ஆயத்தம்தானா?
பிரியமே நீ ரூபவதி
எழுந்து வா உன் நேசரைச் சந்திக்கவே – மணவாளன்

1. குருவிகள் பாடும் சத்தம் எங்கும் கேட்குதே
காட்டுப்புறா சப்தம் நம் தேசம் நிறையுதே
அத்திமரம் காய்காய்க்க காலம் வந்ததே
திராட்சைக்கொடி பூ பூத்து வாசம் பெருகுதே – என் பிரியமே

2. மாரிக் காலம் சென்றது மழையும் வந்தது
பூமியிலே புஷ்பங்கள் பூத்துக் குலுங்குதே
கன்மலையின் சிகரங்களில் தங்கும் புறாவே
கர்த்தர் இயேசு வரும் நாளை சொல்லிப் பாடிடு – என் பிரியமே

3. சாரோனின் ரோஜாவாம் கர்த்தர் இயேசு
பள்ளத்தாக்கின் லீலியாம் பரமன் இயேசு
தாகம் தீர்க்கும் ஜீவ நதி கர்த்தர் இயேசு
பாவம் போக்கும் பரிகாரி பரமன் இயேசு – என் பிரியமே

## பாடல் – 537

**அன்பின் குரல் உன்னை அழைக்கின்றது**
ஆறுதல் அளிக்க துடிக்கின்றது
நீ செய்த பாவம் சொல் அவர் சமுகம்
மனங்கசந்தழுதிரக்கம் பெறுவாய் – அன்பின்

***சரணங்கள்***

1. துன்பமோ தொல்லையோ கடன் பாரமோ
வியாதியோ வியாகுல வேதனையோ
சோர்ந்திடாதே ஜீவ தேவனுண்டு
அவர்தாம் ஆண்டவராம் இயேசு – அன்பின்

2. உந்தனின் மீறுதல் பாராதவர்
உந்தனக்கரமங்கள் எண்ணாதவர்
உனக்காக ஜீவனைக் கொடுத்தவராம்
இயேசு அழைக்கும் அன்பின் குரல் – அன்பின்

3. பாவியான உன்னைத் தள்ளிடாமலர்
பாவத்தை வெறுத்த பாவநாசர்
பாவியாம் உன்னை மீட்டிடவே
பாசமாய் அழைக்கும் அன்பின் குரல் – அன்பின்

4. உன்னில் காணப்படும் சுயநீதி
அதை அழித்தாலே வரும் தேவநீதி
தன்னிடம் உன்னை சேர்த்துக்கொள்ள
தயவாய் அழைத்திடும் அன்பின் குரல் – அன்பின்

## பாடல் – 538

***பல்லவி***

**ஓ மனிதனே நீ எங்கே போகின்றாய்?**
காலையில் மலர்ந்து மாலையில் மறையும்
மலராய் வாழ்கின்றாய்

***சரணங்கள்***

1. பாவியாய் பிறந்த மானிடனே
பாவியாய் நீ மரிக்கின்றாய்
இயேசுவை உள்ளத்தில் ஏற்றுக்கொண்டால் நீ
இன்றே மரணத்தை வென்றிடுவாய்
நித்திய ஜீவனை பெற்று நீ மோட்சத்தில்
நிலைத்தென்றும் வாழ்ந்திடுவாய் – ஓ மனிதனே

2. மண்ணில் பிறந்த மானிடனே
மண்ணுக்கே நீ திரும்புவாய்
மரணம் உன்னை நெருங்கும் போது
எங்கே நீ ஓடுவாய்
மரணத்தின் பின்னே நடப்பது என்ன
என்பதை நீ அறிவாயா – ஓ மனிதனே

## பாடல் – 539

***பல்லவி***

**நல் மேய்ப்பன் இவரே – இயேசு**
நல் மேய்ப்பன் இவரே
சொல்லொண்ணா அன்பினால்
தன்னுயிர் ஈந்த நல் மேய்ப்பன் இவரே

***சரணங்கள்***

1. ஆடுகள் பெயரினை ஆயனே அறிவார்
அழியாமை ஜீவன் அளித்திட வந்தார்
ஆடுகள் முன்னே செல்லுகின்றார்
அவரின் பின்னே சென்றிடுவோம் – நல் மேய்ப்பன்

2. கள்வர் மந்தையை சாடிடும்போதும்
கயரின் வஞ்சக வலைவீசும்போதும்
பிள்ளையைப் போல தோள்களிலே
கள்ளமில்லா துயில் கொண்டிடுமே – நல் மேய்ப்பன்

3. மேய்ப்பனின் குரலை அறிந்திடும் மந்தை
மேய்ப்பனின் சித்தம் செய்திடும் ஆடுகள்
குரலொலி கேட்டு தேடிடவே
குயவனின் கையினில் அடங்கிடுமே – நல் மேய்ப்பன்

4. இயேசுவே வாசல் இயேசுவே வழியாம்
அவர் வழி சென்றால் மேய்ச்சலை காண்பாய்
ஆண்டவர் இணைத்த மந்தையில்
அநுதினம் நீயும் செயல்படுவாய் – நல் மேய்ப்பன்

5. பெரிய மேய்ப்பர் வெளிப்படும்போது
வெகுமதி யாவும் அளித்திடுவாரே
நீதியும் பரிசுத்தம் காத்திடுவோம்
புனிதரின் இராஜ்ஜியம் சேர்ந்திடுவோம் – நல் மேய்ப்பன்

## பாடல் – 540

### *பல்லவி*

**அன்பின் தேவன் ஏசு உன்னை அழைக்கிறார்**
கல்வாரியின் மேட்டினில் கலங்கும் கர்த்தர் உண்டல்லோ
உன்னை எண்ணி உள்ளம் நொந்து
அணைக்க ஏசு துடிக்கிறார்
கவலையேன் கலக்கமேன் கர்த்தர் ஏசு அழைக்கிறார்

### *சரணங்கள்*

1. மனிதர்கள் அன்பு மாறலாம்
மறைவாக தீது பேசலாம்
அன்பு காணா இதயமே
அன்பின் தேவனை அண்டிக்கொள் – அன்பின்

2. வியாதிகள் தொல்லையோ தோல்வியோ
வாழ்க்கையில் என்ன ஏக்கமோ
கண்ணீர்தான் உந்தன் படுக்கையோ
கலங்காதே மன்னன் ஏசு பார் – அன்பின்

3. வேலை வசதிகள் இல்லையோ
வீட்டினில் வறுமை தொல்லையோ
மரண பயமும் நெருங்குதோ
மரணம் வென்ற ஏசு பார் – அன்பின்

**பாடல் – 541**

**கிருபையே உன்னை இந்நாள் வரையும் காத்தது**
என் கிருபையே

1. பாதையில் கஷ்டம் அணுகிடும் போது
பங்கம் வராது நான் உன்னைத் தாங்கினேன்
பெலன் ஈந்தேன் கரத்தால் தூக்கினேன் உன்னை நான்
எந்தன் அன்பினால் உன்னை நிறுத்த – கிருபையே

2. சோதனையாலே சோர்ந்திடும்போது
சொந்தமென நான் உன்னைச் சந்தித்தேன்
ஜோதியை உன் முன்னில் ஜொலித்திடச் செய்திட்டேன்
ஜெயகீதங்கள் பாடவைத்திட்டேன் – கிருபையே

3. ஏகனாய் நீயும் சஞ்சலத்தாலே
ஏங்கும்போது உன் அண்டை வந்திட்டேன்
ஏற்ற நல்துணையை ஈந்திட்டேன் அல்லோ நான்
என்றும் உன்னை என் சொந்தமாக்கினேன் – கிருபையே

4. ஜெயமான பாதை சென்றிடச் செய்தேன்
செப்பமாக உன் கரம் பிடித்தேன்
ஜெய ஜெயகீதங்கள் தொனித்திடச் செய்தேனே
சேவை செய்யவும் கிருபை தந்தேனே – கிருபையே

5. என்றென்றுமாக என் கிருபை காட்ட
கொண்டேன் உன்னை இம்மண்ணில் பிரித்து
என் அரும் மகனே காப்பேனே உன்னை நான்
உன் தந்தை நான் உன்னை விடேனே – கிருபையே

## பாடல் – 542

*பல்லவி*

**இன்பமிதே பேரின்பமிதே**
இயேசு நாமம் இன்பமிதே
இன்பமிதே நல் இன்பமிதே
இயேசு நாமமே

*சரணங்கள்*

1. பாவம் போக்க வந்த நாமம்
இயேசு நாமமே
வாதை போக்க வந்த நாமம்
இயேசுவின் நாமமே – இன்பமிதே

2. நேற்றும் இன்றும் மாறாத நாமம்
இயேசு நாமமே
தேனிலும் இனிய நாமம்
இயேசுவின் நாமமே – இன்பமிதே

3. ஜீவா பாதை காட்டும் நாமம்
இயேசு நாமமே
ஜீவன் பலன் தந்த நாமம்
இயேசுவின் நாமமே – இன்பமிதே

4. சாவு பயங்கள் நீக்கும் நாமம்
இயேசு நாமமே
சாபம் ரோகம் நீக்கும் நாமம்
இயேசுவின் நாமமே – இன்பமிதே

5. தேவ ராஜ்ஜியம் சேர்க்கும் நாமம்
இயேசு நாமமே
தேவ நீதி நிறைந்த நாமம்
இயேசுவின் நாமமே – இன்பமிதே

## பாடல் – 543

**இறைவன் இன்று பவனி வந்தால் என்ன நடக்கும்?**
கறைபடிந்த மனுக்குலத்திற்கென்ன கிடைக்கும்?

1. தெருக்களிலே அமைதி வரும்
தேனும் பாலும் வழிந்தோடும்
வருந்துவோர்க்கு வழி பிறக்கும்
வானருளின் மடை திறக்கும்

2. திருச்சபையின் புதுமை வரும்
தன்னலமோ பறந்தோடும்
சமயத்திலே மலர்ச்சி வரும்
சாந்த குணம் எழுந்தாடும்

3. அரசியலில் நேர்மை வரும்
அன்பின் வழி ஆட்சி வரும்
இமயம் முதல் குமரி வரை
இறை அன்பின் கொடி பறக்கும்

4. பார் முழுதும் ஒன்றுபடும்
பிரிவினைகள் தகர்ந்தோடும்
பாமரர்க்கு வாழ்வு வரும்
பரமன் துணை இணைந்து வரும்

## பாடல் – 544

**எந்தன் பூமானைக்காண சிந்தை பெருகுதையோ**
என்றைக்குக் காண்பேனோ

1. சுந்தரத்தில் மிகுந்து அந்தரத்திலிருக்கும்
எந்தன் பூமானைக் காண – அழகுடைய
அண்ணல் இயேசுவைக் காண – எந்தன்

2. விண்ணிலிருந்தவர் மண்ணின் மேல் வந்தவர்
கன்னிகையில் பிறந்தவர் – லாசருக்காக
கண்ணீரை விட்டழுதவர் – எந்தன்

3. இன்னும் வர என்ன தாமதம் செல்லுமோ
சொன்ன வாக்கை நினைத்து – அடியேனுந்தன்
பாதம் பணிந்து வந்தேன் – எந்தன்

4. பொல்லாதோரை இரட்சிக்க வல்ல பராபரன்
என்ன துயரடைந்தார் – அதை நினைத்தால்
சொல்ல முடியுதில்லை – எந்தன்

5. கன்னத்தில் அடிபட்டுக் கண்ணீர் விடும் வேளை
என்னை நினைத்தீரோ நீர் – அதை நினைத்தால்
உம்மை மறப்பேனோ நான் – எந்தன்

## பாடல் – 545

**வாழுவேன், அன்பர் நாடதில் ஆர்ப்பரிப்புடன்**
வாஞ்சையுடன் காத்த எந்தன் ஆவல் தீர்த்திட்டார்
வாழுவேன் இன்ப நாடதில்

1. என்ன இம்மேன்மை என் போக்காய்த் தானோ?
என்னென்ன இன்பம் என் சொந்தமானதோ?
ஏற்றுவேன் என் உள்ளமதனால் – துதி
என்றும் என்னை மீட்ட அன்பைக் கூறுவேன் நிதம் – வாழு

2. அன்பின் மகிமை, அன்பே நான் காண
அன்பே, உம் சாயல் என்னில் தரித்தீரே
ஆனந்தத்தால் சாற்றிடுவேன் நான் – துதி
அன்பே உள்ளமதில் பொங்கிச் சாடுதே எனில் – வாழு

3. கைவேலையில்லா கனமான வீடே
கைவசமாக்க அருள் என்னிலிருந்தீரே
காதலா, நின் நன்றி கூறுவேன் தினம்
காலா காலங்களாகப் பாடிடுவேன் நான் புகழ் – வாழு

4. நின் கிருபை தேவா என்றென்றுமாக
இவ்வேழை காண இதயந் திறந்தீரே
இன்பமாகப் போற்றிடுவேன் நான் – இனி
இன்னோர் அண்ணலெனக் கெங்குமில்லையே வேறு – வாழு

5. உம் ரூபம் தானே என் பிரியம் தேவே
உம்மோடு சேர என் நெஞ்சு பொங்குதே
உன்னதமான உம்மேன்மை எத்தனை – மகா
ஊற்றுவேன் நிதம் என் உள்ளமதை நான் நிதம் – வாழு

## பாடல் – 546

**தேவன் வருகின்றார் வேகம் இறங்கி**
தேவ பர்வதம் தம் பாதம் நிறுத்தி
பூமிதனை நியாயம் தீர்த்திடுவார்
பூலோக மக்களும் கண்டிடுவார்

இயேசு கிறிஸ்து வருகின்றார்
இந்த கடைசி காலத்திலே
கர்த்தரைக் குத்தின கண்கள் யாவும்
கண்டு புலம்பிடுமே

2. ஏழாம் தலைமுறை ஏனோக் குரைத்த
எல்லாம் நிறைவேறும் காலம் நெருங்க
ஏசு கிறிஸ்துவின் சத்தியத்தை
ஏற்க மறுத்தவர் நடுங்குவார் – இயேசு

3. தம்மை விரோதித்த அவபக்தரை
செம்மை வழிகளில் செல்லாதவரை
ஆண்டவர் ஆயிரம் பக்தரோடே
அந்நாளிலே நியாயத் தீர்த்திடுவார் – இயேசு

4. எதை விதைத்தாயோ அதை அறுப்பாய்
எல்லா அநீதிக்கும் கூலிபெறுவாய்
கல்வாரி சிலுவை அண்டிடுவாய்
கர்த்தரை நம்பியே தப்பிடுவாய் – இயேசு

5. அந்தி கிறிஸ்தன்றே அழிந்து மாள
அன்பராம் இயேசுவே ஜெயம் சிறக்க
வாயில் இருபுறம் கருக்குள்ள
வாளால் நெருப்பாக யுத்தம் செய்வார் – இயேசு

6. கையால் பெயர்க்காத கல் ஒன்று பாயும்
கன்மலையாகி இப்பூமி நிரம்பும்
கிரீடங்கள், பாறைகள் கவிழ்ந்திடும்
கிறிஸ்தேசு உரிமை பெற்றிடுவார் – இயேசு

7. யுத்தம் துடங்குமுன் மத்திய வானம்
சுத்தரை அழைக்க கர்த்தரே வாரும்
ஆவி மணவாட்டி வாரும் என்றே
ஆண்டவர் ஏசுவை அழைக்கின்றோம் – இயேசு

## பாடல் – 547

**இன்பக் கானானுக்குள் ஏழை செல்ல**
இயேசுவின் மார்பில் நான் ஆனந்திப்பேன்

2. பரம சுகங்களின் இனிய ரசம்
பரமேசனோடு யான் பானம் செய்வேன்

3. பரமபிதா வெந்தன் கண்ணினின்று
அழுகையின் கண்ணீரைத் துடைத்திடுவார்

4. சத்துரு சேனைகள் அங்கேயில்லை
இயேசுவின் புத்திரர் மாத்திரமே

5. தேவாட்டுக்குட்டியின் திரு மனைவி
சிறப்புடனிலங்கிடும் தேசமது

6. கேரூபின் சேராபின் பாடிடவே
மூப்பரும் சாஷ்டாங்கம் பணிகிறாரே

## பாடல் – 548

**உச்சித மோட்ச பட்டணம் போக**
ஓடி நடப்போமே– அங்கே
உன்னத யேசு மன்னவருண்டு, ஓயா இன்பமுண்டு

1. சித்திரச் சீயோன் பெற்றிடச் செல்லும்
சேனையின் கூட்டமதாய் – எங்கள்
ஜீவனினதிபர் யேசு நம்மகிபர்
சீயோன் பதிமனுவேல் – உச்சித

2. அன்பினால் அழைப்பார், ஆறுதல் சொல்வார்
அதிபதி யேசையர் – அங்கே
இன்பங்களுண்டு; இயேசுவின் சமூகம்
என்றென்றும் ஆறுதலே – உச்சித

3. கீதங்களோடு இயேசுவைப் போற்றி
கெம்பீரமாய் நடப்போம் – அங்கே
கிளர் ஒளியுள்ள பட்டன ராஜன்
கீதங்கள் நாம் அறைவோம் – உச்சித

## பாடல் – 549

**மேலோகத்தை நாடுகிறோம்**
அதின் ஜோதி பிரகாசத்தையும்
பேரின்பத்தை வர்ணிக்கிறோம்
பார்த்தால் என்னமாயிருக்கும்?

பார்த்தால் பார்த்தால்
பார்த்தால் என்னமாயிருக்கும்
பேரின்பத்தை வர்ணிக்கிறோம்
பார்த்தால் என்னமாயிருக்கும்

2. எப்பாவமும் இல்லாமற்போம்
கண்ணீர் சஞ்சலம் சோதனையும்
வெற்றி சிறந்து ஓய்ந்திருப்போம்
சேர்ந்தால் என்னமாயிருக்கும்

3. அங்கே யேசுவையே சேவிப்போம்
வெண் வஸ்திரந்தான் தரிப்போம்
வானோர் சங்கம் சேர்ந்திடுவோம்
சேர்ந்தால் என்னமாயிருக்கும்

## பாடல் – 550

**எந்தன் உள்ளம் உண்மை வாழ்வை வாஞ்சிக்குதே**
நேர்மையான ஆட்சி காண துடிக்கின்றதே
என் மனம் முழு அமைதியை நாடுகின்றதே
என்தன் இயேசுவின் வழி நடக்க ஏங்குகின்றதே

இயேசு ராஜா வாழ்க
அவர் நாமம் வாழ்க
அவர் ஆட்சி ஓங்குக
அவர் மாட்சி தங்குக

1. கொள்ளை கொலையுமில்லை ஊழல் வஞ்சகமுமில்லை
நோயும் பேயுமில்லை, சாவு துக்கமில்லை
தீயவன் செயல் கிளர்ச்சிகள் செய்வாரில்லை
இயேசு ராஜன் ஆட்சியில் நன்மை குறைவதில்லை – இயேசு

2. உண்மை சிறந்திலங்கும் நீதி நிலைத்து நிற்கும்
அன்பு உயர்ந்து ஓங்கும் இன்பம் வழிந்து ஓடும்
எங்கும் ஒளி வீசிடும் ஓயா கீதம் கேட்டிடும்
என்தன் இயேசு ஆட்சியில் சுக வாழ்வு நிலைக்கும் – இயேசு

3. பாதாள மரண சேனை முறித்திடுவார்
கெர்ச்சிக்கும் சிங்கத்தின் வாயை மூடிடுவார்
பாவ அழிவு நீக்கி எந்தன் இயேசு ராஜன்தான்
வெற்றிக்கிரீடம் சூட்டி என்னை மோட்சம் சேர்ப்பாரே – இயேசு

## பாடல் – 551

**தூதர் தொனி கேட்கும் அந்த இன்ப நாள்**
தூயர் சேர்ந்து வானில் தோன்றிடும் அந்நாள்
நேசர் இங்கே வானில் வந்திடும் நந்நாள்
பரம சீயோன் நாடு நேராகச் செல்லுவோம்

செல்லுவோம் வெல்லுவோம்
பரம சீயோன் நாட்டின் நேராய் செல்லுவோம்
போற்றுவோம் புகழ்வோம்
அன்பர் இயேசு நாமம் நாமும் போற்றுவோம்

1. பாவம் சாபம் யாவும் நீக்கிப் போக்கும் நாள்
பாடும் சாவும் இல்லா நாட்டின் சேரும்
மீட்பர் வாழ்க்கை நம்பி வாழ்ந்தோர் கூடும் நாள்
பரம சீயோன் நாடு நேராய்ச் செல்லுவோம்

2. பூவில் பூவோர் வேலை ஓய்ந்திடும் அந்நாள்
பாரில் நேசர் இயேசு வந்திடும் அந்நாள்
மீட்கப்பட்டோர் கூடிப் பாடிடும் அந்நாள்
பரம சீயோன் நாடு நேராய் செல்லுவோம்

3. நீதன் இயேசு நியாயம் தீர்த்திடும் அந்நாள்
சுதன் சுத்தரைப் பிரித்திடும் அந்நாள்
நேசர் வலப்பக்கம் போய்ச் சேரும் அந்நாள்
பரம சீயோன் நாடு நேராய்ச் செல்லுவோம்

4. அன்பர் மீட்பைப் பெற்றோர் கூடிப் பாடும் நாள்
அண்ணல் இயேசுவைக் கண்டு களிக்கும் நாள்
அல்லேலூயா பாட்டின் ஓசை கேட்கும் நாள்
பரம சீயோன் நாடு நேராய்ச் செல்லுவோம்

## பாடல் – 552

**வெற்றி கீதம் பாடும் இயேசுவின் பிள்ளைகளே**
ஜெயக்கொடி கையிலேந்தும் இயேசுவின் பிள்ளைகளே
பாடுங்கள் அல்லேலூயா இயேசுவின் பிள்ளைகளே (2)
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா (2)

### *சரணங்கள்*

1. பாவத்தின் மீது வெற்றி
சாபத்தின் மீது வெற்றி
வியாதியின் பேரில் வெற்றி
மரணத்தின் மேலும் வெற்றி – பாடுங்கள்

2. தேவனால் பிறந்த எவனும்
பாவம் செய்வதில்லை
தன்னைக் காத்துக் கொள்வான்
சாத்தான் தொடுவதில்லை – பாடுங்கள்

3. சோதனை தொடர்ந்து வந்தும்
வேதனை தொடர்வதில்லை
தாங்கும் பெலனை ஈவார்
தப்பிடும் வழியைத் தருவார் – பாடுங்கள்

4. சாத்தான் சேனையை விட்டு
இயேசுவின் சேனை சேர்ந்தோம்
பாவ வாழ்வினை விட்டு
தேவப் பிள்ளைகளானோம் – பாடுங்கள்

## பாடல் – 553

**ஜெய ராஜ கொடி ஏற்றிக்காட்டியே**
யுத்தஞ் செய்யச் செல்லுவோம்
வெற்றி மாலை சூடி ஜெயம் பெறவே
பூரிப்போடு பாடுவோம்

செல்லுவோம், வெல்லுவோம்
நல் மீட்பர் நாமம் மூலமாய்
வெற்றி சிறப்பார், ஆளுவார்
பூமி எங்கும் ஜோதியாய்

2. எதிர் சேனை சீறிப் பாய்ந்து வரினும்
ராஜ கொடி காட்டுவோம்
திரள் கூட்டமே போராட்டஞ் செய்யினும்
வெற்றி வேந்தராகுவோம்

3. எந்தச் தேச ஜாதி பாஷைக் காரரும்
சுவிசேஷங் கேட்பதால்
யேசு நாதர் மாண்பாய் ஆளும் காலமும்
மா சமீபமானதால்

4. அந்த நல்ல காலம் வந்தவுடன்
ராஜரீகம் பண்ணுவார்
அவபக்தி யாவும் ஒழிந்திடவே
நீதிமுறை நாட்டுவார்

## பாடல் – 554

**பூவின் நற்கந்தம் வீசும் சோலையாயினும்**
நல்ல தண்ணீர் ஓடும் பள்ளத்தாக்கிலேயும்
யேசுநாதர் பின்சென்றேகி மோட்சம் நாடுவேன்
விண்ணில் சூடும் க்ரீடம் நோக்கி ஓடுவேன்.

பின் செல்வேனே மீட்பர் பின்செல்வேனே
எங்கேயும் எப்போதும் பின்னே செல்லுவேன்
பின் செல்வேனே மீட்பர் பின் செல்வேனே
யேசு காட்டும் பாதையெல்லாம் செல்லுவேன்

1. கார்மேகம் மேலேழுடும் பள்ளமெங்கிலும்
காற்றகோரமாக மோதும் ஸ்தானத்திலும்
யேசு பாதை காட்டச் சற்றும் அஞ்சவே மாட்டேன்
ரட்சகர் கை தாங்கத் தைரியம் கொள்ளுவேன் – பின்

3. நாள்தோறும் யேசுநாதர் கிட்டிச் சேருவேன்
மேடானாலும் காடானாலும் பின்செல்லுவேன்
மீட்பர் என்னை மோசமின்றிச் சுகமே காப்பார்
விண்ணில் தாசரோடு சேர்ந்து வாழ்விப்பார் – பின்

## பாடல் – 555

**இயேசுவை நம்பி பற்றிக் கொண்டேன்**
மாட்சிமையான மீட்பைப் பெற்றேன்
தேவ குமாரன் ரட்சை செய்தார்
பாவியாம் என்னை ஏற்றுக் கொண்டார்.

இயேசுவைப் பாடிப் போற்றுகிறேன்
நேசரைப் பார்த்துப் பூரிக்கிறேன்
மீட்பரை நம்பி நேசிக்கிறேன்
நீடூழி காலம் ஸ்தோத்தரிப்பேன்.

2. அன்பு பாராட்டிக் காப்பவராம்
எந்தனைத் தாங்கிப் பூரணமாய்
இன்பமும் நித்தம் ஊட்டுகிறார்
இன்னும் நீங்காமல் பாதுகாப்பார்

3. மெய்ச் சமாதானம் ரம்மியமும்
தூய தேவாவி வல்லமையும்
புண்ணிய நாதர் தந்து விட்டார்
விண்ணிலும் சேர்த்து வாழச் செய்வார்

## பாடல் – 556

**சர்வாதிகாரி சர்வ வல்ல தேவனாம்**
சர்வாதிபதியாம் என் இயேசுவே – அல்லேலூயா

1. அடிமையாக வாழ்ந்தவர்க்கு விடுதலை ஈந்தார்
உரிமையிழந்து தவித்தவர்க்கு நியாயமே செய்தார் – அல்லேலூயா (8)

2. நாவு எல்லாம் அறிக்கை செய்யும் நம் இயேசு தேவன்
முழங்கால் யாவும் முடங்கிடுமே அவரின் நாமத்தில் – அல்லேலூயா (8)

3. ராஜாதி ராஜாவாய் மேகத்தில் வருவார்
அவரோடு நாம் இங்கே ஆளுகை செய்வோம் – அல்லேலூயா (8)

## பாடல் – 557

**யெகோவா நிசி யேகோவா நிசியை**
போற்றிப் பாடுவோம்
எங்கள் கொடி வெற்றிக் கொடியே – அல்லேலூயா

***சரணங்கள்***

1. வீறு கொண்டெழுவீர் இயேசு வீரரே
மாறு கொண்டு மன்னர் முன்னே செல்கிறார்
சீறியெழும் சிங்கங்கள் நாம் அல்லவோ
மீறும் எதிரி சதிகளுக்கு மிரளவா?
யூத சிங்கம் யுத்த சிங்கமே – யெகோவா

2. கர்த்தர் துணை நின்று யுத்தம் செய்வாரே
கலங்கி நிற்க காரணங்கள் இல்லையே
கைகளைத் தளர்ந்திடாமல் தாங்கியே
கர்த்தர் இயேசு சத்திய ஆவி நிற்கிறார்
கர்த்தர் நல்ல யுத்த வீரரே – யெகோவா

3. எதிரி வெள்ளம் போல ஏறி வருகின்றான்
இயேசு ராஜா வேகம் கொடியை ஏற்றுவார்
கோலியாத்தின் வேஷமிங்கு செல்லுமா?
கோஷமிடும் இளைஞரின் முன் நில்லுமா?
கர்த்தர் நாமம் வல்ல நாமம் – யெகோவா

4. ஆவியில் நிறைந்த ஜெபம் செய்வோமே
ஆயுதங்கள் அணிந்து களம் செல்வோமே
ஆர்ப்பரித்து அலங்கமதை வீழ்த்தியே
ஆவிகளின் சேனைகளை வெல்வோமே
கொடிகள் ஏந்தும் படைகள் அல்லவோ – யெகோவா

5. நமக்கிருக்கும் இந்த பெலன் போதுமே
நாதன் இயேசு அனுப்புவதால் போவோமே
பட்டயமோ புயபலமோ தேவையா?
பரம தேவ ஆவி நம்மில் இல்லையா?
ஜீவ தேவ சேனை அல்லவோ? – யெகோவா

## பாடல் – 558

**பறக்குதே ஜெயக்கொடி பறக்குதே**
பறக்குதே சிலுவைக்கொடி பறக்குதே
காடு மேடு வீடு பட்டித் தொட்டி நகரம்
அகில உலக தேசம் இயேசுவுக்கே சொந்தம்

1. கேட்குதே எங்கும் தொனி கேட்குதே
அல்லேலூயா (4)
ஜீவ வார்த்தை என்றும் வழி நடத்தும் உன்னை
வேத வாக்கு ஒன்றும் மாறுவதும் இல்லை – பறக்குதே

2. வீசுதே அருள் மணம் வீசுதே
அல்லேலூயா (4)
இயேசு ராஜன் சேனை ஓசை முழக்கத்தோடு
சிலுவைக்கொடி ஏந்தி பவனியாக செல்லும் – பறக்குதே

3. ஊற்றுதே ஆவி மழை ஊற்றுதே
அல்லேலூயா (4)
ஆடிப்பாடும் கூட்டம் ஆர்ப்பரிக்கும் வேளை
ஆனந்தத்தில் மகிழ உள்ளமெல்லாம் பொங்க – பறக்குதே

## பாடல் – 559

**பெரியவர் (3) இயேசு**
யோனாவிலும் பெரியவர்
சாலமோனிலும் பெரியவர்
தேவாலயத்தில் பெரியவர்
என்னில் இருப்பவர் பெரியவர்

1. கானாவூரினிலே கல்யாண வீட்டினிலே
தண்ணீரை ரசமாக மாற்றின தேவன் – இயேசு

2. நாயீன் ஊரினிலே நடுத்தெரு வீதியிலே
பாடை தொட்டு வாலிபனே எழுந்திரு என்றார் – இயேசு

3. நாலாம் ஜாமத்திலே நடுக்கடல் நீரினிலே
நடந்து வந்து சீஷர்களைத் தேற்றின தேவன் – இயேசு

## பாடல் – 560

**கீதம் கீதம் ஜெய ஜெய கீதம்**
கைகொட்டிப் பாடிடுவோம்
இயேசு ராஜன் உயிர்த்தெழுந்தார் – அல்லேலூயா
ஜெயம் என்று ஆர்ப்பரிப்போம் – ஆ! ஆ!

1. பார் அதோ கல்லறை மூடின பெருங்கல்
புரண்டுருண்டோடுதுபார் – அங்கு
போட்ட முத்திரை காவல் நிற்குமோ
தேவ புத்திரர் சந்நிதிமுன் – ஆ! ஆ! – கீதம்

2. வேண்டாம் வேண்டாம் அழுதிட வேண்டாம்
ஓடி உரைத்திடவோ – தாம்
கூறின மாமறை விட்டனர் கல்லறை
போங்கள் கலிலேயாவுக்கு – ஆ! ஆ! – கீதம்

3. அன்னா காய்பா ஆரியர் சங்கம்
அதிரடி கொள்ளுகின்றார் – இன்னா
பூத கணங்கள் இடி ஒலி கண்டு
பயந்து நடுங்குகின்றார் – ஆ! ஆ! – கீதம்

4. வாசல் நிலைகளை உயர்த்தி நடப்போம்
வருகிறார் ஜெய வீரன் – நாமம்
மேள வாத்தியம் கைமணி பூரிகை
எடுத்து முழங்கிடுவோம் – ආ! ஆ! – கீதம்

## பாடல் – 561

**அழகாய் நிற்கும் யார் இவர்கள்**
திரளாய் நிற்கும் யார் இவர்கள்?
சேனை தலைவராம் இயேசுவின் பொற்றளத்தில்
அழகாய் நிற்கும் யார் இவர்கள்?

***சரணங்கள்***

1. ஒரு தாலந்தோ இரண்டு தாலந்தோ
ஐந்து தாலந்தோ உபயோகித்தோர்
சிறிதானதோ பெரிதானதோ பெற்ற பணி
செய்து முடித்தோர் – அழகாய்

2. காடு மேடு கடந்து சென்று
கர்த்தர் அன்பைப் பகர்ந்தவர்கள்
உயர்வினிலும் தாழ்வினிலும்
ஊக்கமாக ஜெபித்தவர்கள் – அழகாய்

3. தனிமையிலும் வறுமையிலும்
லாசரு போன்று நின்றவர்கள்
யாசித்தாலும் போஷித்தாலும்
விசுவாசத்தைக் காத்தவர்கள் – அழகாய்

4. எல்லா ஜாதியார் எல்லாக் கோத்திரம்
எல்லா மொழியும் பேசும் மக்களாம்
சிலுவையின் கீழ் இயேசு இரத்தத்தால்
சீர் போராட்டம் செய்து முடித்தோர் – அழகாய்

5. வெள்ளை அங்கியைத் தரித்துக் கொண்டு
வெள்ளை குருத்தாம் ஓலை பிடித்து
ஆர்ப்பரிப்பார் சிங்காசனம் முன்பு
ஆட்டுக்குட்டிக்கே மகிமையென்று – அழகாய்

6. இனி இவர்கள் பசி அடையார்
இனி இவர்கள் தாகமடையார்
வெயிலாகிலும் அனலாகிலும்
வேதனையை அளிப்பதில்லை. – அழகாய்

7. ஆட்டுக்குட்டி தான் இவர் கண்ணீரை
அற அகற்றித் துடைத்திடுவார்
அழைத்துச் செல்வார் இன்ப ஊற்றுக்கே
அள்ளிப் பருக இயேசு தாமே – அழகாய்

## பாடல் – 562

**தேசமே பயப்படாதே**
மகிழ்ந்து களிகூரு
மன்னவர் கர்த்தர் உந்தனுக்கே
மாபெரும் காரியம் செயதிடுவார்

1. செழிப்பான புது வாழ்வு
தேவனே அருளுவார்
சுக வாழ்வு சமாதானம்
சந்தோஷம் தந்திடுவார் (2) – தேசமே

2. மலைபோல வருவதெல்லாம்
பனிபோல் மறைந்திடுமே
உன்னதரின் கிருபைகளும்
உந்தனைச் சூழ்ந்திடுமே (2) – தேசமே

3. தேவனுடன் உறவுகொண்டு
தினம் தினம் வாழந்திடுவாய்
இம்மையிலும் மறுமையிலும்
இன்பத்தை ருசித்திடுவாய் (2) – தேசமே

## பாடல் – 563

**தேசமே பயப்படாதே மகிழ்ந்து களிகூரு**
சேனையின் கர்த்தர் உன் நடுவில்
பெரிய காரியம் செயதிடுவார்

### *சரணங்கள்*

1. பெலத்தினாலும் அல்லவே
பராக்கிரமும் அல்லவே
ஆவியினாலே ஆகும் என்று
ஆண்டவர் வாக்கு அருளினாரே – தேசமே

2. கசந்த மாறா மதுரமாகும்
கொடிய யோர்தான் அகன்றிடும்
நித்தமும் உன்னை நல்வழி நடத்தி
ஆத்துமாவை தினம் தேற்றிடுவார் – தேசமே

3. கிறிஸ்து இயேசு சிந்தையில்
நிலைத்து என்றும் ஜீவிப்பாய்
ஆவியின் பெலத்தால் அநுதினம் நிறைந்து
உத்தம சாட்சியாய் விளங்கிடுவாய் – தேசமே

## பாடல் – 564

**கனி கொடுப்போம் கனி கொடுப்போம்**
இயேசுவுக்காய் நாம் கனி கொடுப்போம்
அல்லேலூயா (3)

1. இயேசுவே மெய்யான திராட்சச் செடி
நாமே கனிதரும் அவர் கொடிகள்
இயேசுவின் வசனம் நம்மைச் சுத்தி செய்யவே
மிகுந்த கினகளைக் கொடுத்திடுவோம்

2. அன்பு சந்தோஷம், சமாதானம்
நீடிய பொறுமை, நற்குணம் தயவு
விசுவாசம் சாந்தம் இச்சையடக்கமுமாம்
ஆவியின் நிறைவின் அடையாளமாம்

3. தனக்குத்தானே கனிகொடுத்து நின்ற
பயனற்ற இஸ்ரவேல் பாழானதே
சுவர் மீது படர்ந்து பிறர்க்குக் கனிதரும்
யோசேப்பு போல நாம் துளிர்த்திடுவோம்

4. உதடுகளின் கனி ஸ்தோத்திரத்தை
உன்னத பலியாய்ச் செலுத்திடுவோம்
உள்ளமாம் வேரில் பரிசுத்தமிருந்தால்
உதடுகள் செயல்கள் பரிசுத்தமாம்

5. கனிதரும் சீடர் நாம் கனம் பெறுவோம்
கனிகளால் பிதாவைக் கனப்படுத்துவோம்
ஜீவ விருட்சத்தின் கனிகளைப் புசித்து
நீடித்த நாட்களாய் நிலைத்திருப்போம்

## பாடல் - 565

**அருளுருவே, நரருருவாய் என்னிமித்தம்**
இது தருணம் ஏன்வருத்தமாம் – என் தேசுவே – ஐயா நீர்
அவஸ்தையுறக் காரணமேன், ஆதி மொழியாலோ

2. பொற்கிரீடம் அணி சிரசில் என்னிமித்தம் ஐயா நீர்
போத நெருங்குண்டதேவை பொற்கொடி செய்வினையோ

3. அருள்கரங்கள் இரண்டிலேயும் என்னிமித்தம் – ஐயா நீர்
ஆணியறையுண்ட தேவை அறுத்த கனி வினையோ

4. திரு விலாவில் ஈட்டியினால் என்னிமித்தம் – ஐயா நீர்
திறக்க மனங்கொண்ட தேனோ, தேவனுரைதானோ

5. பங்கயப் பூ பாதந்தன்னில் என்னிமித்தம் – ஐயா நீர்
படுகாய மானதாகி பகர்ந்த மொழியாலோ

6. சோரி சிந்தும் வேர்வையதால், என்னிமித்தம் – ஐயா நீர்
சோரி சிந்தக் காரணமேன், தேவனுரைதானோ

7. துய்ய திருமேனியெல்லா என்னிமித்தம் – ஐயா நீர்
சோரி வெள்ள மானதாகி சொன்ன மொழியாலே

8. வன்மையுடன், உடல் கிழிய, என்னிமித்தம் – ஐயா நீர்
வாரடிகள் பட்டதேனோ, ஆதி மொழியாலோ

9. தேவனுமாய் மனுஷனுமாய் என்னிமித்தம் – ஐயா நீர்
தேடி வந்த காரணமேன் தேவனுரைதானோ

10. ஆவியிலே வேதனையாய் என்னிமித்தம் ஐயா நீர்
அழுது கொஞ்சம் காரணமேன் ஆதி மொழியாலே

## பாடல் – 566

**ஓ யேசுவே யென்னை மூட இரத்தத்தின் கீழ் இரத்தத்தின்கீழ்**
பாவமும் நீங்கிப் போய்விட இரத்தத்தின் கீழ் வையும்
இரத்தத்தின் கீழ் என்னை மூடும் குற்றம்
குறையின்றியாக்கிடும்
நித்தமுமென்னைக் காத்திடும் இரத்தத்தின் கீழ்வையும்

2. பாவிகள் பிரவேசித்து இரத்தத்தின் கீழ் இரத்தத்தின் கீழ்
பாவத்தின் மேல் மீட்படைய இரத்தத்தின் கீழ் வையும்

3. ஆவியின் பூரணம் பெற இரத்தத்தின் கீழ் இரத்தத்தின் கீழ்
ஆத்துமாவின் சுத்தியைப் பெற இரத்தத்தின் கீழ் வையும்

4. இயேசுவே எந்தன் இன்பமாய் இரத்தத்தின் கீழ் இரத்தத்தின் கீழ்
ஏக சமாதானம் பெற இரத்தத்தின் கீழ் வையும்

5. இடைவிடாமல் ஜெபித்திட இரத்தத்தின் கீழ், இரத்தத்தின் கீழ்
எங்குமே சாட்சி அளித்திட இரத்தத்தின் கீழ் வையும்

6. என்றும் வேதத்தை வாசிக்க இரத்தத்தின் கீழ் இரத்தத்தின் கீழ்
எல்லார்க்கும் வழி காண்பிக்க இரத்தத்தின் கீழ் வையும்

7. அல்லேலூயா கீதம் பாட இரத்தத்தின் கீழ் இரத்தத்தின் கீழ்
அகிலமெல்லாம் ஜெயங்கூற இரத்தத்தின் கீழ் வையும்

## பாடல் – 567

***பல்லவி***

**ஐயா கொல்கொதா மலை நாதா**
எனக்கார் துணை சொல்லனுகூலா

***அனுபல்லவி***

மெய்யா இது தருணம் வா வா
இச்சிறியோன் முகத்தைப் பார்க்க வாவா

***சரணங்கள்***

1. பாறைக்குள் தேரை போலானேன் நான்
பல துயர் பட்டவனானேன்
ஆலைக்குள் கரும்பு போலானேன் இந்த
அகதிக் குன் முகம் காட்ட வாரும் – ஐயா

2. பலரும் பலது சொல்லி ஏய்த்து என்னை
அலைவாய்த் துரும்பு போல் ஆய்ந்து எனைத்
தொலையாத கவலைக்குள் மாய்த்து எனைத்
துரத்திவிட்ட கதியைப் பார்த்து – ஐயா

3. பெற்றோர் எனைக் கைவிட்டபோதும் என்
பிறவிகள் மறந்திட்ட போதும்
மற்றோர்கள் இரங்காத போதும் என்னை
மறவா என் நேசா நீர் பாரும் – ஐயா

4. தாகம் மிகுந்தவரே வாரும் நல்
அமர்ந்த தண்ணீரண்டை சேரும்
பணமும் விலையுமில்லாமல் நான்
பருகிடத் தாகத்தைத் தீரும் – ஐயா

5. தூங்கா இஸ்ரவேலின் தேவா ஏழை
துயர் நீக்கும் மகிமை யெகோவா
மங்காத வாக்குரைத்த தேவா உனை
மறக்கவே மாட்டேன் என் தேவா – ஐயா

## பாடல் – 568

**ஐயோ என் செல்வச் சீராளச் சிகாமணியை**
சிலுவையில் மடியவிட்டு – ஓகோ
கொடுமையாய் அடிமை நான் குவலய மீதினில்
கூவென் றலறி நிற்கின்றேன்

2. பாரிலுள்ள பெரியோர்களின் பெண்களும்
பார்த்தெதிர் காத்திருந்தும் – ஓகோ
பாவி வயிற்றினிலே பெருந்துன்ப மடைந்திடப்
பரனே நீ வந்துதித்தாய்

3. பெற்றதில்லையென்று பெண்கள் நகைத்தாலும்
பேதை துயரில்லையோ – ஓகோ
பெற்றதினால் மெத்த பெருந்துயர் வாதைகள்
பெரிதாய் அடையலாச்சோ

4. அன்று சம்மனசு கிருபை பெற்றவளென்றாள்
இதுவோ கிருபை ஐயா – ஓகோ
நன்று சிமியோனும் சொன்ன மொழிப்படி
வந்து பலித்ததுவே

5. மூன்றரை ஆண்டாக முக்கிய நன்மைகள்
மிகப்பெற்ற யூதாசே – ஐயோ
முப்பது வெள்ளிக்காய் முத்தமிட்டே பொல்லா
மூர்க்கரைக் கூட்டி விட்டாய்

6. ஐயோ பிலாத்துவே அநியாயத் தீர்ப்பிட்டாய்
ஆறுமோ என் மனசு – ஓகோ
பரபாசை அகற்றி நீ பரனைக் குருசெடுக்க
கரமதைக் கழுவினையோ

7. எருசலேம் வீதியில் குருசோடு சென்ற என்
செல்வக் குமாரன் எங்கே – ஓகோ
எருசலேம் மாதரே என் இயேசு நாதரை
இங்கு நீர் கண்டதுண்டோ

8. கீழ்த்திசை ராயரும் உயர்திசை சேயரும்
சேரவே சிலுவைதனில் – ஐயோ
பாழும் அடிமையைப் போலவே என்னேசு
சாய்ந்துயிர் விட்டனரே

## பாடல் – 569

**அன்னமே சீயோன் கண்ணே அன்பரதோ போறாரடி**
மன்னவனார் நமக்காகத் தம்மை பலியிடப் போறார்.

2. இன்னும் என்ன செய்யப் போறார் கன்னியரே சோரிசிந்த
என்னருமை ஏசுபரன் சின்னப்படப் போறாரடி.

3. பன்னிரு சீடர்களில் பண ஆசைகொண்ட யூதாஸ்
மன்னர் புகழ் தேசிகரை காட்டிக் கொடுக்கத் துணிந்தான்.

4. ஆகடிய யூதர் கூடி அண்ணல் திருக்கரத்தைக் கட்டி
தேகம் நொந்து துடிக்க ஓங்கி ஓங்கி அடித்தார்.

5. பித்தனென்று வெள்ளை அரைச்சட்டை ஒன்று தானுடுத்தி
பேதக ஏரோதே அவன் பேசிப் பரிகாசம் செய்தான்.

6. குப்புற விழுந்தே துயர் அற்புதனடைந்தாரடி
எப்பொருளான திரியேக வஸ்து நமக்காக

7. கொல்கதா மலைதனிலே குருசதிலேதான் மரிக்க
கோதில்லா நீதிபரன் போறார் அதோ பார் சகியே

8. பாரச் சிலுவை சுமந்து பாதகரோடே நடந்து
போற துயரறியப் பொங்கி மிக மனம் நொறுங்கி

9. வாசகன் ஏசு திருபாடுகளைத் தானுணர்ந்து
நேசமதாய்த் தாசர்களும் சாற்றித்துதி பாடிடவே

## பாடல் – 570

**பந்திவிட்டெழுந்தார் பரம என் ராஜா**

***அனுபல்லவி***

பன்னிரு சீடருக்கும் பணிவிடை செய்ய வென்று

1. வஸ்திரம் கழற்றி மறு சேலையை எடுத்து
அரையிலே கட்டிக்கொண்டு அவர் செய்த செய்கைகளை – பந்தி

2. பாத்திரத்தில் தண்ணீர் மொண்டு சீஷரண்டை வந்து
சீஷருட கால்களையும் சீக்கிரம் கழுவினாரே – பந்தி

3. கட்டியிருந்த தமது சேலையால் துடைத்தார்
கடந்த பேதுருவையும் கழுவவும் நின்றார் – பந்தி

4. நானுன்னை கழுவாவிட்டால் அருமைப் பேதுருவே
என்னிடத்தில் பங்குமில்லை என்றுனக்குச் சொல்லுகிறேன் – பந்தி

5. மெய்யாகவே மெய்யாகவே உங்களிலொருவன்
என்னைக் காட்டி கொடுப்பானென்று உங்களுக்குச் சொல்லுகிறென்
– பந்தி

6. பன்னிரு சீடர்களும் நானோ நானோ வென்றார்
காட்டிக்கொடுக்கும் யூதாசும் நானோ ரபி என்றான் – பந்தி

## பாடல் – 571

**ஏறுகின்றார் தள்ளாடி தவழ்ந்து களைப்போடே**
என் ஏசு குருசை சுமந்தே
என்நேசர் கொல்கதா மலையின் மேல் நடந்தே – ஏறு

1. கன்னத்தில் அவன் ஓங்கி அறைய
சின்னப் பிள்ளை போல் ஏங்கி நின்றார்
அந்தப் பிலாத்தும் கையைக் கழுவி
ஆண்டவரை அனுப்புகிறான் – ஏறு

2. மிஞ்சும் பெலத்தால் ஈட்டி எடுத்தே
நெஞ்சை பிளந்தான் ஆ கொடுமை
இரத்தமும் நீரும் ஓடி வருதே
இரட்சகரை நோக்கியே பார் – ஏறு

3. இந்தப் பாடுகள் உந்தன் வாழ்வுக்காய்
சொந்தப்படுத்தி ஏற்றுக்கொண்டார்
நேசிக்கின்றாயோ யேசு நாதரை
நேசித்து வா குருசெடுத்தே – ஏறு

4. சேவல் கூவிடும் மூன்றுவேளையும்
சொந்த குருவை மறுதலித்தான்
ஓடி ஒளியும் பேதுருவையும்
தேடி அன்பாய் நோக்குகின்றார் – ஏறு

5. பின்னே நடந்த அன்பின் சீஷன் போல்
பின்பற்றி வா சிலுவை வரை
காடியைப் போல கசந்திருக்கும்
கஷ்டங்களை அவரிடம் சொல் – ஏறு

6. செட்டைகளின் கீழ் சேர்த்தணைத்திடும்
சொந்த தாயின் அன்பதுவே
எருசலேமே! எருசலேமே
என்றழுதார் கண்கலங்க – ஏறு

## பாடல் – 572

**சிலுவையில் நின்றெழுந்த அன்பின் குரல் – நம்மை**
சீராக்கி நேராக்கும் மன்னன் குரல்

***சரணங்கள்***

1. மன்னிப்பின் குரலினையே முதலெழுப்பி
மாந்தர் தம் பாவத்தை போக்கிவிட்டார்
மீட்பின் குரலினையே பிறகெழுப்பி
மாபெரும் கள்வனுக்கு வாழ்வளித்தார் (2)

2. பார்த்தின் குரல் தன்னை பார்த்திபனும்
பார்போற்றும் மரியாளுக்கும் வழங்கி நின்றான்
உயிரூட்டும் தந்தையின் கரம் பிடித்து
உறுதியின் குரலினையே எழுப்பி நின்றார் (2)

3. நல் நீரை நான் தருவேன் என்றவரோ
நாவறள தாகத்தின் குரலெழுப்பி
முடிந்தது முடிந்தது எனக்கூறி
முழுமையின் குரலினையே முழக்கி நின்றார் (2)

4. தந்தையின் கரங்களில் தனதுயிரை
தருகிறேன் எனவெற்றிக் குரலெழுப்பி
தலை சாய்ந்து உயிர் நீத்த இயேசுபிரான்
தலைவனாய் உயிர்த்தெழுந்து ஆளுகிறார் (2)

## பாடல் – 573

**இத்தனை பெரிய உலகம்**
இதனை படைத்திட்டது யார்
இயற்கையாக முடியுமா (3) – இந்த படைப்பு

சூரியன் (2) சந்திரன் (2) நட்சத்திரம் (2) – எத்தனை ஆச்சரியம்

1. இயற்கை என்று சொல்லும் மாந்தரே
சிந்திப்பீர் சில நிமிடமே (2)
சூரியனை வானிலே ஓர் நாள் இரவிலே
உம்மால் நிறுத்த முடியுமா – முயன்று பாருமே – சூரியன்

2. சந்திரனை எட்டிய போதும்
பூமிக்கே நீ திரும்பியது ஏன்? (2)
உன்னுடைய வாழ்க்கையை சந்திரனில் தொடங்கிட
உன்னால் இன்று முடியுமா – முயன்று பாருமே – சூரியன்

3. நட்சத்திரத்தின் எண்ணிக்கையினை
உன்னால் இன்று கூற முடியுமா? (2)
சின்னஞ் சிறு நட்சத்திரம் ஒன்று கீழே விழுந்தால்
உன் நிலைமை என்னவாகும் சிந்தித்துப் பாரும் – சூரியன்

4. காற்று கடலின் சீற்றம் காண்கின்றாய்
அவற்றை உன்னாலா் அடக்க முடியுமா (2)
அருமை நாதர் இயேசுவோ அவற்றை அன்று அடக்கினார்
உன்னால் இன்று முடியுமோ – முயன்று பாருமே – சூரியன்

## பாடல் – 574

**பேழையும் கட்ட கட்ட**
வேலை செய்த மனிதர்களும்
நோவா தாத்தா சொல்ல சொல்ல
மறுத்து மறுத்து போய்விட்டனர் (2)
– பேழையும் கட்ட கட்ட

காலமோ செல்லச் செல்ல கர்த்தர் சொன்ன வார்த்தைகளை
நோவா தாத்தா சொல்லச் சொல்ல கேலி செய்து போய்விட்டனர் (2)

பாவம் உள்ள இந்த லோகம்
பாவத்திலே மாண்டு விடும்
என்ன சந்தோஷம் நமக்கு என்ன சந்தோஷம்
இயேசு வந்த உள்ளத்தில் நித்திய சந்தோஷம்
– பேழையும் கட்ட கட்ட

1. பேழையும் கட்டி முடிக்க நோவா குடும்பம் எட்டுபேரும்
பேழைக்குள்ளே வந்து சேர்ந்தார் கர்த்தர் கதவை
அடைத்துவிட்டார் – பாவம் உள்ள

2. கர்த்தர் இயேசு அழைக்கும்போது மறுத்து மறுத்து போனவர்கள்
இயேசு வாரும் நாளதிலே கதறி கதறி புலம்புவார்கள் –பாவம் உள்ள

## பாடல் – 575

**நாங்க வலைவீசி மீன்பிடிப்பவங்க**
நாங்க கலிலேயா நாட்டை சேர்ந்தவங்க
இயேசு நாதருங்க எங்க நாதருங்க

***சரணங்கள்***

1. பாவி நானுங்க படகைவிட்டு வந்தேனுங்க
பாசம் வச்சேங்க பழைய குணம் போச்சுங்க

2. யோவான் நானூங்க யாக்கோபுக்கு தம்பிங்க
இயேசுவின் மார்பினிலே சாஞ்சு படுத்துக் கொண்டேனுங்க

3. தோமா நானூங்க சந்தேகமா இருந்தேங்க
நானும் இந்தியாவுக்கு சுவிசேஷத்தை கொண்டு வந்தேங்க

4. இந்த ஊரில் இருப்பவங்க ரொம்ப ரொம்ப நல்லவங்க
இயேசுவை ஏற்றுக்கொண்டால் இன்பமாக வாழுவீங்க

## பாடல் – 576

**இவன் பேர் யோனா சொல்லாமல் போனான்**
தர்ஷீசுக்கும் கப்பல் ஏறினான்
தேவ சித்தத்துக்கு விலகி ஓடினான்

தனிமையாக அவன் தூங்கப் போனான்
நினிவே தனை யோனா மறந்து போனான்
ஏலேலோ ஏலேலோ ஏலேலோ (4)

1. போனானே போனானே அடித்தட்டில்
அயர்ந்தே நித்திரை போனானே
காணாமல் போனானே – கர்த்தரின்
பார்வையில் கடந்து போனானே – தனி

2. கடல் தனுக்கதிகாரியாம் – கர்த்தரோ
காற்றுக்கு கட்டளையிட்டார்
இடறலின் காரணமாம் யோனாவை
எடுத்து கடலில் எறிந்தனர் – தனி

3. சென்றானே சென்றானே – மீனின்
வயிற்றுக்குள் சென்றானே
வென்றானே விண்ணப்பம் செய்து
வல்லவர் நல்ல கரை சேர்த்து விட்டாரே – தனி

4. நினிவேக்கு போனானே – யோனா
கனிவில்லா மொழிகள் சொன்னானே
தேசம் அழியும் என்றானே தேவனின்
பாசம் மறந்து போனானே – தனி

5. போனானே போனானே – யோனா
ஏமாந்து போனானே
மனம் மாறி போனாரே – நினிவே மக்கள்
மன்னிப்பு பெற்றுக் கொண்டாரே – தனி

## பாடல் – 577

**அலையலையாய் அலையினூடே**
அல்லேலூயா பாடிடவா

***சரணங்கள்***

1. அலைகடலில் மீன் பிடிப்போரே – நீ
வலை கிழிய மீன் பிடிக்க வா
கலைகளெல்லாம் கைவிட்டதோ உன்
வலையை வலப்புறமே வீசவா – அலை

2. அலைகடலைக் கடந்து சென்றோரே – நீ
வலைகளிலே சிக்கி விட்டாயோ
மலைதனிலே சிலுவையண்டை – பார்
விலைமதியா விடுதலையுண்டே – அலை

3. பல வழிகள் பார்த்து நிற்கும் நீ – பார்
மலைகளிலே மாளும் மாந்தரை
அலையலையாய் மாந்தர் செல்கின்றார் – உன்
வலையுடனே வேகமாக வா – அலை

## பாடல் – 578

**படகோ படகு கடலிலே படகு**
கர்த்தர் இயேசு இல்லா படகு
கவிழ்ந்து போகுது பாரு கதறுராங்க கேளு
காத்திடவோ யாருமில்லையோ

1. நடு ராத்திரியில் நடுங்கும் குளிரிலே
கடலோரத்திலே கூக்குரல் கேட்டே
கடந்த வந்தாரே கர்த்தர் இவரே
நடந்து வந்தார் நடுக்கடலில் நாலாம் ஜாமத்தில்

2. வாலிபப் படகே உல்லாசப் படகே
தன் பெலன் நம்பும் தன்னலப் படகே
காலம் வருமுன் உன் கோலம் மாறுமே
கர்த்தனையே தேடியே வருவாய் இன்றே

3. குடிப்பழக்கத்தினால் குழம்பும் படகே
குடும்பத்தையுமே அழிக்கும் படகே
சடுதியினிலே நீ சாய்ந்து போவாயே
அழைக்கும் அன்பர் இயேசுவையே நாடி வருவாயெ

## பாடல் – 579

**நடக்கச் சொல்லித் தாரும் இயேசுவே இயேசுவே (2)**
தனித்துச் செல்ல முடியவில்லை
தனித்து நிற்கும் பாவி நான்

1. இருள் நிறைந்த உலகம் இதில்
துன்பம் என்னை நெருக்குதே (2)
அருள் ததும்பும் வழியாகி
அன்பு தந்த தெய்வமே (2)

2. அடம் பிடித்து விலகிடுவேன்
கருணையோடு மன்னியும் (2)
கரம் பிடித்து உம்முடனே
அழைத்துச் செல்லும் இயேசுவே (2)

## பாடல் – 580

**வழியென்றால் எது? அது ஜீவ வழி**
வழி காட்டிட வந்தவர் யார்? அவர் இயேசு

வழியும் அவர் ஒளியும் அவர் ஜீவ நதியும் அவரே
சத்தியமும் அவர் நித்தியமும் அவர்
ஜீவ அப்பமும் அவரே

2. ஒளியென்றால் எது? அது ஜீவ ஒளி
ஒளி காட்டிடும் உத்தமர் யார்? அவர் இயேசு

3. ஜலம் என்றால் எது? அது ஜீவ ஜலம்
ஜலம் காட்டும் சற்குருயார்? அவர் இயேசு

4. சத்தியம் என்றால் எது? அது தேவ சத்தியம்
சத்தியம் காட்டிடும் சற்குணன் யார்? அவர் இயேசு

5. அப்பம் என்றால் எது? அது ஜீவ அப்பம்
அப்பம் ஊட்டிடும் அன்னையும் யார்? அவர் இயேசு

## பல்லவிகள்

1

**துதி கனம் மகிமையுமக்கே**
ஓ, எல்லாமுமே ஓ எல்லாமுமே
துதி கனம் மகிமையுமக்கே
ஓ! நீரே ராஜாவே

ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம்
ஸ்தோத்திரம் மிக ஸ்தோத்திரம்
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம்
ஓ! நீரே ராஜாவே

துதி கனம் மகிமையுமக்கே
ஓ எல்லாமுமே ஓ எல்லாமுமே
துதி கனம் மகிமையுமக்கே
ஓ! நீரே ராஜாவே

2

**ஓ தேவனுக்கு மகிமை தூக்கி எடுத்தார்**
என்னைத் தூக்கி எடுத்தார் இயேசு
தம் கரத்தை நீட்டி இரட்சித்தாரே
ஓ தேவனுக்கு மகிமை

இயேசுவை நேசிக்கிறேன்
மென்மேலும் நேசிக்கிறேன்
அக்கரையில் நின்று நானும் அவரை
என்றென்றும் வாழ்த்துவேன்

3

**இயேசு கிறிஸ்து மாறாதவரே**
மாறாதவரே மாறாதவரே
ஆமாம் இயேசு கிறிஸ்து மாறாதவரே
நித்திய நித்தியமாய்
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா

4

**அவர் சமுகம் என் சந்தோஷமே**
அது நிறைவான சந்தோஷமே
என் பாத்திரம் நிரம்பி நிரம்பி வழியுதே
ஆனந்தம் பேரானந்தமே

5

**வேதத்திலே வேதத்திலே**
எப்பக்கம் பார்த்தாலும் இரக்கத்தைக் காண்பாய்
துக்கம் துயரத்திலும் தூயர் வாக்கிதுவே
சோராமல் சொந்தமாய் நம்புவாய்

6

**இயேசு என்னும் நாமத்தில் (2)**
ஜெயம் நமக்குண்டு
இயேசு என்னும் நாமத்தில் (2)
பேய்கள் பயந்தோடும்
இயேசு நாமத்தில் நிற்கும்போது
யார் நமக்கெதிர் நிற்பாரே
இயேசு இயேசு நாமத்தினில்
ஜெயம் நமக்குண்டு

7

**இயேசுவை சேவிக்கத் தீர்மானித்தேன்**
சேவை செய்வேன்
இந்த லோகத்தின் இன்பம் என்பின் தள்ளினேன்
சேவை செய்வேன்
எங்கேயும் அவரைப் பின் செல்வேன்
எங்கேயும் அவர் மேய்ச்சல் பெறுவேன்
ஏசுவை சேவிக்கத் தீர்மானித்தேன்
சேவை செய்வேன்

8

**நான் இயேசுவை நேசிக்கிறேன்**
நான் அவர் அருகில் நித்தம் தங்கிடுவேன்
நான் இயேசுவை நேசிக்கிறேன்
I Love Him better every day (2)
Close by His side I will abide
I love Him better every day

9

**முன்னே செல்லுவோம் நாமெல்லாரும்**
முன் செல்லும் நாளிதுவே
இன்னும் கொஞ்சம் செல்வோம்
இயேசு பக்கம் நிற்போம்
முன்னே செல்லுவோம் நாம்
முன் செல்லுவோம் நம் இயேசுவுடனே
முன் செல்லுவோம் நம் நேசர் செல்கிறார்
முசுக்கட்டை செடியின் அசையும் ஓசை
தொனிப்பதால் இன்னும் முன் செல்வோம்

10

**இன்ப இயேசு என் மதுரம், என் அற்புதம் நீரே**
விடி வெள்ளிக்குமேல் பிரகாசிக்கிறீர்
உந்தன் ரூபம் வெளி லீலியிலும் அழகுள்ளதே
என் அருமையின் மதுரம் நீயே

11

**எழுப்புதல் அனுப்பும், எழுப்புதல் அனுப்பும்**
எங்கள் உள்ளத்திலே
எழுப்புதல் அனுப்பும், எழுப்புதல் அனுப்பும்
சீக்கிரத்திலே
எழுப்புதல் அனுப்பும் எழுப்புதல் அனுப்பும்
எங்கள் உள்ளத்திலே
எழுப்புதல் அனுப்பும், எழுப்புதல் அனுப்பும்

இந்த நேரத்திலே
பாவத்தை மன்னியும் ஆவியைத் தாரும்
இரட்சகரின் நாமத்திலே
வியாதியை நீக்கும். பிசாசைத் துரத்தும்
இயேசுவின் நாமத்திலே

12

**இயேசுவின் பின்னே போகத் துணிந்தேன்(3)**
பின் நோக்கேன் நான் (2)

சிலுவை என் முன்னே, உலகம் என் பின்னே (3)
பின் நோக்கேன் நான் (2)
கர்த்தர் என் மித்ரு சாத்தான் என் சத்ரு (3)
பின் நோக்கேன் நான்
யேசு என் நேசர் மாம்சம் என் தோஷம் (3)
பின் நோக்கேன் நான் (2)

13

**இன்பம் இன்பம் என்றென்றுமே**
துன்பம் துயர் ஒன்றில்லையே
அன்பர் இயேசு என்னருகில்
இருந்தால் இன்பம் என்றென்றுமே

14

**சேவிப்போமே சேவிப்போமே**
கர்த்தரையே சேவிப்போமே
நானும் என் வீட்டாருமோவென்றால்
கர்த்தரையே சேவிப்போமே
சேவிப்போமே சேவிப்போமே
கர்த்தரையே சேவிப்போமே

15

**ஆயிரமாயிரம் மக்கள் – இன்னும்**
ஆண்டவர் இயேசுவை அறியார்
ஆயிரமாயிரம் மக்கள் – இன்னும்
அன்பின் தொழுவத்தில் இல்லை

மோட்ச வழியைக் காண்பிப்பதார்?
பட்சமாய் இயேசுவை அறிவிப்பதார்?
யாருமல்ல அன்பை அறிந்தவரே
யாருமல்ல அதை ருசித்தவரே
யாருமல்ல யாருமல்ல நான் நான் தானே

16

**கொடுப்பாயா, உன் கைகளைக் கொடுப்பாயா?**
கொடுப்பாயா, உன் கால்களைக் கொடுப்பாயா?
கொடுப்பாயா, உன் செவிகளைக் கொடுப்பாயா?
ஆம் சுவாமி கொடுப்பேன்

2. கொடுப்பாயா, உன் கண்களைக் கொடுப்பாயா?
கொடுப்பாயா, உன் நாவைக் கொடுப்பாயா?
கொடுப்பாயா, உன் ஜீவனைக் கொடுப்பாயா?
ஆம் சுவாமி கொடுப்பேன்

3. கொடுப்பாயா, உன் படிப்பைக் கொடுப்பாயா?
கொடுப்பாயா, உன் பணத்தைக் கொடுப்பாயா?
கொடுப்பாயா, உன் இதயத்தைக் கொடுப்பாயா?
ஆம் சுவாமி கொடுப்பேன்

17

**நான் இயேசுவின் போர்வீரன் – 2**
விசுவாசம் கேடகம்
வேதவசனம் பட்டயம்
இயேசுராஜன் என் பக்கம் வெற்றிகொள்வேன் நிச்சயம்
– நான் இயேசுவின்

சத்தியத்தின் கச்சைதனை கச்சிதமாய் கட்டுவேன்
சமாதானம் சுவிசேஷம் பாதரட்சை ஆக்குவேன்
சாத்தானை வெல்லுவேன் சமாதானம் கூறுவேன்
அல்லேலூயா பாடுவேன் ஆர்ப்பரித்து மகிழுவேன்
– நான் இயேசுவின்

18

**மோட்சம் அடைவோம்**
ஜெயம் அல்லேலூயா (2)

1 புதுப்பாட்டு பாடுவோம் ............

2 தேவரீரை சேவிப்போம் ................

3 உம்மைக் கண்டு களிப்போம் ...............

4 திவ்விய சாயல் தரிப்போம் ..............

5 ஒருபோதும் பிரியோம் .................

19

**அற்புதர் அல்லவோ அற்புதர் அல்லவோ**
அற்புதர் அல்லவோ என் இயேசு
கண்டோம் கேள்விப்பட்டோம்
வேதத்தில் படிக்கின்றோம்
அற்புதர் அல்லவோ என் இயேசு

20

**இயேசுவின் சமுகம் என் ஆனந்தம் – என்தன் (2)**
என்ன ஆனந்தம் (2)
பாவப் பாரமெல்லாம் பறந்தோடிற்றே – என்தன் (2)
பறந்தோடிற்றே (2)

21

**இயேசு விலங்கை முறித்தாரே**
எனை விடுவித்தாரே
பாடுவேன் அல்லேலூயா (2)
எனை விடுவித்ததால்

22

**எம் ஆண்டவா மாலை நேரம் அடிவானம் தோன்றும் காட்சி**
எம் ஆண்டவா தூதன் தானோ ஓவியமோ செய்கின்றானோ
எம் ஆண்டவா சொல்லித்தாரும் தோற்றங்களின் நுட்பம் எல்லாம்
எம் ஆண்டவா ஆற்றித் தேற்றும் காட்சி மூலம் ஏழை நெஞ்சை

23

**மெய் இன்பமிருக்கும் இடம் அறிவேன்**
துய்யன் வழியில் நடப்பதாம்
மெய் சந்தோஷம் பெருகும் இடமறிவேன்
துய்யன் வழியில் நடப்பதாம்
தேவ சமுகம் ஜீவியம் திருப்தி தருமே
மூவருடன் போவது சந்தோஷமாகுமே
ஆத்மா தோல்வி அறிய வேண்டாமே
ஆயன் வழியில் நடப்போமே

24

**எண்ணற்றோர் இயேசுவை அறியவில்லை**
இயேசுவே வழியென உணரவில்லை
நேசரின் அன்பை யார் கூறிடுவார்
பரலோகத்தின் பாக்கியத்தை அளித்திடுவார்
இயேசு கிறிஸ்து நீசச் சிலுவையில்
பாவிகட்காய் மரித்தார்
இச்செய்திகூற உன்னை அழைக்கிறார்
கீழ்ப்படிந்து வந்–தி–டு–வா–ய்– எண்ணற்றோர்

25

**இயேசு என்னை முற்றிலும் மீட்டார்**
சிலுவையில் மாண்டார்
விடுதலை ஈந்தார்
இயேசு என்னை முற்றிலும் மீட்டார்
அல்லேலூயா

நான் ஆடிப்பாடி மகிழ்வேன்
என் கர்த்தரை நான் போற்றுவேன்
பாவ மன்னிப்பை அடைந்து
மோட்ச பாதை செல்கின்றேன் – நான்
ஆடிப்பாடி மகிழ்வேன்

26

**எப்படிப் பாடுவேன் நானே**
ஏராளமாம் பாட்டுத்தானே
எப்படிப் பாடினும் ஆடினும் அவரன்பை
சொல்ல முடியாதப்பா

பத்து லட்சம் கிண்ணரங்கள் போதா
பத்து லட்சம் மத்தளங்கள் போதா
எப்படிப் பாடினும் ஆடினும் அவரன்பை
சொல்ல முடியாதப்பா

27

**நீங்கிற்றே நீங்கிற்றே நீங்கிற்றே**
என் பாவப் பாரமெல்லாம் நீங்கிற்றே
சர்வ பாவங்களையும் சுத்தி செய்யும் இரத்தத்தால்
நீங்கிற்றே நீங்கிற்றே நீங்கிற்றே
என் பாவப் பாரமெல்லாம் நீங்கிற்றே

28

**வல்லமை உண்டு உண்டு அற்புத வல்லமை**
இயேசுவின் இரத்தத்தில்
வல்லமை உண்டு உண்டு அற்புத வல்லமை
ஆட்டுக்குட்டியின் இரத்தத்தால்

29

**இயேசு அற்புதமானவரே – இயேசு அற்புதமானவரே**
அவர் மீட்டென்னைக் காத்தென்னைத் தாங்குகிறார் – அவர்
இயேசு உன்னதர் என்றனரே இயேசு உன்னதர் என்றனரே
விண் சூரிய, சந்திர, நட்சத்திரங்கள் அவர் உன்னதர் என்றனரே

இயேசு அற்புதமானவரே இயேசு அற்புதமானவரே
அவர் சிங்கத்தின் வாயைக் கட்டினாரே
அவர் அற்புதமானவரே

இயேசு உன்னதர் என்றனரே இயேசு உன்னதர் என்றனரே
அவர் காற்றையும் கடலையும் அதட்டினாரே
அவர் உன்னதர் என்றனரே

30

**இயேசு நல்ல நேசரே**
எந்தன் ஆத்ம நேசரே
எந்தன் பாவம் மன்னித்தார்
என்னை முற்றும் மாற்றினார்

31

**யாருக்கு என் மேல் கவலை?**
யாருக்கு என் மேல் அன்பு
ஒருவருக்கே அவர் ஒருவருக்கே
உலகத்தை படைத்தவர் அவர் உயிரையே தந்தவர் அவர்
அவர் யார்? அவர் யார்?
அவர் மேய்ப்பர் இயேசுவே

32

**இயேசுவின் மந்தையில் இல்லா**
ஆடுகள் உண்டு என் நண்பா
அவைகளை மந்தையில் சேர்க்க
அனுதினம் அடியவர் நாமும்
ஜெபிப்போம், கொடுப்போம், உழைப்போம்
ஜெபிப்போம், கொடுப்போம், உழைப்போம்

33

**எந்நேரமும் ஜெபி**
எவ்வேளையும் ஜெபி
காலை மாலை எவ்வேளையிலும்
ஜெபிக்க நேரம் எடுத்திடு
எந்நேரமும் ஜெபி
எவ்வேளையும் ஜெபி
இயேசு உன் துன்பத்தை நீக்குவார்
எந்நேரமும் ஜெபி

34

**அழகான ஏதேனில் தம் சாயலாக**
ஆதாம் ஏவாளை தேவன் வைத்தார்
பாதகப் பேயால் பாவம் தோன்ற
பாவங்கள் நீக்க இயேசு வந்தார்
பாடடைந்தார் ஜீவன் தந்தார், மீட்டுக்கொண்டார்
இயேசுவை உள்ளத்தில் நீ ஏற்றுக்கொண்டால்
இராஜன் இயேசுவின் பிள்ளையாவாய்

35

**கானான் என்பது வளமுள்ள நாடு**
தேனும் பாலும் ஓடும் நல்ல நாடு
இழந்த அந்நாட்டை யோசுவாவோடு
இஸ்ரவேலர் திரும்பப் பெற்றார்
தேவனுக்குக் கீழ்ப்படிந்ததால்
தகர்ந்தது எரிகோ மதில்
சாத்தானின் கோட்டையைத் தகர்த்திட நாமுமே
தேவனுக்குக் கீழ்ப்படிவோமே வெற்றிக் கீதம்
ஆர்ப்பரிப்போமே

36

**உள்ளத்தைத் தொட்டார் உள்ளத்தைத் தொட்டார்**
உள்ளத்தைத் தொட்டார் இயேசு
அவரை நோக்கி வேண்டுதல் செய்ய
உள்ளத்தைத் தொட்டாரே

37

**இயேசு என் நேசரவர்**
துன்பம் வந்தாலும் துயரம் வந்தாலும்
இயேசு என் நேசரவர்
என்னோடிருக்கிறார்

38

**மரத்தின் மீது பறவைகள் கூவுகின்றன**
வானதூதர் சேனைகள் பாடுகின்றன
வண்ணமலர்கள் வாசனை வீசுகின்றன
ஓ தம்பியே தங்கையே நாமும் பாடலாம்

39

**அல்லேலூயா புதுப்பாட்டினை**
எல்லோரும் பாடிடுவோம்
துதிப்போமே துதிப்போமே
வல்லமை விளங்கிட
எக்காள தொனியோடே
கைத்தாளங்களுடனே (2)
பாடிடுவோம் போற்றிடுவோம்
அல்லேலூயா ஆமென் (2)

40

**அற்புதர் அற்புதர் இயேசு**
யாரே அவருக்கிணை
அற்புதர் அற்புதர் இயேசு
அழகர் அவர் எனக்கே
அற்புதர் அற்புதர் இயேசு
என் ஆத்துமம் நேசிக்குதே
ஆயிரம் பேரில் அழகர்
இயேசுவே நீர் எனக்கே

41

**தேவரீர் உம் சமாதானம்**
என்னில் தாருமே
வெறுப்பினில் உம் அன்பையும்
விரோதத்தில் மன்னிப்பையும்
காரிருளில் ஒளியையும்
துக்கத்தினில் களிப்பையும்
கொடுக்கும் உம் சமாதான
கருவியாக மாற்றிடும் (2) – ஆமென்

42

**அன்பின் தேவா என்றும் நான்**
உமக்குச் சொந்தமே
தூய்மை ஐக்கியம் ஒளியில் நான்
வளரச் செய்யுமே

உம்மை விட்டு அலைந்திடாமல்
எந்தன் சிந்தனை காருமே
அன்பின் தேவா என்றும் நான்
உமக்குச் சொந்தமே – ஆமென்

43

**கிறிஸ்து இயேசு இராச்சியம் வளர்ந்து பெருகுக**
உலகமெங்கும் இன்ப இயேசு நாமம் முழங்க

1. கிருபை பெற்று தூய வாழ்வில் வளருக
இருளை நீக்கி அன்பின் ஒளியில் பெருகுக – கிறிஸ்து

2. ஈகையோடு வலிமைபெற்று வளருக
ஈடில்லாத அறுவடையில் பெருகுக – கிறிஸ்து

3. என்ன வந்தபோதும் நிலைத்து வளருக
இன்ப கீதம் பாடித் துதித்துப் பெருகுக – கிறிஸ்து

44

**அல்லேலூயா சொல்லி ஆனந்தமாய்ப் பாடி**
அனைவரும் ஒன்று கூடி துதி சொல்லுவோம்

இயேசு நாதரே நேச மேய்ப்பரே
பாசங் கொண்டவர்தானே
நீசர் மேலேயே
அல்லேலூயா பாடுவோம் (2)

45

**படகை திருப்புவது சுக்கான் என்றால்**
மக்கள் பண்பைத் திருத்துவது பரமன் அன்றே
கடனைத் திருத்துவது உழைப்பே என்றால்
மக்கள் கருத்தைத் திருத்துவது கர்த்தரன்றோ

46

**கர்த்தருடைய ஆலயத்திற்கு (2)**
போவோம் வாருங்கள் என்று எனக்கு
சொன்னபோது மகிழ்ச்சியாய் இருந்தேன்
அல்லேலூயா துதி கனம் மகிமை (2)
என்னை இரட்சித்த கர்த்தர் இயேசுவுக்கே
செலுத்தியே மகிழ்ச்சியாய் இருப்பேன்

47

**இயேசு வந்த வீட்டிலே என்ன சந்தோஷம்**
என்ன சந்தோஷம்
என்ன சந்தோஷம்

48

**இயேசு ராஜாவுக்கே ஜே ஜே! ஜே! (2)**
இயேசு ராஜாவுக்கே ஜே
பாவத்தைப் போக்கும் புண்ணிய நாதன்
எங்களை மீட்ட பரமராஜன்
வியாதியை நீக்கும் பரம வைத்தியர்
திரும்பி வருவார் எங்கள் ராஜன்

49

**கர்த்தரில் மகிழ்ச்சி காணுவோம்**
வீணை மீட்டி துதித்துப் பாடுவோம்
கர்த்தரில் மகிழ்ச்சி காணுவோம்

எங்கும் ஒரே பாட்டு
இயற்கை எல்லாம் பாடுது
கருத்துடனே பாடுதே (2)
கர்த்தரில் மகிழ்ச்சி காணுவோம்

50

**அந்த ஜீவ நதியின் ஓரமாய்**
நாம் யாவரும் சேர்ந்திடுவோம்
நீயும் அங்குவர ஆசித்தால்
இன்று இயேசுவண்டை வாராயோ

51

**இயேசுவே துதி உமக்கே (3)**
உம் தூய நாமத்திற்கே
கர்த்தாவே ...
மீட்பரே ...

52

**சந்தோஷம் வேண்டுமா வாங்கோ**
மெய் சமாதானம் வேண்டுமா வாங்கோ
நிம்மதி வேண்டுமா வாங்கோ
இயேசு தாராரே நம் இயேசு தாராரே
பாவம் சாபம் ரோகம் நீக்கி
என்னை இரட்சித்தார்
அவர் உன்னையும் இரட்சிப்பார்

53

**பரிசுத்தர் பவனியிலே (2)**
நாதா நான் ஒரு அங்கத்தினனாக
காண வாஞ்சிக்கிறேன்

When the saints go marching by (2)
Lord I want to be among the members
When the saints go marching by

54

**Glory Jesus glory**
You do the fighting for me,
Praise you Jesus, Praise you,
In you always victory

55

**Sing Halleluya to the Lord,**
Sing Halleluya to the Lord,
Sing Halleluya, Sing Halleluya
Sing Halleluya to the Lord

56

**அல்லேலூயா துதி மகிமை என்றும்**
இயேசுவுக்கே செலுத்திடுவோம் (2)
ஆ... ஆ... அல்லேலூயா (3)

57

**இயேசுவை நம்பினால்**
பயம் ஒன்றும் இல்லையே (3)
கண்மணியைப் போல் காத்திடுவார்
உன்னைத் தொடுகின்றவன் கர்த்தர்
விழியைத் தொடுகின்றான் (3)

கர்த்தரை நீ நம்பி வா
கண்மணியைப் போல்
என்னைக் காத்தருளும் (3)
இயேசுவின் மூலம் ஆமென்

58

**மோட்சம் என்பதோர் அழகிடம்**
இயேசு அன்பர் தங்குமிடம்
பாவம் இல்லை, அங்கு சாபமில்லை
அங்கு பசியுமில்லை, அங்கு பஞ்சமில்லை

59

**அல்லேலூயா ஸ்தோத்திரம்**
இயேசு கிறிஸ்துவுக்கே (2)
அல்லேலூயா ஸ்தோத்திரம்
நித்திய பிதாவுக்கே
அல்லேலூயா ஸ்தோத்திரம்
பரிசுத்த ஆவிக்கே (2)

60

**தேவனைத் துதியுங்கள் நம் தேவனைத் துதியுங்கள்**
தூயோனை வாழ்த்துங்கள் நம் நேசரைப் போற்றுங்கள்
போற்றுவோம் புகழுவோம் வாழ்த்துவோம்
வணங்குவோம் (2)
தேவாதி தேவனை வாழ்த்தி வணங்கிடுவோம் (2)

1. காலைத் தள்ளாட ஒட்டார் உன்னைக் காக்கிறவர் உறங்கார் (2)
கர்த்தர் உன்னைக் காப்பார் உன் ஆத்துமாவைக் காப்பார்

2. நம்பி வருபவரை பாசமாய் சேர்த்துக் கொள்வார்
நேசக்கரம் நீட்டி மார்போடு அணைத்துக் கொள்வார் (2)

3. கர்த்தரின் சமுகத்தில் கிருபைகள் ஏராளம்
அண்டினோர்க்கென்றென்றுமே சமாதானம் நிச்சயமே (2)

61

**இந்த நல் ஆகாரத்தை தந்த தேவா ஸ்தோத்திரம்**
இதனை உண்டு பெலன் அடைந்து உமக்கென்று வாழச் செய்யும்

இந்த நல் ஐக்கியத்தை ஆசீர்வதித்திடும்
இன்றுபோல் என்றும் ஒன்றாக வாழ்ந்திட
தேவ கிருபை செய்யும்

62

**இயேசு உன்னை பார்க்கின்றார் (2)**
அவருக்கு ஒன்றையும் மறைக்க முடியாதே
இயேசு உன்னை பார்க்கின்றார்

இயேசு நம்மைப் பார்க்கின்றார் (2)
அவருக்கு ஒன்றையும் மறைக்க முடியாதே
இயேசு நம்மைப் பார்க்கின்றார்

63

**ஒன்றாக்கும் தேவனே – 2**
ஒன்றாக்கும் என்றென்றுமே
ஒன்றாக்கும் தேவனே – 2
ஒன்றாக்கும் அன்பினாலே
ஆண்டவர் ஒருவரே, வழியும் ஒன்றுதானே
மீட்பரும் ஒருவரே, அதனால் பாடுகிறோம்

2. கர்த்தரின் குடும்பம் நாம்
தெய்வ வாக்குத்தத்தம் நாம்
கர்த்தரின் அன்பர்கள் நாம்
அவரின் மகிமை நாம்

64

**கள்ளச் சாத்தான் என் இடம் வந்து**
ஆசைக் காட்டிடுவான்
இயேசுவை விட்டு என்னைப் பிரித்து
அழிக்கப் பாத்திடுவான்
அவனைப் பார்த்து நானும் சொல்வேன்
அப்பாலே போ என்று
என்னோடே இருக்கும் இயேசுவைக் கண்டு
ஓடி ஒளிந்திடுவான் – கள்ளச் சாத்தான்

65

**Abba Father, let me be**
Yours and yours alone
May my will for ever be
Yours and Yours alone
Never let my heart grow cold
Never never let me roam

அன்பின் தேவா என்றும் நான்
உமக்கு சொந்தமே
எந்தன் விருப்பம் யாவுமே
உமக்கு சொந்தமே
எந்தன் உள்ளம் குளிர்ந்திடாமல்
எந்தன் சிந்தனை காருமே

## புதிய பாடல்கள்

### பாடல் - 581

**ஆராதிப்பேன் நான் ஆராதிப்பேன்**
ஆண்டவர் இயேசுவை ஆராதிப்பேன்

1. வல்லவரை நான் ஆராதிப்பேன்
நல்லவரை நான் ஆராதிப்பேன்

2. காண்பவரை நான் ஆராதிப்பேன்
காப்பவரை நான் ஆராதிப்பேன்

3. பரிசுத்த உள்ளத்தோடு ஆராதிப்பேன்
பணிந்து குனிந்து ஆராதிப்பேன்

4. ஆவியிலே நான் ஆராதிப்பேன்
உண்மையிலே நான் ஆராதிப்பேன்

5. வெண்ணாடை அணிந்து ஆராதிப்பேன்
குருத்தோலை ஏந்தி ஆராதிப்பேன்

6. துதர்களோடு ஆராதிப்பேன்
ஸ்தோத்திர பலியோடு ஆராதிப்பேன்

### பாடல் - 582

**இயேசுவாலே பிடிக்கப்பட்டவன்**
அவர் இரத்தத்தாலே கழுவப்பட்டவன்
எனக்கென்று எதுவுமில்ல
இப்பூமி சொந்தமில்ல
எல்லாமே இயேசு.....என் இயேசு
எல்லாம் இயேசு இயேசு இயேசு

1. பரலோகம் தாய் வீடு
அதைத் தேடி நீ ஓடு
ஒருவரும் அழிந்து போகமலே
தாயகம் வர வேண்டும் தப்பாமலே

2. அந்தகார இருளினின்று
ஆச்சரிய ஒளிக்கழைத்தார்
அழைத்தவர் புண்ணியங்கள் அறிவித்திட
அடிமையை தெரிந்தெடுத்தார் – இந்த

3. இலாபமான அனைத்தையுமே
நஷ்டமென்று கருதுகின்றேன்
இயேசுவை அறிகின்ற தாகத்தினால்
எல்லாமே இழந்து விட்டேன்

4. பின்னானவை மறந்தேன்
முன்னானவை நாடினேன்
என் நேசர் தருகின்ற பரிசுக்காக
இலக்கை நோக்கித் தொடருகின்றேன்

5. நீதியை விரும்புகிறேன்
அக்கிரமம் வெறுக்கிறேன்
ஆனந்த தைல அபிஷேகத்தால்
அனுதினம் நிரம்புகின்றேன்

6. பாடுகள் அனுபவிப்பேன்
பரலோக தேவனுக்காய்
கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும் நாளில்
களி கூர்ந்து மகிழ்ந்திருப்பேன்

## பாடல் – 583

**இயேசு சுமந்து கொண்டாரே**
நான் சுமக்க தேவையில்லை
இயேசுவின் காயங்களால்
சுகமானேன் சுகமானேன்

2. பெலவீனம் சுமந்து கொண்டார்
பெலவானாய் மாற்றிவிட்டார் – இயேசுவின்

3. என் நோய்கள் சுமந்து கொண்டார்
என் துக்கம் ஏற்றுக் கொண்டார் – இயேசுவின்

## பாடல் – 584

**இரத்தக் கோட்டைக்குள்ளே**
நான் நுழைந்து விட்டேன்
இனி எதுவும் அணுகாது
எந்தத் தீங்கும் தீண்டாது

1. நேசரின் இரத்தம் என்மேலே
நெருங்காது சாத்தான்
பாசமாய் சிலுவையில் பலியானார்
பாவத்தை வென்று விட்டார்

2. இம்மட்டும் உதவின எபினேசரே
இனியும் காத்திடுவார்
உலகிலே இருக்கும் அவனை விட
என் தேவன் பெரியவரே

3. மலைகள் குன்றுகள் விலகினாலும்
மாறாது உம் கிருபை
அனாதி சிநேகத்தால் இழுத்துக் கொண்டீர்
அணைத்து சேர்த்துக் கொண்டீர்

4. தாய் தன் பிள்ளையை மறந்தாலும்
மறவாத என் நேசரே
ஆயனைப் போல நடத்துகிறீர்
அபிஷேகம் செய்கின்றீர்

3. தேவனே ஒளியும் மீட்புமானார்
யாருக்கு அஞ்சிடுவேன்
அவரே என் வாழ்வின் பெலனானார்
யாருக்கு பயப்படுவேன்

## பாடல் - 585

**உந்தன் ஆவி எந்தன் உள்ளம் தங்க வேண்டும்**
எந்த நாளும் உந்தன் நாமம் பாட வேண்டும்

1. உள்ளமெல்லாம் அன்பினாலே
பொங்க வேண்டும்
கள்ளம் நீங்கி காலமெல்லாம்
வாழ வேண்டும் - உந்தன்

2. பாவமான சுபாவம்
எல்லாம் நீங்க வேண்டும்
தேவ ஆவி தேற்றி
என்றும் நடத்த வேண்டும் - உந்தன்

3. ஜீவ தண்ணீர் நதியாகப்
பாய வேண்டும்
சிலுவை நிழலில் தேசமெல்லாம்
வாழ வேண்டும் - உந்தன்

4. வரங்கள் கனிகள் எல்லா நாளும்
பெருக வேண்டும்
வாழ் நாளெல்லாம் பணிசெய்து
மடிய வேண்டும் - உந்தன்

5. ஏதேன் தோட்ட உறவு என்றும்
தொடர வேண்டும்
இயேசுக் கிறிஸ்து குரலைக் கேட்டு
மகிழ வேண்டும் - உந்தன்

## பாடல் - 586

**உன்னையே வெறுத்துவிட்டால்**
ஊழியம் செய்திடலாம்
சுயத்தை சாகடித்தால்
சுகமாய் வாழ்ந்திடலாம்

2. சிலுவை சுமப்பதனால்
சிந்தையே மாறிவிடும்
நீடிய பொறுமை வரும்
நிரந்தர அமைதி வரும் – உன்னையே

3. பெயர் புகழ் எல்லாமே
இயேசுவின் நாமத்திற்கே
கிறிஸ்து வளரட்டுமே
நமது மறையட்டுமே – உன்னையே

4. நாளைய தினம் குறித்து
கலங்காதே மகனே (மகளே)
இதுவரை காத்த தெய்வம்
இனியும் நடத்திடுவார் – உன்னையே

5. சேர்த்து வைக்காதே
திருடன் பறித்திடுவான்
கொடுத்திடு கர்த்தருக்கே
குறைவின்றி காத்திடுவார் – உன்னையே

6. தன்னலம் நோக்காமல்
பிறர் நலம் தேடிடுவோம்
இயேசுவில் இருந்த சிந்தை
என்றுமே இருக்கட்டுமே – உன்னையே

## பாடல் – 587

**உதவி வரும் கன்மலை நோக்கிப் பார்க்கின்றேன்**
வானமும் வையமும் படைத்தவரை நான் பார்க்கின்றேன்

1. கால்கள் தள்ளாட விடமாட்டார்
காக்கும் தேவன் உறங்கமாட்டார்
இஸ்ரவேலைக் காக்கிறவர்
எந்நாளும் துங்க மாட்டார்

2. கர்த்தர் என்னைக் காக்கின்றார்
எனது நிழலாய் இருக்கின்றார்
பகலினிலும், இரவினிலும்
பாதுகாக்கின்றார்

3. கர்த்தர் எல்லாத் தீங்குக்கும்
விலக்கி என்னைக் காக்கின்றார்
அவர் எனது ஆத்துமாவை
அநுதினம் காத்திடுவார்

4. போகும் போதும் காக்கின்றார்
திரும்பும்போதும் காக்கின்றார்
இப்போதும் எப்போதும்
எந்நாளும் காக்கின்றார்

### பாடல் – 588

**உம்மை நம்பி உந்தன் பாதம்**
உறுதியாய்ப் பற்றிக் கொண்டோம்
ஒருபோதும் கைவிடமாட்டீர் (2)

1. கண்ணீரைத் துடைத்து கரங்களைப் பிடித்து
காலமெல்லாம் காத்துக் கொண்டீர் – என்னை

2. குருடர்கள் பார்த்தார்கள் செவிடர்கள் கேட்டார்கள்
முடவர்கள் நடந்தார்கள் – ஐயா

3. மகனாக மகளாக அப்பா என்றழைக்கும்
உரிமையை எனக்குத் தந்தீர் – ஐயா

4. அச்சாரமாய் முத்திரையாய் அபிஷேக வல்லமையை
அடிமைக்குத் தந்தீரே – ஐயா

## பாடல் - 589

**என் இயேசு ராஜா ஸ்தோத்திரம் (2)**
ஸ்தோத்திரமே (2) உயிருள்ள நாளெல்லாமே

1. துதிகன மகிமையெல்லாம்
உமக்கே செலுத்துகிறோம்
மகிழ்வுடன் ஸ்தோத்திரபலிதனை செலுத்தி
ஆராதனை செய்கிறோம்

2. இரக்கம் உள்ளவரே
மனதுருக்கம் உடையவரே
நீடிய சாந்தம், கிருபை அன்பு
நிறைந்து வாழ்பவரே

3. கூப்பிடும் யாவருக்கும் அருகில் இருப்பவரே
உண்மையாய் கூப்பிடும்
குரல்தனைக் கேட்டு
விடுதலை தருபவரே

4. உலகத் தோற்ற முதல்
எனக்காய் அடிக்கப்பட்டீர்
துரோகியாய் வாழ்ந்த என்னையே மீட்டு
புதுவாழ்வு தந்தவரே

## பாடல் - 590

**என்றும் ஆனந்தம்**
என் இயேசு தருகிறார்
துதிப்பேன் துதிப்பேன்
துதித்துக் கொண்டேயிருப்பேன்
அல்லேலுயா ஆனந்தமே (2)

1. உன்னதர் மறைவில் வல்லவர் நிழலில்
என்றும் தங்குவேன்
தேவனை நோக்கி அடைக்கலப் பாறை
என்றே சொல்லுவேன்

2. தமது சிறகால் என்னை மூடி
காத்து நடத்துவார்
அவரது வசனம் ஆவியின் பட்டயம்
எனது கேடகம்

3. இரவின் பயங்கரம் பகலின் அம்பு
எதற்கும் பயமில்லை
உன்னத தேவன் எனது அடைக்கலம்
தங்கும் உறைவிடம்

4. வழிகளிலெல்லாம் என்னைக் காக்க
துதர்கள் எனக்குண்டு
பாதம் கல்லில் மோதாமல் காத்து
கரங்களில் ஏந்துவார்

5. சிங்கத்தின் மேலும் பாம்பின் மேலும்
நடந்தே செல்லுவேன்
சாத்தானின் சகல வலிமையை வெல்ல
அதிகாரம் எனக்குண்டு

6. தேவனைச் சார்ந்து வாழ்கின்ற எனக்கு
என்றும் விடுதலை
அவரது நாமம் அறிந்த எனக்கு
அவரே அடைக்கலம்

7. ஆபத்து நேரம் கூப்பிடும் எனக்கு
என்றும் பதிலுண்டு
என்னோடு இருந்து விடுதலை கொடுத்து
என்னை உயர்த்துவார்

-----------------------------------------------------------------------

கணினி புத்தக தொகுப்பு: S.K. இராசன், டக்கரம்மாள்புரம், திருநெல்வேலி−7.

# பயன்படுத்துவோருக்கான குறிப்பு!

வணக்கம்!

இந்த Ipad & Android புத்தக வடிவ "**கன்வென்சன் கீதங்கள்**" பாடல் புத்தகம் வடிவமைக்க உதவிய "**படைத்தவருக்கு**" (**கர்த்தருக்கு**) நன்றி!

இதை நம் கைகளில் உள்ள பாடல் புத்தகத்தைப் போலவே பக்கங்களை புரட்டி படிக்கலாம். எந்த பக்கத்திலிருந்தும் புரட்டி படிக்கலாம்.

இப்புத்தகத்தின் இரண்டாவது பக்கத்தில் முதல் எழுத்து அட்டவணை உள்ளது. அங்கு உங்களுக்கு தேவையான பாடல் ஆரம்பிக்கும் **முதல் எழுத்தின்** மேல் கிளிக் செய்தால், அந்த எழுத்தில் ஆரம்பிக்கும் பாடல் அட்டவணை உள்ள பக்கம் திறக்கும்.

அங்கு உங்களுக்கு தேவையான பாடலின் **முதல் வரியின்** மேல் கிளிக் செய்தால், நீங்கள் விரும்பிய பாடல் உள்ள பக்கம் வரும்.

மீண்டும் முதல் எழுத்து அட்டவணை பகுதிக்கு செல்வதற்கு பக்கங்களின் மேல்பகுதியில் உள்ள "**அட்டவணை**" பகுதியை கிளிக் செய்ய வேண்டும்.

இந்த பாடல் புத்தகத்தில் பிழை ஏதாகிலும் தாங்கள் கண்டுபிடித்தால், தயவாய் கீழே உள்ள இமெயில் முகவரிக்கு மெயில் செய்யவும். புத்தகத்தை திருத்தம் செய்ய அது உதவியாக இருக்கும். நன்றி!

**skrajann@gmail.com**

# அட்டவணை